# யுவ பாரதம்

அல்லது

# இந்திய தேசீய இயக்கத்தின் வரலாறு

எழுதியது

லாலா லஜபதிராய்

தமிழாக்கம்

‘கல்கி’

மங்கள நூலகம்

நுங்கம்பாக்கம் :: சென்னை-6

*All Rights Reserved*] 1957 [விலை ரூ. 5—0—0

இரண்டாம் பதிப்பு, தை 1957

எப்பகுதியும் அநுமதியின்றி வெளியிடக்கூடாது

ஜெயலட்சுமி பிரஸ், சென்னை-2

## இதைப்பற்றி. . . .

சரித்திர நவீனம், சிறுகதை, கலை விமர்சனம், அரசியல் கட்டுரைகள் ஆகியவைகளில்மட்டும்தான் 'கல்கி' சிறந்த எழுத்தாளர் என்பதையே இன்றைய வாசக உலகம் அறிந்துள்ளது. ஆனால் அவர் ஒரு சிறந்த மொழி பெயர்ப்பாளரும்கூட. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னரே, வெள்ளையரின் ஆதிக்கத்தை வெலவெலக்க வைத்தது லாலா லஜபதிராய் எழுதிய 'யங் இந்தியா' என்னும் ஆங்கில நூல். இதனை 'யுவ பாரதம்' என்ற தலைப்புடன் மொழிபெயர்த்து அத்துறையிலும் தனக்குள்ள சிறந்த ஆற்றலை நிரூபித்துள்ளார்.

சுதந்திரப்போர் பாரத நாட்டில் தோன்றியவிதம், அதை நசுக்க பிரிட்டிஷார் செய்த முயற்சிகள், ஆனால் அது மேலும் மேலும் வலுவடைந்தவிதம், விண்ணப்பம் அனுப்பும் முறையிலிருந்து வெடிவிபத்துக்களால் நாட்டை விடுவிக்க முயற்சித்த பற்பல சக்திகளின் வளர்ச்சி, ஆகிய அனைத்தும் ஆங்கிலேயர்களே எழுதிய சான்றுகளுடன் எந்தப்பாமரனும் புரிந்துகொள்ளும் வகையிலே இந்த ஏடுகளில் வரையப்பட்டுள்ளன. லஜபதிராயினது எழுத்தின் சுவை சிறிதும் குன்றாமல் 'கல்கி' மொழிபெயர்த்துள்ளார். 1857-ம் ஆண்டு சுதந்திரப் புரட்சியை 'சிப்பாய்க் கலகம்' என்று சிறுபிள்ளைத்தனமாக வெளிநாட்டார் சரித்திர ஏடுகளிலே ஏற்றிவிட்டனர். இன்றைய ஆராய்ச்சி அந்தக் குற்றச் சாட்டைப் பொய்ப்பித்து, அதுதான் நாட்டுத் தலையைத்

தகர்க்கும் முதல் புரட்சி என்று நிலைநாட்டுகிறது. இந்த உண்மையை முதல் மகா யுத்தத்தின்போதே லஜபதிராய் 'யங் இந்தியா'விலேயே சான்றுகளுடன் வீறுபெற எழுதியுள்ளார்.

அண்மையில் விடுதலை பெற்றவிதம், பெற்ற விடுதலையை எப்படிப் பேணிக் காக்கவேணும், அதன் நிமித்தம் ஒவ்வொருவனும் ஆக்க வேண்டிய பணி என்ற இவைபோன்ற உன்னத லட்சியங்களை தெள்ளெனக் காட்ட இதுபோன்ற தொன்மைச் சரித்திர ஏடுதான் பயன்படும். நம் ஆட்சியாளர் இந்த ஆண்டிலே சுதந்திரப் புரட்சியின் நூருவது ஆண்டுவிழாவைச் சிறப்புறக் கொண்டாட ஏற்பாடுகள் செய்கின்ற. இந்தச் சந்தர்ப்பத்திலே மக்களுக்குக் களிப்புடன் அளிக்கிறோம்.

தமிழ் நாட்டிற்கு அன்றும், இன்றும் பல துறைகளில் தொண்டு ஆற்றும் தேசபக்தர் திரு. பூ. ச. குமாரசாமி ராஜா அவர்கள் இந்நூலை பிரசுரிக்கும் உரிமையை அளித்ததற்கு என்றும் மறவாத உள்ளங்கனிந்த நன்றியை அறிவித்துக்கொள்ளும்,

**மங்கள நூலகத்தார்**

## பதிப்பாசிரியர் குறிப்பு

தாய் நாட்டிற்காக உயிர் வாழ்ந்து, தாய் நாட்டிற்காகவே உயிர் துறந்த உத்தமர் லாலா லஜபதிராயைப் பற்றித் தமிழர்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. அவர் இளம் பிராயத்திலேயே தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தாய் நாட்டின் திருத்தொண்டுக்கு அர்ப்பணம் செய்தவர்; "தனக்கென வாழாப் பிறர்க் குரியாளர்" அனைவருக்கும் ஓர் இலக்கியமானவர்; அறிவு தோன்றிய நாளிலிருந்து உயிர் துறந்த நேரம் வரையில் விடுதலைப் போரின் முன்னணியில் நின்று போர் புரிந்தவர்; "பாஞ்சால சிங்கம்" என்று புகழ்பெற்றவர்.

தாய் நாட்டின் விடுதலைக்காக லஜபதிராய் அவர்கள் பட்ட துன்பங்களுக்கு ஓரளவில்லை யென்று சொல்லலாம். 1907-ம் வருஷத்தில் அவரை அரசாங்கத்தார் நாடுகடத்தினார்கள். அச்சமயம் அவருடைய வாய்மொழியாக நமது சுப்பிரமண்ய பாரதியார் பாடிய கவிதையில்,

> "தொண்டு பட்டு வாடுமென்றன் தூய திரு நாட்டில்
> கொண்டு விட்டங் கென்னையுடன் கொன்றாலும் இன்புறுவேன்"

என்று கூறியுள்ளார். இக் கவிதையில் காணும் மனோரதம் லஜபதியின் வாழ்க்கையில் நிறைவேறியது. 1929-ம் ஆண்டில் சைமன் கமிஷன் லாகூருக்கு வந்தபோது, பகிஷ்கார ஊர்வலத்தின் முன்னணியில் லஜபதிராய் சென்று, போலீஸ் அதிகாரிகளின் தடியடியை மார்பில் தாங்கி நின்று, அதன் பயனென்றே சொல்லக்கூடியவாறு உயிர் துறந்த சம்பவம் அனைவரும் அறிந்ததேயாகும்.

இத்தகைய தியாகமூர்த்தி — தேச பக்தர் திலகம் — தமது ஜீவிய காலத்தில் எழுதிய பல நூல்களுக்குள்ளே "யுவ பாரதம்" (Young India) என்னும் ஆங்கில நூல் மிகவும்

பிரசித்தி பெற்றது. சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்தின் போது நமது ஆசிரியர் அமெரிக்காவில் வசித்த காலத்தில் இந்நூலை எழுதினர். இங்கிலாந்தில் வெளியான இந்நூலின் பதிப்பை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பறிமுதல் செய்ததுடன் பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் இந்நூல் வரக்கூடாதென்று தடை யுத்திரவும் பிறப்பித்தார்கள். பெருங் கிளர்ச்சிக்குப் பின்னர் 1926-ம் ஆண்டில்தான் இத்தடை யுத்திரவு ரத்தாயிற்று.

இவ்வரிய புத்தகம் தமிழர்களுக்கும் பயன்பட வேண்டு மென்ற கருத்தினுல், லாலாஜி தமிழ் நாட்டுக்கு வந்திருந்த போது அவர்களையே நேரில் கேட்டு, இதைத் தமிழில் வெளி யிடுவதற்கு அநுமதி பெற்றோம். தமிழ்ப் பதிப்பு வெளியாவ தற்கு முன்னுல் நமது ஆசிரியர் வீரமரணம் எய்தி வீரசுவர்க்கம் அடைந்தார் !

"சத்திய சோதனை" என்னும் மகாத்மா காந்தியின் சுய சரிதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவரும் தமிழ் நாட்டில் நகைச் சுவை கண்ட ஆசிரியர்களுக்குள் பெயர் பெற்றவரு மான ஸ்ரீமான் ரா. கிருஷ்ணமூர்த்தி இப்புத்தகத்தின் மொழி பெயர்ப்பாசிரியர். மூலத்துக்கு நேரான மொழிபெயர்ப்பா யிருக்கவேண்டுமென்னும் நமது விருப்பத்துக் கிணங்க, எளிய தமிழ் நடையில் இம் மொழிபெயர்ப்பைச் செய்து முடிக்க அவர் முயற்சி செயதுள்ளார்.

காந்தியடிகளின் தலைமையில் நாம் பெரிய விடுதலைப் போர் நடத்தி வெற்றி பெற்றிருக்கும் இந்நாளில், எவ்வளவோ நிராதரவான நிலைமைகளின் கீழ் சென்றுபோன காலத்தில் அப் போரை நடத்திய தீரர்களை நன்றியுடன் பாராட்டவேண்டும். அவர்களைப்பற்றித் தமிழர்கள் தெரிந்துகொள்வதற்கு இந் நூல் பெரிதும் பயன்படுமென்று நம்புகிறோம்.

இராஜபாளையம்,
9—9—37.

பூ. ச. குமாரசாமிராஜா

# நாலாம் பதிப்புக்கு
# நூலாசிரியர் முன்னுரை

---

இந்த நூல் எந்நோக்கத்துடன், எப்போது, எந்த நிலைமையில் எழுதப்பட்டதென்று முதல் பதிப்பின் நூன்முகத்தில் விளக்கிக்கூறியுள்ளேன். முதல் பதிப்பின் பிரதிகள் சில மாதகாலத்தில் செலவாகிவிட்டபடியால், பிரசுரகர்த்தர்கள் விரைவிலேயே இரண்டாம் பதிப்பு வெளியிட்டார்கள். ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரின் சுயாட்சி சங்க (ஹோம் ரூல் லீக்) லண்டன் கிளைச்சபையார் இங்கிலாந்தில் ஒரு பதிப்பு வெளியிட்டனர். அதற்கு, அப்போது எனக்கு அறிமுகமில்லாதிருந்த கர்னல் வெட்ஜ்வுட் முன்னுரை எழுதியிருந்தார். இப்பதிப்பின் பிரதிகள் பிரிட்டிஷ் பார்லிமென்டின் அங்கத்தவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. அப்போது யுத்தம் நடந்துகொண்டிருந்தபடியால் அரசாங்கத்தார் இப்புத்தகம் தங்கள் கட்சிக்கு அபாயம் விளைவிக்குமென எண்ணி இதைப் பரிமுதல் செய்தனர். பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் இந்நூல் வரக்கூடாதென்று இந்தியக் கடற் சுங்கச் சட்டத்தின்படி தடை விதிக்கப்பட்டது. சென்ற ஆண்டில்தான் இத்தடையை நீக்கினார்கள். எனவே, சென்ற சில காலமாக அச்சிலில்லாமலிருந்த இப்புத்தகம் இப்போதே முதன் முறையாக இந்தியாவில் பிரசுரிக்கப்படுகிறது.

1915-ம் ஆண்டில் இப்புத்தகம் எழுதப்பட்டது. அதன் பின்னர் இந்தியா பெரிதும் மாறுதலடைந்திருக்கிறது. அரசாங்க அமைப்பில் செய்யப்பட்ட சில மாறுதல்களின் மூலம் சொற்ப அளவு அதிகாரம் ஜனப் பிரதிநிதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. எனினும் உண்மையான அதிகாரம் முன்பிருந்த

விடத்திலேயே இருந்துவருகிறது. பொருளாதார நிலைமையோ முன்னைவிடச் சீர்கேடடைந்திருக்கிறது. ஆனால் ஜனங்களின் மனப்பான்மையில் ஏற்பட்டிருக்கும் மாறுதலே எல்லாவற்றையும்விடப் பெரியதென்பதில் ஐயமில்லை. அதுவே வெளிப்படையாகப் புலனாகும் மாறுதலுமாகும். நாடெங்கும் அதி ஆச்சரியமான அரசியல் ஊக்கம் ஏற்பட்டிருக்கிறது. விடுதலை இயக்கம் படித்த வகுப்பாருக்குள் அடங்கிக் கிடவாமல் ஜனத்திரள்களிடையிலும் பரவிவிட்டது. மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் பாரத மக்களின் வாழ்க்கையிலும், சரித்திரத்திலும் தனிப்பெருமை வாய்ந்ததொன்றாகும். இவ்வளவு சீக்கிரத்தில் அதன் வெற்றி தோல்விகளைக் குறித்துப் பேசுவதற்கில்லை. இது போன்ற இயக்கங்களின் தன்மையை உடனுக்குடனே விளையும் பயன்களைக் கொண்டுமட்டும் நிர்ணயிக்கக் கூடாது. இவ் வியக்கங்களினின்று பரிணமிக்கும் சக்திகள் நெடுங்காலம் இயங்கிக்கொண்டிருந்து நீடித்த பயனை அளிக்கின்றன. ஒத்துழையாமை இயக்கத்தின் ஜெயாபஜெயங்களைப் பற்றி வருங்கால சரித்திராசிரியர்கள் எத்தகைய தீர்ப்பு வேண்டுமென்றாலும் கூறட்டும். ஆனால் ஜனங்களின் அரசியல் உணர்வை எழுப்பி, காங்கிரஸ் மகாசபையின் இலட்சியத்தையும், மனப்போக்கையும் அடியோடு மாற்றிய பெருமை அவ்வியக்கத்துக்கு உரியதாகும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தற்போதுள்ள காங்கிரஸ் 1916-ம் வருஷத்துக்கு முன்பிருந்த காங்கிரஸ் அன்று. இந்திய அரசியல் உலகில் 'பலாத்காரமற்ற தீவிரவாதிகள்' என்று வழங்கப்படுவோரின் வசத்தில் 1919-ம் ஆண்டிலிருந்து அச்சபை இருந்துவருகிறது. 1919-ம் வருஷம் முதல் 1927-ம் ஆண்டுவரையில் இந்தியாவுக்கு மிகவும் விசேஷமான காலமாகும். இச்சிறு முன்னுரையில் அக்காலத்தின் நிகழ்ச்சிகளைப்பற்றி விரித்துரைக்க முடியாது. ஒருமுறை ஒத்துழையாமை இயக்கத்தின் சரித்திரம் நான் எழுத ஆரம்பித்தேன். சில அத்தியாயங்கள் எழுதியும்விட்டேன். ஆனால் இடையில் வேறு முக்கியமான கடமைகள் ஏற்பட்டபடியால் அவ்வேலை அத்துடன் நின்றுபோயிற்று. நாட்டின் அரசியலில் மீண்டும் நெருக்கடியான நிலைமை தோன்றியிருக்கிறது. காரி

யத் தலைமைவகிக்கும் மனிதர்கள், சென்றுபோன காலத்தின் சம்பவங்களை யெல்லாம் நன்கறிந்து, விடுதலை இயக்கத்தை நடத்தக்கூடியவர்களாயிருத்தல் அவசியமெனக் காண்கிறது. சென்ற காலத்து நிகழ்ச்சிகளையும், நிகழ்கால நிலைமையையும் நன்காராய்ந்து வருங்காலத்தைப் பற்றி முடிவுசெய்வதே அறிவுடைமையன்றோ?

இக் காரணங்களினாலும், இந்நூலை இதுவரை ஒருமுறையேனும் படியாதவர்களை முன்னிட்டும், புதிய பதிப்பு ஒன்று இப்போது வெளியிடப்படுகிறது. தேசிய இயக்கத்தின் சரித்திரத்தை நாளிதுவரை கொண்டுவரும் வண்ணம் இந்நூலின் இரண்டாவது பகுதியும் கூடியவிரைவில் வெளியிடலாமென நம்பியுள்ளேன். சில விடங்களில் வினைச் சொற்களை நிகழ்காலத்திலிருந்து இறந்தகாலமாக மாற்றியிருப்பதையன்றி, வேறு முக்கியமான மாறுதல் எதுவும் இப்பதிப்பில் செய்யப்படவில்லை. நூன்முகமும் முதலில் வெளியானவண்ணமே தரப்படுகின்றது. இப் புத்தகம் பிரசாரத்திற்காக எழுதப்பட்டதன்று, இது ஒருவகைச் சரித்திரமேயாகும்.

எனினும், இந்நூலின் முந்தைய பதிப்புகள் வெளியான பின்னர் நிகழ்ந்துள்ள சிற்சில மாறுதல்களை இங்கே குறிப்பிடாது விடுதல் நியாயமாகாது. ஆயுதச் சட்டத்தின்கீழ் இருந்த சாதி வித்தியாசங்கள் நீக்கப்பட்டது அவற்றில் ஒன்றாகும். புதிய ஆயுதச் சட்டத்தின்படி, திட்டமாக விலக்குச் செய்யப்பட்டவர்களைத் தவிர மற்றவர்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர்களாயினும் ஆயுதம் வைத்துக்கொள்ள அநுமதி (லைஸென்ஸ்) பெற்றாகவேண்டும்.

மலை வாசஸ்தலங்களில், இந்தியர்களிடம் ஐரோப்பியர்கள் நடந்துக்கொள்ளும் முறையிலும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் சென்ற செப்டம்பர் மாதத்தில்கூடச் சிம்லாவில் போலீஸ் சேவகன் ஒருவன் இந்தியக் கூலிகளை மால் வீதியில் நடக்கக் கூடாதென்று தடுப்பதை நான் பார்த்தேன். ரெயில்வெ பிரயாணங்களில் ஐரோப்பியர் மற்றவர்களிடம் இறு

மாப்புடன் நடந்துகொள்வது இன்னும் அடியோடு மறைந்து விடவில்லை. இத்தகைய சம்பவம் ஒன்று சில தினங்களுக்கு முன்புகூட நடந்தது. உயர்ந்த அந்தஸ்து வாய்ந்தவரும், சுதேச இராஜவம்சமொன்றைச் சேர்ந்தவரும், 'ஸர்' பட்டதாரியும், மத்திய சட்டசபை அங்கத்தவருமான ஓர் இந்தியக் கனவான் அவமதிப்புக்குள்ளானர். அவர் முதல் வகுப்புப் பிரயாணச் சீட்டு வைத்திருந்தாரெனினும், முதல் வகுப்பு வண்டியில் ஏறக்கூடாதெனத் தடுக்கப்பட்டார்.

குடியேற்ற நாடுகளில் இந்தியர் நடத்தப்படும் விதத்திலும் சிற்சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியர்கள் புதிதாகக் குடியேறுவதைத் தடுக்கும் சட்டங்கள் கடுமையாக்கப்பட்டுள்ளன. தென்னுப்பிரிக்காவில் முன்னமேயுள்ள இந்தியர்களைத் திரும்பத் தாய்நாட்டுக்கு அனுப்புவது குறித்து இந்திய அரசாங்கத்துக்கும், தென்னுப்பிரிக்கா அரசாங்கத்துக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. இவ்வுடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி அத்திட்டம் இப்போது நடத்தப்படுகிறது. ஷ உடன்படிக்கையை நிறைவேற்றிவைக்க உதவிசெய்யவும் பொதுவாகத் தென்னுப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் நலங்களைக் கவனிப்பதற்காகவும் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதி (ஏஜண்டு) யாக ஓர் இந்தியர் நியமிக்கப்பட்டுள்ளார். மற்றக் குடியேற்ற நாடுகளின் அரசாங்கங்கள் அங்கங்கே முன்னமே குடியேறியுள்ள இந்தியர்களைச் சமத்வமாக நடத்த இணங்கியிருக்கின்றனர். மாணுக்கர்களும், தேசயாத்திரை செல்பவர்களும் இப்போது அந்நாடுகளில் அதிக தொல்லைக்காளாகாமல் பிரயாணம் செய்யலாம். சுருங்கச் சொன்னல், இந்தியர்கள் இனிமேல் குடியேற்ற நாடுகளுக்குச் சென்று குடியேறுதல் அடியோடு தடுக்கப்பட்டுளதாயினும், அந்நாடுகளில் ஏற்கனவேயுள்ளவர்களின் நிலைமையை அபிவிருத்தி செய்யச் சிற்சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எனினும் குடியிருப்பு, பிரயாணம், கல்வி, வியாபாரம் முதலியவை சம்பந்தமாக நிறவேற்றுமை பாராட்டுதல் இன்னும் ஒழிந்தபாடில்லை. ஏகாதிபத்தியத்திற்குள் குடியேற்ற நாடுகள் அல்லாத பகுதிகளில்

இந்தியர்கள் பெரும் நிர்ப்பந்தங்களுக் காளாயிருக்கின்றனர். பிரிட்டிஷ் கயானாவிலும், பிரிட்டிஷ் கிழக்காப்பிரிக்காவிலும் அவர்கள் பேரின்னல்களுக் குள்ளாகலா மென்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. இப் பகுதிகளில் அவர்களுடைய நிலைமை முன்பிருந்ததையும்விடக் கேவலமாதல் கூடும். மற்றும், கிரேட் பிரிட்டனிலேயே நிற வேற்றுமை, சாதி வேற்றுமை உணர்ச்சிகளின் காரணமாக இப்போது இந்தியர்களுக்குத் தொல்லைகள் தோன்றியிருக்கின்றன. சட்டத்தின்படி இவற்றிற்கு எவ்வித நியாயமும் கிடையாது. ஆனால் அனுஷ்டானத்தில் இந்தியர் மனம் புண்ணுகக்கூடியவாறு நடத்தப்படுதல் அதிகமாகிவிட்டது.

இந்திய சைன்யத்தின் உத்தியோக பதவிகளில் இந்தியரைச் சேர்த்துக்கொள்ள ஒரளவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன்படி ஒவ்வொரு வருஷமும் ஒன்பது மாணுக்கர் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனர். சமீபத்தில் ஸ்கீன் கமிட்டியார் இவ்விஷயத்தைப் பற்றி விசாரணை புரிந்தது அனைவரும் அறிந்ததாகும். இக் கமிட்டியாரின் சிபார்சுகளின்மேல் இந்திய அரசாங்கத்தின் முடிவு இன்னும் வெளியாகவில்லை.*

சர்வகலாசாலைப் பயிற்சிப் படைகளின் (University Training Corps) மூலம் இந்தியர்கள் தொண்டர்களாக (Volunteers) இராணுவ சேவை செய்வதற்கும் இடம் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு சில இந்தியர் கலப்புப் படைகளிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கலாம்.

சில தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டு மென்னும் தத்துவத்தை இந்திய அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆனால் ஏகாதிபத்தியச் சலுகை அல்லது

* இம்முன்னுறை எழுதப்பட்டபின்னர் மேற்படி முடிவு வெளியாகிவிட்டது. ஸ்கீன் கமிட்டியின் முக்கிய சிபார்சுகளை இந்திய அரசாங்கம் புறக்கணித்துவிட்டது குறித்து இந்திய சட்டசபையில் ஒரு கண்டனத் தீர்மானமும் நிறைவேறியது. (ரா. கி.)

பிரிட்டிஷ் சலுகை முறை கொல்லைவழியாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு முறையினால் விளையக்கூடிய பயன் பின்கூறிய முறையினால் குறைந்துவிடுகிறது.

இப் புத்தகம் முழுவதிலும் "காங்கிரஸ்" என்பது ஒத்துழையாமை இயக்கத்துக்கு முற்பட்ட காங்கிரஸையே குறிக்குமென்பதை வாசகர்கள் கவனத்தில் வைக்கவேண்டும்.

பலவகையான தேசியவாதிகளைப் பற்றி இந்நூலில் கூறியிருக்கிறேன். அவர்கள் 1915-ம் ஆண்டிலிருந்த வகையினராவர். அவர்களைப்பற்றி விவரிப்பதில் அப்போதிருந்த இந்திய அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டவே முயன்றிருக்கிறேன். தேசத்தின் தற்போதைய நிலையில், எவ்வகை பலாத்கார முறையும் கூடாதென்பதே என்னுடைய சொந்தக் கருத்தாகும்,

இப் புத்தகத்தை, 1915-ம் ஆண்டின் ஆரம்பத்தில் தேசிய இயக்கத்தின் நிலைமையையும், அதற்குமுன் அதன் சரித்திரத்தையும் விவரிக்கும் நூலாகக் கருதியே படிக்கவேண்டும். 1915-ம் ஆண்டிலிருந்து நாளிதுவரை தேசிய இயக்கத்தின் சரித்திரம் தனிப்புத்தகம் ஒன்றுக்கு விஷயமாகும்,

லாகூர்,
1—12—1927.

லஜபதி ராய்

பார்லிமெண்டு அங்கத்தவர்

# கர்னல் வெட்ஜ்வுட்டின் முகவுரை

---

இந்தியாவைப் பற்றி ஆங்கிலேயர் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும். நமது ஆட்சியினால் விளையும் நன்மைகள், சுயாட்சிக்கு இந்திய ஜனங்களின் தகுதியின்மை, போர்க்குணம் இல்லாத சாது ஜனங்களை ஹிம்சை, கொடுங் கோன்மைகளினின்றும் பாதுகாத்தல் என்பவைகளைக் குறித்து ஏதேதோ பேசி நமது உயரிய கொள்கைகளையெல்லாம் தூங்கச் செய்து வந்திருக்கிறோம். அந்தக் காலம் இப்போது மலையேறி விட்டது. மகாயுத்தமும், ஜெர்மானியரின் உதாரணமும் நம்மைக் குலுக்கி எழுப்பிவிட்டிருக்கின்றன. எனவே நம்மிடம் நாமே உண்மை கூறிக்கொள்ளுதல் அவசியமாகி விட்டது. இந்தியாவை, இந்திய மக்களின் விருப்பத்துக்கு நேர்மாறாக, முன்போலவே இனியும் ஆட்சி புரியப்போகிறோமென்றால் நாமும் ஜெர்மானியர்களே யாவோம். அப்போது பலாத்காரம், மோசம், இச்சகம், துவேஷம் என்னும் ஆயுதங்களையே நாம் கையாளவேண்டும். அவ்வாறு செய்யின் நாளடைவில் நமது நற்பெயரை என்றென்றைக்கும் கெடுத்துக் கொண்டு வீழ்ந்துவிடுவோம். ஒரு தேசத்தாரின் சாத்விக எதிர்ப்பை, — சமூக, வியாபார, அரசியல் பகிஷ்கரரத்தை, — எந்த சக்தியைக் கொண்டுதான் நெடுங்காலம் எதிர்த்து நிற்க முடியும்.

பார்லிமென்டு சபையின் தாராளக் (லிபரல்) கட்சி அங்கத்தினரைப் பொறுத்த அளவில், இந்தியாவில் ஜெர்மானியர்களாயிருப்பதில் அவர்களுக்குத் திருப்தியில்லை யென்பது நிச்சயம். அது கூடாதென்றால் குடியேற்ற நாட்டுச் சுயாட்சி கொடுத்தே தீரவேண்டும். வேறு வழி யில்லை. தாராளக் கட்சியார் இதைச் செய்து இந்தியாவில் ஆங்கிலேயர்மீது ஏற்பட்டிருக்

கும் விரோதபாவத்தை ஒழித்தாலன்றி, பூரண சுதந்திரம் இலட்சியமாகக் கொள்ளப்பட்டுவிடும். இவ்வாறு நேரக்கூடிய காலம் வெகு தூரத்திலில்லை. அயர்லாந்தையும், ஸின்பீன் இயக்கத்தையும் கவனித்துவிட்டுப் பின்னர் தென்னாப்பிரிக்காவையும், தளபதி ஸ்மட்ஸையும் நோக்குமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறேன்,

லாலா லஜபதி ராய் எழுதிய "யுவ பாரதம்" என்னும் இப் புத்தகத்தை நான் வரவேற்பதற்கு முதல் காரணம் இதுவேயாகும். இந்தியாவுக்குச் செல்லும் ஒவ்வோர் உத்தியோகஸ்தன் கையிலும் இந்நூல் இருக்கவேண்டும். தான் ஆட்சி புரியப்போகும் ஜனங்கள் தங்களுக் கிழைக்கப்படும் அநீதிகளைப் பற்றி எவ்வளவு பலமான உணர்ச்சிகொண்டிருக்கிறார்களென்பதை அவன் அறிந்துகொள்ளவேண்டாமா? இந் நாட்டிலுள்ள தாராளக் கட்சியார் இப் புத்தகத்தைப் படித்தல் இன்னும் அவசியமாகும். பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பொருப்பானவர்கள் அவர்களே.* ஆயினும் காலச்சக்கரம் எவ்வளவு வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கிறதென்பதை அவர்கள் அறியவில்லை. நம்மை யொத்தவர்களும், நம்போன்ற உணர்ச்சிகொண்டவர்களுமான மனிதர்கள் இந்தியாவில் சிலரேயிருக்கலாம். ஆனால் அச்சிலர் தேசீயம் என்னும் ஒளியைப் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். தேசிய உணர்ச்சியைப் போல் வெகு விரைவில் பரவுவது வேறொன்றுமில்லை. ஜனத்திரளை நடத்தும சக்தி வாய்ந்த தொண்டர்கள் தேசீய இலட்சியத்திற்காகத் தங்கள் உடல், பொருள், ஆவியை அர்ப்பணம் செய்ய முன்வருவது போல் வேறெதற்காகவும் முன்வரமாட்டார்கள், முப்பத்தொன்றரைகோடி ஜனங்களை ஜெர்மானியர்கூட எப்போதுமே கல்வியறிவில்லாதவர்களாய் வைத்திருக்க முடியாது. கல்வி பரவும்போது ஆராய்ச்சி அறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் கூடப்பரவுகின்றன.

* இது எழுதப்பட்டபோது இங்கிலாந்தில் தாராளக் கட்சியார் அதிகாரம் வகித்தனர். (ரா. கி.)

இப் புத்தகத்தை நான் விரும்புவதற்கு இன்னொரு காரணம் உண்டு. லாலா லஜபதி ராயைப்பற்றி, இப் புத்தகத்தில் அவர் எழுதியிருப்பதைத் தவிர எனக்கு வேறொன்றும் தெரியாது. ஆனால் இந்நூல் ஓர் ஆண்மகனால் எழுதப்பட்ட தென்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. ரட்யர்ட் கிப்ளிங், வாலன்டைன் சிரால் முதலியவர்களின் புத்தகங்களைப் படித்து அவற்றிலேயே ஊறியவர்களுக்கு இப் புத்தகத்தைப் படித்தல் சந்தோஷமாயிராது. ஆங்கிலேயனை அவனுடைய சொந்தத் தொழிலில் இந்நூல் தோற்கடித்துவிடுகிறது. இந் நூலாசிரியரைப்போல் திருஷ்டி வன்மையும், சிந்தனை சக்தியும் உடைய ஒருவரைக் 'கருப்பு மனிதன்' அல்லது 'பாபு' என்று அலட்சியமாக ஒதுக்க எவருடைய மனச்சான்றும் இடங்கொடுத்தல் அரிது. லாலா லஜபதி ராய் தம்மை, 'நிர்மாண தேசீய வாதிகள்' என்று தாம் குறிப்பிடும் வகுப்பில் சேர்த்துக் கொள்வாரென்று எண்ணுகிறேன். ஆனால் தேசீயவாதிகள் என்று நாம் சாதாரணமாய்க் கருதும் இனத்தை அவர் சேர்ந்தவரல்லர். அவர் அநீதிக்கும், கொடுமைக்கும் பெரும் பகைவர்; ஒளிவிடும் அக்கினிச் சுடரை யொத்தவர்; எல்லாக் காலங்களிலும் தாராளக் கொள்கையினர்; எல்லாரும் அவரைக் குறித்துப் பெருமைகொள்ளத் தக்கவர். காலிபோலியிலும், கிழக்காப்பிரிக்காவிலும் நான் இந்தியருடன் சம அணியில் நின்று சண்டையிட்டிருக்கிறேன். அவர்களைத் தாழ்ந்தவர்களென்று நான் எப்போதுமே கருதியதில்லை, ஸீபன் (Ctesiphon) என்னுமிடத்தில் அவர்கள் எதிரிகளின் அரண்களைக் கைப்பற்றுவதில் காட்டிய பராக்கிரமத்தை நான் அறிவேன். அவர்களுடைய படையில் 100-க்கு 85-பேர் போர்க்களத்தில் இறந்து வீழ்ந்தார்களெனினும், அவர்கள் உறுதியாக நின்று கடைசியில் வெற்றி பெற்றார்கள். ஆனால் இங்கிலாந்திலும், ருஷியாவிலும் போலவே இந்தியாவிலும், சாதி, தேசம் என்னும் சிறு பிரிவினைகளையெல்லாம் கடந்து உயரிய இலட்சியங்களால் பிணைக்கப்பட்டு ஒரே மனமுள்ளவர்களான மனிதர்கள் உண்டென்பது இதற்குமுன் எனக்குத் தெரியாது.

31—5—1917. ஜோஷியா வெட்ஜ்வுட்

# ஆசிரியர் நூன்முகம்

நான் உலகப் பிரயாணம் செய்யும்போதெல்லாம் ஒரு விஷயம் என் கவனத்தைப் பெரிதும் கவர்ந்து, எனக்கு மிகுதியும் மனத்துயர் அளிப்பதுண்டு. நாகரிக மடைந்தவர்க ளெனப் படும் தேசத்தினர்க் குள்ளே இந்தியாவைப் பற்றிய உண்மை அறிவு மிகவும் குறைவா யிருந்ததே அவ்விஷயமாகும். அவர் களில் கல்வியிற் சிறந்தவர்களுங்கூட இந்தியாவைப்பற்றித் தெரிந்துகொண்டிருந்தது மிக மிகச் சொற்பம். அந்தச் சொற்பமும் முழுதும் சரியானதென்று சொல்வதற்கில்லை. சாதாரணமாக, வீட்டை விட்டு வெளியேருத மேனுட்டான் ஒருவன் நான்கு கூட்டத்தாரின் மூலமாக இந்தியாவைப் பற்றித் தெரிந்துகொள்கிருன். அவர்கள் வருமாறு:— (1) இந்தியா சென்று திரும்பிய பாதிரிமார்கள்; (2) ரட்யார்ட் கிப்ளிங், ஸர் வாலன்டைன் சிரால் போன்ற ஆங்கில நூலாசிரியர்கள்; (3) பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள்; (4) காலஞ்சென்ற ஆசிரியர் மாகஸ்முல்லர், மிஸ் நோபிள் (சகோதரி நிவேதிதை), ஆசிரியர் கோல்ட் ஸ்டக்கர் முதலியவர்களைப் போல் இந்திய சரித்திரத் தையும், இந்தியாவின் இலக்கியங்களையும் சிரத்தையுடன் ஆராய்ந்தவர்கள். *

மேற்கூறியவர்களில் கடைசி வகுப்பாரைத் தவிர்த்த மற்றையோரெல்லாம் பொதுவாகச் சுயநல நோக்கம் ஒன்று உடையவ ராவர். எனவே, விருப்பு வெறுப்பு நீக்கி, ஒருதலைச் சார்பின்றி, உண்மை ஆராய்ந்து உரைப்போராக அவர்களைக்

---

* இந்த நான்கு வகுப்போடு மிஸ் மேயோவை ஒரு தனி வகுப்பாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

கொள்ள முடியாது. அவர்கள் பெரும்பாலும் இந்திய சரித்திரத்தை விரோதப் பான்மையுடன் படிக்கிருர்கள். இந்தியரின் வாழ்க்கையை ஒருதலைச் சார்புடனும், தெளிந்த பார்வையின்றியும் ஆராய்ச்சி செய்கிருர்கள். திட்டமான நோக்கங்களுடன் அவர்கள் இந்தியாவுக்கு வந்து, அந்நோக்கங்களுக்கிணங்கவே மக்கள்மீதும், விஷயங்கள்மீதும் கண்ணேட்டம் செலுத்துகிருர்கள். பின்னர், தங்கள் சொற்ப ஆராய்ச்சியை ஆதாரமாகக் கொண்டு இந்தியாவைப்பற்றித் தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமேயில்லையென்று நடிக்கத் தொடங்கிவிடுகிருர்கள். இந்தியாவுக்குச் செல்லும் மேனுட்டாரின் மிகப் பெரும்பான்மையோர் ஏற்கனவே இந்திய மக்களைப்பற்றிச் சிற்சில அபிப்பிராயங் கொண்டவர்களாகவே அங்குச் செல்கின்றனர். இந்தியர்களின் சமூகநிலை தங்களதினும் தாழ்ந்தது; இந்தியர் கல்லையும், செம்பையும் கும்பிடும் அநாகரிக சமயத்தினர்; அவர்கள் கணக்கற்ற சாதிகளாகவும், வகுப்புகளாகவும் பிரிவுபட்டுக்கிடக்கிருர்கள்; இந்தச் சாதிகளும், வகுப்புகளும் எப்போதும் ஒன்ருேடொன்று பிடரியைப் பிடித்துக்கொண்டு நிற்கின்றன; அவர்களிடையே எக்காலத்தும் ஒழுங்குபட்ட நாகரிக அரசாங்கம் இருந்ததில்லை; அவர்களுடைய சரித்திரத்திலேயே முதன்முதலாக ஆங்கிலேயர் தான் ஒழுங்கான அரசாட்சியை ஸ்தாபித்திருக்கிருர்கள்; பிரிட்டிஷ் அரசாங்கம் விலகிக்கொண்டால் இந்தியா உடனே துண்டு துண்டாகச் சிதறிப்போய்விடும்;—என்னும் இவை போன்ற எண்ணங்கொண்டவர்களாய் அவர்கள் இந்தியாவுக்கு வருகிருர்கள்.

இந்தியாவைப்பற்றி எழுதியுள்ள மேனுட்டாரை (1) பிரிட்டிஷ் சாதியார், (2) பிரிட்டிஷார் அல்லாதவர் என்ற இரண்டு வகுப்பாகவும் பிரிக்கலாம். பிரிட்டிஷ் சாதியாரில் 100-க்கு 99-பேர் ஏகாதிபத்திய உணர்ச்சி மேலிட்டவராவர். அவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நன்மையை முன்னிட்டே தான் எந்த விஷயத்தையும் நோக்குதல்கூடும். அவர்களில் நேர்மையில் சிறந்தவர்களும்கூட இந்தப் பாரபட்ச மனப்பான்

மையினின்றும் முழுதும் விடுதலைபெறுவதில்லை இவ்வுணர்ச்சி அவர்கள் அறியாமலே அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர்களோ இன வேற்றுமை, நிறவேற்றுமை உணர்ச்சிகளால் கவரப்பட்டவர்கள். மேலும் அவர்களில் 100-க்கு 90-பேர் பிரிட்டிஷ் நோக்குடனேயே நிலைமையைக் கவனிக்குமாறு செய்யப்படுகின்றனர். இந்தியத் துறைமுகமொன்றில் அவர்கள் இறங்கிய தட்சணமே, உத்தியோகஸ்தர்களும், அல்லாதவர்களுமான ஆங்கிலேயர் அவர்களைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு, அவர்களுடைய பிரயாணம் முழுவதற்கும் தாங்களே ஏற்பாடு செய்கின்றனர்.*

ஆளும் இனத்தார் எவ்வெவற்றைப் பார்க்கவேண்டுமென்று சொல்லுகிறார்களோ அவற்றையே இவர்கள் பார்க்கிறார்கள். அவ்வாறே இவர்கள் கேட்பதும், தெரிந்து கொள்வதும் ஆளும் இனத்தாரின் விருப்பத்தையே பொறுத்திருக்கின்றன. அவ்வினத்தாரின் செல்வாக்குக் குட்பட்டுப் பார்க்கவும், கேட்கவும் தீர்மானமாக மறுத்துவிடுவோர் ஒரு சிலரேயாவர். இச்சிலர் சிலசமயம் உண்மை நிலையை அறிந்துகொள்கிறார்கள். காலஞ்சென்ற மிஸ்டர் கேயர் ஹார்டி (பார்லிமென்டு அங்கத்தவர்), மிஸ்டர் எச். டபிள்யூ. நெவின்ஸன் போன்றோர் இத்தகையவராவர்.

இது சம்பந்தமாக, சமீபத்தில் இந்தியாவைப்பற்றி எழுதியுள்ள அமெரிக்க ஆசிரியர்ஒருவர் கூறுவதை இங்கெடுத்துக் காட்டுதல் பொருந்தும். மஸாசூஸெட்ஸ், வில்லியம்ஸ் கலாசாலையைச் சேர்ந்த ஆசிரியர் பிராட் என்பார் ''இந்தியாவும், அதன் சமயங்களும்'' என்று ஒருநூல் எழுதியுள்ளார். அதில்,

* *மிஸ் மேயோ 'இந்திய மாதா' என்னும் நூலை எழுதுவதற்குப் பூர்வாங்கமாக இந்தியாவில் பிரயாணம் செய்தபோது, உத்தியோகஸ்தர்களும், அல்லாதவர்களுமான ஆங்கிலோ இந்திய சமூகத்தார் அவளுக்கு உதவி செய்த பான்மையானது இதை நன்கு மெய்ப்பிப்பதாகும்.*

இந்தியாவைப்பற்றித் தெரிந்துகொள்ள நான்கு மூலங்கள் உண்டென்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அவற்றுள், இந்தியாவைப்பற்றி அந்நாட்டுச் சுதேசிகள் கூறும் அபிப்பிராயத்தையும், அவ்வாறே இந்தியாவினிடம் அதீத அபிமானங்கொண்டெழுந்த ஐரோப்பிய ஆசிரியர்களின் கூற்றையும் முழுதும் நம்பிவிடக் கூடாதென அவர் எச்சரிக்கை செய்கிறார். பின்னர், இவர்களைத் தவிர்த்த மற்றும் இரண்டு மூலங்களைப்பற்றி அவர் கூறியிருப்பது மிகவும் ரசமாயிருக்கிறது, அவர் சொல்வதாவது :—

"இந்தியாவின் இலட்சியங்கள், வழக்கபழக்கங்கள் முதலியவற்றுடன் பெரிதும் மாறுபட்ட இலட்சியங்களையும், வழக்கபழங்கங்களையும் உடையவர்கள் நாம். ஆதலின் மற்ற இரண்டு வகுப்பாரிடமும் இந்தியாவைப்பற்றித் தெரிந்து கொள்ளப் போவதில்தான் அபாயம் அதிகமாகும். அவர்களுள் குறுகிய மனோபாவம் படைத்த கிருஸ்துவப் பாதிரிமார் ஒரு வகுப்பினர். இந்தியாவில் வசிக்கும் மற்ற ஐரோப்பியர்களும், மேலெழுந்தவாரியாகப் பிரயாணம் செய்து திரும்பும் வெளிநாட்டாரும் நாலாவது வகுப்பில் அடங்குவர்." இந்த நாலாவது மூலந்தான் மிகவும் அவநம்பிக்கைக் குறியதென்றும், எல்லாவற்றையும்விட அதில்தான் அபாயம் அதிகமென்றும் ஆசிரியர் பிராட் கருதுகிறார். "நம் இனத்தைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவில் பிராயாணம் செய்தவராயிருந்தால், அதிலும் அங்கு 'இருபத்திரண்டாண்டு வசித்தவராயிருந்தால், அவருக்கு எல்லாம் தெரிந்திருக்குமென்று நாம் எண்ணுவது இயற்கையேயாகும்.... நாடு பார்க்கச்சென்று துரிதப் பிரயாணம் செய்து திரும்புவோரின் அறியாமையில் வியப்பொன்றுமில்லை. ஆனால் இந்தியாவிலேயே வசிக்கும் ஐரோப்பியர்கள் இந்தியாவைப் பற்றி இவ்வளவு தெரியாதவர்களாயிருப்பது உண்மையில் ஆச்சரியமேயாகும்."

இந்தியாவில் 'இருபத்திரண்டாண்டு வசித்த' ஐரோப்பியரைப்பற்றி ஆசிரியர் பிராட் சொல்லத் தொடங்குவதற்கு முன்னால், இந்தியாவில் பிரிட்டிஷ் நீதி நிர்வாகத்தைப்பற்றி

ஓர் அத்தியாயம் புகமுரை கூறியுள்ளார். அதை நாம் முற்றும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இந்தியரும், பிரிட்டிஷாரும் வாதிப் பிரதிவாதிகளாக ஏற்படும் வழக்குகளைத் தவிர்த்து மற்றப்படி கூடுமானவரையில் நீதிநிர்வாகம் நேர்மையாகவும், பாரபட்சமின்றியும் நடைபெறுவதாக ஒப்புக்கொள்ளலாம். ஆனால் இங்கே நாம் கவனிக்கவேண்டியது இதுவன்று. இந்தியாவில் வசிக்கும் ஆங்கிலேயன் இந்தியாவைப் பற்றி எவ்வளவு தூரம் அறிந்துள்ளான் என்பது குறித்து ஆசிரியர் பிராட்டின் அபிப்பிராயமே நமக்கு இங்கு முக்கியமானது. "இந்தியாவில் நான் சந்தித்த ஆங்கிலேயர்களில் பெரும்பாலோர் இந்தியரின் சமயம், தத்துவ ஆராய்ச்சி, சம்பிரதாயங்கள், இலட்சியங்கள் இவற்றைப் பற்றித் தெரிந்துகொள்வதில் சிறிதும் கவலையற்றவர்களா யிருந்தார்கள்" என்றும், "சுதேசியைப் பொறுத்த எல்லா விஷயங்களிலும் ஆங்கிலோ இந்தியன் கொண்டுள்ள அசிரத்தை அதி ஆச்சரியமானது" என்றும் அவர் கூறுகிறார். இம் முடிவுகளுக்கு ஆதாரமாக அவர் தமது சொந்த அநுபவத்தில் நேர்ந்த சில நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டியுள்ளார்.

கல்கத்தாவிலும் மற்றும் கீழ் நாட்டில் பல இடங்களிலும் வசித்தவரான ஓர் ஆங்கிலேய கனவான் இவ்வாசிரியரைப் பார்த்து "சுதேசிகள் எல்லாம் வெறும் மிருகப் பிராயத்திலுள்ளவர்க ளல்லவா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?" என்று கேட்டாராம். இதற்கு முற்றும் மாறான அபிப்பிராயம் தாம் கொண்டிருப்பதாக ஆசிரியர் பதிலுரைத்தாரும், "இந்த ஜனங்களிடையே சிறிது காலமேனும் வசித்தவர்கள் அவர்களிடம் எப்படி அன்புகொள்ளாமல் இருக்கமுடியும் என்று எனக்கு ஆச்சரியமாயிருந்தது. எளிமையும், கௌரவமும் பொருந்திய அவர்களுடைய வாழ்க்கை; அன்னியருடன் பழகுவதில் அவர்கள் காட்டும் மரியாதை; முணுமுணுக்காமல் எவ்வளவு கஷ்டங்களையும் சகித்துக்கொள்ளும் தன்மை; ஒப்பற்ற விருந்தோம்புங் குணம்; குருட்டு நம்பிக்கைகள் மிகுதியாயிருப்பினும் அவற்றினிடையே பிரகாசிக்கும் பாரமார்த்திகப் பற்று;—இவற்றினிடம்

உண்மையான மதிப்புக்கொள்ளாமல் ஒருவன் இந்திய ஜனங்களிடையே சிறுது காலமேனும் எப்படி வசிக்க முடியும்?'' என்று அவர் வினவுகிறார். மேற்கூறிய ஆங்கிலக் கனவான் 'தாவர நூலாராய்ச்சியில் தலைசிறந்த ஆசிரியர்களுள் ஒருவரான' டாக்டர் ஜகதீச சந்திரவசுவைப் பற்றிக் கேள்விப்பட்டதே யில்லையாம். தாகூரின் கவிதை 'அவ்வளவு உயர்ந்தது' என்பதாகவும் அவர் கருதவில்லையாம். ஆசிரியர் பிராட் மேலும் கூறுவதாவது:— "சுதேசிகளின் வாழ்க்கையில் இத்தகைய சிரத்தைக் குறைவும், அவர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்னும் இறுமாப்பும் ஐரோப்பியரில் முரட்டு இயல்புடையவர்களிடம் இழிவான முறையில் வெளியாகின்றன. அவர்கள் இந்தியனைக் கறுப்பு மனிதன் என்றிகழ்ச்சியாய்ப் பேசி, அவனை அவன் இடத்தில் வைத்து மட்டந்தட்டி வரவேண்டுமென்று அற்பத் தனமாக உளரிக்கொட்டுகிறார்கள். சுதேசிகளிடம் இத்தகைய அலட்சிய புத்தியும், அருவருப்பும் கொண்டிருப்பதின் பயனாக, நான் பார்த்த ஆங்கிலோ இந்தியர்களில் மிகப் பெரும்பான்மையோர் இந்தியாவின் சமயங்களைப்பற்றி ஒன்று மறியாதவர்களாயும், அவற்றினிடம் நிச்சயமாக விரோதப் பான்மை கொண்டவர்களாயு மிருந்தார்கள். ஆகவே இந்தியாவின் சமயங்களைப் பொறுத்தவரை, ஆங்கிலேயரில் பத்துப் பேரில் ஒன்பது பேருடைய அபிப்பிராயம் சிறிதும் நம்பத்தக்கதன்று என நான் எண்ணுகிறேன்.''

பாரத நாட்டின் சமயங்களைப் பற்றி ஆங்கிலேயரிடம் உள்ள அறியாமையைக் குறித்துமட்டுமே ஆசிரியர் பிராட் சொல்கிறார். ஆனால் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் தன்மை, அதன் பயன்கள், தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ள பாரதமக்களுக்கிருக்கும் ஆற்றல் ஆகிய இவற்றைப் பற்றியும் ஆங்கிலோ இந்தியர்களில் 100-க்கு 99 பேரின் அபிப்பிராயம் "சிறிதும் நம்பத்தக்கதன்று" என நான் கூறுவேன். இந்தியாவில் அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் என்ன நிகழ்ந்துவருகிறது என்பது குறித்து மேனாட்டில் குடிகொண்டுள்ள பெரும் அறியாமைக்கு இதுவே காரண

மாகும். லோவஸ் டிக்கின்ஸன் என்பார் உண்மையாளரும், நியாயபுத்தியுள்ளவருமான ஒரு பிரிட்டிஷ் நூலாசிரியர். அவரே, பிரிட்டிஷ் ஆட்சியினுல் இந்தியாவின் பொருளாதாரத்துறையில் ஏற்பட்டிருக்கும் பலாபலன்களைப்பற்றிக் குறிப்பிடாமல் இந்திய அரசியலைப் பற்றி எழுதியிருக்கிருரென்றுல், நான் மேலே குறிப்பிட்டதற்கு இதைவிட வேறென்ன அத்தாட்சி வேண்டும்?

இந்தியா ஒரு சார்பு நாடே (Dependency) யாகும். ஆதலின் சுயாட்சி பெற்ற தேசமாயிருந்தால் அதன் விஷயங்கள் உலகின் கவனத்தைக் கவரக்கூடிய அளவு இப் போது கவருவதில்லை. ஆண்டுக்கொரு முறை சில மணி நேரம் இந்திய விஷயங்கள் பிரிட்டிஷ் பார்லிமென்டில் பேசப்பட்டு முடிவு செய்யப் பெறுகின்றன. இந்தச் சில மணி நேர விவாதத்தின் போதும் மேற்படி சபையில் வெகு சில அங்கத்தினரே இருக்கிருர்கள். சமீபத்தில் இந்தியாவைப் பற்றிய ஒரு முக்கியமான மசோதா காமன்ஸ் சபையில் விவாதிக்கப்பட்டது. யுத்தம் முடியும் வரையில் இந்திய சிவில் சர்விஸ் போட்டிப் பரீட்சையை நிறுத்தி, அவ்வுத்தியோகங்களுக்கு நியமனம் செய்யும் அதிகாரத்தை இந்திய மந்திரிக்கு அளிப்பது என்பது மசோதாவின் உள்ளுரை. இவ் விவாதத்தின்போது எந்த நேரத்திலும் இருபத்தெட்டு அங்கத்தவருக்குமேல் சபையில் பிரசந்நமாயிருக்கவில்லை. இந்தியப் பத்திரிகைகளெல்லாம் இம்மசோதாவை ஒருமுகமாகக் கண்டித்திருந்தும், இந்தியர்களின் அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குச் சபையில் ஒருவர்கூட இல்லை. இந்திய வரவு செலவுத் திட்டம் காமன்ஸ் சபையில் 'விவாதிக்கப்படும்' காலங்களில் இந்நூலாசிரியரே நேரில் இருந்து கவனித்ததுண்டு. அவ்விவாதத்தின்போது ஒவ்வொரு முறையும் அங்கத்தவர் மிகவும் குறைவா யிருந்தனரென்றும், பேச்சுக்களும் மிகவும் கீழ்த் தரமா யிருந்தன வென்றும் அவர் உறுதியாய்ச் சொல்ல முடியும்.

எனினும், நாகரிக உலகின் பூரண கவனத்தைப் பெறுவதற்கு இந்தியாவுக்கு உரிமை கிடையாதா? நிச்சயமாக உண்டு. மக்கட் குலத்தில் ஐந்தில் ஒரு பங்காகும் ஜனங்கள் பாரத

நாட்டில் வசிக்கின்றனர், வியாபாரத் துரையில் இந் நாட்டின் சக்தி எல்லையற்றதாகும். இந்தியாவின் பண்டைப் பெருமை யைக் கவனியாவிட்டாலும், வருங்கால உலக முன்னேற்றத் தில் அதற்கு ஒரு முக்கியமான இடம் உண்டென்பதில் சந் தேகமில்லை. ஆதலின், இந்திய தேசீய இயக்கத்தின் எழுச்சி யையும், வளர்ச்சியையும் பற்றிய இந்தச் சுருக்கமான வரலாறு பிரிட்டிஷ், அமெரிக்க வாசகர்களுக்குச் சுவையளியாமற் போகாதென்பது இந் நூலாசிரியரின் நம்பிக்கையாகும். இப் புத்தகம் 'சுதேசி'யினால் எழுதப்பட்டதென்னும் ஆட்சேபம் ஒன்று ஏற்படலாம். ஆனால் பாரபட்சமில்லாத ஆராய்ச்சியா ளர் அதையே புத்தகத்தின் மேன்மையாகக் கொள்வார்கள். என் வாழுளில் சென்ற முப்பத்துமூன்று ஆண்டுகளாக நான் தேசீய இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையவனாக யிருந்துவந்திருக்கிறேன். சமயம், சமூகம், கல்வி, தொழில், அரசியல் ஆகிய அவ் வியக்கத்தின் துறைகள் எல்லாவற்றிலும் நான் ஈடுபட்டுவந்துள்ளேன். 'சட்டவரம்புக் குட்பட்ட' தேசியவாதிகளின் ஸ்தாபனமாகிய காங்கிரஸ் மகாசபையில், அது தோன்றிய நாலாம் ஆண்டிலேயே நான் சேர்ந்தேன்.

பின்வரும் பக்கங்களில், தேசீய இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி இவற்றைக் குறித்து உண்மையான விவரம் அளிக்க இயன்றவரை முயன்றிருக்கிறேன். நான் எப்போதுமே ஒரு கட்சிச் சார்பற்றவனாய் நடுநிலை வகித்து வந்திருப்பது அவ் வியக்கத்தைப் பற்றி எழுத எனக்கு அதிக தகுதியை யளிக்கின் றது. தேசீய வாதிகளில் எல்லாப் பிரிவினருடைய நம்பிக் கைக்கும் நான் உரியவனா யிருந்திருக்கிறேன். ஆனால் அவர் களுடைய வேலைத் திட்டங்களில் ஒவ்வோர் அம்சத்தையும் ஏற்றுக்கொண்டு அவற்றில் ஈடுபட்டதில்லை. பலாத்கார முயற்சி ஏதேனும் நடைபெறக்கூடும் என்று எனக்குத் தெரிய வந்த போதெல்லாம் அதைத் தடைப்படுத்தவே என் செல் வாக்கை உபயோகித்துவந்திருக்கிறேன். 1908-ம் ஆண்டில் ஒருமுறை என் செல்வாக்கைத் தக்க சமயத்தில் பயன்படுத்தி ஒரு லெப்டினண்ட் கவர்னரின் உயிரையும், ஒரு கலாசாலைத்

தலைவரின் உயிரையும் காப்பாற்றினேன். ஆனால் பிரிட்டிஷார் இந்தியாவில் நடந்துகொள்ளும் விதமும், ஜனங்களின் ஜீவாதாரமான உரிமைகளை அவர்கள் மறுத்து வருவதும் எரியும் தீயில் எண்ணெய் ஊற்றிக்கொண்டே வருகின்றன. ஆதலின் சட்டவரம்புக் குட்பட்ட இயக்கத்தின் நண்பர்களால் பலாத்கார முயற்சிகளை அடியோடு தடுக்க இயல்வதில்லை. வெடி குண்டுகளும், சுழல் துப்பாக்கிகளும் உபயோகிக்கப்படும் இரகசிய பலாத்காரச் செயல்களே மிகக் கொடியனவென்றும், ஒழுக்க நெறியினளவில் பகிரங்கக் கலகங்கூட அவ்வளவு கொடியதன்று என்றும் சமீபத்தில் பஞ்சாபின் லெப்டினண்ட் கவர்னர் பேசியிருக்கிறார். இதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் உரிமையிழந்த மக்கள் பகிரங்கக் கலகம் செய்ய வேண்டுமானால் அதற்கு முன்னதாக இரகசிய பிரசாரமும், அந்தரங்க ஆயத்தங்களும் செய்யாமல் முடியாதென்பதை மேற்படி லெப்டினண்ட் கவர்னர் மறந்துவிட்டார். இந்தியாவின் எல்லைப் புறங்களெல்லாம் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்றன. அவர்களுடைய சம்மதமின்றி தேசத்திற்குள் யாரும் நுழைய முடியாது. இந்நிலைமையிலுள்ள ஒரு நாட்டில் இரகசிய ஆயத்தங்கள் செய்வதென்றால், வெடி குண்டுகளையும், மற்றும் அரசாங்க நிர்வாகத்தைச் செயலறச் செய்து அதற்கு ஜனங்கள்மீதுள்ள பிடிப்பைத் தளர்த்தக்கூடிய முறைகளையும் கையாளும்படியே நேரிடும். ஓர் அரசாங்கம் அதன் கீழுள்ள ஜனங்களுக்கு வாய்ப்பூட்டு இடுகின்றது; அரசியல் பிரசாரத்துக்குரிய பகிரங்கத் துறைகளையெல்லாம் மூடிவிடுகின்றது; துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் வைத்துக்கொள்ளக் கூடாதென்று சட்டம் செய்கின்றது; அரசியலில் மாறுதல்களுக்காகப் பகிரங்கமாய்க் கிளர்ச்சி நடத்த வழி எதுவுமே இல்லாமற் செய்துவிடுகின்றது; இவ்வளவும் செய்த பின்னர், பகிரங்கக் கலகத்தைவிட இரகசியப் பிரசாரமும், இரகசிய சதியாலோசனைகளும் கொடியவையென்று அவ் வரசாங்கம் குறைகூறுதல் நியாயமாகுமா வென்பது ஐயத்துக் கிடமேயாகும்.

இந்தியாவின் அரசியல் நிலைமையைப்பற்றிச் சென்ற சில காலமாக அமெரிக்கப் பத்திரிகைகளில் மாறுபட்ட விவரங்கள் வெளியாகிவருகின்றன. நாடு கலகமாகக் கிளம்பும் தறுவாயிலிருக்கிற தென்று ஒரு விவரமும், இராஜ விசுவாசத்தில் தலை சிறந்து விளங்குகிறது என்று மற்றொரு விவரமும் கூறுகின்றன. இரண்டிலும் ஓரளவு உண்மையுண்டு; ஓரளவு பொய்யுமுண்டு. இந்தியாவில் இராஜபக்தி பொங்கித் ததும்பவில்லை; ஆயினும் வெளித்தோற்றத்திற்கு அவ்வாறே காணப்படுகிறது. இந்தியா கலகமாகக் கிளம்பும் தறுவாயிலுமில்லை; ஆனால் கலகக் கிளர்ச்சிக் குரிய மனோபாவம் அங்கே நிரம்பியிருக்கிறது. யுத்தம் ஆரம்பமானவுடன் இந்தியர்கள் தங்கள் இராஜ விசுவாசத்தைத் தெரிவித்துக் கொண்டது உண்மையே; ஆனால் இது அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் திருப்தியடைந்திருப்பதற்கு ருசுவாகும் என்று கூறுதல் முழு மோசம். பிரிட்டிஷாருக்கு விரோதமான இயக்கம் நாளுக்கு நாள் பரவிப் பலம் பெற்று வருகிறது. பிரிட்டிஷார் அவ் வியக்கத்தை "அராஜகம்" என்று சொல்கின்றனர். எப் பெயரிட்டழைத்தாலும் இந்திய ஜனங்களின் உதவி யில்லாமல் அவ்வியக்கத்தை வேரோடு அழிக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் ஒரு நாளும் முடியாது.

## 2

இப் புத்தகத்திற்குச் சிற்சில அம்சங்களில் ஆட்சேபங்கள் கிளம்புதல் கூடும். அவற்றுள் சரித்திர சம்பந்தமான இரண்டொன்றுக்கு முன்னதாகவே பதில் கூறிவிட விரும்புகிறேன். பாரத நாட்டின் பண்டைக்காலத்தைக் 'கிருதயுக'மாக நான் வர்ணித்திருக்கிறேன் என்று சிலர் சொல்லலாம். சந்திர குப்தனையும், அசோகனையும் பற்றி நான் குறிப்பிட்டிருப்பது சிறப்பைமட்டும் எடுத்துக்காட்டுவதாகுமென்றும், இந்தியா எப்போதும் ஓர் ஆட்சியின் கீழ் ஒற்றுமைப் பட்டிருந்ததாக வைத்துக்கொண்டு நான் எழுதியிருப்பதாகவும்

ஆட்சேபிக்கலாம். இந்த ஆட்சேபங்களைப் பற்றிக் கவனிக்கும்போது ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைக்கவேண்டும். இந்தியாவின் பண்டைச் சரித்திரத்தைக் குறிப்பிட்டிருப்பதில் எனது நோக்கம் என்னவென்பதே அவ் விஷயமாகும். பாரத நாடு பிரிட்டிஷாரால் கைப்பற்றப் படுவதற்கு முன்னுல் காட்டு மிராண்டிகள் வாழ்ந்த தேசமா யில்லையென்றும், அது சில அம்சங்களில் மிகச் சிறப்புவாய்ந்த பண்டைச் சரித்திரமுடைய நாடென்றும், தற்போது பிரிட்டிஷாரால் ஆளப்பட்டு வருவது போல் இதற்குமுன் எப்போதும் அன்னியர்களால், அன்னிய நாட்டில் வசிக்கும் ஜனங்களின் பொருளாதார, அரசியல் நன்மைகளை முன்னிட்டு அது ஆளப்பட்டதில்லையென்றும் எடுத்துக்காட்டுவதே என்னுடைய நோக்கம். பண்டைப் பாரத தேசத்தைப் பற்றியும், அதன் நாகரிகச் சிறப்பைப் பற்றியும் என் சொந்தக் கருத்துகளை யெல்லாம் மேனுட்டார் சரித்திர பூர்வமான உண்மைகளெனக் கொள்ளத் தயங்குவார்களென்று நான் அறிவேன். ஆதலின் தக்க ஆதாரங்கள் காட்டுவதற்கியலாத விஷயமொன்றேனும் இந்நூலில் நான் கூறவில்லை. இதைப் பற்றிப் பெரிதும் கவலை செலுத்தியுள்ளேன். புராதன இந்தியாவைப் பற்றி நான் கூறியுள்ள விவரங்களை மூன்று பகுதியாகப் பிரிக்கலாம்: (1) புத்தருக்கு முந்திய காலத்துக் குரியவை; (2) கி. மு. 500 முதல் கி.பி.1000 வரையில் உள்ள காலத்தவை; (3) முகமதியர் ஆட்சியைச் சேர்ந்தவை.

முதற்காலப் பகுதியைப் பற்றிய வரையில், சரித்திர பூர்வமானவை என்று திட்டமாகக் கூறக்கூடிய ஆதாரங்கள் கிடையா. ஆதலின் அக் காலத்துச் சமய நூல்கள், தர்ம சாஸ்திரங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றின் ஆதாரங்களைக்கொண்டே அப் பகுதியைப் பற்றிச் சொல்லியுள்ளேன். இப் புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் நான் சற்றுத் தணித்தே கூறியிருக்கும் விஷயங்களுக்கு மேற்குறிப்பிட்ட நூல்களில் வேண்டிய அத்தாட்சிகள் இருக்கின்றன. அவசியமானுல் என் கூற்று ஒவ்வொன்றுக்கும் நான் தக்க ஆதாரம் எடுத்துக் காட்டக்கூடும். அடுத்த காலப் பகுதியைப்பற்றிக் கூறியிருப்பவைகளுக்குக்

கிரேக்கர், சீனர், முகமதியர் ஆகியவர்கள் எழுதிவைத்திருக்கும் நூல்களில் சரித்திர பூர்வமான ஆதாரங்கள் போதிய அளவு இருக்கின்றன. அக் காலத்தைப் பற்றிய விவரங்கள் எல்லாம் இப் புத்தகத்தில் காணப்படாமலிருக்கலாம். ஆனால் இங்கே நான் தேச சரித்திரம் எழுதப்புகவில்லை யன்றோ? இந்நூலின் மத்திய நோக்கம் எதுவோ, அதற்கநுசரணையான சரித்திர உண்மைகளைமட்டும் குறித்துச் செல்கிறேனே யல்லாது வேறில்லை. அம்மத்திய நோக்கத்திற்கு, சந்திர குப்தனுடைய ஆட்சி எவ்வாறு நிறுவப்பட்டது என்று விசாரிப்பதும், அம் மன்னன் வியாபார இலாகா, ஜனன மரண இலாகா இவற்றை ஏற்படுத்தியதின் கருத்து யாது என்று துருவி ஆராய்வதும் முற்றும் அநாவசியமன்றோ? சந்திர குப்தன் 'கொடியவ'னாகவே இருக்கலாம். அதைப்பற்றி நமக்கு இங்கே கவலையில்லை. வின்செண்ட் ஸ்மித் போன்ற சரித்திராசிரியர் ஒருவர், அக்காலத்தில் இந்தியா சிறந்த நாகரிகமடைந் திருந்ததென்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருப்பதாகக் கருதுகிறார் என்பதே நமக்கு இங்கு முக்கியமானது. வின்செண்ட் ஸ்மித் மாஜி ஐ. சி. எஸ், உத்தியோகஸ்தர்; அவரை இந்தியாவினிடம் அபிமான உள்ளவரென்று சொல்ல முடியாது.* அத்தகைய ஒருவர் கூறுவதாவது:- "சந்திர குப்தனுடைய ஆட்சியின் கீழ் நிலவிய அரசாங்க முறையையும், இராணுவ அமைப்பையும் இவ்வளவு தூரம் ஆராய்ச்சி செய்ததிலிருந்து, மகா அலெக்ஸாண்டரின் காலத்தில் வட இந்தியா உயர்ந்த நாகரிக நிலை எய்தி யிருந்ததென்று தெளிவாக விளங்குகிறது. இத்தகைய உயர் நாகரிகம் பல நூற்றாண்டு காலமாக ஜன சமூகம் படிப்படியாய் வளர்ச்சி பெற்று வந்ததின் பயனாகவே கனிந்திருத்தல் வேண்டும்"*

---

* "இந்தியா கலைகளிலும், இலக்கியத்திலும் அடைந்திருந்த பெருமையை அதற்கில்லாமல் செய்துவிட மிஸ்டர் வின்செண்ட் ஸ்மித் எப்போதும் ஆவலாயிருக்கிறார்."---ஆசிரியர் எச். டி. ஜி. ராலின்ஸன் எழுதிய "இந்திய சரித்திர ஆராய்ச்சி" (Indian Historical Studies), 227-ம் பக்கம்.

* வின்செண்ட் ஸ்மித் எழுதிய "இந்தியாவின் ஆதி சரித்திரம்" (Early History of India), மூன்றாம் பதிப்பு, 135-ம் பக்கம்.

அசோகன் தன் வாழ்க்கையின் ஆரம்பத்தில் பல கொடுஞ் செயல்கள் புரிந்ததாக மற்றச் சரித்திராசிரியர்கள் கூறும் கதைகளை வின்செண்ட் ஸ்மித் மறுக்கிறார். இது எங்ஙனமாயினும், அவனுடைய இராஜ்ய பாரத்தின் மேன்மையை எல்லாச் சரித்திராசிரியர்களும் ஒருமுகமாக ஒப்புக்கொள்கிறார்கள். ஆசிரியர் ராலின்ஸன் கூறுவதாவது:— "அசோகனுடைய சிலாசாஸனங்கள் போதிக்கும் உயரிய ஒழுக்க நெறியிலிருந்து கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் இந்தியா மிகச் சிறந்த நாகரிகம் எய்தியிருந்ததென நன்கறிகிறோம். அக்காலத்தில், உலகின் மற்றப் பகுதிகளுடன் ஒப்பிடும்போது, பாரத நாடு சிறந்து விளங்கியிருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. ஏனெனில் கிரீஸ் அப்போது விரைவாக வீழ்ச்சியுற்றுவந்தது. கார்த்தேஜ் நாட்டுடன் பெரும்போரில் ஈடுபட்டிருந்த ரோமாபுரியோ இன்னும் அநாகரிக நிலையை முற்றும் கடந்து மேலெழவில்லை."*

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு இதைவிட அதிக உயர்வை இந்தியன் எவனும் கேட்கவேண்டியதில்லை. இறுதியாக இந்தியாவின் அரசியல் ஒற்றுமையைக் குறித்து ஒன்று கவனிக்கப்படவேண்டும். இந்தியா எப்போதும் ஒரே அரசாங்கத்தின் கீழோ, ஒரே ஆட்சிமுறையின் கீழோ இருந்ததாக நான் சொல்லவில்லை. அவ்வாறே இந்தியா எப்போதுமே அரசியல் ஒற்றுமை பெற்றிருக்கவில்லையென்று கூறுவதும் உண்மையன்று. பிரிட்டிஷ் ஆசிரியன்மார்களில் பெரும்பாலோர் இந்தியாவில் எத்தகைய ஒற்றுமையேனும் இருந்ததாகவோ, இருப்பதாகவோ ஒப்புக்கொள்வதில்லை. இவர்களுடைய வாதத்தை வின்செண்ட் ஸ்மித்தின் பின்வரும் கூற்றைக் கொண்டே பொய்ப்படுத்திவிடலாம்:— "கடல்களாலும், மலைகளாலும் சூழப் பெற்றிருக்கும் இந்தியா ஒரு தனிப்பட்ட பூகோளப் பகுதி என்பதை எவரும் மறுக்க முடியாது. எனவே, அது ஒரே பெயரினால் வழங்கப்படுவது முற்றும் பொருத்தமே யாகும். மேலும் இந்திய நாகரிகத்துக்கே உரிய

*"இந்திய சரித்திர ஆராய்ச்சி", 27-ம் பக்கம்.

வையான பல அம்சங்கள் அந்நாட்டை உலகின் மற்றப் பகுதிகளிலிருந்து தனியே பிரிக்கின்றன. அந்த அம்சங்கள் ஓரளவு தேச முழுவதிற்கும் பொதுவானவையாகும். எனவே மக்கட் குலத்தின் சமூதாய, சமய, அறிவு வளர்ச்சியின் சரித்திரத்தில் இந்தியாவை ஒருமை பெற்ற ஒரு தனி நாடாகப் பாவிப்பதற்குப் போதிய நியாயம் உண்டு.”*

ஆனால் மிஸ்டர் வின்செண்ட் ஸ்மித் மேலே பின்வருமாறு சொல்கிறார்:— “அகில இந்தியாவும் ஒரு குடைக் ஆட்சியின் கீழ் பூரண அரசியல் ஒற்றுமை பெற்றது நேற்றைய சம்பவமாகும். இது நிகழ்ந்து இன்னும் ஒரு நூற்றாண்டுகூட ஆகவில்லை. பண்டை இந்தியாவின் பிரபல மன்னர்கள் பலர் பாரத நாடு முழுவதையும் ஒரு குடைக் கீழ் ஆட்சி புரியவேண்டுமென ஆவல் கொண்டிருந்தது உண்மையே. இந்த நோக்கத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வோரளவு வெற்றியடைந்தார்கள். ஆனால் அவர்களில் யாரும் பூரண வெற்றி யடைந்தாரில்லை.” இது பெரிதும் விவாதத்துக் கிடமான விஷயமாகும், இது குறித்து இங்கு விரிவாக ஆராயப் புகுந்தால் இப் புத்தகம் மிகப் பெரிதாகிவிடும். எடுத்துக்கொண்ட விஷயத்தினளவுக்கு அது பொருத்தமாயிராது. இந்தியாவின் தென் மூலையில் நெல்லூருக்கும் கன்னியாகுமரிக்கும் இடையிலுள்ள சிறு நிலப் பகுதியைத் தவிர, மற்றப்படி பரதகண்டம் முழுவதும் அசோகனுடைய சாம்ராஜ்யம் வியாபித்திருந்தது என்று வின்செண்ட் ஸ்மித் ஒப்புக்கொள்கிறார். ஆனால் இச்சிறு பகுதியை அவனுடைய சாம்ராஜ்யத்திலிருந்து விலக்கியிருப்பதற்குக் காரணம் என்ன? அது அச் சாம்ராஜ்யத்தில் சேரவில்லை யென்பதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைத்திருப்பதுவா? இல்லை, இல்லை;

*“இந்தியாவின் ஆதி சரித்திரம்”, ஐந்தாம் பக்கம். மிஸ்டர் ஈ. பி. ஹாவெல் எழுதிய “இந்தியக் கலைஞான இலட்சியங்கள்” (Ideals of Indian Art), 11—12-ம் பக்கங்களும் பார்க்க. மிஸ்டர் ஹாவெல்லின் முடிவு வருமாறு:— “சாதியாலும், சமயத்தாலும் இந்தியா பிளவுபட்டிருந்தாலும், அவற்றுளெல்லாம் ஊடுருவிப் பொலியும் அதன் ஆன்மா ஒன்றே என்பதைக் கண்ணுள்ளோர் நன்கு காணலாம்.”

மற்று, அப் பகுதியும் சேர்ந்திருந்தது என்று நிச்சயமாய்ச் சொல்லத்தக்க சாட்சியங்கள் கிடையாமையே யாகும்! விக்டோரியா மகாராணியின் காலத்தில் இந்தியாவின் ஒவ்வொரு சிறு பகுதியும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சேர்ந்திருந்தது என்று தஸ்தவேஜிகளின் மூலம் ருசுப்படுத்தும்படி இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பின் வருவோர் சொல்வதையே இது ஒக்குமல்லாது வேறில்லை. மற்றும், இந்தியாவின் தெற்கு மூலை அசோகனுடைய சாம்ராஜ்யத்தில் சேரவில்லை யென்றே வைத்துக்கொண்டாலும், இக் குறைபாடு ஆப்கானிஸ்தானம், நேபாளம், பலுசிஸ்தானம் ஆகியவை அச் சாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்தபடியால் ஈடு செய்யப்பட்டு விடவில்லையா? நேபாள நாட்டிலடங்கிய பிரதேசங்கள் இந்தியாவின் ஒரு முக்கியமான பகுதியாகும். அப் பகுதி இன்னும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து தனித்தேயிருக்கிறது. எனினும், இந்தியா இன்று அரசியல் ஒருமை பெற்றிருக்கிறதென்பதை வின்செண்ட் ஸ்மித் உள்ளிட்ட எவரும் சந்தேகிக்கிறரில்லை.

மேலும் கி. பி. 320-ம் ஆண்டுமுதல் 455-ம் ஆண்டுவரையில் இந்தியாவில் நிலவிய குப்த சாம்ராஜ்யத்தின் சரித்திரத்தை நிர்மாணிப்பதற்கு மிஸ்டர் வின்செண்ட் ஸ்மித்தும், மற்ற சரித்திராசிரியர்களும் சமீபத்திலேயே ஆதாரங்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த சாம்ராஜ்யத்தின் விஸ்தாரத்தைக் குறித்து அவர் கூறுவதாவது:—

"நான்காம் நூற்றாண்டின் மத்தியில் சமுத்திர குப்தனின் நேரான ஆட்சியின் கீழ் இருந்த இராஜ்யம், வட இந்தியாவின் செழிப்பான, ஜன நெருக்கமுள்ள பிரதேசங்கள் எல்லாம் அடங்கியதாகும். ... இந்த விஸ்தாரமான எல்லைகளுக்கப்பால் அஸ்ஸாம், கங்கா நதியின் முகத்துவாரப் பிரதேசம், ஹிமாலயத்தின் தென் புறத்திலுள்ள அடிவாரங்கள், இராஜபுதனம், மாளவ நாட்டுச் சிற்றரசுகள் இவையெல்லாம் அவனுடைய சாம்ராஜ்யத்தின் மேலதிகாரத்தை ஒப்புக்கொண்டிருந்தன

மற்றும் தென்னிந்தியாவின் இராஜ்யங்கள் எல்லாவற்றையும் அநேகமாக அவனுடைய சைன்னியங்கள் வென்று அவனுடைய வலிமையை ஒப்புக்கொள்ளும்படி செய்தன.

''சமுத்திர குப்தனுக்குக் கிடைத்த சிறு ஓய்வு நேரங்களில் அவன் கலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தான். கலைகளில் அவன் அசாதாரண திறமை பெற்றிருந்தான் என்பது நன்கு தெரியவருகிறது. அவன் பெரிய மேதாவி என்பதில் சந்தேகமேயில்லை, இந்திய நெப்போலியன் என்னும் பட்டத்துக்கு அவன் பெரிதும் உரியவன் என்றும் கூறலாம்.

''விதி வசத்தின் விந்தைதான் என்ன? இத்தகைய பெரு மன்னன், போர்வீரன், கவிஞன், இன்னிசைப் புலவன், ஏறக்குறைய இந்தியா முழுவதிலும் வெற்றிக்கொடி நாட்டியவன், ஆக்ஸஸ் முதல் இலங்கை வரையில் நேய உடன்படிக்கை கொண்டவன்—இவனுடைய பெயர்கூட இந்நூல் வெளியாவதற்கு முன்னுல் சரித்திராசிரியர்களுக்குத் தெரியாமலிருந்தது. சென்ற எண்பது ஆண்டுகளாய்ப் பற்பல கல்வெட்டுகளையும், நாணயங்களையும் எவ்வளவோ உழைப்பெடுத்து நுட்பமாய் ஆராய்ச்சி செய்ததின் பயனுக மறைந்து போன அவனுடைய புகழ் சிறிது சிறிதாகத் துலங்கி வருகிறது.''

இங்கே ஒன்று குறிப்பிடுதல் அவசியமாகும். சமுத்திரகுப்தனைப் போன்ற சக்கரவர்த்திகள்—ஐரோப்பாவின் சார்லிமேன், மகா பிரடரிக், மகா பீடர் முதலியோருடன் ஒப்பிடக் கூடியவர்கள் — ஏறக்குறைய இரண்டு தலைமுறைகளுக்கு ஒருவர் வீதம் இந்தியாவில் தோன்றிக்கொண்டே இருந்தார்கள். ஹிந்துக்களின் கர்ண பரம்பரைகளில் இவர்களுக்கு ''விக்ரமாதித்யர்கள்'' எனப் பெயர் வழங்குகிறது. இக் கதைகளில் வர்ணிக்கப்படும் விக்ரமாதித்யர்களின் வீர தீர பராக்கிரமச் செயல்கள் எண்ணற்றனவாகும். உலக சரித்திரத்தில் இவை நிகழ்ந்த காலம் எது என்பதைக் கவனிக்கவேண்டும். எகிப்தும், பாபிலோனியாவும் ஏற்கனவே மறைந்துவிட்டன, சீனத்தில் அராஜகம்

குடிகொண்டிருந்தது. ரோம் சாம்ராஜ்யம் காட்டுமிராண்டி சாதியாரின் காலடியில் மிதிக்கப்பட்டுக் கிடந்தது. ஸாரஸேனர் களின் ஏகாதிபத்தியம் (கிலாபத்) இன்னும் ஏற்படவில்லை. இங் கிலாந்து, பிரான்ஸு, ஜெர்மனி முதலிய இராஜ்யங்கள் இல்லவே இல்லை. இந்தியாவில் விக்ரமாதித்யர்கள் புகழ் பெற்று விளங் கியது இத்தகைய காலத்திலாகும்.

கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முந்தைய இந்திய சரித்திரம் இன்னும் முழுதும் நிர்மாணிக்கப்பட்டுவிட வில்லை. வருங் காலத்து ஆராய்ச்சிகள் இன்னும் எத்தனை சமுத்திர குப்தர்களை வெளியாக்குமென்று யாருக்குத் தெரியும்? பார்க்கப் போனால், இந்தியா பண்டை நாளில் பூரண அரசியல் ஒருமை பெற்றிருந் ததா என்பது அவ்வளவு முக்கியமான விஷயமே யன்று. ஒரு விதத்தில் இந்தியா தற்போதும் முழு அரசியல் ஒருமை பெற்ற நாடாகாது. 1830-ல் அது அவ் வொருமை பெற்றிருக்கவில்லை யென்பது நிச்சயம். 1849-ம் ஆண்டு வரையில் பஞ்சாப் சுயா தீன நாடாயிருந்தது. லார்டு டல்ஹௌஸியினால் சேர்க்கப்பட்ட மற்ற மாகாணங்களும் அவ்வாறே. ஆதலின் 1818-ம் ஆண்டு முதல் இந்தியா அரசியல் ஒருமை பெற்ற நாடாயிற்றென்று வின்செண்ட் ஸ்மித் கூறுவது ஆதாரமற்றதாகும். நாம் எடுத் துக்கொண்ட விஷயத்திற்கு இதைவிட மிகவும் முக்கியமா னவை தற்காலமும் வருங்காலமுமேயாம். நேபாளம் இன்னும் சுதந்திர நாடாகவே யிருப்பினும், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியா ஒருமை பெற்றுவிட்டதாக உரிமை பாராட்டப் படுகிற தன்றோ?

இந்தியர்களின் முன்னேற்ற முயற்சிகளைக் குறை கூறு வோர் சாதாரணமாக ஒரு பெரிய அநீதி செய்கிறார்கள். பதி னேழு, பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இருந்த பாரத நாட்டின் நிலையை, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸு, அமெரிக்கா முதலிய நாடுகளின் இருபதாம் நூற்றாண்டு நிலை மையுடன் அவர்கள் ஒப்பிடுகிறார்கள். இப் பெயர்களைக் கொண்ட இராஜ்யங்கள் நேற்று முளைத்தவை என்பதை அவர்

கள் மறந்துவிடுகிறார்கள். ருஷியாவைத் தவிர்த்த் ஐரோப்பா கண்டம் எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரிய தேசம் இந்தியா. பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னால் ஐரோப்பாவின் நிலைமை எப்படி யிருந்தது? தேசங்களும், சமயங்களும் அங்கே ஒன்றோடொன்று ஓயாப் போர்தொடுத்து, அந்தந்த தேசம் அல்லது சமயத்தின் கை மேலோங்கும்போது மற்றவைகளை அழிப்பதிலும், கொடுமை செய்வதிலும் ஈடுபட்டிருந்தன. ரோமானியர்களின் காலடியில் கிரேட் பிரிட்டன் மிதிக்கப்பட்டுக் கிடந்தபோது, பாரத நாடு ஏறக்குறைய ஒரு குடை ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. பிரிட்டிஷார் 1600 வருஷகாலம் முயற்சி செய்து தற்போதுள்ள அரசியல் ஒருமையை ஸ்தாபித்தார்கள். கிரீன் என்னும் சரித்திராசிரியரின் நூலி*லிருந்து "அன்னியர் ஆட்சியில் இங்கிலாந்து" என்னும் பகுதியைக் கீழே எடுத்துக் காட்டி யுள்ளேன். அதையும், சமுத்திர குப்தனின் காலந்தொட்டு பரத கண்டத்தின் நிலைமையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

"ஹெங்கிஸ்டின் வருகைக்குப் பின்னர் ஐந்நூறு ஆண்டுகளில் பிரிட்டன் இங்கிலாந்தாகிவிட்டது. பிரிட்டனை வெற்றி கொண்டவர்கள்(ஆங்கிலேயர்)அங்கேயே நிலையாகக் குடியேறி விட்டார்கள். ..ஆனால் அரசர்கள் என்னதான் பட்டம் சூட்டிக் கொண்டாலும், அவர்களுடைய ஆட்சி எவ்வளவுதான் வலுப் பெற்றதாகக் காணப்படினும், நார்த்தம்பிரியர் மேல் ஸாக்ஸானியரிடமிருந்தும், டேனியர் ஆங்கிலேயரிடமிருந்தும் பிரிந்தே நின்றார்கள்.

"அதெல்ரெட் இங்கிலாந்திலிருந்து நார்மண்டிக்கு ஓடியதற்கும், ஜான் நார்மண்டியிலிருந்து இங்கிலாந்துக்கு ஓடி வந்ததற்கும் இடையில் உள்ள இருநூறு ஆண்டுகளின் சரித்திரம் நமது நாட்டில் அன்னிய ஆட்சியின் சரித்திரமாகும். டென்மார்க்கிலிருந்து வந்த அரசர்களுக்குப் பின்னர் நார்மண்டி

*A Short History of the English People.

யிலிருந்து வந்தவர்கள் ஆண்டார்கள். அவர்களுக்குப் பிறகு அஞ்சௌவிலிருந்து அரசர்கள் வந்தனர். டேனிய, நார்மானிய, அஞ்சௌ அரசர்களின் கீழ் ஆங்கிலேயர் உரிமை யிழந்த சாதியாராக இருந்துவந்தனர். அக்காலத்தில் அவர்கள் அன்னிய நாட்டாரால் ஜெயிக்கப்பட்டு அன்னிய எஜமானர்களால் ஆளப்பட்டு வந்தனர். என்றாலும், பராதீனப் பட்டிருந்த இந்தக் காலத்திலேதான் இங்கிலாந்து உண்மையில் இங்கிலாந்தாயிற்று.... இங்கிலாந்தின் பிரபுக்கள் தாமும் அன்னிய நாட்டிலிருந்து வந்து குடியேறிய ஜமீந்தார்களுக்குத் தங்கள் பதவிகளைப் பறிகொடுத்து, தங்கள் உரிமை பெருமைகளை யெல்லாம் இழந்து மத்திய வகுப்பாராக மாறினர்.''

இது சம்பந்தமாக, மிஸ்டர் வெஸ்ட் என்னும் சரித்திராசிரியர் கூறுவதும்* கவனிக்கத் தக்கது:- ''கி. பி. 800-ம் ஆண்டில் ஐரோப்பா இன்னும் காட்டுமிராண்டித் தனத்தில் மூழ்கியே கிடந்தது. தொடர்ந்து வந்த படையெடுப்புகளின் பயனாக ஏற்பட்ட நீண்டகால அராஜக நிலைக்குப்பிறகு, சார்லிமேனுடைய ஆட்சி இடையில் சிறிது காலம் ஒளியுடன் விளங்கிற்றென்றாலும், அதனால் நாகரிகம் உயிர்ப்பிக்கப்பட்டுவிட வில்லை. கல்வியும், கலாசாலைகளும் அநேகமாக அழிந்து போயிருந்தன. வர்த்தகம் என்பது பெயரளவிலும் நடக்கவில்லை. உள்நாட்டுப் பிரயாணங் கூடப் பெரிதும் இயலாமற் போயிருந்தது. பணம் மிகவும் அபூர்வமாகிவிட்டபடியால் விளைபொருள்களே வரியாக வசூல்செய்யப்பட்டன. ஜனங்களின் பழக்க வழக்கங்களும், ஒழுக்க முறைகளும் மிகவும் கேவலமாகியிருந்தன.'' இந்திய சரித்திரத்தில் எந்தக் காலத்திலும் இவ்வளவு மோசமான நிலைமை ஏற்பட்டிருந்தது கிடையாது. மிஸ்டர் வெஸ்ட் மீண்டும் கூறுவதாவது:— ''814-ம் ஆண்டு முதல் 1100-ம் ஆண்டு வரையில் மூன்று நூற்றாண்டுகள் ஐரோப்பாவின் 'இருளடர்ந்த நூற்றாண்டு'களாகும். இக்காலத்தில் ஐரோப்பா மீண்டும் காட்டுமிராண்டி சாதியாரின்

*''தற்கால சரித்திரம்'' (Modern History). 4-ம் பக்கம் பார்க்க.

படையெடுப்புகளுக்கு உள்ளாயிற்று. இந்தப் படையெடுப்புகளைத் தடுப்பதற்காகச் சமூகம் ஆங்காங்கு ஏற்படுத்திய இராணுவ அமைப்புகள் தாங்களும் பலாத்காரச் செயல்களினால் ஜனங்களைத் துன்புறுத்தி 'இருள்' நீடித்திருப்பதற்கே துணை செய்தன.'' உண்மையில், ஐரோப்பா கண்டமானது 1870-ம் ஆண்டு வரையில் இடைவிடாத ஒரு பெரும் போர்க்களமாகவே யிருந்து வந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசிப் பகுதிக்கு முன்பு அங்குத் தேசிய இலட்சியம் என்பதே உருப்பெறவில்லை. அங்ஙன மிருக்க, இந்தியர்கள் தங்கள் நாட்டின் பூரண தேசீய ஒருமை பெற்றிருக்க வில்லையென்று இழித்துக் கூறுவது எவ்வாறு நியாயமாகும்? நவீனக்கொள்கைகளின்படிகூட தேசீய இலட்சியம் இந்தியாவில் மிக விரைவாக வளர்ந்துவருகிறதென்பதை எவரும் மறுக்கமுடியாது. உண்மையில், பாரத தேசம் சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒரு தனி நாடாகவே யிருந்துவந்திருக்கிற தென்பது எனது கொள்கை. சிற் சில சமயங்களில் இந்தியா பல இராஜ்யங்களாகப் பிரிவுபட்டிருக்கலாம். இந்த இராஜ்யங்கள் ஒரு சாம்ராஜ்யத்திற்கு உட்பட்டனவாகவோ, தனிச் சுதந்திரம் பெற்றனவாகவோ இருந்திருக்கலாம். எனினும் அடிப்படையான அம்சங்களில் இந்தியா ஒருமை பெற்ற நாடேயாகும்.

அங்ஙனமின்றி, இந்தியா பற்பல இராஜ்யங்களாகத் துண்டிக்கப்பட்டு விடுவதாகவே வைத்துக்கொள்வோம். அதனாலென்ன? சிலர் கருதுவதுபோல் இதை ஒரு பெரும் விபத்தென்று நான் எண்ணவில்லை. மற்றவர்கள் ஆட்டிவைத்தபடி ஆடும் பிராணிகளா யிருப்பதினும் தங்களுடைய போர்களைத் தாங்களே நடத்திக் கொள்ளும் ஆண் மக்களாயிருப்பது மேல் என்று கருதும் இந்தியர் சிலர் இருக்கின்றனர். ''என்ன விலை கொடுத்தும் சமாதானம்'', ''எந்த சந்தர்ப்பத்திலும் அமைதி'' என்னும் கொள்கைகளில் இவர்களுக்கு நம்பிக்கை கிடையாது.

—:o:—

## 3

**1915-ம்** வருஷம் ஜனவரி மாதம் முதல் அவ்வாண்டு மே மாதம் வரை அமெரிக்க ஐக்ய இராஜ்யத்தில் நான் பிரயாணம் செய்துகொண்டிருந்த போது இப் புத்தகம் எழுதினேன். ஜூன் மாதத்தில் புத்தகம் அச்சுக்கூடத்தில் கொடுப்பதற்குத் தயாராகிவிட்டது. ஆனல் சிற் சில காரணங்களினுல் வெளியிடுவதில் தாமதம் நேர்ந்தது. அக் காரணங்களை இங்கே சொல்ல வேண்டுவதில்லை.

அதற்குப் பின்னர் இப் புத்தகத்தின் விஷயத்துடன் தொடர்புள்ள பல சம்பவங்கள் இந்தியாவில் நிகழ்ந்திருக்கின்றன. அவற்றைச் சுருக்கமாக இங்கே குறிப்பிட்டுச் சொல்லுதல் பொருந்தும்.

1915-ம் ஆண்டின் ஆரம்பத்தில் பஞ்சாபின் தென்மேற்கு ஜில்லாக்களில் சில காரியங்கள் நிகழ்ந்தன. அவை, முன்னேற்பாட்டுடன் தொடங்கப்பட்ட அராஜகக் கலவரங்கள் என்று சொல்லக் கூடியவையாகும். இக் கலவரங்களின்போது பல கிராமங்கள் கொள்ளையிடப்பட்டன. சட்டமீறிய இச் செயல்கள் யுத்தங் காரணமாகவே நிகழ்ந்தன என்பதில் ஐயமில்லை. இவற்றைக் குறித்துப் போலீஸாரும், மற்ற உத்தியோகஸ்தர்களும் பீதி யடைந்துவிட்டார்க ளென்றும், தலைமை ஸ்தல அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்ட பிறகே ஒழுங்கை நிலைநாட்ட முடிந்தது என்றும் சொல்லப்படுகின்றன. இக் கலவரங்கள் சம்பந்தமாகச் சுமார் 4000 பேர் கைது செய்யப்பட்டதில் ஏறக்குறைய 800 பேருக்குச் சிறைவாச தண்டனை விதிக்கப்பட்டது. மற்றவர்கள் போதிய சாட்சியமின்மையால் விடுவிக்கப்பட்டார்கள்.

1914-ம் வருஷத்தின் இறுதியிலும், 1915-ம் ஆண்டின் முற்பகுதியிலும் பஞ்சாபில் பல கொள்ளைகளும், கொலைகளும் நடந்தன. வெளி நாடுகளிலிருந்து திரும்பிவந்த இந்தியர்கள்

யுத்த நிலைமையை அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள எண்ணித் தாங்களேயோ, பிறரைத் தூண்டியோ மேற்கூறிய கொலை, கொள்ளைகளை நடத்தினார்கள். இவர்களில் சிலர் கானடாவுக்குச் சென்றிருந்தவர்கள். மற்றவர்கள் சீனத்திலிருந்தும், அமெரிக்க ஐக்ய இராஜ்யத்தின் பசிபிக் சமுத்திரக்கரை யோரத்திலிருந்தும் திரும்பி வந்தவர்கள். கானடாவில் குடியேறும் உத்தேசத்துடன் சென்று, அங்கே இறங்க அநுமதிக்கப் படாமல் பல கஷ்ட நஷ்டங்களுக் குள்ளாகித் திரும்பி வந்தவர்கள் மேற் கூறியவர்களில் பலர் இருந்தனர். இவர்களுக்கும், அரசாங்கத்துக்கும் முதன் முதலாக வங்காளத்திலுள்ள பட்ஜ் பட்ஜ் என்னுமிடத்தில் போராட்டம் ஏற்பட்டது. கானடாவுக்குப் போய் ஏமாற்றமடைந்து திரும்பியவர்கள் பஞ்சாபிலுள்ள தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லும் நோக்கத்துடன் இவ்விடத்தில் கப்பலிலிருந்து இறங்கினார்கள். அரசாங்கத்தார் இவர்களுடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த உத்தேசித்தனர். இவர்களில் கல்கத்தாவுக்குப் போக விரும்பியவர்களை அங்குப் போகக் கூடாதென்று தடுத்தனர். இதன்மேல் அவர்கள் தங்களிடம் ஒளித்து வைத்துக் கொண்டிருந்த ஆயுதங்களை எடுத்ததாகவும், போலீஸாருக்கும் அவர்களுக்கும் கை கலந்த சண்டை நடந்ததாகவும், இருதரப்பிலும் உயிர்ச்சேதம் நிகழ்ந்ததாகவும் தெரியவருகின்றன. இதே சமயத்திலோ, இன்னும் சிறிது பின்னாலோ, இந்திய அரசாங்கத்தால் ஒரு விசேஷ சட்டம் இயற்றப்பட்டது. எந்த மனிதரையும், தேச அமைதிக்கு அபாயகரமானவர் என்ற சந்தேகத்தின் மீது, விசாரணையின்றிச் சிறைப்படுத்தவும், பாதுகாப்பில் வைக்கவும் அச்சட்டம் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரம் தந்தது. இச் சட்டத்தின் கீழ் கானடா, ஐக்ய இராஜ்யம் முதலிய வெளி நாடுகளிலிருந்து வந்த இந்தியர்கள் பலரைப் பாதுகாப்பில் வைக்கத் தொடங்கினார்கள். விரைவில் இவர்களுடைய தொகை ஆயிரக் கணக்குக்கு வந்துவிட்டது. இவர்களில் பெரும்பாலோர் போலீஸ் மேற்பார்வையில் மட்டும் வைக்கப்பட்டவர்களா யிருக்கலாம். எங்ஙனமாயினும், இவர்களில் பலர் இந்

தியப் புரட்சிக் கூட்டத்தாருடன் எப்படியோ தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு, முடிவில் பிரிட்டிஷ் ஆட்சியையே கவிழ்ப்பதற்கு ''விஸ்தாரமான சதியாலோசனை'' செய்துவிட்டார்கள். இச் சதியாலோசனையை ஒற்றர்களின் மூலம் அரசாங்கம் கண்டுபிடித்துவிட்டது. இவ்வொற்றர்கள் தாங்களும் சதியில் சேர்ந்தவர்கள் என்பதாக வேஷம் போட்டுத் ''தூண்டும் உளவாளி'' (agents provocateurs) களா யிருந்து அவர்களுடைய இரகசிய ஏற்பாடுகளை யெல்லாம் அறிந்துகொண்டனர். இச் சதியாலோசனை சம்பந்தமாகக் கைதுசெய்யப் பட்டவர்களை விசாரிப்பதற்கென்று ஒரு விசேஷ நீதிமன்றம் ஏற்படுத்தப் பட்டது. இவ் விசாரணையின்போது கூறப்பட்ட சாட்சியங்களிலிருந்து, சதியாலோசனையி லீடுபட்டவர்கள் தங்கள் திட்டங்களை விஸ்தாரமாக அமைத்து ஒவ்வோர் ஏற்பாட்டையும் குறையின்றிச் செய்திருந்ததாகத் தெரியவருகிறது. பணத்திற்கும், ஆயுதங்களுக்கும் அவர்கள் தக்க ஏற்பாடு செய்திருந்ததுடன், வட இந்தியாவில் பல இடங்களிலுமுள்ள சைன்யங்களை மேற்படி சதியில் ஈடுபடுத்துவதற்கு முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றிருந்ததாகக் காணப்படுகிறது. இரண்டு ஆங்கில நீதிபதிகளும், ஓர் இந்திய நீதிபதியும் அடங்கிய விசேஷ நீதிமன்றத்தின் முன்பு 65 பேர் அடங்கிய ஒரு கூட்டம் முதலில் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த நீதி மன்றம் மேற் கூறிய விசேஷ சட்டத்தின் கீழ் ஏற்பட்டதாகும். அதனுடைய தீர்ப்பே முடிவானது. அதாவது அதன் தீர்ப்பை ஆட்சேபித்து மேல் கோர்ட் எதற்கும் அப்பீல் செய்ய முடியாது. சதியாலோனை இராஜாங்க துவேஷங் காரணமாகவே ஏற்பட்டதென்றும், அதைச் சரியான தருணத்தில் கண்டு பிடித்திராவிட்டால் பெரும் விபத்தாக முடிந்திருக்கு மென்றும் மேற்படி நீதி மன்றத்தார் முடிவாகத் தீர்ப்பு அளித்தனர். இந்த நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் அந்தரங்கமாக நடந்தன. நடவடிக்கைகளைப் பொது ஜனங்கள் கவனிப்பதற்கோ, அவற்றைப் பத்திரிகைகளில் வெளியிடுவதற்கோ அநுமதி யளிக்கப் படவில்லை. ஒவ்வொரு நாளும், நீதிபதிகள் மேற்பார்த்து நட

வடிக்கைகளின் சுருக்கமான விவரம் வெளியிடப்பட்டது. எதிரிகளில் சிலரைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. கைதி செய்யப்பட்ட 61 பேரில் நால்வரே விடுதலை செய்யப்பட்டனர்; அறுவருக்கு வெவ்வேறு கால சிறைவாசமும், 27 பேருக்கு ஜன்ம தீவாந்தர சிட்சையும்,* 24 பேருக்கு மரண தண்டனையும்** விதிக்கப்பட்டன. 1915-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 25உ பஞ்சாப் லெப்டினன்ட் கவர்னர் அம் மாகாணச் சட்ட சபையில் பேசும் போது மேற்படி விசாரணையைக் குறிப்பிட்டுக் கூறியதாவது:—''இந்தக் குற்றங்கள் சென்ற வருஷம் நவம்பர் மாதத்திலிருந்து இவ் வருஷம் ஜூலை மாதம் வரையில் மத்திய பஞ்சாப் முழுவதிலும் பெரும் பீதியையும், பயங்கரத்தையும் உண்டுபண்ணி யிருந்தன. அதிகாரிகளின் கண்டிப்பான நடவடிக்கைகளினாலும், பொது ஜனங்களின் ஒத்துழைப்பினாலும் அவற்றை முளையிலேயே கிள்ளாமல் விட்டிருந்தால், சிப்பாய்க் கலகத்தின் போது ஹிந்துஸ்தானத்தில் ஏற்பட்டிருந்த நிலைமை இம் மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும். சதியாலோசனைக்காரர்கள் விரும்பியதும் அதுவேயாகும். அவர்கள் அரசாங்க அதிகாரத்தைச் செயலறச் செய்து விஸ்தாரமான பயங்கரச் செயல்கள் புரிந்திருப்பார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்களை மட்டுமன்றி இராஜ பக்தி யுள்ள பிரஜைகளையும் கொலை செய்திருப்பார்கள்.''

இத்தகைய சதியாலோசனைகள் பலவற்றிற்குத் தலைவரான ராஷ் பிஹாரி போஸ் என்னும் வங்காளி தப்பித்துக்கொண்டது முக்கியமாகக் குறிப்பிடத் தக்கதாகும். இதே விசாரணையைப் பற்றி எழுதுங்கால், பம்பாயில் வெளியாகும் ''டைம்ஸ் ஆப் இந்தியா'' என்னும் செல்வாக்குள்ள ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை கூறியதாவது:— ''சாதாரண காலங்களில் இச் சதியா

* இவர்களில் சிலருக்குத் தண்டனை குறைக்கப்பட்டது.

** 16 பேருக்கு ஆயுள் சிறைவாசமாக மாற்றப் பட்டது. அவர்களிடம் இரக்கங்காட்டி அப்படிச் செய்யவில்லை யென்றும், சாட்சியங்களை முன்னிட்டே மரண தண்டனை மாற்றப்பட்ட தாகவும் இராஜப் பிரதிநிதி உத்தியோக முறையில் தெரிவித்தார்.

லோசனை வெளியாகி யிருந்தால் அதில் கலந்தவர்களை இந்திய ரில் ஒரு பெரிய வகுப்பினருக்குப் பிரதிநிதிகள் என்று கருத இட மேற்பட்டிருக்கும். ...ஆனால், இப்போது, புரட்சிக் கட் யினர் இந்திய ஜனத் திரளின் மிகச் சிறு பகுதியினரே என்பது வெள்ளிடை மலையாய் விளங்குகிறது. அவர்கள் மிக அபாய கரமான, உறுதியுள்ள ஒரு கூட்டத்தாரா யிருக்கலாம். என்றா லும், தேச மக்கள் எத்துணை இராஜ விசுவாசமுள்ளவர்களென் பது இந்த யுத்த காலத்தில் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளபடியால், அக் கூட்டத்தார் அணுவளவும் வெற்றி யடைய முடியாதென் பது திண்ணம்.''

தண்டனைகளின் கடுமையைப்பற்றி எழுதிய இந்தியப் பத் திரிகைகள், அதைச் சந்தர்ப்பமாகக் கொண்டு பிரிட்டிஷாரால் தேசத்திற்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளையும் எடுத்துக் காட்டின. இவ்வழக்கு முடிந்த பின்னர், அதே சதியாலோ சனையில் கலந்திருந்ததாக லாகூரில் நூறு பேரும்,* காசியில் இன்னும் பலரும் விசாரிக்கப் பட்டனர். இவர்களை யல்லாமல் இராணுவத்தைச் சேர்ந்த பலர் வட இந்தியாவின் பற்பல இடங் களிலும் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப் பட்டனர்.

வங்காளத்தில் 1915-ம் ஆண்டு முழுவதிலும் கடுமையான அரசியல் குற்றங்கள் நிகழ்ந்த வண்ண மிருந்தன. வங்காளப் புரட்சிக்காரர்கள் அரசாங்கத்திற்குச் சிறிதும் ஓய்வு கொடுக் கவே யில்லை. போலீஸ் உத்தியோகஸ்தர்களைக் கொலை செய் தல், பொக்கிஷங்களைச் சூறையாடுதல், தீவர்த்திக் கொள்ளை அடித்தல் முதலியவை சர்வ சாதாரணமா யிருந்தன. சில சம யம் தலைநகரின் மத்தியில் போலீஸாரின் கண்ணெதிரிலேயே இவை நடந்தன. இதன் பயனாகச் சிற்சில சமயம் போலீஸா ருக்கும், புரட்சிக்காரருக்கும் கை கலந்த சண்டைகள் விளைந் தன. இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஏற்பட்ட

* இவர்களில் அறுவருக்கு மரண தண்டனையும், 45 பேருக்கு ஜன்ம தீவாந்தர சிட்சையும், சிலருக்குச் சிறைவாசமும் விதிக்கப்பட்டன. சிலர் விடுதலை பெற்றனர்.

விசேஷ நீதி மன்றங்களிலும், சாதாரண கோர்ட்டுகளிலும் கணக்கற்ற விசாரணைகள் நடந்தன. ஏராளமானவர்கள் தண்டிக்கப் பட்டார்கள். இன்னும் எவ்வளவோ பேர் மீது வழக்கு நடந்து வருகிறது.

சிங்கப்பூரில் ஒரு பெரிய கலகம் எழுந்தது. இதில் ஐரோப்பியர் பலர் உயிர் துறந்தனர். முடிவில் ஜப்பானிய, பிரஞ்சுத் துருப்புகளின் உதவிகொண்டு இக் கலகம் ஒடுக்கப்பட்டது. பர்மா, சிங்கப்பூர், ஹாங்காங், ஷாங்காய், இலங்கை முதலிய இடங்களில் ஆயுதங்கள், இராஜ துவேஷமான பிரசுரங்கள் முதலியன திருட்டுத்தனமாகக் கொண்டுபோனவர்களும், கொண்டுபோக முயன்றவர்களும், வேறு வழியில் பிரிட்டிஷாருக்கு விரோதமான பிரசாரம் செய்தவர்களும் கைது செய்யப் பட்டார்கள். இந்தியர் பலர் ஹாங்காங்கில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றனர். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் யோசனையின்படி இந்தியப் புரட்சிக்காரர் இருவர் ஜப்பானிலிருந்து நாடு கடத்தப் பட்டனர். டச்சு அரசாங்கத்தின் உத்திரவின்மேல் இந்தியர் பலர் ஜாவாவில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதாகக் கேள்வி யுறுகிறேன். ஹரிதயால் முதலிய பலர் ஐரோப்பாவிலும், சின்ன ஆசியா (Asia Minor) விலும் இடைவிடாது வேலைசெய்து வருகிறார்கள். அமெரிக்க ஐக்கிய இராஜ்யத்திலுள்ள ஹிந்து புரட்சிக்காரர்களும் சுருசுருப்பாகப் பிரசாரம் செய்துவருகிறார்கள். ஜெர்மானியர் இந்தியர்களுக்குப் பணமும், ஆயுதங்களும் கொடுத்து உதவுகிறார்க ளென்று சொல்லப்படுகிறது. உண்மையில் அவர்கள் எவ்வளவு தூரம் உதவி யிருக்கிறார்களென்பது தெரியவில்லை. ஆனால் 1914-ம் வருஷத்தில் ஸான்பிரான்ஸிஸ்கோ நகரிலிருந்து கிளம்பிய "காடர்" கூட்டத் தலைவர்களுக்கு, பிரிட்டிஷாருக்கும் ஜெர்மானியருக்கும் யுத்தம் ஏற்படக்கூடும் என்னும் விஷயம் தெரிந்திருக்க முடியாது. அவர்களுக்கு அது தெரியும் என்பதாக லாகூர் விசேஷ நீதி மன்றத்தார் முடிவு செய்திருப்பது ஆதாரமற்றதாகக் காணப்படுகிறது. இந்தியாவில் கலகம் உண்டாக்கும் நோக்கத்துடன்

1914-ம் ஆண்டில் அமெரிக்க ஐக்ய இராஜ்யத்திலிருந்து கிளம்பிய இந்தியர்கள் ஜெர்மானியரால் தூண்டப்பட வில்லையென்பதும், அவர்களுடைய பண உதவி பெறவில்லையென்பதும் நிச்சயம். அவர்கள் தாங்களாகவே, தங்கள் சொந்தப் பணத்தைச் செலவழித்து, சொந்த ஏற்பாட்டுடன் சென்றார்கள். அவர்களில் சிலர் சொத்துக்காரர்கள். அதற்குப் பின்னர் ஜெர்மானியர் இந்தியப் புரட்சிக்காரர்களுக்குப் பணமும், ஆயுதங்களும் கொடுத்து உதவியது உண்மையா யிருக்கலாம். புரட்சிக்காரர் விஷயம் இத்துடன் நிற்க.

## 4

இந்திய தேசிய வாதிகளில் மற்றப் பகுதியாரின் வேலைகளைப் பற்றிச் சிறிது கூறுகிறேன். யுத்தம் ஆரம்பமான போது அவர்கள் அனைவருமே இங்கிலாந்தின் கட்சியில் நிற்பதாக அறிவித்துக்கொண்டனர். சிலர் உண்மையாகவே இவ்வாறு கூறினர். மற்றவர்கள் சமயோசித காரணங்களை முன்னிட்டு இப்படிச் சொன்னார்கள். தங்களுடைய இலட்சியத்தை அடைவதற்கு இதனால் பயன் விளையுமென்னும் நம்பிக்கை எல்லாருக்கும் இருந்தது. இங்கிலாந்தில்—பார்லிமெண்டிலும்—வெளியிலும், இந்தியரின் இராஜ விசுவாசத்தைப் பாராட்டிக்கூறப்பட்ட மொழிகள், அவர்கள் எதிர்பார்த்ததில் தவறில்லையென்று தோன்றும்படி செய்தன. ஆனால் விரைவிலேயே முதல் அதிர்ச்சி ஏற்பட்டது. பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளில் படித்த இந்திய மாணாக்கர்கள் பிரிட்டிஷ் சைன்யத்திலோ, தொண்டர் படை (Volunteer corps) யிலோ சேர்வதாக முன்வந்தபோது, பிரிட்டிஷ் யுத்த காரியாலயத்தார் அவர்களுடைய ஊழியத்தை ஏற்க மறுத்துவிட்டனர். இந்தியாவில் படித்த இந்தியர்களின் கோரிக்கையும் இதே கதியை அடைந்தது. இந்தியச் சுதேச மன்னர்களும், ஜமீன்தார் வகுப்பைச் சேர்ந்த சிலரும் மட்டுமே யுத்த சேவைக்கு ஏற்றுக்கொள்ளப் பட்டனர். மற்றப்படி

சைன்யத்திலோ, தொண்டர் படையிலோ சேர்வதற்குரிய விதிகள் எந்த இந்தியர் விஷயத்திலும் தளர்த்தப் படவில்லை. என் கருத்தை நன்கு விளக்கும்பொருட்டு இரண்டு பிரபல இந்திய தினசரிப் பத்திரிகைகளிலிருந்து சில பகுதிகளை எடுத்துக் காட்டுகிறேன். கல்கத்தா "வங்காளி"ப் பத்திரிகை எழுதியதாவது:—

"ஐரோப்பாவில் திடீரென்று யுத்தம் துவங்கியபோது, ஏகாதிபத்தியத்திற்கு எவ்வகையிலேனும் ஊழியம் செய்ய வேண்டு மென்னும் பேருணர்ச்சி இந்தியா வெங்கும் பொங்கி எழுந்தது. நாட்டில் உற்சாக இயல்புள்ளவர்களுக் கிடையே, சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்காகப் போர் புரிய வேண்டு மென்னும் அவா தீவிரமாகப் பரவி யிருந்தது. மற்ற விடங்களில் எப்படியாயினும், வங்காளத்தைப் பொறுத்த வரையில் ஏராளமான இளைஞர்கள் தொண்டர்களாகப் பதிவு செய்து கொள்ள ஆவலுடன் முன்வந்தார்கள். இப்போராட்டம் இங்கிலாந்தையே முதன்மையாகப் பொறுத்த தாயினும், அதை அவ்வாறு கருதி ஒதுங்கி நிற்கும் மனப் பான்மை அவர்கள் கொள்ளவில்லை. இப் போரில் கலந்துகொள்வதால் நமது சொந்த சுதந்திரப் போரையே நடத்தியவர்களாவோ மென்று அவர்கள் எண்ணினார்கள். இந் நாட்டு மக்களின் இராஜ பக்திக்கு இதை விடச் சிறந்த அத்தாட்சியை அரசாங்கத்தார் எதிர்பார்க்க முடியாது. ஆனால் அதிகாரிகளின் சந்தேகம் இவ்வுற்சாகத்தை முளையிலேயே கொன்றுவிட்டது. இளைஞர்களின் ஊழியத்தை ஏற்க மறுத்த அதிகாரிகள் தற்சமயம் அரசாங்கத்துக்கு எவ்விதமான சங்கடமும் கொடுக்கக்கூடாதென்று சொன்னார்கள். ஆயினும் நமது இளைஞர்கள் இப்போராட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஏதேனும் ஒரு வழி கண்டுபிடிக்கப்படுமென நம்பி யிருந்தோம். போர்க்களத்தில் ஏற்படும் தோழமையினால் வாழ்க்கையிலும் தோழமை உண்டாகு மென்றும், அதன் மூலம் சாம்ராஜ்யத்தில் நமது பதவி உயர்வுறு மென்றும் ஆசை கொண்டோம். ஆனால் பிறருடைய உணர்ச்சிகளையும், நலங்களையும் புறக்கணிப்பதையே இயல்பாகவுடைய அதிகார

வர்க்கம் நமது ஆசையை யெல்லாம் நிராசையாகச் செய்த துடன், புதிய அடக்குமுறை விலங்குகளை அமைப்பதில் புத்தி யைச் செலுத்தியது. இவ் வாருக, இந்தியப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இங்கிலாந்தில் இயற்றப் பட்டுள்ள இது போன்ற சட்டத்தை விட மிகக் கடுமையானதாகும். அதுமுதல், ஜனங்களைப் பாதுகாப்பில் வைத்தல் தினசரி நடைமுறையாகிவிட்டது. இவையெல்லாம் இராஜ பக்தியை வளர்த்து, இராஜ துவேஷத்தை ஒடுக்கும் முயற்சியில் அதிகாரவர்க்கம் கொண்டுள்ள மனப்பான்மையை நன்கு விளக்கும், வருந்தற்குரிய திருஷ்டாந்தங்களாகும். ஜனங் கள் கேட்பதுதான் என்ன? உண்மையான இராஜ பக்தியினு லும், தயாள உணர்ச்சியினுலும் அவர்கள் தூண்டப் பெற்று அரசாங்கத்துக்கு உதவி செய்யச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டு மென்றே கேட்கிருர்கள். இந்தக் கோரிக்கையும் மறுக்கப் படுகிறது. இதனுல் மக்களின் உள்ளம் புண்பட்டிருக்கும் போது, அப் புண்ணில் கோலிடுவதுபோல் அடக்குமுறை ஆயு தங்கள் பிரயோகிக்கப் படுகின்றன. ஆனுல் நெருக்கடி இன் னும் தீர்ந்துவிடவில்லை. நாட்டில் பொங்கி எழுந்த உற்சாகமும் இன்னும் அடியோடு அமுங்கிவிட வில்லை. யுத்த அரங்கத்தில், மேலும் மேலும் மனிதர்கள் தேவையாகி வருகிருர்கள். பகை வர்களை நசுக்கிப் பெரும் வெற்றி யடையவேண்டுமானுல் போர் வீரர்களும், தளவாடங்களும் எவ்வளவு இருந்தாலும் வேண் டும் எனத் தோன்றுகிறது. இங்கிலாந்தில் யுத்த தளவாடங் கள் செய்யக் கூடிய ஒவ்வொரு தொழிற் சாலையும் அவ் வேலைக்கே உபயோகிக்கப் படுகின்றது. பீரங்கி மருந்தும், குண்டுகளும் அத் தொழிற்சாலைகளில் அதிவேகமாக உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. போர் வீரர்களைப் பொறுத்த வரை, இங்கிலாந்திலேயே தொண்டராக முன்வருவோரை யல்லாமல் கானடாவிலிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும், நியூ ஸிலாந்திலிருந்தும் தொண்டர்கள் வருகிருர்கள். உண்மையில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியாவைத் தவிர்த்த மற்ற எல் லாப் பகுதிகளிலிருந்தும் தொண்டர்கள் வந்து குவிந்தவண்ண

மிருக்கிறார்கள். அங்ஙனமாக இந்தியா விஷயத்தில் மட்டும் பேத புத்தி ஏன் காட்டப்படுகிற தென்று யாரேனும் சொல்ல முடியுமா? நம்மிடமிருந்து மற்ற எல்லாவகை உதவிகளையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் யுத்த களத்தில் சேவை செய்ய முன்வருகிறோ மென்றால் அதை மட்டும் ஏன் ஏற்றுக்கொள்கிறார்களில்லை? அதுவன்றோ எல்லா உதவிகளிலும் தலை சிறந்த உதவி? லார்டு கிச்சனர் இன்னமும் சைன்யத்துக்கு ஆள்கள் தேவையென்று வேண்டிக்கொண்டு வருகிறார். ஷிரூஸ்பரி என்னுமிடத்தில் மிஸ்டர் போனர் லா சமீபத்தில் பேசியதிலிருந்து கட்டாய இராணுவ சேவையும் அமுலுக்கு வரலாமென்று தோன்றுகிறது. அப்படியானால், நமது மனிதர்களை மட்டும் ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்? போர்க் களத்திற்குச் சென்றிருக்கும் நமது துருப்புகளின் வீர தீரச் செயல்களைப் பற்றிப் பெரிய அதிகாரிகள் கூறும் புகழ்ச்சியுரைகளுக்கு அளவில்லை. மற்றும், நமது சைன்ய சேவைப் படை (Ambulance corps) ஆற்றிவரும் ஊழியங்கள் என்ன காட்டுகின்றன? தகுந்த பயிற்சி மட்டும் அளித்தால் நன்கு பிரகாசிக்கக் கூடிய ஆற்றல்கள் நம் இளைஞர்களிடம் மறைந்து கிடக்கின்றன என்பதைக் காட்டவில்லையா? இது போலவே அவர்களுக்கு வேறு என்ன பணியிட்டாலும் தங்கள் தகுதியை நன்கு மெய்ப்பிப்பார்கள் என்பதில் நமக்கு எள்ளளவும் ஐயமில்லை. இந்த யுத்தத்தை இராணுவ பலம், யதேச்சாதிகாரம் ஆகியவற்றிற்கும் ஜனநாயக தத்துவத்திற்கும் நடக்கும் போராட்ட மென்றும், சர்வ தேச ஒழுக்க நெறியையும், சிறு நாடுகளின் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காக நடக்கும் தர்ம யுத்தம் என்றும் சொல்கிறார்கள். மனப் பூர்வமான நமது வேண்டுகோளை மறுத்தல் இக் கூற்றுக்களுடன் எவ்வாறு பொருந்தும்? அங்ஙனம் மறுத்தல் ஏகாதிபத்தியத்தின் மற்றப் பகுதிகளுடன் நமக்குரிய சம அந்தஸ்தை மறுப்பதே யாகுமன்றோ? யுத்தம் இன்னும் நடந்துகொண்டிருக்கையில், நிலைமை நெருக்கடியாயிருக்கும் போதே, இத்தகைய வெளிப்படையான ஏற்றத்தாழ்வும், சாதி இறுமாப்பும் காட்டப்படு

மானல், யுத்தம் முடிந்த பின்னர் சமரச ஏற்பாடுகள் நடை பெறும்போது அவை அடியோடு மறந்துவிடப்படும் என்று நாம் எவ்வாறு எதிர்பார்ப்பது? அடக்கு முறையினுல் வேற்றுமை உணர்ச்சியே வலுக்குமென்று ஒரு முறை, இரு முறையல்ல, நூறு முறையும் நாம் வற்புறுத்திச் சொல்வோம். அடக்குமுறை அரசாங்கத்தினிடம் அநுதாபங் குன்றச் செய்கின்றது; ஒற்றுமையை அழிக்கின்றது; கட்சிகளை உண்டாக்குகின்றது. ஒத்துழைப்போ புண்களை ஆற்றிப் பிளவுகளைப் போக்கி ஒற்றுமையை வளர்க்கின்றது. ஆனல் சமத்வ மில்லாத விடத்தில் ஒத்துழைப்பு ஏற்பட முடியாது. ஒத்துழைப்பு இல்லாவிட்டால் நிரந்தரமான சமாதானமும் கிடையாது. யுத்த சேவைக்கு நம்மை அரசாங்கத்தார் ஏற்றுக்கொண்டால் அது பின்னல் சீர்திருத்தங்களும் வேறு நன்மைகளும் அளிக்கப்போவதற்கு அறிகுறியாயுமிருக்கும். அப்படிச் செய்த உடனே இத் தேசத்திலும் யுத்தரங்கத்திலும் நிலைமையில் அபிவிருத்தி ஏற்படுவதைக் கண்கூடாகக் காணலாம். ஆனல் இது காறும் அதிகாரவர்க்கம் தற்போதைய நிலைமையின் முக்கியத்தை உணர்ந்துகொள்ளவில்லை. இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள அது தவறிவிட்டது. வருங்கால சரித்திராசிரியர்கள், இந்திய சரித்திரத்தின் இந்த அத்தியாயத்தில், அதிகாரவர்க்கத்தினர் தருணந் தவறவிட்டு மோசம் போயினர் என்று எழுதாவண்ணம் அவ் வர்க்கத்தார் பார்த்துக் கொள்வரா?... இந்தியா, ஏகாதிபத்தியத்தின் மற்றப் பகுதிகளுடனே சம அந்தஸ்து கேட்கிறது. அந்த இலட்சியத்தை அடைவதற்கு ஒரு சாதனமாக இந்தியாவின் புதல்வர்கள் தொண்டர்களாகச் சேர்ந்து யுத்தகளத்தில் போர் புரிய விரும்புகிருர்கள். ஆங்கிலேயர்களைப் பற்றி பர்க் என்பார் கூறியது உண்மையானல், இந்தியா கோரும் இவ்விரு உரிமைகளில் எதையும் மறுத்தல் நீதியாகாது.''

அலகாபாத்தில் வெளியாகும் "லீடர்" (Leader) பத்திரிகை 1915-ம் ஆண்டு செப்டம்பர்மீ 8உ இதழில் எழுதியதாவது:—

"ஜான்புல்*(John Bull)லின் குண நலங்களைப் பற்றி அநுதாபத்துடன் ஆராய்ச்சி செய்தோர் அவன் உணர்ச்சி யென்பதில்லாத தடித்த இயல்புடையவன் என்று அடிக்கடி கூறியுள்ளனர். சில அபூர்வ சந்தர்ப்பங்களிலேயே அவன் உணர்ச்சி மேலிட்டுக் காரியம் செய்கிறன். சென்ற ஆண்டில் யுத்தம் ஆரம்பமானபோது இத்தகைய சந்தர்ப்பம் ஒன்று நேர்ந்தது. ...அந் நெருக்கடியான தருணத்தில் இந்தியா தன்னுலியன்ற உதவி அனைத்தும் மனப்பூர்வமாகச் செய்யச் சித்தமாயிருப்பதாய் லார்டு ஹார்டிஞ்சு இங்கிலாந்துக்குச் செய்தி அனுப்பினர். காமன்ஸ் சபையில் படிக்கப்பட்ட அச் செய்தி ஆங்கில மக்களின் உள்ளத்தை என்றுமில்லா வண்ணம் உருக்கிவிட்டது. தங்கள் வழக்கத்திற்கு முற்றும் மாருக ஆங்கிலேயர் பொங்கிஎழுந்த உணர்ச்சியினுல் மெய் மறந்தவர்களானுர்கள். அவ் வுணர்ச்சி இங்கிலாந்து முழுவதிலும் புயற் காற்றை யொத்து அதிவேகமாகப் பரவிற்று. "டைம்ஸ்" பத்திரிகைகூட இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமுள்ள சம்பந்தத்தில் ஒரு பெரும் மாறுதலுக்கு அது அறிகுறியாகுமென்று குறிப்பிட்டது. இந்தியர்களின் இராஜ விசுவாசத்தை அனைவரும் போற்றிப் புகழ்ந்தார்கள். "ஏஷியாடிகஸ்" என்னும் நிருபரும் தமது பழைய நிந்தை மொழிகளை மறந்து மற்றவர்களுடன் சேர்ந்து இப் பல்லவியைப் பாடினுர். ஸ்ரீ திலகரைக்கூட அவர் பாராட்டினுர். இந்திய விஷயங்களை நோக்கும் முறையில் மாறுதல் உண்டாகிவிட்டதாக மிஸ்டர் ராபர்ட்ஸ் கூறினுர். மற்றும் பல இராஜதந்திரிகளும், பிறரும் இதே விதமாகப் பேசித் தங்கள் மகிழ்ச்சிப் பெருக்கைத் தெரிவித்தார்கள். இவையெல்லாம் இந்தியர் உள்ளத்தில் ஆசைகளை எழுப்புவது இயல்பே யன்ருே? மற்றவர்களை விடக் கற்பனு சக்தி வாய்ந்த சிலர் இந்தியா மகிமையுடன் விளங்கும் காலம் சமீபித்துவிட்டதென்று கருதலானுர்கள். சுயராஜ்ய சூரியனின் உதய கிரணங்களின் ஒளியை வானமுகட்டில் காண்பதாகவும் அவர்கள் கற்பனை செய்துகொண்டார்கள். அவ்வளவு கற்பனு சக்தி யில்லாத மற்றவர்கள்,

* ஆங்கில சாதிக்குப் பொதுப்பெயர்.

சுயாட்சி என்பது இப்போதைக்குக் கிட்டாத கனவாகவே யிருப்பினும், ஏதோ ஒரு வகையில் நாட்டுக்கு நற்காலம் பிறக்கு மென்று எண்ணினார்கள். இந்தியத் துருப்புகள் ஐரோப்பாவில் இறங்கியபோது ஆங்கிலேயர் தங்கள் உணர்ச்சிப் பெருக்கை வெளியிடுவதற்கு மற்றொரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்தியப் போர் வீரர்களின் பராக்கிரமச் செயல்களும், கடமைப் பற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியான பல கட்டுரைகளுக்கும், தலையங்கங்களுக்கும் விஷயங்களா யமைந்தன. ஆயினும் என்ன? சென்ற ஆறு, ஏழு மாதத்து நிகழ்ச்சிகளின் போக்கை யும், அக் காலத்தில் ஆங்கிலப் பத்திரிகைகள் எழுதியவற்றை யும், இந்தியாவிலுள்ள பிரபல ஆங்கிலேயர்களின் வாய் மொழி களையும் நன்கு கவனித்து வந்தவர்களுக்கு, ஆங்கிலேயரின் உள்ள நிறைவில் மீண்டும் கள்ளம் புகுந்துவிட்டதென்பது தெளிவாய் விளங்காமற்போகாது. மிஸ்டர் போனர் லா குடி யேற்ற நாடுகளுடன் கலந்தாலோசிப்பதைப் பற்றிப் பேசுகிறார்; ஆனால் இந்தியா ஒன்று இருக்கிறதென்பதையே மறந்துவிடு கிறார். மிஸ்டர் ஆஸ்டின் சேம்பர்லின் தாம் உத்தியோகமேற்ற நாள் முதல் வாய்மூடி மௌனியாய் விளங்குகிறார். டௌனிங் தெரு* வுக்கும் டில்லி அல்லது சிம்லாவுக்கும் அந்தரங்கமாக நடக்கும் கடிதப் போக்குவரவு எத்தகையதோ நாம் அறி யோம். ஆனால் நமக்கு நம்பிக்கை யூட்டக் கூடிய வார்த்தை ஒன்றேனும் அவர் வாயினின்றும் வெளிவர வில்லை. அநுதாபமுள்ள நமது இராஜப் பிரதிநிதிக்குப் பிரபுக் கள் சபையார் (The House of Lords) ஏற்கனவே பதில ளித்துவிட்டனர். விவாதத்துக் கிடமான விஷயங்கள் இப் போது வேண்டாமென்ற சாக்குச் சொல்லி, ஐக்ய மாகாணத் துக்கு ஒரு நிர்வாக சபை ஏற்படுத்தும் யோசனையை அவர்கள் ஒதுக்கி வைத்துவிட வில்லையா? யோசனை நிராகரிக்கப்பட்டது என்று வெளிப்படையாகச் சொல்வதற்குப் பதிலாக இப்படி மரியாதையாகச் சொல்லப்படுகிறதே யன்றி வேறென்ன? கர் ஸான், மக்டானல், ஸைடன்ஹாம் பிரப்புக்கள் காலப் போக்

*லண்டனில் மந்திரிகளின் காரியாலயங்கள் உள்ள இடம்.

கைக் கவனித்து அறிவு பெறக்கூடியவர்களல்லர். இங்கிலாந்திலுள்ள இந்திய மாணுக்கர்கள் உத்தியோகஸ்தர் பயிற்சிப் படையில் சேர விண்ணப்பம் செய்துகொண்டால் "பொறுங்கள்; பின்னல் பார்ப்போம்" என்று மறுமொழி சொல்லப் படுகிறது. ஸர் ஜார்ஜ் ஸ்காட் ராபர்ட்ஸன் இந்தியக் காவல் படை ஒன்றை அமைக்கவேண்டுமென்று 'அதிகப் பிரசங்கித் தனமான' யோசனை கூறினல், அவசரப்படாதீர்கள் என்று சொல்லி அவரை மட்டந் தட்டுகிருர்கள். "ஏஷியாடிகஸ்" இடையில் வந்த தமது தாராளக் கொள்கைகளை மறந்து பழைய 'பெத்தான்' ஆகிவிட்டார். ஸர் வாலண்டைன் சிராலும் அவ்விதமே. இந்திய வரவு செலவுத் திட்ட விவாதத்தைத் தள்ளிவைத்தல் சௌகரியமெனக் கருதப்படுகிறது; சட்டமும் உடனே அதற்கிடங் கொடுக்கிறது. இங்கே, இந்தியாவில், நிபந்தனை கூருமல் இராஜ விசுவாசங் காட்ட வேண்டுமென நமக்குப் போதனை செய்கிருர்கள். யுத்தம் முடிந்து புனர் நிர்மாணம் செய்தற்குரிய காலம் வரும்போது இந்தியாவின் நிலைமை என்னவாகுமென்பது குறித்துத் தற்சமயம் பேசுவதே மடமை யென்றும், அது குற்றமென்றும் கூட நமக்குச் சொல்கிருர்கள். இதனிடையில் இந்தியர் வருங்காலத்தைப் பற்றிப் பலவாறு மனோராஜ்யம் செய்துவருகின்றனர். ஆகாயக் கோட்டைகள் கட்டிக் கட்டி இடிக்கப்படுகின்றன. நம்பிக்கையும் கவலையும் மாறி மாறித் தோன்றிக் கொண்டிருக்கின்றன...

"நம்மிடையிலும் 'காத்திருந்து பாருங்கள்' என்னும் ஒரே யோசனை கூறும் மனிதர்கள் இல்லாமற் போகவில்லை. பொறுமை மிகவும் சிறந்த குணந்தான். ஆனல் பொறுமை ஒன்றை மட்டும் பொறுத்த வரையில், உலகிலுள்ள எந்த தேசத்தையும் இந்தியா போட்டிக்கழைத்து எளிதில் வெற்றி பெறக்கூடு மென்பதில் சந்தேகமேயில்லை. உண்மை யென்னவென்ருல், இந்தியா தனக்குத் தானே உதவி செய்துகொள்ளாத வரையில் மற்றவர்கள் தனக்கு உதவவில்லை யென்று குறை சொல்வதற்குச் சற்றும் இடமேற்படாது. அரை குறை

யான ஏற்பாடுகளும், கிருபணத் தனமான சீர்திருத்தங்களும் திருப்தி தருங் காலம் மலையேறிவிட்ட தென்றும், தைரியத் துடன் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டதென்றும் நாம் இங்கிலாந்துக்குத் திட்டமாகத் தெரிவித்துவிடுதல் அவசியமாகும்.''

## 5

சட்ட வரம்புக்குட்பட்ட கட்சியாரின் ஸ்தாபனமாகிய காங்கிரஸ் மகா சபையின் வருஷாந்தரக் கூட்டம் 1914-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் சென்னையில் நடைபெற்றது. அம் மகா சபையின் அக்கிராசனர் (ஸ்ரீ பூபேந்திர நாத் வஸு) தமது தலைமை யுரையினிடையே கூறியதாவது:—

'' இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் கருத்தென்ன? அதிகார வர்க்கத்தைத் தெய்வீக மகத்துவம் பொருந்திய தாக்கல், சாசு வதமாக அதிகாரம் செலுத்தல், நிரந்தர 'கார்டியன்' பதவி வகித்தல், பாரதத்தின் ஆன்மாவைத் தாங்க முடியாத பாரம் வைத்தழுத்தல் — இவையே அவ்வாட்சியின் கருத்தானல், அது நாகரிகத்துக்கே ஒரு சாபக் கேடாகும்; மக்கட் குலத் துக்கே ஒரு பேரிடியாகும்.''

மீண்டும் ஓரிடத்தில் அவர் பின் வருமாறு வினவுகிருர்:—

'' ஆயுதந் தாங்கும் உரிமை; சைன்யத்தில் உத்தியோகங் கள் வகித்து ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்பிற்காக நமது போர் வீரர்களை நடத்தும் பாத்தியதை; நமது வீடுகளையும், மனைவிமக் களையும் காக்கும் பொருட்டுத் தொண்டர் படைகளை அமைக்கும் சுதந்திரம் — இவை எத்தனை நாளைக்குத்தான் இந் திய ஜனங்களுக்கு மறுக்கப்பட்டு வரும்? எவ்வளவு காலந் தான் பாரதத் தாய் ஆங்கில ராணியின் புடவைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு தட்டுத் தடுமாறி நடப்பாள்? இந்தியா தன் கால்கள் மீது தான் நிமிர்ந்து நிற்கவேண்டிய காலம் வந்து விட்டது. ரோம ஏகாதிபத்தியத்தின் காலத்தில் ரோமர்கள்

இங்கிலாந்தைக் கைவிட நேர்ந்ததுபோல், ஏதோ பேரபாயம் ஏற்பட்டு இங்கிலாந்து இந்தியாவைக் கைவிட நேர்ந்ததென்று வைத்துக்கொள்வோம். அப்போது இந்திய மக்களை நிராயுத பாணிகளாகவும், ஆயுதப் பயிற்சி அற்றவர்களாகவும், உள்நாட்டு அராஜகத்துக்கும் வெளிநாட்டுப் படை யெடுப்புக்கும் எளிய இரையாகவும் விட்டுச் செல்வதினும் இங்கிலாந்துக்கும் சரி, இந்தியாவுக்கும் சரி, அவமானம் வேறுண்டா? இந்தியர்களைத் திக்கற்றவர்களாகவும், வலி யிழந்தவர்களாகவும் இங்கிலாந்து விட்டுச் சென்றது என்றால், இந்தியாவில் நிகழ்ந்திருக்கும் நூற்றைம்பது வருஷ பிரிட்டிஷ் ஆட்சிக்கு அது எவ்வளவு பெருமையாயிருக்கும்.''

காங்கிரஸ் மகா சபை மீண்டும் 1915-ம் வருஷம் கிறிஸ்மஸ் வாரத்தில் ஸர். எஸ். பி. ஸின்ஹா (பின்னர், லார்ட் ஸின்ஹா)வின் அக்கிராசனத்தின் கீழ்க் கூடிற்று. இவர் 1908-ம் ஆண்டில், இந்தியாவின் பிரிட்டிஷ் மந்திராலோசனை சபையான கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையில் முதன் முதலாக நியமனம்பெற்ற இந்தியர். ஓர் இந்திய மாத சஞ்சிகை கூறியது போன்று, பிரிட்டிஷ் தொடர்பினால் 'செல்வமும், உயர் பதவியும், கௌரவமும்' அடைந்தவரும், அரசாங்கத்தின் 'அந்தரங்க மந்திராலோசனைகளில்' கலந்திருந்தவருமான இத்தகைய மனிதர் தமது உபந்நியாசத்தில் வெளியிட்ட இலட்சியங்களும், கோரிக்கைகளும் பெரிதும் விசேஷ முடையன வன்றோ? இந்தியாவின் அரசாங்க முறையைப் பற்றி அவர் வெளியிட்ட இலட்சியம் அமெரிக்கப் பெரியாராகிய ஆப்ரஹாம் லிங்கனுடைய இலட்சியமே யாகும். 'ஜனங்களுக்காக, ஜனங்களால் நடத்தப்படும், ஜனங்களின் அரசாங்கம்' என்பதே அந்த இலட்சியம். அவர் தமது பிரசங்கத்தில் கூறியதாவது:—

"இந்தியாவின் வருங்காலத்தைப் பற்றி அரசாங்கம் கையாளப் போகும் கொள்கையைக் குறித்து ஒளிவு மறைவில்லாத விவரமான அறிக்கை யொன்று வெளியிட வேண்டுமென நான் வற்புறுத்திக் கூறுகிறேன். அப்போதுதான் சோர்வு

குடிகொண்டுள்ள இடத்தில் நம்பிக்கையும், சந்தேகம் என்னும் கருநிழல் பரவியுள்ள இடத்தில் உறுதியின் ஒளியும் திகழும். மற்றும், அரசாங்கத்தின் எல்லா இலாகாக்கள் மீதும் படிப்படியாக ஜனங்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலமாகவும், நமது சொந்த நாட்டிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குட்பட்ட பிரதேசங்களிலும் நம்மவர்களுக்கிருக்கும் நிர்ப்பந்தங்களையும், குறைபாடுகளையும் நீக்குவதன் மூலமாகவும் சுயாட்சி அளிப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கவேண்டும்.''

சில குறிப்பிட்ட சீர்திருத்தங்களும், முன்னேற்றத்திற்குரிய திட்டங்களும் வேண்டுமென்று அவர் கேட்டார். அவற்றுள் முக்கியமானவை வருமாறு :—

"முதன்மையாக, ஜனங்களுக்கு இராணுவப் பயிற்சியும், சைன்யத்தில் உத்தியோகங்களும் அளிக்கப்படவேண்டும்.

"இரண்டாவது, ஸ்தல சுயாட்சி அபிவிருத்தி.

"மூன்ருவது, நமது வியாபாரம், கைத்தொழில், விவசாயம் இவற்றை வளர்த்தல்.''

முதலாவது கோரிக்கையைப் பற்றி அவர் பின்னர் விவரமாகக் கூறுகிருர் :—

"(1) சாதி, குலம், மாகாணம் என்னும் வேற்றுமையின்றி, உடல் தகுதியைப் பற்றிய நிபந்தனைகளுக்கு மட்டும் உட்பட்டுச் சைன்யத்தில் சேர உரிமை கேட்கிருேம்.

"(2) இந்திய சைன்யத்தின் உத்தியோகங்கள் மன்னர் பெருமானின் குடிகளில் எல்லா வகுப்பாருக்கும், உடல் தகுதி, கல்வி யோக்யதை இவை சம்பந்தமான நியாயமான நிபந்தனைகளுக்கு மட்டும் உட்பட்டுத் தாராளமாய் அளிக்கப்படவேண்டும். இந்தியாவில் இராணுவக் கலா சாலைகள் ஸ்தாபிக்கப்படவேண்டும். இவற்றில், நமது நாட்டார் சைன்யத்தில் உத்தியோகம் பெறுவதற்கு அவசியமான இராணுவப் பயிற்சி பெறும்படி செய்யவேண்டும்.

"(3) உரிய கட்டுப்பாட்டை வலியுறுத்துவதற்கு வேண்டிய விதிகளுக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் உட்பட்டுச் சைன்யத்தில் தொண்டர்களாகச் சேர அரசரின் குடிகளில் எல்லா வகுப்பாருக்கும் உரிமை வேண்டும்.

"(4) ஆயுதச் சட்டத்தின் கீழ் தற்போதுள்ள பாரபட்சமான வேற்றுமை நிபந்தனைகள் நீக்கப்படவேண்டும். முதல் மூன்று கோரிக்கைகளுக்கும் இதற்கும் உண்மையில் சம்பந்தமில்லையாயினும், இவை யெல்லாவற்றிற்கும் அரசியல் சௌகரியமே காரணமாகச் சொல்லப்படுவதால் இங்கே சேர்த்துக் கூறியுள்ளேன்."

நாம் சுயராஜயம் பெறவேண்டியது ஏன் என்பதைக் குறித்து அவர் கூறும் காரணங்கள் வருமாறு:—

"இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் முதன் மந்திரி ஒருவர் 'எத்தகைய நல்லரசாட்சியும் சுயாட்சிக்கு ஈடாகாது' என்று கூறியது முற்றிலும் உண்மையாகும். பெயர் பெற்ற பிரிட்டிஷ் பத்திரிகை யொன்றில் சமீபத்தில் ஒருவர் எழுதியதாவது:— 'ஆங்கிலேயன் ஒருவன், எந்தக் காரணத்தினாலும்—வானுலகிலிருந்து வந்த தேவன் ஒருவனால் ஆளப்படுவதா யிருந்தாலும்—தன் உரிமைகளுள் எல்லாம் புனித உரிமையான தனக்குத் தானே சட்டம் செய்யும் உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டான்...அவ் வுரிமையை விட்டுக்கொடுத்து விட்டால் அவன் ஆங்கிலேயனாகமாட்டான்; அப்போது தன்னுடைய நாட்டு வயல்களையும், மரங்களையும்கூட அவனால் ஏறெடுத்துப் பார்க்க முடியாது. சட்டங்கள் எப்போதுமே அதிக நலம் செய்துவிட வில்லை. எல்லாக் காலத்திலும் காருண்ய யதேச்சாதிகாரிகளும், நீதி சாஸ்திரங்கள் செய்த அறிவாளிகளும் இருக்கின்றனர். அவர்கள் தங்கள் குடிகளின் செல்வத்தைப் பெருக்கி அவர்களுக்கு வாழ்க்கையில் திருப்தியும் மகிழ்ச்சியும் உண்டாகுமாறு செய்திருக்கிறார்கள். ஆயினும் அவர்களுடைய அரசாட்சியானது குடிமக்களிடம் மறைந்து கிடக்கும் அறிவாற்றலையும் அறச் செல்வத்தையும்

வெளியே கொண்டுவரக் கூடவில்லை; ஜன சமூகத்தின் ஒழுக்க பலத்தை வளர்க்கவில்லை; அறிவை விசாலப் படுத்தவில்லை. குடிகள் தங்கள் முன்னேற்றத்துக்கும் விடுதலைக்கும் தாங்களே செய்துகொள்ளும் எத்தகைய புன் முயற்சியுங்கூட, அரிஸ்டாடில் என்னும் ஞானியின் மகத்தான சட்டங்கள் எல்லாவற்றையும்விட மனித வர்க்கத்தின் வருங்கால மகோந்நதத்துக்கு அதிகம் துணைசெய்வதாகும். எனவே, சுயாட்சி இலட்சியமானது வெறும் உணர்ச்சியை மட்டும் பொருத்த தன்று. சரித்திரம் கற்பிக்கும் பாடங்களும் அந்த இலட்சியத்தின் மேன்மையை வலியுறுத்துகின்றன.' "

ஸர் எஸ். பி. ஸின்ஹாவின் உபந்நியாசத்தில் பெரிதும் குறிப்பிடத்தக்க அம்சம் வேறொன்றிருக்கிறது. விஷயமறியாதவர்களும், விரோத பாவங் கொண்டவர்களுமான ஆங்கிலேயரும் மற்றவர்களும், இங்கிலாந்து இந்தியாவைவிட்டுப் போனால் இந்தியாவின் கதி என்ன என்று சாதாரணமாய்க் கேட்கிறார்கள். இந்தியர்கள் தங்கள் காரியங்களைக் கவனித்துக் கொள்ளவும், தங்கள் சண்டைகளைத் தாங்களே நடத்தவும் தகுதியுள்ளவர்களா என்று வினவுகிறார்கள். இவ் வினாக்களைக் குறித்து அவர் கூறியதாவது:—

"இந்திய ஜனங்களில் எந்த வகுப்பாரும் தைரியம் முதலிய ஆண்மைக் குணங்களில் குறைந்தவர்கள் என்றாவது, அதனால் ஆயுதந் தரிக்கத் திறமை யில்லாதவர்க ளென்றாவது கூறுவது தவறாகும். அதிலும் தற்காலம் அவ்வாறு கூறுதல் சற்றும் பொருந்தாது. அப்படியே ஒருகால் இருந்த போதிலும் இங்கிலாந்தின் கடமையென்ன? இந்தியர்கள் அத்தகைய திறமை பெறும்படி பயிற்சி செய்விப்பதல்லவா? அதிலும் இத்தகைய நிலைமையை ஆங்கில ஆட்சியே உண்டு பண்ணிற் றென்று நம்புவதற்குச் சிறிது காரண மிருக்குங்கால் மேற்படி கடமை இன்னும் வலியுறுத்தப் படவில்லையா? இங்கிலாந்து 150 ஆண்டுகளுக்கு மேல் இந் நாட்டை ஆண்டுவிட்டது. எனவே, இங்கிலாந்து விலகிவிட்டால் இந்தியாவில் அராஜகமும், குழப்பமும்

குடி கொள்ளுமென்றும், வெளிநாட்டிலிருந்து வருவோருக்கு எளிதில் அது இரையாகுமென்றும் சொல்லக்கூடியதாயிருப்பது இங்கிலாந்துக்குப் பெறுமை யளிப்பதாகா தன்றோ? ஆங்கிலேயர் இன்றையதினம் இந்தியாவை விட்டுச் சென்றால் அவர்கள் ஏடன் துறைமுகம் சேர்வதற்குள் திரும்ப வந்து சேரும்படி தந்தியடிக்க வேண்டியதா யிருக்குமென்று சிலர் சொல்கிறார்கள். ஆங்கிலேயர் போய்விட்டால் நாட்டின் சில பகுதிகளில் ஒரு ரூபாயோ, ஒரு கன்னிகையோ கூடப் பத்திரமாயிருக்க முடியாது என்று சொல்லிக் களிப்போர் சிலரும் இல்லாமற் போகவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவைக் குறித்து இதை விடக் கடுமையான கண்டனம் வேறில்லை யென்று நான் கருதுகிறேன். நீதியும், தர்மமும் மிருக பலத்தினால் வெற்றி கொள்ளப்படும் காட்சியைக் கண்டு களிப்போர் சிலர் இருக்கலாம். ஆனால் பிரிட்டிஷார் எப்போதும்போல் இன்றைக்கும் நீதிக்காகவும், சுதந்திரத்துக்காகவும் போராடி வருபவர்கள். அவர்கள் மேற் கூறியவாறு மகிழ்பவர்க ளல்லர் என்றே நான் கருதுகிறேன். ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரோமன் படைகள் தங்களுடைய சொந்த நாட்டை ஹூணர் முதலிய அநாகரிக சாதியாரிடமிருந்து காப்பாற்றுவதற்காக இங்கிலாந்தை விட்டுச் சென்ற போது பிரிட்டானியர் எத்தகைய அநாதரவான பலவீன நிலையில் இருந்தார்களோ, அதே நிலைக்கு இந்தியாவை பிரிட்டிஷ் ஆட்சி கொண்டுவந்திருக்குமானால், அதை பிரிட்டிஷ் சாதி தனக்கு அவமானமாகக் கருதுமே யல்லாது வேறில்லை.''

மேற் கண்ட அபிப்பிராயத்தை, இந் நூலாசிரியர் சமீபத்தில் இந்தியாவின் அரசியல் நிலைமையைப் பற்றி எழுதி வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தின் பின்வரும் பகுதியுடன் வாசகர்கள் ஒப்பிட்டுப் பார்ப்பார்களாக:—

''ஆயுதங்கள் வைத்துக்கொள்ளவும், உபயோகிக்கவும் இவ் வுலக முழுவதிலும் மக்கள் சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள்.

நாகரிக மடைந்த தேசம் ஒவ்வொன்றும் தன் குடிமக்களுக்கும், இளைஞர்களுக்கும் இராணுவப் பயிற்சி யளிப்பதில் சிரத்தை கொண்டிருக்கிறது. அவர்களுக்கு ஆயுதங்கள் உபயோகிக்கும் முறையும், மற்ற இராணுவ தந்திரங்களும் கற்பித்து வருகிறது. சில தேசங்களில் கட்டாய முறையில் இப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மற்ற நாடுகளில் குடிகள் இப் பயிற்சி பெறுவதற்கு வலிய முன்வரும்படி தூண்டப் பெறுகின்றனர். புத்தியுள்ள அரசாங்கம் எதுவும், நியாயமான காரியங்களுக்காக ஆயுதங்களை உபயோகிக்க விரும்பும் குடிகளுக்கு அவ் வுரிமையை மறுப்பதில்லை. தற்காப்புக்காகவும், தேசப் பாதுகாப்புக்காகவும் ஆயுதங்கள் வைத்திருத்தலும், இராணுவ தந்திரங்களில் பயிற்சி பெறுதலும் மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் பிறப்புரிமை யாகும். காபூல் அமீர் கூடத் தம் குடிகளுக்கு இவ் வுரிமையை மறுப்பதில்லை. இராணுவ ஆயத்தங்கள் செய்வதிலும், குடிமக்களுக்கு இராணுவப்பயிற்சி அளிப்பதிலும் தேசங்கள் ஒன்ருெடொன்று போட்டி யிடுகின்றன. சீனத்தில் கட்டாய இராணுவ சேவையைப் பற்றி யோசித்துவருகிருர்கள். ஜப்பானில் இராணுவப் பயிற்சி கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது. சில இடங்களில் பெண்கள் கூட ஆயுதங்களின் உபயோகமும், தற்காப்பு முறைகளும் கற்றுக்கொண்டு வருகிருர்கள். அமெரிக்க ஐக்ய ராஜ்யத்திலும், அமெரிக்காவிலுள்ள மற்ற இராஜ்யங்களிலும், நீகிரோவர்களும் அமெரிக்க இந்தியர்களும் ஆயுதங்கள் வைத்துக் கொள்ளலாம்; இராணுவப் பயிற்சி பெறலாம். ஆனல் இந்தியாவிலுள்ள இந்தியர்கள் மட்டும் ஆயுதங்கள் வைத்துக்கொள்ளக் கூடாது. ஒவ்வொரு தேசமும் ஆயுதங்களும் யுத்த தளவாடங்களும் செய்வதில் சிரத்தை கொண்டிருக்கிறது; பகைவர்களை வெற்றி கொள்வதற்குறிய தகுந்த முறைகளைக் கண்டுபிடிப்பதில் கவனம் செலுத்தி வருகிறது. புதிய ஆயுதங்களைக் கண்டுபிடிப்பவர்களுக்கும், பழையவற்றை அபிவிருத்தி செய்பவர்களுக்கும் ஒவ்வோர் அரசாங்கமும் வேண்டிய ஆதரவு அளித்து வருகிறது. ஆனல் இந்தியர்களுக்கு மட்டும் இவை

யெல்லாம் மறுக்கப்படுகின்றன.* ஏன்? அவர்கள் பராதீனர்களாயிருப்பதால்தான். அவர்களை ஆளும் அரசாங்கம் அவர்களை நம்புவதற்கில்லை. இந்தியாவில் பிரிட்டிஷ் சைன்யம் எவ்வளவு இருக்கிறதோ, அதற்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்துக்கு மேல் சுதேசி சைன்யம் போகக்கூடாது. சுதேசிகள் பீரங்கிகளைக் கையாளக்கூடாது. ஆயுதங்கள் வைத்துக்கொள்வதற்கும், கையாளுவதற்கும் இன்னும் எவ்வளவோ நிர்ப்பந்தங்கள் அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன. ஏன்? அவர்கள் ஆயுதங்களைக் கையாளத் தகுதியற்றவர்களா? அவர்கள் தைரிய மில்லாதவர்களா? நிதான மறியாதவர்களா? இக் குற்றங்களில் ஒன்றும் அவர்கள்மீது சுமத்த முடியாது. எனினும் எந்த இந்தியனும் சைன்யத்தில் உத்தியோகம் வகிக்க அருகதை யற்றவனாகக் கருதப்படுகிறான். பிறப்பிலும், சமூக அந்தஸ்திலும் அவன் எவ்வளவு உயர்ந்தவனா யிருப்பினும், கல்வியால் தகுந்தவனாயிருப்பினும் சரிதான். இந்தியாவிலும், கிரேட் பிரிட்டனிலும் உள்ள இராணுவக் கலாசாலை எதிலும் எந்த இந்தியனையும் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். ஏன்? அவர்கள் அறிவுத் திறமையிலோ உடல் வலிமையிலோ தகுதியற்றவர்களா? உண்மை யென்னவெனில், இந்திய அரசாங்கம் சொந்த அரசாங்கம் அன்றாதலின் ஜனங்களை அது நம்பக்கூடவில்லை. அவர்களைச் சாதாரண சிப்பாய்களாகச் சேர்த்துக்கொள்ளலாம். அதுவும் குறிப்பிட்ட தொகை வரைக்கும்தான். அதற்கு மேல் அவர்களுக்கு

*ஆயுதச் சட்ட அமுல் எவ்வளவு நகைக்கத் தக்க அளவுக்குக் கொண்டு போகப்படுகிறதென்பதைக் கல்கத்தா "வங்காளி"ப் பத்திரிகையில் வெளியான பின்வரும் நிகழ்ச்சி நன்கு விளக்கும்:—"கிதர்ப்பூரைச் சேர்ந்த முன்ஷிகஞ் சாலையில் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் ஓர் அணாவுக்கு வாங்கிய விளையாட்டுத் துப்பாக்கி வைத்துக்கொண்டிருந்தான். ஆகஸ்டுமீ 8உ அவன் அதை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். ஆனால் காகிதக் 'கேப்பு' களைக் கொண்டு வெடிக்கச் செய்ய அவனுக்குத் தெரியவில்லை. பதின்மூன்று வயதுப் பையன் வேறொருவன் எப்படி வெடிக்கச் செய்வதென்று அவனுக்குக் காட்டினான். அப் பையன் உடனே ஒரு போலீஸ் சேவகனால் கைது செய்யப்பட்டுப் போலீஸ் தானாவுக்குக் கொண்டுபோகப் பட்டான். கடைசியாக அவனை அலிபூருக்கு விசாரணைக்கு அனுப்பினார்கள். அங்கு அவனுக்கு மூன்று ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டது."

இராணுவப் பயிற்சியோ, இராணுவத்தில் உத்தியோகமோ அளிக்க முடியாது. சாதாரண ஜனங்களையும் ஆயுதங்கள் வைத்துக்கொள்ள உரிமை தரும் அளவுக்கு நம்ப முடியாது. எனின், ஆயுதங்கள் உற்பத்தி செய்ய இடங் கொடுக்கக் கூடுமா? இந்தியர்களை ஐரோப்பிய யுத்தத்தில் கலந்துகொள்ள அநுமதித்ததைப் பற்றிப் பிரமாதமாகப்பேசப்படுகிறது. இதைவிடப் பெரிய வரம் தாங்கள் பெறக் கூடியது ஒன்றுமில்லாதது போல் இந்தியர் சிலரும் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். ஆனால் உண்மை என்ன? பிரிட்டிஷாரின் நலத்தைமட்டும் உத்தேசித்து இது அநுமதிக்கப் பட்டிருக்கிறதே யல்லாமல் வேறில்லை. இந்தியப் படைகளைச் சேர்க்காமல் கிரேட் பிரிட்டன் பிரான்ஸுக்குத் தக்கதொரு சைன்யத்தை அனுப்பியிருக்க இயலாது. மேலும் இந்தியாவிலிருந்து வெள்ளைக்கார சைன்யம் முழுவதையும் கொண்டு போக முடியாதன்றோ? வெள்ளைக்கார சோல்ஜர்களைப் பெருந்தொகையாகக் கொண்டுபோனால், அந்த விகிதத்துக்குச் சுதேசி சிப்பாய்களைக் கொண்டுபோதலும் அவசியமாகும். பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குச் சுதேசி சைன்யத்தினிடம் எப்போதும் அவநம்பிக்கைதான். எவ்வளவுதான் பொய்களை அளந்தாலும், குதர்க்கவாதங்கள் பேசினாலும், பிரிட்டிஷார் இந்தியர்களை நம்புவதில்லை என்னும் உண்மையை மறைக்க முடியாது. இந்தியர்கள் ஆயுதங்கள் செய்யவும் வைத்துக்கொள்ளவும் அவர்கள் அநுமதிக்கமாட்டார்கள்; இராணுவப் பயிற்சியளிக்கவும் மாட்டார்கள்; நிரந்தர பிரிட்டிஷ் சைன்யத்தைவிட இரண்டு மடங்குக்குமேல் சுதேசி சைன்யம் வைத்திருக்கவும் முடியாது. ஏனெனில், அவர்கள் அன்னியர்கள். எனவே, சுதேசிகளை நம்புவதற்கில்லை. இந்தியர்களுக்கு ஆயுதங்களும், இராணுவப் பயிற்சியுமளித்தால் அவை ஒருநாள் தங்களுக்கு விரோதமாக உபயோகிக்கப்படுமோ வென அவர்கள் அஞ்சுகிறார்கள். அவர்களுடைய நிலையிலிருந்து பார்க்கும்போது ஒருகால் அவர்கள் செய்வது சரியென்றே தோன்றக் கூடும். அப்படியானால், இந்திய அரசாங்கம் தேசிய அரசாங்கமே என்னும் பொய் நடிப்பை ஒப்புக்கொள்ளும்படி இந்தியர்

க்ளை ஏன் கேட்கவேண்டும்? அவர்களும் அரசரின் சமத்துவம் வாய்ந்த குடிகளே என்று ஏன் புரளிசெய்யவேண்டும்? உண்மையை மறைத்து அதற்கு மாருன கபடமொழிகள் ஏன் புகல வேண்டும்? பிரிட்டிஷார் இந்தியாவில் தங்கள் ஆட்சியின் பலவீனம் இன்னதென்பதை நன்கறிவார்கள். ஜனங்களை நிராயுத பாணிகளாக்குவதுதான் தங்கள் ஆட்சியும் அதிகாரமும் நிலைத்து நிற்பதற்குறிய சிறந்த முறை என்று அவர்கள் உணர்ந்திருக்கிருர்கள். ஆயுதங்களைப் பற்றியவரையில் இந்தியாவின் தற்போதைய நிலை இதுவாகும் :—ஒருவன் ஆயுதங்கள் திருடலாம்; திருட்டுத்தனமாக இறக்குமதி செய்யலாம்; ஆயுதந் தரிக்கும் உரிமையுள்ளவர்களிடமிருந்து, குற்றம் புரிவதற்காகத் திருட்டுத்தனமாய் வாங்கலாம். ஆனுல் ஒருவன் தன் உயிரையும், சொத்தையும் பாதுகாப்பதற்கோ, அல்லது தன் குடும்பத்தாரின் (மனைவி, அன்னை, சகோதரி, புதல்வி முதலியோரின்) உயிரையும் மானத்தையும் காப்பாற்றுவதற்கோ ஆயுதம் தாங்க முடியாது.*

"இந் நிலைமை சமூகத்தில் சட்டத்திற் கடங்காத மக்களுக்கு அபாயகரமான பலத்தைக் கொடுத்துவிடுகிறது. இக் கூட்டத்தாரின் அதிக்கிரமங்களினுல் ஜனங்கள் பெருங் கஷ்ட நஷ்டங்களுக் குள்ளாவதேனென்றும், வங்காளம், பஞ்சாப் முதலிய இடங்களில் கொள்ளைகள், கொலைகள் ஆகியவற்ருல் மக்கள் துயருறுவது ஏன் என்றும் இப்போது விளங்குகின்றனவன்ருே? குற்றவாளிக்கு நாட்டில் ஆயுதங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆனுல் தற்காப்புக்காகமட்டும் ஆயுதங்கள்

* ஆயுதங்கள் வைத்துக்கொள்ள அநுமதி (லைஸென்ஸ்) தருவதைப் பற்றிய வருஷாந்தர அறிக்கையின் மீது அபிப்பிராயம் எழுதுகையில் இந்தியப் பத்திரிகைகள் இதேவிதமான கருத்தைத் தெரிவித்திருந்தன. "பஞ்சாபி" எழுதியதாவது:— "குற்றம் செய்யும் நோக்கமுடைய கொடியர்கள் நியாய விரோதமான வழிகளில் ஆயுதங்கள் சம்பாதித்திருக்க, சட்டத்திற்கு அடங்கி நடக்கும் குடிகள் ஆயுத அநுமதி பெறுவதிலுள்ள கஷ்டங்களினுல் பெரும்பாலும் திக்கற்றவர்களாயிருந்து வருகிருர்கள்." 1915-ம் ளு அக்டோபர் 6உ "வங்காளி"ப் பத்திரிகையும் பார்க்கவும்.

வேண்டும் அமைதிப்பற்றுள்ள ஜனங்களுக்கு அவை கிடைப்ப தில்லை. இவ்வளவும் எதனால்? இந்திய அரசாங்கம் அன்னிய அரசாங்கமாதலினாலும், அது தன் குடிகளிடத்திலும், அவர் களுடைய இராஜ விசுவாசத்திலும் நம்பிக்கைவைக்க முடி யாததினாலுந்தான். உண்மை இவ்வாறிருக்க, ஜனங்களின் அபரிமிதமான இராஜ பக்தியைப்பற்றிப் பேசுவதற்கெல்லாம் பொருளே கிடையாது. இத்தகைய நிலைமை இருந்துவரும் வரையில் ஜனங்கள் இந்த அரசாங்கத்தைத் தங்கள் சொந்த அரசாங்கமாக ஏற்றுக்கொண்டு அவ்வாறே நடத்துவார்க ளென்று எதிர்பார்ப்பது வீணாகும். "நிராயுதபாணிகள் நாம்" என்னும் எண்ணத்தினால் உண்டாகும் திக்கற்ற நிலைமையை இந்த யுத்தத்தின்போது இந்திய ஜனங்கள் நன்கு உணர்ந்தது போல இதற்குமுன் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட காலந்தொட்டு எப்போதும் உணர்ந்தது கிடையாது. ஜனங் களின் மனதில் ஒரு புதிய பயம் தோன்றியிருக்கிறது. "பிரிட் டிஷார் தோல்வியுற்றால் நாம் அழிந்தோம்" என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். ஜெர்மானியரோ, ருஷியரோ வரலாம். காபூல் அமீர்கூடப் படையெடுத்து வரலாம். அவர்களை நாம் எதிர்த்து நிற்றல் அணுவளவும் இயலாத காரியம். இவ்வளவு திக்கற்றவர்களும், பிறரை நம்பிப் பிழைப்பவர்களுமான ஜனங் கள் உலகத்தாரால் வெறுத்தொதுக்கப் படுவதற்கே உரியவர் கள் ஆவர் அன்றோ? தற்போது நடக்கும் யுத்தத்தின் பயனாக இந்தியன் இவ்வுண்மையை நன்குணரத் தொடங்கியுள்ளான். தான் பிரிட்டிஷ் பிரஜையாக இருப்பதினால் உலகில் சுயாதீனத் துடன் வாழும் மற்ற தேசத்தார் தன்னை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை யென்றும். மிகவும் இழிந்தவனாகக் கருதி அரு வருக்கிறார்க ளென்றும் அவன் அறிந்து வருகிறான். ஆப்பிரிக் காவிலும் அமெரிக்காவிலுமுள்ள நீகிரோவர்கூடத் தன்னைவிட உயர் நிலையில் இருப்பதை அவன் காண்கிறான். சி. ஐ. இ. ராய் பகதூர், கான் பகதூர் பட்டம் பெற்ற இந்தியர்கள் எவ்வ ளவுதான் தெய்வத்தை வேண்டினாலும், பிரிட்டிஷார் என்றென் றைக்கும் ஜெயக்கொடி நாட்டி வாழ முடியாது. அவர்களு

டைய ஆயுத பலம் குறையுங்காலம் வரலாம். அப்போது இந்தியாவின் கதி என்ன? இந்தியர்களின் நிலை என்ன? அவர்கள் ஆடுகளைப்போல் வேறு நாட்டாரின்வசம் மாற்றப்படுவார்களா? உடன்படிக்கை மூலம் அவர்கள் மாற்றப்படாவிட்டாலும் ஆங்கிலேயரிடமிருந்து உலகாதிபத்தியத்தைக் கைப்பற்றும் நாட்டார் இந்தியாவையும் கைப்பற்றிக்கொள்வர். இவ்வெண்ணமே நமக்கு மனோவேதனையும் பேரவமானமும் அளிப்பதற்குப் போதுமன்றோ? ஆனால் பாரத மக்களுக்கு, தங்கள் அரசாங்கம் அன்னிய அரசாங்கம் என்பதையும், அதற்குத் தங்களிடம் இரண்டாம் பட்சமான சிரத்தையே உண்டென்பதையும் இடைவிடாது நினைவூட்டும் விஷயம் இது ஒன்று மட்டுமன்று."

இது சம்பந்தமாக இன்னும் ஒரே ஓர் அபிப்பிராயத்தை மட்டும் இங்கெடுத்துக் காட்டுகிறேன். மிதவாதக் கொள்கையில் பழுத்த பார்ஸி கனவானாகிய ஸ்ரீமான் வாச்சா கூறுவதாவது:—

"இந்த யுத்தத்தைப் பற்றிய வரையில் நமக்குப் பெரிதும் ஏமாற்றந் தந்திருக்கும் விஷயம் ஒன்றிருக்கிறது. அதைப் பற்றி இவ்விடத்தில் குறிப்பிடாதிருக்க என்றால் இயலவில்லை. யுத்தம் தொடங்கிய நாளிலிருந்து இந்திய சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் சாதி, சமய வேற்றுமையின்றிக் கல்வியறிவிற் சிறந்தவர்கள் பலர் யுத்தரங்கத்திற்குச் சென்று போர் செய்ய அநுமதி கோரி மனுச் செய்துகொண்டார்கள். சாதாரண இந்திய சைன்யத்தைச் சேர்ந்த போர் வீரர்களுடன் சம அணியில் நின்று சண்டையிட அவர்கள் விரும்பினார்கள். இன்றைய தினமுங் கூட, நேசக்கட்சி இராஜ்யங்கள் எந்த மகத்தான இலட்சியத்துக்காகப் போர் செய்கின்றனவோ, அந்த இலட்சியத்திற்காக ஆயுதந் தாங்கிப் போர் புரியச் சித்தமா யிருப்போர் ஆயிரக் கணக்கில் இருக்கின்றனர். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, இந்த நாட்டின் நிரந்தர அதிகார வர்க்கத்தினர் மரியாதையாக, ஆனால் கண்டிப்பாக அம் மனுக்களை

நிராகரித்துவிட்டனர். இதன் காரணம் என்னமோ தேவ ரகசியமாயிருக்கிறது. துயரம் நிறைந்த நெருக்கடியான இத் தருணத்தில் அரசாங்கம் இத்தகைய மனோபாவம் கொண் டிருப்பது நாடெங்கும் அளவில்லா ஏமாற்றத்தை அளித்திருக் கிறது. இவ் வேமாற்றத்தையே பிரபல பத்திரிகைகள் பல வெளியிட்டிருக்கின்றன. ருஷியா தேசம் கோடிக் கணக்கான ஜனங்கள் வசிக்கப் பெற்றதாயினும் இந்தியாவை விட ஜனத் தொகையில் குறைந்ததே யாகும். அந் நாட்டில் இப் போது, சுதந்திரத்தின் பெரும் பகையாகத் தோன்றி யிருக்கும் காட்டு மிராண்டிப் படைகளை எதிர்க்கும் பொருட்டு, உற் சாகமும் தேச பக்தியும் ததும்பும் பொது ஜன சைன்யம் அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறே பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளும் தாய் நாட்டுக்குத் துணை செய்யும் பொருட்டுப் படையின்மேல் படையாகத் திரட்டி வருகின்றன. ஆனல் இந்தியாவில் மட்டும், லட்சக் கணக்கான ஜனங்கள் போர்க் களத்தில் சேவை செய்யச் சித்தமாய் எப்போது அநுமதி கிடைக்குமென்று எதிர்பார்த்த வண்ண மிருப்பினும், அவர் களைச் சைன்யத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டாமென்று அதிகாரிகளின் தாக்கீது பிறந் திருப்பது ஆச்சரிய மன்றோ? இது ஆங்கில தர்மத்துக்கு அழகானதன்று. ஏகாதிபத்தியத் தின் மற்ற எல்லாப் பகுதிகளிலும் நடந்து வரும் நிர்வாக முறைக்கு முற்றும் முரண் பட்டதாகும். இந்தியாவை ஆளுவோர் ஜனங்களிடம் இன்னமும் அவ நம்பிக்கைப் படுவ தாய்க் காணப்படுகிறது. இவ்வாறு நான் சொல்லும்போது நாடெங்கு முள்ள என் தேசத்தாரின் ஒருமுகமான உணர்ச் சியை வெளியிடுகிறேனே யல்லாது வேறில்லை.''

ரோம ஏகாதிபத்தியத்தின் ஆட்சி முறையையும், பிரிட் டிஷ் ஆட்சி முறையையும் ஒப்பிட்டுவிட்டு ஸ்ரீமான் வாச்சா பின்வருமாறு முடித்துள்ளார்:—

"பல ஆண்டு காலமாய் இந்திய ஜனங்கள் ஆயுதப் பயிற்சி யில்லாதிருந்துவருவதின் காரணமாக க்ஷீணதசை அடைந்

திருக்கிறார்கள். கிரேட் பிரிட்டன் இனியேனும் அவர்களுக்கு அப்பயிற்சியளிக்க மறுக்காது என்று நாமனைவரும் மனப்பூர்வமாக நம்புகிறோம்."

இந்திய நோக்கத்தினின்று பார்க்குங்கால், "க்ஷீண தசை" என்னும் சொற்றொடர் இந்தியாவின் நிலையை நன்கு விளக்குவதாகும். அரசியலிலும், உடல் நிலையிலும், பொருளாதாரத்திலும் "க்ஷீணதசை" தான் இந்தியாவின் பிரிட்டிஷ் ஆட்சியின் பயன். தேன் கசியும் வார்த்தைகளினாலும், அழகான சொற்றொடர்களினாலும் எவ்வளவுதான் மூடி மறைத்தாலும் அவ் வுண்மை அடிக்கடி வெளியாகியே தீருகிறது. "மாடர்ன் ரிவியூ" பத்திரிகை பின் வருமாறு கூறுவது முற்றும் பொருத்தமே யாகும்:—

" அதிகார வர்க்க ஆட்சியின் கீழ் இந்தியாவானது நாகரிக தேசங்களுக்குள்ளே வறுமையிலும், சுக வீனத்திலும், அறியாமையிலும் மிகவும் கேடான நிலையிலிருக்கிறது. வறுமையும், சுகவீனமும் குறைந்து வரவில்லை. கல்வியோ நத்தை ஊர்தலினும் மெதுவாகப் பரவிக் கொண்டிருக்கிறது. இந் நிலைமைக்குப் பரிகாரம் சுயாட்சியே யாகும்."

சென்ற காங்கிரஸ் மகா சபையின் அக்கிராசனர் உபந்நியாசத்தினின்று இந்தியாவின் வறுமையைப் பற்றிய ஒரு சிறு பகுதியையும் இங்கெடுத்துக் காட்ட விரும்புகிறேன். அது வருமாறு:— "பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியா வளம் பெற்று வருகிறதா, ஏழ்மை யடைந்து வருகிறதா என்பதைக் குறித்து அபிப்பிராய பேதம் என்ன விருப்பினும், இந்தியாவில் தற்போது வறுமைக் கொடுமை மிக அதிகம் என்பதைப் பற்றிய வரையில் கருத்து வேற்றுமையே கிடையாது. ஜனங்களில் எல்லா வகுப்பாரும் அநுபவித்தற்குரிய செல்வப் பெருக்கின்றி அரசியல் திருப்தி ஏற்படா தென்பது நிச்சயம். அம்மாகாண ஜில்லா நிர்வாகக் கமிட்டியார், தொழில் துறையில் தேசத்தின் பிற்போக்கானது அரசியல் துறையில் பெரியதோர்

அபாயம் என்பதாக வங்காளத்தைப் பொறுத்தவரையில் கூறி யிருக்கின்றனர். உண்மையில் இந்தியாமுழுவதிற்குமே இது பொருந்தும்.

" தொழிலில் இந்தியா மிகவும் தாழ்வுற்றிருக்கும் இவ் வதி சயத்தை எவரும் மறுத்துக்கூற முன்வரார். பாரத நாடு இயற்கை வளங்கள் எல்லாவற்றிலும் சிறந்திருந்தும் தற்போது நாகரிக உலகில் மிகவும் ஏழ்மையான நாடாயிருந்துவருகிற தென்பதில் ஐயமில்லை."

## 6

பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது இந்திய அரசியல் வாதிகள் கூறும் குறைகளையெல்லாம் அடுக்கி இந்த நூன்முகத்தைப் பெரிதாக்க நான் விரும்பவில்லை. என்றாலும் என்னுடைய துண்டுப் பிரசுரத்திலிருந்து கல்வியைப் பற்றிய ஒரு பகுதியை மட்டும் இங்கே தருதல் அவசியமாகிறது.

" இந்தியாவின் கல்வி நிலையைக் கவனிப்போம். இந்தியா வின் சில பகுதிகள் ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலும், மற்றும் சில பகுதிகள் ஒரு நூற்றாண்டுக்கு மேலும், பஞ்சாப் மாகா ணம் குறைந்தது 65 வருஷ காலமாகவும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்து வருகின்றன. எனினும், இந்தியா முழுவதையும் எடுத்துக்கொண்டால் எழுத்து வாசனை யறியாதவர்களின் தொகை இன்று ஏறக்குறைய 100-க்கு 95 வீதம் ஆகின்றது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியைத் தாங்கி நிற்பவர்கள் குடி யானவர்களும், இராணுவ வகுப்பாருமே யாவர். அவ்விரு வகுப் பாருக்குள்ளேயே அறியாமையும் அதிகம். இவர்களுக்குக் கல்வி புகட்ட அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? ஒன்றுமே யில்லை. அவர்களுக்குக் கல்வி யறிவு உண்டாகிவிட்டால் இப்போதுள்ளதைப் போல் சொன்னபடி ஆடும் கருவிகளா

யிருக்கச் சம்மதிக்க மாட்டார்க ளாதலின், வேண்டுமென்றே அவர்களுக்குக் கல்வி யளிக்கப் படாமலிருக்கிறது என்று சிலர் ஸ்தாபிக்கின்றனர்.

"மற்ற தேசங்களில் போலவே இந்தியாவிலும் விவசாயந்தான் தொழில்களுக்குள்ளே மிகவும் குறைவான ஆதாய முடைய தொழிலாகும். எனவே, திடகாத்திரர்களான பஞ்சாபிகள், தங்கள் சொந்த தேசத்தில் விவசாயம் செய்து சோற்றுக் கில்லாமல் திண்டாடுவதைவிட, பெருந் தொகையினராக வெளிநாடுகளில் தொழில் புரிந்து பிழைக்கச் செல்வது ஆச்சரிய மில்லை யன்றோ? பிரிட்டிஷ் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் சிலகாலம் படித்த வகுப்பாரும், வர்த்தக வகுப்பாரும் நல்ல பணம் சம்பாதித்துச் செழித் தோங்கினார்கள். ஆனால் இப்போது அவர்களும் முற்றும் அதிருப்தி யடைந்திருக்கிறார்கள். சுதேசி வியாபாரிகள் ஆக்கம் குறைந்து மகிழ்ச்சி குன்றி யிருப்பதின் காரணங்கள் வருமாறு:—(1) ரயில்வேக்களும், வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதிக் கம்பெனிகளும் சாமான் உற்பத்தி செய்வோரிடமும், சாமான் வாங்குவோரிடமும் நேரே பேரம் நடத்தி இடையிலுள்ள வர்த்தகர்களின் தொழிலை அழித்து விட்டன. (2) பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கத்தில் இந்திய வியாபாரிகளுக் கிருந்த வசதிகள் மறைந்துவிட்டன, (3) அதிகார வர்க்கத்தினர் விவசாய, இராணுவ வகுப்பாரை எப்போதும் வர்த்தகர்களுக்கு விரோதமாகக் கிளப்பிவிடுவதுடன் தங்கள் மொழிகளினாலும் செயல்களினாலும் அவர்களை இடைவிடாது அவமதித்து வருகின்றனர். ஒவ்வொரு மாகாணத்திலும் விவசாய வகுப்பாரின் நன்மைக்காக வென்று வெளிப் படையான காரணங் கூறி, உண்மையில் இந்திய வியாபாரிகளுக்கும், லேவா தேவிக் காரர்களுக்கும் விரோதமான விசேஷ சட்டங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால், விவசாய மல்லாத வேறு துறைகளில் அவர்கள் முன்னேற அரசாங்கம் ஏதேனும் செய்திருக்கிறதா? ஒன்றுமே இல்லை. தேச முழுவதிலும் தொழிற் கலாசாலை ஒன்றுகூடக் கிடையாது. தனிப்பட்

ட்வர்களாலோ, அரசாங்க உதவி பெற்றோ நடத்தப்படும் 'தொழிற் கலாசாலைகள்' பெயர் மாத்திரத்திலேயே தொழிற் கலாசாலைக ளாகும். வியாபாரத் துறையில் சர்வ தேசீய வர்த்தகமே சிறந்துள்ள இக்காலத்தில், இந்தியாவின் சர்வகலாசாலை எதிலும் தற்கால அன்னிய பாஷைகள் கற்றுக்கொள்ள வசதியில்லை. ஜெர்மானியரும், ஆஸ்திரியரும், இதாலியரும், ஜப்பானியரும், அமெரிக்கரும், இந்தியாவுடன் தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்யும் பொருட்டுத் தங்கள் சொந்த நாட்டில் ஆங்கிலமும், ஹிந்துஸ்தானியும் கற்றுக் கொள்ள வசதியுண்டு. ஆனால் இந்தியர்களுக்கு ஜெர்மனி, பிரஞ்சு, ஜப்பான் மொழிகளைச் கற்றுக் கொள்ளும் வசதி யளிப்பது குறித்து இந்திய அரசாங்கம் எப்போதும் கவனம் செலுத்தியது கிடையாது. ஒரு மாணுக்கனின் வாணுளில் பெரும் பகுதி கட்டாயமாக ஆங்கில மொழி கற்பதிலேயே செலவழிந்துவிடுகிறது. இந்தியர்கள் பிற பாஷைகளைக் கற்பதோ, பிற தேசங்களுடன் வியாபாரம் செய்வதோ அவசியமென்று கருதப்படுவ தில்லை. ஏனெனில் அவர்களுக்காக ஆங்கிலேயர் அக் காரியங்களைச் செய்துவிடுகின்றனர்! இந்தியர்கள் வெளி நாடுகளுடன் நேரான வியாபார சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்வதற்கு வசதி யளிப்பதில் பிரிட்டிஷாருக்கு என்ன கவலை? இரசாயன சாஸ்திரத்திலும், வேறு சாஸ்திரங்களிலும் இந்திய மாணுக்கன் சோதனைகள் செய்து ஆராய்ச்சி நடத்தக்கூடிய இடம் இந்தியாவில் ஒன்று கூட இல்லை. தேசத்தில் கனிகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனல் சுரங்கத் தொழில் கற்றுக்கொள்ளக்கூடிய இடம் ஒன்று கூடக் கிடையாது. நூற்றுக்கணக்கான கப்பல்கள் தினந்தோறும் இந்தியத் துறைமுகங்களுக்கு வந்துவிட்டுப் போகின்றன. ஆனல் இந்திய இளைஞன் ஒருவன் கப்பல் தொழில் கற்றுக்கொள்ளக்கூடிய இடம் இந்தியாவில் ஒன்றுகூட இல்லை. எனின், கப்பல் படைக்குத் தகுதி பெறுவதைப் பற்றிச் சொல்லவேண்டிய தில்லை யன்றோ? இயற்கை வசதிகள் யாவும் பொருந்திய பாரத நாட்டில் கப்பல் கட்டுந் தொழிற்சாலை ஒன்றுகூடத் தற்போது கிடையாது. இந்திய அரசாங்கம் இவ்

விஷயங்களைப் பற்றி எப்போதேனும் ஆலோசித்ததும் இல்லை. அவர்களுக்கு இவ் விஷயங்களைப் பற்றிக் கவலையிருந்தால் தானே? உள்நாட்டுக் கைத்தொழில்களை விருத்தி செய்வதிலும், ஜனங்களின் அந்தஸ்தை உயர்த்துவதிலும் அவர்களுக் கென்ன சிரத்தை? தங்களுடைய தொழில்களுக்கும், உணவுக்கும் வேண்டிய மூலப்பொருள்கள் (பருத்தி, கோதுமை, எண்ணெய் விதை போன்றவை) அதிகமாக உற்பத்தியாவதற்கு அவர்கள் வேண்டிய முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால் நாட்டுக் கைத்தொழில்களை வளர்க்கும் துறையில் அவர்கள் செய்திருப்பது ஒன்றுமில்லை யென்றே கூறலாம். முதலில் இந்திய வியாபாரத்தைத் தங்களுக்கே ஏகபோகமாய் வைத்துக் கொள்ள அவர்கள் விரும்பினார்கள். ஆனால் அவர்களுடைய யதேச்சா வியாபார முறை இதற்குக் குறுக்கே நின்றது. பின்னர் ஜெர்மானியரும், தற்போது ஜப்பானியரும் இந்திய வியாபாரத்தை அவர்களுடன் பங்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தியர்களுக்கு வேண்டிய சாமான்களை அவர்களே உற்பத்தி செய்யக் கற்றுக்கொடுக்கும் யோசனை மட்டும் பிரிட்டிஷார் உள்ளத்தில் உதயமாகவே யில்லை. இந்த யோசனை அவர்களுக்குத் தோன்றவேயில்லை யென்று கூறுவது ஒரு வேளை தவறாயிருக்கலாம். அவர்கள் கூர்ந்த மதி படைத்த அறிவாளிகளே யாதலால், இவ் விஷயத்தில் இந்தியாவுக்குத் தங்கள் கடமையை நிறைவேற்ற வில்லை யென்பதை உணர்ந்தே யிருக்கவேண்டும். ஆனால் தங்கள் சொந்த ஜனங்களின் நன்மையைக் கவனிக்க வேண்டுமன்றோ? அதை எப்படிப் புறக்கணித்தல் கூடும்?

"இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஜனங்கள் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி யளிக்கத் துணியவும் முடியாது; ஏனெனில் அதனால் அரசாங்கத்தினிடம் வெறுப்பு அதிகமாகுமென்னும் அபாயம் உண்டு. உயர்தரத் தொழிற் கல்வியும் அவர்கள் அளிக்க இயலாது; அது பிரிட்டிஷ் தொழில்களின் ஆக்கத்துக்கு இடையூறு செய்யு மல்லவா? அதே காரணத்தினால் இந்தியத் தொழில்களை அவர்கள் பராமரிக்கவும் மாட்

டார்கள். கப்பல் செலுத்தும் முறை, அன்னிய பாஷா ஞானம் இவை உள்ளிட்ட உயர்தர வியாபாரக் கல்வியும் அவர்களால் அளிக்க முடியாது; ஏனெனில் இந்தியர்கள் நேரே கப்பல் வியாபாரத்தில் தலையிட்டுப் பிற நாடுகளுடன் வியாபார சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்வதை அவர்கள் விரும்பவில்லை. இந்தியத் தொழில்களுக்கு உதவித் தொகை நல்கியும் காப்பு வரி விதித்தும் அவர்கள் பாதுகாப்பு அளிக்க மாட்டார்கள்; ஏனெனில் அவ்வாறு செய்தல் யதேச்சா வியாபார முறைக்கு மாருயிருப்பதுடன் பிரிட்டிஷ் கைத் தொழில்களின் நன்மைக்கும் பாதகமாயிருக்கும். இப்படிக் கெல்லாமிருப்பினும் இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியரின் நன்மையை முன்னிட்டே நடத்தப்படுகிற தென்பதாக இந்தியர்கள் நம்பவேண்டு மென்று அவர்கள் விரும்புகின்றனர்.

"இந்திய ஜனங்கள் எழுத்து வாசனை யற்றவர்களாய் அறியாமையில் மூழ்கிக் கிடக்கவேண்டும். தொழிலிலும், வியாபாரத்திலும் பிறரைச் சார்ந்து நிற்க வேண்டும். ஏன்? அதனுல் இங்கிலாந்துக்கும், அந் நாட்டாருக்கும் நன்மை யுண்டாதலின்,

"இது மட்டுமன்று. இந்திய அரசாங்கத்தார் விஞ்ஞான சாஸ்திரங்கள், என்ஜினீயரிங், வைத்தியம் ஆகிய துறைகளிலும் உயர்தரக் கல்வி அளிக்க முடியாது. ஏனெனில் இத் துறைகளில் உயர்தர உத்தியோகங்களைத் தங்கள் இனத்தாருக்கே ஒதுக்கி வைக்க அவர்கள் விரும்புகிருர்கள். சமீப காலத்தில் பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளிலும், பிற நாட்டுச் சர்வ கலாசாலைகளிலும் இந்தியர் பலர் பயிற்சி பெற்று இத் துறைகளில் தேர்ச்சி யடைந்திருப்பது இந்திய அரசாங்கத்துக்குப் பெரிதும் உபத்திரவமாகி யிருக்கிறது. இந்த இலாகாக்களில் எற்கனவே யுள்ள பிரிட்டிஷாரின் தொகையைக் குறைக்காமல் இவர்களுக்கு உத்தியோகம் அளிக்க முடியா தன்றே? அரசாங்கம் இதை விரும்பவில்லை. இதன் விளைவு யாதெனில், பிரிட்டனிலும் ஐரோப்பாவிலும் பயிற்சி பெற்றுத் தேர்ந்த இந்தியர் பலர்

தற்போது தங்களைவிடக் குறைந்த தேர்ச்சியுள்ளவர்களும், தேர்ச்சியே யில்லாதவர்களுமான பிரிட்டிஷாரின் கீழ் சின்ன உத்தியோகங்களுடன் திருப்தியடைய வேண்டியவர்களாய் யிருக்கின்றனர். உயர்தர உத்தியோகங்களுக்குப் போட்டிப் பரீட்சைகள் இங்கிலாந்தில் நடைபெறுகின்றன. இதுவே பெரிய தோர் அநீதியாகும். ஆனால் இவ் வருஷத்திலோ, அவ் வுத்தி யோகங்களுக்குப் போட்டியிடத் தகுதி வாய்ந்த பிரிட்டிஷா ரின் தொகை யுத்தங் காரணமாகக் குறைந்துவிட்ட படியால், போட்டிப் பரீட்சைகளில் சிலவற்றை நிறுத்திவிடவும் அரசாங் கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள்.* உத்தியோகங்களில் இந்தியர் கள் அதிகமாகிவிட்டால் என்ன செய்வதென்ற பயமே இதற் குக் காரணமாகும். இனியும், இந்திய அரசாங்கம் தேசீய அர சாங்கத்தைப்போல் நல்லதென்றுவது, அதைவிடச் சிறந்த தென்றுவது சொல்ல முடியுமா ? உண்மை யாதெனில், உயர்தர உத்தியோகங்களில் இந்தியர் அதிகமாவதை அவர்கள் விரும்ப வில்லை. இதே காரணத்தினுல் தனிப்பட்டவர்களால் நடத்தப் படும் கல்வி ஸ்தாபனங்களிடமும் அவர்கள் அவநம்பிக்கைப் படுகிறார்கள். பள்ளிக்கூடங்களின் பரிசோதகர்களாகவும், உயர் தரக் கல்வி இலாகாவைச் சேர்ந்த ஆசிரியன்மாராகவும் பிரிட் டிஷாரையே நியமிக்கவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்து கிறார்கள். உயர் உத்தியோகங்களின் சிற்சில இந்தியரை நிய மிக்க அவர்கள் இணங்கக்கூடும். ஆனால் அரசாங்கத்துக்குச் சிறிதேனும் அவர்கள் தொந்தரவுகொடுத்தல் சாத்தியமாகும் வண்ணம் அவர்களின் தொகை அதிகமாகக்கூடாது. ஸ்தல ஸ்தாபன நிர்வாகம், சட்டசபைகளின் அமைப்பு, அவற்றின் அதிகாரம் முதலியவற்றிற்கு அடிப்படையாக இருப்பதும் இந்த பயமேயாகும். இந்தியர்கள் பிரதிநிதி ஸ்தாபனங்களுக்குத் தகுதியற்றவர்கள் என்றோ, இன்னும் தகுதி பெறவில்லை

---

*பரீட்சைகள் நிறுத்தப் படவில்லை. ஆனால் முன்னர் பரீட்சையில் தேறியவர்களுக்கே அளிக்கப்பட்ட உத்தியோக பதவிகளில் பெரும் பகு தியை இப்போது நியமனம் மூலமாகப் பூர்த்தி செய்ய இயலுமாறு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

யென்றே வாதம் செய்வது மாயப்பேச்சே யல்லாது வேறில்லை; அதிகாரம் பிரிடிஷாரின் கையிலிருந்து இந்தியர் கைக்குப் போய் விடப் போகிறதே என்ற பயமே உண்மையாகும்.* இந்த பயமே இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி முறையின் மூலமந்திரமா யிருந்துவருகிறது. இந்தியா கிரேட் பிரிட்டனின் சொத்து; சார்பு நாடு. எனவே அதை எஜமானனுடைய நன்மையை முன் னிட்டே நிர்வகிக்க வேண்டுமல்லவா? வெளுத்ததெல்லாம் பாலெனக் கருதும் இந்தியர் பலர் பிரிட்டிஷ் ஜனங்கள் சுதந் திரக் காதல் கொண்டவர்களென்றும், விடுதலைக்காகப் போரா டுவதே அவர்களுடைய பரம்பரை தர்மம் என்றும் நம்புகின்ற னர். ஆனால் இந்த தர்மங்களை இந்தியா விஷயத்தில் பிரயோ கித்தால், பிரிட்டிஷாரின் வருமானம் குறைந்து அவர்களுடைய பணப்பெட்டி பெரிதும் காலியாகிவிடு மென்பதை அவ்விந்தியர் மறந்துவிடுகின்றனர். சுயநல உணர்வும், அதிகார ஆசையும் படைத்த சாதாரண மனிதர்கள் அவ்வுயர் கொள்கைகளை இந் தியா விஷயத்தில் ஒரு நாளும் கடைப்பிடிக்க முடியாதன்றே? பிரிட்டிஷ் மக்கள் நல்லவர்கள்தான். தனி மனிதர்களுக்குள் நடக்கும் விவகாரங்களில் அவர்கள் உண்மையுடனும், கபட மின்றியும், நம்பிக்கைக் குரியவர்களாகவும் நடந்துகொள்கின்ற னர். ஆனால் தங்கள் தேச நலத்துக்கே அபாயம் ஏற்படுவதா யிருந்து அதைத் தடுக்கும் பொருட்டு வேறு முறையைக் கையாளுதல் அவசியமானால், அம் முறையினால் பிறருக்கு எவ் வளவு கஷ்டமும் அநீதியும் நேரிடுவதாயிருந்தாலும், அவர்கள் அதைக் கைக்கொள்ளாமல் என்ன செய்ய முடியும்? இராஜாங் கம் என்பது ஜனங்களுக்காகவே ஏற்பட்ட தென்றும், இரா ஜாங்கமும் ஜன சமூகமும் உண்மையில் ஒன்றுதான் என்றும் ஆங்கில அரசியல் ஞானிகள் போதிக்கிறார்கள். "இராஜாங்கம் ஜனங்களை விடப் பெரியது; இராஜாங்கத்திற்காகவே ஜனங்கள்" என்பதாக டிரியட்ஸ்கே என்னும் ஜெர்மானிய ஆசிரியர்

* இந்தியாவில் நிரம்பப் பிரயாணம் செய்தவரான மிஸ்டர் லோவஸ் டிக்கின்ஸன் என்பார் இந்தக் கூற்றின் உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார். ("இந்தியா, சீனம், ஜப்பான் நாடுகளின் நாகரீகம்", பக்கம் 23, 27, 28).

போதித்த கொள்கை சன்மார்க்க விரோதமான தீய கொள்கை என்று அவர்கள் கூறுகிறார்கள். கிரேட் பிரிட்டனிலும் குடியேற்ற நாடுகளிலும் பிரிட்டிஷார் தாம் நம்புகிறபடியே காரியம் செய்கின்றனர். ஆனால் இந்தியாவிலோ அவர்கள் ஜெர்மானிய ஆசிரியரின் தத்துவங்களைப் பின்பற்றுகின்றனர். இந்தியாவிலுள்ள இராஜாங்கம் வெளியிலிருந்து சுமத்தப்பட்ட ஓர் அதிகாரமாகும். எனவே, அது பொது ஜனங்களிடமிருந்து முற்றும் தனித்து நிற்பது.* இந்தியாவில் பிரிட்டிஷ் ஜனங்களே இராஜாங்கம், எனவே அவர்களுடைய நன்மை இந்திய ஜனங்களின் நலத்திலும் முக்கியமானதாகிறது. இதை ஆதாரமாகக் கொண்டே இந்தியாவில் ஒவ்வொன்றும் முடிவு செய்யப்படுகிறது. ஆங்கிலேயர் நல்லவர்களாயிருக்கலாம்; தயாளமும், நீதியும், அன்பும், நேர்மையும் உள்ளவர்களாயிருக்கலாம். ஆனால் இவ்வளவு நற்குணங்களும் மேலே கூறிய நிபந்தனைக்கு அடங்கி நிற்பவை. இந்தியாவின் தொல்லைகள் எல்லாவற்றிற்கும் உண்மையான காரணம் இதுவேயாகும். இந்தியா சம்பந்தப்பட்ட ஒவ்வொன்றும் இந் நோக்கத்துடனேயே கவனிக்கப்படுகின்றது. இந்த நோக்கம் மாறுகின்றவரையில், இந்திய அரசாங்க முறையிலும், கொள்கையிலும் இந்தியர்களின் சுயமரியாதைக் கிசைந்த மாறுதல் ஏற்படுவதற்கில்லை; அதுவரையில் தேசத்திற் கேற்பட்டிருக்கும் தொல்லைகளுக்கும் நிவர்த்தி இல்லை.''

## 7

இந்திய தேசிய இயக்கத்தின் வளர்ச்சியில் சென்ற ஆண்டில் நேர்ந்திருக்கும் முக்கியமான சம்பவம், சுயாட்சி சம்பந்தமாக ஹிந்து முஸ்லிம்களுக்குள் ஏற்பட்டிருக்கும் ஒற்

* அலகாபாத்தில் வெளியாகும் ஆங்கிலோ இந்தியப் பத்திரிக்கையான ''பயனியர்'' சமீபத்தில் வெளியான ஓர் இதழில் ''இராஜாங்கத்தின் பாதுகாப்பு தனிப்பட்டவர்களின் உரிமைகளை விட அதிக முக்கியமானது'' என்று எழுதிற்று.

றுமையாகும். இந்த யுத்தமானது ஹிந்துக்களையும், முஸ்லிம் களையும் எவ்வளவு தூரம் ஒற்றுமைப் படுத்தியிருக்கிற தென் பது பெரிதும் குறிப்பிடத்தக்கது. அரசாங்கத்தினிடம் தங்க ளுடைய விசுவாசத்தைத் தெரிவித்துக்கொள்வதில் மட்டுமன்றி, சுயாட்சிக் கோரிக்கையிலும், இந்தியாவின் தற்போதைய அரசி யல் நிலைமையில் அதிருப்தி வெளியிடுவதிலும் அவர்கள் ஆச்சரி யமான ஒற்றுமை காட்டியிருக்கிறார்கள். இந்திய தேசீய இயக் கத்தின் சரித்திரத்திலேயே முதல் முறையாகக் காங்கிரஸ் மகா சபையும், அகில இந்திய முஸ்லிம் லீக்கும் ஒரே நகரில் கூடின. இந்த யோசனையை அதீத இராஜ பக்தர்களான முஸ்லிம்கள் தங்கள் ஆங்கிலோ இந்திய எஜமானர்களின் யோசனையை யனு சரித்து முழு பலமும் கொண்டு எதிர்த்தனர். ஆனால், முஸ்லிம் களில் இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் தேசீயக் கொள் கையில் பலமாகப் பற்றுக்கொண்டு விட்டபடியால், அவர்களே வெற்றியடைந்தார்கள். எனவே, பம்பாயில் காங்கிரஸ் மகா சபை நடந்த அதே வாரத்தில் அவர்களும் தங்கள் லீக்கின் கூட்டத்தைச் சிறப்பாக நடத்தினார்கள். இதன் பயனாக, அவ்விரண்டு ஸ்தாபனங்களையும் சேர்ந்த அங்கத்தினர்கள் ஒரு வரை யொருவர் சந்திக்கவும், அபிப்பிராயங்களைக் கலந்து கொள்ளவும், பரஸ்பர மரியாதை பாராட்டவும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அரசாங்கத் தொடர்பைக் குறித்த எல்லா விஷ யங்களிலும் இரு சாராருக்கும் பூரண ஒற்றுமை இருப்பதை அவர்கள் கண்டார்கள். முஸ்லிம் லீக் அக்கிராசனர் தமது உபந்நியாசத்தில் சுயராஜ்யக் கோரிக்கையைக் கிளப்பினார். கட்டாய இலவசக் கல்வி வேண்டுமென்றும், தொழிலபிவிருத் திக்கு அரசாங்கம் உதவவேண்டுமென்றும், அந்த அபிவிருத் திக்கு இடையூறான காரணங்களை நீக்கவேண்டு மென்றும் அவர் கேட்டார். காங்கிரஸ் மகா சபையைவிட அதிக பல மாக இக்கோரிக்கைகளை அவர் வலியுறுத்தினார் என்றும் சொல் லலாம். மேற்படி இரண்டு ஸ்தாபனங்களும் சேர்ந்து இரு பெரும் சமூகங்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய சுயாட்சித் திட் டம் ஒன்றை வகுக்க ஒரு கலப்புக் கமிட்டியை நியமித்தன.

சென்ற ஆண்டில் ஸ்ரீமதி அன்னிபெஸண்ட் ஒரு முயற்சி தொடங்கியிருக்கிறார். இவர் பிரம்ம ஞான சங்கத்தின் அக்கிராசனர்; உலகப் பிரசித்தி பெற்றவர்; திறமை மிக்கவர். இவர் இந்தியாவையே தம் தாய் நாடாகக் கொண்டவராயினும், தேச பக்தி வாய்ந்த ஆங்கிலப் பெண்மணி யாவர். இவர் காங்கிரஸ் மகாசபை, முஸ்லிம் லீக் இவ் விரண்டுக்கும் வேருக, சுயாட்சி சங்கம் ஒன்றை அமைக்க முயற்சி தொடங்கியுள்ளார். ஹிந்து, முஸ்லிம் இரு சமூகங்களிலும் உள்ள தீவிர வாதிகள் அனைவரும் இந்த யோசனையை அங்கீகரித் திருக்கின்றனர். ஆனால் காங்கிரஸ் தலைவர்களில் சிலர் மட்டும் மேற்படி சுயாட்சிச் சங்கத்தின் வளர்ச்சியினுல் காங்கிரஸுக்கு அபாயம் உண்டாகுமோ வென்று அஞ்சுகிறார்கள். எனினும் இம் முயற்சி பொது மக்களின் உள்ளத்தை எவ்வளவு தூரம் கவர்ந்துவிட்டதென்பது மிகவும் ஆச்சரியமாகும். அநேகமாக தேசீயப் பத்திரிகைகள், தேசீயத் தலைவர்கள் எல்லாரும், ஒரு சிலரைத் தவிர, இந்த யோசனையை ஆதரித்திருக்கிறார்கள். ஹிந்து முஸ்லிம்களின் ஒருமுகமான ஆதரவைப் பெற்றுள்ள இந்த யோசனையை அனுஷ்டானத்தில் கொண்டுவந்து சுயாட்சி சங்கம் அமைப்பதற்காகப் பம்பாயில் ஒரு கூட்டமும் நடைபெற்றது. ஆனால் ஸ்ரீமதி பெஸண்டு தற்போதைக்குச் சிறிது பின்வாங்கி யுள்ளார். இந்தியாவுக் கேற்ற சுயாட்சித் திட்டம் ஒன்றை வகுக்கும் பொருட்டு ஏற்படுத்தப் பட்டிருக்கும் கூட்டுக் கமிட்டியாரின் அறிக்கை வெளியாகும் வரையில் பொறுத்திருக்கலா மென்று காங்கிரஸ் தலைவர்கள் சிலர் கூறினர்கள். அதன்மேல் அவர் தமது முயற்சியை நிறுத்தி வைத்திருக்கிறார். இவ்வாறு, சென்ற ஆண்டில் இந்திய தேசீய இயக்கம் பெரிதும் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. உலகிலுள்ள மற்ற நாடுகளில் நடந்தது போலவே ஒரு புறத்தில் பலாத்காரக் கிளர்ச்சியும், மற்ெருரு புறத்தில் சமாதானக் கிளர்ச்சியும் நடந்து வருகின்றன. ஜன சமூகத்தில் வீரியம் மிகுந்த பகுதியார் மிருக பலத்திலும், பயங்கரத்திலும் நம்பிக்கை கொண்டு பலாத்கார இயக்கத்தை நடத்துகின்றனர். மற்றப் பகுதியார் அறிவுடைமை, நியாய

புத்தி, மனச் சாட்சி என்னும் இவைகளே ஆதாரமாகக்கொண்டு சமாதான இயக்கத்தை நடத்துகின்றனர். இவ் விரண்டு இயக்கங்களின் பலமும் சேர்வதினுல் உண்டாகும் சக்தியானது நாளடைவில் எதிர்க்க முடியாத பெரிய சக்தியாகும் என்பதில் ஐயமில்லை. முஸ்லிம் சமூகத்தாரின் மனப் பான்மை முழுதும் மாறுத லடைந்திருப்பதுதான் பெரிதும் நம்பிக்கை தரும் விஷயமாகும். அயர்லாந்தின் சுயாட்சிக்கு "அல்ஸ்டர்" மாகாணம் குறுக்கே நின்றதுபோல் இந்தியாவின் சுயராஜ்ய கோரிக்கையை இந்திய முஸ்லிம்கள் எதிர்த்து நிற்கவேண்டுமென பிரிட்டிஷார் விரும்பி அதற்காக முயற்சி செய்தார்கள். ஏறக்குறைய அவர்கள் வெற்றி யடைந்திருந்தார்க ளென்றும் சொல்லலாம். ஆனல் சென்ற மூன்று நான்கு வருஷங்களில் நிலைமை முழுதும் மாறுதலடைந் திருக்கிறது. ஹிந்துக்களிடமிருந்து பிரிந்து நிற்க விரும்பும் படித்த முஸ்லிம் வகுப்பாரை முஸ்லிம் பொது மக்கள் எப்போதுமே ஆதரித்தது கிடையாது. ஆனல் இப்போது படித்த முஸ்லிம்களுங் கூடப் பிரிவினைக் கொள்கையினுல் தம் சமூகத்துக்கு நிலையான நலன் விளையாதென்பதை உணரத் தொடங்கி யிருக்கிறுர்கள். ஹிந்துக்களைப் போலவே அவர்களும் தங்கள் அன்புக்கும், சிந்தனைக்கும் முதன்மையாக உரியது தாய் நாடே என்றும், மதத்தில் தாங்கள் முஸ்லிம்களாகவும், அரசியலில் இந்தியர்களாகவும் இருப்பதில் முரண்பாடு எதுவுமில்லையென்றும் தற்போது உணர்ந்துள்ளார்கள். இவ்வாறே, முஸ்லிம்களின் வேற்றுமை உணர்ச்சி காரணமாக அவர்களிடம் விரோத பாவம் கொள்ளத் தொடங்கியிருந்த ஹிந்துக்களும் பெரிதும் மனமாறுத லடைந்திருக்கிறுர்கள். இஸ்லாம் மார்க்கத்துக்கு விரோதமில்லாமல் இந்தியாவின் பண்டைப் பெருமையில் தாங்களும் பங்கு பெறலாமென்று முஸ்லிம்கள் கருதத் தொடங்கி யுள்ளார்கள். ஹிந்துக்களோ, அன்னிய சரித்திராசிரியர்கள் கூறியுள்ள வண்ணம் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி அவ்வளவு கொடுமையானதா யிருக்கவில்லை யென்று உணரத் தலைப்பட்டிருக்கின்றனர். ஹிந்து வீரமூர்த்திகளான இராமன், கிருஷ்

ணன் இவர்களைக் குறித்தும், ஹிந்துக்களின் இதிகாசங்களான இராமாயண மகா பாரதங்களைப்பற்றியும், மற்றும் ஹிந்து விஞ்ஞான சாஸ்திரம், ஹிந்து தத்துவம் முதலியவை குறித்தும் ஹிந்துக்களைப் போலவே தாங்களும் பெருமை யடையலாமென்றும், அதனால் தங்கள் மதத்துக்கும், சமூகத்துக்கும் துரோகம் செய்வ தாகாதென்றும் முஸ்லிம்கள் தற்போது உணருகிறார்கள். அவ்வாறே ஹிந்துக்களும் ஷேர்ஷா, அக்பர், ஷாஜஹான், அல்பருனி, அபுல் பாஸல் முதலியோரைக் குறித்து முஸ்லிம்களைப் போலவே தாங்களும் பெருமை கொள்ளத் தொடங்கி யிருக்கிறார்கள். ஏன்? அவர்கள் இன்னும் ஓர் அடி முன்சென்று, அரங்கசீப் கூடத் தாங்கள் எண்ணியது போல் அல்வளவு பொல்லாதவனல்ல வென்று ஒப்புக்கொள்ளவுங் கூடும். சுருங்கக் கூறின், தற்போது ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒரு சமூகத்தின் பண்டிகைகளில் மற்ற சமூகத்தார் கலந்துகொள்ளலாமென்றும், ஒருவரின் பழமை நாகரிகத்தைக் குறித்து மற்றவர் பெருமை கொள்ளலாமென்றும், இதனால் தத்தம் சமயத்துக்கோ, சமூகத்துக்கோ துரோகம் செய்வதாகா தென்றும் கண்டுகொண்டிருக்கின்றனர்.

## 8

**நா**ன் மேற்கூறியுள்ள விஷயங்கள் என்னுடைய மனோ கற்பனைகள் அல்லவென்பதும், முழுதும் உண்மையையே ஆதாரமாகக் கொண்டவை என்பதும் 1915-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பம்பாயில் கூடிய அகில இந்திய முஸ்லிம் லீக்கின் அக்கிராசனர் உபந்நியாசத்தினின்று நன்கு விளங்கும். அவ் வுபந்நியாசத்தினின்று சிற்சில பகுதிகளை இங்கெடுத்துக் காட்டுகிறேன். முதலாவதாக, முஸ்லிம் லீக் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனமாகுமா என்பது குறித்து ஜனுப் மஷ்ருல் ஹக் கூவறுதாவது:—" இவ் வருஷம் முஸ்லிம் லீக் கூட்டத்தின் அக்கிராசனாக என்னைத் தேர்ந்தெடுத்துக் கௌரவித்ததன் பொருட்டு உங்களுக்கு மனப் பூர்வமாக வந்த

னும் அளிக்கிறேன். ஏழு கோடி இந்திய முஸ்லிம் பிரஜைகளின் பிரதிநிதிகளாக, நமது முன்னேற்றம் சம்பந்தமாகவும், தேசப் பொதுக்காரியங்களைக் குறித்தும் கலந்து ஆலோசனை செய்ய இங்கே கூடியிருக்கிறோம். இத்தகைய மகா சபைக்குத் தலைமை வகிக்கும் பதவி பெருமை கொள்வதற்குரிய ஒரு பாக்கியமே யாகும்.''

கால நிலை குறித்து அவர் மேலே கூறுவதாவது:—''நமது எண்ணங்களையும், உறுதிகளையும் உள்ளது உள்ளபடி வெளியிடுவதற்கு இக் காலநிலை ஏற்றதாயில்லை. சமாதான காலத்தில் நமது சமூகத்தின் முன்பும், அரசாங்கத்தின் முன்பும் தாராளமாக வெளியிடக்கூடிய அபிப்பிராயங்களை யுத்த காலத்தில் எடுத்துக் கூறுவதால் தீங்கு நேரிடக் கூடும். தேசங்களுக்குள்ளே தற்போது நடந்துவரும் பயங்கர யுத்தமானது பேச்சில் மிகவும் நிதானமாயிருக்கவேண்டிய பொறுப்பை நமக்கு அளித்திருக்கிறது. நாம் கூறும் மொழி எதுவும் அரசாங்கத்துக்குச் சங்கடம் அளிப்பதாகவோ, அரசாங்கத்தைப் பலவீனப் படுத்துவதாகவோ இருத்தல் கூடாது. ஜனங்களிடையே நமது பேச்சு விரும்பத்தகாத கிளர்ச்சியை உண்டுபண்ணக்கூடாது; ஏகாதிபத்தியத்தின் நன்மையில் நாம் அசட்டை காட்டுகிறோமென்றாவது, அதற்கு எவ்வழியிலேனும் விரோதமா யிருக்கிறோமென்றாவது வெளிநாட்டாரிடையே அபிப்பிராயம் ஏற்படச் சிறிதும் இடங்கொடுத்தலாகாது.''

இஸ்லாம் மதம் இந்தியாவில் எப்படி நிலைபெற்றது, எப்படி அது பரவிற்று, இந்தியாவில் முஸ்லிம்களின் தற்போதைய நிலை என்ன என்னும் விஷயங்களைக் குறித்து அவர் கூறுவதாவது:—

''முதன் முதலில் முஸ்லிம்கள் இந்தியாவில் அடிவைத்தது நாம் கூடியிருக்கும் இம் மேற்குக் கடற்கரை யோரத்திலேயே யாகும். கி. பி. 636-ம் ஆண்டில் மூன்றாவது கலீபா ஒரு கப்பல் படையை அனுப்பிவைத்தார். வெற்றி வீரனாகிய வில்லியம் (William the Conqueror) இங்கிலாந்துக்குப் படையெ

டுத்து வந்து ஹேஸ்டிங்ஸ் சண்டையில் ஸாக்ஸானியரை முறி யடித்ததற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னுல் இப்படையெடுப்பு நிகழ்ந்தது. அதற்குப் பின்னர் நிகழ்ந்த எவ்வளவோ வெற்றி தோல்விகளைக் குறித்து இங்கே விரித்துரைக்க வேண்டியதில்லை. முடிவில் முஸ்லிம் சாம்ராஜ்யம் இந்தியாவில் பலமாக ஸ்தா பிக்கப் பட்டது. இவ்வாறு படையெடுத்து வந்தவர்கள் இந் தியாவையே தங்கள் தாயகமாகக் கொண்டார்கள். இந் நாட்டு ஜனங்களிடையே வாழ்ந்து, அவர்களுடன் தாராளமாகக் கலந்து பழகி, பாரத நாட்டின் உண்மைப் பிரஜைகள் ஆனுர் கள். இந்தியாவைத் தவிர அவர்களுக்கு வேறு தாய்நாடு கிடை யாது. அவ்வப்போது அரேபியா, பாரஸீகம் முதலிய முஸ்லிம் நாடுகளிலிருந்து புதியவர்கள் வந்து அவர்களுக்கு வலிமை தந்து வந்தாலும், அவர்களுடைய தொகை பெருகியதற்கு முக்கிய காரணம் இந் நாட்டு ஜனங்கள் ஏராளமாக அவர்ளுடன் சேர்ந் ததே யென்பதில் சந்தேகமில்லை. தற்போது இந்தியாவில் ஏழு கோடி முஸ்லிம்கள் இருக்கிறுர்கள். ஆனுல் அவர்களில் எண் பது லட்சம் பேர்தான் தாங்கள் வெளி நாட்டாரின் சந்ததிகள் என்று சொல்லிக்கொள்கிறுர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. மற்றக் கோடிக் கணக்கான முஸ்லிம்கள் இந்திய மூதாதை களின் சந்ததிகள் அல்லராயின் வேறெங்கிருந்து குதித்திருக்கக் கூடும்? முஸ்லிம்கள் இந்தியாவின் பண்டை நாகரிகத்தைத் தங்கள் இலக்கியங்களாலும், கலைகளாலும் இன்னும் சிறக்கச் செய்தார்கள். இமயமலையி லிருந்து கன்னியா குமரி வரையில் ஆங்காங்கு இரத்தினங்கள் பதித்ததுபோல் காணப்படும் அற் புதமான சிற்பக் கட்டிடங்கள் முஸ்லிம் ஆட்சியின் மகோந் நதமான காலத்தை நமக்கு நினைவூட்டுகின்றன. இவ்வாறு, முஸ்லிம் ஆட்சியின் பயனுக, உலக சரித்திரத்திலேயே சிறந்து விளங்கிய இரு பழம் பெரும் நாகரிகங்கள் கலந்து ஒரு புதிய நாகரிகம் தோன்றலாயிற்று. இந்திய மக்கள் அனைவரும் ஒரு மித்து நிகழ்த்திய அரிய முயற்சிகளின் பயனுக விளைந்த கனியே இப்புது நாகரிகமாகும். முஸ்லிம் ஆட்சியின் கீழ் உத்தியோகம் பெறும் விஷயத்தில் வகுப்பு, சமயம், நிறம் என்னும் வேற்று

மைகள் அறவே இன்றி எல்லாரும் சமத்துவம் வாய்ந்தவர்களா யிருந்தனர். தகுதியும், திறமையுமே உத்தியோகத்துக்கு நிபந் தனைகளா யிருந்தன. மற்றபடி எவருக்கும் எந்த உத்தியோக மும் பெறுதற்கு உரிமை உண்டு. ஆகவே முஸ்லிம் ஆட்சியில் ஹிந்துக்கள் முதன் மந்திரியாகவும், சேனுதிபதியாகவும், பொக் கிஷ மந்திரியாகவும், மாகாண கவர்னராகவும் இருந்திருப்பதைக் காண்கிறோம். இந்தியாவின் பழங்கதைகளிலிருந்தும், பிற ஆராய்ச்சிகளிலிருந்தும் வெளியாகும் ஜனங்களின் பழக்கவழக் கங்களைக் கவனித்தால் இரு சமூகங்களும் ஒன்றோடொன்று எவ்வளவுதூரம் கலந்து பழகியிருக்கின்றன என்பது நன்கு புல னுகும். முஸ்லிம்கள் வெளிநாடுகளுடன் வைத்துக்கொண் டிருந்த ஒரே தொடர்பு சமயச்சார்பான பாரமார்த்திகத் தொடர் பேயாகும். இத் தொடர்பு அவர்கள் வைத்துக்கொள்ளா திருக்க முடியாது என்று சொல்லவேண்டியதில்லை. இது காறும் நாம் செய்த சரித்திர ஆராய்ச்சியின் சாராம்சத்தைப் பொருள்பொதிந்த இரண்டே வார்த்தைகளில் சுருங்கக்கூறி விளங்கவைத்தல் கூடும். "இந்திய முஸ்லிம்கள்" என்பதே அவ் வார்த்தைகளாகும். நாம் இந்திய முஸ்லிம்கள். இந்தி யாவில் நமது வாழ்க்கையின் மூலாதார தத்துவங்களை இவ்விரு வார்த்தைகள் நன்கு விளக்குகின்றன. நமது தேசம், நமது சமயம் என்னும் இரு பொருள்களும் அவற்றில் பொதிந்திருக் கின்றன. இவற்றினின்று எழும் நமது கடமைகளையும், பொருப்புகளையும் மறந்துவிடாதிருக்கும் வரையில் நாம் தவறு எதுவும் செய்ய முடியாது.

"இந்திய முஸ்லிம்கள் முதலில் இந்தியர்களே!

"முஸ்லிம்களல்லாத நமது சகோதரர்களுக்கு நாம் செலுத் தவேண்டிய கடமையைப்பற்றி என் அபிப்பிராயத்தை நான் எப்போதும் மூடிவைத்ததில்லை. பலமுறைகளில் நான் கூறிய வற்றையே இங்கே திருப்பிச் சொல்கிறேன். இந்திய அரசியலை குறுகிய வகுப்பு நோக்கங்கொண்டு பாராதவர்களில் நான் ஒரு வன். இந்தியாவின் நன்மையைக் குறித்தோ, இந்தியர்களுக்கு

நீதி செய்யப்படவேண்டியதைக் குறித்தோ ஒரு பிரச்னை எழும்போது "நான் இந்தியன்" என்ற நிலையிலிருந்தே அதைக் கவனிக்கிறேன். அத்தகைய சந்தர்ப்பத்தில் நான் அறைகுறையாகவன்றி முழுமையும் இந்தியனேயாவேன்; ஒரு வகுப்பின் நலத்தையோ, ஒரு மனிதனின் நலத்தையோ பெரிதாகக் கருத மாட்டேன். எந்த மனிதன், அல்லது சமூகத்தின் உரிமைக்கும், நன்மைக்கும் ஊறு செய்யாமல் பாரதநாட்டின் முன்னேற்றத்தை யார் குறிக்கொண்டுளாரோ அவரையே ஆதரித்து நிற்பேன்.

"பெரிய அதிகாரிகள் உயரிய கொள்கைகளேயும், முறைகளேயும் வகுக்கலாம். ஆனால் அவற்றினல் விளேயும் பயன் அவற்றை நடத்தி வைப்பவர்களேயே பொறுத்ததாகும். இவ்வாறு, நல்ல உத்தேசங்கள் வெறும் உத்தேசங்களாகவே நின்றுவிடுவதும், சிலசமயம் தீமைபயக்கும் காரியங்களாகிவிடுவதும் இந்தியாவில் அடிக்கடி நிகழ்ந்துவருகின்றன. தேசத்தின் அரசாட்சியில் இந்திய ஜனங்கள் உண்மைப் பங்காளிகளாயிருந்தால், இந்தியர்களின் அபிப்பிராயத்தை யனுசரித்துக் காரியங்கள் நிறைவேறிவரும்; இப்போது தவறு என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் பல காரியங்கள் நிகழாமலே இருந்திருக்கும்; தேசமும் முன்னேறி யிருக்கும்; ஆளும் வகுப்பார் எவ்வளவோ கண்டனங்களுக்கு, சிலசமயம் அநாவசியமான கண்டனங்களுக்கு, ஆளாகாமல் இருந்திருக்கலாம். இந்தியாவில் தேசிய அரசாங்கம் ஏற்பட்டு இந்தியர்களின் நன்மைக்காகவே ஆட்சிபுரியப்படும் காலம் வரும்வரையில் நாம் எவ்வாறு திருப்தியடைய முடியுமென்று எனக்குத் தெரியவில்லே. பாரதநாடு "சூரியனின்கீழ் ஓர் இடம்" வேண்டுமென்று எத்தகைய துராக்கிரஹக் கருத்துங்கொண்டு கேட்கவில்லே. ஆனல் தன் சொந்தக் குழந்தைகளுக்கு இந்திய சூரியனின் வெளிச்சம் வேண்டுமென்றே கேட்கிறது.

"கனவான்களே! பொதுப்படையாகப் பேசுவதைச் சற்றே நிறுத்தி விஷயங்களுக்கு வருவோம். சென்றகாலத்தில் இந்

திய ஆட்சிமுறையானது நமக்குப் பிரதிகூலமாக யிருந்திருப்ப தோடன்றி, பிரிட்டிஷ் ஆட்சியையும் எவ்வாறு பலவீனப் படுத்தி யிருக்கிறதென்பதைச் சற்று கவனிப்போம். சாம்ராஜ்ய வாழ்வின் நிர்மாணத்தில் நாம் பெற்றுள்ள இடம் மிகச் சொற்ப மானதாகும். இந்தியாவின் ஆட்சிமுறையை வகுப்பதில் நமக் குப் பங்கு சிறிதும் இல்லையென்று முன்னமே குறிப்பிட்டிருக் கிறேன். தேசத்தின் பற்பல ஊழிய வர்க்கங்களிலேனும் நமக்கு ஏதேனும் பங்குண்டா? நமது சொந்த நாட்டிற்கும், ஏகாதிபத் தியத்திற்கும் நமது ஆற்றலுக்கியந்த முறையில் தொண்டு செய்ய நாம் அநுமதிக்கப்படுகிறோமா? எல்லா தேசங்களிலும் இராணுவம், கடற்படை, இராஜதந்திரம் என்னும் இந்த இலா காக்களின் ஊழியங்களே முதன்மையான ஊழியங்களாகக் கருதப்படுகின்றன.

“முதலில் இராணுவத்தை எடுத்துக் கொள்வோம். இந்தியாவில் தலைமுறை தலைமுறையாக யுத்தப் பயிற்சி யுள்ள சாதியார் லட்சக் கணக்கில் வசிக்கிறார்க ளாயினும் எந்த இந்தியனும் இராணுவத்தில் பெரிய உத்தியோகம் எதுவும் வகிக்கமுடியாது. ‘சுபேதார் மேஜர்’ அல்லது ‘ரிஸல் தார் மேஜரை’ விடப் பெரிய பதவியை இந்தியர் எதிர்பார்ப் பதற்கில்லை. சுதந்திரமாகக் காரியம் செய்தற்குரிய எந்தப் பதவியும் நமக்கு மறுக்கப்படுகின்றது. சைன்யமோ குறிப் பிட்ட எண்ணுக்கு மேற் போதல் கூடாதென்னும் நிபந்தனைக் குட்பட்டது. தொண்டர்கள் முன்வந்தால் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. பொது ஜனங்களோ ஆயுதம் எதுவும் வைத்துக்கொள்ளக் கூடாதென்னும் கடுமையான சட்டத்திற் குட்பட்டிருக்கின்றனர். நிறத்தையும், மதத்தையும் ஆதார மாகக்கொண்ட பாரபட்சமான வேற்றுமைகளை ஆயுதச் சட் டம் நிலைநாட்டுகின்றது. இவ் வேற்றுமைகள் இந்நாட்டு ஜனங்களுக்கு மிகுதியும் அவமானம் விளைப்பதாயிருக்கின்றன. நமது ஜனங்கள் தினசரி வாழ்வுக்குரிய தொழில்களில் ஈடுபட் டிருக்கும்போது கொள்ளைக்காரர்களோ, வேறு கொடியவர் களோ, அல்லது காட்டு மிருகங்களோ அவர்களைத் தாக்க

லாம்.. அவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இயலாது. சில நியாயாதிகாரிகள் குண்டாந்தடிகளைக்கூட 'அபாயகரமான ஆயுதங்கள்' என்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்திய சைன்யத்தின சாதாரண 'நாயிக்' மார்கள் போர்க்களத்தில் சிறந்த தீரம் காட்டி வருவதாகப் பத்திரிகைகளிலும், அரசாங்க அறிக்கைகளிலும் படிக்கிறோம். ஆங்கில உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் கொல்லப்பட்டோ, காயமடைந்தோ வீழ்ந்த பின்னர் அவர்கள் மகத்தான தீரத்துடனும், திறமையுடனும் பட்டாளங்களை நடத்தி யிருக்கிறார்கள். இவ்வாறு நம்மவர்கள் போர்க் களத்தில் வீரச் செயல்கள் புரிந்து தங்கள் ஆற்றலைக் காட்டக் கூடுமானால் சமாதான காலத்தில் அவர்களை ஏன் நம்பக்கூடாதென்று இந்தியர்கள் கேட்பது இயற்கையேயன்றோ? இந்தியர்களுக்குத் தக்க பயிற்சியளித்து ஊழியம் புரிய அநுமதி மட்டும் அளித்திருந்தால், இங்கிலாந்துக்குத் தேவை ஏற்பட்டுள்ள இக்காலத்தில் ஒரு வார்த்தை சொன்னதும் லட்சக் கணக்கில் அவர்கள் முன்வரமாட்டார்களா? இந்தியாவின் ஜனத்திரளில் கிரேட் பிரிட்டன் பெற்றுள்ள ஆள் பலத்தைப் போல் வேறெந்த நாடும் பெற்றிருக்கவில்லையென்பது நிச்சயம். ஆனால் தற்போது இந்தியாவின் ஆண்மையை யொடுக்கிக் காலை ஒடித்துப் போட்டிருக்கிறபடியால் அது தனக்காதல், கிரேட் பிரிட்டனுக்காதல் உதவி எதுவும் செய்யமுடியாத நிலைமையிலிருக்கின்றது. இந்தியாவுக்கு ஒரு காலத்தில் அபாயம் நேர்ந்தால், இந்தியர்கள் தங்கள் சொந்த வீடு வாசல்களைப் பாதுகாக்கவும், தங்கள் மனைவி மக்களின் உயிரையும், மானத்தையும் காப்பாற்றவும்கூட முடியாதவர்களாய், ருஷியாவையோ ஜப்பானையோ உதவிக்கு எதிர்நோக்க வேண்டியவர்களாயிருப்பார்கள். இதைவிட நமக்கு அவமானந் தரும் விஷயம் வேறுண்டா? அந்த எண்ணமே எவ்வளவு மனவேதனை தருவதாயிருக்கின்றது? அரசாங்கத்தின் நிலைபேற்றிற்கு முதன்மையான தேவைகள் அமைதியும், ஒழுங்குமாகும். இவையில்லாவிடில் நாட்டில் குழப்பமே குடிகொண்டிருக்கும். ஆனால் அமைதியும் ஒரு வரம்பின்றி நெடுங்காலம் நீடித்திருக்குமாயின் அதுவே

தேச மக்கள் தளர்ச்சியுற்று க்ஷீணிப்பதற்கு எதுவாகின்றது. மக்கள் ஜீவசக்தியுடன் வாழவேண்டுமானால் அவர்களிடம் உயரிய குணாதிசயங்கள் சில இருத்தல்வேண்டும். எவ்வளவு பலமான எதிர்காற்றுக்கும் வளைந்து கொடாது நிமிர்ந்து நிற்கும் தைரியம், எல்லாவகையான உழைப்புகளுக்கும் கஷ்டங்களுக்களுக்கும் ஈடுகொடுக்கும் மனோ வலிமை, எவ்வளவு அசாத்தியமான வேலையென்று காணப்பட்டாலும் பின்வாங்காது முயலும் உள்ள உறுதி, தேசத் தொண்டிலும் சாம்ராஜ்ய சேவையிலும் மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும் ஈடுபடும் கட்டுப்பாட்டுணர்ச்சி ஆகிய இந்த நறுங்குணங்கள் பூரண தேசீய வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகும். ஜனங்கள் சுதந்திரத்துடன் தங்கள் ஆற்றல்கலையெல்லாம் பயன் படுத்தக்கூடியவர்களாயிருந்தால்தான் இவ்வுயரிய சக்திகளைப் பெறமுடியும். யுத்தப் பயிற்சியானது இத்தகைய உயர் குணங்களை வளர்க்கும் சாதனங்களில் ஒன்று எனச் சொல்லலாம். எனவே, சமூகத்தில் எந்தப் பகுதியாருக்கும் அதையளிக்க மறுப்பது அவர்களை உயிரற்ற இயந்திரங்களாகச் செய்வதேயாகும்.

"கடற்படையில் நாம் லஸ்கர் பதவிக்குமேல் உயருவதற்கு இடமில்லை. ஆனால் இந்தத் தாழ்ந்த பதவிகள்கூட நம்மவர்களுக்குக் கிடைக்காமலிருக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன. இந்தியாவைச் சுற்றியுள்ள கடல்களில் கப்பல் போக்குவரவு ஏராளம். ஆனால் கப்பல் ஓட்டுந்தொழில் முழுதும் அன்னிய நாட்டார் கையில் இருக்கின்றது. இத் துறையில் இந்தியர்களுக்கு அவர்களுடைய பிறப்புரிமையை மறுத்தலானது ஏகாதிபத்தியத்துக்குச் சிறந்த வலிமை தரக்கூடிய சாதனங்களை வீண் செய்வதேயாகும். இந்தியாவுக்கென்று சில யுத்தக் கப்பல்களைச் செய்து அவற்றை இந்தியர்களே நடத்தும்படி ஏன் ஏற்பாடுசெய்யக்கூடாது? இந்தியர்கள் கடற்படைக்குத் தகுதியற்றவர்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்குப் பயிற்சி யளித்துச் சோதித்துப்பாராமல் இவ்வாறு கூறுவது நியாயமாகாது; தர்மமுமன்று. முதலில் சோதனை செய்து பாருங்

கள். பின்னர் அவர்கள் தகுதியற்றவர்களென்ருல் அவர்களைத் தள்ளிவிட உங்களுக்கு உரிமையுண்டு. கடற் படையில் புகழ் பெறும் ஆற்றல் இந்தியர்களுக்குண்டென்பதைப் பண்டைய இந்திய சரித்திரம் நிரூபிக்கின்றது. அவ்வாற்றல் பயன்படுத்துவதற்குரிய சந்தர்ப்பமின்மையால் தூங்கிக்கொண்டிருக்கிறதேயல்லாமல் வேறில்லை.

"இனி இராஜ தந்திர இலாகாவைச் சிறிதுப்பற்றி கவனிப்போம். இவ்வூழியத்திலிருந்து நம்மை அடியோடு விலக்கியிருக்கிருர்கள். இத்துறையில் நமது அறிவாற்றல்களை ஏன் அரசாங்கத்தார் பயன்படுத்திக் கொள்ளக்கூடாதென்று எனக்குத் தெரியவில்லை. இந்தியாவில் 'பொலிடிகல் ரெஸிடெண்டு' பதவிகளும், 'ஏஜண்டு' பதவிகளும் எவ்வளவோ இருக்கின்றன. இவற்றில் சிலவற்றை ஏன் இந்தியர்களுக்கு அளித்தல் கூடாது?

"இந்தியாவில் சிவில் ஊழியமே பொது ஊழியங்களுள் தலை சிறந்ததாகக் கருதப்படுகிறது. இங்கேயும் விதிகளும், ஒழுங்கு முறைகளும் குறுக்கிட்டு நம்மவர்கள் அவ் வுத்தியோகங்களைப் பெறுதல் கஷ்ட சாத்தியமாகச் செய்துவிடுகின்றன. இந்தியன் ஒருவன் சிவில் இலாகா உத்தியோகம் பெறவேண்டுமாஞல் ஒரே ஒரு வழிதான் உண்டு. தன் நாட்டிலிருந்து 7000 மைல் தூரத்திலுள்ள லண்டன் நகரில் நடக்கும் பரீட்சைக்கு அவன் போகவேண்டும். இவ்வளவு செலவு செய்யமுடியாதவர்கள் எவ்வளவு அறிவாற்றல்களில் சிறந்தவர்களாயினும் அவ் வுத்தியோகங்களுக்கு ஆசைவைக்க முடியாது. இவ்வாறு ஆங்கிலேயருடன் போட்டியிட வசதி வாய்ந்த அதிர்ஷ்டசாலிகள் சிலரும் தங்களுக்கு முற்றும் புதியதான அன்னிய மொழியில் போட்டியிட வேண்டியவர்களா யிருக்கிருர்கள். இரு தேச இளைஞர்களுக்கும் சமத்துவமான சந்தர்ப்பம் கொடுக்கும் பொருட்டு இங்கிலாந்து, இந்தியா இரண்டிடங்களிலும் ஏன் பரீட்சைகள் நடத்தக்கூடாதென்பது எனக்கு விளங்கவேயில்லை. இவ் விஷயத்தில் நீதி செய்யப்படவேண்டு

மென்று பல ஆண்டு காலமாக நாட்டார் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இக்கோரிக்கைப்குப் பதிலாக நமக்குக்கிடைத்திருப்பதென்ன ? போட்டி முறையையும் அடியோடு ஒழிப்பதான இந்தியாவில் சர்விஸ் சட்டம் சமீபத்தில் நிறைவேறியது தான். இது தாற்காலிகச் சட்டமேயாயினும் பிற்காலத்திற்கு ஒரு பொல்லாத உதாரணமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. இதிலிருந்து என்னென்ன விளைவுகள் ஏற்படுமென்று யார் சொல்லமுடியும் ?

"சின்ன உத்தியோகத் துறைகளான போலீஸ், காடு, கல்வி முதலிய இலாகாக்களிலும் பெரிய பதவிகள் எல்லாம் ஐரோப்பியர்களுக்கென்றே ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. அப்பதவிகளுக்கு இந்நாட்டில் பிறந்த மக்கள் ஆசைவைத்தல் கூடாதென்று திட்டமாகச் சொல்லிவிட்டார்கள். இந்தச் சின்ன இலாகாக்களின் உத்தியோகங்களுக்குக் கூடவா இந்தியர் தகுதியற்றவர் என்று நாம் கேட்பது இயல்பே யன்றோ ? எனினும் நமது கண்டனங்கள், வேண்டுகோள்கள் எல்லாம் இதுவரையில் பயனளிக்கவில்லை.

"இனி, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப்பற்றிச் சிறிது கவனிப்போம். இத் துறையில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்று பார்ப்போம். இந்தியா விவசாயநாடு என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. விவசாயம் செய்து பிழைக்கும் கோடிக்கணக்கான மக்கள் கிராமங்களில் வசிக்கிறார்கள். இக் கிராமங்களிலேயே இந்தியாவின் உண்மை வாழ்வும், இந்தியாவின் வலிமையும் நிலைபெற்றுள்ளன. இந்த விவசாயிகளை அவர்களுடைய கொடிய வறுமையிலிருந்து, திக்கற்ற நிலையிலிருந்து கை தூக்கிவிட ஏதேனும் இதுவரையில் செய்யப்பட்டிருக்கிறதா ? நிபுணர்கள் புள்ளிக் கணக்குகளைக்கொண்டு இந்திர ஜாலங்கள் செய்துகாட்டலாம். ஆனல் இன்றைய தினம் குடியானவர்களின் உண்மை நிலைமை என்ன ? புள்ளி விவரங்களைக்கொண்டு எவரும் எந்தக் கட்சியையும் நிரூபித்துவிடக்கூடும். நமது கண்முன் தோன்றும்

பிரத்தியட்சப் பிரமாணமே நமக்குச் சிறந்த சாட்சிய மாகும். இந்தியா இயற்கை வளங்கள் செறிந்த தேசம்; இயற்கைச் செல்வங்களில் இவ் வையகத்திலுள்ள வேறு எந்த நாட்டுக்கும் பின் வாங்கியதன்று. பருத்தி, சணல் முதல், அரிசி, கடுகு வரையில் எல்லாப் பயிர்களும் இந் நாட்டின் மண்ணில் உற்பத்தியாகின்றன. இந் நாட்டுச் சுரங்கங்களில் தங்கம், இரும்பு முதலிய உலோகங்களும், நிலக்கரியும், வைரம் முதலிய நவரத்தினங்களும் விளைகின்றன. கடுங்குளிர் முதல் கொடும் வெயில்வரையில் எல்லாவகைச் சீதோஷ்ண நிலைகளையும் இங்கே காணலாம். இந்த நாட்டின் நதிகளிலும், வனங்களிலும் மாந்தர்க்கு உபயோகமான பிராணிகளும், பிற பொருள்களும் ஏராளமாய் உண்டு. சுருங்கக் கூறின், பிற நாடுகளை எதிர்பார்க்கும் அவசியமேயில்லாத நாடு பாரத தேசமாகும். இதைச் சிறியதொரு தனி உலகம் என்றே சொல்லலாம். அத்தகைய நாட்டில் வசிக்கும் ஜனங்களின் நிலைமை என்ன? கொடும் வறுமையினாலும், அதிக உழைப்பினாலும் மெலிந்துள்ள குடியானவர்கள் வயல்களில் பயிரிடுவதற்குப் படும்பாடு கொஞ்சமன்று. உடல் உழைப்பினால் செய்யக் கூடியவற்றுள் எதுவும் அவர்கள் பாக்கிவைப்பதில்லை. ஆனால் விஞ்ஞானமுறைகளைக் கையாள முடியாமையினாலும், அவர்கள் கையில் அகப்படாத பிற காரணங்களினாலும், உழைப்புக்கேற்ற பலன் அவர்களுக்குக் கிட்டுவதில்லை. எவ்வளவோ உழைப்பின் பேரில் பயிரிட்டுப் பச்சைப்பசேலென்று விளங்கும் கழனிகளுக்குப் பக்கத்தில் பழைய வைக்கோல் கூரைபோட்ட சிறு மட் குடிசைகளை நாம் காண்கிறோம். இந்தக் குடிசைகளில் பலகணிகள் இல்லை. தரை விரிப்பு முதலிய சௌகரிய சாதனங்கள் இல்லை. சில மண் பாண்டங்களும், இரண்டொரு கோரைப் பாய்களுமே அங்கு இருக்கும். சுகாதாரத்துக்குரிய ஏற்பாடுகள் எதுவுமின்றி மாடுகளும், மக்களும் சேர்ந்து வாழ்கிறார்கள். நமது ஜனங்களில் மிகப் பெருப்பான்மையோர் இத்தகைய துயரகரமான வாழ்க்கையே சதா காலமும் நடத்தி வருகின்றனர்.

"வியாபாரத்திலும், கைத்தொழிலிலும் நாம் இதைவிடச் சிறந்த நிலைமையிலில்லை. நமது பழைய கைத்தொழில்கள் எல்லாம் அன்னிய நாட்டுப் போட்டியினால் நாசமாயின. புதிய கைத் தொழில் முயற்சிகளுக்கோ பிற நாட்டு ஜனங்களின் நன்மையை முன்னிட்டு இடையூறுகள் செய்யப்படுகின்றன. இதற்கு உதாரணமாகப் பருத்தித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள எதிர் வரியைக் குறிப்பிடுதலே சாலும். இவ்வரியானது மான்செஸ்டர், லங்காஷயர் வாசிகளின் நன்மைக்காகவே விதிக்கப்படுகின்றது.

"இனி, சமீபத்தில் நிறைவேறிய அடக்குமுறைச் சட்டங்கள் இரண்டைக் குறித்துச் சிறிது கூறிகிறேன். இவை அச்சுச் சட்டமும், இந்தியப் பாதுகாப்புச் பட்டமுமாகும். இந்தச் சட்டங்கள் மிகக் கடுமையாக அமுல் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. நமது சமூகத்தின் தலைவர்கள் சிலர் இவற்றினால் பெரிதும் கஷ்டமும் நஷ்டமும் அடைந்துள்ளார்கள். இதனால் முஸ்லிம்களுக்குள்ளே பெருங் கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. இவ் விஷயத்தில் நமது சமூகத்தின் உணர்ச்சிகளை நான் வெளியிடாவிட்டால் இந்திய முஸ்லிம்களின் பிரதிநிதி என்ற முறையில் என்னுடைய கடமையைச் செய்யத் தவறியவனாவேன். அடக்கு முறையும், வலுக்கட்டாய முறையும் யாரால் கையாளப் படினும் தவறானவையே என்பது என் கொள்கை. அம்முறைகளை அரசாங்கத்தார் கையாண்டாலும், வெறுப்புக் கொண்ட ஜனங்களுக்குள்ளாகவே ஒருபகுதியார் கையாண்டாலும் நான் ஆட்சேபித்தே தீர்வேன்.

"அச்சுச் சட்டம் எந் நிலைமையில் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அச்சட்டம் அராஜகர்களை உத்தேசித்தே கொண்டுவரப்படுகிறதென்றும், ஜனங்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு எடுத்துச்செல்ல விரும்பும் அமைதி நாட்டமுள்ள குடிகள் மீது அது பிரயோகிக்கப்பட மாட்டாதென்றும் உறுதி கூறப்பட்டன. அதன்பேரிலேயே இந்திய

சட்டசபை அங்கத்தினர்கள் அச் சட்டத்திற்குச் சம்மதம் தந் தார்கள். ஆனால் விளைந்த பயன் என்ன? சுதந்திரத்துடன் நடந்து வந்த முஸ்லிம் பத்திரிகைகள் எல்லாம் ஒன்று அடி யோடு அழிக்கப்பட்டன; அல்லது உயிரற்ற துன்ப வாழ்க்கை நடத்திக்கொண்டு காலந்தள்ளி வருகின்றன. "காம்ரேட்" செத்துவிட்டது. 'ஹாம்டர்டு' கழுத்தைத் திருகிக் கொல் லப்பட்டது. 'முஸ்லிம் கெஜட்' நின்றுபோய் வெகு கால மாயிற்று. "அல்ஹிலால்" மாண்டது. 'ஜமீன்தார்' பத்தி ரிகையோ ஒவ்வொரு கணமும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டு சாரமில்லாமல் நடந்துவருகிறது. அச்சுச் சட்டம் இவ்வாறு உபயோகிக்கப்படுமென்று யாரேனும் கனவிலாவது கருதியதுண்டா? இத்தகைய நடவடிக்கையைக் குறித்து ஜனங்கள் ஆத்திரங் கொள்ளாதிருக்க முடியுமா? அவர்களு டைய உணர்ச்சிகளை இவ்வாறு அசட்டை செய்தல் முறை யாகுமா?"

மேலே எடுத்துக் காட்டியிருக்கும் பகுதியில் முஸ்லிம் லீக் அக்கிராசனர் வெளியிட்டுள்ள கருத்துக்களையோ, அவர் பிரயோ கித்திருக்கும் பாஷையையோவிடக் கடுமையாக நான் எதுவும் இப்புத்தகத்தில் சொல்லிவிட வில்லை யென்பதை நேயர் கள் கவனிக்கலாம். அவர் இவ்வாறு தமது உபந்நியாசத்தில் ஜனங்களின் அதிருப்தியை வெளியிட்டிருந்தபோதிலும், இடை யிடையே அரசாங்கத்தினிடம் தீவிர விசுவாசமும், அவர்கள் இந்தியாவுக்குச் செய்திருக்கும் நன்மைகளுக்காகப் பாராட்டு தலும் தெரிவித்துக்கொண்டே செல்கிறார். இவ்விரு வகைக் கூற்றுக்களின் தராதரத்தை ஆராய்ந்து மதிப்பிடும் வேலையை நேயர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

இந்தியாவில் புதிய யுகம் பிறந்துவிட்டதென்பதை பிரிட்டி ஷார் உணரவேண்டும். அவர்கள் பிரித்தாளும் முறையில் தேர்ந்தவர்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால் இந்தியர் கள் விழித்துக்கொண்டு விட்டார்கள். எனவே அவர்களுடைய

முறை சென்ற காலத்தில் பயனளித்த அளவு வருங்காலத்தில் அளித்தல் நிச்சயமில்லை.

கிரேட் பிரிட்டனின் உலகாதிபத்தியத்திற்குத் தீங்கு விளைக்கக் கூடிய எதுவும் செய்யவேண்டுமென்று இந்தியர்களுக்கு ஆசை யில்லை. அவர்கள் பலாத்காரத்தினால் பிரிட்டிஷ் ஆதிக்கத்தைக் கவிழ்க்கவோ அல்லது தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பிற தேசங்களின் உதவியை நாடவோ விரும்புகிறார்களில்லை. அதைவிடச் சமாதான முறைகளில் சுயாட்சி பெற்றுப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஒருபகுதியாக இருக்கவே விரும்புவார்கள். ஆனால் பிரிட்டிஷார் சென்ற காலத்தில் செய்தது போலவே இனியும் இந்தியர்களுடைய உரிமைகளைக் காலின் கீழ் மிதித்து, அவர்களுடைய பொருள் மூலங்களை அபகரித்து, அவர்களை அவமானப் படுத்தியும் வருவார்களானால், இந்தியர்கள் வருங்காலத்தில் என்ன செய்ய நேருமோ, யாராலும் சொல்லமுடியாது. ஒன்றுமட்டும் சந்தேகத்துக் கிடமின்றிச் சொல்லக்கூடும். தாய் நாட்டுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமை ஒன்று உண்டென்பதாக இந்தியர்கள் உணர்ந்து வருகிறார்கள். அக் கடமையை நிறைவேற்றும் பொருட்டுத் தங்கள் வாழ்க்கை இன்பத்தையும், சுக போகங்களையும், வாலிபரின் மனோரதங்களையும், மற்றும் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்யச் சித்தமாயிருக்கும் இந்தியர்கள் நாளுக்கு நாள் பெருகி வருகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

பொறுத்திருக்க வேண்டிய காலமெல்லாம் ஆகிவிட்டதென்றும், இனிமேல் பொறுத்திருக்க முடியாதென்றும் கருதும் வேறு சிலர் இருக்கின்றனர். இவர்கள் ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு உடனே விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கிவிட வேண்டுமென்னும் எண்ணமுடையவர்களாயிருக்கிறார்கள்.

## 9

இந்த நூன்முகத்தை முடிப்பதற்கு முன்னுல், இப் புத்தகம் எழுதுங்கால் எனக்குப் புத்திமதி சொல்லி ஊக்கமூட்டி வந்த காலிபோர்னியா சர்வகலாசாலை ஆசிரியர் ஏ. யூ. போப் அவர்களுக்கும், நியூயார்க்கைச் சேர்ந்த டாக்டர் ஜே. டி. சண்டர்லாண்டு அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சிலவிடங்களில் 'கூறியது கூறல்' என்னும் குற்றம் இந் நூலில் காணப்படுவதற்காக வாசகர்கள் என்னை மன்னித்தல் வேண்டும். இதுபோன்ற புத்தகத்தில் அக் குற்றத்தை அறவே நீக்குதல் இயலாத காரியம். இந்திய மக்களில் பற்பல சமூகத்தாரும், வகுப்பினரும் தேசீயத் துறையில் ஒரே வகையான கருத்துக் கொண்டவர்கள் என்று காட்டுதல் அவசியமாகிறதன்றோ?

கடைசியாக, தற்புகழ்ச்சி என்று தோன்றக் கூடிய வண்ணம் என்னைப்பற்றிச் சிற்சில குறிப்புகள் காணப்படுவதின் பொருட்டும் வாசகர்களின் மன்னிப்பை வேண்டுகிறேன். விஷயத் தொடர்ச்சிக்கு இன்றியமையாத சில சந்தர்ப்பங்களில் மட்டுமே நான் இக்குறைக்கு இடந் தந்திருக்கிறேன். ஓர் அத்தியாயத்தில், நான் என்னைப்பற்றிப் பேசுகிறேன் என்பதையே வலியுறுத்தாதிருக்கும் பொருட்டு, மூன்றும் மனிதரைப்பற்றிச் சொல்வதுபோல் படர்க்கையில் எழுதியுள்ளேன்.

சில அத்தியாயங்கள் மிகச் சுருக்கமானவை என்பதையும் அறிந்திருக்கிறேன். இப் புத்தகம் தேசீய இயக்கத்தின் சரித்திரம் என்றழைப்பதற் குரிய தன்று. அவ்வியக்கத்தின் பூரணமான சரித்திரத்தைத் தருவது என் நோக்கமுமன்று. இந்தியாவில் நேர்ந்து வரும் சம்பவங்களைக் குறித்து நாகரிக உலகத்தின் கவனத்தை ஈர்ப்பதே என் நோக்கமாகும். வெளிநாட்டு வாச

கர்கள் சில்லறை விவரங்களில் சிரத்தை கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. புத்தகம் நீண்டதாயும், விலை அதிகமுள்ளதாயும் இருப்பின் அவர்கள் படிக்கவே மாட்டார்கள். இந்த முன்னிட்டே சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் முறையை இந் நூலில் கையாண்டிருக்கிறேன்.

பெர்கலீ, காலிபோர்னியா,
அமெரிக்க ஐக்ய ராஜ்யம்,
1—3—1916.

லஜபதி ராய்.

# யுவ பாரதம்

★

முதல் அத்தியாயம்

## இந்திய தேசீய வாதிகளின் பொது நோக்கு

—★—

கிறிஸ்துவ சகாப்தம் தொடங்குவதற்கு எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் பாரத நாட்டின் சரித்திரம் ஆரம்ப மாகின்றது. அச் சரித்திரத்தின் பெரும் பகுதியைப் பற்றி நாம் இன்றளவும் எதுவும் அறியாதவர்களாகவே இருந்து வருகின்ருேம். சிறிதளவு தெரிந்திருப்பதும் சென்ற சில நூற்ருண்டுகளில் கண்டுபிடித்து ஒழுங்கு செய்யப்பட்டதேயாகும். அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட சரித்திர ஆதாரங்கள் வெகு காலமாக இருந்தே வருகின்றன. ஆனல் இதுகாறும் மேனுட்டாருக்கு அவைகளைப்பற்றி எதுவும் தெரியாமலிருந்தது.

இந்தியாவின் புராதன சரித்திரம் பூரணமாக நிர்மாணிக்கப் பட்டுவிட்டதென்று இன்னமும் சொல்வதற்கில்லை. தெரிந்திருக்கும் சொற்ப விவரமும் துண்டுந் துணுக்குமாகக் கண்டு பிடிக்கப்பட்டதே யாகும். இன்னும் கண்டுபிடித்து ஒழுங்கு செய்யவேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. ஆதலின் பண்டை இந்திய நாகரிகத்தின் குறைபாடுகளைப் பற்றி எவரும் எளிதில் பேசிவிடலாம். ஆனல் ஒன்று நிச்சயமாகக் கூறுதல் கூடும். கிறிஸ்து பிறப்பதற்கு எவ்வளவோ நூற்ருண்டுகளுக்கு முன்பு பாரத நாடு அதி ஆச்சரியமான நாகரிகமும், வியத்தற்

குரிய இலக்கியமும், ஒழுங்குபெற அமைந்த சமுதாயமுறை யும், சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியலும் பெற்றிருந்தது. அவ் வரசியலின்கீழ் குடிகள் பெற்றிருந்த சட்ட பூர்வமான உரிமைகள் அரசனாலும் புறக்கணிக்கவொண் ணாதவையாகும்.[1]

பண்டை இந்தியாவில் ஜனநாயக ஸ்தாபனங்கள் இருந்தன என்பதற்குப் பழைய இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் இருக்கின்றன.[2] மேனாட்டுப் புலவர்களின் மொழிபெயர்ப்பு கள், விளக்க வுரைகள் முதலியவற்றிலிருந்தே இவ்வுண் மையை நன்கறியலாம். பாரதநாடு முழுவதையும் ஒரு குடைக் கீழ் கொண்டுவரும் சாம்ராஜ்ய நோக்கம் ஹிந்துக்களுக் கில்லை என்றும் சொல்லமுடியாது. ஆனால் இந்த நோக்கம் எவ்வெப் போது, எவ்வளவு காலம் காரியத்தில் நிறைவேறி யிருந்தது என்று நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை.[3]

## முதல் படையெடுப்பு

இந்தியாவின் மீது முதன் முதலில் அன்னிய நாட்டுச் சைன்யங்கள் படையெடுத்து வந்ததாக நமக்குச் சரித்திரத்தி லிருந்து தெரிய வருவது, கி. மு. 326-ம் ஆண்டில் நிகழ்ந்த மகா அலெக்ஸாண்டரின் படையெடுப்பே யாகும். அலெக்ஸாண் டர் அப் படையெழுச்சியில் ஓரளவு வெற்றி பெற்றானென் பதில் சந்தேகமில்லை. ஆனால் அவன் பாரத நாட்டை ஜெயிக்க வில்லை; அதைக் கைப்பற்றி ஆளவும் இல்லை. யமுனை நதிக் கரையில் உள்ள டில்லி வரைக்கும் கூட அவன் உள்நாட்டில்

1 "இராஜா சட்டத்திற்கு மேற்பட்டவன் அல்லன்," மில் எழுதிய "பிரிட்டிஷ் இந்தியா" என்னும் நூல், முதல் வால்யூம், 203-ம் பக் கத்தில் வில்ஸன் எழுதியுள்ள குறிப்பைப் பார்க்க.

2 ரைஸ் டேவிட்ஸ் என்பார் எழுதிய "பௌத்த இந்தியா" என்னும் நூல் பார்க்க.

3 மகாபாரதத்தில் யுதிஷ்டிரரின் "இராஜசூய" யாகத்தைப் பற்றி விவரம் படிக்க.

நுழையவில்லை. அவன் ஜெயித்த மாகாணத்தை நிர்வகிக்கும் பொருட்டுச் சில உத்தியோகஸ்தர்களை விட்டுச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அலெக்ஸாண்டருடைய மரணத்திற்குப் பின்னால் பாபிலோன் அரசனான செல்யூகஸ்ஸுக்கும், சந்திரகுப்தன் என்னும் ஹிந்து அரசனுக்கும் நிகழ்ந்த போராட்டத்தில் முன்னவனே தோல்வி யடைந்தா னென்பதும், அவர்களுக்குள் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையினால் இந்தியாவின் பூரண சுதந்திரம் நிலைநாட்டப் பட்டதென்பதும் சரித்திரத்தில் ஐயமின்றி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் உண்மைகளாகும். விந்தியாசலத்துக்கு வடக்கேயுள்ள ஹிந்துஸ்தானம் முழுவதையும் சந்திரகுப்தன் ஆட்சி புரிந்தான். கிழக்கே அஸ்ஸாம் வரையில் வங்காளமும், மேற்கே ஆப்கானிஸ்தானம் வரையில் பஞ்சாப்பும் அவன் சாம்ராஜ்யத்தில் அடங்கி இருந்தன. அதிர்ஷ்ட வசமாக, அக்காலத்து இந்தியாவின் நிலைமையைப்பற்றி சந்திரகுப்தன் சபையில் கிரேக்க தூதனாய் வந்திருந்த மெகஸ்தனீஸும், மற்றும் அந்நாளில் வசித்த கிரேக்க நூலாசிரியர்களும் எழுதி வைத்திருக்கிறார்கள். பாரபட்சமற்ற இவ்வன்னிய நாட்டார் கூறியிருப்பவை இந்தியாவின் அக்கால நிலைமைக்கு மறுக்க வொண்ணாத சான்றுகளாகு மன்றோ?

## சந்திர குப்தனும் அசோகனும்

சந்திர குப்தனுடைய அரசாங்கத்தைப் பற்றியும், அவனுடைய ஆட்சியின் கீழ் நிர்வாக முறைகளைப் பற்றியும் மெகஸ்தனீஸ் எழுதி வைத்துள்ள விவரம் இந்தியருக்குப் பெருமையளிப்பதாகும். தற்கால ஐரோப்பாவுக்குத் தெரிந்திருக்கும் அரசாங்க நிர்வாகத்துறை ஒவ்வொன்றும் சந்திரகுப்தனுடைய ஆட்சி முறையில் இடம் பெற்றிருந்தது. அவனுடைய அரசாங்கத்தில் கைத்தொழில் இலாகா ஒன்று தனியாக இருந்தது. ஜனனமரணங்களையும் கலியாணங்களையும் பதிவு செய்யும் ஓர் உத்தியோகஸ்தரும், பொது அற நிலையங்களை நிர்வகிக்க ஒரு மந்திரியும், வியாபாரத்துக்கும், விவசாயத்துக்கும் தனித்

தனி மந்திரிகளும், மற்றும் பல மந்திரிகளும் இருந்தனர். பெரிய சைன்யமும், கடற் படையும் இருந்தன. நாணய மாற்றுக்குரிய சிறந்த ஏற்பாடு நிலவிற்று. அக் காலத்திலேயே உண்டியல் முறை, வியாபாரக் கணக்கு முதலியவை இந்தியர்களுக்குத் தெரிந்திருந்தன. உண்மைக்கும், வாக்கு நாணயத்துக்கும் இந்தியர்கள் பெயர்போனவர்களா யிருந்தார்கள். அவர்களுடைய வாய்மொழி, பத்திரத்திலும் சிறந்ததாக விளங்கிற்று. சந்திர குப்தனுக்குப் பின்னல் அசோகன் சிம்மாசனம் ஏறினன். இவ் வுலகிலேயே சரித்திர காலத்தில் ஆட்சி புரிந்திருக்கும் சக்கரவர்த்திகளுக்குள்ளே மிகப் பெரியவனும், சிறந்தவனும் அசோகனே என்று கூறுதல் மிகை யாகாது. அவன் ஆட்சியின் கீழ் தேசம் முழுவதும் ஒரு குடை நிழலில் ஒன்றுபட்டது. அவன் மிருக பலத்தினல் ஆளவில்லை; அன்பினல் அரசு புரிந்தான். அவனது பேரன்பு பிராணி வர்க்கங்களையும் தழுவி நின்றது. மிருக சிகிச்சைக்காக வைத்திய சாலைகள் நிறுவிய கருணை வள்ளல் அசோகன். அவன் கிறிஸ்துவிற்கு முந்தைய காலத்தவன் என்பது நினைவிலிருக்க வேண்டும். கி. மு. 326-ம் ஆண்டிலிருந்து கி. பி. எட்டாம் நூற்ருண்டு வரையில், அதாவது ஏறக் குறைய ஓராயிரம் ஆண்டு காலம், இந்தியா அன்னிய எஜமானர்களை அறியாம லிருந்தது. அதாவது வெளி நாட்டாரால் நீடித்த காலம் அது அரசு புரியப்பட வில்லை, மத்திய ஆசியாவில் வசித்த சிற்சில சாதியார் இக்காலத்தில் இந்தியாவுக்கு வந்தார்க ளாயினும், அவர்க ளெல்லாரும் ஏற்கனவே குடியேறி அதிகாரம் செலுத்திவந்த ஆரிய மகா சமூகத்தில் கலந்து மறைந்தே போயினர்.

அடுத்தாற் போல் இந்தியாவின் மீது அன்னியர் படையெடுத்து வந்தது எட்டாம் நூற்ருண்டின் மத்தியிலாகும். இப்போது வந்த அப்துல் காசிமின் படையெடுப்புடன் இந்திய சரித்திரத்தின் ஒரு தனி சகாப்தம் ஆரம்ப மாகிறது. இப் படை எழுச்சியினல் இந்தியாவின் சரித்திரத்திலும், இந்தியர் வாழ்க்கையிலும் நிலையான மாறுதல் உண்டாயிற்று. ஆனல் முஸ்லிம்கள்

400 ஆண்டு காலம் முயன்ற பின்னரே அவர்கள் இங்கு நிலை யான இராஜ்யம் ஒன்றை ஸ்தாபிக்க முடிந்தது. கி. பி. 1206-ம் ஆண்டில் குத்புடீன் என்பவன் டில்லியில் முதலாவது முஸ்லிம் இராஜ வம்சத்தை ஸ்தாபித்தான். எட்டாம் நூற்றூண்டுக்கும், பன்னிரண்டாம் நூற்றூண்டுக்கு மிடையே சிந்து மாகாணத் திலும் பஞ்சாபிலும் சில பகுதிகள் முஸ்லிம் ஆட்சியில் இருந் தது உண்மையே. ஆனல் 1193-ம் ஆண்டில் டில்லியின் கடைசி இராஜ புத்திர மன்னனான பிரிதிவி ராஜன், மற்றோர் இராஜ புத் திரத் தலைவனின் துரோகத்தினல் தோல்வி யடைந்த பின்னரே உண்மையில் இந்தியா ஜெயிக்கப் பட்டது; அதற்கு முன்பு ஹிந்துக்கள் முறியடிக்கப் படவில்லை.

இவ்வாறு, பதின் மூன்றும் நூற்றூண்டின் ஆரம்பம் வரைக் கும் இந்தியா காரியாம்சத்தில் சுதந்திரத்துடனேயே இருந்து வந்த தென்பது நன்கு விளங்குகிறது. அன்னியராட்சி ஏற்பட வில்லை யென்ற கருத்திலேயே நான் "சுதந்திரத்துடன்" என்று குறிப்பிடுகிறேன். வடமேற்கு மாகாணங்களாகிய பஞ்சாபிலும் சிந்துவிலும் சிற்சில பகுதிகள் முஸ்லிம் ஆட்சியின் கீழ் சில காலமாக இருந்து வந்தன. ஆனல் பெரும்பாலான பிரதேசம் சுதேச மன்னர்களால் சுதேசச் சட்டங்களின் படியே நிர்வகிக் கப்பட்டு வந்தது. முன்னமே சொன்னதுபோல், அலெக்ஸாண் டருடைய படையெடுப்புக்கும் அப்துல் காசிமுடைய படை யெடுப்புக்குமிடையில் மத்திய ஆசியாவினின்று இந்தியாவின் வடமேற்குப் பிரதேசங்களில் பிரவேசித்த சாதியார் இங்கேயே குடியேறிவிட்டார்கள். குடியேறிய பின்னர் இந்நாட்டின் சம யத்தையும், சமூக வாழ்வையுமே அவர்களும் மேற்கொண்டு இந்தியர்களுடன் இந்தியர்களாய்க் கலந்துவிட்டார்கள். அதற் குப் பின்னர் அவர்களுக்கும் மற்ற இந்திய ஜனங்களுக்கும் யாதொரு வேற்றுமையும் இல்லாமற் போயிற்று.

## முஸ்லிம் ஆட்சி

இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி ஆறு நூற்றாண்டு காலம் நீடித்திருந்தது. இக்காலத்தில் அவ்வாட்சிக்கு ஏற்றத் தாழ்வுகள் எவ்வளவோ நேரிட்டு வந்தன. முதல் மூன்று நூற்றாண்டுகளில் அதாவது பதின்மூன்றும் நூற்றாண்டு முதல் பதினாறும் நூற்றாண்டு வரையில் முஸ்லிம் ஆட்சி வட இந்தியாவுடன் நின்று வந்தது. அக்பர் காலத்திற்கு முன்னால் தக்ஷிணமும், இராஜபுதனமும், மத்திய இந்தியாவும் ஏறக்குறைய சுவாதீனமனுபவித்து வந்தன. அக்பர்தான் முதன் முதலில் தேசம் முழுவதையும் தன் கொடியின் கீழ் ஒன்றுபடுத்தினான். ஆனால் அவனுங்கூட உதயபுரியின் வீர மன்னனான பிரதாப சிம்மனைப் பணியச் செய்ய முடியவில்லை. பிரதாபன் போர்க் களத்தில் தோல்வியுற்றுத் தன் தலைநகரிலிருந்து துரத்தப் பட்டான். பின்னரும் பலவகைத் தொல்லைகளுக்காளானான். எனினும் அவன் மொகலாய மன்னனுக்குத் தலை வணங்கவில்லை. அக்பர் மற்ற இராஜபுத்திரத் தலைவர்கள் அனைவரையும் - சிலரைத் தன் பராக்கிரமத்தாலும் மற்றவர்களை நட்புரிமையினாலும் - வசப்படுத்திக் கொண்டான். ஆனால் உதயபுரியின் தீர மன்னன் மட்டும் அவனுடைய பராக்கிரமத்துக்கோ, நட்புரிமைக்கோ இணங்கினானில்லை. இதன் பொருட்டு அவனுடைய நாட்டார் அவனைப் போற்றிப் பூஜித்தார்கள். அக்காலத்திலேயே ஹிந்துக்களுக்குள் தேச பக்தியும், சுதந்திரப் பற்றும் மிகுந்திருந்த தென்பதற்கு ஓர் உதாரணங் கூறுகிறேன். ஒரு நாள் அக்பர், பிரதாபனிடமிருந்து பணிந்து விடுவதாய் விண்ணப்பம் கிடைத்திருப்பதாகத் தன்னுடைய தர்பாரில் தெரிவித்தபோது, அங்கிருந்த இராஜ புத்திரர்கள் அதை நம்பவே யில்லை. அவர்களில் ஒருவனான பிரிதிவிராஜ் என்னும் கவிஞன் அச்செய்தி தனக்களித்த சொல்ல முடியாப் பெருந் துயரத்தைக் குறித்து பிரதாபனுக்கு ஒரு கடிதம் எழுதினான், பிரதாபன் பணிந்துவிட்டால் பாரத வர்ஷத்தின் கீர்த்தி என்றென்றைக்கும் அஸ்தமித்ததாகுமென்று அவன் அக் கடிதத்தில் தெரிவித்திருந்தான். பிரதாபன்

இதற்கு விடுத்த பதிலில் அச்செய்தி தவறான தென்றும், தான் ஒரு நாளும் பணியப் போவதில்லையென்றும், இறுதி வரையில் சுதந்திரக் கொடியை உயர்த்திக்கொண்டே உயிர்விடப் போவதாகவும் கூறியிருந்தான். அக்பருக்குப் பணிந்து அவனுடைய ஊழியத்திலிருந்த ஹிந்து ஒருவன் எத்தகைய உணர்ச்சி கொண்டிருந்தானென்பதை இந் நிகழ்ச்சி நன்கு விளக்குகிறதன்றோ? தான் தோல்வியுற்றாலும், பிரதாபன் ஒருவனேனும் மொகலாய ஆட்சியை எதிர்த்து நிற்கும் வரையில் ஹிந்துக்கள் முடிவாக முறியடிக்கப் பட்டதாய் அவன் ஒப்புக்கொள்ளவில்லை. அக்பருடைய விசால மனப்பான்மையின் பெருமையும் இச் சம்பவத்திலிருந்து நன்கு விளங்குகின்றது. பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த அம் முஸ்லிம் அரசன், தன்னுடைய ஊழியத்திலிருந்த பிற சமயத்தான் ஒருவனுக்கு அவனது சுதந்திரப்பற்றை இவ்வாறு பகிரங்கமாக வெளியிட யிடங் கொடுத்தது ஆச்சரியமன்றோ? மற்ற முக்கியமான இராஜபுத்திரத் தலைவர்கள் எல்லாருடனும் அக்பர் நேய உடன்படிக்கை செய்துகொள்வதில் வெற்றி பெற்றுவிட்டதை நாம் நினைவில் வைக்கவேண்டும். கர்வம்மிக்க ராதோர் வம்சத்தார் தங்கள் குலப் புதல்வி ஒருத்தியை அவனுக்கு மணம் செய்து கொடுத்துவிட்டார்கள். கச்வாஹர், பிகானீர், பூண்டி முதலிய இராஜ வம்சங்களின் தலைவர்களும் அவனுக்குப் பணிந்திருந்தனர். எனவே பிரதாபன் அக்பரை எதிர்த்தது மல்லாமல் தன் நெருங்கிய உறவினரான இராஜபுத்திரத் தலைவர்களுடனும் போராட வேண்டியிருந்தது. எனினும் அவன் தன்னந்தனியாக நின்று, இருபத்தைந்தாண்டு காலத்திற்கு மேலாக அக்பருடைய பெரிய ஏகாதிபத்தியத்தின் பலம் முழுவதையும் எதிர்த்து வந்தான். கர்னல் டாட் தாம் எழுதியுள்ள இராஜபுத்திர சரித்திரத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்:—“ அக்காலத்தில் உலகிலேயே வலிமை மிக்க ஏகாதிபத்தியமா யிருந்தது அக்பருடைய சாம்ராஜ்யமாகும். அச் சாம்ராஜ்யத்தின் சைன்யங்களோ தொகையிலும், திறமையிலும் கிரேக்கர்களின் சுதந்திரத்தைப் பறிக்கப் பாரஸீகர்கள் நடத்திச் சென்ற எந்த சைன்யத்தையும்விட உயர்ந்தவை. பிரதாபன் தன்

சிறு சமஸ்தானத்தின் சொற்பப் படைத் துணையைக்கொண்டு இவ்வளவு பெரிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்ருனெனில், அவன் அவ்வாறு செய்வதற்குத் துணிவளித்த உணர்ச்சியின் வலிமை எத்தகையதா யிருக்கவேண்டும்? அவனைவிட அனு கூலமான நிலைமைகளின் கீழ் இராஜ்ய நிர்வாகம் செய்து வருவோரே அதை மதிப்பிடற்குரியவ ராவர்.''

பிரதாபன் மரணத் தறுவாயிலிருந்தபோது தனக்குப் பின்ஞல் பட்டத்துக்கு வரவிருந்த இளவரசனிடம் ''தேசீய சுதந்திரத்தின் பகைவர்களுடன்'' இறுதிவரை போர் புரிவதாகப் பிரதிக்ஞை வாங்கிக்கொண்டான். இது பதிஞரும் நூற்ருண்டில், அதாவது முதலாவது முஸ்லிம் அரசன் டில்லி சிம்மாசனத்தில் ஏறி நானூறு ஆண்டுகளுக்குப் பின்னர் நிகழ்ந்தது. ஆனல் இதற்கு நூருண்டுகளுக்குப் பிறகு ஹிந்துக்கள் மறுபடியும் முஸ்லிம் அதிகாரத்தை எதிர்க்கக் கிளம்பினர்கள். அரங்கசீப் 1707-ம் ஆண்டில் காலமாவதற்கு முன்பே பஞ்சாப்பில் சீக்கியர்களும், மத்திய இந்தியாவில் இராஜபுத்திரர்களும், தக்காணத்தில் மகாராஷ்டிரர்களும் போர் துவங்கிவிட்டார்கள். முஸ்லிம் அதிகாரம் ஹிந்துக்களாலேயே தகர்க்கப்பட்டது; பிரிட்டிஷாரால் அன்று.

## முஸ்லிம் ஆட்சி அன்னிய ஆட்சி அன்று

எனினும் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியை அன்னிய ஆட்சி என்று சொல்வது சரியாகாது. முதன் முதலில் படையெடுத்துவந்த முஸ்லிம்கள் அன்னியர்கள் என்பதில் சந்தேகமில்லை. (நார்மானியரும், டேனியரும் முதன் முதலில் இங்கிலாந்துக்கு வந்தபோது அன்னியர்களாகவே இருந்தார்கள்.) ஆனல் அவர்கள் இந்தியாவில் குடியேறி, இந்தியாவையே தங்கள் தாய் நாடாகக்கொண்டு, இங்கேயே வீடு வாசல்கள் கட்டி, கலியாணம் செய்து, குழந்தைகள் ஈன்று வளர்த்து வந்தார்களாதலின், இந்த நாட்டின் சொந்தப் புதல்வர்களே ஆகிவிட்

டனர். டில்லியிலும், பிற விடங்களிலும் இன்றைய தினம் உள்ள மொகலாயர்களேயும், பட்டாணியர்களேயும் போலவே அந் நாளிலிருந்த அக்பரும், அரங்கசீப்பும் இந்தியர்களேயாவர். கிரேட் பிரிட்டனில் நார்மன் வில்லியம் (William the Conqueror), ஆரஞ்சு வில்லியம் (William of Orange) இவர்களுடைய சந்ததியார்கள் எப்படி அன்னியர்களாகமாட்டார்களோ, அவ்வாறே இந்தியாவிலும் ஷெர்ஷாவும், இப்ரஹிம் லோடியும் அன்னியர்களாக மாட்டார்கள். தைமூரும், நாதிர்ஷாவும், ஆமத்ஷா அப்தாலியும் இந்தியாவின் மீது படையெடுத்தபோது அவர்கள் இங்கே இந்திய முஸ்லிம்களால் ஆளப்பட்ட இராஜ்யத்தையே தாக்கினுர்கள். அவர்கள் ஹிந்துக்களுக்கு எவ்வளவு தூரம் பகைவர்களோ அவ்வளவு அம் முகம்மதிய அரசர்களுக்கும் பகைவர்களாயிருந்தனர்.

பதின்மூன்ரும் நூற்ருண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்ருண்டின் மத்திவரையில் இந்தியாவில் அரசியல் அதிகாரம் வகித்த முஸ்லிம்கள் இந்தியர்களே யாவார்கள். அவர்கள் பிறந்தது இந்தியாவில்; மணம் புரிந்தது இந்தியாவில்; அவர்கள் இறந்ததும், புதைக்கப்பட்டதும் இந்தியாவிலேயே. இந்தியாவில் அவர்கள் வசூலித்த வரிப் பணத்தில் ஒவ்வொரு காசும் இந்தியாவிலேயே செலவழிக்கப்பட்டது. அவர்களுடைய சைன்யமோ முழுதும் இந்திய சைன்யமாகும். ஹிந்துஸ்தானத்துக்கு வெளியிலிருந்து புதிய குடும்பங்கள் வந்து இந்தியாவில் குடியேறுவதற்கு அவர்கள் அநுமதித்தார்கள். ஆனுல் இந்தியாவிலேயே நிலேயாகத் தங்கி இதையே தங்கள் தாய்நாடாகக் கொள்ள விருப்பமில்லாதவர்களே அவர்கள் உத்தியோகங்களில் அமர்த்தியது மிகவும் அபூர்வமாகும். ஹிந்துக்களிடம் அவர்களுக்கு விரோத பாவம் ஏதேனும் இருந்திருப்பின், அது சமய சம்பந்தமானதே யல்லாமல் அரசியல் துறையைச் சார்ந்ததன்று. பிறப்பிலிருந்தே முஸ்லிம்களாயிருப்போரைக் காட்டிலும் புதிதாக அம் மதத்தைத் தழுவியவர்களுக்குச் சில சமயம் விசேஷ சலுகையும் காட்டப்பட்டது. அக்பர் இந்த மதவேற்

றுமையை அடியோடு தொலைத்துவிட்டான். ஆனால் இந்திய முஸ்லிம் அரசர்களுக்குள்ளே மிகுந்த மதவெறி பிடித்தவனுங் கூட, தற்போது இந்தியாவை ஆளும் பிரிட்டிஷாரைப்போல் சாதிக் கர்வமும், சுதேசிகளுடன் கலந்து பழகாத குறுகிய மனப்பான்மையும் கொண்டிருக்கவில்லை. முஸ்லிம் ஆட்சியின் கீழ் சாதிப் போராட்டம் எப்போதேனும் தலை காட்டிற்றென்றால், அது ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் எழவில்லை; முஸ்லிம்களுக்குள்ளேயே அப் போராட்டம் ஏற்பட்டது. துக்ளக்குகளுக்கும் — பட்டாணியருக்கும், மொகலாயர்களுக்கும் — லோடி வம்சத்தாருக்கும் ஏற்பட்ட போராட்டங்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

ஷெர்ஷா, அக்பர், ஜிகாங்கீர், ஷாஜஹான் முதலியோர் போன்ற மன்னர்களின் ஆட்சியில், அரசகுடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்களுக்கு அடுத்த படியாகப் பெரிய உத்தியோகப் பதவிகள் எல்லாவற்றிற்கும் ஹிந்துக்கள் உரியவர்களா யிருந்தனர். அவர்கள் மாகாண அதிபதிகளாகவும், சைன்யங்களின் தளபதிகளாகவும், ஜில்லா அதிகாரிகளாகவும் பதவி வகித்திருக்கின்றனர். சுருங்கக் கூறினல், அரசியல் துறையிலோ, சமூகத் துறையிலோ ஹிந்து முஸ்லிம்களுக்குள் எவ்வகை வேற்றுமையும் பாராட்டப்படவில்லை. அரசியலையும், பொருளாதாரத்தையும் பற்றிய வரையில் ஹிந்து அரசைப்போலவே முஸ்லிம் அரசும் சுதேச ஆட்சியேயாகும். பொது ஜனங்களை நிராயுதபாணிகளாக்க முஸ்லிம்கள் முயன்றது கிடையாது. ஆயுதங்களின் உற்பத்தியையோ, இறக்குமதியையோ அவர்கள் தடை செய்ததில்லை. அரேபியா, பாரஸீகம் அல்லது ஆப்கானிஸ்தானத்திலிருந்து அவர்கள் உத்தியோகஸ்தர்கள் கொண்டுவரவும் இல்லை. லங்காஷயர் தொழில்களைப்போல் அவர்கள் பாதுகாக்க வேண்டியிருந்த அன்னிய நாட்டுத் தொழில் எதுவுமில்லை. எனவே, இந்தியாவில் செய்த சாமான்களுக்கு எதிர்வரி விதிக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை. அவர்கள் வந்தபோது தங்கள் சொந்த பாஷை

யையும், இலக்கியத்தையும் தங்களுடன் கொண்டுவந்தது உண்மையே. சிறிது காலத்திற்கு அவர்கள் அரசாங்க காரியங்கள் எல்லாம் தங்கள் சுய பாஷையிலேயே நடத்தி யிருக்கலாம். ஆனால் விரைவிலேயே அவர்கள் புதிய இந்திய மொழி ஒன்றை ஏற்படுத்திக்கொண்டார்கள். உருது அல்லது ஹிந்துஸ்தானி என்று தற்போது வழங்கும் அப் புதிய மொழி அடிப்படையில் சுத்த இந்திய மொழியேயாகும். பாரஸீகம் அல்லது ஆப்கானிஸ்தானத்தின் தொழிலாளி வகுப்பாரின் நன்மையைக் குறித்து இந்திய முஸ்லிம் மன்னர்கள் எவ்விதத்திலும் கவலைகொண்டிருக்கவில்லை. வெளிநாட்டார் எவரேனும் அவர்களுடைய ஆதரவைப் பெற விரும்பினால் அவர்கள் முதலில் இந்தியாவுக்கு வந்து குடியேறவேண்டும். எனவே முஸ்லிம்களின் அரசாங்கம் இந்திய அரசாங்கமே யன்றி ஒருநாளும் அன்னிய அரசாங்கம் அன்று.

இந்திய இரத்தக் கலப்பே இல்லாத அன்னியர்களால் வேறொரு தேசத்தின் நன்மைக்காகவும், வேறு ஜனங்களின் நலத்திற்காகவும் இந்தியா ஆளப்பட்டதற்கு, பிரிட்டிஷார் வருவதற்கு முன்னர், சரித்திரத்தில் உதாரணமே கிடையாது* இந்தியா எப்போதும் தனித்ததொரு சாம்ராஜ்யமா யிருந்து வந்தது, வேறோர் ஏகாதிபத்தியத்தின் பகுதியாகவோ அல்லது சார்பு நாடாகவோ எப்போதும் இருந்ததில்லை. சொந்த சைன்யமும், சொந்தக் கடற்படையும், சொந்தக் கொடியும் அதற்கு எப்போதுமிருந்தன. இந்தியாவின் அரசாங்க வருவாய் முழுதும் இந்தியாவின் நன்மைக்கே செலவிடப்பட்டது. நாட்டில் கைத் தொழில்கள் செழித்தோங்கின. நாட்டிற்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் நாட்டிலேயே உற்பத்தியாயின. விசேஷ உரிமைகள் பெற்று இந்தியாவுடன் வியாபாரம் செய்ய விரும்புவோர் இந்திய அரசாங்கத்தின் அநுமதி பெறவேண்டியதா

*வடமேற்கு இந்தியாவின் ஒரு சிறு பகுதி கொஞ்ச காலத்திற்கு டேரியஸ் சக்கரவர்த்தியின் மாகாணங்களில் ஒன்றாயிருந்து, அவனுக்குக் கப்பம் செலுத்திவந்ததென்று சொல்லப்படுகிறது. ஆனால் அப்போதும் ஆட்சி முறை முற்றிலும் சுதேச ஆட்சிமுறையேயாகும்.

யிருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியார் இவ்வாறு அநுமதி பெற்றே வியாபாரம் செய்தார்கள். அரேபியாவிலோ, பாரஸீகத்திலோ, காபூலிலோ இந்திய ஆட்சிக்குப் பொறுப்புள்ள காரியாலயம் இருக்கவில்லை. இந்திய ஜனங்கள் தங்கள் சொந்த நாட்டைக் குறித்த விஷயங்களில் வெளிநாட்டிலுள்ள அத்தகைய காரியாலயத்தின் அனுமதியை எதிர்பார்க்க வேண்டியவர்களாய் இருந்ததில்லை,

## பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியா

ஆனல் ஆங்கிலேயரின் கீழ், இந்தியாவின் நிலைமை மேற் கூறியதற்கு முற்றும் மாறுபட்டதாகும்.* இந்திய சரித்திரத்தில் முதன் முதலாக தேசம் வேறோர் ஏகாதிபத்தியத்தின் பகுதியானது பிரிட்டிஷ் ஆட்சியிலேதான். இந்தியா இன்று தன்னிலேயே தனித்த ஓர் ஏகாதிபத்தியமன்று. ஒருகாலத்தில் பிரிட்டன் ரோம ஏகாதிபத்தியத்தின் பகுதியா யிருந்ததுபோல் இன்று

* 1783-ம் ஆண்டில் காமன்ஸ சபையில் எட்மண்டு பர்க் என்பார் செய்த பிரசங்கத்தின் ஒரு பகுதி. அந்நாளில் எவ்வளவு பொருத்தமா யிருந்ததோ அவ்வளவு இன்றைக்கும் பொருத்தமா யிருக்கிறது. அப் பகுதி வருமாறு:— "ஆசியாவிலிருந்தே படையெடுத்து வந்து இந்தியாவை ஜெயித்தவர்கள் விரைவிலேயே தங்கள் குரூரம் தணியப் பெற்றனர். ஏனெனில், அவர்கள் தாங்கள் வெற்றிகொண்ட நாட்டைத் தங்கள் சொந்த நாடாகவே செய்துகொண்டார்கள். பின்னர் அவர்களுடைய வாழ்வும் தாழ்வும் அவர்கள் வசித்த நாட்டின் வாழ்வையும் தாழ்வையுமே பொறுத்தன வாயின. தந்தைமார்கள தங்கள் சந்ததிகள் அங்கே சுகமாய் வாழவேண்டுமெனப் பிரார்த்தனை செலுத்தினர், புதல்வர்கள் அங்கே தங்கள் தந்தைகள் ஆற்றிய அரும் பெரும் செயல்களின் ஞாபகச் சின்னங்களைக் கண்டு மகிழ்ந்தனர். வெற்றி கொண்ட சாதியார் முடிவாக இந்தியாவில் குடியேறிவிட்டார்கள். தாங்கள் குடியேறிய நாட்டில் சுபிக்ஷம் குடிகொள்ள வேண்டு மென்பதே சாதாரணமாக மக்களுடைய விருப்பமா யிருக்கும். வறுமையும் துன்பமும் மனிதனுடைய கண்ணுக்கினிய காட்சிகளல்ல. ஒரு பெரிய ஜன சமூகத்தின் சாபங்களுக்கு மத்தியில் தங்கள் வாழ்வைக் கழிக்க எவரே விரும்புவர்? தார்த்தாரியக் கூட்டத்தினர் பேராசை காரணமாகக் கொடுஞ் செயல்கள் புரிந்தாலும், தங்கள் வலிமையைத் துர்ப்பிரயோகம் செய்ததின் தீமையை உணர்வதற்கு அவர்களுடைய சொற்ப வாழ்விலும் போதிய அவகாசம்

இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பகுதியாயிருக்கிறது. சரித்திரத்தில் முதன் முதலாக இந்தியா ஓர் சார்பு நாடானது இப்போதுதான். நாட்டுக்கு வெளியிலிருந்து ஆளப்படுவதும் இந்தியாவின் சரித்திரத்திலேயே இப்போதுதான் முதன் முதலாக நிகழ்ந்திருக்கிறது. இந்தியர்கள் உரிமை யிழந்த சாதியராகி, வெகு தூரத்திலுள்ள வேறொரு நாட்டில் வாழும் அன்னிய சாதியரால் ஆளப்படுவதும் இதுவே முதல் முறையாகும். நாட்டில் வசியாத ஓர் அரசரால் ஆளப்படுவதும், அவர் ஐந்து வருஷத்திற்கொரு முறை தமது பிரதிநிதி ஒருவரை அனுப்புவதும், அப் பிரதிநிதி தூர தேசத்திலுள்ள மந்திரியின் அதிகாரத்துக்குள்ளடங்கி தேச காரியங்களை நிர்வகிப்பதும் இதற்கு முன் எப்போதும் நிகழ்ந்ததில்லை. வெளிநாடு ஒன்றில் செய்யப்

---

இருந்தது. பலாத்காரத்தினாலும், கொடுமையினாலும் அவர்கள் பணம் சேர்த்தாலும் அப் பணக் குவியல் நாட்டைவிட்டு வெளியே செல்லவில்லை. அவர்களே தாராளமாகச் செலவு செய்ததினாலோ அல்லது அவர்களை விட வலியவர்கள் அப் பணக் குவியலை அபகரித்து வாரி இறைத்ததினாலோ, பணம் மீண்டும் ஜனங்களிடமே போய்ச் சேர்ந்தது. கலவரங்கள் எவ்வளவோ நிகழ்ந்தனவாயினும், கொடுங்கோலர்களின் யதேச்சாதிகாரத்திற்குத் தடைகள் அதிகம் இல்லையாயினும், இயற்கை நியதி இன்னமும் தர்ம நியாயத்தை நிலைநாட்டி வந்தது. பொருள் சேர்க்கும் துறைகள் வற்றிப்போகா திருந்தபடியால் வியாபாரமும், கைத்தொழில்களும் செழித் தோங்கின. பேராசையும் லோபித் தனமும்கூட நாட்டுச் செல்வத்தைப் பாதுகாப்பதற்கே பயன் படுவனவாயின. குடியானவனும், தொழிலாளியும் மிகு வட்டி கொடுத்தார்களாயினும், மீண்டும் தாங்கள் கடன் வாங்குதற்குரிய நிதியையே அவர்கள் அதன் மூலம் பெருக்கினார்கள். பொருள் சேர்க்க அவர்கள் மிகவும் கஷ்டப் பட்டார்களாயினும், சேர்த்த பொருள் அவர்களிடம் நிச்சயமாய்த் தங்கிறறு. மொத்தத்தில் சமூகத்தின் பொதுச் செல்வம் பெருகிக்கொண்டே யிருந்தது.

"ஆனால் ஆங்கில அரசாங்கத்தின் கீழ் இந் நிலைமை முழுதும் மாறித் தலைகீழாகி விட்டது. தார்த்தாரியர் படையெழுச்சி கெடுதி விளைத்தது என்பதில் ஐயமில்லை. ஆனால் தற்போது நமது பாதுகாப்போ இந்தியாவை அழித்து வருகிறது. அது அவர்களுடைய பகைமையின் விளைவு. இதுவோ, நமது நட்பின் பலன்! நாம் இந்தியாவை ஜெயித்து இருபது ஆண்டுகள் ஆகியும், நமது ஆட்சி முதல் நாள் இருந்தது போலவே இன்றும் இருந்து வருகிறது. ஓர் ஆங்கிலேயனுடைய நரைத்த தலையையும் சுதேசிகள் இன்

படும் சட்டங்களை அநுசரித்து, மாறிமாறி வந்து போய்க்கொண்டிருக்கும் மனிதர்களால் தேச காரியங்கள் நிர்வகிக்கப்படுவதும் இப்போது தான்.* இராஜாங்கத்தின் பெரிய உத்தியோகங்கள், சைன்யங்களை நடத்தும் உரிமை, வரிப் பணத்தைச் செலவிடும் அதிகாரம், ஜில்லாக்களின் நிர்வாகம், நாணயம் அச்சிடுதல், நீதி செலுத்துதல், தீர்வை விதித்தல் முதலிய எல்லாம் அன்னியர் கையில் இருக்கின்றன. இவர்களுக்கு அரசரின் ஊழியர்கள் என்ற முறையி லன்றி நாட்டின் நலத்தில் வேறு எவ்வகைச் சிரத்தையும் கிடையாது. அவர்களுடைய உத்தியோக காலம் முடி வடைந்ததும் தேசநலத்தைக் குறித்து அவர்களது கவலையும் தீர்ந்துவிடுகிறது. இந்த ஊழியர்கள் இந்தியாவுக்கு வெளியே திரட்டப்பட்டு இந்தியாவுக்கு வெளியிலே நியமிக்கப்படுகிறார்கள். இந்த உத்தியோகங்களில் பலவற்றிற்கு இந்தியர்கள் இந்தியர்களாய்ப் பிறந்த காரணத்தினால் உரிமை யற்றவர்களா யிருக்கிறார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டு நூற்றைம்பது ஆண்டுகளாகியும் இதுவரையில் எந்த இந்தியனும் கண்டதில்லை. இளைஞர்கள் - கேவலம் சிறுவர்கள் - சுதேசிகளுடன் சமூகத்துறையில் கலந்து பழகாமலும், அவர்களிடம் அநுதாபமே இல்லாமலும் அங்கே ஆட்சி புரிந்துவருகிறார்கள். சுதேசிகளைப் பொறுத்தவரையில் அவ் வாலிபர்கள் இங்கிலாந்தில் வசிப்பதும் ஒன்றுதான்; இந்தியாவில் இருப்பதும் ஒன்றுதான். ஒரேயடியில் பெரும்பணம் சேர்த்துக்கொண்டு கூடிய விரைவில் தாய்நாடு திரும்பி சுக வாழ்க்கை நடத்துவதே அவர்களுடைய நோக்கம். அந் நோக்கத்திற்கு அவசியமான அளவுக்குமேல் அவர்கள் சுதேசிகளிடம் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்வதில்லை. அளவற்ற பொருளாசையினாலும் இளம் பிராயத்தின் உத்வேகத்தினாலும் தூண்டப்பெற்று அவர்கள் ஒருவர்பின் ஒருவராய் இந்தியா செல்கிறார்கள். அகோரமான பசியுடன் பறந்துவந்து அகப்பட்ட தனைத்தையும் உண்டு இன்றிருந்து நாளை செல்லும் பருந்துகளாகவே அவர்கள் சுதேசிகளின் கண்களுக்குத் தோன்றுகிறார்கள். ஆங்கிலேயன் இந்தியாவில் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயும் இந்தியாவுக்கு அடியோடு நஷ்டமாகி விடுகின்றது.''

* இந்திய அரசாங்க அமைப்பு கிரேட் பிரிட்டனுடைய பார்லிமெண்டில் செய்யப்படும் சட்டங்களால் நிர்ணயிக்கப்படுகிறது. அப் பார்லிமெண்டில் இந்தியாவுக்குப் பிரதிநிதித்துவம் கிடையாது.

னுக்கும் மாகாண கவர்னர் பதவி அளிக்கப்படவில்லை.* சைன்
யத்தில் உத்தியோகங்களுக்கு இந்தியர் ஆசைப்படுவதற்கில்லை.
தொண்டர்களாக அவர்கள் சேர்ந்துகொள்ளவும் முடியாது.
தங்களுடைய சொந்த நாட்டின் சிவில் சர்விஸ் ஊழியத்திற்குத்
தகுதி செய்துகொள்ள அவர்கள் ஆறாயிரம் மைல் பிரயாணம்
செய்து வேறு நாடு செல்லவேண்டும். அப்படிச் சென்று
முயன்றாலும் வெற்றிபெறுவது நிச்சயமில்லை.

இந்தியாவின் சரித்திரத்தில் இந்தியனாய்ப் பிறப்பதே அரசி
யல் துறையில் ஒரு குறைபாடாகக் கருதப்படுவது இப்போது
தான். ஆங்கிலேயன் ஒருவன் இந்தியாவின் பிரஜையாகி இந்திய
ஸ்திரீ ஒருத்தியைக் கலியாணம் செய்துகொண்டால் அவ
னுடைய குழந்தைகள் அந்தஸ்திலும் பதவியிலும் தாழ்வுறு
கின்றன. இந்திய கனவான் ஒருவர் ஆங்கில மாது ஒருத்தி
யைக் கலியாணம் செய்துகொண்டாலும், அவர்களுக்குப்
பிறக்கும் குழந்தைகள் அதனால் உயர்வு எதுவும் உறுவதில்லை.
எனவே இரு வழியிலும் இந்திய இரத்தத்தினால் தாழ்வு ஏற்படு
கிறது. முஸ்லிம் ஆட்சியில், இந்திய ஸ்திரீயைக் கலியாணம்
செய்துகொண்ட முகமதியனும், பாரஸீக மாதையோ, ஆப்கா
னியப் பெண்ணையோ மணந்த இந்தியனும் அதனால் அரசியல்
துறையில் எவ்வித உரிமையையும் இழந்தது கிடையாது.
மேலும், தற்போது இந்தியன் ஒருவன் கிறிஸ்துவ மதத்தைத்
தழுவினால் அதனால் ஹிந்து அல்லது முஸ்லிமைவிட அதிக
உரிமை எதுவும் பெறுவதில்லை. இவ்வாறு, இந்தியனுக்கேற்
பட்டிருக்கும் அரசியல் குறைபாடுகள் அவனுடைய சமயத்
தைப் பொறுத்தனவல்ல. மற்றும், இவன் இந்தியனாய்ப் பிறந்
ததும், இந்திய இரத்தம் அவன் நரம்புகளில் ஓடுவதுமே கார
ணங்களாகும். சிறிது காலத்திற்கு ஆட்சி புரிவதற்காகவே

* இதை எழுதிய பிறகு ஓர் இந்தியர் — லார்டு ஸின்ஹா — வர்னர்
பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் சொற்ப காலத்திற்குள் அவர்
ராஜீனமா செய்துவிட்டார். இந்தப் பரீட்சையை அதற்குப் பிறகு செய்து
பார்க்கவே யில்லை.

வந்து அக் காலம் முடிந்ததும் மற்றவர்களுக்கு இடங்கொடுத்துப் போய்விடும் ஒரு சிலரால் பாரத நாடு இதற்கு முன் எப்போதும் ஆளப்பட்டதில்லை. இவ்வாறு சிறிது காலத்திற்கு வந்து போகும் மனிதர்கள் சம்பாதிக்கும் பணம் முழுவதுமோ அல்லது அதில் பெரும் பகுதியோ இந்தியாவுக்கு நஷ்டமாகி விடுகிறது; அவர்கள் இந்தியாவில் ஊழியஞ் செய்யுங் காலத்தில் பற்பல துறைகளிலும் பெறும் அநுபவமும் நாட்டுக்கு நஷ்டமாகின்றது; அன்றியும், பாரத நாடு அம் மனிதர்களைத் தனது சொந்தப் புதல்வர்களென்று உரிமை பாராட்டவும், அதனால் திருப்தியும் பெருமையும் கொள்ளவும், அவர்கள் அவ்வாறே பாரத நாட்டைத் தங்கள் அன்பிற்குரிய அன்னையாகக் கருதி மகிழ்ச்சியும் பெருமையும் அடையவும் இடமில்லாமற்போகின்றது. அவர்கள் இந்தியாவின் எஜமானர்களாக வருகிறார்கள்; கடைசிவரையில் எஜமானர்களாகவே இருந்து திரும்புகிறார்கள். அவர்களுடைய புதல்வர்களும், பேரர்களுங்கூட அவ்வாறே எஜமானர்களாக வருதல்கூடும்; ஆனால் எக்காலத்தும் அவர்கள் பாரதத்தாயின் புதல்வர்களாய் வருவதற்கில்லை. உத்தியோக பதவிகள் அடையும் இந்தியர்களும் ஆங்கிலேயரின் ஊழியர்களே யாவர். பொதுவாக இந்திய உத்தியோக வர்க்கத்தில் அவர்கள் பிரிட்டிஷ் எஜமானர்களின் குற்றேவல்காரர்களாகவே இருந்துவருகிறார்கள்.

இந்தியாவில் உள்ள ஐரோப்பியர்களும், அர்மீனியர்கள், யூதர்கள் உள்ளிட்ட யூரேஷியர்களும் அநுமதி (லைஸென்ஸ்) இன்றி ஆயுதங்கள் வைத்துக்கொள்ளலாம்; ஆனால் இந்தியர்கள் வைத்துக்கொள்ளக்கூடாது என்ற சட்டம் சமீப காலம்வரையில் இருந்துவந்தது. இந்தியர்கள் தங்கள் எஜமானர்களின் விசேஷ அநுமதி யில்லாமல் ஆயுதங்கள் வைத்துக்கொள்ளக் கூடாதென்று தடுக்கப்பட்டிருந்தனர். இவ்வநுமதி மிக அபூர்வமாகவும், ஏதோ தயவு காட்டும் முறையிலும் அளிக்கப்பட்டுவந்தது. இந்தியர்கள் தங்கள் உரிமையாக அவ்வநுமதி கோருவதற்கில்லை. அன்னிய எஜமானர்கள்

கருணை காட்டிச் சட்டத்தினின்று விலக்குச் செய்தாலல்லாமல் இந்தியர்களில் மிக உயர்ந்தவர்களும், சிறந்தவர்களும், தூயவர்களுங்கூட ஆயுதம் வைத்துக்கொள்ளமுடியாது. இந்தியர் தங்கள் பெற்றோர்களும், பாட்டன் பாட்டிமார்களும், அவர்களுக்கு முன்னர் எவ்வளவோ மூதாதைகளும் பிறந்து வளர்ந்து, ஆட்சிபுரிந்து, தங்கள் இரத்தத்தினால் வளப்படுத்தி, உயிர் நீத்த தங்கள் சொந்த நாட்டின் குன்றுகளில் மழை, வெயில்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளக் குடை பிடித்துக்கொள்ளக் கூடாதென்று தடுக்கப்பட்டனர். நூற்றாண்டுகளுக்கு முன்வரையில் தங்கள் மூதாதைகள் சுதந்திரமாக வாழ்ந்த நாட்டில், இந்தியர் குடைபிடித்துக்கொள்ளும் குற்றத்திற்காகத் தங்கள் அன்னிய எஜமானர்களில் மிகக் கீழ்ப்பட்டவர்களாலும் அவமதிக்கப்படும் நிலையை எய்தினர்.* தேவர்களின் வாசஸ்தலமாக எண்ணி அவர்கள் போற்றிவரும் புண்ணிய ஹிமாசலத்தில் கூடச் சிற்சில இடங்களில் நுழையக் கூடாதென்னும் தடைக்குள்ளாயினர். "வெள்ளைத் தெய்வங்கள்" அவ்விடங்களைத் தங்கள் சுகவாசத்திற்கேற்றவையென்று கருதியதே அத் தடைக்குக் காரணமாகும்.†

இந்தியன் தன்னுடைய பராதீன வாழ்வின் சின்னத்தை இந்தியாவுக்கு வெளியே செல்லும்போதும் தன்னுடன் கொண்டுபோகின்றான். முக்கியமாக, பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளே அவன் வரக்கூடாதென்று தடுப்பதில் முதன்மையாயிருக்கின்றன. உலகமெங்கும் அவன் 'பறைய'னாகக் கருதப்படுகிறான். சொந்த நாட்டிலேயே அவனுடைய நிலைமை இதுவாயிருக்கும்போது வெளிநாடுகளில் இருப்பதற்குக் கேட்கவேண்டுமா? குடியேற்ற நாடுகளுக்கு ஒப்பந்தக் கூலியாகப்

*ஸர் ஹென்ரி காட்டன் எழுதிய "புது 'இந்தியா" (New India) என்னும் நூலில் 68, 69, 70-ம் பக்கங்கள் பார்க்க.

†இப் புத்தகம் எழுதிய பின்னர், இந் நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் இப் பதிப்பின் முன்னுரையில் கூறப்பட்டிருக்கின்றன.

109147

போவதையல்லாமல், மற்றப்படி இந்தியன் வெளிநாடுகளுக்குப் போவதையே பிரிட்டிஷ் அரசாங்கத்தார் விரும்பவில்லை. அவன் 'குஷால்' பிரயாணமாகக் கிளம்பி இங்கிலாந்துக்குப் போய் வரக்கூடும். ஆனால் இந்தியர் பெருந் தொகையாக அங்கு வருவதை அவர்கள் விரும்பவில்லை. முக்கியமாக, இந்தியர் அமெரிக்கா சென்று குடியேறுவதை அவர்கள் வெறுக்கிறார்கள். இதன் காரணம் வெள்ளிடை மலை. வெளிநாடுகளில் பிரயாணம் செய்வதால், இந்தியாவில் நிலவும் ஆட்சி முறையையும், வேறு நாடுகளின் ஆட்சி முறைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க அவனுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. சுதந்திரக் காற்று மேலே பட்டாலும் அபாயகரமான மனோரதங்கள் ஏற்படக் கூடும். இந்தியாவில் ஆங்கில துரைத்தனத்துக்கு இவற்றினால் தொல்லையே விளையுமல்லவா? மற்றும், ஆங்கிலேயரின் குணம்சங்களைப் பற்றிய வரையில், இந்தியருடைய மனம் ஒருவகைப் பிரமையில் ஆழ்ந்திருக்கிறது. வெளிநாட்டுப் பிரயாணம் இந்தப் பிரமையை நீக்கிவிடக்கூடும். வெளிநாட்டில் பிரயாணம் செய்து தாய் நாடு திரும்பும் இந்தியர் ஒவ்வொருவரும் அதிருப்திக்கு ஒரு நிலைக்களனாகின்றார். அவர்களில் சிலர் தங்கள் பிரயாணங்களின் போது ஐரோப்பாவிலுள்ள புரட்சிக்காரர்களைச் சந்தித்துப் பேசி அவர்களுடைய முறைகளைக் கற்றுக்கொண்டு வருகின்றனர். இவையெல்லாம் பிரிட்டிஷாரால் வெறுக்கப்படுவதில் வியப்பில்லை யன்றோ ?

எனவே, இந்தியர் வெளி நாட்டுப் பிரயாணம் செய்வதற்கு முட்டுக்கட்டை போடச் சமீபகாலத்தில் பிரிட்டிஷார் நடவடிக்கை தொடங்கி யிருக்கிறார்கள். கடுமையான நிபந்தனைகள் விதித்து இந்திய மாணக்கர் இங்கிலாந்துக்கு வராமல் செய்ய முயன்று வருகிறார்கள். பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளிலும், சட்ட கலாசாலைகளிலும் அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு முன்னைவிட உயர்தரக் கல்வி பயின்றிருக்க வேண்டுமென விதி செய்திருக்கிறார்கள். லண்டனில் உத்தியோக முறையில் ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டிருக்கிறது. இக்

கமிட்டியார் வெளித் தோற்றத்திற்கு இந்திய மாணாக்கர்களின் பாதுகாவலர்களாகவும், அவர்களுக்கு யோசனை சொல்வோராகவும் இருப்பினும், உண்மையில் அவர்கள் பிரிட்டிஷ் சர்வ கலாசாலைகளில் சேர முடியாவண்ணம் கூடியவரை முட்டுக்கட்டை போட்டு வருகிறார்கள். மற்றும், இக் கமிட்டியார் இந்திய மாணாக்கர்களின் நடவடிக்கைகளை மிக ஜாக்கிரதையுடன் கவனித்து வருகின்றனர்; அவர்களுடைய நடத்தையைப்பற்றி இந்தியாவிலுள்ள அதிகாரிகளுக்குத் தெரிவிக்கின்றனர்; மாணாக்கர்கள் தங்கள் மூலமாகவே பிரிட்டிஷ் கல்வி ஸ்தாபனங்களில் சேரவேண்டுமென்று வற்புறுத்துகின்றனர்.* இந்தியத் துறைமுகங்கள் எல்லாவற்றிலும் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் பிரசன்னமாயிருந்து, இந்தியா விட்டுச் செல்லும் ஒவ்வோர் இந்தியனுடைய பெயரையும், அவனைப் பற்றிய விவரங்களையும் குறித்துக்கொள்கின்றனர். அது முதல் அவன் எங்கே சென்றாலும் இடைவிடாமல் ஓர் ஒற்றனின் கண்காணிப்பில் இருந்து வருகிறான்.

உலகின் பற்பல நாடுகளிலும் பிரிட்டிஷ் தூதர் காரியாலயங்கள் இருப்பதும் இல்லாததும் இந்தியனுக்கு ஒன்றுதான். அவர்களுடைய உதவியை நாட அவன் அஞ்சுகிறான். முதலாவதாக, உதவி மறுக்கப்படுவதுடன் அவமானமடையவும் நேரிடலாமென்ற பயம். இரண்டாவதாக, அவன் அந்த நாட்டைவிட்டே விரைவில் வெளியேற வேண்டியதான நிலைமை ஏற்படுத்தப் படலாமென்னும் அச்சம். அவனுக்குச் செய்யப்படும் அநீதிகளுக்குக் கேள்விமுறை கிடையாது. அவன் அடிக்கப் படலாம்; அவமானப் படுத்தப் படலாம்; அவன் பொருள் கொள்ளையிடப் படலாம்; அவன் கொல்லவும் படலாம்; எனினும் அவனுக்காகப் பரிந்து முன்வரக் கூடிய அர

---

*இங்கிலாந்திலுள்ள இந்திய மாணாக்கர்களில் பெரும்பான்மையோர் இக் கமிட்டியைப் பற்றி இத்தகைய அபிப்பிராயமே கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இவற்றை யெல்லாம் மறுக்கிறதென்று சொல்லவேண்டியதில்லை.

சாங்கம் கிடையாது. மற்ற தேசங்கள் அவனை உள்ளே வரக் கூடாதென்று தடுத்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அதன் பொருட்டு ஆத்திர மடைவதில்லை. அது குறித்து அவர்கள் மகிழ்ச்சி யுறுகிறார்கள் என்றும் சொல்லலாம். சில இந்தியரின் விஷயத்தில், அன்னிய நாடுகளில் அவர்கள் பிரவேசிக்க முடியா வண்ணம் அந்நாடுகளின் அரசாங்கங்களிடம் தங்கள் செல்வாக்கைக் கொண்டு முயன்றதாகவும் தெரியவருகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட சுயாட்சி பெற்ற நாடுகள் இந்தியர்கள் நுழையாமல் தடுப்பதற்கென்று அநாகரிகமான கொடுஞ் சட்டங்கள் செய்து தடைச்சுவர் எழுப்பி யிருக்கின்றன.

இவ் விஷயத்தில், பிரிட்டிஷ் நாடுகளைவிடப் பிற நாடுகள் இந்தியனை நன்றாய் நடத்துகின்றன வென்று சொல்லலாம். கொஞ்ச காலத்திற்கு முன் வரையில் மேலைத்தேசம் எதற்கும் அவன் தாராளமாகப் போகும்படி இருந்தது. ஐரோப்பாவிலுள்ள எந்த நாடும் அவன் வருகையைத் தடுப்பதில்லை. சமீப காலத்தில் அமெரிக்க ஐக்ய ராஜ்யம் இந்தியனை விலக்கும் முறையைக் கையாளத் தொடங்கி யிருக்கிறது. ஆனால் நாட்டிற்குள் வந்துவிட்டால், சர்வகலாசாலைகளும், மற்ற எல்லாக் கல்வி ஸ்தாபனங்களும் அவனைத் தாராளமாய் ஏற்றுக் கொள்கின்றன. அந்தந்த ஸ்தாபனங்களுக் குரிய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்து, விதிகளுக்கும் இணங்கும் பட்சத்தில் வேறு தடை எதுவும் கிளப்புவதில்லை. இங்கிலாந்து விஷயத்தில் இவ்வளவு கூடச் சொல்லமுடியாது. இந்தியன் வருவது போவது சம்பந்தமாக இங்கிலாந்து எவ்வித நிர்ப்பந்தமும் விதிக்கவில்லை யென்பது உண்மையே. ஏனெனில் வேறு எவர் வந்து போவதுபற்றியும் அது நிர்ப்பந்தம் விதிப்பதில்லை. ஆனால் இந்தியன் ஒருவன் எவ்வளவு உயர்ந்த சமூக அந்தஸ்தும், பதவியும் உள்ளவனாயினும் அவனை மாணாக்கனாக ஏற்க மறுக்கும் பிரிட்டிஷ் கல்வி நிலையங்கள் இருக்கின்றன. அவனை ஏற்றுக் கொள்ளும் ஸ்தாபனங்கள்கூட இராணுவப் பயிற்சி யளிப்பதில் வேற்றுமை காட்டுகின்றன. தொண்டர் படையிலோ,

சாரணச் சிறுவர் படையிலோ அவனை ஏற்றுக் கொள்வதில்லை. பிரிட்டிஷ் சங்கங்கள் (Clubs) பல அவனை அங்கத்தினனாகச் சேர்த்துக்கொள்ள மறுக்கின்றன. பிரபல சங்கங்களுக்குள் நேஷனல் லிபரல் சங்கம் ஒன்றுதான் இதற்கு விலக்கா யிருந்து, தாராள நோக்குடன் இந்தியர்களை வரவேற்கின்றது. இந்தியர்கள் பலரை அங்கத்தினராகப் பெற்றுள்ள சங்கம் இது ஒன்றேயாகும்.

இவ்வாறெல்லா மிருப்பினும் இந்தியர்கள் தங்கள் தாழ்வை உணராதிருப்பார்கள் என்று பிரிட்டிஷார் நினைக்கும் பட்சத்தில், அவர்களைச் சிறிதும் கற்பனு சக்தியற்ற சாதியார் என்றே சொல்ல வேண்டும். இவ்வளவுக்கும் மூல காரணம் தங்கள் சொந்த நாட்டில் தங்களைப் பாது காக்கவும், தங்கள் நலத்தைக் கவனிக்கவும் கூடிய தேசிய அரசாங்கம் இல்லாமையே என்று இந்தியர்கள் கருதுவது இயல்பேயன்றோ? இந்தக் குறைகள் எல்லாம் இந்தியனுக்கு அவன் உரிமையிழந்த நாட்டான் என்பதையும், அவனுடைய நாடு சுதந்திரமற்ற நாடாயிருப்பதால் அதற்கு உலகில் மதிப்பில்லையென்பதையும் நினைவூட்டுகின்றன; மற்றும் அவை, இந்தியாவுக்கு வெளிநாடுகளில் தூதர் காரியாலயங்கள் இல்லை, சொந்தமான கொடியில்லை, தன் புதல்வர்களைத் தாங்கி நிற்பதற்கு அரசாங்கப் பிரதிநிதிகளில்லை யென்பவற்றை இந்தியனுக்கு ஞாபகப்படுத்தி, நாகரிகமடைந்த மனித சமூகத்தில் அவன் வெறும் பூஜ்யமே என்பதை மனதில் பதியுமாறு உணர்த்துகின்றன. இந் நிலைமையில் அவன் அமிதவாதியாவது ஆச்சரிய மாகுமா? இந்த மானங்கெட்ட ஈன வாழ்வைவிட வேறெதுவும் மேல் என்று அவன் எண்ணத் தொடங்குகிறான்.

இத்தகைய நிலைமையில் இருந்து பார்த்தவர்களைத் தவிர மற்றவர்கள் இந் நிலைமையின் அவமானத்தையும், இழிவையும் உணருதல் எளிதன்று. தாங்கள் இத்தகைய நிலைமையை அடைந்திருப்பதாய் ஆங்கிலேயர் ஒரு கணநேரம் கற்பனை செய்துகொண்டால், இந்திய தேசியவாதிகளுடைய கட்சியின்

நியாயத்தை ஒருவாறு உணரக்கூடும். ஜெர்மானியர் இங்கிலாந்தை ஜெயித்து பிரிட்டிஷார்மீது தங்கள் ஆட்சியை நிலைநாட்டிருக்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். ஜெர்மானிய முதல் மந்திரியால் தெரிந்தெடுக்கப்படும் கெயிஸரின் பிரதிநிதி ஒருவர், ஜெர்மானியரே அடங்கிய ஓர் ஆலோசனை சபையின் உதவி கொண்டு, பெரும்பாலும் ஜெர்மானியரும் சிற்சில ஆங்கிலேயரும் அடங்கிய அதிகாரவர்க்கத்தின் மூலம் பிரிட்டனை ஆண்டால், பிரிட்டிஷார் அதை விரும்புவரோ? ஜெர்மன் ஆட்சி முறையின் திறமையைக் குறித்து எவரும் குறை சொல்ல முடியாது. ஜெர்மனி தன்னுடைய பெரு வலியினால் அயர்லாந்தில் சமாதானம் நிலை நாட்டலாம்; பெண்ணுரிமை வாதிகள், சமதர்ம வாதிகள், ரோமன் கதோலிக்கர் முதலியோரால் பொது அமைதிக்குப் பங்கம் விளையாமல் பார்த்துக் கொள்ளலாம்; கீழ்த்தர உத்தியோகங்களில் ஏராளமான பிரிட்டிஷாரை நியமிக்கலாம்; இராணுவ, போலீஸ் வேலைகளுக்குத் தாராளமான சம்பளம் கொடுக்கலாம்; பட்டங்களும், பதக்கங்களும் அளிக்கலாம்; பிரிட்டிஷார் இதற்கு முன் எப்போதும் கட்டியதை விடப் பெரிய பெரிய கட்டிடங்களை எழுப்பலாம்; ஆரம்பக் கல்விக்கும், சமயச் சடங்குகளுக்கும், மற்ற வீட்டுக் காரியங்களுக்கும் தங்கள் சொந்த பாஷையை வைத்துக்கொள்ளவும் அநுமதிக்கலாம். இவற்றைக் கொண்டு ஆங்கிலேயர் திருப்தியடைந்திருப்பார்களா? ஜெர்மானிய ஆட்சியை பெறற்கரிய பேறென்று கருதுவார்களா? வியாபாரப் புள்ளிக் கணக்குகளைக் கொண்டு அவ்வாட்சியின் நன்மை தீமைகளை நிர்ணயிப்பார்களா? ஒரு நாளும் மாட்டார்கள். அப்படியானால், இந்தியாவுக்கு சுயாட்சி விரும்பும் இந்தியர்களுடைய நல்லறிவையும், தேசபக்தியையும் மட்டும் அவர்கள் ஏன் சந்தேகிக்க வேண்டும்? சொந்த அரசாங்கத்துக்கு நல்லரசாங்கம் ஒரு காலும் ஈடாகாதென்று ஸர் ஹென்ரி காம்பெல் பானர்மான் கூறவில்லையா?

உண்மை யென்ன வென்றால், சுதந்திர நாட்டில் பிறந்து வளர்ந்த சுதந்திர மனிதன் ஒருவன் அடிமை நாட்டானின் நிலை-

யில் தன்னை வைத்துக்கொண்டு அந் நிலைமையின் அவமானத்தையும், இழிவையும் உணருதல் இயலாத காரியமாகும். அந்த உணர்ச்சி தனக்காக ஏற்பட நியாயமில்லை. அந்நிலையில் தான் இருப்பதாகப் பாவித்துக் கொள்வதற்கு வேண்டிய கற்பனு சக்தியும் அவனுக்குக் கிடையாது. வெளிநாடுகளுக்குச் செல்லும் ஒவ்வோர் இந்தியனும் அவமானத்தினுல் தலை குனிந்து நடக்க வேண்டியவனு யுள்ளா னென்பது ஆங்கிலேயரின் கண்ணுக்கும் புலனுவ தில்லை.

ஆங்கில இராஜ தந்திரிகள், அரசியல் வாதிகள், பத்திரிகாசிரியர்கள் முதலியோரனைவரும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியினுல் விளைந்துள்ள பெரு நன்மைகளைப் பற்றிப் பேசுகிருர்கள். "நாங்கள் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டி யிருக்கிருேம்; ரயில் பாதைகள் போட்டிருக்கிருேம்; கால்வாய்கள் வெட்டி யிருக்கிருேம்; கல்வி யளித்திருக்கிருேம்; வியாபாரத்தையும், கைத் தொழில்களையும் வளர்த்திருக்கிருேம்; பாரபட்ச மற்ற நீதி வழங்குகிருேம்; தபால் தந்தி அமைத்திருக்கிருேம்; இந்தியாவுக்கும் வெளி உலகுக்கும் தொடர்பு ஏற்படுத்தியிருக்கிருேம்."—என்று இவ்வாறெல்லாம் அவர்கள் பறை யறைகிருர்கள். இந்தியன் ஏன் பிரிட்டிஷாரைத் தொலைத்துவிட விரும்புகின்ருன் என்பது அவர்களுக்கு விளங்குவதில்லை. இந்தியனுக்குப் பிரிட்டிஷார் செய்திருக்கும் நன்மைகளுக்கு அளவுண்டா? அவனுடைய வீட்டு வாயிலுக்கு அவர்கள் நாகரிகத்தைக் கொண்டுவந்தனர்; மூலையில் கிடந்தவனைத் தூக்கிச் சபை நடுவில் நிறுத்தினர்; தங்களுடைய மொழியையும், அமைப்புகளையும் அவனுக்களித்தனர்; அறிவென்னும் மாளிகையின் கதவுகளைத் திறந்து விட்டனர்; உள் நாட்டு வெளி நாட்டு அபாயங்களினின்றும் அவனுக்குப் பாதுகாப்பு அளித்தனர்; நாளுக்கு நாள் செல்வப் பெருக்கும், "சந்தோஷ" மிகுதியும் அடையும் பாதையில் அவனைக் கொண்டுவிட்டனர் - என்று இவ்வாறெல்லாம் கூறுகிருர்கள். இவ்வளவும் உண்மையென்றே வைத்துக்கொள்வோம். இவையெல்லாம் சேர்ந்தும் சுதந்திர

மில்லாத வாழ்வில் அடங்கி யிருக்கும் ஆண்மை யீனத்துக்கு ஈடாகுமா? பொன்முலாம் பூசி யிருப்பினும் விலங்கு விலங்கே யன்றோ? சுதந்திரத்தையும் மானத்தையும் தராசின் ஒருதட்டில் போட்டு, உலகிலுள்ள செல்வமனைத்தையும் வேறொரு தட்டில் போட்டாலும் முதல் தட்டே தாழ்ந்திருக்குமன்றோ? ஒருவன் தன் ஆன்மாவை இழந்துவிட்டு உலகாதிபத்தியத்தையே அடைந்தால்தான் என்ன பயன்? அடிமைக்கு ஆன்மா இல்லாததுபோல், உரிமை யிழந்த ஜனங்களுக்கும் ஆன்மா கிடையாது. அடிமைகளும், அன்னிய துரைத்தனத்தில் வாழ்பவர்களும் தங்கள் சொந்த உடல்களுக்குக் கூட எஜமானர்களல்லர்.

வங்காளத்தில் பெரிய வக்கீலா யிருந்தவரும், கல்கத்தா ஹை கோர்ட்டில் பல வருஷ காலம் நீதிபதியா யிருந்தவருமான காலஞ்சென்ற ஓர் இந்தியத் தலைவர், அவர் நீதிபதியாவதற்கு முன்னால் தலைமை வகித்த ஒரு மகா நாட்டில், சுதந்திரமிழந்த ஜனங்களுக்கு அரசியல் கிடையாது என்று கூறினார். அரசியல் இல்லாத ஜனங்களுக்கு ஆன்மாவும் இல்லை. ஆன்மா இல்லாத மனிதன் வெறும் விலங்கே யாவான். ஆன்மா இல்லாத ஒரு தேசத்தார் இடையன் கோலினால் அடக்கியாளப் படும் ஆட்டு மந்தையை ஒப்பவரே யாவர். தற்கால இந்தியர்கள் இந் நிலையிலேயே இருக்கின்றனர். இப்படிச் சொன்னால் இதற்குப் பதிலாக, இந்தியர்கள் நினைப்புக்கெட்டாத காலத்திலிருந்து இத்தகைய வாழ்வே நடத்தி வருகின்றனர் என்று சொல்லப்படுகிறது. இந்திய ஜனங்கள் எப்போதுமே சுதந்திரமாய் வாழ்ந்ததில்லை யென்றும், தங்களை ஆள்வோர் யார் என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டதில்லை யென்றும், அவர்களுக்கு எப்போதுமே தேசபக்தி கிடையாதென்றும், தேசபக்தியும் தேசீய உணர்ச்சியும் மேனாட்டுத் தொடர்பினால் புதிதாக வளர்ந்திருப்பவைகளே யென்றும், தேசிய வாதிகளின் நோக்கங்களில் இந்தியப் பாமர ஜனங்களுக்கு அநுதாபம் கிடையாதென்றும், இன்னும் பலவாறாகவும் சொல்கிறார்கள். ஆனால் இத்தகைய பதில் இழிவான அவதூறும், கேவலமான பொய்யுமே யல்லாது

வேறில்லை. தற்போதுள்ள நிலைமையில் திருப்தியும், மகிழ்ச்சியும் கொண்டிருப்பதாகக் காணப் படுவோர் ஒரு சிலர் இருப்பது உண்மையே. ஆனால் இவர்கள் செல்வத்தில் புரண்டு, ஆடம்பரமாக வாழ்ந்து, நீளமான வம்சாவளியையும், பெரிய கௌரவப் பட்டங்களையும் தாங்கிக்கொண்டு இருப்பவர்களாவர். இத் தகையோர் பிற நாடுகளிலும் இருக்கின்றனர். இவர்களுக்குத் தாங்கள் எவராலும் உபத்திரவிக்கப் படாமல் பாதுகாக்கப்படுவதும், சுகபோகங்களை அநுபவிக்கத் தாங்கள் பெற்றிருக்கும் சுதந்திரமும், அச்சுக போகங்களுக்குரிய வசதிகளும், புல்லுருவியைப் போல் பிறர் உழைப்பினால் கொழுத்துச் சிற்றின்பத்தில் மூழ்கிச் சோம்பேறி வாழ்வு நடத்துவதில் ஏற்படும் சந்தோஷமுமே வாழ்க்கை நோக்கங்களாகும். மற்றவை எப்படிப் போனாலும் கவலை யில்லை. மாறுதல் ஏதேனும் ஏற்பட்டால் இந்தச் சுக போகச் சோம்பேறி வாழ்வின் அடிப்படை தகர்ந்து விடக்கூடும்; அதனால் அவர்களும், அவர்களுடைய சந்ததிகளும் அழிந்துவிட நேரிடலாம். வேலை எதுவும் செய்யாமல் வீணில் உண்டு களித்து வாழும் உரிமையை அவர்கள் இப்போது அநுபவித்து வருகிறார்கள். அரசியல் நிலைமை மாறுவதினால் அவர்களுடைய இந்த உரிமைக்கு அபாயம் நேரிடலாம். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அவர்களுடைய உடைமைகளைப் பாதுகாத்துத் தருவதாக மட்டும் உறுதிமொழி தரவில்லை; அவர்களைத் தவிர்த்த மற்ற ஜனங்களுடைய அறியாமை, குருட்டு நம்பிக்கை, தார்மிக அடிமைத்தனம் இவற்றைக் கொண்டு செழித்துக் கொழுக்கும் உரிமையையும் காப்பாற்றித் தருவதாக உறுதி யளித் திருக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள நவாபுகளிலும், மகாராஜாக்களிலும் சிலர் இத்தகையோராவர். இவர்களில் பெரும்பான்மையோர் பிரிட்டிஷ் துப்பாக்கி முனையினால் காப்பாற்றப்படாவிடில் கல்லுடைத்தும், சாலை செப்பனிட்டும் வயிறு வளர்க்க நேரிட்டிருக்கும். ஆயுள் பரியந்தம் இழிவான வெறுமை வாழ்க்கை நடத்துமாறு சிறைப்படுத்தப்பட்ட அபாக்கியவதிகள் நிறைந்த

அவர்களுடைய அந்தப்புரங்களும், விஸ்கி, பிராண்டி, சாம் பேன் முதலிய உயரிய மது வகைகள் அடங்கிய அவர்களு டைய பண்ட சாலைகளும், அதி துரிதமாய் ஓடும் பந்தயக் குதிரைகள் கட்டிய அவர்களுடைய குதிரை லாயங்களும், தங்கம் வெள்ளி, பட்டு முதலியவைகளினுலும், இன்னும் பணத் தினுல் ஆகக்கூடிய எல்லா முறைகளினுலும் அலங்கரிக்கப் பட்ட அவர்களுடைய ஆஸ்தான மண்டபங்களும் உலகிலே கிடைக்கக் கூடிய விலையுயர்ந்த பட்சணங்கள் எல்லாம் நிறை ந்த உணவு மேஜைகளும், தனி ரயில் வண்டிகளிலும், தகதக வென்று ஜொலிக்கும் 'ஸலூன்'களிலும் பிரயாணம் செய்வதற் கும், தினந்தோறும் ஒருபுதிய பெண்ணும்,ஒரு புதிய சாராயமும் சம்பாதிப்பதற்கும்அவர்கள் பெற்றிருக்கும் ஆற்றலும்,—இவை யெல்லாம் தற்போதைய நிலைமை மாருமலிருப்பதையே பொறுத்திருக்கின்றன. அவர்களுக்கு இதுவே வாழ்வாகும். அவர்களுக்கு மானமென்பது இன்னதென்று தெரியாது. போராட்டம், சண்டை, கடமை, அரசியல் மாறுதல் என்ருல், தங்களுடைய சுகபோகங்கள் எல்லாவற்றிற்கும் ஆபத்து என்றே அவர்கள் பொருள் கொள்கிருர்கள். அத்தகைய உயிர் வாழ்வு அவர்களுக்கு மரணமே யாகும். ஆம்; இவர்களைப் போன்ற மனிதர்கள் அரசியல் விடுதலை, சுதந்திரம், நாட்டு உரிமை, தேசபக்தி முதலியவைகளைக் குறித்துக் கவலைப் படுவ தில்லையென்பது உண்மையாயிருக்கலாம். அவர்களுக்குத் தற் போதைய வாழ்வே பரமானந்த வாழ்வு. அரசியல்வாதிகளி னுலோ, தேசபக்தர்களாலோ தொந்திரவு செய்யப்படுதலை அவர்கள் சிறிதும் விரும்பவில்லை.

ஆனுல் இத்தகையோர் சிலரே யாவர். சுதேச மன்னர் களில் சிலர் வாய்விட்டுச் சொல்லாவிடினும், தங்கள் இதய அந் தரங்கத்தில் இந் நிலைமையின் அவமானத்தை உணர்ந்துள்ளார் கள். உதயபுரி மகாராணு தம் சுதந்திரத்தை வலியுறுத்தத் துணிவில்லாதவரா யிருக்கலாம்; அதனுல் தமது இராஜ்யத்தை இழக்கநேருமே என்று அஞ்சலாம். ஆனுல் அவருங்கூட, இந் தியச் சக்கரவர்த்தியான இங்கிலாந்து அரசரின் முடிசூட்டு விழா

வை முன்னிட்டு நடந்த ஊர்வலத்தில் லார்ட் கர்ஸானுக்குப் பின்னால் நடந்துவர மறுத்தல் கூடும். பிரிட்டிஷ் சைன்யத்துக்கும், பிரிட்டிஷ் கடற் படைக்கும் முன்னால் பரோடா கெயிக்வார் சக்தியற்றவராயிருக்கலாம். ஆனால் அவருங்கூட, சுய மரியாதை உணர்ச்சி மிகுந்த ஒரு நேரத்தில், ஆங்கில மன்னருக்குப் பணிவாக வணக்கஞ் செலுத்த மறந்துவிடல்கூடும். இத்தகைய மனிதர்களும், இவர்களினும் குறைந்த அந்தஸ்து உள்ளவர்களுங்கூட லார்ட் கர்ஸன் போன்ற ஒருவரின் அகம் பாவத்தைப் பொறுக்க முடியாதவர்களாகின்றனர். கர்ஸனைப் போன்றார் ஒருவர் இராஜப் பிரதிநிதியாயிருப்பது இவர்களுடைய சுயமரியாதை உணர்ச்சிக்கும், பொதுவாகத் தேசத்திற்கும் நன்மையேயாகும். ஏனெனில் அவர்கள் எத்தகைய இழி நிலையை அடைந்திருக்கிறார்கள் என்பதை அதைப்போல் வேறெதுவும் அவர்களுக்கு உணர்த்தமுடியாது.

கர்ஸனைப் போன்ற ஒருவர் இந்திய சுதேச மன்னர்களின் உரிமைகளைப் பறிக்கவும், அவர்களுடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவும் முயலும்போது அவர்கள் எவ்வாறு பொருமுகிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது. அப்போது அவர்களுக்கு அவமானம் பொறுக்கமுடியாமல் போகின்றது. அவர்கள் இதயத்தில் சிறிதளவு எஞ்சி நிற்கும் சுய மரியாதை உணர்ச்சி அதனால் தூண்டிவிடப்படுகிறது. ஆனால் அவர்களில் சிலர் நடத்திவந்த காமாதுரச் சோம்பேறி வாழ்வானது அவ்வுணர்ச்சி நிலைத்து நிற்கமுடியாமல் செய்துவிடுகிறது. அங்ஙனமாக, அவர்கள் தங்களைப் பிணித்திருக்கும் தளைகளைத் தகர்த்தெறிந்து தங்கள் ஆண்மையை நிலைநாட்டுவதற்குத் தொடர்ந்த முயற்சி எதுவும் செய்தல் எப்படிச் சாத்தியம்? மின்சார சக்தி உயிரற்ற உடல் வழியே பாய்ந்து செல்லுங்கால் சிறிது நேரம் அவ்வுடலில் அசைவும், செயலும் ஏற்படக்கூடும். ஆனால் அவ்வுடலில் உயிர் தளிர்க்கும்படி செய்ய அச் சக்தியினால் முடியாதன்றோ?

ஆனல் இது எப்படியிருந்தாலென்ன? சுயமரியாதையும், மான உணர்ச்சியும் உள்ள ஜனங்களுடன் ஒப்பிடுங்கால், சமூகத்தின் புல்லுருவிகளான முடிதரித்த மன்னர்களும், புரோகிதர்களும், நவாபுகள், இராஜாக்கள், மகாராஜாக்கள் முதலிய பிரபுக்களும் மிகச் சிலரே யாவர். சமுத்திரத்தில் ஒரு துளிக்கே அவர்கள் சமானமானவர்கள். ஆனல் எப்போதும் பொது ஜனங்களின் கண்முன்னிலையில் இருக்கவும், இந்தியாவிலும் சரி, இங்கிலாந்திலும் சரி, பத்திரிக்கைகளிலும் பிரசங்கமேடைகளிலும் தங்கள் புகழ் பாடப்படும்படி செய்யவும் அவர்களுக்குச் சாதனங்கள் இருக்கின்றன. அவர்களை முன்னணியில் நிறுத்துவதிலும், அவர்களுடைய இராஜ விசுவாசத்தையும், சாம்ராஜ்ய பக்தியையும் பறையடித்து வெளிப்படுத்துவதிலும், அவர்களுடைய பிரதானத்தையும், பெருமையையும் மிகைப்படுத்திப் பகிரங்கம் செய்வதிலும் பிரிட்டிஷாருக்கும் சிரத்தை உண்டு.

இந்தியச் சுதேச மன்னர்கள், ஜமீன்தார்கள் முதலியோருக்குள்ளே படித்த இந்தியர்கள் உண்மையான மதிப்புக்குரியவர் அநேகமாக யாரும் இல்லையென்று சொல்லலாம். தங்கள் சொந்தக் குடி ஜனங்களால்கூட மதிக்கப்படுபவர் அவர்களில் இல்லை. இந்தப் பொது விதிக்கு விலக்காகச் சில உத்தமர்கள் இருக்கிறார்கள். எனினும், சுதேச மன்னர்களில் பெரும்பலோர் அவர்களுடைய இராஜ்யங்களில் வெறும் பொம்மைகளாகவே இருக்கின்றனர் என்பது உண்மையாகும். பிரிட்டிஷ் ரிஸிடெண்ட் அல்லது பொலிடிகல் ஏஜண்டு உத்தியோகஸ்தரின் விருப்பத்திற்கிணங்கவே அவர்களுடைய ஆட்சி முறை அமைகின்றது. இவ் வுத்தியோகஸ்தர்கள் தங்கள் கையாட்களின் மூலமாகவோ, அல்லது தங்கள் தயவை நாடும் மனிதர்களின் மூலமாகவோ, காரியம் நடத்துகிறார்கள். சில சமஸ்தானங்களில் அநேகமாக ஒவ்வொரு காரியத்திலும் ரிஸிடெண்ட் தலையிடுகிறார். நிர்வாகத்தைப் பற்றிய சகல விஷயங்களும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ அவர் பார்வைக்கு வந்தே நடக்கின்றன. இன்னும் சில சமஸ்

தானங்களில் நிர்வாகம் இன்னின்ன வழிகளில் நடக்க வேண்டு மென்று ரிஸிடெண்ட் துரை விதித்துவிட்டுத் தூரத்திலிருந்து கவனித்து வருகிறார். தமக்கென ஒரு கொள்கையும், அக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தைரியமும், தமது கௌரவத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள்ள ஆற்றலும் உடையவர்களா யிருக்கும் சுதேச இராஜாக்களைக் கைவிரலில் எண்ணி விடலாம். அறிவாற்றல்களிற் சிறந்தவரும், சுதந்திரப் பற்று மிகுந்தவருமான சுதேச மன்னர் கூட ரிஸிடெண்ட் துரையின் விருப்பத்தையும், அவர் வாய்மொழி மூலமாக இந் திய அரசாங்கத்தின் விருப்பத்தையும் கலந்துகொண்டே காரி யம் செய்யவேண்டி யிருக்கிறது.

## சுதேச மன்னர்களின் இராஜ விசுவாசம்

சுதேச மன்னர்கள் அனைவரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தி னிடம் உண்மை விசுவாசம் கொண்டவர்கள் என்று சிலர் முடிவு செய்கிறார்கள். இது முற்றும் தவறாகும். அத்தகைய விசுவாசத்தை வெளிப்படையாகத்தெரிவிக்கும்அவர்களுடைய செயல்கள் எல்லாம் மனப்பூர்வமாகச் செய்யும் காரியங்கள் என்று நிர்மானிப்பதும் சரியன்று. அவர்களில் சிலருக்கு மான உணர்ச்சி என்பதே உண்மையில் கிடையாது. அவ்வுணர்ச்சி ஆரம்பத்தில் இருந்திருப்பினும் அவர்களுடைய காமாதுர வாழ்க்கையும், பணிந்து நடக்கும் வழக்கமும் அவ் வுணர்ச்சி யைக் கொன்றிருக்கும். தங்களுடைய சுக போகங்களுக்கு இடையூறின்றித் தங்களை விட்டுவிட்டால் அவர்கள் பரிபூரணத் திருப்தி யடைவார்கள். ஆனால் இவர்களினின்றும் முற்றும் மாறுபட்ட வேறு சிலரும் உண்டு. இவர்கள் பிரிட்டிஷ் அதி காரத்தை நிச்சயமாய்த் தொலைப்பதற்கு ஒரு வழிகண்டால் அதைக் கடைபிடிக்கச் சித்தமாயிருப்பார்கள். ஆனால் ஒரு கால் தோல்வியும் ஏற்படக் கூடும் என்பதற்கு இடம் இருக்கும் வரையில் அவர்கள் துணிந்திறங்கத் தயாராயில்லை. எனவே, தேசீயக்கட்சியார் இவர்களுடைய உதவியையோ, அநுதாபத்

தையோ எதிர் பார்க்கவில்லை யென்பதைத் திட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். சுதேச மன்னர்களில் பலர் பலாத்காரக் கட்சியினிடம் அநுதாபம் கொண்டிருக்கலாம். அக்கட்சியார் வெற்றி யடைந்தால் மனதிற்குள் மகிழ்ச்சியடையலாம். ஆனால் அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்ய ஒரு நாளும் துணிய மாட்டார்கள். சுதேச மன்னரில் ஒரு சிலர் "சட்ட வரம்புக் குட்பட்ட" கட்சியாரிடம் வெளிப்படையாக அநுதாபம் தெரிவிப்பதுண்டு. ஆனால் அவர்களும் அக் கட்சியாருக்குப் பண உதவியோ, வேறு உதவியோ செய்ய மாட்டார்கள். அவ்வாறு உதவி செய்தல் ஆங்கில அரசாங்கத்தினிடம் விரோத பாவத்துக்கு அறிகுறியாகக் கருதப்பட்டுவிடின் என் செய்வது?

இவர்களுக் கடுத்தபடியி லிருக்கும் பெரிய நிலச்சுவான்தார்கள், பணக்கார ஸௌகார், வங்காள ஜமீன்தார், அயோத்தி மாகாணத்துத் தாலுகாதார் முதலியோர் பெரிதும் ஆங்கில உத்தியோகஸ்தர்களின் வசப்பட்டவர்கள். பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களின் அநுதாபத்தினுல் அவர்களுக்கு நன்மை உண்டு. அவ்வுத்தியோகஸ்தர்களின் கோபத்தினுல் அவர்கள் அடியோடு அழிந்துவிடக் கூடும். எனவே, பிரிட்டிஷ் கலெக்டர் அல்லது மாஜிஸ்ட்ரேட் கிழித்த கோட்டை அவர்கள் தாண்டமாட்டார்கள். அவ்வுத்தியோகஸ்தருடைய தயவைச் சம்பாதிக்கக் குறுக்கு வழி ஏதேனும் உண்டாவென்று தேடினாலும் தேடுவார்களே யல்லாமல், சுதந்திரத்துடன் நடந்துகொள்கிருர்களென்னும் சந்தேகம் ஏற்படவும் இடங் கொடுக்க மாட்டார்கள்.

இவ்வுலக சரித்திரத்தில் செல்வர்களும், பிரபுக்களும் புரட்சி இயக்கங்களுக்கோ அரசியல் இயக்கங்களுக்கோ தலைமை வகித்து எப்போதும் நடத்தியதில்லை. மாறுதல் எதுவும் அவ் வகுப்பாரின் நன்மைகளுக்குப் பாதகமானவை. சிற்சில சமயம் அவர்களுக்குள்ளே தீரபுருஷன் ஒருவன் தோன்றுகிருன். அவன் சரித்திரத்தில் தன் பெயர் ஒளியுடன் விளங்க வேண்டுமென்னும் ஆசையினுலோ, தனி இராஜ வம்சம் ஒன்றை ஸ்தாபிக்க

வேண்டுமென்னும் அவாவினாலோ தூண்டப்பட்டு மாறுதலுக் குரிய பேரியக்கம் ஒன்றை நடத்துவ துண்டு. சில சமயம் அபூர் வமாக, உண்மையிலேயே தேச பக்தி வாய்ந்த செல்வன் ஒரு வனையும் நாம் காண்கிறோம். இவன் லாப நஷ்டங்களை நன் கறிந்து தன் சொத்து சுதந்திரங்களை யெல்லாம் இழக்கத் துணிந்து தேசீயக் கட்சியைச் சேர்கின்றான். ஆனால் எந்த நாட்டிலும் இத்தகைய உதாரணங்கள் மிகச் சிலவே யாகும்.

## மத்திய வகுப்பாரும் அரசியல் விடுதலையும்

அரசியல் சுதந்திர விருப்பமும், பராதீன நாட்டில் பிறந்து அரசியல் 'பறைய'ராய் வாழ்வதில் அவமான உணர்ச்சியும் கல்வி யறிவுள்ள மத்திய வகுப்பாரிடமே பெரிதும் இருத்தல் இயல்பாகும். பாமர ஜனங்கள் கூட சுதந்திர இயக்கத்தில் ஆழ்ந்த சிரத்தை கொள்வார்களென்று எதிர்பார்க்க முடியாது. அவர்கள் அறியாமையில் மூழ்கிக் கிடப்பவர்கள்; எழுதப் படிக் கத் தெரியாதவர்கள். உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவும் உடையும் தேடுவதற்கே அவர்கள் ஓயாத போராட் டம் நடத்த வேண்டி யிருக்கிறது. எனவே, அரசியல் விஷயங் களைப் பற்றி அதிகம் சிந்திக்கவும், அதற்காக அதிக காலம் செலவிடவும் அவர்களால் முடியாது. பசி, வறுமை, நோய், துன்பம் என்னும் இவற்றை எதிர்த்துப் போராடுவதற்கே அவர் களுடைய கால மெல்லாம் சரியா யிருக்கிறது. அவர்கள் சொற் பத்தில் மகிழ்ச்சி அடையும் இயல்பினர். அன்பான ஒரு வார்த் தையும், அற்பமான ஒரு நன்கொடையும் கூட அவர்களைச் சந்தோஷமடையச் செய்கின்றன. அடிப்படையான கொள்கை களைப் பற்றி அவர்களுடைய மனதைக் குழப்பிவிடுவது மிக எளிது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுங்கூட இந்நிலைமையே இருந்து வருகிறது. பாமர ஜனங்கள் பள்ளிக்கூடக் கல்வியும், ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஜனநாயகக் கொள்கைகளில் பயிற்சியும் பெற்றிருக்கும் இந்த நாடுகளிலேயே இப்படி யானால் மற்ற நாடுகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அரசாங்கங்

களும், அரசாங்கங்களுடன் உடன்படிக்கை செய்துகொண்ட உயர் வகுப்பாரும் பாமர ஜனங்களை ஏமாற்றித் தப்பு வழியில் நடத்துவது மிகவும் எளிது. ஒவ்வொரு நாட்டிலும் படித்த மத்திய வகுப்பாரே அரசியல் சுதந்திரத்துக்கும், முன்னேற்றத் துக்கு முரிய இயக்கங்களை நடத்துகின்றனர். இவ்வகுப்பார் தங்கள் கொள்கைகளில் உறுதியும், அவற்றிற்காகத் துன்பம் சகிக்கும் ஆற்றலும், இயக்கத்தை நடத்துவதில் ஊக்கமும், சத்தியத்திற்காக உயிரையும் தியாகம் செய்யும் துணிவும், பாமர ஜனங்களிடையே செல்வாக்கும் எத்துணை தூரம் பெற்றிருக் கிறார்களென்பதைப் பொறுத்தே சுதந்திர இயக்கத்தின் ஜயாப ஜயங்கள் நிகழ்கின்றன.

இத்தகைய இயக்கம் என்றும் அழிவ தில்லை. ஒரு முறை சுதந்திரப் போர் தொடங்கப்பட்டுவிட்டால் தலைமுறை தலை முறையாக அது நடந்தே தீரும். வெற்றி உடனே கிடைக் கலாம்; அல்லது தாமதப் படலாம். போராட்டத்தின் இலட் சியம் இன்ன தென்பதே தெரியாமல் இடையில் குழப்பம் உண் டாகலாம். இவை அப் போரை நடத்துவோரின் அறிவு அல் லது அறிவீனம், சிரத்தை அல்லது சிரத்தைக் குறைவு, பாமர ஜனங்களிடம் அவர்களுக்குள்ள செல்வாக்கு, எதிரிகளின் அறி வாற்றல் முதலியவற்றைப் பொறுத்தவை யாகும். உலகெங் கும் அரசியல் இயக்கங்களுக்கு ஏற்றத் தாழ்வுகள் ஏற்படா திருப்ப தில்லை. முன்னேறுவதும், தோல்வியுற்றுப் பின்வாங்கு வதும், மீண்டும் முன்னேற முயலுவதும் அவ்வியக்கங்களின் இயல்பாகும். இத்தகைய இயக்கங்களை அரசாங்கங்கள் முத லில் கவனியாது அசட்டை செய்கின்றன. பின்னர் எள்ளி நகை யாடுகின்றன. அடுத்தாற்போல் அடக்கு முறைப் பிரயோகம் செய்கின்றன. ஆனால் இம் முயற்சி யெல்லாம் வீணே யாகும். சுதந்திர மென்னும் இளஞ் செடிக்கு ஆத்மத் தியாகியின் இரத் தமே ஜீவ நீர் ஆகின்றது. தூக்கு மரமும், துப்பாக்கி குண்டும் தனி மனிதனைக் கொன்று விடலாம். ஆனால் அதிலிருந்து ஜன சமூகத்தின் சுதந்திர விருப்பம் அதிக மாகுமே யன்றி வேறு பயன் விளையாது. நாடு கடத்துதல், சிறை வாசம், சித்திரவதை,

பொருள் பறிமுதல் முதலியவை சாதாரணமாகக் கொடுங்கோலர்கள் சுதந்திர இயக்கத்தை நசுக்கிக் கொல்வதற்கு உபயோகிக்கும் ஆயுதங்களாகும். ஆனால் இதுகாறும் அவ் வாயுதங்களைக் கொண்டு சுதந்திர இயக்கத்தைக் கொல்வதில் வெற்றி பெற்றவர் யாருமில்லை. சில சமயம் அடக்கு முறையை விடச் சமாதான வழி அதிக பலன் தந்திருக்கிறது. எனினும் காலந் தவறிச் செய்யப்படும் சமாதான முயற்சிகளினாலும், கட்டாயத்தின்மீது அளிக்கப்படும் அற்ப சௌகரியங்களினாலும் சிறிதும் பயன் விளைவதில்லை யென்று அநுபவத்தில் தெரிய வந்திருக்கிறது. இந்தியாவின் தேசீய இயக்கம் இந்த நிலைகளில் சிலவற்றைத் தாண்டிவிட்டது; மற்ற நிலைகளை இப்போது கடந்துகொண்டிருக்கிறது. இதுகாறும் அவ்வியக்கம் வளர்ச்சி பெற்ற வரலாற்றை ஆராய்ந்து, வெற்றி தோல்வியை ஒருவாறு மதிப்பிடுதல் வாசகர்களுக்குச் சுவை தராமற் போகாது என்று நம்புகிறோம்.*

---

* இந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள தீமைகள் எல்லாம், ஜான் ஸ்டுவர்ட் மில் என்பார் கூறியதுபோல், இயற்கைக்கு மாறான ஓர் ஆட்சி முறையினால் விளையும் தீமைகளே யாகும். இவ்வாட்சிமுறை இயற்கைக்கு மாறுபட்ட தென்பது நியாய புத்தியுள்ள ஆங்கிலேயர் பலரால் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. வில்ஸன் என்னும் சரித்திராசிரியர் 1835-ம் ஆண்டிலேயே இதை உணர்ந்து ''பிரிட்டிஷ் இந்தியாவின் சரித்திரம்'' என்னும் அவருடைய சிறந்த நூலின் முடிவுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

## இரண்டாம் அத்தியாயம்

—★—

# ஆங்கில அதிகார ஸ்தாபனமும் இந்தியப் பெருங் கலகமும்

★

இந்தியாவின் ஆருவது மொகலாய சக்கரவர்த்தியான அவுரங்கசிப் 1707-ம் ஆண்டில் காலஞ்சென்ருன். அவன் மரணத்திற்குப் பிறகு ஐம்பது வருஷங்களுக்குள் மொகலாய ஆதிபத்தியம் அந்திய நிலை எய்தியது. அவனுடைய மதவெறி, சமயப் பொருமை, சந்தேக சுபாவம் என்னும் இவற்றினல் விதைக்கப்பட்ட விதைகள் மரங்களாக வளர்ந்து வேற்றுமைகள், விரோதங்கள், கலகங்கள், கலவரங்கள் என்னும் கனிகளைத் தரத் தொடங்கின. வடநாட்டிலும் சரி, தென்னுட்டிலும் சரி மொகலாய ஆட்சிக்கு இறுதி தேடக்கூடிய சக்திகள் தோன்றிவிட்டன. குரு தேஜ் பகதூரின் ஆத்மத் தியாகம் அவருடைய சீடர்களின் இதயங்களில் ஆழ்ந்து பதிந்திருந்தது. இந்தச் சீக்கிய குரு டில்லி நகருக்குச் சமாதான நோக்கத்துடன் போயிருந்த காலத்தில் அங்கே அநியாயமாகக் கொலை செய்யப்பட்டார். அவருடைய புதல்வனை குரு கோவிந்த சிங் பஞ்சநதி பாயும் நாட்டில் மொகலாய ஆட்சியை ஒழித்து விடும் நோக்கங் கொண்டு படை திரட்டி வந்தான். தக்ஷிணத்தில், மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தவனை சிவாஜீ மன்னன் போருக்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தான்.

1757-ம் ஆண்டிற்குள் பஞ்சாப்பில் சீக்கியர்களும், தக்ஷிணத்தில் மகாராஷ்டிரர்களும் மொகலாய சாம்ராஜ்யத்தின் அஸ்திவா

ரத்தை அசைத்துவிட்டார்கள். அச் சாம்ராஜ்யம் கொஞ்சங் கொஞ்சமாகச் சிதறிச் சின்ன பின்ன மடைந்து வந்தது. ஹைதராபாத் நிஜாமும், மைசூர் நவாபும் தங்கள் சுதந்திரத்தை நிலை நிறுத்தித் தென்னாட்டில் மகாராஷ்டிரர்களின் கை ஓங்கிவிடாதிருக்கும் பொருட்டு அவர்களுடன் போராடி வந்தார்கள். இவ்வாறே வங்காள நவாப்பும், அயோத்தி நவாப்பும் பெயரளவிலேயே டில்லி அரசனைத் தங்கள் சக்கரவர்த்தியாக ஒப்புக்கொண்டிருந்தனர். மத்திய இந்தியா மகாராஷ்டிரர்களின் கையில் இருந்தது.

## பிரஞ்சு - ஆங்கிலப் போராட்டம்

இவ்வாறு, இந்திய அரசியலில் யாருடைய கைமேலோங்குமென்பது சந்தேகத்துக்கிடமா யிருந்த சமயத்தில், அப்போது குடிகொண் டிருந்த குழப்பமான நிலைமையினால் பயனடையும் நோக்கத்துடன் அன்னிய நாட்டார் சிலர் வந்து தோன்றினார்கள். பிரஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் வெவ்வேறு கட்சிக்குத் துணையாக யுத்தரங்கத்தில் பிரவேசித்து அரசியல் சதுரங்கம் ஆடலாயினர். அதிக பணம் எவன் கொடுக்கிறானோ அவனுக்கு அவர்கள் உதவிசெய்து வந்தார்கள். ஒவ்வொரு சண்டையின் முடிவிலும், சிலசமயம் நடுவிலுங் கூட அவர்கள் சொந்த நன்மையை முன்னிட்டுக் கட்சி மாறினார்கள். பிரிட்டிஷாரின் கை திட்டமாக ஓங்கும்படி செய்த முதலாவதுவெற்றி அவர்களுக்கு 1757-ம் ஆண்டில் பிளாஸிச் சண்டையில் கிடைத்தது.

இவ் வெற்றி இந்தியாவில் ஆங்கில அதிகாரத்துக்கு அடிப்படை அமைத்துவிட்ட தென்று கூறலாம். 1757 முதல் 1857 வரை ஒரு நூற்றாண்டு காலம் இராணுவச் சண்டைகளும், இராஜ தந்திரப் போராட்டமும் இடைவிடாது நிகழ்ந்த காலமாகும். சாம்ராஜ்ய ஸ்தாபனம், பொருளீட்டம் என்னும் இரு வகை நோக்கத்தை இப் போராட்டத்தில் ஈடு பட்டவர்கள் மறக்கவே யில்லை.

## பிரிட்டிஷ் ஆட்சி ஸ்தாபிக்கப் பட்ட விதம்

ஹிந்துக்கள் முஸ்லிம்களுக்கு விரோதமாகவும், முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்கு விரோதமாகவும் கிளப்பிவிடப் பட்டனர். இராஜ்யங்கள் இராஜ்யங்களை எதிர்க்குமாறு தூண்டப்பட்டன. ஜாட்டியர்களை எதிர்த்து இராஜ புத்திரர்களும், இராஜ புத்திரர்களை எதிர்த்து ஜாட்டியர்களும் இவ்விருவருக்கும் விரோதமாக மகாராஷ்டிரர்களும், ரோஹில்லர்களை எதிர்த்துப் பண்டேலர்களும், பண்டேலர்களுக்கு விரோதமாகப் பட்டாணியர்களும்— இவ்வாறே பற்பல சாதியார்களும் சண்டையிடுமாறு தூண்டப் பட்டனர். உடன்படிக்கைகள் செய்துகொள்வதும், அவற்றை மீறி நடப்பதும், கட்சிகளில் சேர்வதும், அவற்றைக் கைவிடுவதும் சர்வ சாதாரணமா யிருந்தன. பொய்யும், ஏமாற்றமும் மலிந் திருந்தன. சிம்மாசனங்களை விலைக்கு வாங்கி ஏலத்தில் அதிக விலை கொடுப்போருக்கு விற்ருர்கள். சைன்யங்களை வாங்குவதும், விற்பதும் சாதாரண வியாபாரம் போலவே நடந்துவந்தன. தர்மம், அதர்மம் என்னுங் கவலையே யில்லாமல் வேலைக்காரர்கள் தங்கள் எஜமானர்களைக் காட்டிக் கொடுக்கும்படியும்,போர்வீரர்கள் தங்கள் கொடிக்குத் துரோகம் செய்யும்படியும் தூண்டப்பட்டனர். இராஜ்யங்களைச் சண்டைகளிலும், சங்கடங்களிலும் உழலுமாறு செய்வதற்குச் சந்தர்ப்பங்கள் தேடப்பட்டன: போலிக் காரணங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. எல்லாவகைச் சட்டங்களும் - தேசிய, சர்வதேசிய, சன்மார்க்க, சமயச் சட்டங்கள் அனைத்தும் - காற்றில் பறக்கவிடப் பட்டன. பாலர்கள், விதவைகள் இவர்களிடங் கூடக் கருணை காட்டப்படவில்லை. வாலிபர்களும், வயோதிகர்களும் ஒரு விதமாகவே நடத்தப்பட்டனர். கொள்ளையடித்தல், சூறையாடுதல், ஏகாதிபத்தியம் ஸ்தாபித்தல் என்னும் இவற்றை யல்லாது வேறு நோக்கமே அவர்களுக் கில்லாமலிருந்தது. இந் நோக்கங்களுக் கிணங்கவே ஒவ்வொரு காரியமும் செய்யப்பட்டது. மில், வில்ஸன் என்பவர்கள் எழுதிய

"பிரிட்டிஷ் இந்தியாவின் சரித்திரம்", வாரன் ஹேஸ்டிங்ஸின் விசாரணையின் போது பர்க் என்பவர் செய்த உபந்நியாசங்கள், டாரன்ஸ் எழுதிய "ஆசியாவில் ஏகாதிபத்தியம்" என்னும் நூல், வில்ஸனின் "கத்தியும் பெயரேடும்" என்ற புத்தகம், பெல் என்பவர் எழுதிய "பஞ்சாப் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் வந்த வரலாறு" என்னும் இவைகளைப் படித்தால் மேலே நான் கூறியிருப்பவை யெல்லாம் முழு உண்மையே யல்லாமல் வேறில்லை யென்று காணலாம்.

## பிரிட்டிஷ் ஆட்சி பலப்படுத்தப்பட்ட விதம்

பொருளாதாரம், கைத்தொழில், சமயம், கல்வி என்னும் எல்லாத் துறைகளிலும் ஒரு சில முக்கிய நோக்கங்களுடனேயே காரிய முறைகள் நிர்ணயிக்கப் பட்டன. ஆங்கில அதிகாரத்தை எப்படி நிலைநாட்டுவது, ஆங்கில ஆட்சியை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது, கிழக் கிந்தியக் கம்பெனிக்கு எவ்வழியில் அதிக லாபம் தேடுவது என்பவையே அந்நோக்கங்களாகும். இந்திய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் முயற்சியில் பிரிட்டிஷார் புறக்கணித்துவிட்ட உடன்படிக்கைகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்தால் ஒரு பெரிய பெட்டியே நிரம்பிவிடும். வெல்லெஸ்லி, டல்ஹௌஸி இவர்களுடைய ஆட்சியைப் பற்றி ஆராய்ந்தால் இது நன்கு விளங்கும். இந்த நூற்றாண்டில் நடந்திருக்கும் காரியங்களுடன் ஒப்பிடக்கூடியவை இந்திய சரித்திரத்தில் எப்போதுமே நிகழ்ந்ததில்லை யென்று கூறலாம். இந் நூற்றாண்டில், மிக சாமார்த்தியமான முறைகளைக் கையாண்டு, முன் யோசனையுடனும், முன்னுக்குப் பின் முரணின்றியும், தேசத்தின் செல்வத்தை இடைவிடாது சூறையாடிவந்தார்கள். இந்த நோக்கத்தை முன்னிட்டுத் தர்மம், நியாயம், ஜீவகாருண்யம் என்னும் எல்லாச் சட்டங்களையும் புறக்கணித்து அளவிலா உறுதியுடனும், பிடிவாதத்துடனும் காரியம் செய்து வெற்றியடைந்தார்கள். இதன் பொறுப்பைத் தனி மனிதர்கள் மீது சுமத்துவதற்கில்லை. சிற்சில உத்தமர்களைத் தவிர மற்றப்படி

கிழக்கிந்தியக் கம்பெனியார் கீழைத் தேசத்தில் தங்கள் காரியங்களை நிர்வகிக்க அனுப்பியவர்கள் அனைவரும் மேற் கூறியவை போன்ற முறைகளையே கடைப்பிடித்தனர். இந்தியாவை ஆட்சி புரிய அவ்வப்போது இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட நிர்வாகிகள் அனுசரித்த முறைகள், அவர்களுடைய செயல்கள் எல்லாம் அளவில் வேறுபட்டனவே யல்லாது காரியாம்சத்தில் ஒரேமாதிரியாக இருந்தன.

## இந்திய விஷயங்களைப் பற்றி பிரிட்டிஷ் பொது ஜனங்களின் அறியாமை

இந்தியாவில் என்ன நடந்துகொண்டிருந்தது என்பதைப் பற்றிப் பொதுவாக பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கு ஒன்றும் தெரியாதென்பது உண்மையே. இந்தப் பெரிய 'கண்ட'த்தில் தங்கள் தேசத்தார் செய்யும் காரியங்களைப் பற்றி இன்றைய தினம் எவ்வளவு அறியாதவர்களா யிருக்கின்றனரோ, அவ்வளவு அறியாமையுடனேயே அப்போது மிருந்தனர். இன்றைய தினம், இந்தியாவில் தங்களுக்கோர் ஏகாதிபத்தியம் இருக்கிற தென்பதை அறிந்திருப்பதுடன் அவர்கள் திருப்தியடைந்திருக்கிறார்களல்லவா? அவ்வாறே அக்காலத்திலும் தங்கள் தேசத்தார் இந்தியாவில் ஓர் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்து வருகிறார்களென்றும், மாகாணங்களை ஜெயிக்கிறார்களென்றும், கோடிக் கணக்கான அன்னிய ஜனங்களை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கொண்டு வருகிறார்களென்றும் அறிந்திருப்பதுடன் அவர்கள் திருப்தி யடைந்திருந்தார்கள். இந்தியா அவர்களுக்குச் செல்வமும், செழிப்பும் அளித்தது. தனி மனிதர்கள் கட்டுக்கதையோவென ஐயுறும் வண்ணம் குபேரச் செல்வம் பெற்றார்கள். அவர்களுடைய பணம் நாளடைவில் பிரிட்டிஷ் பொது மக்கள் அனைவருக்குமே பயன்பட்டது. கிழக் கிந்தியக் கம்பெனியின் லாபத்தினாலும், பிரிட்டிஷ் முதலாளிகளும், வியாபாரிகளும் அடைந்த ஏராளமான ஆதாயங்களினாலும் தேசத்தில் செல்வம்

கொழித்தது. இவையெல்லாம் இந்தியாவில் ஆங்கில அதிகாரம் ஏற்பட்டதனுலேயே சாத்தியமாயின. இவ்வளவு அறிந்திருப்பதுடன் ஆங்கிலப் பொதுமக்கள் திருப்தியடைந்திருந்தார்கள். எப்போதேனும் அருமையாகப் பத்திரிகைகளிலோ, புத்தகங்களிலோ உண்மை விவரங்கள் வெளியாகும்போது அவர்கள் திடுக்கிட்டுப் போவதுண்டு. அவற்றினுல் அவர்களுடைய தார்மிக உணர்ச்சி தூண்டப்பட்டு அவர்கள் சிறிது ஆத்திரங்கொண்டாலும் இராஜ தந்திரிகளினுடைய பேச்சுகளினுல் அவர்கள் விரைவிலேயே ஆத்திரம் நீங்கிச் சாந்தமடைந்து வந்தார்கள். இந்த இராஜ தந்திரிகள் எல்லாவற்றிற்கும் தக்க சமாதானங்கூறி, கொடுஞ்செயல் புரிந்தவர்களை யெல்லாம் அரசியல் காரணங்களுக்காக மன்னித்து, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் பொதுவான இலட்சியம் ஜனங்களின் நன்மையே என்பதாகவும், இந்த இலட்சியத்துக்குப் பாதகமின்றிக் காரியம் நடந்து வருவதாகவும் பெருமையாகப் பேசி வந்தார்கள். பார்லிமெண்ட் மகா சபையின் முன்னிலையில் பர்க் என்பார் வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது சாட்டிய குற்றங்கள் பிரிட்டிஷ் ஜனங்களின் கண்களைத் திறந்துவிட்டிருக்க வேண்டும். இந்தியாவில் என்ன நிகழ்ந்துவருகிற தென்பதைக் குறித்து அவர்கள் அதிலிருந்து தெரிந்துகொண்டிருக்கலாம். ஆனுல் முடிவில் வாரன் ஹேஸ்டிங்ஸ் குற்றமற்றவர் என்று ஏற்பட்டுவிடவே அவ்வுணர்ச்சி மீண்டும் மழுங்கிவிட்டது. இந்தியாவில் கொடுமை செய்தவர்களில் வாரன் ஹேஸ்டிங்ஸே முக்கியமானவரல்லர். அப்போது நிகழ்ந்தவை இன்றளவும் இந்தியாவில் நிகழ்ந்தே வருகின்றன. முறையிலும் அளவிலும்தான் வேறுபாடு.

ஆனுலும் பிரிட்டிஷ் பொதுமக்கள் மீது குறைகூற எனக்கு விருப்பமில்லை. பிற தேசங்கள், பிற ஜனங்களுடைய விஷயங்களை நுட்பமாக ஆராய்ச்சி செய்ய ஜனநாயகம் நிலவும் ஒரு நாட்டின் மக்களுக்கு அவகாசம் ஏது? அவர்களுக்குத் தங்கள் தொல்லைகளே போதுமளவுக்கு மேல் இருக்கின்றன. பொருள்

வருவாய் ஒன்றே அவர்களுக்குப் பிரதானம். கோடிக் கணக்கான ஜனங்கள் தங்கள் ஆட்சியின்கீழ் இருக்கிறார்கள் என்னும் எண்ணம் அவர்களுக்குப் பெருமையும், உற்சாகமும் தருகின்றது. பிரிட்டிஷாரைப் பொறுத்தவரையில், இவ்விரு காரணங்களினாலும் அவர்கள் இந்தியாவை ஆளும் தங்கள் தேசத்தாரைக் குறித்துப் பெருமை கொள்ளுதல் இயல்பாகும். மனித இயற்கை இதுவேயன்றோ? அவர்கள் குற்றங் கண்டுபிடிக்கக் காரணமில்லை. சாதாரண மனிதர்கள் தங்களுக்கு லாபகரமான காரியங்களில் பெரும்பாலும் குற்றம் காண்பதில்லை. அதிலும் அக் காரியங்களின் அநீதியை அவர்கள் நேரில் உணர்வதற்குச் சந்தர்ப்பம் இல்லாவிடில் கேட்கவேண்டுமா? இது நிற்க.

எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு வருவோம். 1757-ம் ஆண்டிலிருந்து 1857-ம் ஆண்டு வரையில் இந்தியாவை பிரிட்டிஷார் வெற்றி கொண்ட சரித்திரமானது, அரசியல் பித்தலாட்டம், நம்பிக்கைத் துரோகம், ஒழுக்கக் கேடு என்பவற்றின் வரலாறே யாகும். அதை ஆங்கில "இராஜ தந்திர"த்தின் வெற்றியென்று கூறலாம். இந்திய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த ஆங்கிலேயர், சாம்ராஜ்ய ஸ்தாபகர்களுக் கிருக்க வேண்டிய இயற்கை யறிவைப் பூரணமாகப் பெற்றிருந்தார்கள். தாங்கள் கைக்கொண்ட முறைகளைப்பற்றி அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. சன்மார்க்க போதனைக் காரர்கள் எப்போதும் ஏகாதிபத்தியங்களை நிறுவியதில்லை யன்றோ? தர்மம், அதர்மம் என்று கவனியாத அதி மேதாவிகள் - துணிச்சலும், சமர்த்தும் உள்ளவர்கள் - வாய்த்த சந்தர்ப்பங்களை நழுவ விடாமல் முழுதும் பயன்படுத்திக் கொள்பவர்கள் - அதனால் பிறருக்கு விளையக்கூடிய துன்பங்களைப் பற்றியோ, அதிலடங்கிய பொய், புனைசுருட்டு, நம்பிக்கைத் துரோகம் முதலியவைகளைப்பற்றியோ சிறிதும் கவலைப் படாதவர்கள் - இத்தகைய மனிதர்களாலேயே சாம்ராஜ்ய ஸ்தாபனம் செய்ய முடியும். நெப்போலியன், பிஸ்மார்க், டிஸ்ரேலி, ரிஷ்லோ, மாக்கியவல்லி போன்றோரே ஏகாதிபத்தியங்களுக்கு அஸ்திவாரம் இடுதற் குரியவர். கிளைவ், ஹேஸ்டிங்ஸ், வெல்லெஸ்லி,

டல்ஹௌஸி போன்றவர்களே அவ்வஸ்திவாரங்களின் மீது ஏகாதிபத்திய நிர்மாணம் செய்ய முடியும். பர்க், கிளாட்ஸ்டன், மார்லி போன்றவர்கள் அவ் வேலைக்கு உதவ மாட்டார்கள். மற்றவர்கள் அவ்வேலையைச் செய்வதற்கு அவர்கள் உடந்தை யாயிருக்கலாம்; முடிந்துபோன காரியம் என்பதாக அதை ஒப் புக் கொள்ளலாம். அதற்குமேல் அவர்களால் ஒன்றும் ஆகாது.

## போர்க் களத்தில் வெற்றியன்று — அரசியல் சூழ்ச்சியின் வெற்றியே

இராணுவ பலங் கொண்டு போராடி பிரிட்டிஷார் இந் தியாவை வெற்றி கொண்டதாக எவ்விதத்திலும் சொல்ல முடி யாது. இந்தியர்களில் சிலருக்கு அச்ச மூட்டியும், சிலருக்கு ஆசை காட்டியும், மற்றவர்களின் உதவியையும் செல்வாக்கை யும் தேடி அடைந்தும் அவர்கள் இந்தியாவை ஜெயித்தார்களே யன்றி, வேறு வழியில் வெற்றி யடைந்திருக்க இயலாது. இந்திய சரித்திரத்தில் இந்தப் பகுதி பழி மிகுந்த தாகும். ஆனால் வெற்றி யடைந்தவனை உலகம் போற்றுதல் இயல் பன்றோ? எனவே, இந்தத் தலைமுறையைச் சேர்ந்த இந்தியர்கள் அச்சம்பவங்களை யெல்லாம் அநேகமாக மறந்துவிட்டார்கள் என்று சொல்ல லாம். எனினும், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் நீதி மன்றங்களில் "சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கத்தை"க் கவிழ்க்க முயன்றதாக இந்திய தேசீய வாதிகள் குற்றம் சாட்டப்பெறும் போது மட்டும் நமக்குப் புன்னகை உண்டாகிறது. "எந்தச் சட்டத்தினால்?", "அந்தச் சட்டத்தை யார் செய்தது?" என் னும் கேள்விகள் நம் உள்ளத்தில் உதயமாகின்றன.

## 1857-ம் வருஷத்து இந்தியப் பெருங் கலகம்

மேற்படி பழங் கதையை நாம் இங்கே குறிப்பிட்டது, 1857-ம் வருஷத்து இந்தியப் பெருங் கலகத்தின் வரலாற்றுக்

குப் பூர்வ பீடிகையாகவே யன்றி வேறில்லை. இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றுண்டில் நடந்த முதலாவது அரசியல் இயக்கம் இக் கலகந்தான். அது தேசீய இயக்கமு மாகும். அதற்கு மூலாதாரமான காரணங்களும், அதை நடத்திவைத்த சக்திகளும் பலதிறப்பட்டவை. கலகத்தின் போது நிலவிய ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையும், கலகத்துக்கு முந்தி நடந்த திறமையான முன் ஏற்பாடுகளும், கலகக்காரர்கள் போராட்டத்தில் காட்டிய பிடிவாதமும், போராட்டத்தின்போது நம் பிக்கைத் துரோகச் செயல்கள் மிகக் குறைவா யிருந்தமையும் ஆகிய இவையெல்லாம் முற்கூரிய முடிவையே உணர்த்துகின் றன வென்று சொல்லவேண்டியதில்லை.

எனினும், கலகம் தோல்வியேயடைந்தது. அதற்குக் காரணம், கலகக் காரர்களின் நிர்மாணத் திறமையில் தேச மக்க ளுக்குப் பொதுவாக நம்பிக்கையின்மையேயாகும். கலகக் காரர்கள் முதலில் பிரிட்டிஷாரைத் துரத்திவிட்டுப் பின்னர் தங்களுடைய நிர்மாண நோக்கங்களைக் குறித்து முடிவுசெய்து கொள்ளலா மென்று தங்களுக்குள் எண்ணியிருந்தார்கள். ஆனல் பொது ஜனங்கள் அதற்கிணங்கவில்லை. கடந்துபோன நூற்றுண்டின் சண்டை சச்சரவுகளும், அவற்றின் பயனுக விளைந்த அராஜகமும் ஜனங்களைப் பொறுமை யிழக்கும்படி செய்திருந்தன. கலகக்காரர்கள் வெற்றி யடைந்தால் மீண்டும் பழைய நிலையே எங்கு வந்துவிடுமோ வென்று ஜனங்கள் அஞ்சி னர்கள். பிரிட்டிஷாரை அவர்கள் வெறுத்தனர். பொது ஜனங்களைப் போலவே சுதேச மன்னர்களும், ஜமீன்தார்களும் பிரிட்டிஷாரைப் பகைத்தனர். இவர்கள் கலகக்காரர்களிடம் அநுதாபம் கொண்டிருந்தபோதிலும் அவர்களிடம் நம்பிக்கை யின்மையால் அரைமனதுடனேயே உதவி புரிந்தார்கள். ஒரு கால் பொது ஜனங்கள் பிரிட்டிஷாரிடத்து விட அதிகமாய்ச் சுதேசி மன்னர்கள், பிரபுக்கள், ஜமீன்தார்கள் முதலியோரிடம் பயமும், பகைமையும் கொண்டிருந்திருக்கலாம். அவர்கள் எல்லாரையும் ஒரு கொடியின் கீழ் ஒன்று சேர்க்கக்கூடிய மகா வீரன் கலகக்காரருக்குள் ஒருவனுமில்லை.

## கலகம் அடக்கப்பட்ட விதம்

பிரிட்டிஷாருக்கு அவர்களுடைய அரசியல் சூழ்ச்சித் திறனே இப்போதும் கைகொடுத்தது என்று சொல்லலாம். பஞ்சாப்பில் புதிதாய் ஏற்பட்டிருந்த பிரபு வர்க்கத்தினரான சீக்கியரைப் பிரிட்டிஷார் தங்கள் துணைவர்களாக்கிக் கொண்டனர். சீக்கியர்கள் முஸ்லிம் கொடுமையினால் துன்புற்றிருந்தவர்கள். இந்தியாவில் மீண்டும் முஸ்லிம் அதிகாரம் நிலைநாட்டப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. 'துருக்கர்' ஆட்சி போதும் போதுமென்று அவர்களுக்கு ஆகிவிட்டது. முகமதியர் எல்லாரையும் அவர்கள் 'துருக்கர்' என்றே அழைத்தனர். எனவே, அவர்கள் புதிதாகப் பெற்றிருந்த பௌருஷம் முழுவதையும் பிரிட்டிஷாருக்குத் துணையாக்கினர். முஸ்லிம் ஆதிபத்தியத்தைத் தொலைப்பதால் குரு தேஜ் பகதூரைக் கொன்றவர்கள் மீதும், குரு கோவிந்த சிங்கைத் துன்புறுத்தியவர்கள் மீதும், அவருடைய புதல்வர்களை வதைத்தவர்கள் மீதும் பழிவாங்கியதாகுமென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. அவர்களும் அதை நம்பினார்கள். ஸர்ஹிண்டு* என்னுமிடத்தில் நிகழ்ந்த கொடுஞ்செயல்களின் ஞாபகம், இந்தியாவில் முஸ்லிம் துரைத்தனம் மீண்டும் ஏற்படாதவாறு பெரு முயற்சி செய்ய அவர்களைத் தூண்டின.

கலகம் அடக்கப்பட்டது; ஆனால் கலகக்காரர்கள் ஆங்கிலேயரை எவ்வளவு தூரம் பகைத்தார்கள் என்பது நன்கு விளங்கிவிட்டது. இந்தியர்கள் ஈர நெஞ்சம் படைத்தவர்கள். அகாரணமாக அவர்கள் ஓர் எரும்பையும் துன்புறுத்த மாட்டார்கள். மனிதர்களைத் துன்புறுத்த மாட்டார்கள் என்று

* ஸர்ஹிண்டு என்பது டில்லிக்குப் போகும் வழியிலுள்ள ஒரு சிறு பட்டணம், அப்பட்டணத்தின் முஸ்லிம் கவர்னர், குருகோவிந்தசிங்கின் புதல்வர்களான இரண்டு பாலர்களையும் இரண்டு செங்கற் சுவர்களுக்கிடையே வைத்து சித்திரவதை செய்து கொன்றான்.

சொல்லவும் வேண்டுமோ? ஆனால் இந்தக் கலகத்தின் போது அவர்களில் சிலர் மிகக் குரூரமான செயல்கள் புரிந்தனர். பிரிட்டிஷாரும் கலகத்தின் போதும் சரி, அதற்குப் பிறகும் சரி, இந்தியர்களிடம் தயவு தாட்சண்யம் காட்டவில்லை. குற்றஞ் செய்தவர்களும், ஒரு பாவமு மறியாதவர்களும் ஒருங்கே பீரங்கிக்கு இரையாயினர்.[1] பிரிட்டிஷ் போர்வீரர்கள் ஓரிடத்திலிருந்து ஓரிடம் போகுங் காலத்தில் ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையுங் கூடச் சித்திரவதை செய்தார்கள்.[2] சில சமயம் அவர்களுடைய தலைகளையும், உடல்களையும் மரங்களில்

---

1 கே. மாலிஸன் என்பவர்கள் எழுதிய "இந்தியக் கலகத்தின் சரித்திரம்," இரண்டாம் புத்தகம், 367-ம் பக்கம் பார்க்க. "55-வது பட்டாளத்தைச் சேர்ந்த கலகக்காரர்களைப் பற்றிய வரையில், அவர்கள் நம்மை எதிர்த்துச் சண்டை போடுங்கால் பிடிக்கப் பட்டவர்களாதலால், சிறிதும் இரக்கங் காட்டுவதற் குரியவர்க ளல்லர், ஆனால் நன்கு யோசித்துப் பார்த்ததில், அவர்கள் எல்லாரையும் கொல்வது சரியன்றெனக் கருதுகிறேன். நாம் அப்படிச் செய்தல் எல்லாம் வல்ல இறைவன் முன்னிலையில் நியாய மாகாது. நூற்றிருபது மனிதர்கள் என்றால் கொஞ்சமா? மற்றவர்கள் பயப்படுவதற்கு ஓர் உதாரணம் ஏற்படுத்த வேண்டு மென்பதே நமது நோக்கம். அவர்களில் நாலில் ஒரு பங்கு பேரை அல்லது மூன்றில் ஒரு பங்கு பேரைக் கொல்வதினாலேயே இந்த நோக்கம் நிறைவேறி விடுமென்று நான் எண்ணுகிறேன். நானு யிருந்தால் பின்வருமாறு செய்வேன்:- ஏதாவது குற்றம் சுமத்தக் கூடியவர்கள் எல்லாரையும், அதாவது பொதுவான கெட்ட நடத்தை யுள்ளவர்கள், இராஜ துவேஷம் அல்லது கலகத்தில் முன் நின்றவர்கள். 26வுக்கு முந்தைய சில தினங்களில் உத்தியோகஸ்தர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டவர்களை ஆகியவர்களைப் பொறுக்கி எடுப்பேன். இவர்களுடைய தொகை போதிய அளவிற்குக் குறைவா யிருந்தால், வயதில் மூத்தவர்களான சிப்பாய்களை அவர்களுடன் சேர்ப்பேன். இவர்கள் எல்லாரையும் சௌகரியம் போல் பீரங்கி வாயில் நிறுத்தியோ துப்பாக்கியாலோ சுட்டு விடவேண்டும். மற்றவர்களைத் தனித் தனிக் கூட்டங்களாகப் பிரித்துச் சிலரைப் பத்து வருஷமும், சிலரை ஏழு வருஷமும். சிலரை ஐந்து வருஷமும். மூன்று வருஷமும் சிறைத் தண்டனை விதிப்பேன்."

2 கே. மாலிஸன், வால்யம் 2, பக்கம் 203 பார்க்க. "இராணுவச் சட்ட அமுல் தொடங்கிற்று. மே, ஜூன் மாதங்களில் சட்ட சபையில் நிறைவேறிய பயங்கரமான சட்டங்களும் பூர்ணமாய் அமுலிலிருந்தன.

தொங்க விட்டார்கள்.[1] இரண்டு கட்சியாரும் போட்டி போட்டுக் கொண்டு கொடுஞ் செயல்கள் புரிந்தனர்.

ஜெயமடைந்த ஆங்கிலேயர் தோற்றவர்கள் இழைத்த கொடுமைகளுக்கு நிரந்தரமான ஞாபகச் சின்னங்கள் நாட்டி, அவற்றை என்றும் மறக்க முடியாத வண்ணம் செய்திருக்கின்

---

போர் வீரர்களும், மற்றவர்களும், விசாரணை செய்தோ, செய்யாமலோ சுதேசிகளைக் கொன்று வந்தனர். பெண்ணென்றோ, பாலர், விருத்தர் என்றோ அவர்கள் பார்க்கவில்லை. அதற்குப் பிறகு இரத்த வெறி இன்னும் அதிகமாயிற்று. கலகத்தில் ஈடு பட்டவர்களும் அதில் கலவாத ஸ்திரீகள், குழந்தைகள், கிழவர்கள் முதலியோரும் பலி கொடுக்கப் பட்டதாக நமது பிரிட்டிஷ் பார்லிமெண்டின் தஸ்தவேஜிகளில் இருக்கிறது. சபையுடன் கூடிய இந்தியக் கவர்னர் ஜெனரல் இங்கிலாந்துக்கு அனுப்பிய அறிக்கைகளில் இவ் விவரம் காணப்படுகிறது. அவர்கள் வேண்டுமென்று தூக்கிலிடப் படவில்லை. அவரவர்களுடைய கிராமங்களில் கொளுத்திக் கொல்லப் பட்டார்கள். சிற்சில சமயம் தவருக அவர்கள் மீது குண்டு பாய்ந்து கொன்றது. தாங்கள் எவரிடத்தும் தயவு தாட்சண்யம் காட்டவில்லை யென்றும், கறுப்பு மனிதர்களைச் சுட்டுத் தள்ளுவது ஒரு சந்தோஷமான பொழுதுபோக்காயிருந்த தென்றும் பெருமை யடித்துக் கொள்ள ஆங்கிலேயர் தயங்கவில்லை. இந்தப் பெருமையை அவர்கள் எழுத்தில் எழுதியும் வைத்திருக்கிருர்கள். உயர்தர அதிகாரிகளால் ஆதரவளிக்கப்பட்ட ஒரு புத்தகத்தில் பின்வருமாறு கூறப் படுகிறது:- "மூன்று மாத காலம் எட்டுப் பிண வண்டிகள் தினந்தோறும் சூரியோதயத்திலிருந்து சூரியாஸ்தமனம் வரையில் சுற்றி, முச்சந்திகளிலும், சந்தைகளிலும் தொங்கவிடப் பட்டிருந்த பிணங்களைக் கொண்டுவந்தன. இவ்வாறு ஆருயிரம் பேர் எவ்வித விசாரணையுமின்றிக் கண்ட விடத்தில் கொல்லப்பட்டுப் பரலோக மடைந்தனர்."

3 கே. மாலிஸன் எழுதிய "இந்தியக் கலக சரித்திரம்", இரண்டாவது புத்தகம், 77-ம் பக்கம் பார்க்க. "இதற்குள்ளாகவே நமது இராணுவ உத்தியோகஸ்தர்கள் எல்லாவகையான குற்றவாளிகளையும் வேட்டையாடத் தொடங்கினுர்கள். அவர்களை நாய் நரிகளாக எண்ணிக் கருணை சிறிதும் காட்டாமல் தூக்கிலிட்டார்கள். அக்காலத்திலிருந்த ஆசிரியர் ஒருவர், ஒருநாள் சிப்பாய்கள் நிராயுதபாணிகளாக்கப்பட்டதாகவும், அன்று காலையில் தாம் எழுந்ததும் 'வரிசையாக நட்டிருந்த தூக்கு மரங்களை'ப் பார்த்ததாகவும் எழுதிவைத்திருக்கிருர். சிலதினங்களுக்குப்பிறகு இராணுவக்கோர்ட்டுகளும், விசாரணைக் கமிஷன்களும் நாள்தோறும் அமர்ந்து, வரை துறையில்லாத குரூரத்துடன் பாலர்களுக்கும், வயோதிகர்களுக்கும் தூக்குதண்டனை விதிக்

றனர். தாங்கள் புரிந்த கொடுமைகளையோ, அவர்கள் மறந்தே விட்டார்கள். அக் கொடுமைக் காளானவர்களின் சந்ததிகளும் ஒருகால் அவற்றை மறந்துவிடலாம். ஆனால் சரித்திரத்தி லிருந்து அவற்றை அழித்துவிடல் இயலாத காரியம்.

மேற்படி ஞாபகச் சின்னங்களைப் பார்க்கும் ஓர் ஆங்கிலே யனுக்கு அவை எத்தகைய எண்ணம் அளிக்கின்றன என்பதை "அவுட்லுக்" என்னும் ஆங்கிலப் பத்திரிகையில், 1915-ம் ஞு ஏப்ரல்மீ 3வ வெளியான ஒரு கட்டுரையிலிருந்து நன்கு தெரிந்து கொள்ளலாம். லக்ஷ்மணபுரியிலும், கான்பூரிலும் சிப்பாய்க் கலக ஞாபகச் சின்னங்களைப் பார்வையிட்ட எப். ஜி. ஏ. என்னும்

---

லாயின. ஒரு சமயம், விளையாட்டாகக் கலகக் கொடி பிடித்துக்கொண்டு, தம்பட்டம் அடித்துச்சென்ற சிறுவர் சிலர் விசாரிக்கப்பட்டு மரண தண் டனை விதிக்கப் பட்டனர். இவர்களை விசாரித்த கோர்ட்டில் நீதிபதிகளில் ஒருவராய் ஓர் இராணுவ அதிகாரி அமர்ந்திருந்தார். இவர் ஆயுத மெடுத்த பகைவர்களைக் கருணை யில்லாமல் தொலைக்கக் கூடியவராயினும் பலவீனர் களிடத்தும், திக்கற்றவர்களிடத்தும், தயாளம் மிகக் கொண்டவர். சுத்த வீரனின் இலட்சணம் இதுவே யல்லவா? இவ் வுத்தி யோகஸ்தர் கண்ணில் நீர் ததும்பப் படைத்தலைவரிடம் சென்று மேற் கூறிய சிறுவர் களின் தண்டனையைத் தள்ளிட வேண்டுமென மன்றாடின ராயினும் பயன் விளையவில்லை. ஆனால் இவை யெல்லாம் சட்டம், விசாரணை என்னும் பெயரையாவது வைத்துக்கொண்டு நடந்தன. இதுகூட இல்லாமல் நிகழ்த் தப்பட்ட காரியங்கள் இன்னும் மோசமானவை. தூக்குப்போடும் தொண்டு புரிவதற்கென்று சில கூட்டத்தார் பல இடங்களிலும் சுற்றித் திரிந்தனர். இதற்கென்று தூக்கிடும் வித்தை பழகிக் கொண்டவர் பலர். ஒரு கனவான் தாம் 'மிக விந்தையான' முறையில் பலரைத் தூக்கிலிட்டதாகப் பெருமை யடித்துக்கொண்டார். அவர் மனிதர்களை யானைமீது நிறுத்தி 8 என்னும் இலக்கத்தின் வடிவைப் போல் மாமரங்களில் கட்டித் தொங்கவிடுவாராம். பின்னர், யானைகளை ஓட்டிவிட்டு அவர்கள் ஊசலாடும்படி செய்வாராம். இதுவே அவர் பெருமை பேசிய 'மிக விந்தையான' முறையாகும்."

விசாரணைகளின் கேலிக் கூத்தைப்பற்றி ஹோம்ஸ் என்பார் எழுதிய "சிப்பாய் யுத்த சரித்திரம்", 124-ம் பக்கம் பார்க்க. இராணுவக் கோர்ட் டுகளில் அமர்வதற்காகச் சென்ற உத்தியோகஸ்தர்கள், கைதிகள் குற்ற வாளிகளாயினும், நிரபராதிகளாயினும் அவர்களைத் தூக்கிலிடுவதாகப்

நிருபர் அக் கட்டுரையில் கூறுவதாவது;- "இந்த ஞாபகச் சின்னங்கள் கலகத்தின் போது நிகழ்ந்த விரச் செயல்களையும், பைசாச காரியங்களையும் நன்கு நினைவூட்டுகின்றன. லட்சுமண புரியில் இடிந்து பாழாய்க் கிடக்கும் கட்டிடங்கள் மரணத்தின் துன்பத்தையும் மறக்கச் செய்யும் உயரிய வீரத்திற்கு அறிகுறியா யிருப்பதால், அவற்றைப் பார்க்கும் போது ஆனந்தமே யுண்டாகிறது. இடிந்து கிடக்கும் ஒவ்வொரு கோட்டை வாயிலும், இருளடர்ந்த ஒவ்வோர் அறையும், அவற்றைப் பாதுகாத்து உயிர் துறந்தவர்களின் தீர பராக்ரமத்தை நன்கு

---

பிரதிக்ஞை செய்துவிட்டுப் போனார்கள்........அவசர அவசரமாக விசாரணைசெய்து மரண தண்டனை மூதிக்கப்பட்ட கைதிகளைக் கல்வியறிவற்ற ஆங்கிலப் போர்வீரர் கேலிசெய்து சித்திரவதை புரிந்தனர். படித்த உத்தியோகஸ்தர்கள் இவற்றைப் பார்த்துக்கொண்டு சும்மா யிருந்தார்கள்." "நமக்கு எவ்வித திங்கும்செய்யாத தொண்டு கிழவர்களையும், பால் குடிக்கும் குழந்தைகளுடன்கூடிய திக்கற்ற தாய்மார்களையும் பொல்லாத பகைவர்களைப் போலவே நாம்பழி வாங்கினோம்."

மற்றொர் உத்தியோகஸ்தர் கூறும் விவரமும் நமக்குக் கிடைத்திருக்கிறது. அம்பாலாவி லிருந்து டில்லிக்குப் போகும் வழியில் இராணுவக் கோர்ட்டின் முன்பு ஆயிரக் கணக்கானவர்கள் வரிசை வரிசையாக நிறுத்தப்பட்டுத் தூக்குத் தண்டனையோ, துப்பாக்கியால் சுட்டுக் கொல்லும் தண்டனையோ விதிக்கப்பட்டன ரென்றும், சில இடங்களில் தண்டனைக்குள்ளானவர்களின் வாயில் ஈட்டிகளாலும், துப்பாக்கி சனியன்களாலும் பசு மாமிசம் திணிக்கப்பட்டதென்றும் அவர் சொல்கிறார். (ஹிந்துக்கள் பசு மாமிசம் தின்பதைவிட உயிரையே விட்டுவிடுவார்கள்.)

சார்லஸ் பால் என்பார் எழுதிய "இந்தியக் கலகம்", முதல் புத்தகம், 257-ம் பக்கம் பார்க்க. "ஒரு பிரயாணம் எனக்குப் பெரிதும் பிடித்திருந்தது. கப்பல் ஒன்றில் துப்பாக்கிகளுடன் நாங்கள் ஏறிக்கொண்டோம். சீக்கியப் படைகள் நகரை நோக்கிக் கால் நடையாகச் சென்றன. இருபுறமும் குண்டுகளைப் பொழிந்துகொண்டே போனோம். கப்பல் நகரப் பிரதேசத்தின் மத்திய ஸ்தலத்திற்கு வந்ததும் கரையில் இறங்கி துப்பாக்கியால் சுடத் தொடங்கினோம். என்னுடைய பழைய இரட்டைக்குழல் துப்பாக்கி கறுப்பு மனிதர் பலரின் உயிரை வாங்கிற்று. பழி வாங்கும் ஆசை எனக்கு அசாத்தியமாயிருந்தது. இருபுறமும் சுட்டுத் தள்ளினோம். நெருப்புப் பரவி வாரின் நோக்கிக் கிளம்பலாயிற்று. காற்றும் அதற்குத் துணைசெய்தது.

வெளியிடுகின்றன. முற்றுகை யிடப்பட்டவர்களுக்கு முடிவில் உதவி வந்து சேர்ந்த வரலாறு இந்தத் துயரக் கதைக்கே ஒரு சிகரம் போலாகி ஆரம்பத்தில் ஏற்பட்ட மனக் கசப்பைப் பெரிதும் போக்கி விடுகிறது.

"ஆனால் கான்பூருக்குச் செல்வோர் இத்தகைய மன்னிக்கும் மனப்பான்மை ஒரு நாளும் கொள்ள முடியாது. சொல்லுதற் கியலாத கொடுமை நிகழ்ந்த அக் கிணற்றின் மீது ஒரு தேவனின் சிலை நாட்டப் பட்டுளது. அச் சிலையும் மன்னிப் புக் கிடையாதென அறிவுறுத்தும் கண்டிப்பான தோற்றமே

---

துரோகிகள் பழிவாங்கப்படும் நாள் வந்துவிட்டதென்பதை அது காட்டுவது போல் இருந்தது. ஒவ்வொரு தினமும் இராஜ துவேஷம் நிறைந்த கிராமங்களை எரித் தழிப்பதற்காகக் கூட்டங் கூட்டமாய்ப் படைகளை அனுப்பிப் பழி தீர்த்துக்கொண்டோம். அரசாங்கத்துக்கும், அரசாங்கத்தைச் சேர்ந்த மனிதர்களுக்கும் விரோதமான குற்றம் புரிந்த சுதேசிகளை விசாரிப்பதற்காக ஒரு கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. நான் அதன் தலைவனாக நியமிக்கப்பட்டேன். நாள்தோறும், எட்டு அல்லது பத்துப்பேரை நாங்கள் தூக்கிலிட்டு வந்தோம். உயிர் வாங்கவும், உயிர் அளிக்கவும் சக்தி எங்கள் கையில் இருந்தது. நாங்கள் கருணை காட்டவில்லையென்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன். விசாரணை யெல்லாம் மிகச் சுருக்கந்தான். தண்டனைக்காளானவன் ஒரு மரத்தின் கீழ் வண்டியின்மீது நிறுத்தப் படுகிறான். அவன் கழுத்தில் கயிற்றைச் சுருக்கிட்டு மரத்தில் கட்டுகிறோம். வண்டியை நகர்த்தியதும் அவன் ஊசலாடுகிறான்."

"பஞ்சாபில் அஜ்னாலா என்னுமிடத்துக் கருகில் ஒரு சிறுதீவில், அரசாங்கத்தின் சந்தேகத்திற்காளான ஒரு பட்டாளத்தின் சிப்பாய்கள் பலர் ஒளிந்துகொண்டிருந்தனர். கூபர் என்பவர் இராஜ விசுவாசமுள்ள சில துருப்புகளுடன் வந்து அவர்களைச் சிறைப்படுத்தினார். அப்படிப் பிடித்த 282 பேரையும் கூபர் அஜ்னாலாவுக்குக் கொண்டுபோனார். அவர்களை என்ன செய்வது என்னும் கேள்வி அப்போது எழுந்தது. அவர்களைச் சட்டப்படி விசாரணை செய்வதற்குரிய இடத்துக்குக் கொண்டுபோக வசதியில்லை. அதற்குப்பதிலாக அவர்கள் எல்லாரையும் மரண தண்டனைக்காளாக்கிவிட்டால் மற்றப் பட்டாளங்களுக்கும், கலகம் செய்யும் எண்ணமுடைய பிறருக்கும் ஓர் எச்சரிக்கையாயிருக்கும். இதன் மூலம் இன்னும் இரத்தச் சேதம் அதிகம் ஏற்படாமல் தடுக்கப்பட்டுவிடலாம். இக் காரணங்களை முன்னிட்டுக் கூபர் அவர்கள் எல்லாரையும் விண்ணுலகேற்றத் தீர்மானித்தார். தாம் செய்யப்

கொண்டிருக்கிறது. கான்பூரின் காற்றுங் கூடப் பயங்கரமும் துக்கமும் நிறைந்ததாய்த் தோன்றுகிறது. எவ்வளவு கால மானாலும் இந்தத் தோற்றம் மட்டும் மாறாது. இந்த மனப் புண்ணை ஆற்றுவதற்குக் காலத்திற்கும் சக்தியில்லை யென்று காணப்படுகிறது. ஆங்குள்ள அழகான ஞாபகச் சின்னத் தோட்டத்தின் அரசமரம், ஆலமரங்களின் நிழலில் யாத்திரீகன் அலைந்து திரிந்தாலும் சரி, அல்லது இதாலியக் கோயில் போல் காணப்படும் ஞாபகச் சின்ன தேவாலயத்தில் நின்று அங்கே

---

போகும் காரியத்தின் பெரும் பொறுப்பை அவர் நன்குணர்ந் திருந்தார். மறுநாள் காலையில் அவர்களைப் பத்துப் பத்து பேராகக் கொணர்ந்து சீக்கி யர்களைக் கொண்டு சுடச் செய்தார். இவ்வாறு 216 பேர் அழிந்துபட்டனர். ஆனால் இன்னும் 66 பேர் பாக்கியிருந்தனர். இவர்கள் அந்தத் தாசிலைச் சேர்ந்த ஒரு கோட்டை அறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் எதிர்த்து நின்று தொல்லை கொடுப்பார்களென்று எதிர்பார்த்த கூபர் அதற்கு ஆயத்தமாய் நின்றுகொண்டு கதவைத் திறக்கும்படி உத்திரவிட் டார். ஆனால் அறையில் மௌனம் குடிகொண்டிருந்தது. அவர்களில் 45பேர் தரையில் பிணமாகக் கிடந்தனர். கூபருக்குத் தெரியாமலே அவ்வறையின் பலகணிக்கதவுகள் இறுக்கிச் சாத்தப்பட்டிருந்தபடியால் அந்த துரதிர்ஷ் டம் பிடித்த கைதிகள் உண்மை இருட்டறையில் அகப்பட்டு இத்கைய கதிக்கு ஆளாயினர். மற்ற 21 பேரும் தங்கள் தோழர்களைப் போலவே சுட்டுக் கொல்லப்பட்டார்கள். (1857) இவ்வளவு திறமையுடன் அதி காரம் வகித்த கூபருக்கு விரோதமாய் ஜீவகாருண்யத்தில் பழுத்த விஷய மறியாத மனிதர் சிலர் கூச்சல் கிளப்பினார்கள். ஆனால் லாகூரைக் காப்பாற் றியவர் கூபர்தான் என்பதை ராபர்ட் மோண்ட் கோமரி நிரூபித்து அவ ருடைய நடத்தை மாசற்றதென்று ஸ்தாபித்து விட்டார்."—ஹோம்ஸ் எழு திய "இந்தியக் கலக சரித்திரம்", 363-ம் பக்கம்.

"பகைவர்கள் யாரும் கண்முன் எதிர்ப் படாமல் போகவே, நமது போர் வீரர்களில் சிலர், கிறிஸ்துவர்களின் மயானத்துக் கருகே பயப்பிராந்தி கொண்டு சுருண்டு படுத்துக் கிடந்த குற்றமற்ற வேலைக்காரர்கள் முதலிய வர்களைப் படுகொலை புரிந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த நல்ல ஜனங் கள் எவ்வளவுதான் விசுவாசமும், எஜமான பக்தியும் காட்டியிருந்தாலும், எவ்வளவுதான் பொறுமையுள்ள ஊழியம் செய்திருந்தாலும், நமது வெள்ளைக் கார ஸோல்ஜர்கள் கரு நிறமுடையா ரெல்லாரிடமும் கொண்டிருந்த கொடும் பகைமட்டும் சிறிதும் தணிந்தபாடில்லை"—கே. மாலிஸன்எழுதிய "இந்தியக் கலக சரித்திரம்" இரண்டாவது புத்தகம், 438-ம் பக்கம்.

கல்லில் பொறிக்கப் பட்டுள்ள பெயர்களைப் படித்தாலும் சரி, அவனுடைய மனம் இருளால் சூழப்பட்டு, படுகொலை புரிந்த வர்களையும், சாகும் நிலையிலிருந்தவர்களைச் செத்தவர்களுடன் சேர்த்து அந்தப் பயங்கர இருட்குழியில் போட்டவர்களையும் முடிவில்லாமல் பழிவாங்க வேண்டு மென்னும் தாபங் கொள் ளாமல் இராது. இந்த ஞாபகங்கள் பகைமையையும் பயங்கரத் தையுமே முற்றும் உண்டாக்குகின்றன. ஆறுதலுக்கோ, மன் னிப்புக்கோ உரியதான சிறு அம்சமும் அவற்றில் இல்லை.''*

சிப்பாய்க் கலக சரித்திரத்தையும், அப்போது பிரிட்டி ஷாரால் நிகழ்த்தப்பட்ட குரூரங்கள், அதிக்கிரமங்களைப் பற் றியும் படிக்கும்போது இந்தியர் உள்ளத்திலும் இத்தகைய உணர்ச்சி எழாது என்று பிரிட்டிஷார் நினைத்தல் பெருந் தவறு கும். பிரிட்டிஷார் தங்கள் எண்ணங்களைத் தாராளமாக வெளி யிடமுடியும். இந்தியர்கள் அவ்வாறு வெளியிடுவதற்கில்லை. எனவே, அவர்கள் தங்களுடைய உணர்ச்சிகளை அடக்கி வைத்துக்கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

ஆனால் பரஸ்பர நம்பிக்கையும், நேய உணர்ச்சியும் கொண்டு, சென்று போனவைகளை மறந்துவிடக் கூடுமானால் இரு சாராருக்கும் நன்மை உண்டு. ஆனால் இது எவ்வாறு சாத் திய மாகும்? இங்கிலாந்து இந்தியா விஷயத்தில் பொருள் பறிக்கும் கொள்கையைக் கைவிட்டு, சமத்துவம், உண்மை, நீதி என்னும் அடிப்படையின்மீது நேய உரிமை ஏற்படுத்திக்

*மேற்படி எப். ஜி. எ. என்பவர் லக்னௌவிலும், கான்பூரிலுமுள்ள சிப்பாய்க் கலக ஞாபகச் சின்னங்களைப் பார்வையிட்டது தற்போது நடக் கும் யுத்தத்தின் போதென்பதைக் கவனிக்கவேண்டும் மகாயுத்தம் சம்பந் தமாக இந்தியர்கள் 'ஒப்பில்லாத' இராஜ விசுவாசம் காட்டிய பின்னர் இக் கட்டுரை அவர் எழுதி யிருக்கிறார்.

கலகத்தின்போது நிகழ்ந்த மற்ற குரூரச் செயல்களைப்பற்றி விவரம் அறிய விரும்புவோர் ஈ. ஜே. தாம்ஸன் எழுதிய "Other Side of the Medal" என்னும் நூலைப் படிப்பார்களாக.

கொண்டால்தான் அது கை கூடும். இதற்கு, பிரிட்டன் இந்தியாவைச் "சார்பு நாடா"கவோ, "சொந்த உடைமை"யாகவோ கருதாமல் சாம்ராஜ்யத்தில் சம உரிமையுள்ள பங்காளியாக ஏற்றுக் கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

★

மூன்றும் அத்தியாயம்

—★—

# நவசக்தி உதயம்

★

## பாகம் I

### தேசீய எழுச்சியின் அடிப்படை

கலகம் அடக்கப்பட்டது. கலகக் காரர்களின் தலைவர்கள் கொல்லப் பட்டோ, தூக்கிலிடப்பட்டோ, சுடப்பட்டோ மாண்டனர். அவர்களுடன் குற்றமற்றவர்கள் பலரும் விண்ணுலகேகினர். பின்னணியில் நின்ற பலருக்கு மன்னிப்புக் கிடைத்தது. கலகத்தில் ஈடுபட்ட எண்ணற்ற ஜனங்கள் எல்லாரையும் எந்த அரசாங்கமும் தூக்கிலிடவோ, சுட்டுக் கொல்லவோ முடியாதன்றோ? இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் காப்பாற்றப் பட்டது. ஆனால் கிழக்கிந்தியக் கம்பெனி போய்விட்டது. பகிரங்கக் கொள்ளை முறையும் முடிவடைந்தது. ஆங்கில அரசாங்கம் இந்தியாவை நேராக ஆட்சிபுரியத் தொடங்கிற்று. மகாராணியின் சாஸனமும், கானிங் பிரபுவை யாண்ட "கருணை" முறையும் தேசத்தில் அமைதி உண்டாக்கின.

### வங்காளி பாபு

நாட்டில் வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய இம்மாகாணங்களே நவீன முறையில் சிறிதேனும் கல்விப் பயிற்சி பெற்றிருந்தன. இவ்விடங்களிலும் படித்த மனிதர்களின் தொகை மிகவும் சொற்பம். கலகத்திற்குப் பின்னர் நிகழ்ந்த ஒழுங்கு

முறை வேலையில் இந்தப் படித்த மனிதர்கள் முன்னணிக்கு வரச் சந்தர்ப்பம் நிரம்பக் கிடைத்தது. ஆங்கிலம் படியாதவர்களைவிட ஆங்கிலம் படித்திருந்தவர்களுக்கு முன்னுக்கு வர அநுகூலங்கள் அதிகம் இருந்தன. ஆங்கில மறிந்த மனிதர்கள் சிலர். அந்த பாஷா ஞானம் அவசியமான உத்தியோகங்கள் பல. ஆதலின் ஆங்கிலம் படித்த இந்தியர்களுக்குக் கிராக்கி அதிகமிருந்தது. அவர்கள் "சந்தோஷமும் இராஜ பக்தியும்" உடையவர்களா யிருக்குமாறு நல்ல சம்பளங்கள் பெற்றார்கள். ஆங்கிலம் படித்த வங்காளிகள் வடஇந்தியா முழுவதும் பரவி, சமீபத்தில்தான் கலகம் நடந்த அப் பிரதேசங்களில் அமைதியும் ஒழுங்கும் ஏற்படுவதற்குப் பெரிதும் உதவி புரிந்தார்கள். அரசாங்கக் காரிய இலாகா ஒவ்வொன்றிலும் அவர்களே முன்னணியில் இருந்தார்கள். ஆள்வோர், ஆளப்படுவோர் இரு சாராரும் ஆலோசனை சொல்வதற்கு அவர்களை எதிர்பார்த்தார்கள். வங்காளிகள் உணர்ச்சி மிகுந்தவர்கள், அரசாங்கத்தின்கீழ் தாங்கள் வகித்த பதவியை எண்ணி அவர்கள் பெருமை கொண்டார்கள். அவர்களுடைய நன்றியறிதலும், இராஜாங்க பக்தியும் அளவில்லாமல் பெருகிவந்தன. வங்காளியைப் பிரிட்டிஷாரும் விரும்பினார்கள். ஏனெனில் அவன் அறிவும், மதிநுட்பமும் உள்ளவனா யிருந்ததோடு ஊழியம் செய்யும் விருப்ப முள்ளவனாயு மிருந்தான். ஆதலின் அவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டான். பிரிட்டிஷார் மூளையினால் செய்யவேண்டி யிருந்த வேலையில் பெரும்பகுதியை அவன் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு விளையாடவும், ஓய்வு எடுத்துக் கொள்ளவும் நிரம்ப அவகாசம் அளித்தான். இலாகாத் தலைவர்களில் பலர் "வங்காளி பாபு"வின் மூளையினாலேயே தேசத்தை ஆண்டார்கள். வங்காளி பாபு பறங்கியை* "மாபாப்" † என்று பூஜை செய்யலானான். நடை உடைகளில்

* "ஐரோப்பியன்" என்பதற்குச் சரியான இந்திய மொழி.

† "தாயும் தகப்பனும்" என்பது இச் சொற்றொடரின் நேரான பொருள். வட நாட்டார் தம்மால் பெரிதும் போற்றப்படுவோரை இவ்வாறு குறிப்பிடுவது வழக்கம்.

அவனைப் பின்பற்றத் தொடங்கினன். ஆங்கிலேயனைப் போல் வாழ்க்கை நடத்த ஆரம்பித்தான். ஆங்கிலேயரின் வாழ்க்கையும், அவர்களுடைய வழக்க பழக்கங்களுமே அவனது பரம இலட்சியமாயின. வரவர அவன் ஆங்கில இலக்கியத்தில் பெரிதும் பற்றுக் கொண்டதுடன் ஆங்கிலேயனைப் போலவே எண்ணமிடவும் தொடங்கினன். இங்கிலாந்தில் படிக்கவும், ஐ. சி. எஸ்., ஐ. எம். எஸ். பரீட்சைகளில் போட்டியிடவும் முதன் முதலில் தங்கள் புதல்வர்களை அனுப்பி வைத்தவர்கள் வங்காளிகளே யாவர். அவர்களும், பார்ஸிகளுமே முதன் முதலாக இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பியவர்கள். இங்கிலாந்தில் வசிக்குங்கால் அவர்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசித்து வாழ்ந்தனர். உணவு, பானம் முதலியவற்றில் சுதந்திரம் அநுபவித்தபோது சுதந்திரமாக எண்ணவும், பேசவும் கூட அவர்கள் கற்றுக் கொண்டனர்.

இவ்வாறு கலகத்துக்குப் பின்னர் முதல் தலைமுறையைச் சேர்ந்த வங்காளிகள், முழுதும் ஆங்கில நாகரிகத்தில் மூழ்கியிருந்தார்கள். தங்கள் சொந்த மதத்தை அவர்கள் கேவலமாகக் கருதினர்கள். இந்திய சமூகத்தினிடம் அவர்களுக்குச் சிறிதும் மதிப்புக் கிடையாது. தங்களுடைய சொந்த சரித்திரத்தைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது. "துரை" மார்கள் ஆவதில் அவர்கள் அளவற்ற பெருமை கொண்டார்கள். அவர்களில் சிலர் கிறிஸ்துவர்களானார்கள். இத்தகைய மாறுதலைக் கண்டு பயந்துபோன இராஜா ராம் மோகன் ராய் முதலிய சிலர் இம் மேனாட்டு நாகரிக வெள்ளத்தை அணை போட்டுத் தடுக்க முயற்சித்தனர். சிறிது காலத்திற்கு அரை குறையாக அவர்கள் இம் முயற்சியில் வெற்றி பெற்றூர்கள். வங்காளிகளில் ஒரு பெரும்பகுதியினர் அவ்வெள்ளத்தில் மிதந்து செல்ல மறுத்துவிட்டனர் என்பது அவர்களுக்குப் பெருமை தருவதாகும். அவர்கள் ஆங்கிலக் கல்வி கற்றவர்களாயிருந்தும் தங்களுடைய சொந்த சமையத்தையும், வழக்க பழக்கங்களையும் கைவிடவில்லை. தங்கள் சமூகத்தில் சீர்திருத்தம் செய்ய

வேண்டிய அம்சங்கள் நிரம்ப இருந்ததை அவர்கள் கண்டார்கள். ஆனால் தலைகீழான மாறுதல்களைச் செய்யவும், பிறருடைய நடை உடைகளைப் பின்பற்றவும் அவர்கள் இணங்கவில்லை. இந்தத் தீரர்களே நவீன வங்க இலக்கியத்திற்கு அடிகோலியவர்கள். ஆங்கில பாஷை கற்று, ஆங்கில இலக்கியம் படித்ததின் மூலமாய் தாங்கள் அடைந்திருந்த அறிவுச் செல்வம் அனைத்தையும் தங்களுடைய தாய்மொழியில் பொழிந்துவிட அவர்கள் விரும்பினார்கள். இதற்குத் தாய்மொழியின் அகராதியை விரிவு செய்யும் பொருட்டு அவர்கள் சம்ஸ்கிருதம் படிக்க வேண்டியிருந்தது. இவ்வாறு முதல் தலைமுறையைச் சேர்ந்த வங்காளிகள் ஆங்கில மயமான போதிலும், அவர்களுக்கிடையே தேசீய நோக்கங் கொண்ட ஒரு கூட்டத்தாரும் கிளம்பலாயினர். பிரஹ்ம சமாஜத்தை ஸ்தாபித்தவரான இராம் மோகன் ராய் தற்கால இந்தியாவில் தேச நிர்மாணத் தொண்டு செய்தவர்களில் முதன்மை யானவராவர்.

கொஞ்ச காலத்திற்கு வட இந்தியாவில், அதாவது பஞ்சாப், பீஹார், மத்திய இந்தியா, இராஜபுதனம், சிந்து முதலிய மாகாணங்களில், ஆங்கிலம் படித்த வங்காளிகள் உத்தியோகம் பெற இடமிருந்தபடியால், மேற் கூறிய தேசீய நோக்கங்களின் வளர்ச்சி தடைப்பட் டிருந்தது. நன்றி யறிதலும், திருப்தியுமே மேலோங்கி யிருந்தன. ஏறக்குறைய எல்லா இலாகாக்களிலும் வங்காளி இன்றியமையாதவனா யிருந்தான். நீதிமன்ற மானாலும் சரி, ரிவினியூ கமிஷனரின் காரியாலயமாயினும் சரி, இராணுவப் பண்டகசாலை யாயினும் சரி, ஸர்வே இலாகா, கல்வி இலாகாக்கள் ஆனாலும் சரி, நிர்வாகம் செய்பவன் வங்காளியாகவே இருந்தான். இலாகாத் தலைவர்கள் எப்போதும் ஆங்கிலேயர்கள்தான். ஆனால் காரியாலயத் தலைவர்கள் பெரும்பாலும் வங்காளிகளாகவே யிருந்தனர். அவர்களில்லாமல் ஆங்கிலேயர்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஆங்கிலேயர்களுக்கு தேசத்தின் பாஷை தெரியாது. தேச மக்களின் குண விசேஷங்களை அவர்கள் அறிய மாட்டார்கள்.

எனவே, வங்காளிகள் இன்றியமையாதவர்க ளாயினர். ஆங்கிலக் கல்வி பரவியபோது, ஒவ்வொரு மாகாணத்திலும் இதே நிலைமை ஏற்பட்டது. ஆங்கிலம் படித்த இந்தியர்கள் ஏதேனும் முக்கியமான பதவி வகிக்க லாயினர். பழைய கருநாடக பண்டிதரும், மௌல்வியும் மூலையில் கிடக்க, ஆங்கிலம் படித்த ஹிந்துவும் முஸ்லிமும் முன்னணிக்கு வந்து செழித் தோங்கினர். பிரிட்டிஷார் நிர்வாக முறைகளை வகுத்து உத்திரவு போட்டார்கள்; ஆங்கிலம் படித்த இந்தியர்களே அவற்றை நிறைவேற்றி வைத்தார்கள். இவ்வாறு அவர்கள் தங்கள் எஜமானர்களின் நம்பிக்கைக்கு உரியவர்க ளானதுடன், அவர்களுடைய துர் வழக்கங்களையுங் கைக்கொள்ள லானார்கள்.

ஆனால் ஆங்கிலம் படித்த இந்தியர்கள் தங்கள் எஜமானர்களைப் போலவே எண்ணமிடவுந் தொடங்கியதுதான் பெரும் விசேஷமாகும். ஆங்கிலேயர் பத்திரிகை படித்தனர்; எனவே இந்தியர்களும் தங்களுக் கென்று பத்திரிகை ஆரம்பித்தார்கள். ஆங்கிலேயர் சங்கங்களிலும், தேவாலயங்களிலும் கூடினார்கள்; எனவே இந்தியர்களும் சமாஜங்களும், சபைகளும், விவாதச் சங்கங்களும் கண்டார்கள். கொஞ்ச காலத்திற்கு ஆங்கிலம் படித்த இந்தியன் தன் எஜமானனைப் 'போல் நடிப்பதில் பெருமை கொண்டான். அவனைப் பார்த்து உடுப்புத் தரிக்கவும், சுருட்டுப் பிடிக்கவும், மது மாமிசம் அருந்தவும் கற்றுக் கொண்டான். ஆங்கில முறையில் கட்டி அலங்கரிக்கப்பட்ட வீடுகளில் வசிக்கத் தொடங்கினான். இந்திய வாழ்வு முறையை அவன் வெறுத்து ஆங்கில நடை உடை பாவனைகளை மேற்கொள்வதில் பெருமை யடைந்தான். இந்திய வாழ்க்கை சம்பந்தமான ஒவ்வொன்றும் அவனுக்கு வெறுப்பு அளித்தது. இந்தியர்கள் சுத்தக் காட்டுமிராண்டிகள்; அவர்களுடைய சமயம் வெறுங் குருட்டுக் கொள்கைகள் மலிந்தது; அவர்கள் அழுக்குப் பிடித்த ஜனங்கள்; அவர்களுடைய வழக்க பழக்கங்கள் முற்றும் அநாகரிக மானவை; அவர்கள் குறுகிய

நோக்கங் கொண்ட மத வெறியர்கள் ;—இவ்வாறெல்லாம் அவன் கருத லானான். வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் ஆங்கிலேயனையே அவன் குருவாகக் கொண்டான். ஆங்கில எஜமானர்கள் தேவாலயத்துக்குப் போய் பைபிள் படிக்கிறார்க ளல்லவா? நாமும் அப்படிச் செய்யவேண்டும். ஆங்கிலேயர் நிரீசுவர வாதம் செய்கிறார்க ளல்லவா? நாமும் அவ்வாறு செய்யவேண்டும்.—இப்படி ஒவ்வொன்றிலும் தங்கள் எஜமானர் களைப் போலாக ஆங்கிலம் படித்த இந்தியர்கள் விழைந்தார் கள். ஆனால் அவர்களுடைய இந்த ஆசை நிறைவேறுவதற்கு விரைவிலேயே ஒரு தடை ஏற்பட்டது. குடிப்பதிலும், நிரீசுவர வாதம் செய்வதிலும் அவர்கள் ஆங்கிலேயருக்குச் சமமாகக் கூடும். ஆனால் தேச அரசாங்கத்தில் ஆங்கிலேயரின் பதவிக்கு அவர்கள் ஆசைப் படுவதற் கில்லை. அவர்களில் சிலர் இவ் வாசை கொண்டு தங்கள் புதல்வர்களை இங்கிலாந்துக்கு அனுப் பினார்கள். இங்கிலாந்து சென்றவர்களில் சிலர் ஐ. சி. எஸ்., ஐ.எம்.எஸ். பரீட்சைகளில் தேறினார்கள். மற்றவர்கள் பாரிஸ்ட ரானார்கள். இந்த இரு சாராரும் ஏமாற்ற மடைந்து மனங் கசந்து போக வேண்டிய தாயிற்று. தாங்கள் எவ்வளவு கெட்டிக்காரர்களாயும், திறமைசாலிகளாயு மிருப்பினும், தங்கள் அறிவாற்றல் எவ்வளவு உயர்ந்ததா யிருப்பினும், தாங்கள் கிறிஸ்துவ மதத்தையோ, கிறிஸ்துவ ஆசாரத்தையோ தழுவியவர்க ளாயினும், அன்றி நிரீசுவர வாதிகளாயினும் உத்தி யோகத்திலும் சரி, மற்ற விஷயங்களிலும் சரி, தங்கள் ஆசைக்கு ஒரு வரம்புண் டென்பதை அவர்கள் அநுபவத்தில் கண்டார்கள். முதன் முதலாக அவர்கள் கண்ணைத் திறந்தது இதுவே யாகும்.

இதற் கிடையில் ஆங்கில நாகரிக வெள்ளத்தில் மூழ்கா திருந்த இந்திய அறிஞர்கள் அதன் போக்கைக் கவலையுடன் கவனித்து வந்தார்கள். தேசத்தின் ஒற்றுமையைக் குலைத்து, தேசிய நாகரிகத்தை அழுத்துவிடக் கூடிய சக்திகள் வேலை செய்து வருவதை அவர்கள் கண்டார்கள். தேசீய நாகரிகம்

என்னும் மாளிகை சிறிது சிறிதாக இடிந்து விழுந்து வருவதை அவர்கள் பார்த்தார்கள். அவர்களால் மதிக்கப் பெற்ற, புநித மாகக் கருதப் பெற்ற ஒவ்வொன்றும் அவர்கள் கண்முன்னே அவமதிப்புற்று அழிக்கப்பட்டு வந்தது. தலைமுறை தலைமுறை யாகத் தங்கள் மூதாதைகள் அன்புடனும் பக்தியுடனும் போற்றி வந்த தேசிய இலட்சியங்கள் தற்போது தங்கள் சொந்தக் குழந்தைக ளாலேயே புறக்கணிக்கப் படுவதை அவர்கள் கண்டார்கள். இவற்றை யெல்லாம் பார்த்து அவர் கள் வருந்தினார்கள்; இரத்தக் கண்ணீர் சொரிந்தார்கள்; எனினும் இவை நிகழாமல் தடுப்பதற்கு அவர்களால் எதுவும் செய்ய முடிய வில்லை. மகத்தான பெரு வெள்ளத்தின் முன்பு அவர்கள் சக்தி இழந்து நின்றனர். அதைத் தடுத்து நிறுத்த அவர்கள் கையாண்ட முறைகள் பயனிலா தொழிந்தன. ஆங்கிலக் கல்வியினால் கிடைத்த உத்தியோகம், பதவி, பணம் முதலிய சௌகரியங்களை அவர்களாலேயே துறக்க முடியாம லிருந்ததுதான் அவர்கள் விருப்பத்திற்கு முக்கிய சத்துருவா யிருந்தது. அவர்கள் கூழுக்கு ஆசைப் பட்டார்கள்; ஆனால் மீசையை இழக்கவும் விரும்ப வில்லை. இது அசாத்திய மென்று விரைவில் விளங்கி விடவே, அவர்கள் போராட்டத்தையே நிறுத்தி விதியின் மேல் பாரத்தைப் போட்டு வாளா விருக்கலா யினர். அவர்களால் இயலாத காரியம் பின்னர் வேறு பல சந்தர்ப்பங்களின் சேர்க்கையால் சாத்திய மாயிற்று. அச்சந்தர்ப் பங்களை இங்கே சுருக்கமாகக் குறிப்பிட்டு மேலே செல் வோம்.

## ஆங்கில நாகரிக வெள்ளத்தைத் தடுத்து நிறுத்திய சக்திகள்

1. பிரிட்டிஷாராலும், கிறிஸ்துவச் சங்கங்களினாலும் சில இடங்களில் இந்தியர்களாலும் பள்ளிக் கூடங்களும், கலா சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றில் அளிக்கப்பட்ட

ஆங்கிலக் கல்வியினல் இந்தியர்களுக்கு மேனட்டு இலக்கியங்களைப் படிக்கவும், மேனுட்டுக் கருத்துக்களை அறியவும் வசதி ஏற்பட்டது.

2. மேற்படி பள்ளிக் கூடங்களிலும், கலாசாலைகளிலும் போதித்த ஆங்கில ஆசிரியர் சிலர், மனதாரவோ அல்லது தங்களை அறியாமலேயோ, தங்கள் மாணுக்கர்களுக்குச் சுதந்திரப் பற்றையும், தேசீய உணர்ச்சியையும் ஊட்டிவிட்டார்கள்.

3. இந்தியாவின் சமயங்களையும், தத்துவங்களையும் பாதிரிமார்கள் அளவு மீறித் தாக்கியதன் காரணமாக, இந்தியர்கள் தங்கள் சமயங்களையும், தத்துவங்களையும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யுமாறு தூண்டப் பெற்றுர்கள்.

4. கீழ் நாட்டு ஞானச் செல்வத்தின் பெருமையையுணர்ந்த ஐரோப்பியர் சிலர், அவ் வாராய்ச்சிக்கு உதவி செய்தனர். ஐரோப்பிய மகா பண்டிதர்கள் கீழ் நாட்டுக் கலைகளை ஆராய்ந்து அவற்றைப் பாராட்டியது ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒரு புது உற்சாக மூட்டியது.

5. வங்காளத்தில் இராம் மோகன் ராய், தேவேந்திர நாத தாகூர், இராஜேந்திர லால் மித்ரா ஆகியவர்களும், மகாராஷ்டிரத்தில் ரானடே, விஷ்ணு பண்டிதர் முதலியோரும், வட இந்தியாவில் சுவாமி தயானந்தரும், ஸர் ஸையது ஆமத்கானும், சென்னையில் மாடம் பிளாவட்ஸ்கி முதலான பிரம ஞான சங்கத்தவர்களும் எழுதிய நூல்களினல் ஒரு புதிய ஊக்கம் பிறந்தது. பின்னல் ஸ்ரீமதி அன்னி பெசண்டும், சுவாமி விவேகாநந்தரும் எழுதியவற்றினுலும், அவர்கள் புரிந்த உபந்நியாசங் களினுலும் அவ் வூக்கம் வளர்ச்சி யடைந்தது. முக்கியமாக சமய, சமுகத் துறைகளில் இவ் வூக்கம் எழுந்த தென்றுலும், அதனல் தேசீயத் துறையிலும் பெரும் பயன் விளைந்த தென்பது வெள்ளிடை மலை.

## அரசியல் ஏமாற்றங்கள்

மேற்கூறிய காரணங்களுடன் அரசியல் ஏமாற்றங்களினால் விளைந்த அதிருப்தியும் சேர்ந்துகொண்டது. படித்த இந்தியர்களின் அபிலாசைகளுக்கு ஒரு முட்டுக் கட்டை ஏற்பட்டது. ஐ. சி. எஸ். பரீட்சைகளில் இந்தியர் சிலர் வெற்றியடைந்தது பிரிட்டிஷாருக்குப் பயமுண்டுபண்ணி விடவே, அவர்களை விலக்குவதற்கு உபாயந் தேட லாயினர். இதற்காகக் கையாண்ட உபாயங்களில் ஒன்று, 19 வயதுக்குமேல் 21 வயதுக் குட்பட்டவர்களே அப் பரீட்சையில் போட்டியிடலா மென்னும் விதி யாகும். இவ்வளவு இளம் பிராயத்தில் இந்தியர்கள் இங்கிலாந்துக்கு வந்து பரீட்சையில் எழுதி வெற்றி பெறுதல் இயலாத காரிய மன்றோ? எனவே, வங்காளத்தில் இது குறித்துப் பலமான கூக்குரல் எழுந்தது. வங்காளத்தைப் பின்பற்றி நாட்டின் மற்றப் பகுதிகளிலும் கிளர்ச்சி உண்டாயிற்று. பின்னர், லங்காஷயரின் நன்மைக்காகப் பருத்தி வரி நீக்கப்பட்டதும், லார்ட் லிட்டனுடைய தேச பாஷைப் பத்திரிகைச் சட்டம் (Vernacular Press Act) முதலியவைகளும் தொடர்ந்து வந்தன. இங்கிலாந்தில் கல்வி கற்ற இந்தியர்கள் அந் நாட்டின் அரசியல் கிளர்ச்சி முறைகளில் அநுபவம் உள்ளவர்களா யிருந்தார்கள், அம் முறைகளை யனுசரித்து இந்தியாவில் அவர்கள் கிளர்ச்சி நடத்தினார்கள். நவீன முறைகளில் அரசியல் கிளர்ச்சி செய்தல் இந்தியரின் வாழ்க்கையில் ஒரு நிலையான இடம் பெற்றது. ஆங்கிலம் படித்த இந்தியர்கள் சுதந்திரம், சுயராஜ்யம் என்று பேசத் தொடங்கினார்கள்.

இவ்வாறு, தற்போது மிகவும் பிரபலமாகியுள்ள தேசிய எழுச்சிக்கு அடிப்படை அமைக்கப் பட்டது. இதற்கு இந்தியர்களுடைய தேச பக்தியும், சமயப் பற்றும், சமூகாபிமானமும் எவ்வளவு காரணமோ அவ்வளவு ஆங்கில அரசாங்கத்தின் முறைகள், அவர்களுடைய கல்வி, பத்திரிகைகள், சட்டங்கள், நீதி மன்றங்கள், ரயில்வேக்கள், தந்திகள், தபால்கள்,

கப்பல்கள் முதலியவையும் காரணமாகும். 1857-ம் ஆண்டில் கலகக்காரர்கள் தலை தூக்க முடியாமல் முறியடிக்கப் பட்ட படியாலும், அதன் பயனாக அரசியல் துறையிலும், சமூகத் துறையிலும் அன்னிய அதிகாரத்துக்கு ஜனங்கள் எளிதில் இணங்கிவிட்ட படியாலும், இந்தியர்களுடைய தேச பக்தி, சமயப் பற்று ஆகியவை சிறிது காலத்திற்கு ஒடுங்கிக் கிடந் தன. இப்போது மீண்டும் அவை புத்துயிர் பெற்று எழலாயின.

ஆனால் இப்போது ஐரோப்பிய ஞானம் பெற்றவர்களா லேயே இந்திய தேசிய இயக்கம் காணப்பட்டது. பெருங் கலகம் நடந்த இருபது ஆண்டுகளுக் குள்ளாகவே அவ் வியக் கம் பிறந்து விட்டது. லார்டு லிட்டன் எந்த இடத்தில் எந்தக் காலத்தில் சாம்ராஜ்ய தர்பார் நடத்தி, ஆங்கில அரசியார் இந் தியச் சக்கரவர்த்தினி யானதாக அறிவித்தாரோ, அதே இடத் தில் ஏறக்குறைய அதேகாலத்தில் இந்திய தேசிய இயக்கமும் பிறந்தது. மேற்படி தர்பார் இந்தியாவின் சுதேச மன்னர்களை 'நேய தேச அரசர்கள்' என்னும் பதவியிலிருந்து தாழ்த்திக் கப் பம் கட்டும் சமஸ்தானாதிபதிகளாக ஆக்கிவிட்ட தென்றாலும், அதை நடத்தியவர்கள் சிறிதும் எதிர்பாராத வேறொரு விளைவும் அதனால் ஏற்பட்டது. அதாவது ஆங்கில ராணியின் இந்தியக் குடிகளை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரஜைகள் என்னும் பதவிக்கு அது உயர்த்தி விட்டது. அந்த தர்பாரை நடத்திய வர்கள் தங்கள் செயலின் விளைவு யாதாகுமென்று அப்போது ஒரு சிறிதும் உணர்ந்தவர்களல்லர். படித்த இந்தியர்கள் ஏகா திபத்தியத்தில் தங்களுக்குரிய பதவியை யடைய வேண்டு மென்னும் எண்ணம் பெறுவதற்கு அந்த தர்பாரிலேயே விதை போடப்பட்டது என்று கூறலாம். அதுமுதல் படித்த இந்தி யர்கள் வாய் உள்ளவர்களாகித் தங்கள் கருத்துகளை வலியு றுத்தத் தொடங்கினார்கள். இந்திய அரசாங்கத்தில் தாங்கள் வகித்த சிறு பதவிகளுடன் அவர்கள் திருப்தி யடைந்திருக்க வில்லை. நாமிருக்கும் நாடு நம்முடையதென்று அவர்கள் உரிமை பாராட்டி, "இந்தியர்களுக்கே இந்தியா" என்று பிரசாரம்

செய்யலானார்கள். தாங்கள் நினைத்ததுபோல இந்தியா அவ்வளவு கேவலமான நாடன்று என்னும் அறிவு அவர்களுடைய பிரசாரத்துக்கு வலிமை தந்தது. 1850 முதல் 1870 வரையில் அவர்கள் தங்கள் நாட்டைக் குறித்து வெட்கப் பட்டார்கள். தங்கள் நாட்டின் கருத்துகளையும், வாழ்க்கை முறைகளையும், அநாகரிகமென்றும், பழைய கருநாடகம் என்றும் அவமதித்தார்கள். தங்கள் பண்டைக்கால வாழ்வை இகழ்ந்து ஒதுக்கினார்கள். ஆனால் இவையெல்லாம் அவ்வாறு வெட்கப் படவும், அவமதிக்கவும், இகழ்ந் தொதுக்கவும் உரியனவல்லவென்று அவர்கள் இப்போது உணர்ந்தார்கள்.

இத்தகைய உணர்ச்சி அவர்களுக் குண்டானதற்கு, பிரம சமாஜம், பிரம ஞான சங்கம், சமஸ்கிருத இலக்கியப் புனருத்தாரண சங்கம், வங்காள சாகித்ய பாரிஷத், மகாராஷ்டிர சபை, ஆரிய சமாஜம், பற்பல சநாதன சபைகள் முதலிய இன்னும் இதுபோன்ற சபைகளின் முயற்சியே காரணமாகும். இந்திய சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டு, முக்கியமான பழைய தஸ்தவேஜிகளைத் தேடிக் கண்டுபிடித்துத் தங்கள் முடிவுகளை வங்காளியிலும், மகாராஷ்டிரத்திலும் எழுதிய நூலாசிரியர்களும் இந்த உணர்ச்சி வளர்வதற்குப் பெரிதும் துணை புரிந்தார்கள். பிரம ஞான சங்கத்தார் ஹிந்துக்களின் ஏற்பாடு ஒவ்வொன்றையும் புகழ்ந்து நியாயமென்று ஸ்தாபிக்கவும், அவர்களுடைய ஒவ்வொரு வழக்கமும் தற்கால ஆராய்ச்சி அறிவுக்குப் பொருந்துவதென்று நிலை நாட்டவும் ஆரம்பித்தார்கள். உண்மையில், முன்யோசனையுள்ள அறிஞர் சிலர் இந்தப் பழைமைப் பற்று அதிதீவிரமாகிப் பிற்போக்காக முடியப் போகிறதே என்று பயப்படலானார்கள்.

## ரிப்பன் பிரபு

இவ்வாறு சமய, சமூக, அரசியல் துறைகளில் இந்தியா புத்துயிர் பெற்றுப் பொங்கிக் கொண்டிருந்தபோது லார்டு ரிப்பன் இராஜப் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டார். ரிப்பன் பிரபு பெரிதும் அன்புளங் கொண்ட மனிதர்; விசால நோக்க

முடையவர். பெரிதும் ஜனங்களின் அதிருப்திக்குப் பாத்திர ரான லார்டு லிட்டனுக்கு அடுத்தாற்போல் இராஜப் பிரதிநிதி யாக வந்தது அவர் அதிர்ஷ்ட வசமேயாகும். லிட்டன் பிரபு டோரி கட்சியைச் சேர்ந்தவர்; ஏகாதிபத்தியக் கொள்கைகளில் பழுத்தவர். முதன் மந்திரி டிஸ்ரேலியின் யோசனைப்படி அவர் ஒரு மோச தந்திரத்தினால் இந்திய சுதேச மன்னர்களை நேய அரசர்கள் என்னும் பதவியிலிருந்து கீழே தள்ளிக் கப்பம் செலுத்தும் சமஸ்தானாதிபதிகள் ஆக்கிவிட்டார். தேச பாஷைப் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போட்டார். இரத்த வெள்ளம் ஓடிய ஆப்கன் யுத்தத்தைக் கிளப்பியது அவர் செய்த பெருந் தவறாகும். இன்னும் பல பிற்போக்கான மசோதாக்களும் அவர் காலத்தில் ஏற்பட்டன. லிட்டன் செய்த காரியங்களில் பெரும்பாலானவற்றை ரத்துசெய்து ரிப்பன் பிரபு தமது ஆட் சியைத் துவங்கினார். முதலில் தேச பாஷைப் பத்திரிகைச் சட்டத்தை அவர் ரத்து செய்தார். இதனால் ஆரம்பத்திலேயே அவருடைய நிர்வாகம் பொது ஜனங்களின் பிரீதிக்குப் பாத்திர மாயிற்று. ஆனால் அவர் செய்தவற்றுள் மிகவும் முக்கியமானது நிர்மாண வேலையாகும். ஸ்தல சுயாட்சி திட்டமொன்றை அவர் வகுத்தார். இதன் மூலம் இந்தியாவில் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களுக்கு அஸ்திவாரம் அமைத்தார். அதுவரையில் உத்தியோகங்கள் பெறுவதற்குச் சிபார்சே முக்கிய சாதனமா யிருந்தது. சில பெரிய உத்தியோகங்களுக்குப் போட்டிப் பரீட் சைகள் மூலம் நியமனம் செய்யும் முறையை அவர் அமுலுக் குக் கொண்டுவந்து, சிபார்சுக்குப் பதிலாகத் தகுதியே பிரதான மாகுமாறு செய்தார். அன்றியும், வழக்கு விசாரணைகளில் ஐரோப்பியர்களும், இந்தியர்களும் சமமாகுமாறு குற்றச் சட் டத்தைத் திருத்தவும் அவர் தீர்மானித்தார்.

இவை யெல்லாம் ஆங்கிலோ-இந்திய உத்தியோகஸ்தர் களின் கடுங் கோபத்தைக் கிளப்பிவிட்டன. இவற்றில் ஒவ் வொன்றையும் ஆங்கிலோ-இந்தியர்கள் எதிர்த்தார்கள். இந் தியாவில் ஸ்தல சுயாட்சி ஏற்படுத்தும் யோசனையை அவர்கள்

எள்ளி நகையாடி, அப்படிச் செய்தல் சர்வ நாசத்துக்கு ஆரம்பமாகும் என்று கூறினார்கள். அச் சட்டம் அவசரப்பட்டு ஆலோசனை யின்றிச் செய்த தென்றும், அசாத்தியமான தென்றும் சொன்னார்கள். சுதேசிகள் சுயாட்சி ஆற்றல் சிறிதும் இல்லாதவர்க ளென்றும், அவர்களுடைய சமய, சமூக வேற்றுமைகள் சுயாட்சிக்கு அவர்களைத் தகுதியற்றவர்க ளாக்குகின்றன என்றும் அவர்கள் அறைந்தார்கள். பகிரங்கப்போட்டிப் பரீட்சையால் அரசாங்க ஊழியங்களுக்கு நியமனம் செய்யும் யோசனையையும் உத்தியோக வர்க்கம் பலமாக எதிர்த்தது. இதனால் "வங்காளி பாபு" வல்லவா அரசாங்க ஊழியங்களுக்குவந்து விடுவான்? இதற்குள்ளாக அவ் வர்க்கத்தார் "பாபு"வைப் பகைக்க ஆரம்பித்து விட்டார்கள். அவன் கீழ் மகன்; சரியாக ஆங்கிலம் எழுதத் தெரியாதவன்; சுதந்திரம் சமத்துவம் என்று பேசுகிறவன்; வணக்க ஒடுக்கமும், கீழ்ப்படியுந் தன்மையும் அவனிடம் இல்லை. இத்தகையவனுக்கா இடம் கொடுப்பது? மேலும் இது ஜில்லா துரையின் கௌரவத்துக்கும் குறைவாயிற்றே? அவருடைய தயவில்லாமல் "பெரிய" அரசாங்க உத்தியோகம் கிடைக்கக் கூடுமென்றால், அவரை ஜனங்கள் எவ்வாறு மதிப்பார்கள்? அவருடைய ஆட்சி மதிப்பினாலேயே நடக்கிறது. லார்டு ரிப்பனுடைய சட்டம் போன்றவைகள் அந்த மதிப்பை அழித்தே விடும்......என்றெல்லாம் அவ் "வெள்ளைப் பூசுரர்கள்" சோதிடங் கூறினார்கள். ஆனால் லார்டு ரிப்பனுடைய குற்றங்களுள் எல்லாம் பெரிய குற்றம் "இல்பர்ட்* மசோதா" வாகும். இம் மசோதா, வெள்ளைக்காரர்களை இந்திய மாஜிஸ்ரேட்டுகள் விசாரிப்பதற்கிருந்த தடைகளைப் போக்கி, சட்டத்தின் முன்னிலையில் ஐரோப்பியனையும், இந்தியனையும் சமத்துவ மாக்குவதை நோக்கமாகக் கொண்டது. "கறுப்பனா நமக்கு நீதி வழங்குவது? கறுப்பன் நம்மைச் சிறைக்கனுப்புவதா? நம்மீது அவன் அதிகாரம் செலுத்துவானா?

* அப்போது மிஸ்டர் இல்பர்ட் என்பவர் கவர்னர் ஜெனரலுடைய சபையில் சட்ட அங்கத்தினராயிருந்தார். மேற்படிமசோதா இவருடைய பெயரிடல் வழங்கலாயிற்று.

ஒருகாலுமில்லை ! முடியவே முடியாது ! இத்தகைய அவமான மான சட்டங்களுக்கு நாம் இணங்குவதைவிட இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியே முடிவடைந்தாலும் அடையட்டும்.”— இவ்வாறு, ஆங்கிலோ-இந்தியக் கூட்டத்தார் அனைவரும்—உத்தி—யோகஸ்தர்களும் அல்லாதவர்களும்—அம் மசோதாவை மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். அவர்கள் லார்டு ரிப்பனைத் தாக்கியது போல், அதற்குமுன் எந்த இராஜப் பிரதிநிதியும் இந்தியாவில் தமது ஸ்வ சாதியாரால் தாக்கப் பட்டது கிடையாது. அவர்கள் ரிப்பன் மீது அவமானமான வசை மொழிகளைப் பொழிந்தார்கள்; அவருடைய நிர்வாகத்தை அடியோடு கண்டித்தார்கள்; அவருடைய உத்தியோக காலம் முடிவடைவதற்குள் திரும்ப அழைக்கப்பட வேண்டுமெனக் கூறினார்கள்; தாங்கள் அவரைப் பகைக்கிறார்கள் என்பதை அவர் நன்குணரும் வண்ணம் என்னென்ன செய்ய முடியுமோ அவ்வளவும் செய்தார்கள்.

அவர் ஆங்கிலோ-இந்தியர்களின் வெறுப்புக்குப் பாத்திரராயிருந்த காரணத்தினாலேயே, இந்தியர்களின் பிரியத்துக்கு உரியவரானார். பத்திரிகைகளிலும், பிரசங்க மேடைகளிலும் அவருடைய புகழ் பாடப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சியைச் சொல்லி முடியாது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இதற்கு முன் எப்போதும் அரசியல் விஷயங்களில் தேசம் அவ்வளவு உற்சாகங் காட்டியதில்லை. லார்டு ரிப்பனை ஓர் அரசியல் அவதார புருஷனாகவே இந்தியர்கள் கருதலானார்கள். அவருக்கு உபசாரப் பத்திரங்கள் வழங்கினார்கள்; சில இடங்களில் அவருடைய வண்டியின் குதிரைகளை அவிழ்த்து விட்டுத் தாங்களே இழுத்தார்கள்; இன்னும் பல விதங்களில் தங்களுடைய அன்பையும் நன்மதிப்பையும் தெரிவித்தார்கள். இவை யெல்லாம் ஐரோப்பிய சமூகத்துக்கு அளவில்லாத எரிச்சலை மூட்டின. தங்கள் அதிகாரத்துக்குப் பெரும் அபாயம் வந்துவிட்ட தென்றும், இந்தியாவில் ஏகாதிபத்திய ஆட்சியின் முடிவு ஆரம்பமாகி விட்டதென்றும் அவர்கள் எண்ணினார்கள். இன்றோ, நாளையோ இந்தியாவை இழந்துவிடப் போகிறோ மென்றும் அவர்கள் கரு

தலாயினர். ஆனால் இந்தியர்களுடைய எண்ணமோ வேறுவித மாயிருந்தது. 1858-ம் ஆண்டில் இந்தியாவின் நிர்வாகத்தைப் பிரட்டிஷ் அரசாங்கமே நேரில் மேற்கொண்ட போது, விக்டோரியா மகாராணி விடுத்த பெயர் பெற்ற சாஸனத்தில் சிற்சில வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன வன்றோ? இவ் வாக்குறுதிகளை நிறைவேற்றக் கண்யமாக முயற்சி செய்த முதலாவது இராஜப் பிரதிநிதி லார்டு ரிப்பனே என்பதாக இந்தியர்கள் எண்ணினார்கள். ஐரோப்பிய சமூகத்தின் கோபத்தைப் பெரிதும் கிளப்பிய "இல்பர்ட் மசோதா"வைக் குறித்த போராட்டத்தில் லார்டு ரிப்பன் தோல்வியே யடைந்தார். அது சம்பந்தமாகச் செய்து கொள்ளப் பட்ட ராஜியில், மசோதாவின் அடிப்படையான கொள்கை கைவிடப் பட்டது. எனினும் அவர் ஜனங்களின் உள்ளத்தில் சிற்சில நம்பிக்கைகளையும், அபிலாசைகளையும் உண்டுபண்ணி விட்டார். இதுவே இந்தியாவில் அரசியல் வாழ்க்கையின் ஆரம்பம் என்று கூறலாம். அவருடைய உத்தியோக காலம் முடிவடைந்த போது, அதை இன்னும் சிறிது காலம் நீடிக்கச் செய்ய வேண்டுமென்று இந்தியர்கள் கிளர்ச்சி செய்தார்கள். இக்கிளர்ச்சி பயனளிக்கவில்லை. எனினும், அவர் இந்தியாவிலிருந்து புறப்பட்ட போது, இந்தியர்கள் அவருக்கு ஒப்பற்ற உபசாரங்கள் செய்து விடை கொடுத்து அனுப்பினார்கள். கல்கத்தா, பம்பாய், காசி முதலிய இடங்களில் அவருக்கு நடந்த உபசாரங்களில் கலந்து கொண்ட இந்தியர்கள் அவற்றை எந்நாளும் மறக்கவே முடியாது.

லார்டு ரிப்பன் இந்தியர்களுடைய இதயத்தில் நிரந்தரமான இடம் பெற்றவராவர். லார்டு ஹார்டிஞ்சும் ஓரளவு ஜனப் பிரீதிக்குப் பாத்திர ரானாலும், லார்டு ரிப்பனைப் போல் அவர் சர்வ ஜனங்களாலும் அன்புடன் போற்றப் பட்டாரில்லை.

## லார்டு டபரின் (Lord Dufferin)

**லா**ர்டு ரிப்பன் இந்தியாவை விட்டுச் சென்றபோது தேசம் பெரிதும் கலக்கமான நிலையிலிருந்தது. இந்திய, ஐரோப்

பிய சமூகங்களுக்கிடையே மனஸ்தாபம் உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்தது. இந் நிலைமையில் லார்டு டபரின் இராஜப் பிரதிநிதியாக வந்தார். அவர் அரசியல் சூழ்ச்சியில் பெரிதும் பயிற்சி பெற்றவர். பிறப்பினாலும், வளர்ப்பினாலும் அவர் இராஜ தந்திரி. ஆளும் இனத்தாரின் கோபத்தைத் தணிப்பதும், ரிப்பன் பிரபு செய்தவற்றை யெல்லாம் அமைதியாக ரத்து செய்து விடுவதுமே அவர் தமக்கு ஏற்படுத்திக் கொண்ட காரியங்கள். இதை நேர் முறையில் ஒரேயடியாகச் செய்தல் அபாயத்துக்கிடமாகு மென்று அவர் எண்ணினார் போலும். அரசியல் சுதந்திரம், அரசியல் சமத்துவம் என்னும் கூக்குரல் கிளம்பி யிருந்தது. இதைத் திருப்தி செய்தல் இயலாத காரியம்; ஆனால் அதை பலாத்காரமாக அடக்கி விடுதல் அபாயமாகலாம். லார்டு லிட்டனுடைய தேச பாஷைப் பத்திரிகைச் சட்டத்தை இனிப் புதுப்பிக்க முடியாது. லார்டு ரிப்பனுடைய ஆட்சியில் முளைத்த அரசியல் கிளர்ச்சி என்னும் மரம் மிக வேகமாக வளர்ந்து வந்தது; இதை அடியோடு வெட்டி வீழ்த்தல் இயலாத காரியம். அரசியல் கிளர்ச்சி எவ்வளவுக்கு எதிர்க்கப் படுகிறதோ, எவ்வளவுக்கு எள்ளி நகையாடப் படுகிறதோ, அவ்வளவுக்கு அது தீவிரமாய்ச் செழித்தோங்கும் இயல்புடையது. எனவே, லார்டு டபரின் தாமே அவ் வரசியல் கிளர்ச்சிக்கு வழி காட்டுவோராகி, ஜனங்களுடைய சந்தேகத்தைக் கிளப்பாமல் கூடுமானவரை அதைச் சக்தியற்ற இயக்கமாக்கிவிடத் தீர்மானித்தார்.

## பாகம் II

### காங்கிரஸ் மகா சபையின் தோற்றம்

இந்திய தேசீய காங்கிரஸ் ஸ்தாபிக்கும் யோசனை முதன் முதலாக டபரின் பிரபுவினுடைய உள்ளத்தில் உதயமாயிற்றென்பதும், அவர் அதை மிஸ்டர் ஹியூம்* என்பாரிடம் தெரி

*மிஸ்டர் ஹியூம் இந்திய அரசாங்கத்தின் காரியதரிசியாயிருந்து உபகாரச் சம்பளம் பெற்று விலகியவர்.

விக்க, ஹியூம் அதை நிறைவேற்றி வைக்க ஒப்புக்கொண்டா ரென்பதும் சரித்திர பூர்வமான உண்மைகளாகும். காங்கி ரஸை ஸ்தாபிக்கும் முயற்சியில் தம்முடன் ஒத்துழைத்த இந்தியத் தலைவர்கள் எல்லாரிடமும் மிஸ்டர் ஹியூம் இவ் விவரம் அறிவித்தாரா என்று நாம் தெரிந்து கொள்ள மார்க்கமில்லை. அவர்களில் சிலருக்கேனும் அவர் சொல்லி யிருக்கக்கூடும். இது எங்ஙனமாயினும், மேற் கூறிய உண்மை லார்டு டபரினுடைய ஆயுள் காலத்திலேயே வெளியாயிற் றென்பது கவனிக்கத்தக்கது. அவ் விஷயம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப் பட்டபோதும் டபரின் பிரபு அதை மறுத்துக் கூறவில்லை. மிஸ்டர் ஹியூம் அதற்கு வெகு நாளைக்குப் பின்னர், அதாவது 1912-ம் ஆண்டிலேயே காலஞ்சென்றாராயினும் அவரும் அதை மறுத்தவரல்லர். அவர் காலஞ்சென்ற பின்னர், அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய மற்றொரு பிரபல காங்கிரஸ் தலைவரான ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்* மேற் கூறிய விவரம் உண்மையே யென்று ஒப்புக் கொண்டிருக்கிறார். அவர் மிஸ்டர் ஹியூமின் சரித்திரத்தின் 59-வது பக்கத்தில் கூறுவதாவது:- 'தேசிய இயக்கத்தை ஆரம்பித்த காலத்தில் மிஸ்டர் ஹியூம் அப்போது இராஜப் பிரதிநிதியா யிருந்த லார்டு டபரினிடம் யோசனை கேட்டார். அவர் சமூக சீர்திருத்தத் துறையிலேயே தமது பிரசாரத்தைத் தொடங்க எண்ணி யிருந்தாராதலின், அதற்கு மாறாக முதலில் அரசியல் வேலை தொடங்கியதற்கு டபரின் பிரபுவின் ஆலோசனையே காரணமென்று தோன்றுகிறது,'' லார்டு டபரின் மிஸ்டர் ஹியூமிடம் என்ன கூறினாரென்பதைக் குறித்து ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் சொல்வதை நாம் ஒப்புக் கொள்ளத் தயங்க வேண்டியதில்லை. ஏனெனில் மிஸ்டர் ஹியூமின் அந்தரங்க சுத்தியைக் குறித்து நமக்கு எவ்வித சந்தேகமும் கிடையாது. லார்டு டபரின் அவரிடம் ''அரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் ஜனங்களின் உண்மை விருப்பத்தைத் தெரிந்து கொள்வது எனக்கு மிக

---

*ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் பம்பாய் அரசாங்கத்தில் நிர்வாக அங்கத்தவரா யிருந்தவர்.

வும் கஷ்டமாயிருக்கிறது. இந்தியப் பொதுஜன அபிப்பிராயத்தை அரசாங்கத்துக்கு அறிவிக்கக் கூடிய பொறுப்புள்ள ஸ்தாபனம் ஒன்றிருந்தால் நிர்வாக காரியங்களுக்கு மிகவும் நன்மையா யிருக்கும்'' என்று கூறியதாக ஸர் வில்லியம் தெரிவிக்கிருர். அவர் மேலும் எழுதுவதாவது:— ''டபரின் பிரபு ஆதரவுடன் கூறிய இந்த ஆலோசனைகளை எல்லாரும் நன்றியுடன் ஏற்றுக் கொண்டார்கள். காங்கிரஸ் தலைவர்களுக்கும், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் மிக்க நேயபாவம் இருந்து வந்தபடியால், முதல் காங்கிரஸை அப்போது பம்பாய்க் கவர்னராயிருந்த லார்டு ரீயின் தலைமையில் நடத்த அநுமதி தர வேண்டுமென்று டபரின் பிரபுவிடம் கேட்டுக் கொள்ளப் பட்டது. அரசாங்கத்துடன் பூரண சமரச பாவத்துடனேயே காங்கிரஸ் வேலை செய்ய விரும்புகிறதென்பதை இந்த யோசனை காட்டியபடியால் அது குறித்து டபரின் பிரபு மகிழ்ச்சி யடைந்தாலும், அதை ஏற்றுக் கொள்வதில் கஷ்டங்கள் பல குறுக்கிடுவதாகக் கூறினர். எனவே, அந்த யோசனை கைவிடப் பட்டது. எனினும் முதலாவது காங்கிரஸ் பெரிய அதிகாரிகளின் பூரண அனுதாபத்துடனேயே ஆரம்பமாயிற்றென்பதில் சந்தேகமில்லை.''

காங்கிரஸ் மகாசபை தோன்றிய வரலாறு இதுவேயாகும். தீவிர தேசீய வாதிகளால் அது வெறுக்கப் படுவதற்கு இது ஒன்றே போதுமல்லவா? உலக சரித்திரத்திலேயே இச் சம்பவத்திற்கு உவமை கிடையாது. யதேச்சாதிகார அன்னிய அரசாங்கம் ஒன்றின் தூண்டுதலினல் அரசியல் சுதந்திர இயக்கம் ஆரம்பிக்கப் பட்டதாக எவரேனும் கேள்விப்பட்டதுண்டா?

## சுதந்திர பக்தர் ஹியூம்

இந்தியப் பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கூடிய அரசியல் ஸ்தாபனம் ஒன்றை லார்டு டபரின் எதிர்பார்த்தபோது, இந்தியாவுக்குப் பிரதிநிதித்துவ அரசாங்கமோ, குடியேற்ற நாட்டுச் சுயாட்சியோ கேட்கக்கூடிய ஒரு ஸ்தா

பனத்தைக் கனவிலும் கருதியவரல்லர் என்று சொல்லவேண்டுவதில்லை. தேசிய முயற்சிகளில் ஈடுபடக்கூடிய உண்மையான தேசிய ஸ்தாபனத்தை அவர் வேண்டவில்லை யென்பது வெளிப்படை. தேசிய உணர்ச்சி உள்ளடங்கி அபாயம் விளைவியா வண்ணம் அது அவ்வப்போது பொங்கி வழிவதற்கு மட்டும் உபயோகமான ஒரு சங்கத்தையே அவர் விரும்பினர். ஆனல் மிஸ்டர் ஹியூமின் கருத்து வேருக இருந்திருக்கலாம். அவர் சுதந்திரப் பற்று மிகுந்தவர். ஆங்கில ஆட்சியின்கீழ் இந்தியா அரசியல் சுதந்திரம் பெறவேண்டுமென அவர் விரும்பினர். அவர் தேசபக்தியுள்ள ஆங்கிலேயராதலின் இந்தியாவுடன் பிரிட்டிஷ் சம்பந்தம் நீடித்திருக்க வேண்டுமென்பதே அவர் விருப்பமாகும். அதிருப்தி உள்ளுக்குள்ளே அமுங்கினல் பிரிட்டிஷ் ஆட்சிக்கே அபாயம் நேரலாமென்று அவர் கருதினர். அத்தகைய பெரியதோர் அபாயம் அச்சமயம் நேரிட விருந்ததாகவும் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். அவ் வபாயத்தினின்றும் இந்தியாவில் ஆங்கில துரைத்தனத்தைக் காப்பது அவர் காங்கிரஸ் ஸ்தாபனம் செய்ததின் முக்கிய நோக்கங்களில் ஒன்ருகும். அப்போது ஐக்ய மாகாணத்தின் லெப்டினண்ட் கவர்னராயிருந்த ஸர் ஆக்லாண்டு கால்வினுக்கு அவர் எழுதிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு ஒப்புக் கொண்டிருக்கிருர்:— "பிரிட்டிஷ் சம்பந்தத்தினல் இந்தியாவில் உண்டாகி வளர்ந்து வரும் மகத்தான சக்திகள் அவ்வப்போது வெளிப்படுவதற்கு ஒரு சாதனம் வேண்டும். இதற்குக் காங்கிரஸ் இயக்கத்தை விடச் சிறந்ததொரு சாதனத்தைக் கண்டுபிடிக்க முடியாது." ஸர் ஆக்லாண்டு கால்வினுக்கும், மிஸ்டர் ஹியூமுக்கும் நடந்த கடிதப் போக்குவரவு காங்கிரஸ் மகாசபை தோன்றிய வரலாறு முழுமையும் மிகத் தெளிவாக வெளியிடுவதால், இந்திய அரசியல் ஆராய்ச்சியில் தலையிடுவோர் எவரும் அதை அலட்சியம் செய்ய முடியாது.

ஏகாதிபத்தியத்துக்கு "விரைவில் வரவிருந்த பெரும் அபாயத்தை" நிவர்த்தி செய்தலே காங்கிரஸ் ஸ்தாபனத்தின் அடிப்படையான நோக்கம் என்பதில் தினைத்துணையும் சந்தேக

மில்லை. இவ் வபாயம், "பொது ஜனங்களின் துன்பமும், படித்த வகுப்பாரில் தனி மனிதர்களின் ஆத்திரமும் சேர்வதால்" ஏற்படுமென்று எதிர் பார்க்கப் பட்டது. மிஸ்டர் ஹியூம் கூறுவதாவது:— "இவ் வியக்கத்தை ஆரம்பித்தவர்கள் தங்கள் முன்பு வேறு வழி எதுவுமில்லை யென்பதைக் கண்டார்கள். மேனாட்டுக் கருத்துக்கள், மேனாட்டுக் கல்வி, புதிய கருவிகள், நவீன சாதனங்கள் இவற்றினால் தேசீய உணர்ச்சி கொதிப்புற்று அதி வேகமாகப் பொங்கி வந்துகொண் டிருந்தது. அதன் வேகம் வரவர அதிகரித்து வந்தது. எனவே, பொங்கி வரும் அவ் வுணர்ச்சி உள்ளேயே அமுங்கிப் புரையோடி அபாயம் விளைவியாவண்ணம் அது வெளியே வழிந்துவிடுவதற்கு ஒரு வழி செய்தல் இன்றியமையாத தாயிற்று. அவ் வுணர்ச்சி இதற்குள்ளாகவே உள்ளே புரையோடத் தொடங்கி விட்டதென்றும் சந்தேகிக்கும்படி இருந்தது." மிஸ்டர் ஹியூம் மேலும் சொல்கிறார்:- "சில விஷயங்களை உத்தேசிக்கும் போது காங்கிரஸ் இயக்கம் சில மாகாணங்களில் உரிய காலத்திற்கு முன்பே தொடங்கப் பட்டதென்று சொல்லக் கூடும். ஆனால் எல்லாவற்றையும்விட முக்கியமான விஷயம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வருங்காலப் பாதுகாப்பேயாகும். எனவே, காங்கிரஸ் ஆரம்பிக்கப் பட்டபோது எழுந்த கேள்வி 'அதற்குறிய காலம் வந்து விட்டதா ?' என்பதன்று; 'காலந் தப்பிப் போய்விடவில்லையா? இப்போது தேசம் இதை ஒப்புக் கொள்ளுமா?' என்பதேயாகும்". இந்த நோக்கத்துடன் பார்க்குங்கால், இந்திய தேசீய காங்கிரஸ் பெரும் வெற்றியளித்ததென்றே கூற வேண்டும். மிஸ்டர் ஹியூமின் உபாயம் மிகச் சிறந்த தொன்றென்பதைப் பிந்தைய நிகழ்ச்சிகள் நன்கு நிரூபித்திருக்கின்றன. அல்லது அக்கால அரசியல் நிலைமையை அவர் பெரிதும் மிகைப் படுத்தி யிருக்கவேண்டும்.

## காங்கிரஸ் ஸ்தாபனத்தின் நோக்கம்

**ஆ**னால் ஒரு விஷயம் தெளிவாக விளங்குகிறது. காங்கிரஸ் ஸ்தாபனத்தின் தலையாய நோக்கம் பிரிட்டிஷ் சாம்ராஜ்

யத்தை அபாயத்தினின்று காப்பதேயாகும்; இந்தியா அரசியல் சுதந்திரம் பெறுதல் அதன் முதன்மையான நோக்கமன்று. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நலங்களே முதன்மையானவை; இந்தியாவின் நன்மை இரண்டாவதேயாகும். காங்கிரஸ் இந்த இலட்சியத்திற்கு உண்மையாக நடக்கவில்லையென்று எவரும் சொல்ல முடியாது. ஆனால் காங்கிரஸை ஸ்தாபித்தவர்களின் சார்பில் ஒன்று கூறவேண்டும். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நிலைபெறுக இருத்தல் இந்தியாவின் நன்மைக்கே மிகவும் முக்கியமானது என்று அவர்கள் கருதினார்கள். ஆதலின் அந்த ஆட்சியை அபாயத்தினின்றும் பாதுகாப்பதற்கு மட்டு மல்லாமல், அதைப் பலப்படுத்தவும் தங்களால் இயன்றவை யெல்லாம் செய்ய அவர்கள் ஆவலோடிருந்தார்கள். இந்தியாவின் அரசியல் முன்னேற்றமும், இந்திய அரசியல் குறைகளை நீக்குதலும் அவர்களுக்கு இரண்டாந்தர நோக்கங்களாகவே யிருந்தன.

மிஸ்டர் ஹியூம் அக்காலத்தில் (அதாவது லார்டு லிட்டன் இந்தியாவினின்று போவதற்குப் பதினைந்து மாதங்களுக்கு முன்பு), பிரிட்டிஷாருக்கு விரோதமான 'ஒரு பெருங் கலகம் விரைவில் ஏற்படப் போவதாக உறுதிகொண்டிருந்தார்' என்று அவருடைய சரித்திராசிரியரான ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் கூறுகிறார். அவர் எந்த ஆதாரங்களின் பேரில் இத்தகைய உறுதிகொண்டார் என்பதையும் அவருடைய வாய் மொழியினாலேயே மேற்படி சரித்திராசிரியர் விளக்குகிறார். மிஸ்டர் ஹியூம் எழுதிவைத்துள்ள ஒரு குறிப்பில் கூறுவதாவது;-

"ஏராளமான குறிப்புகள் பதிவு செய்யப்பட்டிருந்த பெரிய புத்தகங்கள் பல எனக்குக் காட்டப்பட்டன. (தேசத்தைப் பற்பல பகுதிகளாகப்பிரித்து ஒரு பகுதிக்கு ஒரு புத்தகம் வீதம் இவை ஒழுங்கு செய்யப்பட்டவை.) இவற்றில் தேச பாஷைகளில் வந்த பலவகைப்பட்ட அறிக்கைகளின் ஆங்கில மொழி பெயர்ப்புகளும், சாராம்சமான குறிப்புகளும் ஜில்லா, தாலூகா, நகரம், பட்டணம், கிராமம் வாரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன. முப்பதினாயிரத்துக்கு மேற்பட்ட வெவ்

வேறு மனிதர்களிடமிருந்து கிடைத்த அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டிருந்ததாய் எனக்குச் சொல்லப்பட்டது. நான் அவற்றை எண்ணவில்லை ; அவை எண்ணிலடங்காதவை என எனக்குத் தோன்றிற்று. ஆனல் வடமேற்கு மாகாணத்தில் (இப்போது ஐக்ய மாகாணம்) ஒரு ஜில்லாவை நான் நேரில் நன்கு அறிந்திருந்தபடியால், அந்த ஜில்லாவின் பட்டணங்களை யும், கிராமங்களையும் பற்றிய பதிவுகளை நானே ஓரளவு சரி பார்க்கக் கூடியதாயிருந்தது. இந்த ஜில்லா தொந்திரவு மிக்க பிரதேசம் என்பதில் சந்தேகமில்லை. அதைப்பற்றி 300 பதிவு கள் இருந்தன. அவற்றில்கண்ட மனிதர்களின் பெயர்கள் முத லிய விவரங்களை நான் ஆராய்ந்து அவை சரியானவையே என்று திருப்தியடைந்தேன்.'' மேற்படி புத்தகங்கள் தம் வசத்தில் ஒரே ஒரு வாரந்தான் இருந்ததாயும், அவற்றில் ஆறு புத்தகங் களையே தாம் பிரித்துப் பார்த்ததாகவும், ஆனல் வடமேற்கு மாகாணத்தின் பெரும்பகுதி, அயோத்தி, பீஹார், பண்டல் கண்டிலும் பஞ்சாபிலும் சில பகுதிகள் - இவைகளைப்பற்றிய விவரங்களடங்கிய ஒரு புத்தகத்தை நன்கு பரிசீலனை செய்த தாகவும், தாம் நேரில் அறிந்த ஜில்லாக்களைப் பற்றிய பதிவு களைக் கூடியவரை சரிபார்த்ததாகவும் அவர் சொல்கிருர். இந்தப் பதிவுகளில் பெரும்பாலானவை மிகத் தாழ்ந்த வகுப்பு ஜனங்களின் சம்பாஷணைகளே யாகும். இந்தச் சம்பாஷணை கள் எல்லாம் இந்த ஏழை ஜனங்கள் தற்போதைய நிலைமையில் தாங்கள் நிர்க்கதியாய் விட்டோம் என்னும் உணர்ச்சி கொண் டிருந்ததாகத் தெரிவித்தன. தாங்கள் பட்டினி கிடந்து சாக வேண்டியதே என்று அவர்கள் உறுதிகொண்டிருந்தார்க ளென்றும், அவர்கள் ஏதேனும் செய்ய விரும்பினர்களென்றும், ஒருவருக்கொருவர் துணையாக நிற்க எண்ணங் கொண்டிருந் தார்களென்றும், அந்த 'ஏதேனும்' என்பதற்கு 'ஏதேனும் பலாத்கார முயற்சி' என்பதே பொருளென்றும் அச் சம்பா ஷணைகள் குறிப்பிட்டன." (வேண்டும்போது உபயோகத் திற்காகப் பல பழைய கத்திகளும், ஈட்டிகளும், பழங்காலத் துப்பாக்கிகளும் ஒளித்து வைக்கப்பட்டன என்பதைக் குறிப்

பிடும் ஏராளமான பதிவுகள் மேற்படி புத்தகங்களில் இருந்தன. உடனே அதாவது ஆரம்ப நிலையிலேயே அரசாங்கத்துக்கு விரோதமான கலகம் ஏற்படுமென்று எதிர்பார்க்கப் படவில்லை. ஆரம்பத்தில் நாட்டில் ஆங்காங்கு விரோதிகளைக் கொல்லுதல், சாவ்கார்களைக் கொள்ளையடித்தல், கடைகளைச் சூறையாடு தல் முதலிய குற்றங்கள் நடக்குமென்றே எதிர்பார்க்கப்பட்டது*. "அரைப் பட்டினி கிடக்கும் கீழ்வகுப்பாரின் தற்போதைய நிலைமையில், முதலில் சில குற்றங்கள் நிகழ்ந்துவிட்டால், அவற்றைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான குற்றங்கள் நிகழுமென்றும், பொதுவாகச் சட்ட விரோதச் செயல்கள் பரவு மென்றும், இதனால் அதிகாரிகளும், உயர் வகுப்பாரும் செயலிழந்து ஸ்தம்பித்துவிட நேருமென்றும் எண்ணப் பட்டன. ஓர் இலையின்மீது சிதறிக் கிடக்கும் நீர்த்துளிகள் ஒன்று சேர்வது போல, நாடெங்கும் இச்சிறு கூட்டங்கள் சேர்ந்து சேர்ந்து பெருங் கூட்டங்களாகுமென்றும், தேசத்திலுள்ள துஷ்டர்களெல்லாம் இக்கூட்டங்களில் சேர்ந்துவிடுவாரென்றும், இக்கூட்டங்கள் நிரம்ப வலுவடைந்த வுடனே, அரசாங்கத்தினிடம் மனக் கசப்பு மிகுதியுங் கொண்ட படித்த வகுப்பாரில் சிலர் இவ்வியக்கத்தில் சேர்ந்து ஆங்காங்கே தலைமை வகிப்பார்களென்றும், அவர்கள் கலகக்காரர்களை ஒருமுகப்படுத்தி இதை ஓர் தேசீயப் பெருங்கலகமாக அமைத்து விடுவார்களென்றும் கருதப் பட்டன."

மேற்கண்டவாறு மிஸ்டர் ஹியூம் கூறுவதை யனுசரித்து ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் தமது சொந்த அனுபவத்தைக் கொண்டு மேலும் சொல்வதாவது:— "தேச முழுவதும் நேருமென்று எதிர்பார்க்கப்பட்ட மேற்கூறிய சம்பவங்கள் பம்பாய் மாகாணத்தில் உண்மையாகவே நிகழ்ந்ததை நான் நேரில் பார்த்தறிந்தேன். 'தக்ஷிணக் கலவரங்கள்' என்று வழங்கப் படும் குடியானவர்களின் எழுச்சி இம் மாதிரியாகவே நிகழ்ந்

* இப்பகுதி ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் எழுதியது.

தது. முதலில் ஆங்காங்குச் சில கொள்ளைக் கூட்டங்கள் தோன்றி சாவ்கார்களைக் கொள்ளையடிக்கத் தொடங்கின. பின்னர் இக்கொள்ளைக் கூட்டங்கள் சேர்ந்து சேர்ந்து பெருங் கூட்டங்களாகிப் போலீஸ்காரரால் சமாளிக்க முடியாதவையாயின. எனவே, பூனாவிலிருந்த இராணுவம் முழுவதையும், அதாவது காலாட் படை, குதிரைப் படை, பீரங்கிப் படை இவ்வளவையும் கொண்டு அவர்களை எதிர்க்கவேண்டியதாயிற்று. மேற்குத் தொடர்ச்சி மலையின் காட்டுப் பிரதேசங்களில் யதேச்சையாகத் திரிந்துகொண்டிருந்த இக் கொள்ளைக் கூட்டங்கள் இராணுவத்தைக் கண்டதும் கலைந்து போவதும், திரும்பவும் சௌகரியமானதோர் இடத்தில் சேர்ந்துவிடுவதும் வழக்கமாயிருந்தன. மலை வாசஸ்தலங்களான மகாபலேஸ்வரத்திலிருந்தும் மாதரானிலிருந்தும் இரவு நேரங்களில் பார்த்தால் இக் கொள்ளைக் கூட்டங்கள் சுற்றிலும் எல்லாத் திசைகளிலும் குளிர்காயத் தீ மூட்டிக்கொண்டு தங்கியிருப்பது புலனாகி வந்தது. கொஞ்சம் படித்த வகுப்பைச் சேர்ந்த ஒரு தலைவனும் இவர்களுக்குக் கிடைத்தான். இவன் தன்னை இரண்டாவது சிவாஜி என்று சொல்லிக் கொண்டான்: அரசாங்கத்தை அறை கூவிப் போருக் கழைத்தான்; (அப்போது பம்பாய்க் கவர்னராயிருந்த) ஸர் ரிச்சர்ட் டெம்பிளின் தலையைக்கொண்டு வருவோருக்கு 500ரூபா பரிசளிப்பதாகப் பறை யறைந்தான்; ஆரம்பத்தில் மகாராஷ்டிர துரைத்தனம் எந்த முறைகளில் ஸ்தாபிக்கப் பட்டதோ அதே முறைகளைக் கடைப்பிடித்துத் தானும் தேசியப் புரட்சி இயக்கத்தை நடத்துவதாக அவன் சொன்னான்.''

எனவே, இவ்விரு தலைவர்களின் வாய் மொழியின்படி காங்கிரஸ் ஸ்தாபனத்தின் முதன்மையான நோக்கம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை இவ் வபாயத்தினின்றும் காப்பாற்றுவதேயாகும். ஆனால் இதை முழுவதும் அப்படியே நம்புவதற்கு ஒரு தடை குறுக்கிடுகிறது. மிஸ்டர் ஹியூம் அரசாங்க ஊழியத்திலிருந்த போது, அதாவது லார்டு லிட்டன் இந்தியாவை விட்டுச் செல்வதற்குப் பதினைந்து மாதங்களுக்கு முன்னால், இந்தச் சாட்சியங்

களைப் பார்த்ததாகச் சொல்லப்படுகிறது. அதன் பின்னர் ஏழு ஆண்டுகள் கழித்து 1885-ம் ஆண்டிலேயே முதலாவது காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றது. இதற்கிடையில் ஐந்து வருஷ காலம் லார்டு ரிப்பன் இந்தியாவின் இராஜப் பிரதிநிதியா யிருந்தார். காங்கிரஸைப் போன்ற அரசியல் ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தும் யோசனை லார்டு டபரினுடைய உள்ளத்திலேயே முதல் முதலில் உதயமானதாகச் சொல்லப்படுகிறது.

அரசியல் கலகம் ஏற்பட்டுவிடுமென்னும் பயத்தினால் அரசியல் உணர்ச்சி பொங்கி வழிவதற்குரிய ஒரு சாதனமாகக் காங்கிரஸ் ஸ்தாபிக்கப் பட்டதென்னும் கொள்கை மேற்கண்ட உண்மைகளுடன் சிறிது முரண்படுகிறதன்றோ? மற்றும், அக்கொள்கை மிஸ்டர் ஹியூம் 1883-ம் ஆண்டில் கல்கத்தா சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்கு விடுத்த முதலாவது அரசியல் அறிக்கையுடனும் பொருந்துவதாயில்லை. அவ்வறிக்கையானது உண்மைக் கொள்கைகளை மிக தைரியமாக எடுத்துரைக்கிறபடியால், அவருடைய சரித்திரத்தில் காணப்படும் வண்ணம் அதை இங்கே முழுதும் தருகிறோம்:—

"இந்தியர்களுக்குள் மிகச் சிறந்த கல்வியறிவு வாய்ந்த பெருங் கூட்டத்தார் நீங்களே யாவீர்கள். ஆதலின் அறிவாராய்ச்சித் துறையிலும், சன்மார்க்கத் துறையிலும், சமூக அரசியல் துறைகளிலும் தேச முன்னேற்றத்திற்கும் நீங்களே மூல புருஷர்களா யிருத்தல் வேண்டும். ஒரு நாட்டுக்காயினும், தனியொருவனுக்காயினும் ஜீவாதாரமான முன்னேற்றம் எதுவும் உள்ளிருந்து தோன்றியே வளர்ச்சிபெருதல் வேண்டும். எனவே, உங்கள் தாய்நாடு தன் புதல்வர்களில் கல்வியறிவிலும், நாகரிகப் பயிற்சியிலும் தலைசிறந்தவர்களான உங்களையே முன்னேற்ற முயற்சிகளுக்கு எதிர்பார்த்து நிற்கிறது. என்னைப்போன்ற அன்னியர்கள் பாரத நாட்டிடமும் அதன் மக்களிடமும் அளவிறந்த அன்பு பூண்டிருக்கலாம்; இந்தியாவின் நலத்துக்காகத் தங்கள் காலத்தையும் பொருளையும் செலவிட்டு உழைக்கலாம்; போராடலாம்; தியாகம் செய்யலாம்; ஆனால் இவை யெல்லாம்

பயன்படமாட்டா. ஏனெனில் தேசத் தொண்டு செய்ய ஒருவனுக்குத் தகுதியளிக்கும் முக்கியமான அம்சம் தேசத்தில் பிறந்திருத்தலேயாகும். அன்னியர்கள் தங்களுடைய அநுபவத்தையும் அறிவையுங் கொண்டு ஆலோசனை கூறி உதவி செய்யலாமேயன்றி உண்மையான வேலை நாட்டு மக்களாலேயே செய்யப்படுதல் வேண்டும்.''

''சிதறிக் கிடக்கும் தனி மனிதர்கள் எவ்வளவு அவாவும் ஆற்றலும் உள்ளவர்களாயினும் தனித்தனியாக அவர்கள் எதுவும் செய்துமுடிக்க இயலாது. ஒற்றுமை, கட்டுப்பாடு, ஒழுங்குபட்ட வேலைத் திட்டம் இவையின்றி ஒன்றும் நடவாது. இதற்குத்தான் சங்கம் ஒன்று அவசியம். இச் சங்கத்தை மிகுந்த கவலை செலுத்தி அமைக்கவேண்டும். அறிவாராய்ச்சியிலும், தார்மிக வளர்ச்சியிலும், சமூக அரசியல் துறைகளிலும் இந்திய மக்கள் புத்துயிர்பெறச் செய்வது இச் சங்கத்தின் நோக்கமாயிருத்தல் வேண்டும். இச்சிறு சேவாதளம் கட்டுப்பாட்டிலும், தளவாட வசதிகளிலும் தலைசிறந்ததா யிருக்க வேண்டும். இச் சைன்யத்தில் சேரும் ஒவ்வொருவரும் தீரமும், தன்னடக்கமும், தயாளமும், அதைச் செயலில் காட்டும் ஊக்கமும், சுயநலத் தியாக புத்தியும் படைத்திருக்கவேண்டும். உயரிய கல்விப் பயிற்சியுடனேகூட இந்த அரிய குணங்களையும் பெற்றிருப்பதாக நிரூபிக்கக் கூடியவர்கள் உங்களில் எவ்வளவுபேர் உளர் என்பதே இப்போது கேள்வி.''

இவற்றினும் உண்மையான சிறந்த கருத்துக்களை மிஸ்டர் ஹியூம் தமது கடிதத்தின் இறுதியிலுள்ள வேண்டுகோளில் வெளியிட்டிருக்கிறார். அப்பகுதி வருமாறு:—

''நான் முன்னமே கூறியதுபோல் நீங்களே சமூகத்தின் ஜீவாதாரமா யிருக்கிறீர்கள். இத்தகைய உங்களிடையே, உண்மையான, மனப்பூர்வமான, சுயநலக் கலப்பற்ற தேச பக்தியும், தியாக புத்தியும் படைத்த ஓர் ஐம்பதுபேர், அவசியமானால் தங்கள் வாழ்நாள் முழுவதையும் தாய்நாட்டின் தொண்

டுக்கே அர்ப்பணம் செய்யும் உறுதியுடன் முன்வராவிட்டால், இந்தியாவுக்குக் கதிமோக்ஷமே கிடையாது. இந்திய மக்கள் என்றென்றைக்கும் அன்னியர் ஆட்டிவைத்தபடி ஆடும் கருவி களாய் அடங்கியே வாழவேண்டும். ஏனெனில் 'விடுதலை விரும்புவோர் தங்கள் தளைகளைத் தாங்களே தகர்த்தெறிய வேண்டும்' என்னும் முதுமொழி உண்மையே யன்றோ? ஒரு சமூகத்தின் அறிவாற்றல் வாய்ந்த தலைவர்களுங்கூடத் தங்கள் தாய்நாட்டின் விடுதலைக்காக முயற்சிசெய்யத் துணியாத கோழைக ளாகவோ, அம் முயற்சி செய்ய மனமில்லாத சுயநலக்காரர்க ளாகவோ இருப்பின், அவர்கள் அன்னியர் காலின்கீழ் மிதிக்கப் பட்டு அடக்கி ஆளப்படுவதே நியாயமாகும். அவ்வாறு நடத் தப்படுவதற்கே அவர்கள் உரியவர்களாகிறார்கள். ஒவ்வொரு தேசமும் தன் தகுதிக்கேற்ற அரசாங்கத்தையே பெறுகின் றது. சமூகத்தில் பொறுக்கி எடுத்த மணிகளாகிய நீங்கள், கல்வி யறிவில் தலைசிறந்த நீங்கள், சொந்த நலத்தையும் சுயநல நோக்கத்தையும் வெறுத்துத் தள்ளி, உங்களுக்கும் உங்கள் நாட்டுக்கும் விடுதலை தேடிக்கொள்ளவும், தேசத்தில் பார பட்சமற்ற ஆட்சிமுறை ஸ்தாபிக்கவும், உங்கள் சொந்தக் காரியங்களின் நிர்வாகத்தில் அதிக செல்வாக்குப் பெறவும் உறுதியுடன் போராட முன் வராவிடில், உங்களுடைய நண்பர் களாகிய நாங்கள் தவறு செய்தவர்களே யாவோம்; நமது எதிரி களின் கட்சியே சரியானதென்று ஏற்படும்; உங்களுடைய நன் மையைக் கருதி லார்டு ரிப்பன் கொண்டிருந்த உத்தேசங்கள் எல்லாம் பயனற்ற பகற்கனவுகள் ஆகும்; முன்னேற்றத்துக் குறிய ஆசைகளையெல்லாம் தற்போதைக்கேனும் விட்டொ ழித்துவிட வேண்டியதுதான்; இந்தியாவுக்கு இப்போதுள்ள அரசாங்கமே ஏற்றது, இதனினும் சிறந்த ஆட்சிமுறைக்கு அது தகுதியற்றது என்பது உண்மையாகும். அங்ஙனமாயின், உங் களைப் பொம்மைகளைப் போல் ஆட்டுவிக்கிறார்களென்றும், குழந்தைகளைப்போல் நடத்துகிறார்களென்றும் குறை சொல் லாதீர்கள். ஏனெனில் நீங்கள் குழந்தைகள் என்றே நிரூபித்துக் கொண்டவர்களாவீர்கள். வயது வந்த ஆண் மக்கள் எனில்

காரியம் செய்யும் வகை அறிந்திருப்பார்களன்ருே? பெரிய உத்தியோகங்களுக்கு உங்களைப் புறக்கணித்து ஆங்கிலேயரை நியமிப்பது குறித்தும் குறை கூறவேண்டாம். ஏனெனில், உயரிய பரோபகார உணர்ச்சி கொண்டு பொது நன்மைக்காகச் சொந்த சுகத்தைத் தியாகம் செய்ய நீங்கள் முன்வர வில்லையாகுல், ஆங்கிலேயரை இத்தகைய மேனிலைக்குக் கொண்டு வந்திருக்கும் உண்மையான தேசபக்தி உங்களிடம் இல்லையாகுல், உங்களுக்கு மேலாக அவ்வாங்கிலேயர் தேர்ந்தெடுக்கப்படுவது முற்றும் சரியாகுமன்ருே? அவர்கள் உங்களை ஆளுவோராதலும் இயல்பேயன்ருே? தனி மனிதர்களுக்காகட்டும், தேசங்களுக்காகட்டும், தன்னல மறுப்பும், தியாக புத்தியுமே சுதந்திரத்துக்கும், சந்தோஷத்துக்கும் தவருத வழிகளாகும். இந்த அநாதியான உண்மையை நீங்கள் அறிந்து அதைக்கடைப்பிடியாதவரையில், ஆங்கிலேயரே உங்களை ஆளுவோராகவும், உங்கள் எஜமானர்களாகவும் இருந்து வருவர். அன்னிய ஆட்சியின் துன்பத்தை நீங்கள் எவ்வளவுதான் உணர்ந்து வருந்திலுைம் பயனில்லை.''

இவை, இராஜ தந்திரியின் வார்த்தைகளல்ல; வஞ்சக வேஷதாரியின் மொழிகளுமல்ல. மிஸ்டர் ஹியூம் மனதில் ஒன்று வைத்து வெளியில் ஒன்று சொல்லக் கூடியவரல்லர். பரிபூரணமான உண்மை உள்ளத்துடனேயே அவர் இம்மொழிகளைக் கூறினர் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. மிஸ்டர் ஹியூம் அளவில்லாத சுதந்திர தாகங் கொண்டவர். இந்தியாவில் குடிகொண்டிருந்த துன்பத்தையும், வறுமையையும் கண்டு அவர் இரத்தக் கண்ணீர் வடித்தார். நல்லரசாட்சியினுல் அத்துன்பத்தையும், வறுமையையும் போக்கலாமென அவர் நம்பினர். தம்முடைய நாட்டார் இந்தியர்கள் விஷயத்தில் ''கோழைத் தனமாக'' நடந்துகொள்வது குறித்து அவர் நெஞ்சங் கொதித்தது. வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுப் பின்னர் அவை புறக்கணிக்கப்படும் முறையானது அவரை வெட்கித் தலைகுனியச் செய்தது. சரித்திர ஆராய்ச்சி மிகுதியும்

உடையவராதலால், தேசிய அரசாங்கமாயினும், அன்னிய அரசாங்கமாயினும் - எந்த அரசாங்கமும் - கட்டாயப் படுத்தப் பட்டாலன்றிப் பொது ஜனங்களின் கோரிக்கைக் கிணங்குதல் அருமை என்று அவர் அறிந்திருந்தார். அன்னிய அரசாங்கத்தின் விஷயத்தில் இது இன்னும் அபூர்வ மாதலின், இந்தியர்கள் சுதந்திரம் வேண்டினல் அதற்காக அவர்கள் போராட வேண்டுமென்று கூறினர். இம் முயற்சிக்கு முதற்படி நிர்மாண வேலையே யாதலின் ஒரு சங்கம் ஸ்தாபிக்கும்படி அவர் யோசனை சொன்னர்.

மற்றும், ரானடே, திலகர், நௌரோஜி, டபுள்யூ. சி. பானர்ஜி, அயோத்தியா நாத், தயாப்ஜி முதலியோர் பிரிட்டிஷாரின் கையில் கருவிகளாயிருந்தார்கள் என்றும் நாம் நம்ப முடியாது. நாம் அவ்வாறு நினைக்கவே இல்லை. அவர்கள் எல்லாரும் உண்மையான தேச பக்தர்களேயாவர். அவர்கள் தாய்நாட்டினிடம் அன்பு கொண்டிருந்தார்கள். மிகச் சிறந்த நோக்கங்களுடன் அவர்கள் காங்கிரஸை ஸ்தாபித்தார்கள். பிரிட்டிஷ் அநுதாபிகள் சிலர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நன்மையை முதன்மையாகக் கருதியிருக்கலாம். காங்கிரஸை ஆதரிப்பதால் ஏகாதிபத்தியத்தைப் பலப் படுத்தலாமென்றெண்ணி அவர்கள் அச் சபையைச் சேர்ந்திருக்கலாம். ஆனல் மக்கட் குலத்தினிடம் எல்லையற்ற அன்பும், தீவிர சுதந்திரப் பற்றும் உடைய பிரிட்டிஷார் சிலர் உண்டென்பதை இந்நூலாசிரியர் தம் சொந்த அநுபவத்தில் அறிந்திருக்கிறர். அவ்வன்பும் சுதந்திரப் பற்றும் அவர்கள் இதயத்தில் நிலைபேருகக் குடிகொண்டவையென்று அவர் அறிவார். ஆதலின் காங்கிரஸினிடம் அநுதாபங் காட்டிய ஆங்கிலேயரில் சிலராவது இத்தகையோரா யிருந்திருக்க வேண்டுமென அவர் நம்பவேண்டியிருக்கிறது.

ஏகாதிபத்திய வெறிகொண்டவர்கள் இத்தகைய மனிதர்களைச் "சின்ன ஆங்கிலேயர்" (Little Englanders) என்று

அவமதிப்பாக அழைக்கிறார்கள். உண்மையில், இவர்கள் விசால இதயம் படைத்துள்ள காரணத்தினாலேயே ஏகாதிபத்திய வாதிகளா யிருக்கக்கூடவில்லை. இவர்கள் மக்கட்குலம் அனைத்தும் ஒன்றே எனும் நம்பிக்கை கொண்டவர்கள்; மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் சுதந்திரம் பிறப்புரிமை என நம்புகிறவர்கள். பிறருடைய சுதந்திரத்தைப் பறிப்பவனும், பிறர் பொருளை அபகரித்துத் தன் பெருமையை நாட்டுபவனும், வலிமையினாலோ சூழ்ச்சித் திறமையினாலோ பிறருடைய உரிமைகளைக் கொள்ளை கொள்பவனுமான ஒரு மனிதன் தங்கள் சொந்த நாட்டானாயிருந்தாலும் அவன் கொடுங்கோலனாகவே அவர்களுடைய கண்களுக்குத் தோன்றுகிறான். அவர்கள் தேச பக்தியில் மற்றவர்களுக்குத் தாழ்ந்தவர்களல்லர். தங்களுடைய சுதந்திரத்துக்காகவும், தங்கள் நாட்டின் உரிமைக்காகவும் தங்கள் உடலில் ஒரு சொட்டு இரத்தம் உள்ளவரையில் போராடக்கூடியவர்கள். ஆனால் தங்கள் நாட்டார் பிற தேசத்தாரின் சுதந்திரத்தைப் பறிக்கும்போதும் கரகோஷம் செய்து பாராட்டும் வண்ணம் அவர்களுடைய தேசபக்தி அவ்வளவு தூரம் செல்வதன்று. இவ்வுலகில் சுதந்திரத்துக்குப் போராடுவோர் எந்த நாட்டாராயினும் அவர்களுடைய உண்மை நண்பர்களான பிரிட்டிஷார் சிலர் உண்டு என்பதில் ஐயமில்லை. தங்கள் நாடு இந்தியாவை ஆளுவது குறித்து அவர்கள் வருந்துகிறார்கள். அவர்களால் முடியுமானால், உடனே பாரத நாட்டிலிருந்து ஆங்கில ஆட்சியை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்வார்கள். இவர்களில் சிலர் இந்திய தேசியவாதிகளிடம் மனப்பூர்வமான அநுதாபங் கொண்டவர்கள். காங்கிரஸ் மகாசபை ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து, அதற்கு முன்பிருந்துங்கூட, அவர்கள் அநுதாபங் காட்டி வருகிறார்கள். இந்திய தேசீய இயக்கம் அவர்கள் விரும்புமளவுக்கு வெற்றிபெறுவிடின், திட்டமான பயன் எதுவும் அவ் வியக்கத்தினால் காட்ட முடியாவிடின், அது அவர்களுடைய தவறன்று. தவறு முற்றிலும் இந்தியர்களுடையதேயாகும். அல்லது சந்தர்ப்பங்கள் கூடவில்லை யென்பதும் ஒரு காரணமாயிருக்கலாம்.

மிஸ்டர் ஹியூம் தூய நோக்கங்கொண்டவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர் ஒரு விஷயத்தை மறந்துவிட்டார். ஆளும் வகுப்பாரின் அதிகாரங்களையும், உரிமைகளையும் குறைப்பதற்கென்று காணப்படும் ஓர் அரசியல் ஸ்தாபனம்; அவர்களுடைய யதேச்சாதிகாரத்தையும், ஆட்சிமுறையையும் ஆட்சேபிப்பது; சுருங்கச் சொன்னால், அவர்களை இராஜ்யாதிகாரத்தினின்று நீக்குவதே முதன்மையான நோக்கமாகக் கொண்டது; —இத்தகைய அரசியல் ஸ்தாபனம் ஒன்று அந்த ஆளும் வகுப்பாரின் தூண்டுதலாலே அல்லது அவர்களுடைய ஆதரவின் கீழோ அமைக்கப்படுதல் பெரிதும் முரண்பாடான காரியமன்றோ? இது இயற்கைக்கு முற்றும் விரோதமானது என்று சொல்லவும் வேண்டுமோ? காங்கிரஸ் மகாசபையைக் கண்ட இந்தியர்களும், ஆரம்பத்தில் எவ்வித இடையூறும் எதிர்ப்பும் இன்றித் தொடங்க வேண்டுமென்னும் ஆசையினால் தங்கள் சரித்திர ஞானத்தை மறந்துவிட்டார்கள். ஆதலின், "விடுதலை விரும்புவோர் தங்கள் கையினாலேயே தங்களைப் பிணித்துள்ள தளைகளை அறுத்தெறிய வேண்டும்" என்னும் உண்மையை அவர்கள் கவனியாது போயினர். யாருடைய தளையிலிருந்து நாம் விடுபடவேண்டுமோ அவர்களே நமது விடுதலை முயற்சிக்கு ஆசி கூறுவார்களென்று எதிர்பார்ப்பது பெருந்தவறு என்பதை அவர்கள் உணரவில்லை. "இந்தியர் எவரும் காங்கிரஸ் மகாசபையை ஸ்தாபித்திருக்க முடியாது" என்றும், "அக்காலத்தில் அரசியல் கிளர்ச்சி என்றாலே அதிகாரிகளுக்கு மிகுந்த அவநம்பிக்கை இருந்தது. ஆதலின் காங்கிரஸை ஸ்தாபித்தவர் ஒரு பிரபல ஆங்கிலேயராகவும், புகழ்பெற்ற மாஜி உத்தியோகஸ்தராகவும் இருந்திராவிடின், அதிகாரிகள் ஏதேனும் ஒருவழியில் அவ்வியக்கத்தை ஒடுக்கியிருப்பார்கள்" என்றும் ஸ்ரீ கோகலே கூறியிருப்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது.

முதலாவதாக, காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்ட போதுதான் அரசியல் கிளர்ச்சி ஆரம்பிக்கப் பட்டதென்று கூறுவது தவறாகும். அதற்கு முன்பிருந்தே அரசியல் கிளர்ச்சி நடந்துதான்

வந்தது. அதை ஒடுக்குவதற்குக் கையாண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இரண்டாவதாக, அக்காலத்தில்தான் அரசியல் கிளர்ச்சியில் அவநம்பிக்கை அதிகம் என்பதும் சரியன்று. பிற்காலத்திலும் இந்நாளிலுங்கூட அந்த அவநம்பிக்கை குறைந்துவிட்டதாகச் சொல்ல முடியாது. மேலும் இந்தியர் எவரும், பல இந்தியர் தங்கள் கூட்டு முயற்சியினாலுங் கூடக் காங்கிரஸ் இயக்கத்தை ஆரம்பித்திருக்க முடியா தென்பது உண்மையானால், அதனால் நிரூபிக்கப் படுவதென்ன? அவ்வியக்கம் உரிய காலத்திற்கு முன்பே தொடங்கப் பட்டதென்பதும், தவறான அஸ்திவாரத்தின் மீது அமைக்கப் பட்டதென்பதுமே யாகும்.

“ஒரு நாட்டுக்காயினும், தனி யொருவனுக்காயினும் ஜீவாதாரமான முன்னேற்றம் எதுவும் உள்ளிருந்து தோன்றியே வளர்ச்சி பெறுதல் வேண்டும்” என்றும், “முன்னேற்ற முயற்சிகள் தொடங்குவதற்குத் தேசம் தன் சொந்தப் புதல்வர்களையே எதிர்பார்த்து நிற்கிறது” என்றும் மிஸ்டர் ஹியூம் கூறியுள்ளாரன்றோ? “என்னைப் போன்ற அன்னியர்கள் பாரத நாட்டை நேசிக்கலாம்;...போராடலாம்; தியாகம் செய்யலாம்; ஆனால் இவை யெல்லாம் பயன்பட மாட்டா...அன்னியர்கள் ஆலோசனை கூறி உதவி செய்யலாமேயன்றி உண்மையான வேலை நாட்டு மக்களாலேயே செய்யப்படுதல் வேண்டும்” என்று அவர் 1883-ம் ஆண்டில் விடுத்த அறிக்கையில் சொல்லவில்லையா? இவை எளிதில் விளங்கும் தெளிவான, அடிப்படையான உண்மைகளாகும். அவற்றிற்கு முரணாகச் செய்யப்படும் முயற்சி எதுவும் பயனற்றதாகவே முடியும். காங்கிரஸின் இந்தியத் தலைவர்கள் இக் கொள்கைகளில் அடங்கிய பேருண்மையை எப்போதுமே* பூரணமாய் உணர்ந்தவர்களல்லர். காங்கிரஸ் முயற்சிகளினால் பெரும் பயன் எதுவும் விளையாததற்குக் காரணம் இதுவேயாகும்.

* இப் பகுதியைப் படிக்கும்போது இந்நூல் 1916-ல் எழுதப்பட்டதென்பது வாசகர்களுக்கு நினைவிருக்க வேண்டும்.

மிஸ்டர் ஹியூம் தமது அறிக்கையில் "உண்மையான, மனப்பூர்வமான, சுயநலக் கலப்பற்ற தேச பக்தியும், அவசியமானல் தங்கள் வாழ்நாள் முழுவதையும் தாய் நாட்டின் தொண்டுக்கே அர்ப்பணம் செய்யும் உறுதியும் கொண்ட" ஐம்பது இந்தியர்கள் வேண்டுமென்று கேட்டிருந்தார். அவ்வாறு தாய் நாட்டின் தொண்டுக்கே தங்கள் வாழ்நாளை சமர்ப்பித்த எவ்வளவோ ஐம்பது பேர் அந்நாளில் இந்தியாவில் இருந்தனர் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அவர்கள் அரசியல் துறையில் தொண்டு செய்யவில்லை. காங்கிரஸ் முறைகளைக் கடைப்பிடித்து இருபதாண்டு காலம் வேலை செய்த பின்னர், அரசியல் தொண்டுக்கே தங்கள் வாழ்நாளைத் தத்தம் செய்த பன்மடங்கு ஐம்பது பேர் நாட்டுக்குக் கிடைத்தனர். ஆனால் இவர்கள் காங்கிரஸ்காரர்களல்லர்; காங்கிரஸைச் சேர்ந்தவர்களு மல்லர். காங்கிரஸ் தலைவர்களுக்குள் ஸ்ரீ தாதா பாய் நௌரோஜியையும், ஸ்ரீ கோகலேயையும் தவிர்த்து, மிஸ்டர் ஹியூம் கோரிய வண்ணம் காங்கிரஸ் தொண்டுக் கென்றே தங்கள் வாழ்நாளை அர்ப்பணம் செய்தவர்கள் என்று யாரைச் சொல்லக் கூடும்? சென்ற முப்பதாண்டுகளில், தாய் நாட்டின் தொண்டுக்காகத் தங்கள் உடல், பொருள், ஆவியைத் தத்தம் செய்த உத்தமப் புதல்வர்கள் பலரைப் பாரதத் தாய் பெற்றெடுத் திருக்கிறாள். எல்லா மாகாணங்களிலும், எல்லாச் சமயங்களிலும், எல்லாச் சாதி வகுப்புகளிலும் அவர்கள் தோன்றி யிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குள்ளே காங்கிரஸில் சேர்ந்தோ, காங்கிரஸுக்காகவோ வேலை செய்வோர் மிகச்சிலரோ யாவர். மேற்குறிப்பிட்ட காலத்தில் இந்தியர் பலர் கல்வி முதலிய பொது அறங்களுக்காக லட்சக் கணக்கான பணம் கொடுத்திருக்கிறார்கள். சிலர் தங்கள் வாழ்நாளின் சம்பாத்தியம் முழுவதையும் இவ்வா றளித்திருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் வேலை மட்டும் எப்போதும் பணமுட்டினல் தடைபட்டு வந்திருக்கிறது. லண்டனில் உள்ள காங்கிரஸ் மகா சபையின் பிரிட்டிஷ் கமிட்டிக்கு, அதன் வேலையைச் சரிவரச் செய்ய எப்பொதுமே போதிய பணம் கிடைத்ததில்லை. பிரிட்டிஷ் கமிட்டியின் செலவுகள் பெரிதும் ஸர் வில்லி

யம் வெட்டர்பர்ன் மீதே சுமந்திருக்கின்றன. அவரும் மிஸ்டர் ஹியூமும் சேர்ந்து இவ்வியக்கத்துக்காகச் செலவழித் திருக்கும் தொகை ஒரு பெரிய ஆஸ்தியாகும். அவர்கள் செலவு செய்துள்ள தொகையின் ஒரு பகுதி கூடத் தனி இந்தியன் எவனாலும் காங்கிரஸிற்காகச் செலவழிக்கப் பட்டதில்லை. இந்நிலைமைக்குக் காரணம் யாதென்னும் கேள்வி இயற்கையாக எழுகின்றதன்றோ? காரணம் வெள்ளிடைமலை. அவ்வியக்கம் தேசப் பொது மக்களின் உள்ளத்தைக் கவரவில்லை. ஓர் இயக்கத்திற்காகப் பெருந் தியாகங்கள் செய்வதற்கு அவ்வியக்கத்தில் அளவற்ற நம்பிக்கை வேண்டும். காங்கிரஸ் தலைவர்களுக்கு அத்தகைய நம்பிக்கை கிடையாது.

காங்கிரஸின் ஆரம்ப நாட்களில் ஆங்கிலம் படித்த இந்தியர்களுக்கு அது சம்பந்தமான உற்சாகம் நிரம்ப இருந்தது. பாமர ஜனங்களிடையே பிரசாரம் செய்ய முயற்சி எதுவும் தொடங்காதிருந்த வரையில் அரசாங்க அதிகாரிகளும் அவ்வியக்கத்தில் அநுதாபந் தெரிவித்தார்கள். 1886-ம் ஆண்டில் கல்கத்தாவில் இரண்டாவது காங்கிரஸ் மகாசபை நடந்த போது அச்சபை அங்கத்தினர்களை அரசாங்க மாளிகையில் நடந்த வனபோஜனத்துக்கு லார்டு டபரின் அழைத்தார். 1887-ம் ஆண்டில் காங்கிரஸ் சென்னையில் கூடிய போதும் சென்னைக் கவர்னர் இவ்வாறே அவர்களுக்கு மரியாதை செய்தார்.* ஆனால் இங்கிலாந்தில் "தானியச் சட்ட சங்கத்தார்" (Corn-Law Leaguers) கையாண்ட முறைகளையும், தந்திரங்களையும் 1888-ம் ஆண்டில் மிஸ்டர் ஹியூம் கைக்கொண்ட போது அரசாங்கம் அதிருப்தி யடைந்து தன் அதிகார வலிமையைக் காட்ட லாயிற்று. உடனே காங்கிரஸும் பணிவு மேற்கொண்டு எந்த ஒரே முறையினால் தன் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளலாமோ அதைக் கைவிட்டது. ஏன்? மிஸ்

*இத்தகைய மரியாதைகள் 1914-ம் ஆண்டில் மீண்டும் தொடங்கப் பெற்றன. அவ் வருஷம் சென்னையில் கூடிய காங்கிரஸுக்கு அம் மாகாணத்தின் கவர்னர் விஜயம் செய்திருந்தார்.

டர் ஹியூம் கூறிய வண்ணம் "செயல் புரியக் கூடிய ஆண் மக்கள்" இல்லாமையினுல்தான்.

## காங்கிரஸ் இயக்கம் தேசிய இயக்க மன்று

அப்போதிருந்து, காங்கிரஸ் சத்தியத்தையும் தேச நலத்தையும் விட அரசாங்கத்தின் அபிப்பிராயத்தையும் அதிகாரிகளின் கருத்தையுமே அதிகமாகப் பொருட்படுத்தி வந்திருக்கிறது. இது ஏன் என்று கேட்கப்படின் "தலைவர்களுக்கு உண்மையான அரசியல் உணர்ச்சியும் நம்பிக்கையும் இல்லை" என்றே பதில் கூறவேண்டும். அவர்களுக்கு அரசியல் அபிப்பிராயங்கள் சில இருந்தன. ஆனல் அவ் வபிப்பிராயங்கள் துன்ப மநுபவிக்கத் துணிவு தரும் நம்பிக்கைகள் அல்ல. அதிகாரிகளின் அதிருப்திக்குச் சிறிதளவு உள்ளாகத் துணிந்து, தேசத்தின் ஆட்சி முறையில் சிற்சில சீர்திருத்தங்கள் அவசியமென்று வற்புறுத்த அவர்கள் சித்தமா யிருந்தனர். ஆனல் தங்கள் கட்சியின் பொருட்டுக் கொடுமைகளுக் குள்ளாகவோ துன்பஞ் சகிக்கவோ அவர்கள் சித்தமா யில்லை. இதிலிருந்து தங்களுக்கொரு கட்சி இருக்கிற தென்பதையே அவர்கள் உணர வில்லையென்றே அல்லது, அக் கட்சியின் பொருட்டுத் துன்பம் சகிக்கும் அளவுக்கு அவர்களுக்கு அதில் சிரத்தை யில்லை யென்றே ஏற்படும். ஒரு கால், தேசம் தீவிரமான இயக்கம் எதற்கும் சித்தமாயில்லை யென்பதைக் கண்டு, ஒன்றுமில்லா திருப்பதை விட ஏதேனும் சிறு முயற்சியாவது செய்யலாமென அவர்கள் கள் எண்ணியிருக்கலாம், தீவிரமான இயக்கம் எதுவும் தொடங்குவதற்கு முன்பு தேசத்தினர்க்கு அரசியல் கிளர்ச்சி முறைகளில் பயிற்சி யளிக்கவும், தேசிய சக்திகள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டவும் அவர்கள் விரும்பி யிருக்கலாம். அவர்கள் சார்பாகச் சொல்லக்கூடியது இவ்வளவுதான். ஆனல் தேசிய இயக்கத்திற் குரிய இன்றியமையாத அம்சங்கள் அவர்களுடைய இயக்கத்தில் இல்லை யென்பது நிச்சயம். காங்கிரஸை ஸ்தாபித்தவர்களிடமும், சில வருஷங்களுக்கு

முன்பு அவை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்களிடமும் நமக்கு மிகுந்த மரியாதை யுண்டு. ஆயினும் அவர்களுடைய நடத்தையினாலேயே மேற்கூறிய உண்மை நன்கு வெளியாகிற தென்பதை எடுத்துக்காட்டா திருக்க முடியவில்லை.

ஓர் இயக்கத்தைக் காண்பவர்கள் அது தேசிய இயக்கமாக வேண்டு மென்று விரும்புவதால் மட்டுமே அது தேசிய இயக்கமாகிவிடாது. தேசிய அரசியல் இயக்கம் ஒன்றைத் தொடங்குவோர் அதற்காகப் பெருந் தியாகங்கள் செய்யச் சித்தமா யிருந்தாலன்றி அத்தகைய இயக்கம் ஒன்றைத் தொடங்குவதே தவறென்பது என்னுடைய அபிப்பிராயம். அரை மனதுடன் தொடங்கித் தயக்கத்துடன் நடத்தப்படும் ஓர் அரசியல் இயக்கம்; எவ் வகுப்பாரை எதிர்த்தல் அதன் நோக்கமோ அவ் வகுப்பாரின் அநுதாபத்தையே நம்பி நடைபெறுவது; ஒவ்வொரு காரியமும் அவர்களுடைய விருப்பத்தைக் கலந்துகொண்டு செய்வது; தங்களுக்கு ஏதேனும் ஆபத்து வந்துவிடுமோ வென்று ஒவ்வொரு நிமிஷமும் நடுங்கிக் கொண்டிருப்பவர்களையும், தங்கள் பணப் பெட்டியை இறுக்கிப் பூட்டி வைப்பவர்களையும், தங்கள் சொந்த நன்மைகளுக்கும், வருமானத்துக்கும், சுக சௌகரியங்களுக்கும் கேடு நேராத வகையில், அதிகாரிகள் அநுமதிக்கும் அளவில் மட்டுமே காரியம் செய்பவர்களையும் தலைவர்களாகக் கொண்டது; இத்தகைய இயக்கம் தேசத்தின் உண்மை நலங்களுக்குப் பாதகமானதே யாகும். அதன் இயல்பே அத்தகையது. ஓர் அரசியல் இயக்கத்தினால் நன்மை விளைய வேண்டுமாயின் அதன் தலைவர்கள் அதில் முழுமனதுடன் ஈடுபடவேண்டும். ஒரு புறத்தில், அவர்கள் தங்களைப் பின்பற்றுவோரிடையே பெருந் தியாகங்கள் செய்யச் சித்தமாகுமாறு உற்சாகம் உண்டாக்கவேண்டும். மற்றொரு புறத்தில், அவ்வியக்கத்தினால் என்ன விளையுமோ என்று எதிரிகள் ஓரளவு பயப்படுமாறு செய்யவேண்டும். இவ்விரண்டும் செய்யமுடியாத ஓர் அரசியல் இயக்கத்தினால் தீமையே விளையும். ஜனங்களிடையே உற்சாகமும், எதிரிகளி

னிடையே அச்சமும் உண்டு பண்ணுமாறு இயக்கத்தை நடத்த வேண்டுமானல், இயக்கத்தின் தலைவர்கள் அதற்காகத் துன்பஞ் சகிக்கச் சித்தமாயிருக்கவேண்டும். ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவன் அதில் தன்னுடைய நம்பிக்கையையும் சிரத்தையையும் நிரூபிக்கக் குறைந்த பட்சமாகச் செய்யக் கூடியது பணத் தியாகமே யாகும்.

காங்கிரஸ் இயக்கத்தின் இந்தியத் தலைவர்கள் பலரையும் விட அவ்வியக்கத்தின் ஆங்கில நண்பர்கள் அதிக சிரத்தை காட்டினர்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவழித்தார்கள்; தங்கள் சொந்த நாட்டாரின் அப்பிரியத்துக்குப் பாத்திரமானர்கள்; தாய் நாட்டின் துரோகிகள் என்னும் பழிச் சொல்லையும் ஏற்ருர்கள். மிஸ்டர் ஹியூம் காங்கிரஸ் இயக்கத்தில் கொண்டிருந்த சிரத்தை அள வற்றதாகும். அவர் அதிகாரிகளுடைய ஆதரவுடன் இயக்கத்தை ஆரம்பித்துப் பலன்களுக்காக இரண்டு வருஷம் பொறுத்துப் பார்த்தார். ஆனல் அதிகாரிகளுடைய வாய் அநுதாபமெல்லாம் வெறுங் கேலிக்கூத்தே என்று அவர் உணர்ந்தபோது — பாமர ஜனங்களின் துன்பத்தைக் குறைக்கவும், அவர்களுடைய குறைகளைப் போக்கவும் அதிகாரிகள் எதுவும் செய்யவில்லையென்று கண்டபோது — அவர் இயக்கத்தைத் தீவிரமாக்க முயன்ருர். இந்திய மக்களுக்கு உண்மை நிலையை எடுத்துச் சொல்லி, அவர்கள் தங்களுடைய உரிமைகளையும் தங்களுக் கிழைக்கப்படும் அநீதிகளையும் உணரும்படி செய்ய அவர் முன்வந்தார். "பஞ்சத்திஞலும், நோயிஞலும் ஆயிரக்கணக்கிலன்று — லட்சக்கணக்கிலன்று — பத்து லட்சக் கணக்கில் ஜனங்கள் மடிந்துவருகிருர்கள். எனவே இது மிகவும் அவசரமான விஷயம்"* என்று அவர் கருதினர். "அரசாங்கத்தைக் கட்டாயப் படுத்தி ஏதேனும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளச் செய்வதற்காக இந்திய ஜனத் தலைவர்கள் உடனே

* ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் எழுதிய மிஸ்டர் ஹியூமின் சரித்திரம், 62-ம் பக்கம்.

பலமான முயற்சிகள் தொடங்க வேண்டும். இங்கிலாந்தில் ஜனங்களின் உணவுக்காக (தானிய இறக்குமதி வரியை நீக்குவதற்காக) நடந்த பெரும் போராட்டத்தில் பிரைட்டும் (Bright), காப்டனும் (Cobden) கடைப்பிடித்த தீவிர முறைகளை அவர்களும் கைக்கொள்ள வேண்டும்" என்று அவர் முடிவுசெய்தார். எனவே காப்டனைப்போன்று ஹியூமும் பின் வருமாறு தீர்மானித்தார்;—"அரசாங்கத்துக்கு ஆலோசனை சொல்லக் காங்கிரஸ் தலைவர்கள் தொடங்கிய முயற்சி பயனளிக்கவில்லை. அவர்களிடம் ஆலோசனை கேட்க அரசாங்கத்தார் மறுத்துவிட்டனர். எனவே, அடுத்தபடியாக, ஜனங்களுக்கு நிலைமையை அறிவிக்கும் முயற்சியில் இறங்கவேண்டும். தீவகத்தில் வாழும் ஆங்கிலப் பெரு மக்களுக்கும், அவர்களினும் பெருமையிற் சிறந்த இவ் விஸ்தாரமான பரத கண்டத்தின் மக்களுக்கும் உண்மை நிலைமையை எடுத்துக் கூறவேண்டும். காப்டனையும் அவருடைய வீரத் தோழர்களையும் போன்றே நாமும் நமது சுதந்திரத்திற்காகவும், நமது உரிமைகளுக்காகவும், நியாயத்திற்காகவும் பெரும் போர் நடத்துங்கால், அந்தப் போரில் இந்தப் புண்ணிய பூமியில் பிறந்த ஒவ்வோர் இந்தியனையும் நமது தோழனுகவும், துணைவனுகவும் அடையுமாறு நாம் பெரு முயற்சி செய்தல் வேண்டும்."*

## ஹியூமின் அரசியல் இயக்கம்

மேலே எடுத்துக்காட்டிய மிஸ்டர் ஹியூமின் மொழிகள் பொன்னே போல் போற்றத்தக்கவையாகும். யதேச்சாதிகார அரசாங்கங்களுடன் நடத்தும் போரில் வெற்றிதரக்கூடிய ஒரே வழியை அவர் அம் மொழிகளால் காட்டியிருக்கிருர். மிஸ்டர் ஹியூமின் சரித்திராசிரியர் மேலும் கூறுவதாவது :—"மிஸ்டர் ஹியூம் தமக்கு இயற்கையான பேருக்கத்துடன் இந்தியாவில் அத்தகைய பிரசார வேலையைத் தொடங்கினர். இந்திய சமூகத்தைச் சேர்ந்த எல்லா வகுப்பாரையும் அவ்வேலைக்கு நிதி

* மிஸ்டர் ஹியூமின் சரித்திரம், 63-ம் பக்கம்.

உதவும்படி அவர் வேண்டிக்கொண்டார். துண்டுப் பிரசுரங்கள் ஏராளமாக அச்சிட்டு விநியோகித்தார். உபந்நியாசகர்களை அனுப்பிப் பெரிய பட்டணங்களிலும், வெளி ஜில்லாக்களிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தச் செய்தார். தேசம் முழுவதிலும் ஓராயிரம் கூட்டங்களுக்குமேல் நடைபெற்றன. இவற்றில் பல கூட்டங்களுக்கு ஐயாயிரம் ஜனங்களுக்குமேல் வந்திருந்தார்கள். ஐந்து லட்சம் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. ஸ்தலத்திலில்லாத ஜமீன்தாரின் ஆளுகையைப் போன்ற ஆட்சிமுறையினுல், அதன் நோக்கம் எவ்வளவு தயாளம் பொருந்தியதாயினும், தீமைகள் பல விளையுமென்பதைக் கதைவடிவில் விளக்கும் இரண்டு அரிய துண்டுப் பிரசுரங்கள் பன்னிரண்டு இந்திய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன."*

இது உண்மையான அரசியல் வேலையாகும். சிறந்த அரசியல் நுண்ணறிவுடன் மிஸ்டர் ஹியூம் காரியம் செய்தார் என்பதில் சந்தேகமில்லை, இவ் வேலையைத் தொடர்ந்து நடத்தியிருந்தால் காங்கிரஸின் சரித்திரமே வேறு விதமா யிருந்திருக்கும். ஒருகால் புரட்சிக் கட்சி தோன்றுமலே போயிருக்கலாம்; அல்லது இன்னும் சீக்கிரமாக அது தோன்றியிருத்தல் கூடும். எங்ஙனமாயினும், அரசியல் துறையில் தேசம் இப்போதைவிட அதிக முன்னேற்றம் எய்தியிருக்கும். ஆனுல் இவ்வாறு நடைபெறவில்லை. அரசியல் வேலை தொடங்கியதும் அரசாங்கம் காங்கிரஸின்மேல் விரோதபாவங்கொண்டது. கல்கத்தாவில் நடந்த ஒரு விருந்தில் டபரின் பிரபு காங்கிரஸ்காரர்களைக் குறித்து "அணுவையொத்த சிறுபான்மையோர்" என்று அவமதிப்புடன் பேசினுர். ஸர் ஆக்லாண்டு கால்வின் முகமதியர்களைத் தூண்டிவிட்டுக் காங்கிரஸுக்கு விரோதமான சங்கம் ஒன்று ஸ்தாபிக்கச் செய்தார். காங்கிரஸை விஷமமான இராஜதுவேஷ சபை என்று அவர் பலமாகக் கண்டித்து, அது

* மிஸ்டர் ஹியூமின் சரித்திரம், 63-ம் பக்கம்.

போன்ற அரசியல் இயக்கத்துக்கு இன்னும் காலம் வந்துவிட வில்லையென்று கூறினர்.

## காங்கிரஸ் பயமடைதல்

இதன் பின்னர், மிஸ்டர் ஹியூம் கொஞ்சம் கீழிறங்கித் தமது நிலையை விளக்கிக் கூறலானர். "காங்கிரஸ், ஜனங்களின் உணர்ச்சி உள்ளுக்குள் குமறி அபாயம் விளைவியாமல் அவ்வுணர்ச்சி பொங்கிவழிவதற்குரிய ஒரு சாதனமேயாகும்" என்னும் கொள்கையை இப்போதுதான் அவர் கிளத்தினர். பாமர ஜனங்களிடையே பிரசாரம் செய்தல் உடனே கைவிடப் பட்டது. அதற்குப் பிறகு அப்பிரசாரம் (1920-ம் ஆண்டுக்கு முன்னல்) காங்கிரஸினல் எப்போதும் கைக்கொள்ளப் பட வில்லை. இங்கிலாந்தில் காங்கிரஸ் இயக்கம் பணமில்லாமை காரணமாக மடிந்தது. இந்தியாவில் விடா முயற்சியும் சிரத்தையுமின்மையால் அது வீழ்ந்து பட்டது. ஆனல் மிஸ்டர் ஹியூம் பிற்காலத்தில் இவ்வாறு பின் வாங்கியதற்குக்கூடக் காரணம், இந்தியத் தலைவர்களின் பயமும், அரைமனதுமே யென்று தோன்றுகிறது. இந்தியத் தலைவர்கள் தங்கள் கட்சியில் உறுதியாக நின்று பிரசாரம் நடத்தியிருந்தால் தேசமும் அவர்களுக்கு ஆதரவாகத் திரண்டு வேண்டிய பணமும் அளித்திருக்கும். ஒருகால் சிற்சில கலவரங்கள் நேர்ந்திருக்கலாம்; சிலர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கலாம். ஆனல் இவை, இங்கிலாந்தில் அரைமனதுடன் செய்த இருபத்தெட்டு வருஷப் பிரசாரத்தைவிட அதிகமாய் இந்தியாவின் நிலைமையை ஆங்கிலப் பொது மக்களின் கவனத்துக்குக் கொணர்ந்திருக்கும். இந்திய ஜனங்களிடையே அரசியல் கல்வி அதிவேகமாகப் பரவியிருக்கும். தேசீய இயக்கம் மகத்தான வலிமை பெற்று எதிர்க்கமுடியாத வேகமடைந்திருக்கும். அரசாங்கத்தார் அவ்வியக்கத்தை ஒடுக்கியிருத்தல் கூடுமென்பது உண்மையே. ஆனல் அதுவும் ஒரு வகையில் இயக்கத்தின் வெற்றியாகவே இருந்திருக்குமன்ருே? ஜனங்களுக்கு அரசியல் அறிவு புகட்டும்

முயற்சியில் அது பெரிதும் துணைபுரிந்திருக்கும் என்பதில் ஐய மில்லை. புரட்சி இயக்கமும் இன்னும் சீக்கிரமாக வந்திருக்க லாம். மிதவாதிகளைச் சமாதானப் படுத்தும் முறை புத்தி சாலித்தனமாகு மென்பதை அரசாங்கத்தார் வெகுகாலம் முன்பே உணர்ந்திருப்பார்கள். இதன் பயனாக 1909-ல் நமக் களிக்கப்பட்ட சீர்திருத்தம் இன்னும் இருபது ஆண்டுகளுக்கு முன்பே தரப்பட்டிருக்கலாம். முஸ்லிம்களும் 1909-ல் தங்க ளுக்குக் கிடைத்ததை 1889-ம் ஆண்டிலேயே பெற்றிருந்தால் அதிக மகிழ்ச்சியடைந்திருப்பார்கள். ஆனால் இந்தியத் தலை வர்கள் தங்களுக்கு வலிமை போதாதென்றும் தங்கள் இயக் கம் ஒடுக்கிவிடப் படலாமென்றும் எண்ணினார்கள். எனவே, அவர்கள் பணிந்துவிடத் தீர்மானித்து, அரசியல் குறைகளை நிவர்த்திப்பதற்குத் தாங்கள் தயாரித்திருந்த ஒரே ஓர் ஆயுதத் தையும் கைவிட்டார்கள்.

ஒரு தேசமோ அல்லது ஓர் அரசியல் கட்சியோ வெறும் வாய்ப் பேச்சுடன் நிற்கும் வரையில் எவ்வகைப் பயனும் விளை யாது. ஒரு கட்சியினர் உண்மையான ஊக்கம் காட்டி, தங்க ளுடைய கோரிக்கைகள் நிறைவேறாவிடில் தொல்லை விளையும் என்று எதிரிகள் உணரும்படி செய்யாத வரையில், அவர்கள் பேச்சுக்கு ஒருநாளும் மதிப்பு ஏற்படாது. சுயாட்சிபெற்ற இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸு முதலிய நாடுகளின் அரசி யல் இயக்க சரித்திரங்கள் இவ்வுண்மையை நன்கு நிரூபிக்கின் றன. ஓர் அரசியல் இயக்கத்தைக் காண்பவர்கள், அதைத் தங்கள் உறுதியினாலும் பணத்தினாலும் தாங்கி நிற்பதற்குச் சித் தமா யிருந்தாலன்றி அதைத் தொடங்கவேண்டியதே யில்லை.

## இங்கிலாந்தில் காங்கிரஸ் கிளர்ச்சி

1888, 89-ம் ஆண்டுகளில் பயமடைந்துவிட்ட காங்கிரஸ் இக் குறைகளுள்ளதா யிருந்தது. பணத்தைப் பொறுத்த வரையில் ஆண்டுதோறும் அழுகைக்கும், புலம்பலுக்கும்

வேண்டுகோட்களுக்கும் குறைவில்லை. இங்கிலாந்திலிருந்த நண்பர்கள்—பிரிட்டிஷ் கமிட்டியைச் சேர்ந்தவர்களும், சேராதவர்களும்—பணமில்லை யென்று பரிதாபமாய்ப் புலம்பாத நாள் கிடையாது. இங்கிலாந்தில் காங்கிரஸ் இயக்கம் எப்போதுமே திறமையாக நடைபெறவில்லை. ஆங்கிலப் பொது மக்களின் அபிப்பிராயத்தை உருப்படுத்துவதில் காங்கிரஸுக்குச் செல்வாக்கு இருந்ததே கிடையாது. காங்கிரஸின் பிரிட்டிஷ் கமிட்டிக்கு லண்டனில் ஒரு காரியாலயமும், பத்திரிகையும் இருபத்தைந்து வருஷகாலம் இருந்துவந்தன வாயினும், ஆங்கில அரசியலில் அக்கமிட்டியின் செல்வாக்கு பூஜ்யமேயாகும். மிஸ்டர் ஹியூமும், ஸர் வில்லியம் வெட்டர்பர்னும் தாராளமாகப் பணங்கொடுத்து உதவியிராவிடின், லண்டன் காங்கிரஸ் காரியாலயம் எப்போதோ மூடப்பட்டிருக்கும். காங்கிரஸ் தலைவர்கள் ஆங்கில ஜனசமூகத்தினிடம் தங்களுக்குள்ள அளவற்ற நம்பிக்கையைப் பற்றி நிரம்பப் பேசினார்கள்; இந்தியாவின் உண்மை நிலையை பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்குமட்டும் தெரியப்படுத்திவிட்டால் நமது குறைகளெல்லாம் நீங்கிவிடும் என்று ஆசை காட்டினார்கள்; எனினும் அதற்காக அவர்கள் செய்த முயற்சிகளோ மிகவும் அற்பமானவை. இங்கிலாந்தில் செய்யும் கிளர்ச்சியில் நம்பிக்கையில்லாத ஒரு கட்சியார் இந்திய அரசியல் வாதிகளுக்குள் உண்டு. ஆனால் சென்ற முப்பது ஆண்டுகளாகக் காங்கிரஸை நடத்திவந்த தலைவர்கள் தாங்கள் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளவில்லை. இவ்வாறு காங்கிரஸ் இயக்கம் பயனளியாமற் போனதின் காரணங்களைப் பற்றி இனிச் சிறிது ஆராய்வோம்.

## காங்கிரஸ் தோல்வியின் காரணங்கள்

(1) காங்கிரஸ் இயக்கம் ஜனங்களின் உணர்ச்சியினால் தூண்டப்பட்டோ, அவர்களுடைய யோசனையின்படியோ ஏற்படவில்லை. அது உள்ளிருந்து தோன்றிய இயக்கமே யன்று, ஜனங்களின் எவ்வகுப்பாரும் அவ் வியக்கத்தில் பரிபூரணமாய்

ஈடுபட்டு, தங்களுடைய மானம் அதை வெற்றியுடன் நடத்துவதையே பொருத்துளது என்று உணர்ந்தார்களில்லை. ஆங்கிலயதேச்சாதிகாரி ஒருவருடைய யோசனையின்படி ஆங்கிலேயர் ஒருவரால் காணப்பட்டது காங்கிரஸ் இயக்கம். அதை நடத்துவதாகச் சொல்லிக்கொண்ட இந்தியர்களோ ஒன்று, அரசாங்கத்தின் கீழ் உத்தியோகம் வகித்திருந்தவர்கள்; அல்லது அரசாங்க உத்தியோகங்களுக்கு அநுசரணையான - அரசாங்கத்தினால் உண்டுபண்ணப்பட்ட - தொழில் புரிந்துவந்தவர்கள். பின் சொன்னவர்களில் பலர் அரசாங்க உத்தியோகங்களுக்கு ஆசைப்பட்டுக்கொண்டிருந்தவர்கள்; அல்லது தங்களுடைய யோக்கியதையையும், பொதுநல ஊக்கத்தையும் அரசாங்கம் பாராட்டவேண்டுமென எதிர்பார்த்தவர்கள். தங்களுடைய சுயநலங்களுக்கும், சொந்த முன்னேற்றத்துக்கும் பாதகம் ஏற்படாத வரையில் - பெரிய தியாகம் எதுவும் செய்தல் அவசியமில்லாத வரையில் - அவ் வியக்கத்துக்காக ஓரளவு தங்கள் காலத்தையும் ஊக்கத்தையும் செலவிட அவர்கள் சித்தமாயிருந்தனர். அவர்களுடைய தேசபக்தி அவ்வளவு தூரந்தான் சென்றது. அவர்களுடைய நோக்கங்களையோ, தேசாபிமானத்தையோ நாம் சந்தேகிக்கவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தேச சேவையில் அர்ப்பணம் செய்யத் துணியுமாறு அத்துணை ஆழ்ந்த தேசாபிமானம் உள்ளவர்களல்லர் என்றுமட்டுமே கூறுகிறோம்.

(2) பொது ஜன இயக்கமாவதற் குரிய இன்றியமையாத அம்சங்கள் காங்கிரஸ் இயக்கத்தில் இல்லை. தலைவர்கள் ஜனங்களுடன் கலந்து பழகவில்லை. அவ்வாறு கலந்து பழக அவர்களுக்கு விருப்பமில்லாமலு மிருந்திருக்கலாம். அவர்களுடைய பிரசாரமனைத்தும் ஆங்கிலம் படித்த சிலரிடையே ஆங்கில மொழியிலேயே நடைபெற்றது. ஜனங்களுக்கு விஷயம் தெரியவேண்டு மென்பதைவிட அதிகாரிகளின் செவிக்குக் குறைகள் எட்ட வேண்டுமென்பதே அவர்களுடைய பிரதான நோக்கமாயிருந்தது. பாமர ஜனங்களிடம் அணுகுவதற்குத்

தலைவர்கள் எவ்வித முயற்சியும் செய்யவில்லை. இளைஞர்கள் அத்தகைய முயற்சி செய்வதற்கும் அவர்கள் ஆதரவளிக்க வில்லை. இத் துறையில் செய்யப்பட்ட முயற்சிகளை அவர் களில் சிலர் பகிரங்கமாகக் கண்டித்தார்கள்.

(3) தலைவர்களால் ஜனங்களிடையே உற்சாக முண்டு பண்ண முடியவில்லை. அவர்கள் தியாகம் செய்யாததே இதற்குக் காரணம். தியாகம் ஏதேனும் செய்யினும் அது மிக அற்பமாயிருந்தது. அவர்களுடைய வாழ்க்கை இவ்வியக்கத் தினல் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. அவர்களுடைய வருவாய், செல்வம், சுகபோகங்கள் இவற்றில் எதுவும் குறைய வில்லை. காங்கிரஸ் தலைவர்களுக்குள் தியாக வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் தாதாபாய் நௌரோஜி, கோகலே இவ் விருவரைத் தவிர வேறு யாருமில்லை. ஆங்கிலேயர்களான ஹியூமும், வெட்டர்பர்னும் செய்த தியாகங்கள் ஜனங்களை வெட்கிக்கச் செய்தன. ஆனல் அவை அவர்களுக்கு உற்சாக மூட்டவில்லை. அவற்றின் பயனுக அவர்களுக்குத் தங்கள் சொந்தத் தலைவர்களிடம் கோபமும் அவநம்பிக்கையும் உண் டாயினவே யல்லாமல் வேறில்லை. காங்கிரஸ் இந்தியத் தலை வர்கள் அரசாங்கத்தின் கீழ் பெரிய உத்தியோகங்கள் ஒப்புக் கொண்டது அவர்களுடைய அவநம்பிக்கையை அதிகப் படுத்திற்று.

(4) காங்கிரஸ் இயக்கம் ஒரு சிலரைப் பொறுத்ததாயு மில்லை; எல்லாரு மீடுபடக் கூடியதாயுமில்லை. இயக்கத்தின் வெளி ஆடம்பரத்துக்கு ஜனங்கள் ஏராளமாகத் தேவையா யிருந்தனர். கூட்டங் கூடுவதற்கும், கரகோஷஞ் செய்வதற் கும் அவர்கள் வேண்டப்பட்டனர். ஆனல் இயக்கத்தை நடத்துவதில் அவர்களுக்கு எவ்வித உரிமையும் அளிக்கப்பட வில்லை. அபிப்பிராய பேதங்கள் தலைகாட்டாமல் ஒடுக்கு வதற்கே எப்போதும் முயற்சி செய்யப்பட்டது. விவாதங் களுக்கு இடமே கிடையாது. காங்கிரஸ் பொதுஜன சபையு மன்று; குறிப்பிட்ட சிலரின் பிரத்யேகக் கூட்டமுமன்று,

முன்னதாயின் இயக்கம் அதிக பயன் அளித்திருக்கும், பின் கூறியதாயிருந்தால் பணச் செலவு குறைந்திருக்கும்; இங்கிலாந்தில் வேலை செய்யவாவது பணம் மீதியாயிருக்கும்.

(5) சிற்சில அற்ப நலங்களைமட்டும் நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய இயக்கம் - தேசத்தின் சுதந்திரத்தையும், தேசீய இலட்சியங்களையும் வற்புறுத்தாத ஓர் இயக்கம் - ஒரு நாளும் தேச நன்மைக்குகந்த இயக்கமாகாது. உண்மையான தேச நிர்மாண வேலையிலிருந்து அது ஜனங்களின் கவனத்தைக் கவர்ந்துவிடுவதால் தீமை பயப்பதுமாகும். தியாகம் எதுவும் செய்யாமலே புகழ் பெருவதற்கு அது இடந்தருகின்றது. துரோகத்துக்கும், வெளி வேஷத்துக்கும் அது சந்தர்ப்பம் அளிக்கின்றது. தேச பக்தியின் பெயரால் சுயநலந் தேடிக் கொள்ளுதல் அதனுல் சாத்தியமாகின்றது. அரசியல் இயக்கம் எதுவும் இத்தகைய தீமைகள் அறவே இல்லாதிருத்தல் முடியாதென்பது உண்மையே, ஆனுல் சிரத்தையில்லாமல் நடத்தப்படும் அரசியல் இயக்கத்திருல் விளையக்கூடிய பெருந்தீமை வேறென்றுண்டு. அவ் வியக்கத்திருல் ஒரு நாளும் சாதிக்க முடியாத காரியங்களைச் சாதித்துவிடுவதாகச் சொல்லி அது ஜனங்களின் மனதில் வீண் நம்பிக்கைகளை உண்டுபண்ணுகின்றது. இவ்வாறு ஜனங்கள் சரியானவழியில் முன்னேற்றமடைவதையும் அது தடைசெய்துவிடுகிறது.

## பாகம் III

## புதிய தேசீய இயக்கம்

இந்திய தேசீய இயக்கம் லார்டு கர்ஸான் இராஜப் பிரதிநிதியாக வரும் வரையில் மேற்கூறியவாறு நிதானமாக, விசேஷம் எதுவுமின்றி நடந்துவந்தது. கர்ஸான் பிரபு அவ் வியக்கத்தை எள்ளி நகையாடியபோதுதான் ஜனங்கள் உண்மை உணர்ந்தார்கள். காங்கிரஸ் கைக்கொண்டிருந்த அரசியல் முறைகளினுல், தங்கள் உரிமைகளையும், உணர்ச்சிகளையும் சிறி

தும் பொருட்படுத்தாது காலின் கீழ் மிதித்துவந்த யதேச்சாதிகாரத்தை அசைக்க முடியாதென்று அவர்கள் கண்டார்கள். இதன் பயனுக ஒரு சிலர் அரசியலில் பூரண கவனம் செலுத்தி ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யத் தொடங்கினூர்கள். இவர்கள் வெறும் அபிப்பிராயங்கள்மட்டும் கொண்டவர்களல்லர் - உறுதியான கொள்கைகள் உடையவர்கள்; சமயோசித மனிதர்களல்லர் - ஆழ்ந்த நம்பிக்கைகொண்டவர்கள்; அரசாங்கத்தின் கீழ் இன்னும் சில உத்தியோகங்கள் விழைந்தவர்களல்லர் - தங்கள் தேசத்தாரின் மானத்தையே பெரிதாகக் கருதியவர்கள். காங்கிரஸ் இயக்கத்தின் குறைபாடு அதன் தலைவர்கள் தவருன முறைகளைக் கையாண்டதும், தியாகம் செய்யாததும் மட்டும் அல்லவென்றும், தெளிவான இலட்சியங்களும், உறுதியான கொள்கைகளும் அவர்களுக் கில்லாமையும் அதன் பெரிய குறைபாடாகுமென்றும் அவர்கள் கண்டார்கள். ஆகையினுலேயே "சுதேசியம்", "சுயராஜ்யம்" என்னும் முழக்கம் நாட்டில் எழுந்தது.

## சுதேசியம், சுயராஜ்யம்

இப்புதிய முழக்கம் கிளம்பிய உடனே தேச முழுவதிலும் ஓர் அரசியல் பெருங் கிளர்ச்சி அலை யெறிந்து பரவலாயிற்று. 1905, 1906-ம் ஆண்டுடுகளில் நடந்த காங்கிரஸ் நடவடிக்கைகளில் அம் முழக்கத்தின் எதிரொலி கேட்டது. 1907-ல் சூரத்தில் நிகழ்ந்த சம்பவம் 1906-ல் கல்கத்தாவிலேயே நடந்திருக்கக்கூடும். ஆனல் கல்கத்தா காங்கிரசில் தலைமை வகித்த தாதாபாய் நெளரோஜியின் தேசபக்தியும், மதி நுட்பமும் இவ்வாறு நிகழாமல் தடுத்தன. அவர் கால நிலையை உன்னிச் சுயராஜ்ய கோரிக்கைக்கு ஆசி கூறினர். பிரிட்டிஷ் முதன்மந்திரியான ஸர் ஹென்றி காம்பெல் பானர்மானின் மொழிகளில், "நல்லரசாயினும் தன்னரசுக்கு நிகராகாது" என்று அவர் எடுத்துக் காட்டினர். இதுகாறும் நல்லரசே காங்கிரஸின் இலட்சியமாயிருந்து வந்தது. 1906-ல் கல்கத்தாவில் நடந்த கூட்டத்தில்

அதன் இலட்சியம் தன்னரசாக மாறிற்று. தமது வாழுள் முழுவதையும் அரசியல் இயக்கத்துக்கே அர்ப்பணம் செய்திருந்த தலைவர் ஒருவரின் வாய் மொழியினுல் இம் மாறுதல் நிகழ்ந்தது. இந்தியாவில் உண்மையான தேசீய இயக்கம் பிறந்த தினம் அதுவேயாகும். அடுத்த வருஷம் சூரத் காங்கிரஸில் குழப்பம் நடந்தது. இதற்குரிய பல காரணங்களில், மிதவாதத் தலைவர்கள் 1906-ம் ஆண்டில் முன் வைத்த காலை இப்போது பின்வைக்க விரும்புகிருர்களென்று தேசீயவாதிகள் கொண்ட பயமும் ஒன்று. அவர்கள் எழுத்தளவில் பின் வாங்கவில்லை யெனினும், கருத்தளவில் பின்சென்றுவிட்டார்களென்பதில் சந்தேகமில்லை, 1888-ம் ஆண்டில் பொது ஜனங்களிடையே செய்த காங்கிரஸ் பிரசாரத்தினுல் உண்டான உற்சாகம் பிந்தைய வருஷங்களின் பிற்போக்கினுல் ஒடுக்கப்பட்டதல்லவா ? 1907-லும் இம்மாதிரியே நிகழ்ந்திருக்கும். ஆனுல் இம்முறை தேசீய இயக்கம் மிகத் தீவிரமாகி, ஆத்மத் தியாகிகள் சிலர் தோன்றிவிட்டபடியால் அவ்வாறு நடைபெறவில்லை.

சுதேசியம், சுயராஜ்யம் என்னும் மந்திரங்களில் அடங்கிய உயரிய இலட்சியங்கள் பாரதப் புதல்வர்களின் சிந்தையிலேயே உதித்த இலட்சியங்களாகும். தாய் நாட்டின் துன்பங்கள் இந்த இலட்சியங்களுக்கு வேகமளித்தன. ஆனுல் இலட்சியங்கள் தாமும் இன்னும் உயரிய கருத்துக்கொண்டவை. புதிய உணர்ச்சிகொண்ட ஜனங்கள், குறைகளின் நீக்கத்தைப் பிரதானமாகக் கருதவில்லை; அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டது சுதந்திர தாகமாகும். அவர்கள் சிற்சில அற்ப அநுகூலங்களை நாடவில்லை; தேச விடுதலையை விழைந்தார்கள். சுதந்திரம் என்பது கேவலம் இவ்வுலக சம்பத்துக்களில் ஒன்றன்று. ஆதலின் அதை நன்கொடையாக அளித்தலும், பெற்றுக்கொள்ளலும் இயலாத காரியங்கள். அதை முயன்று தேடியே அடைதல் வேண்டும். ஜனங்கள் இவ்வுண்மையை உணர்ந்தார்கள். அதைத் தங்கள் வாழ்க்கையில் நடைமுறைக்குக் கொணரச் சித்தமா யிருந்தார்கள்.

அற்ப அநுகூலங்களுக்காகவும், சிறு குறைகளின் நீக்கத்துக்காகவும் சுமார் இருபதாண்டு காலம் நடத்திய கிளர்ச்சி பெரும்பாலும் பயனற்றதாகவே முடிந்தது. ஜனங்கள் பசிக்கு உணவு கேட்டார்கள்; அவர்களுக்கு உமி கிடைத்தது. லார்டு ரிப்பன் வகித்த பீடத்துக்கு லார்டு கர்ஸான் வந்தார். தூரத்திலுள்ளவர்களைப் பார்க்கமுடியாவண்ணம் ஒருவகை மூடுபனிப் படலம் தங்கள் கண்களை இதுகாறும் மறைத்திருந்தது என்று ஜனங்கள் கண்டார்கள். இதுவரையில் பயனற்ற நோக்கங்களுக்காக அவர்கள் வீணில் அலைந்து திரிந்தார்கள். கலங்கரை விளக்கம் அவர்கள் கண்ணுக்குப் புலனாகாமல் மறைக்கப்பட்டிருந்த படியால் அவர்களுடைய சிறு கப்பல் வழி தவறிச் சென்றுகொண்டிருந்தது. காற்று பலமாக அடித்தது; கடல் கொந்தளிப்புள்ளதாயிருந்தது; இங்கிலையில், மாலுமிகளுக்குப் போகவேண்டிய இடம் எது வென்று நிச்சயமாகத் தெரிந்திருந்தாலன்றி, அவர்கள் தங்கள் ஆற்றலனைத்தையும் பயன் படுத்தி முயற்சி செய்யச் சித்தமாயிருந்தாலன்றி, கப்பல் துறைமுகத்தை அடைவது எப்படி? இதுகாறும் திசையறி கருவியில்லாமையால் கப்பல் வழி தவறிப்போய்க் கொண்டிருந்தது. இப்போது அக்கருவி கிடைத்துவிட்டது; எனவே கப்பல் செல்லும் திசையும் மாறிவிட்டது. கொள்கைகள் மனிதர்களுக்கு ஊக்கமளிக்கின்றன. இலட்சியங்கள் அவர்களை ஆத்மத் தியாகம் செய்வதற்குச் சித்தமாக்குகின்றன. எனவே, சுயராஜ்ய இலட்சியம் ஏற்பட்டதும், அதற்காகத் துன்பமநுபவிக்கவும், உயிரையும் தியாகம் செய்யவும் சித்தமாகச் சிலர் முன்வந்தார்கள். இந்த இலட்சியத்தை யன்றி வாழ்க்கையில் வேறெதிலும் சிரத்தையில்லாத ஒரு வகுப்பார் தோன்றினர். அவர்கள் சுதந்திர தேவியின் பக்தர்கள்; உலகில் வேறெதையும் விட மேலாகத் தாய்நாட்டை நேசிப்பவர்கள். உத்தியோகம், வருவாய், பெயர், புகழ் ஆகியவை அவர்களுக்கு வேண்டாம். அவர்கள் வேண்டியது விடுதலை; —அதுவும் தங்களுடைய சொந்த விடுதலையன்று; பிற நாடுகளில் குடியேறுவதால் அவர்கள் தங்களளவில் விடுதலை பெறுதல் கூடும்;—அவர்கள்

விழைந்தது தங்கள் அருமைத் தாய்நாட்டின் விடுதலையே யாகும். உயர்தர நீதிபதி உத்தியோகங்களும், வேறு பெரிய பதவிகளும் அவர்களுக்குப் பொருளற்றவையாயின.

காங்கிரஸ் மகாசபையைக் கண்டவர்கள், அரசாங்கத்தின் யோசனையை யனுசரித்து, அவ்வரசாங்கத்தின் கீழ் தாங்கள் வகித்த அல்லது வகிக்க விரும்பிய உத்தியோக நிழலில் தங்கள் இயக்கத்தைத் தொடங்கினார்கள். ஆனால் தேசீய இயக்கத்தை ஸ்தாபித்தவர்களோ, அரசாங்கத்தையும் அரசாங்கத்தின் ஆதரவையும் பகிஷ்கரிப்பதின் மூலம் தங்கள் பிரசாரத்தை ஆரம்பித்தார்கள். பழைய காங்கிரஸ் தலைவர்கள் பெரிய உத்தியோகங்களுக்கு ஆசைப்பட்டனர். தேசீய இயக்கத் தலைவர்களோ உத்தியோகம் வகித்தவர்களைக் கேவலமானவர்களாய்க் கருதி வெறுத்தனர். காங்கிரஸ் தலைவர்கள் சிறு அநுகூலங்களை வேண்டினார்கள்; தேசீயத் தலைவர்கள் அவற்றை உதறித் தள்ளினார்கள். காங்கிரஸ் தலைவர்கள் சட்டசபைகள் வேண்டுமென்று கேட்டார்கள்; தேசீயத் தலைவர்கள் அவற்றின் அருகில் செல்லவும் மறுத்தார்கள். காங்கிரஸ் தலைவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும், பிரிட்டிஷ் ஜனங்களுக்கும் விண்ணப்பம் செய்து கொண்டார்கள். தேசீயத் தலைவர்களோ தங்களுடைய சொந்த ஜனங்களையும், தங்கள் ஆண்டவனையுமே பற்றிநின்றார்கள். காங்கிரஸ் இயக்கத்தில் பிரிட்டிஷ் தலைமை இருந்தது; தேசீய இயக்கமோ முற்றும் இந்தியர்களாலேயே நடத்தப்பட்டது. காங்கிரஸ் தலைவர்கள் தங்கள் சொந்த முன்னேற்றத்துக்குப் பாதகமானதெதுவும் செய்யத் தயாராயில்லை; ஆனால் தேசீயத் தலைவர்களோ தங்கள் சொந்த முன்னேற்றத்துக் குரிய சாதனங்களை விஷங்கலந்த உணவெனத் தள்ளினார்கள். காங்கிரஸ் தலைவர்கள் பங்களாக்களில் வசித்தனர்; அலங்காரமான கூடங்களில், பட்டு மெத்தை தைத்த நாற்காலிகளில் அமர்ந்தனர்; பட்டை தரித்த வேலைக்காரர்களால் குற்றவேல் செய்யப்பெற்றனர்; அறுசுவை யுண்டி அருந்தினர்; கவர்னர்களுக்கும், மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் விருந்தளித்தனர். தேசீயத் தலைவர்களோ தங்களுக்கிருந்த சொற்ப சுக வசதிகளையும் துறந்தார்

கள்; ஐரோப்பிய உடைகளை நீக்கி வேஷ்டி, சொக்காய் அணிந்தார்கள்; உயர்ந்த மேல் ஜோடுகளுக்குப் பதிலாகச் சுதேசி செருப்பு தரித்தார்கள். முந்தையவர்கள் பிரிட்டிஷ் ஆட்சி முறையினால் செல்வ மிகுதியும், உத்தியோகப் பதவிகளும், சுக போகங்களும் பெற்றிருந்தார்கள்; ஆதலின் அவர்கள் பிரிட்டிஷாருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருந்தார்கள். ஆனால் பிந்தையவர்களோ இத்தகைய கடன் படாமலிருக்கும் பொருட்டு, வறுமை வாழ்வை மேற்கொண்டார்கள். தங்கள் சொந்த முன்னேற்றத்துக்கான சந்தர்ப்பங்களையெல்லாம் அவர்கள் வேண்டுமென்றே புறக்கணித்தார்கள். முந்தையவர் தங்கள் மதுவகைகளையும், குழந்தை குட்டிகளையும், வீடு வாசல்களையுமே பெரிதாகக் கருதினர். பிந்தையவர்களோ தாய் நாட்டுத் தொண்டிலேயே பூரணமாய் ஈடுபடும் பொருட்டு இவற்றையெல்லாம் உதறித் தள்ளினார்கள். காங்கிரஸ் இயக்கம் 22 வருஷ காலத்தில் முழு நேரமும் இயக்கத்துக்கே செலவிடும் ஊழியர்கள் இரண்டே இரண்டு பேரைத்தான் பெற்றது; தேசீய இயக்கமோ இரண்டு வருஷத்தில் இத்தகைய ஊழியர்களை நூற்றுக் கணக்காகவும், ஆயிரக் கணக்காகவும் பெற்றது. காங்கிரஸ் தலைவர்கள் மிகச் சிறந்த அநுகூலங்கள் வாய்ந்த நிலைமையில் வேலை தொடங்கினார்கள். தேசீயத்தலைவர்களோ வானமிருண்டு கருமேகங்கள் சூழ்ந்திருந்த சமயத்தில் தங்கள் இயக்கத்தை ஆரம்பித்தார்கள்; விரைவிலேயே புயற் காற்றுடன் பெரு மழை அடித்து அவர்களில் பலரைச் சிறைச்சாலைகளில் கொண்டுபோய் ஒதுக்கியது.

இத்தகையோரால் காணப்பட்ட இயக்கம் காட்டுத் தீ போல் பரவி அகண்டமாய் வளர்ந்துவிட்டதில் ஆச்சரியம் எதுவுமில்லையன்றோ? இவ்வியக்கத்தில் ஜீவசக்திகள் மோதிக் கொண்டன. இந்த மோதுதலினால்—இப்போராட்டத்தினால்—இரு கட்சிகளிலும் சேதங்கள் உண்டாயின. தேசீயக் கட்சிக்கு விளைந்த சேதங்கள் மகத்தானவை; சிறு தொகையினரான அக் கட்சியாரால் தாங்க முடியாவண்ணம் அவ்வளவு அளவு

மீறியவை. ஆனால் இரு சாராரின் போராட்ட சாதனங்களையும் எண்ணிப் பார்க்கும்போது, தேசியவாதிகளே உண்மையில் வெற்றியடைந்தவர்கள் என்று கூற எவரும் தயங்கமாட்டார்கள். அவர்கள் பிரசாரம் தொடங்கி ஐந்து வருஷமாவதற்குள் அரசாங்கத்தைச் சிற்சில சீர்திருத்தங்கள் அளிக்கும்படி கட்டாயப் படுத்தினார்கள். இச்சீர்திருத்தங்களுக்குத் தாங்களே காரணமென்று காங்கிரஸ் தலைவர்களும், அரசாங்கத்தாரும் உரிமை பாராட்டிக்கொள்வது உண்மையே; ஆனால் பாரபட்சமற்ற சரித்திராசிரியர்களின் தீர்ப்பு இதற்கு மாறாயிருக்குமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. நாட்டில் தீவிரவாதிகள் இருந்தபடியினாலேயே லார்டு மார்லி மிதவாதிகளை அரசாங்கத்தின் ஆதரவுக்குத் திரட்டிச் சேர்க்க முன்வந்தார். தீவிரவாதிகள் என்போர் இல்லாதபோது, மிதவாதிகளே தீவிரவாதிகளாய்க் கருதப்பட்டனர். அப்போது அவர்கள் அரசாங்கத்தினாலும், அதன் பிரதிநிதிகளாலும் அவமதிக்கப்பட்டனர்.

## தேசியத் தலைவர்கள்

தீவிரவாதிகள் மிகச் சிறு தொகையினரென்றும், அவர்களில் பெரும்பாலோர் உருப்படாத தறிதலைகள் என்றும், சர்வகலாசாலைகளிலோ வாழ்க்கையிலோ முன்னுக்கு வரமுடியாதவர்கள் என்றும், அவர்கள் பித்தர்கள் என்றும், சரி தவறு என்று பகுத்தறியும் உணர்வு அற்றவர்களென்றும் ஆங்கிலோ இந்திய இராஜதந்திரிகளும், அவர்களுடைய நம்பிக்கைக் குரிய மிதவாத காங்கிரஸ் தலைவர்களும் சொல்கிறார்கள். ஆனால் இவ் வியக்கத்துக்கு உயிரளித்த மனிதர்களைச் சற்றே பாருங்கள். அவர்களில் சிலர் இன்றைக்கும் இயக்கத்தை நடத்திவருகிறார்கள். அரவிந்த கோஷ் வாழ்க்கையில் வெற்றிபெறாத மனிதரா? ஹரிதயால் அத்தகையவரா? வங்காளத்தில் நாடுகடத்தப்பட்ட ஒன்பது பேரும் வாழ்க்கையில் ஏமாற்றமடைந்தவர்களா? உயர்தர பி. ஏ. பட்டதாரிகள் எத்தனைப் பேர் தூக்கிலிடப்பட்டனர்! எவ்வளவு பேர் சிறைவாசம் செய்கின்றனர்!

கலாசாலைகளில் அவர்கள் அடைந்த சிறப்பை நோக்குங்கள். வாழ்க்கையில் அவர்கள் எவ்வளவு முன்னுக்கு வந்திருக்கக் கூடும் என்பதைக் கவனியுங்கள். அவர்கள் வாழ்க்கையில் தோல்வியுற்று அதிருப்தி கொண்டவர்களா? அரசாங்கத்தின் கீழ் முன்னேறமுடியாத காரணத்தினால் அதன் விரோதியானவர்களா என்று சொல்லுங்கள். அவர்களுடைய தேசிய பிரசாரத்தின் பயனாக, அன்னிய அரசாங்கத்தார் எவ்வளவு கடுமையான அடக்குமுறை கையாளலாமோ அவ்வளவும் கையாளும்படி நேர்ந்தது. இராஜ துவேஷம் என்பதற்கு விரிவான பொருள் ஏற்படும் வண்ணம் குற்றச் சட்டம் (Penal Code) திருத்தப்பட்டது. விசாரணைகளை விரைவில் முடித்து எளிதில் தண்டனை விதித்தல் சாத்தியமாகும் வண்ணம் குற்ற நிர்வாக முறைச் சட்டமும் (Criminal Procedure Code) திருத்தப்பட்டது. அரசியல் காரணங்களின்மேல் நன்னடக்கை ஜாமீன் கேட்கவும், கொடுக்கத் தவறினால் உடனே தண்டிக்கவும் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. பிரசாரம் நடைபெறாமற் செய்வதற்காக இராஜ துவேஷக் கூட்டச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. வெடி பொருள்கள் சம்பந்தமான ஒரு சட்டமும், பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டிடும் அச்சுச் சட்டமும் இயற்றப்பட்டன. ஒற்றர்களும், துப்பறிவோரும் கணக்கில்லாமல் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உபாத்தியாயர்கள், ஆசிரியன்மார்கள், நண்பர்கள், மாணாக்கர்கள், பள்ளித் தோழர்கள், பெற்றோர்கள் ஆகிய எல்லாரும் தேசிய இயக்கத்தை நசுக்கத் துணைசெய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அச்சுச் சட்டத்தின் கீழ்ப் பறிமுதலான பிரசுரங்களின் தொகை நாளுக்கு நாள் அதிகமாகிவருகிறது. இராஜ துவேஷத்துக்காகவும், இராஜ துவேஷக் கொலைகளுக்காகவும், அரசியல் கொள்ளைகள், ஆயுதம் வைத்திருத்தல் முதலியவற்றிற்காகவும், நன்னடக்கை ஜாமீன் கொடாததற்காகவும் தண்டனைகள் பெருகிக்கொண்டே வருகின்றன. ஆனால் இயக்கத்தை நடத்த மேலும் மேலும் மனிதர்கள் வந்துகொண்டுதானிருக்கிறார்கள். சிறைக் கூடங்களில் அரசியல்

கைதிகள் நடத்தப்படும் முறை பயங்கரமானதாகும். ஒருவர் தற்கொலைசெய்துகொண்டார். அந்தமான் தீவிலுள்ள மற்ருெருவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. கொடுமையான சித்திரவதைகளையும், அவமதிப்புகளையும் பற்றிய துயரம் நிறைந்த விவரங்கள் இந்தியச் சிறைச் சாலைகளிலிருந்து வந்துகொண்டிருகின்றன. ஆயினும் இயக்கம் நசுக்கப்பட்டுவிடவில்லை.

ஒவ்வொரு வருஷமும் தூக்கிடப்பட்டவர்கள், சிறைப்பட்டவர்கள் முதலியோருக்குப் பதிலாகப் புதியவர்கள் வந்து சேர்கிருர்கள் என்று கருத இடம் இருக்கின்றது. சிலர் தாங்களாகவே தேசப் பிரஷ்டம் செய்துகொண்டு தூர தேசங்களில் எத்தனையோ இடையூறுகளுக்கிடையில் பிரசாரம் செய்து வருகிருர்கள். எனவே தேசீய இயக்கம் இறந்துவிட்டதென்ரே, இறந்து வருகிறதென்ரே யாரேனும் கூறினல் அவன் ஒன்று பொய்யனயிருக்கவேண்டும்; அல்லது மூடனயிருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. இயக்கம் உயிருடன்தான் இருக்கிறது. அதன் சக்தி சிறிதும் குறையவில்லை யென்றும் சொல்லலாம். இந்திய இளைஞர்களின் உள்ளத்தை அது கவர்ந்துவிட்டது. இந்தியாவிலும், இங்கிலாந்திலுமுள்ள இந்திய மாணுக்கர்களில் குறைந்தது 100-க்கு 75 பேர் இந்தக் கட்சியினிடம் அநுதாபங் கொண்டிருக்கிருர்கள்.

பழைய காங்கிரஸின் தோல்விகளே தேசீய இயக்கம் உருக்கொள்ளும்படி செய்தனவாதலின், இவ் வழியில் காங்கிரஸும் ஊழியம் செய்திருக்கிறதென்று கூறலாம். பிரார்த்தனைகள், தீர்மானங்கள், கண்டனங்கள், மகஜர்கள் முதலியவை எவ்வளவுதான் அனுப்பினலும் இந்தியாவிலுள்ள யதேச்சாதிகார வர்க்கத்தை அசைக்கமுடியாதென்றும், அவ்வாறே எவ்வளவு தான் விண்ணப்பங்கள் செய்துகொண்டாலும் ஆங்கிலப் பொது மக்களின் மனதை மாற்றுதல் அபூர்வமென்றும் இந்திய ஜனங்கள் உறுதி பெற்றது காங்கிரஸினுல்தான். காங்கிரஸ் இயக்கத்துக்கென்று எவ்வித தியாகமும் செய்ய முன்வராத காங்கிரஸ்

தலைவர்களே கல்விக்கும், வேறு தர்மங்களுக்கும் நிரம்பப் பணம் அளித்தார்கள். இதிலிருந்து காங்கிரஸ் பிரசாரத்திலும், முறைகளிலும் காங்கிரஸ் தலைவர்களுக்கே நம்பிக்கை கிடையா தென்றும், அதை வெளியிட்டுச் சொல்லவோ, முறைகளை மாற்றிக்கொள்ளவோ அவர்களுக்குத் தைரியம் இல்லை யென்றும் ஜனங்கள் அறிந்துகொண்டார்கள். ஆனல் காங்கிரஸை நடத்தியவர்களைப் போன்ற மனிதர்களிடம் அத்தகைய தைரியத்தை எதிர்பார்ப்பதும் நியாயமாகாது. அவர்களில் பலர் நாட்டினிடம் அன்பும், பொதுநல ஊக்கமும் கொண்டவர்கள் என்பதில் ஐயமில்லை. தேசீய இயக்கத்தின் பிற துறைகளில் அவர்கள் இதை நன்கு நிரூபித்திருக்கிறார்கள். சமூக சீர்திருத்தம், பொது ஜனக் கல்வி, தொழில் முன்னேற்றம் ஆகிய துறைகளில் அவர்கள் நல்ல வேலை செய்தார்கள். 1905-ம் ஆண்டில் அரசியல் இயக்கம் புதிய முறையில் வளர்ச்சி பெற்ற தன்றோ? அவ் வளர்ச்சிக்கு ஏற்ற நிலைமையைக் காங்கிரஸுக்கு வெளியே செய்த வேலையால் அவர்கள் நாட்டில் உண்டு பண்ணியிருந்தார்கள்.

தேசீய இயக்கம் என்னும் குழந்தை, பழைய காங்கிரஸ் வாதியின் மடியில், அவன் அளித்த உணவை உண்டு வளர்ந்தது என்று கூறலாம். ஆனல் தான் வளர்க்கும் குழந்தை இவ்வளவு பலசாலி யாவானென்று அவன் எதிர்பாராதவனுதலின் சிறிது திடுக்கிட்டுப் போனுன். முதல் அதிர்ச்சிக்குப் பின்னர், காங்கிரஸ்காரர்களில் சிலர் தாங்கள் வளர்த்த குழந்தையின் முன்னேற்றத்தைக் கண்டுமகிழ்ந்து அதற்கு ஆசி கூறினார்கள். மற்றும் சிலர் அதன் கழுத்தைத் திருகிக் கொன்றுவிட விரும்பினர்களாயினும் தங்களால் அது இயலாதெனக் கண்டார்கள். புதிய இயக்கத்தைக் கண்டித்துத் தூற்றுவதற்குமேல் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. எனவே, அவ்வியக்கத்திலிருந்து தாங்கள் விலகிக்கொண்டு தங்கள் பொறுப்பை முற்றும் கழித்துக் கொண்டார்கள். தங்கள் சொந்தப் பாதுகாப்பை உத்தேசித்து அவர்கள் இவ்வாறு செய்தார்களென்று நாம்

சொல்லவில்லை. ஆனால் அவர்களுக்கு அபாயம் எதுவும் நேராமல் பாதுகாத்துக்கொள்வதற்கு அநுசாரணையாகவே அவர்கள் கொள்கைகளும் இருந்தது அதிர்ஷ்டவசமேயாகும். தங்கள் இதய அந்தரங்கத்தில் அவர்கள் புதிய இயக்கத்துக்கு ஆசி கூறினார்கள். அவ்வியக்கம் எழுந்ததின் பொருட்டு மனப்பூர்வமான மகிழ்ச்சி கொண்டார்கள். ஏனெனில் அவர்களுடைய பழைய இயக்கத்துக்கு அது பலம் தந்தது. அதனாலேயே அவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்துதல் சாத்தியமாயிற்று. தீவிர கட்சியின் தலைவர் ஒருவர் தம் உறுதியினின்று பிறழ்ந்தாலும் சமரசப் பேச்சு பேசினாலும் அவர்கள் வருத்தமடைந்தார்கள். புதிய இயக்கத்தில் தாங்கள் சேர அவர்கள் சித்தமாயில்லை யாயினும், சில அம்சங்களில் அதனால் தேசத்துக்குத் தீமை விளையுமென்று நம்பியபோதிலும், இயக்கம் மட்டும் சாகாமல் நடைபெறவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். தங்கள் கட்சியில் உற்சாகமும், தியாகமும் இல்லாமை குறித்து அவர்கள் வருந்தியதுடன், தீவிரவாதிகளின் சுயநலத் தியாகத்தைப் போற்றி, அவர்களுடைய உண்மைத் தலைவர்களிடம் மரியாதை வைத்திருந்தார்கள். அரவிந்த கோஷ், திலகர் போன்றவர்களுக்கு யாரே மரியாதை செய்யாதிருக்க முடியும்? ஹரிதயாலிடம் குறைகள் பல விருக்கலாம். ஆனால் அவர் தனிச் சிறப்பு வாய்ந்த மனிதர் என்பதை யாரே மறுக்க முடியும் ?

புது இயக்கம் பழைய இயக்கத்தினின்றும் எவ்விதத்தில் மாறுபட்டது என்று கூறினோம். புது இயக்கத்தின் முக்கிய தத்துவம் இன்னதென்றும் குறிப்பிட்டோம். அவ்வியக்கம் எவ்வழியில் செல்ல எண்ணியிருந்த தென்றும், அதன்போக்கு வேறு வழியில் மாறும்படி நேர்ந்தது எவ்வாறென்றும் இனி ஆராய்வோம்.

## கர்ஸானும், இந்தியக் கல்வியும்

**லார்டு** கர்ஸான் கைக் கொண்ட முறையும், அவருடைய பேச்சுகளும் புதிய தேசீய இயக்கம் தோன்றுவதற்குப் பெரி

தும் உதவி செய்தனவென்று முன்னமே குறிப்பிட்டுள்ளோம். லார்டு கர்ஸான் இந்தியாவுக்கு வந்ததும், தேச நிர்வாகத்தில் சிற்சில சீர்திருத்தங்கள் செய்யப் போவதாக ஒரு திட்டத்தை வெளியிட்டார். இச் சீர்திருத்தங்களில் ஒன்று கல்வியைப் பொறுத்ததாகும்.

இந்தியாவில் கல்வி சம்பந்தமான அநுபவம் சிறிதேனும் உள்ளவர் ஒவ்வொருவரும், தேசம் கல்வித்துறையில் மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறதென்று அபிப்பிராயப் பட்டார்கள். இந்தியக் கல்வி முறையும் பெரிதும் குறைபாடுள்ள தென்று அவர்கள் கருதினார்கள். அக்கல்வி முறையானது மாணாக்கர் களைப் புத்தகப் படிப்பிலேயே அதிக கவனம் செலுத்தும்படி செய்து அவர்களை வாழ்க்கைப் போராட்டத்துக்குத் தகுதி செய்யாமல் விடுத்தது; தேச பாஷைகளையும், தேசத்தின் பழமையான நாகரிகத்தையும் அசட்டை செய்து, ஆங்கில மொழிக்கும் மேனாட்டுக் கருத்துகளுக்கும் அளவு மீறிய முக்கிய மளித்தது; உண்மைத் தகுதியைப் புறக்கணித்து 'நெட்டுரு'ச் செய்தலுக்கே அது ஆதரவு நல்கிற்று; சொந்தமாகச் சிந்திப்பதற்கும், சொந்தமாகக் காரியம் செய்வதற்கும் அக் கல்வி முறையில் இடங்கிடையாது; பிறர் எண்ணியதையே எண்ணி, பிறர் செய்வதுபோல் செய்யும் கூட்டத்தாரை அது வளர்த்து வந்தது; அம் முறையின் கீழ் இங்கிலாந்திலிருந்து மூன்றாந்தர மனிதர்கள் கொண்டுவரப்பட்டுக் கல்வி இலாகாவில் உயர்ந்த பதவிகளில் அமர்த்தப் பட்டார்கள்; சிறந்த இந்திய அறிஞர்கள் அவர்களின் கீழ் தங்கள் ஆற்றலைப் பயன் படுத்தச் சந்தர்ப்பமில்லாமல் வாடிக் கிடக்க நேர்ந்தது; நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் கல்விப் பயிற்சி யளித்து வாழ்க்கைப் போராட்டத்துக்குத் தகுதி யாக்கி விடுதல் அரசாங்கத்தின் கடமை என்பதை அக் கல்வி முறை ஒப்புக் கொள்ளவில்லை.

தேசத்தின் கல்வி முறையில் பெரு மாறுதல்கள் செய்தல் அவசிய மாகவே இருந்தது. ஆனால் கல்வியைப் பரப்புவும்,

அதைத் திறமையுள்ள தாக்கவும் அரசாங்கத்தார் போதிய பணம் செலவிடச் சம்மதித்தல் அதை விட அவசியமான தன்றோ? ஆதலின் கர்ஸான் பிரபுவினுடைய வேலைத் திட்டமும், பேச்சுகளும் ஜனங்களின் மனதில் பெரிய நம்பிக்கைகளை எழுப்பின. அவர் நியமித்த சர்வகலாசாலைக் கமிஷன் முன்பு இந்தியர்களும், ஆங்கிலோ இந்தியர்களும் கூறிய யோசனைகளுக்கு அளவே இல்லை. ஆனால் இவ் விரு வகுப்பாரும் முற்றும் மாறுபட்ட நோக்குடன் இவ் விஷயத்தைப் பற்றி ஆராய்ந்து யோசனை சொன்னார்கள். இந்தியர்கள் கல்விப் பயிற்சிக்கு இன்னும் அதிக வசதிகள் வேண்டு மென்று விரும்பினார்கள். பள்ளிக்கூடங்களும், கலாசாலைகளும், ஆசிரியன்மாரும் இன்னும் அதிகமாக வேண்டு மென்றும், ஆசியர்களுக்குச் சம்பளம் அதிகம் கொடுக்க வேண்டு மென்றும், ஆரம்பக் கல்வியை இன்னும் அதிகமாகப் பரப்ப வேண்டு மென்றும், தனிப்பட்டவர்களின் முயற்சிகளுக்கு அதிக சுதந்திரம் அளிக்க வேண்டு மென்றும், தொழிற் கல்விக்கும் வியாபாரக் கல்விக்கும் வசதிகளை அதிகமாக்க வேண்டு மென்றும் இந்தியர்கள் கோரினார்கள். கல்வி முறை தேசீய நாகரிகத்துக் கியைந்த தாயும், ஜீவ சக்தி யுள்ள தாயும் ஆகவேண்டு மென்பதே அவர்களுடைய முக்கிய கவலையா யிருந்தது. ஆங்கிலோ இந்தியர்களோ இவற்றிற்கு முற்றும் மாறான கருத்துக்களை வெளி யிட்டார்கள். ஏற்கனவே யுள்ள கல்வி வசதிகளையும் குறைத்துவிட வேண்டு மென்றும், தனிப்பட்டவர்களின் கல்வி ஸ்தாபனங்களை இன்னும் கண்டிப்பான மேற்பார்வைக் குள்ளாக்க வேண்டு மென்றும், பரீட்சைகளைக் கடினமாக்க வேண்டு மென்றும், பொதுவாக இளைஞர்களுடைய உற்சாகத்தை ஒடுக்கி, கட்டுப்பாட்டுக் கடங்கிக் கீழ்ப் படியும் இயல்பை வளர்க்கக் கூடிய கல்வி முறையே வேண்டு மென்றும் அவர்கள் கூறினார்கள்.

இவ் விஷயத்தைக் குறித்த யோசனைகள் எல்லாவற்றையும் லார்டு கர்ஸான் தாமே ஆராய்ந்தார். கடைசியாக அவர் செய்த முடிவிலிருந்து அவருடைய உண்மை நோக்கம் இன்ன வென்று நன்கு வெளி யாயிற்று. அரசாங்க அதிகாரத்தைப் பலப் படுத்து

வதும், கல்வித் துறையில் சுதந்திரம் என்பதை அடியோடு கொன்றுவிடுவதும், தேசிய இயக்கத்தையும் பொதுவாக தேசிய உணர்ச்சி அனைத்தையும் பலவீனப் படுத்துவதுமே அவருடைய நோக்கங்கள் என்று படித்த இந்தியர்கள் நிச்சயமடைந்தார்கள்.

## அந்தரங்கக் கல்வி மகாநாடு

சிம்லாவில் நடந்த அந்தரங்கக் கல்வி மகாநாட்டில் லார்டு கர்ஸான் அரசாங்கக் கல்வி முறையை வகுத்தார். இம் மகாநாட்டிற்கு இந்தியர் எவரும் வர அநுமதிக்கப் படவில்லை. இதனால் இந்தியர்கள் அவருடைய நோக்கத்தைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணம் உறுதிப்பட்டது. அவர் இயற்றிய சர்வகலாசாலைச் சட்டமோ தேசத்தைத் திடுக்கிடச் செய்து விட்டது. இந்தியாவில் கல்விப் பயிற்சியை முழுதும் உத்தியோக மேற்பார்வையின் கீழ் கொணர்வதே அவருடைய நோக்கம் என்பதில் சிறிதும் சந்தேக மில்லாமல் போயிற்று. இனி எந்தக் காரியத்திற்கும் அரசாங்கத்தை எதிர்பார்ப்பது தவறு என்று படித்த இந்தியர்கள் முடிவு செய்தார்கள். தேசிய உணர்ச்சியை வலுப்படுத்தி, ஜனங்களைத் தன்னம்பிக்கையுள்ளவர்களாக்கி, பிரிட்டிஷ் அதிகாரத்தினின்றும் விடுதலை பெற ஆவலுள்ளவர்களாய்ச் செய்யக் கூடிய கல்வி முறையை அரசாங்கத்தார் ஒரு நாளும் கைக் கொள்ள மாட்டார்களென்று அவர்கள் உணர்ந்தார்கள்.

## மாறுபட்ட நோக்கங்கள்

கர்ஸான் பிரபுவும் நாங்களும் முற்றும் மாறுபட்ட நோக்கங் கொண்டவர்களென்பதைக் கண்டோம். நாங்கள் சுயராஜ்யத்தையும் விடுதலையையும் நோக்கமாகக்கொண்டிருந்தோம்; கர்ஸான் பிரபுவோ எங்கள் தளையை நீடிக்கச் செய்யவும், அப்போதிருந்த அரசியல் நிலைமையையே நிலைபெறுத்தவும் விரும்பினார். நாங்கள் சுதந்திர புருஷர்களாக விரும்பினோம்; அவர் நாங்கள் பிரிட்டிஷாரின் கீழ் பர தந்திரர்களாகவே யிருக்கவேண்டு

மென்று நினைத்தார். தேசிய முன்னேற்றத்தை துரிதப் படுத்த வேண்டு மென்பது எங்கள் அவா; அதன் வேகத்தைக் குறைக்க வேண்டு மென்பது அவருடைய ஆசை. நாங்கள் தைரியமும் தன் னம்பிக்கையும் பெற விழைந்தோம்; எப்போதும் நாங்கள் பிறரை நம்பிப் பணிவுடன் வாழ வேண்டு மென்று அவர் கருதி னர். நாங்கள் அபிவிருத்தி யடைய விரும்பினேம்; அவர் அவநம் பிக்கை கொண்டார். குடிகளைக் கண்யத்துடன் நம்பும் ஆட்சி முறை வேண்டு மென்று நாங்கள் கூறினேம்; அதற்குப் பதிலாக அவர் சந்தேகம் நிறைந்த ஒரு முறையைக் கடைப் பிடித்தார். நாங்கள் ஒற்றுமை நாடினேம்; அவர் சமூகங்களுக்குள் சச்சரவு நேர்வதற்குப் புதிய காரணங்களைக் கண்டு பிடிக்க லானர். பொது இலட்சியத்திற் காகச் சக்திகளை ஒன்று திரட்ட நாங்கள் முயன்றோம்; அவரோ எங்களைத் தனித்தனியே பிரித்து வைக்க முயன்றார். நாங்கள் ஒருமைப் பாட்டை விரும்பினேம்; அவர் வேற்றுமை உண்டுபண்ணத் தொடங்கினர். அரசாங்கத்தில் ஜனப் பிரதிநிதித்துவம் அதிக மாக வேண்டு மென்பது எங்கள் கோரிக்கை; ஆனால் ஏற்கனவே அளிக்கப் பட்டிருந்த பிரதிநிதி ஸ்தாபனங்களுக்கும் கெட்ட பெயரை உண்டாக்கவும், முற் போக்குக்குப் பதிலாகப் பிற்போக்கை ஏற்படுத்தவும் லார்டு கர் ஸான் தம்மா லியன்றனவெல்லாம் செய்தார்.

## இங்கிலாந்துக்குக் காங்கிரஸ் தூது

காங்கிரஸ் தலைவர்கள் இவற்றை யெல்லாம் கண்டார்கள். லார்டு கர்ஸானுடைய முறையை அவர்கள் சிறிது தைரியமா கவே எதிர்த்தார்கள். அவர்கள் அச்சமின்றிப் பேசினர்கள். கர் ஸான்பிரபுவின் ஆதரவைக் கோரி அவரைப் பேட்டி காண்பதற் காகத் தங்கள் அக்கிராசனரை அனுப்பினர்கள். லார்டு கர்ஸான் அவரைப் பார்க்கவே மறுத்து விட்டார். காங்கிரஸின் நட வடிக்கைகளை வெறும் ஆர்ப்பாட்டம் என்று அவர் கூறினர். காங்கிரஸ் தீர்மானங்களை அவர் அவமதித்து ஒதுக்கினர். அத் தீர்மானங்களினல் எப்போதேனும் பயன் விளைந்த துண்டா

என்று அவர் கேட்டார். தலைவர்கள் இவற்றினை யெல்லாம் கோபங் கொண்டு கொதித்தார்கள். ஆனால், அவர்கள் செய்யத் தீர்மானித்த தெல்லாம் பிரிட்டிஷ் மகா ஜனங்களிடம் விண்ணப்பம் செய்து கொள்ளுதலே யாகும். எனவே 1905-ம் ஆண்டில் இந்தியாவின் குறைகளை பிரிட்டிஷ் மகா ஜனங்களின் முன்பு எடுத்துரைப்பதற்காக இங்கிலாந்துக்கு இரண்டு பிரதிநிதிகள் அனுப்பப் பட்டார்கள்.

அப் பிரதிநிதிகள் ஸ்ரீ கோகலேயும், இந் நூலாசிரியருமே யாவர். அவர்கள் கிரேட் பிரிட்டனில் பல பொதுக் கூட்டங்களில் பேசினார்கள்; அரசியல் வாதிகள் சிலரைப் பார்த்தார்கள்; பலரை நண்பர்களாக்கிக் கொண்டார்கள். ஆயினும் தங்கள் தூதினால் பயன் அதிகம் விளைந்ததாக அவர்கள் நம்பிக்கை பெற வில்லை. அவர்களில் ஒருவர் (இந் நூலாசிரியர்) தாய் நாடு திரும்பியதும் தமது ஏமாற்றத்தைத் தெளிவாகத் தெரிவித்தார். ஆங்கிலப் பொது மக்களுக்குத் தங்கள் காரியங்களே அதிகமா யிருப்பதால் நமக்காக ஒன்றும் செய்ய மாட்டார்களென்றும், பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்தியரின் மனோரதங்களை ஆதரிக்கத் தயாரா யில்லை யென்றும், இங்கிலாந்தில் நமது கட்சியை எடுத்துச் சொல்லச் சந்தர்ப்பம் கிடைப்பதே அரிதென்றும், ஆங்கிலோ இந்தியர்களின் செல்வாக்கும் மதிப்பும் இங்கிலாந்தில் அதிகமா யிருப்பதால், காங்கிரஸ் அங்கே செய்யக் கூடிய அரை குறையான கிளர்ச்சி எதுவும் வெற்றி பெற முடியா தென்றும் அவர் எடுத்துச் சொன்னார். இங்கிலாந்திலிருந்து அவர் தமது ஜனங்களுக்குக் கொண்டு வந்தது "தன் கையே தனக் குதவி" என்னும் செய்தியே யாகும். இந்தியர்கள் உண்மையிலேயே தேச முன்னேற்றத்தில் கவலை கொண்டவர்களாயின், நாட்டின் விடுதலைக்காகத் தாங்களே பாடுபட வேண்டு மென்றும், தங்களுடைய தேச பக்தியைச் செயல் மூலம் ஐயமற நிரூபிக்க வேண்டு மென்றும் அவர் கூறினார்.

மிஸ்டர் ஹியூம், 1883-ம் ஆண்டில் கல்கத்தா சர்வகலா சாலைப் பட்டதாரிகளுக்கு விடுத்த விண்ணப்பத்திலும், மற்றும்

பல துண்டுப் பிரசுரங்களிலும் கூறி யிருந்த புத்திமதியும் இதுவே யாகும்.

## 1905-ம் ஆண்டுக் காங்கிரஸ்

ஆனல் தேச ஊழியத்தில் ஈடுபட்ட இந்தியர் ஒருவர் இவ்வாறு பேசியது இதுவே முதல் தடவை. இந் நூலாசிரியர் இங்கிலாந்தி லிருந்த போதே வங்காளத்தில் சுதேசி, பகிஷ்கார இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. பகிஷ்காரமும் ஓர் அரசியல் ஆயுதந்தான் என்று ஸ்ரீ கோகலே கூட ஒப்புக்கொண்டிருந்தார். எனவே, இந் நூலாசிரியர் கொண்டு வந்த செய்தியைத் தேச மக்கள் விருப்பத்துடன் செவி மடுத்தனர். தேசம் அதற்குச் சித்தமா யிருந்தது. இது குறித்துக் கலந்தாலோசித்து ஒரு வேலைத் திட்டம் தயாரிப்பதற்கு 1905-ம் ஆண்டில் காசியில் நடந்த காங்கிரஸ் சந்தர்ப்பம் அளித்தது. இந்திய சட்டசபை அங்கத்தினரான ஸ்ரீ கோகலே இந்தக் காங்கிரஸிற்கு அக்கிராசனம் வகித்தார். அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும், விஷயாலோசனைக் கூட்டங்களின் ஆரவாரம் மிகுந்த நடவடிக்கைகளும் ஜனங்களின் மனோ நிலையை நன்கு புலப்படுத்தின. கோகலே மிக்க நிதானமும், ஜாக்கிரதையும் உடையவரா யிருந்தாலும் உற்சாகங் கொண்டவரா யிருந்தார். அவருடைய தலைமைச் சொற் பொழிவு முற்றும் மிதவாதப் பேச்சே யாயினும், அது உணர்ச்சி ஊட்டுவதா யிருந்தது. ஆனல் அவருடைய பம்பாய் நண்பர்கள் அவர் அதிக தூரம் போவதற்கு விட வில்லை. முதல் இரவு நடந்த விஷயாலோசனைக் கூட்டத்திலேயே பிளவு நேர்ந்தே தீரும் போல் காணப்பட்டது. நடவடிக்கைகள் வழக்கம் போல் ஒருமுகமாகவும், அமைதியாகவும் நடைபெறவில்லை. ஒருமுகமாகத் தீர்மானித்தல் பழைய காங்கிரஸ் தலைவர்களுக்கு வழக்கமாய்ப் போயிருந்தது. ஆனல் பழைய ஒருமைப்பாடு இனிமேல் அசாத்தியமென்று அவர்கள் விரைவிலேயே உணரும்படி இளைஞர்கள் செய்துவிட்டார்கள்.

மேற்படி விஷயாலோசனைக் கூட்டத்தில் வேல்ஸ் இளவரசரின் விஜயத்தை வரவேற்ப தென்ற தீர்மானத்தைக் குறித்து விவாதம் எழுந்தது. அதைப் பற்றி ஒற்றுமையான முடிவு எதுவும் ஏற்படாமலே கூட்டம் கலைந்தது. தீர்மானத்துக்கு விரோதமானவர்கள் காங்கிரஸ் மேடையிலும் அதை எதிர்க்கப் போவதாகக் கூறினார்கள். வரவேற்புக் கமிட்டியாரும், பழைய தலைவர்களும் இதனால் அடைந்த கோபத்துக்கு அளவில்லை. அவர்கள் எவ்வளவோ அச்சுறுத்திப் பார்த்தார்கள்; என்னவெல்லாமோ தீமைகள் விளையு மென்று சோதிடங் கூறினார்கள். ஆயினும் இளைஞர் கூட்டம் செவி கொடுக்க வில்லை. மறு நாள் காலை முழுவதும், அவர்கள் அத் தீர்மானத்தை எதிர்க்காமல் இருக்கும்படி செய்வதற்கான முயற்சியிலேயே கழிந்தது. எனினும் வங்க இளைஞர்கள் இணங்க மறுத்துவிட்டார்கள். இதனால் குறிப்பிட்ட நேரத்தில் காங்கிரஸ் ஆரம்பமாக முடியாமல் தாமதம் ஏற்பட்டது. பின்னர், கோகலே பஞ்சாப் தலைவர்களையும், மகா ராஷ்டிர தலைவர்களையும் மன்றாடி வேண்டிக் கொண்டார். அவர்கள் தங்கள் வங்காள நண்பர்களுடன் பேசி, அத் தீர்மானம் பிரேரேபிக்கப்படும்போது சபைக்கு வராமல் இருந்துவிடச் செய்தார்கள். சுதேசியம், பகிஷ்காரம், தேசீயக் கல்வி இவை குறித்த தீர்மானமும் பெரிதும் விவாதத்துக் கிடமாயிற்று. இறுதியாக நிறைவேறிய ராஜித் தீர்மானத்தில் தேசீய வாதிகளின் அடிப்படையான கொள்கைகள் அங்கீகரிக்கப் பட்டன.

காங்கிரஸ் விடுதியில், இளந் தேச பக்தர்கள் தங்கள் வருங் கால வேலைத் திட்டத்தை நிர்ணயிப்பதற்காகப் பகிரங்க மகா நாடு கூடினார்கள். இங்கேதான் ஸ்ரீ திலகர் சாத்வீக எதிர்ப்புக் கொள்கையை முதன் முதலாக வெளியிட்டார். மகா நாட்டில் சம்பிரதாயமான தீர்மானங்கள் செய்யப்பட வில்லை. ஆயினும், தன் கையே தனக் குதவியாகக் கொண்டு தன் னம்பிக்கையுடன் வேலை தொடங்க வேண்டுமென்று அங்கே கூடியிருந்த

வர்கள் தீர்மானித்துக்கொண்டார்கள். இத் தன்னம்பிக்கை முயற்சிக்கு அரசாங்க உத்தியோகங்களையும் அரசாங்கச் செல்வாக்குள்ள மற்ற ஸ்தாபனங்களையும் பகிஷ்கரித்தலே அடிப்படையாயிருக்க வேண்டுமென்று முடிவு செய்யப் பட்டது.

## சாத்வீக எதிர்ப்பு இயக்கத்தின் நோக்கம்

இவ் வியக்கத்தின் நோக்கம் இருவகைத் தாகும். அக் காலத்தில் தேச மக்கள் ஒரு வகை மனோ வசியத்தினால் தங்களை ஆள்வோரின் சர்வ வல்லமையிலும், அவர்களுடைய பரோபகார சிந்தையிலும் நம்பிக்கை கொள்ளுமாறு செய்யப் பட்டிருந்தனர். இம் மனோ வசியத்தினின்று அவர்களை விடுவித்தலே முதலாவது நோக்கம். தேசீயக் கொள்கையை வளர்த்த தலைவர்களில் ஒருவரான பாபு விபின சந்திர பாலர் தாம் எழுதிய ஒரு நூலில் இதை நன்கு விளக்கி யுள்ளார். அவர் கூறுவதாவது:—

"இந்திய ஜனங்கள் நவ நாகரிக இராஜ தந்திரத்தில் சிறிதும் பயிற்சியில்லாதவர்களாதலின், ஆளும் இனத்தார் தங்கள் பெருமையைப் பற்றியோ, ஜனங்களின் சிறுமையைப் பற்றியோ என்ன சொன்னாலும் அதை வேதவாக்காக நம்பினார்கள். இந்தியர்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ளத் தகுதியற்றவர்களென்று அவர்களுக்குச் சொல்லப் பட்டிருந்தது. அதை அவர்கள் உண்மை யென்றே நம்பினார்கள். ஜனங்கள் வலியற்றவர்களென்றும், அரசாங்கம் பலம் பொருந்தியதென்றும் இந்தியர்கள் மனித சமூகத்தில் கீழ்த் தரத்தைச் சேர்ந்த சாதியார் என்றும், 'பாதி காட்டுமிராண்டிகளான' சுதேசிகளை நாகரிகப் படுத்துவது இங்கிலாந்துக் கேற்பட்டுள்ள பரோபகாரக் கடமையென்றும் அவர்களுக்குக் கூறப்பட்டிருந்தன. இவை யெல்லாம் வெறும் பாசாங்கு. ஏமாற்றும் வித்தை என்று வெளிப்படுத்தும் வேலையை தேசீயக் கட்சியார் மேற்கொண்டனர். அவர்கள் மனோவசியத்துக்கு

மாற்று வசியம் செய்து ஜனங்களை எழுப்பிவிட்டுத் தங்கள் வலிமையைத் தாங்கள் உணரும்படியும், தங்கள் பண்டை நாகரிகச் செல்வத்தின் சிறப்பை அறியும்படியும் செய்தார்கள்.”*

அடங்காத சுதந்திர தாகத்தையும், தியாக புத்தியையும், தாய் நாட்டுக்காக எத்துணைத் துன்பமும் சகிக்கச் சித்தமாயிருக்கும் மனப்பான்மையையும் உண்டுபண்ணுவது இயக்கத்தின் இரண்டாவது நோக்கமாகும். இதை உபதேசத்தினாலன்றி உதாரணத்தினால் நிறைவேற்றத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலே குறிப்பிட்ட தலைவரின் மொழிகளிலேயே அவ் வேலைத் திட்டம் எத்தகைய தென்பதை எடுத்துக் காட்டுவோம் :—

“அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் பகிஷ்காரம் — அதாவது அரசாங்கத்துடன் கௌரவத்தை முன்னிட்ட சம்பந்தம் எல்லாவற்றையும் அடியோடு விலக்கலும், அன்னிய நாட்டுச் சாமான்களை முக்கியமாக பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரித்தலும்; தேசீயக் கல்வி — அதாவது இளைஞர்களை அரசாங்க மேற்பார்வையின் கீழுள்ள கலாசாலைகளிலிருந்தும், பள்ளிக்கூடங்களிலிருந்தும் வெளிவரச் செய்து, தேசிய முறைகளில் தேசீய இலட்சியத்தை அடைவதற்கு உதவியாயிருக்கக் கூடிய வழியில் பயிற்சி செய்வித்தல்; தேசீயத் தொண்டர் படை அமைத்தல் — அதாவது தற்போது உத்தியோகஸ்தர்களாலோ, உத்தியோகப் பற்றுள்ள ஸ்தாபனங்களினாலோ நடத்தப்பட்டுவரும் பொதுநலத்திற் குரிய வேலைகளை, சட்ட விரோதமின்றி, ஜனங்கள் தாங்களே செய்துகொள்ளும்படி பயிற்சி செய்வித்தல் (உதாரணமாக, கிராம சுகாதாரம், ஏழைகளுக்குப் பொருளுதவி, வைத்திய உதவி, பொது ஜனக் கல்வி, குற்றங்கள் நேரிடாமல் தடுக்கும் போலீஸ் வேலை, சந்தைக் கூட்டங்களையும், திருவிழாக் கூட்டங்களையும் ஒழுங்கு படுத்தல் முதலிய காரியங்கள்); வழக்குகளைப் பஞ்சாயத்துகளின் மூலம் தீர்த்துக்கொள்ளுதல்; ஆகிய இவை தேசீயக்

* “இந்திய தேசீய வாதத்தின் உட்கருத்து”, 42-ம் பக்கம்.

கட்சி வெளியிட்ட வேலைத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.''

மேற் குறிப்பிட்ட ஆசிரியர் இத்திட்டத்தின் நோக்கங்களை பற்றிக் கூறியதையும் இங்கெடுத்துக் காட்டுவோம்:—

"பொதுநலத்திற்குரிய கூட்டுறவு ஸ்தாபனங்களின் உதவி கொண்டு ஜனங்கள் உள்ளத்தில் பொதுநலப் பற்றை வளர்த்து, இவ்வாறு தேசீய சுதந்திர வாழ்க்கைக் குரிய பெரிய பொறுப்புகளை வகிக்க அவர்களைப் பயிற்சி செய்வித்தல் முதலாவது நோக்கம். அடுத்தாற்போல், தேச முழுவதிலும் ஆங்காங்கு திறம்பட வேலைசெய்யும் அரசியல் ஸ்தாபனங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலமாய்த் தலைவர்களுக்கும் ஜனங்களுக்கும் உண்மைத் தொடர்பு உண்டாக்குதல்; இதன் துணைகொண்டு அவ்வப்போது பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டி அமைத்து ஜனங்களின் கோரிக்கைக் கிணங்கும்படி அரசாங்கத்தைக் கட்டாயப் படுத்துதல்; இவ்வாறு ஜனங்களின் உரிமைகளை நாளடைவில் வளர்த்து வருதல்.''

இங்கே ஒன்று கூறவேண்டும். பகிஷ்காரம், தொண்டர் படை அமைப்பு இவ்விரண்டையும் தவிர்த்து மற்றப்படி மேற் கூறிய திட்டத்தில் கண்ட வேலைகள் புதியனவல்ல. தேச முழுவதிலும், சிறப்பாகப் பஞ்சாப்பிலும் மகாராஷ்டிரத்திலும் அவை ஏற்கனவே நடந்துவந்தன. ஆங்காங்கு ஓரளவு வெற்றியும் அளித்திருந்தன. சுயநலத் தியாகம் செய்து கல்வி பரப்ப வேண்டுமென்னும் விருப்பத்தின் பயனாகவே தக்ஷிணக் கல்விச் சபையும் (Deccan Education Society), பூனா பெர்க்கூஸன் கலாசாலையும் ஏற்பட்டவையாகும். தேசபக்தியையும் தேசீய உணர்ச்சியையும் வளர்ப்பதே இம் முயற்சிகளின் அடிப்படையான நோக்கம். இவ்வாறே சுதேசியம், கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைத்தல், பஞ்சாயத்து சபைகள் ஏற்படுத்தல் முதலிய துறைகளிலும் ஏற்கனவே முயற்சிகள் செய்யப்பட்டிருந்தன. இம் முயற்சிகளும் தேசபக்தியினாலும் பரோபகார சிந்தையினாலுமே தூண்டப் பெற்றவையாகும். வங்காளத்தில் வித்தியா

சாகரராலும் மற்றவர்களாலும் ஆரம்பிக்கப்பட்ட கலாசாலைகளும், சென்னைப் பச்சையப்பன் கலாசாலையும் இவ்வுணர்ச்சி காரணமாகவே ஏற்பட்டவை. பம்பாய் தனக்கென்று தனித்த திட்டங்கள் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. தொழில், வியாபார அமைப்புகளைப் பொறுத்தவரையில் இந்தியாவின் மற்ற எந்தப் பகுதியையும் விட அது முன்னேறியிருந்தது. பஞ்சாபில் 1877-ம் ஆண்டிலேயே சுதேசிய இலட்சியம் ஏற்பட்டிருந்தது. இதில் பொருளாதார, தேசாபிமான நோக்கங்கள் கலந்திருந்தன. தேசியக் கல்வி இலட்சியம் தயானந்தர் ஆங்கில வேதகலாசாலையாகவும், தேசியக் கூட்டுறவு இலட்சியம் "பஞ்சாப் நேஷனல் பாங்கி", "பாரத் இன்ஷியூரன்ஸ் கம்பெனி" முதலிய ஸ்தாபனங்களாகவும் உருக்கொண்டன. ஹிந்து அநாதாலய இயக்கம், பஞ்ச நிவாரண இயக்கம் முதலியவை பரோபகார, சமயாபிமான நோக்கங்களினின்றும் ஏற்பட்டன. பஞ்ச நிவாரண ஊழியம் சம்பந்தமாகவும், காங்கிராவில் நிகழ்ந்த பூகம்ப துன்ப நிவாரண வேலை சம்பந்தமாகவும் தொண்டர் படை அமைக்கும் துறையிலும் சிறிது முயற்சி செய்யப்பட்டிருந்தது. 1905-ம் ஆண்டுக்கு நீண்டகாலம் முன்பிருந்தே பஞ்சாப்பில் பல பள்ளிக்கூடங்களும், பிற அறநிலையங்களும், தனிப்பட்டவர்களால் அமைக்கப்பட்டு, தனிப்பட்டவர்களின் பண உதவியினால் நடந்துவந்தன. இவற்றிற்கு அரசாங்க உதவி கிடையாது; அரசாங்கத்தின் மேற்பார்வையுமில்லை. தேச பக்தியும், பரோபகார உணர்ச்சியுமே இந்த ஸ்தாபனங்களின் மூல நோக்கங்களாகும்; அரசியல் நோக்கம் அவற்றிற்குக் கிடையவே கிடையாது.*

நாட்டை ஆண்டுவந்த அதிகார வர்க்கத்தினருக்கு இம் முயற்சிகள் எல்லாம் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆனால்

* மேலும், இந்த ஸ்தாபனங்களை நடத்தியவர்கள் அரசாங்கத்துடன் கலந்து, அதனுடன் ஒத்துழைத்து வேலைசெய்யவே எண்ணினார்கள். தனித்து நின்று தங்கள் சுதந்திரத்தை வலியுறுத்தும் எண்ணமே அவர்களுக்குக் கிடையாது.

அவற்றை அடக்கிவிடவும் அவர்களால் முடியவில்லை. தனிப் பட்ட உத்தியோகஸ்தர்கள் சிலசமயம் இவ் வியக்கங்களிடம் அநுதாபங் காட்டியதுடன் உதவியும் செய்தார்கள். இதுகாறும் இத்தகைய தேசீய முன்னேற்ற முயற்சிகளில் வங்காளம் பின்னணியில் நின்றது. ஆனல் கர்ஸான் பிரபுவின் காலத்தில் இந் நிலைமை மாறிற்று. அவர் வங்காளத்தை இரு மாகாணங்களாகப் பிரிவினை செய்தார்; கல்கத்தா சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பேசும்போது கீழ் நாட்டார் வாய்மையற்றவர்களென்று உரைத்தார்; மற்றும் சில சமயங்களில் அவர்களைக் கோழைகள் என்றும், வெறுங் கூச்சல் போடுவோரென்றும், வாயடி தேசபக்தர்களென்றும் கூறினர். அப்போதுதான் வங்காளிகள் தங்கள் குறைபாடுகளை உணர்ந்தார்கள். கர்ஸான் பிரபுவைப் பழிக்குப்பழி வாங்கவும், அவரே பொய்யர் என்பதை உலகிற்கு நிரூபித்துக்காட்டவும் தீர்மானித்தார்கள். பின்னர் நிகழ்ந்தவை அடுத்த அத்தியாயத்தில் சுருக்கமாகக் கூறப்படும்.

★

நான்காம் அத்தியாயம்

☆

# தேசீய இயக்கத்தின் இளம் பருவம்

—✶—

## வங்காளப் பிரிவினை

**ப**ழைய வங்காள மாகாணம் 1905-ம்ஸு அக்டோபர்மீ 16உ கர்ஸான் பிரபுவினுல் பிரிவினை செய்யப்பட்டது. அன்றைய தினம் "மாகாணத்தின் அவ்விரு பிரிவுகளிலும் ஏராளமான ஜனங்கள் அடுப்பும் மூட்டாமல் உபவாச மிருந்து துக்கத்திற்கறிகுறியாக வெறுங்காலுடன் சென்று புண்ணிய நதிகளிலும் குளங்களிலும் ஸ்நானஞ் செய்தார்கள். சகோதர உரிமைக்கும், தேசீய ஒற்றுமைக்கும் அறிகுறியாக ஒருவருடைய மணிக்கட்டில் ஒருவர் கங்கணம் கட்டினுர்கள்." இதற்கு முன்னதாக, அவ்வருஷம் ஆகஸ்டுமீ 7உ யன்றே வங்காளத் தலைவர்கள் கல்கத்தா நகர மண்டபத்தில் காஸிம் பஸார் மகாராஜா மனீந்திர சந்திர நந்தியின் தலைமையில் பொதுக்கூட்டம் கூடி "வங்காளப் பிரிவினையைக் கண்டிக்கும் பொருட்டாக பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரிப்பதென்று" தீர்மானித் திருந்தார்கள்.

## பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரம்

**ப**கிஷ்காரத்தைத் தற்காலிக உபாயமாகக் கைக்கொள்வதென்றே ஆரம்பத்தில் உத்தேச மிருந்தது. ஆதலின் முதலில் கையொப்பம் வாங்கிய பிரதிக்ஞா பத்திரங்களில் ஒரு கால வரை யறை குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது, வங்காளப்

பிரிவினை ரத்து செய்யப்படும் வரையில் பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரிக்க உறுதி கொள்வதாக அவற்றில் கண்டிருந்தது. வங்காள அரசியல் தலைவர் ஒருவர் கூறிய வண்ணம், பிரிட்டிஷ் தொழிற்சாலை முதலாளிகளுக்கு நஷ்ட முண்டு பண்ணி, அதன் மூலம் பிரிவினையை ரத்து செய்வதற்கு அவர்களுடைய அநுதாபத்தையும் உதவியையும் பெறலாமென்பது பகிஷ்கார இயக்கத்தின் நோக்கமாயிருந்தது. ஆனால், விரைவிலேயே, பகிஷ்காரம் சிறந்ததொரு பொருளாதார ஆயுதமென்றும், தேசத்தின் பொருள்மூலத்தை அன்னியர் சுரண்டிச் செல்லாமல் தடுப்பதற்கு அவ் வாயுதத்தை உபயோகிக்கலாமென்றும் ஜனங்கள் கண்டுகொண்டார்கள்.

மேலே குறிப்பிட்ட நூலிலிருந்து இன்னும் சில பகுதிகளை இங்கெடுத்துக் காட்டுதல் பொருந்தும்;—கல்கத்தாவிலிருந்து அனுப்பப்பட்ட உறுதி மொழிப் பத்திரங்கள் ஏராளமான ஜனங்களால் கையொப்பமிடப் பட்டுத் திரும்பி வந்தன. ஆனால் அவற்றில் 'பிரிவினை ரத்து செய்யப்படும் வரையில்' என்னும் நிபந்தனைப் பகுதி அடிக்கப்பட்டிருந்தது. சிறிது காலத்திற்குப் பகிஷ்கார இயக்கம் சிறந்த வெற்றி அளித்தது. அக்டோபர் மாதத்தில் வரும் விஜயதசமியன்று கல்கத்தா ஐவுளி வியாபாரிகள் மான்செஸ்டர் துணிகளுக்கு ஏராளமாக ஒப்பந்தங்கள், செய்வது வழக்கம். ஆனால் இவ் வருஷத்தில் அன்றையதினம் ஒப்பந்தம் எதுவுமே நடைபெறவில்லை. அன்னிய நாட்டுச் சாமான்களின் இறக்குமதி குறையவே அதை யனுசரித்து உள்நாட்டுத் தொழில்கள் பல புத்துயிர் பெறலாயின. இந்தியாவெங்கும் கைத்தறி நெசவு செழித்தோங்கிற்று. வங்காளத்தைத் தவிர்த்த மற்ற மாகாணங்கள் தீவிர பகிஷ்காரத்தைக் கைக்கொள்ள வில்லையாயினும், தேசமெங்கும் சுதேசி முழக்கம் மட்டும் கிளம்பலாயிற்று. இதனல் உள்நாட்டுக் கைத்தொழில்கள் எல்லாவற்றிற்கும் புதிய ஆக்கம் பிறந்தது. இயக்கம் மிகத் தீவிரமாக நடந்த வங்காளத்தில், இராஜாக்களும், குடியானவர்களும், முதலாளிகளும், தொழிலாளிகளும்,

படித்தவர்களும், படியாதவர்களும் எல்லாரும் ஒன்றுசேர்ந்து இயக்கத்தில் ஈடுபட்டது பெரிதும் குறிப்பிடத்தக்க விசேஷமாகும்.

சில காலத்திற்கு பகிஷ்காரம் மிகத் திறமையாக நடந்தபடியால், கல்கத்தாவில் வெளியாகும் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகையான "இங்கிலீஷ்மன்" பின்வருமாறு எழுதிற்று:—"கல்கத்தா ஜவுளிக் கடைகளில் விற்கமுடியாத துணிகள் ஏராளமாகக் கிடக்கின்றன வென்பது முற்றிலும் உண்மையாகும். பகிஷ்கார இயக்கத்தின் ஆரம்ப நாட்களில், துணி வியாபாரத்தில் சுணக்கத்திற்கு ஏதேதோ பொருளாதார காரணத்தைக் குறிப்பிடுவது வழக்கமாயிருந்தது......பல பிரபல மார்வாரி கடைகள் அடியோடு முழுகிப் போயின. பெரிய ஐரோப்பியக் கம்பெனிகளில் பல தங்கள் துணி வியாபாரப் பகுதியை மூடிவிடவோ அல்லது பெரிதும் குறைத்துக் கொள்ளவோ நேர்ந்திருக்கிறது. கிடங்குகளில் சரக்கு இருப்பு நாளுக்குநாள் அதிகமாகி வருகிறது. ஏற்கனவே, சரக்கு அனுப்பச்சொன்ன மார்வாரிகளும் மற்ற இந்திய வியாபாரிகளும் சரக்கு எடுத்துக் கொள்ள முடியாதென்று இப்போது சொல்கின்றனர். இவ் விஷயங்கள் பிரசித்தியானவை யாதலின், அவற்றை மூடி வைக்க முயலுதல் வீண் முயற்சியேயாகும். உண்மையில், பகிஷ்காரத்தினால் வியாபாரத்துக்கு நேர்ந்திருக்கும் தீங்குகளை முழுதும் பகிரங்கப் படுத்துவதற்குக் காலம் வந்துவிட்டது. இது பகிஷ்கார வாதிகளுக்கு ஊக்கமூட்டப் படுவதாகும் என்று சொல்லப்படுவதில் பொருளில்லை. ஏனெனில் அவர்களுக்குப் பிறர் ஊக்கமூட்டத் தேவையேயில்லை. தாய்நாட்டின் (இங்கிலாந்து) பொது ஜனங்களையும், இந்திய அரசாங்கத்தையும் தூக்கத்தினின்று எழுப்புவதே இப்போது முக்கியம். பிரிட்டிஷ் இராஜ்யத்தின் பகைவர்கள் தேசத்தில் பிரிட்டிஷாரின் நலன்களுக்குத் தீங்கிழைக்க ஒரு சிறந்த ஆயுதத்தை (அதாவது பகிஷ்காரத்தை)க் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதை அவர்கள் உணரும்படி செய்யவேண்டும்."

பகிஷ்காரத்தின் வெற்றிக்கு, "இங்கிலீஷ்மன்" தன் கட்டுரையின் இறுதியில் கூறிய பின்வரும் மொழிகள் சிறந்த அத்தாட்சியாகும் :—"இதைக் குறித்து அரசாங்கம் என்ன செய்யப் போகிறதென்பதே இப்போது கேள்வி. பகிஷ்காரத்துக்குப் பணிந்திருத்தல் கூடவே கூடாது. ஆயுதந்தரித்த புரட்சியைவிடப் பகிஷ்கார இயக்கம் இந்தியாவுடன் பிரிட்டனின் தொடர்புக்கு நிச்சயமாக அழிவை உண்டாக்கிவிடும்."

## அரசாங்கத்தின் பதில்

இம் முயற்சி, தற்கால மிதவாதிகள் உள்பட வங்காளத் தலைவர்கள் அனைவரும் ஒரு முகமாக நடத்தியதாகும். இதற்கு அரசாங்கத்தார் எவ்வாறு பதில் கூறினர் என்பதை இனிக் கவனிப்போம். முதலில் அவர்கள், பகிஷ்கார வாதிகளுக்குத் துணைபுரிந்த மாணுக்கர்கள் மீது போர்துவக்கினர். பகிஷ்காரப் பிரசாரத்தில் முக்கியமான வேலை மாணுக்கர்களாலேயே செய்யப்படுகிறதென்று அதிகாரவர்க்கம் எண்ணிற்று, "ஆரம்ப நாட்களில், பகிஷ்கார உணர்ச்சி ஜனங்களின் உள்ளத்தில் நிலைத்துவிடுவதற்கு முன்னல், பகிஷ்காரத்தின் வெற்றி தொண்டர்களின் மறியல் வேலையையே முழுதும் பொறுத்திருந்தது" என்று ஸ்ரீ விபின சந்திர பாலர் கூறுகிருர். மற்றும் அவர் "மேனுட்டில் நிகழும் மறியல்களில் வழக்கமாயுள்ளது போல் பலாத்காரமோ, பலாத்காரம் செய்வதாகப் பயமுறுத்தலோ சிறிதும் கையாளப்படவில்லை" என்றும், "சன்மார்க்கத்துக்கு மாறுபடாமல் ஜனங்களின் புத்தியில் படும்படி எடுத்துச் சொல்லியே மறியல் வேலை நடந்தது" என்றும் உறுதி கூறுகிருர்.

ஆனல் பிரிட்டிஷார் இதை உண்மையென்று ஒத்துக்கொள்வதில்லை. மறியலின் இயல்பு எத்தகையதாயினும் அவர்கள் அதை விரும்பவில்லை. அவ்வியக்கம் வளர்ச்சியுற்றுப் பலம் பெறுவதைப் பார்த்துக்கொண்டு தாங்கள் வாளாயிருக்க முடியாதென அரசாங்கத்தார் எண்ணினர்கள். "மாணுக்கர்

கள் தேசீய முயற்சிகளில் எவ்விதத்திலும் கலந்துகொள்வதைக் குற்றமாக்கியது அவர்கள் எடுத்துக்கொண்ட முதல் நடவடிக்கையாகும். பொதுக் கூட்டங்களுக்குச் செல்லும் மாணுக்கர்கள் தண்டிக்கப்படுவார்களென்றும், கடைசி தண்டனையாக கலாசாலையிலிருந்து தள்ளப்படுவார்களென்றும் உத்திரவு பிறந்தது."

## தேசீயக் கல்வி இயக்கம்

**வ**ங்காளத் தலைவர்கள் பின்னர் கலந்தாலோசித்து, தேசீய சர்வகலாசாலை ஒன்றை ஸ்தாபித்து அதில் அரசாங்கத் தொடர்பின்றிக் கல்வி யளிப்பதென்று தீர்மானித்தார்கள். லார்டு கர்ஸானுடைய கல்வி முறை ஏற்கனவே ஜனங்களை இத் துறையில் கவனஞ் செலுத்துமாறு செய்திருந்தது. இப்போது பகிஷ்கார இயக்கத்தைக் குலைக்கும் நோக்கத்துடன் மாணுக்கர்களைத் தண்டிப்பதற்குக் கையாளப்பட்ட முறைகள் 'இத் தேவையை மிகுதியாக்கி அதற்குரிய முயற்சிகள் தொடங்கப்படுமாறு செய்தன.' இவ் வியக்கமும் பகிஷ்காரத்தைப் போலவே வங்காளத்தின் ஒருமுகமான ஆதரவைப் பெற்றது. ஸர் குருதாஸ் பானர்ஜி இவ் வியக்கத்தின் தலைவரானுர். இவர் கல்கத்தா ஹைகோர்ட்டின் மாஜி நீதிபதி. சிறிது காலம் கல்கத்தா சர்வகலாசாலையின் வைஸ் சான்ஸலரா யிருந்தவர். இவருடைய இராஜ பக்தியையும், நிதான புத்தியையும் பற்றி நண்பர்களாதல், பகைவர்களாதல் சந்தேகித்தது கிடையாது. மற்றும் இவர் லார்டு கர்ஸானுடைய சர்வகலாசாலைக் கமிஷனில் ஓர் அங்கத்தவராயிருந்து, பெரும்பான்மை அங்கத்தவர் சிபார்சு செய்த முறையை ஒத்துக்கொள்ளாமல் தனிக் குறிப்பு எழுதியவர். "இவருடைய தலைமையில் வங்காள தேசீயக் கல்விச் சபையார் அரசாங்கக் கல்வி இலாகாவுடன் சம்பந்தமின்றிச் சுதந்திரத்துடன் வேலை செய்யத் தீர்மானித்தனர். ஆனுல் கல்வி இலாகாவை எதிர்க்கும் உத்தேசம் அவர்களுக்கில்லை. கல்வித் துறையில் இச் சுதந்திர முயற்சிக்குக் காரணம்

பின்வருமாறு சொல்லப்பட்டது :— "இதுகாறும் அதிகாரிகளின் மேற்பார்வையில் அளிக்கப்பட்டு வந்த கல்வி ஜனங்களின் உணர்ச்சிக்கும், மனப்போக்குக்கும் ஒத்ததாயில்லை. ஜனங்களின் பரம்பரை அறிவுச் செல்வத்துக்கும், சமயச் செல்வத்துக்கும் அது மதிப்பளிக்கவில்லை. ஜனங்களின் உடல் நிலைமைக்குக்கூட அது பொருத்த முள்ளதாயில்லை. புதிய இயக்கத்தின் நோக்கம் முற்றும் தேசீய முறைகளில், தேசீய மேற்பார்வையில் விஞ்ஞான, இலக்கியக் கல்வியும், தொழிற் பயிற்சியும் அளிப்பதாகும்."

தேசீயக் கல்விச் சங்கத்தார் மேற்கூறியவாறு இலக்கிய, விஞ்ஞானக் கல்விக்கும், தொழிற் பயிற்சிக்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்ததுடன் கூட, கல்வி முறையில் ஆங்கில பாஷை வகித்துவந்த முதன்மை ஸ்தானத்திலிருந்து அதை நீக்கி இரண்டாந்தர பாஷையாக்கினார்கள். முதன்மை ஸ்தானம் வங்காளி பாஷைக்கும், ஸம்ஸ்கிருதத்துக்கும், முஸ்லிம்களின் விஷயத்தில் உருது, பாரசீகம், அரபு மொழிகளுக்கும் அளிக்கப்பட்டது.

வங்காள தேசீயக் கல்வி இயக்கம் எவ்விதத்திலும் அரசாங்க விரோத இயக்கமன்று. "அரசியல் முயற்சி எதிலும் கலந்துகொள்வோரையும் வெறுமே பொதுக்கூட்டங்களுக்குப் போவோரையும்கூடப் பள்ளிக்கூடங்களிலிருந்தும், கலாசாலைகளிலிருந்தும் தள்ளிவிடப்படும் என்று அரசாங்கத்தார் அச்சுறுத்தியதின் காரணமாகவே வங்காள தேசீயக் கல்வி இயக்கம் எழுந்தது, எனினும், அவ்வியக்கத் தலைவர்கள் அதிகாரிகளுடன் எவ்வித சச்சரவுக்கும் காரணங்கள் ஏற்படாதிருக்கும்படி பார்த்துக்கொள்ள முயன்றார்கள். அரசாங்கத்தினின்றும் தனித்துச் சுதந்திரமாக வேலைசெய்ய அவர்கள் எண்ணினார்களேயன்றி அரசாங்கத்துக்கு எதிராக நின்று வேலைசெய்யும் நோக்கமே அவர்களுக்கில்லை. இயக்கம் தோன்றியதற்கு ஆதி காரணம் அரசியலே யென்றாலும், அதிகாரிகளுடன் போராட்

டம் எதுவும் ஏற்படாவண்ணம் இயக்கத்தை அரசியல் சம்பந்த மில்லாமல் நடத்த அவர்கள் முயன்றார்கள்.

## அரவிந்த கோஷ்

இவ் வியக்கத்தின் பயனாகவே அதுவரையில் பெயர் வெளியில் தெரியாமலிருந்த ஹிந்து இளைஞர் ஒருவர் தேசீய இயக்கத்தின் முன்னணிக்கு வந்தார். இவர் படாடோப மில்லாத, அமைதியான மனிதர். தேசீய வாழ்க்கைக்கு முறை முறையாக மகத்தான ஜீவ சக்தி ஊட்ட மளிப்பதற்குத் தக்க சமயம் எதிர்பார்த்துக்கொண்டு அவர் இதுகாறும் பொறுமை யுடன் காத்திருந்தார். அத்தகைய ஜீவ சக்தியை அவர் மேலும் மேலும் தம்மிடம் சேகரித்துக்கொண்டு வந்தார். அவ் விளைஞர் பெயர் அரவிந்த கோஷ். அரவிந்தர் இங்கிலாந்தில் முதல் தரக் கல்வி பயின்றவர். அங்கே சர்வ கலாசாலையில் சேர் வதற்கு முன்னால் அவர் படித்த பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயர், தாம் அப் பள்ளிக்கூடத்தின் தலைவரா யிருந்த 25, 30 ஆண்டு காலத்தில் தம் கீழ் பயின்ற மாணாக்கர்களுக் குள்ளே அரவிந்த கோஷைப் போல் அறிவாற்றல் வாய்ந்தவர் வேறெவரு மில்லை என்று கூறியதாகத் தெரிய வருகிறது.

கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் அவர் ஐரோப்பிய இலக் கியங்களில் பயிற்சி பெற்று, முதல்தர கௌரவங்களுடன் பரீட் சையில் தேறினார். ஐ. சி. எஸ். பரீட்சையிலும் அவர் சிறப்பான வெற்றி யடைந்தார். ஆனால் குதிரை யேற்றச் சோதனையில் தவறி விட்டார். இத் தோல்வியே அவருக்கு மகத்தான தெய் வானுக்கிரஹம் ஆயிற்று.

பரோடா இராஜ்யத்தில் மாதம் 750 ரூபா சம்பளத்தில் அவர் உத்தியோகம் பார்த்து வந்த போது தேச மாதா தன் பணிக்கு அவரைக் கூவி யழைத்தாள். அவ்வழைப்புக்கு உடனே அவர் செவி கொடுத்தார். தமது உத்தியோகத்தை ராஜீனமா செய்து மாதம் 150 ரூபா சம்பளத்திற்கு வங்காள

தேசிய கலாசாலையின் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்ருர். தேசியக் கல்விச் சங்கத்தார் தங்கள் முயற்சி அரசியல் சம்பந்த மில்லாதது என்பதாக வெளியிட்ட அறிக்கையை அவர் அங்கீ கரிக்க வில்லை. அதிகாரிகளின் கோபத்தைக் குறித்து அவர் கள் காட்டிய அநாவசியமான பயம் அவருக்குப் பிடிக்கவே யில்லை. ஆயினும் பெரும்பான்மையோரின் முடிவை ஒப்புக் கொண்டு அதற் கிணங்க வேலை தொடங்கினர். "ஆனல் அவ ருடன் மாறுபட்ட அரசியல் கொள்கை யுடையவர்களால் நடத்தப்படும் கலாசாலைக்கு அவர் தலைவரா யிருக்கும் நிலைமை ஆரம்பத்தி லிருந்தே பொருத்த மற்றதாயிற்று." இது பெரிதும் துரதிர்ஷட வசமே யாகும். அரவிந்த கோஷின் தலைமுறை யைச் சேர்ந்த இந்தியர்களுக் குள்ளே அவரை விடச் சிறந்த நவீனக் கல்வி பெற்றவர் இல்லை. அவர் சிறிது காலம் பரோடா வில் உபாத்திமைத் தொழில் புரிந்து அநுபவ மடைந்தவர். தமது தேசத்தாரின் வாழ்க்கை நிலையை நன் குணர்ந்தவர். போதன முறை சம்பந்தமான புதுமைக் கொள்கைகளை யெல் லாம் எவ்வாறு தேசியக் கல்வி முறையில் இணைத்து வெற்றி பெறலா மென்பதை நன் கறிந்தவர். சிறந்த தேசியக் கல்வி என்னும் பலமான அடிப்படையின் மீதே தேச சுதந்திரம், சமு தாய மேன்மை என்னும் கட்டிடங்களை அமைக்க வேண்டு மென அவர் உணர்ந் திருந்தார். அவர் அரசியல் இலட்சியம் கொண்டவர் என்பதில் சந்தேக மில்லை. ஆனல் அரசியலுக்கு அவர் கொண்ட பொருள் சாதரணமாக எல்லாராலும் கொள்ளப்படும் பொரு ளன்று. அவர் அரசியலை, சமயோசிதம் போல் ஆடப்படும் ஒரு விளையாட்டாகக் கருதாமல், மக்களு டைய குணதிசயங்களை உருவாக்கும் ஒரு பள்ளிக்கூட மாகக் கருதினர், அரசியல் தேசிய வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர் புடைய தென்பது அவர் கொள்கை. "கல்வியைச் சமய நெறியி னின்றும், சன்மார்க்கத்தி னின்றும் பிரித்தல் எவ்வாறு இயலாத காரியமோ அவ்வாறே அரசியலி லிருந்து பிரிப்பதும் முடியாத காரிய மாகும். உயிர்த் தொடர்பு வாய்ந்த வாழ்க்கையின் பற் பல துறைகளையும் பிரித்துத் தனிமைப் படுத்தும் கல்வி முறை

யானது தேச முன்னேற்றத்துக் குரிய தன்று'' என்பது அவருடைய அபிப்பிராய மாகும்.

ஆனல் தேசியக் கல்விச் சங்கத்தின் பணம் படைத்த தலைவர்கள் அரவிந்தரின் கொள்கைகளை ஒப்புக் கொள்ள வில்லை. ''அதிகாரிகளின் எதிர்ப்புக்கு அவர்கள் பயந்தார்கள். அதிகாரிகள் எதிர்க்கத் தொடங்கினல் தங்கள் வேலை முற்றும் அசாத்திய மாகி விடும் என்று அவர்கள் எண்ணினர்கள். அதிகார வர்க்கத்தினிடம் அவர்கள் மெய்யாகவே அச்சங் கொண்டிருந்தார்கள்.'' அதிகார வர்க்கத்தின் கோபத்தை எதிர்த்து நிற்க அவர்கள் சித்தமாயில்லை. ஆனல் தங்கள் தேசியக் கல்வித் திட்டம் அரசியல் சம்பந்த மற்றது என்று கூறிவிடுவதினலேயே அதிகார வர்க்கத்தின் ஐயங்களுக்கும், எதிர்புக்கும் ஆளாகாமல் அத் திட்டத்தை நடத்தலாம் என்று அவர்கள் எண்ணிவிட்டார்கள். இது முற்றுந் தவறன எண்ண மென்று அநுபவத்தில் தெரியவந்திருக்கிறது.

ஒரு தேசத்தின் வருங்கால பிரஜைகள் வளர்க்கப் பெறுமிடம் பள்ளிக்கூடமே என்னும் உண்மையை இந்நாளில் உணர்ந்திருப்பது போல மக்கட் குலத்தின் சரித்திரத்தில் வேறெக் காலத்திலும் உணர்ந்திருக்கவில்லை. கர்ஸான் பிரபு இதை நன்கறிந்திருந்தார். ஆகையினலேயே பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் தேசீய உணர்ச்சி தலை யெடுக்காமல் செய்யவும், கூடுமானல் அதை அடியோடு நசுக்கிவிடவும் அவர் எண்ணங்கொண்டார். கல்வி ஸ்தாபனங்களை யெல்லாம் ஆங்கிலேயரின் மேற்பார்வையின் கீழ்க் கொணர அவர் விரும்பினர். சிம்ளாவில் நடந்த அந்தரங்கக் கல்வி மகாநாட்டுக்கு அவர் ஐரோப்பியப் பாதிரிகளை அழைத் திருந்தார். ஆனல் ஹிந்து முஸ்லிம்களில் ஒருவரை யேனும் அவர் அழைக்கவில்லை. இந்தியர்களிடம் அவருக்கு நம்பிக்கை கிடையாது. ஆகையினல்தான் அவர் மூடு மந்திரம் செய்ய வேண்டியதாயிருந்தது. தேசியக் கல்விச் சங்கத்தார் அவர் கருத்துக்கு மாருக வேலை செய்கிறார்களென்று கருதப்பட்டது. லார்டு கர்ஸான் தமது உத்தியோக

காலம் முடிந்து இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றாராயினும் அதிகார வர்க்கம் இங்கு இருந்தே வந்தது. அவருடைய விருப்பங்களையும் கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் தங்களுடையன வாகவே அவ்வர்க்கத்தார் கொண்டுவிட்டனர். எனவே, இந்தியர்கள் தேசீயக் கல்வி முறையை அமைக்கவும், தேசீயக் கல்வி ஸ்தாபனங்கள் நடத்தவும் அவர்கள் இடங்கொடுக்க முடியுமா? அவற்றை நடத்துவோர் யாராயிருந்தாலென்ன? அந்தக் கல்வி முறையும், கல்வி ஸ்தாபனங்களும் அரசாங்கத்துக்கு எவ்விதத்திலும் கடமைப்பட்டிராததோடு கூட அதிகாரிகளின் மேற் பார்வை சிறிது மின்றிப் பூரண சுதந்திரத்துடன் அல்லவா நடை பெறும்?

மேலும், தேசீய கலாசாலையும் அதைச் சார்ந்த தேசீய பள்ளிக்கூடங்களும் ஏற்பட்ட சந்தர்ப்பங்களினாலேயே அவற்றிற்கு அரசியல் சம்பந்தம் உண்டாகிவிட்டது. அச்சந்தர்ப்பங்கள் யாவை? மாணுக்கர்கள் பகிஷ்கார இயக்கத்தில் கலந்து கொள்வதை அரசாங்கமும் அதிகார வர்க்கமும் விரும்பவில்லை; வங்காளத் தலைவர்களோ மாணுக்கர்கள் அவ் வியக்கத்தில் ஈடுபட வேண்டு மென்று விரும்பினார்கள்; இக் காரணம் பற்றியே தேசீய கலாசாலையும், தேசீய பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டன. எனவே, இம்முயற்சி அதிகார வர்க்கத்தைப் பகிரங்கமாக அறை கூவிப் போருக் கழைப்பதே யாகு மன்றோ? அரவிந்த கோஷ் இந்தக் கலக எழுச்சியில் ஈடுபட்டவர். வாக்கு வன்மையும், எழுதுந் திறமையும் மிகுதியும் உடைய ஒரு கூட்டத்தார் அவருக்குத் துணை செய்தனர். இவர்கள் எல்லாரும் தனித் தனியே சிறந்து விளங்கியவர்கள்; உயரிய இலட்சியங்களும் தூய ஒழுக்கமும் படைத்தவர்கள். தேசீய கலாசாலை அரசியல் சம்பந்தமற்றதாயிருக்க வேண்டு மென்று பெரும்பான்மையோர் கூறிய தீர்ப்பை அவர்கள் ஒப்புக் கொண்டனர். ஆனால் அவர்கள் தங்கள் பேனாவையும், நாவன்மையையும் உபயோகப் படுத்துவதை யார் தடுக்க முடியும்? அத்தகைய முயற்சி ஏதேனும் செய்தால் வேலைத்திட்டமே

அடியோடு குலைந்து விடும். அவர்கள் பத்திரிகைகள் தொடங்கி, அரசியலிலும், பொருளாதார, கல்வித் துறைகளிலும் சுதந்திர இலட்சியத்தை மிகத் தெளிவுடன் பகிரங்கமாகப் பிரசாரம் செய்ய லானார்கள். அவர்கள் அனைவரும் கல்வியறிவிற் சிறந்தவர்கள்; சரித்திரம் நன்கு படித்தவர்கள். தங்கள் பிரசாரத்தின் விளைவுகள் என்ன ஆகும் என்பதை அவர்கள் நன் குணர்ந்து அவற்றை ஏற்கச் சித்தமாயிருந்தார்கள். தங்களுடைய இலட்சியத்தின் பொருட்டுத் துன்பமநுபவிக்க அவர்கள் தயாராயிருந்தார்கள்; ஆனால் பலாத்காரத்துக்கு அவர்கள் இன்னும் ஆயத்த மாகவில்லை.

## தேசீயப் பத்திரிகைகள்

வங்காளியிலும், ஆங்கில பாஷையிலும் பல பத்திரிகைகள் தொடங்கி அவர்கள் தங்கள் கருத்துக்களை ஜனங்களிடையே பரப்பினார்கள். இப் புதிய பத்திரிகைகளில் இரண்டு "ஸந்தியா", "வந்தேமாதரம்" என்பவை யாகும். இப்பத்திரிகைகளே அவர்களுடைய முக்கிய பள்ளிக்கூடங்களாயின. சில மாத காலத்தில் வங்காளம் பெரிய தொரு மாறுத லடைந்தது. பத்திரிகைகளும், பிரசங்கிகளும், சமய போதகர்களும், நூலாசிரியர்களும், கவிகளும், நாடகாசிரியர்களும், சங்கீத வித்வான்களும்—எல்லாரும் புதிய தேசீய ஊக்கங் கொண்டவர்களானார்கள். "வந்தேமாதரம்" என்னும் கோஷம் எங்கெங்கும் கிளம்பிற்று. பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும், வீதிகளிலும், வீடுகளிலும், பொதுச் சதுக்கங்களிலும், எங்கும் அந்த கீதம் பாடப்பட்டது. அரசாங்கக் காரியாலயங்களிலும், ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் வாசஸ் தலங்களைச் சுற்றிலுங்கூட அம் முழக்கம் எழுந்தது.

## சபைகள் - சங்கங்கள் - சிலம்பக் கூடங்கள்

இவை நாடெங்கும் நூற்றுக் கணக்கில் தோன்றின. இவ்விடங்களில் வங்க இளைஞர்கள் சிலம்ப விளையாட்டும் பிற உடற்

பயிற்சி முறைகளும் பழகிக் கொண்டார்கள். வங்காளிகளைக் கோழைகள் என்று மெக்காலே என்பார் இழித்துக் கூறியது பிரசித்தி பெற்ற தாகும். இந்த அவதூறை ஆங்கிலோ இந்தியர்கள் அடிக்கடி எடுத்துரைப்பது வழக்கமாயிருந்தது. இவர்களுக்கு வங்க இளைஞர்கள் மேற்கண்டவாறு விடை யளித்தார்கள்.

கீழ் வங்காளத்தின் சில ஜில்லாக்களில் பகிஷ்கார இயக்கமானது இது வரையில் எங்நாளும் கண்டும் கேட்டுமிராத நிலைமையை உண்டு பண்ணிற்று. பாரிஸாலில் போலீஸ் சூபரிண்டெண்டும், ஜில்லா கலெக்டரும் எவ்வளவோ முயன்றும் தங்கள் நண்பர் ஒருவருக்கு மான்செஸ்டர் சட்டைத் துணி கொஞ்சம் வாங்கிக்கொடுக்க முடியவில்லை. பகிஷ்கார இயக்கத் தலைவரான ஸ்ரீ அசுவினி குமார தத்தரின் உத்திரவின்றி மான்செஸ்டர் துணி விற்க வியாபாரிகள் அனைவரும் கண்டிப்பாக மறுத்துவிட்டார்கள். இத்தலைவர் தமது ஒழுக்கத்தினலும், ஊழியத்தினலும் செல்வாக்குப் பெற்றவராவர். அவர் தமது ஜில்லாவின் முடிசூடா மன்னராய் விளங்கினர் என்று சொல்லலாம். இது அதிகார வர்க்கத்துக்குப் பெரும் அவமானமல்லவா? அன்னிய அதிகாரவர்க்கம் எதுதான் இத்தகைய நிலைமையைச் சகித்துக் கொண்டிருக்கமுடியும்? கீழ் வங்காளத்தின் முதலாவது லெப்டினண்ட் கவர்னர் ஸர் வில்லியம் பாம்பில்டு புல்லர் (Sir William Bamfylde Fuller) தேசீய இயக்கத்தின் வலிமையையும், வங்க நாட்டாரிடம் தோன்றிய புதிய குணதிசயத்தையும் கண்டு திகைத்துப் போனர். ஜனங்கள் அவருக்கு வழக்கமான மரியாதைகளைச் செய்ய மறுத்துவிட்டார்கள். லெப்டினண்ட் கவர்னர் தங்கள் பட்டணத்துக்கு வந்திருந்த போதுங் கூட அவர்கள் வங்காளப் பிரிவினைக் கெதிரான கிளர்ச்சியில் கலந்துகொண்டார்கள். அக்கிளர்ச்சியின் பிரசாரகர்களை வரவேற்று உபசரித்தார்கள். ஓரிடத்தில் ரயில்வே கூலிகள் கூட லெப்டினண்ட் கவர்னருடைய சமான்களை எடுக்க மறுத்து விட்டார்களென்றும், அச்சாமான்களைப் போலீஸ்காரர் தூக்கிச்

செல்லவேண்டிய தாயிற் றென்றும் சொல்லப்படுகின்றன. இத்தகைய நிலைமை அவரால் பொறுக்கமுடியாமற் போயிற்று.

## இராணுவ அமுல்

கிர்ஸானுடன் கலந்தாலோசித்த பின்னர், அவர் பலாத்காரப் பிரயோகம் செய்யத் தீர்மானித்தார். முதலில் கூர்க்க சிப்பாய்கள் நூறுபேர் பாரிஸாலுக்கு அனுப்பப் பட்டனர். அடுத்தார்போல், பிரிட்டிஷ் சாமான்களை அமைதியான முறையில் பகிஷ்காரம் செய்தல் சட்ட வரம்புக் குட்பட்ட தென்பதாக அவ்வூர்த் தலைவர்கள் விடுத்திருந்த சுற்றுக் கடிதத்தை வாபீஸ் பெறவேண்டுமென்று கட்டளை வந்தது. இதை மறுத்தால் பலாத்காரப் போராட்டம் விளையுமென்பது வெள்ளிடைமலை. தலைவர்கள் அவ்வளவு தூரம் போக விரும்பாமையால் சுற்றறிக்கையை வாபீஸ் பெற்றுக்கொண்டனர். கவர்னர் சமாதான மடைந்தார். கூர்க்கர்கள் ஜனங்களுக்குப் பல கொடுமைகள் இழைத்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தலைவர்கள் ஜனங்களைக் கட்டுக்குள் வைத்திருந்தார்கள். பலாத்காரப் பிரயோகத்தினால் இயக்கத்தை நசுக்கி விடுவதற்கு அரசாங்கத்துக்குச் சந்தர்ப்பமளிக்க அவர்கள் விரும்பவில்லை.

1906-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் பாரிஸாலில் நடந்த மாகாண மகாநாட்டுக்கு இரண்டு வங்காள மாகாணங்களையும் சேர்ந்த பிரபல தலைவர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். இம் மகாநாடு மாஜிஸ்ட்ரேட்டின் உத்திரவின்பேரில் 'ஏறக்குறைய துப்பாக்கிச் சனியன் முனையில் கலைக்கப் பட்டது.' இரண்டு மாகாணங்களையும் சேர்ந்த பற்பல ஜில்லாக்களிலிருந்தும் வந்த 800, 900 பிரதிநிதிகள் அடங்கிய ஊர்வலம் ஒன்று நடந்தது. அநேகமாக வங்காளத்தின் பிரபல தலைவர் எல்லாரும் பிரசன்னமாயிருந்த அவ்வூர்வலம் போலீஸாரால் கலைக்கப்பட்டது. போலீஸ் ஜில்லா சூபரிண்டெண்டின் கண் முன்னிலையில் போலீஸார் தங்கள் தடிகளைத் தாராளமாகப் பிரயோகித்துச் சிலருடைய மண்டைகளையும் உடைத்தனர். ஆயினும் ஜனங்கள் பதிலுக்குப் பதில் செய்யவில்லை. பலாத்காரத்தை எதிர்க்கும்

பொருட்டாகவும் பாலாத்காரத்தைக் கையாளுவ தில்லை யென்று இன்னமும் அவர்கள் உறுதியா யிருந்தார்கள். அரசாங் கத்தின் சார்பில் எவ்வளவுக்குப் பலாத்காரம் கைக்கொள்ளப் பட்டதோ அவ்வளவுக்கு தேசீய இயக்கம் செல்வாக்கும் வலி மையும் அடைந்தது. விரைவில் பாமர ஜனங்கள் — ஸ்திரீகளும் குழந்தைகளும் உள்பட — தேசீய ஊக்கம் மிகுந்தவர்களா னார்கள்.

இவ்வாறு வங்காளத்தில் நவஜீவன் பிறந்தது. சமயம், சமூகம், பொருளாதாரம், கல்வி, அரசியல் என்னும் வாழ்க்கை யின் எல்லாத் துறைகளிலும் அது பிரதிபலித்தது. வங்காளத் தின் நிகழ்ச்சிகளுக்கு நாட்டின் மற்றப்பகுதிகளிலும் எதிரொலி கிளம்பிற்று. இதுவரைக்கும் தேசீயக்கட்சி ஒற்றுமையுடன் இருந்தது. அக் கட்சியில் முதியவர்கள் வேறு நிலைமைகளின் கீழ் பிறந்து வளர்ந்து வாழ்ந்தவர்களாதலால், இளங் கட்சி யாரின் நடவடிக்கைகளை முழுதும் ஒப்புக்கொள்ளவில்லை. இளைஞர்கள் நிதானந் தவறிப் பேசுங்காலத்தில் அவர்கள் கண் டித்தார்கள். பிற மாகாணங்களிலுள்ள சிலர், வங்காளிகளின் பகிஷ்காரத் திட்டத்தை முற்றும் அங்கீகரிக்கவில்லை. மற்றப் படி தேசம் ஒற்றுமைப் பட்டிருந்தது. தேசத்தின் சிறந்த அறிஞர்கள் தேசீய இயக்கத்தின் போக்கை குறித்துத் திருப்தி யடைந்திருந்தார்கள் என்றே சொல்லலாம்.

## மிண்டோ பிரபு

ஆனால், 1905-ம் ஆண்டில், லார்டு மிண்டோ வந்ததி லிருந்து நிலைமை மாறுதலடைய லாயிற்று. தேசீயக் கட்சிக் குள் ஏற்பட்ட முதலாவது பெரிய வேற்றுமை, 1906-ம் வரு ஷத்துக் கல்கத்தா காங்கிரஸின் அக்கிராசன பதவி சம்பந்த மாக எழுந்தது. ஆனால் புதிய மிதவாதக் கட்சித் தலைவர்கள் தங்கள் சாமர்த்தியத்தினால் அவ்விஷயமாகப் பிளவு உண்டா காமல் செய்தார்கள். அவர்கள் மேற்படி பதவியை ஏற்றுக்

கொள்வதற்கு, இந்தியரில் எல்லா வகுப்பாரின் நன் மதிப்புக் கும் அன்புக்கும் உரியவரான ஸ்ரீ தாதா பாய் நௌரோஜியின் சம்மதத்தைப் பெற்றுர்கள். 1906-ம் வருஷத்துக் காங்கிரஸில் கொஞ்சம் கூச்சல் அதிகமாகவே யிருந்தது. ஆனல் முடிவில் சமரச பாவம் வெற்றிபெற்றது. தீவிர வாதிகளின் அடிப் படையான கொள்கைகள் ஒப்புக்கொள்ளப்பட்ட அளவில் அக் கட்சி ஜெயமடைந்த தென்னலாம்.

ஆனல் மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்கும் விரை வில் பிளவு நேர்ந்தே தீருமென்பது தெளிவாகப் புலனுயிற்று. கர்ஸானுக்குப் பதிலாக மிண்டோ இராஜப் பிரதிநிதியாக வந் தார். எனவே, அரசாங்கத்தின் கொள்கையிலும் தெளிவான மாறுதல் காணப்பட்டது. லார்டு கர்ஸான் தனித்த அடக்கு முறையை மட்டும் கைக்கொண்டார்; மிண்டோ பிரபு அடக்கு முறையுடன் கூடிய சமரச ஆட்சி தொடங்கினர். அரசாங் கத்தார் தைரியத்துடன் வங்காளப் பிரிவினையை ரத்து செய்தி ருந்தால், அல்லது பின்னல் 1912-ல் செய்ததுபோல் பிரிவி னையை ஒருவாறு மாற்றி அமைத்திருந்தால் ஒருகால் தேசீய இயக்கமே மறைந்திருக்கலாம். ஆனல் அவ்வாறு நேரவில்லை. அரசாங்கத்தார் வேறு நன்மைகள் செய்யச் சித்தமா யிருந்த போதிலும், வங்காளப் பிரிவினை விஷயத்தில் மட்டும் பிடிவாத மாயிருந்தனர்.

## பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டு

1905 முதல் 1907 வரையில் மூன்று வருஷங்களும் சாத் வீக எதிர்ப்பு கைக்கொள்ளப்பட்ட வருஷங்களாகும். தேசீய வாதிகள் கடுமொழிகளைப் பிரயோகித்தார்கள்; பத்திரிகைகள் மூலமாகவும், பிரசங்க மேடை மூலமாகவும் பிரிட்டிஷாருக்கு விரோதமாய்ப் பலமான பிரசாரம் நடத்தினர்கள்; தங்கள் நாவையும் பேனவையும் சிறிது தாராளமாகவே உபயோகப் படுத்தினர்கள்; ஆனல் பலாத்காரத்தைக் கைக்கொள்ளுவ தைப் பற்றி மட்டும் அவர்கள் சிந்திக்கவில்லை. பத்திரிகாசிரி யர்களும் பிரசுர கர்த்தர்களும் ஒருவர் பின் ஒருவராய்ச் சிறைக்

கனுப்பப் பட்ட போதிலும் இயக்கத்தின் வேகம் சிறிதும் குறையவில்லை. 1906, 1907-ம் ஆண்டுகளில் அரசாங்கத்துக்கும் தேசீயக் கட்சியினருக்கும் பலமான போராட்டம் நடந்தது. வங்காளம், பம்பாய், பஞ்சாப், ஐக்ய மாகாணம், சென்னை, மத்திய மகாணம் ஆகிய எல்லா இடங்களிலும் பத்திரிகைக் காரர்கள்மீது ஏராளமான வழக்குகள் தொடரப்பட்டன. பலர் நீண்டகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர். பொருளாதாரத் துறையிலும், அரசியல், சமூகத் துறைகளிலும் பூரண பகிஷ்காரம் பகிரங்கமாகப் பிரசாரம் செய்யப் பட்டு வந்தது; மறியல் வேலையும மீண்டும் கைக் கொள்ளப்பட்டது. நியாய விசாரணைகள் சில சமயம் வெறுங்கேலிக் கூத்துகளாக இருந்தன. நீதிபதிகள் அரசியல் காரணங்களை முன்னிட்டு எதிரிகளைத் தண்டிப்பதென்று முன்னதாகவே தீர்மானித்துக் கொண்டவர்களா யிருந்தார்கள். எனினும் ஜனங்கள் சட்டத்தினிடம் மிக்க மதிப்புக் கொண்டவர்களாதலின், பகிரங்க விசாரணை முறை கையாளப்பட்டு வந்த வரையில், பழி வாங்கும் பொருட்டுப் பலாத்காரத்தைக் கைக் கொள்ள எண்ணவேயில்லை. விசாரணையின் போதும் அதற்குப் பிறகும் சிறைச்சாலைகளில் கொடுமையாக நடத்தப் பட்டதுங்கூட அவர்களைப் பலாத்காரத்துக்குத் தூண்டவில்லை. அரசியல் கைதிகள் போற்றிப் புகழப்பட்டார்கள்; வேறு வழிகளில் அவர்களுக்கு ஆதரவும் உதவியும் அளிக்கப்பட்டன; ஆனால் பழி வாங்கும் எண்ணம் மட்டும் எவர் உள்ளத்திலும் உதயமாகவில்லை.

## *லஜபதி ராயின் தேசப் பிரஷ்டம்

ஆனால் 1907-ம் வருஷம் மே மாதத்தில் லஜபதி ராய் திடீரென்று நாடு கடத்தப்பட்ட போது, ஜனங்களின் எண்ணமும் செயல் முறையும் அடியோடு மாறிவிட்டன. இரகசிய

*இந்தப் பகுதியில் நூலாசிரியர் தம்மை மூன்றும் மனிதராகப் பாவித்து எழுதியுள்ளார். ரா. கி.

பிரசாரத்தினுலும், பலாத்காரத்துப் பதில் பலாத்காரத்தை பிர, யோகிப்பதனுலும் சாத்வீக எதிர்ப்பு இயக்கத்துக்கு பலந்தரு தல் அவசியமென்று தேசீய வாதிகள் முடிவு செய்தார்கள். இந்திய சட்டசபையில் கனம் கோகலே பேசுங்கால் கூறிய வண்ணம், சமய, சமூகத் துரைகளிலும், கல்வித்துரையிலும் லஜபதி ராய் சீர்திருத்தக்காரர்; அவர் நாடெங்குமுள்ள தமது சகோதர தேசமக்களில் ஏராளமானவர்களின் அன்புக்கும் நன் மதிப்புக்கும் உரியவராயிருந்தார். அவரை தீவிர தேசீய வாதிகள் தங்களைச் சேர்ந்தவரென்று உரிமை கொண்டாடினர்கள்; நிதான தேசிய வாதிகளும் அவரிடம் மதிப்பு வைத்திருந்தார் கள். "அவர்களுடைய பரோபகாரச் செயல்களுக்காகவும் கல்வி சம்பந்தமான முயற்சிகளுக்காகவும்" ஜனங்கள் அவரை நேசித்தார்கள். இத்தகைய மனிதரை முன்னறிவிப் பின்றி, குற்றஞ்சாட்டுதலின்றி, விசாரணையின்றித் திடீரென்று பிடித்து நாடு கடத்தியது இளந் தேசீயவாதிகளை வெறிகொள்ளச் செய்தது.† தேசியவாதிகளில் நிதானமும், யோசனையும் உள்ளவர் கள்கூட எல்லா நம்பிக்கையும் இழந்தவர்களாயினர்.

ஆனல் தேசமுழுவதிலும் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை கள் ஆனந்தக் கூத்தாடின. லஜபதி ராயின் தலைமை ஸ்தா னமாகிய லாகூரில் வெளியாகும் அரை உத்தியோக முறைப் பத்திரிகை, அவரைப் பெரியதொரு புரட்சி இயக்கத் தின் தலைவரென்று கூறிற்று. அவ்வியக்கத்தின் ஒவ்வொரு சிறு விவரமும் அவர்மூலமாகவே நடைபெறுகிறதென்றும், அவர் கைக்கீழ் "ஒரு லட்சம் குண்டர்கள்" இருப்பதாகவும் அது அறிவித்தது. கல்கத்தா "இங்கிலீஷ்மன்" பத்திரிகை, அவர் இந்திய சைன்யத்தின் இராஜ விசுவாசத்தைக் கெடுக்க முயன்றதாகவும், இந்தியாவின் மீது படையெடுத்து வரும்படி

†*மிஸ்டர் நெவின்ஸன் எழுதிய "இந்தியாவின் புத்துயிர்"* (New Spirit of India). *பக்கம் 133, 233, 295 பார்க்க. மிஸ்டர் ராம்ஸே மக் டனல்டின் "இந்தியாவின் கண் விழிப்பு"* (Awakening of India) *என்னும் நூலும் பார்க்க.*

ஆப்கானிய அரசரைத் தூண்டியதாகவும் குற்றஞ் சாட்டிற்று. குதிரை கீழே தள்ளியதுமன்றிக் குழியும் பறித்தது போல், நாடு கடத்தித் துன்புறுத்தியது போதாதென்று இவ்வாறு அவதூறும் கூறவே தேசமெங்கும் ஆத்திரம் பொங்கி எழுந்தது. அதிகார வர்க்கத்தின் இச்செயலை ஜனங்கள் அனைவரும் ஒரு முகமாகக் கண்டித்தார்கள். கருத்து வேற்றுமைகள் எல்லாம் மறந்துவிடப்பட்டன. தேசமுழுவதிலும் கண்டனக் குரல்கள் ஒன்றுபோல் எழுந்தன. ஆனால் தீவிர தேசீயவாதிகள் வெறுங் கண்டனத்துடன் நில்லாமல் அடுத்த படி ஏறத் தீர்மானித்தார்கள். நிலைபெற்ற கொடுங்கோலாட்சி முறையை எதிர்க்கப் பலாத்காரத்தைக் கைக்கொள்வதென்று அவர்கள் முடிவு செய்து, வெடி குண்டு, சுழல் துப்பாக்கி, மறைந்து புரியும் யுத்தம் ஆகியவைகளைப் பற்றிச் சிந்திக்கலானார்கள். முதிய தலைவர்கள் அவர்களிடம் அநுதாபங் கொண்டிருப்பினும், பலாத்கார இயக்கம் எதிலும் கலந்துகொள்ளவோ அதற்குத் தங்கள் அநுமதி யளிக்கவோ மறுத்துவிட்டனர்.

வங்காளத்தில் 1906-ம் ஆண்டிலேயே இரகசிய ஸ்தாபனம் ஏதேனும் இருந்திருத்தல் சாத்தியமேயாகும். ஆனால் 1907-ம் ஆண்டு மே மாதத்துக்கு (அதாவது லஜபதி ராய் நாடு கடத்தப்பட்டதற்கு) முன்னால் அவர்களுடைய வேலைத் திட்டத்தில் பலாத்காரம் இடம் பெறவில்லை யென்பது நிச்சயம். அவர்கள் பலாத்காரத்தைக் கைக்கொள்வதென்று முடிவு செய்யக் காரணமாயிருந்தது இச்சம்பவமே யாகும். எனினும் அவ்வாண்டு டிசம்பர் மாதத்துக்கு முன்பு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படவில்லை. அடுத்த 1908-ம் வருஷம் ஏப்ரல் அல்லது மே மாதத்திலேதான் முதன் முதலாக வெடிகுண்டு எறியப்பட்டது. 1907 டிசம்பரில் நிகழ்ந்த சூரத் பிளவு தேசீயவாதிகளை மீண்டும் ஒன்றுகூடுவதற்கில்லாதபடி இரு பிரிவாகப் பிரித்துவிட்டது. இளந் தேசீயவாதிகளைப் பலாத்கார் திட்டத்தில் உறுதி கொள்ளச் செய்ததும் அச் சம்பவமே யாகும். தீவிரக்கட்சியார் அப்பிளவில் அரசாங்கத்தின் சூழ்ச்சியைக கண்டார்கள். சில மாதங்களுக்குள் அக் கட்சியின்

தலைவர்கள் அநேகமாக எல்லாரும் பிடிக்கப்பட்டுச் சிறையி லிடப் பட்டார்கள். சூரத்தில் லஜபதி ராய் மிதவாதிகளுடன் சேர்ந்துகொண்டபடியால் சிறிது காலத்துக்குச் சும்மா விடப் பட்டார். ஆனால் மகாராஷ்டிரத் தலைவரான பால கங்காதர திலகர் மீது வழக்குத் தொடரப்பட்டு ஆறு வருஷம் இந்தியா வுக்கு வெளியே சிறைவாச தண்டனை விதிக்கப்பட்டது. அர விந்த கோஷையும் கைதி செய்தார்கள். அரசருக்கு விரோத மாய்ப் போர் நடத்தச் சதியாலோசனை செய்ததாக அவர்மீது வழக்கு நடந்தது. ஆனால் போதிய சாட்சியமின்மையால் அவர் விடுதலை செய்யப்பட்டார். பாபு விபின சந்திர பாலர் ஆறு மாதமும், சென்னைத் தலைவரான சிதம்பரம் பிள்ளை ஆறு வருஷமும், ஐக்ய மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் தலைவர் ஹஸரத் மோகினி ஒரு வருஷமும் சிறைத் தண்டனை யடைந் தனர். 1908-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் வங்காளத் தலை வர்களில் ஒன்பதுபேர் அவர்களுடைய வீடுகளில் பிடிக்கப் பட்டு, எவ்விதக் குற்றமும் சாட்டப்படாமல், எவ்வித விசா ரணையுமின்றி, நிர்வாக உத்திரவின்மீது சிறைப் படுத்தப் பட்ட னர்.

இந்த வழக்குகளும், தண்டனைகளும் இளந்தேசீய வாதி களுக்குப் பெரிதும் ஆத்திர முண்டு பண்ணின. துவேஷம் உள்ளே அமுங்குவதற்கும் அவை காரணமாயிருந்தன. தலைவர் களை யிழந்ததினால் சிறிதும் மனச் சோர்வுறாமல் அவர்கள் தங்கள் பிரசாரத்தைச் செய்து வந்ததுடன் பெரியஉத்தியோகஸ் தர்களைக் கொல்வதற்குச் சில முயற்சிகளும் செய்தார்கள். வங்காளத்தின் லெப்டினண்ட் கவர்னரைக் கொல்ல மூன்று மூறை முயற்சிசெய்யப்பட்டது. இவற்றில் ஒரு முயற்சி, பட் டப் பகலில், ஏதோ ஓர் இராஜங்க வைபவத்தில் அவர் தலைமை வகித்த போது நடந்தது. ஆமதாபாத்தில் இராஜப் பிரதிநிதி லார்டு மிண்டோவைக் கொல்லவும் பிரயத்தனம் செய்யப்பட் டது அப்போது இந்தியா மந்திரியாயிருந்த லார்டு மார்லியின் அந்தரங்கக் காரியதரிசி லண்டனில் சுட்டுக் கொல்லப் பட்டார்.

நாஸிக்கில் ஒரு கலெக்டர் கொலை யுண்டார். இன்னும் பல கொடுஞ் செயல்களும் நடந்தன. தடுக்கப்பட்ட பிரசுரங்கள் அச்சிடப்பட்டு இரகசியமாகப் பரப்பப்பட்டன; ஆயுதங்கள் திருடப்பட்டன; அவை திருட்டுத் தனமாக வெளியிலிருந்து கொணரப்பட்டன. ரயில் பாதைகளைத் தகர்க்கவும், மற்ற வகைகளில் அரசாங்கத்துக்குப் பயங்கர முண்டு பண்ணவும் முயற்சிகள் செய்தார்கள். 1908, 1909-ம் ஆண்டு முழுவதிலும் இயக்கம் அதி வேகத்துடன் நடந்து வந்தது. 1910-ம் ஆண்டில் கொஞ்சம் வேகம் குறைந்தது. ஆயினும் அவ்வப்போது புரட்சிக்காரர்களின் நடவடிக்கைகள் வெளியாகாமலில்லை.

புரட்சிக்காரர்களின் நோக்கத்தினின்று பார்த்தால் 1911-ம் வருஷம் மிகவும் மந்தமான வருஷமாகும். அவ்வாண்டில் அரசர் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அவர் வங்காளப் பிரிவினையை ரத்து செய்து தலை நகரை டில்லிக்கு மாற்றினார். சிறிது காலத்திற்குத் தேசமெங்கும் மகிழ்ச்சிக் கொண்டாட்டமாயிருந்தது. பிரிவினை ரத்து செய்யப்பட்ட தென்பதைவிட, தேசியக் கிளர்ச்சிக்கு அது பெரும் வெற்றி என்பதே இம்மகிழ்ச்சிக்குக் காரணமாகும்.

## ஹார்டிஞ்சு மீது வெடி குண்டு

மீண்டும், 1912-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில், புரட்சிக் கட்சி அழிந்துவிட வில்லை யென்பதற்கும், அதன் பலத்துக்கும் தெளிவான சாட்சியம் ஏற்பட்டது. மொகலாய சாம்ராஜ்யத்தின் தலைநகராயிருந்து இப்போது பிரிட்டிஷ் இந்தியாவின் புதிய தலை நகரான டில்லியில், இராஜப் பிரதிநிதி லார்டு ஹார்டிஞ்சு முதன் முதலாக இராஜங்க வைபவங்களுடன் பிரவேசித்து, ஆயிரக்கணக்கான துருப்புகள், லட்சக்கணக்கான ஜனங்கள் இவர்களின் மத்தியில் ஊர்வலம்போய்க்கொண்டிருந்த போது அவர் மீது வெடிகுண்டு எறியப்பட்டது. லார்டு ஹார்டிஞ்சு காயமடைந்தார்; அவரைச் சூழ்ந்திருந்தவர்களில் சிலர்

உயிர் துறந்தார்கள்; ஊர்வலம் கலைந்தது. குற்றவாளி தப்பித்துக் கொண்டான்; ஒரு லட்சம் ரூபாய் பரிசளிப்பதாகச் சொல்லியும், போலீசார் பகிரதப் பிரயத்தனங்கள் செய்தும், நாளிது வரையில் அவன் கண்டுபிடிக்கப்படவில்லை. புரட்சிக்காரர்கள் செய்த காரியங்களுள் இதுவே தலை சிறந்ததென்று அவர்களால் கருதப்படுகிறது. 1913, 1914-ம் ஆண்டுகளில் புரட்சிக்காரர் சுரு சுருப்புடனேயே இருந்து வந்தார்கள். யுத்தம் ஆரம்பித்த பின்னர், இந்தியாவிலிருந்து* அபூர்வமாகக் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு இப்போதும் அவர்கள் நிரம்பச் சுரு சுருப்புடனேயே இருக்கிறார்களென்று ஊகிக்கப் போதிய காரணமிருக்கின்றது.

சென்ற ஏழெட்டு வருஷங்களில் அரசாங்கத்தார் எல்லா வகை அடக்கு முறைகளையும் கையாண்டு பார்த்து விட்டார்கள். ஓரளவு சமாதானப் படுத்தும் முறையையும் கடைப்பிடித்திருக்கிறார்கள். ஆனால் பலாத்காரத்தில் நம்பிக்கை யுள்ளவர்களும், மறைந்து புரியும் போர் முறைகள் எல்லாவற்றையும் கைக் கொண்டிருப்பவர்களுமான தேசீயக் கட்சியின் அத்தீவிரப் பகுதியாரை அவர்களால் இதுகாறும் நசுக்கிவிட முடியவில்லை.

தற்போது தேசமுள்ள நிலைமையில், தேசீய இயக்கத்தை ஒடுக்கவோ, அதைச் சேர்ந்தவர்களை ஒடுக்கவோ அரசாங்கம் கைக்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் கலக உணர்ச்சியை வலுப் படுத்துகிறது; பழிவாங்கும் அவாவை மிகுதிப்படுத்துகிறது; இயக்கத்துக்காகத் துன்பம் சகிக்கவும், உயிரையும் தியாகம் செய்யவும் சித்தமா யிருப்போரின் தொகையை அதிக மாக்குகின்றது. படித்த வகுப்பாரிடமிருந்து இயக்கம் இப்போது பாமர ஜனங்களிடையேயும் பரவியிருக்கிறது; போர்த்திறமை யில்லாத ஜனங்களிடமிருந்து அது இப்போது அவ்வாற்றல் உள்ள இராணுவ வகுப்பாரிடையே ஆதரவு

---

*இந்நூல் அமெரிக்காவில் 1916-ம் ஆண்டில் எழுதப்பட்டதென்பதை வாசகர்கள் நினைவில் வைக்க வேண்டும். ரா. கி.

பெற்று வருகிறது. 1907-ம் ஆண்டில், சைன்யத்தின் இராஜ விசுவாசத்தைக் கெடுக்க முயன்றதாக லஜபதி ராய் மீது குற்றஞ் சுமத்தியது எள்ளி நகையாடற் குரிய தாகும். நில உரிமை சம்பந்தமாய் பஞ்சாப் அரசாங்கத்தார் இயற்ற உத்தே சித்திருந்த சட்டங் காரணமாக ஒருகால் பஞ்சாப் போர் வீரர் களிடையே ஓரளவு அதிருப்தி ஏற்பட்டிருக்கலாம். ஏனெனில் அவ்வீரர்கள் பெரும்பாலும் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களோ அவ் வகுப்பை மேற்படி சட்டம் பெரிதும் பாதிப்பதாயிருந்தது. அச் சட்டம் தள்ளிவிடப்பட்ட போது அதிருப்திக் குரிய காரணமும் நீங்கிவிட்டது.

★

ஐந்தாம் அத்தியாயம்

# பல வகைத் தேசீய வாதிகள்

---

இந்திய தேசீய வாதிகளில் எத்தனை வகையார் உண்டென்பது குறித்து இனிச் சிறிது ஆராய்வோம். இவ் வத்தியாயத்தில் கூறப்படும் விஷயங்களிலிருந்து இந்திய தேசீய வாதிகள் ஒற்றுமையின்றிப் பிரிந்துகிடப்பவர்களென்று வாசகர்கள் முடிவுசெய்யக் கூடாது. இலட்சியத்தைப் பொறுத்த வரையில்அநேகமாக எல்லாரும் ஒற்றுமைப்பட்டிருக்கிறார்கள். பூரண சுதந்திர இலட்சிய முடையவர்கள்கூட, சமீப காலத்தில் ஏகாதிபத்தியத்திற்குள் சுயாட்சி அளிப்பதாக பிரிட்டிஷார் வாக்குறுதி கூறினால் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார்கள். இலட்சியத்தை அடைவதற்குரிய முறைகளில்தான் தேசீயவாதிகள் வேற்றுமைகொண்டிருக்கின்றனர். ஆனால் எந்த நாட்டிலும் விடுதலைப் போராட்டத்தில் முறைகளைப் பற்றிய வேற்றுமை இருத்தல் இயல்பேயாகும். பலாத்காரக் கட்சி யென்றும், சமாதான முறைகளைக் கடைப்பிடிக்கும் கட்சி யொன்றும் எங்கேயும் உண்டு. இந்திய தேசீய வாதிகளும் பொதுவாகப் பலாத்காரக் கட்சியென்றும், நிதானக் கட்சியென்றும் இரு பிரிவாகப் பிரிந்துள்ளார்கள். ஒவ்வொரு பிரிவுக்குள்ளும் எண்ணப் போக்கில் பெரிதும் வேற்றுமையுடையவர்கள் உண்டு. இவ் வேற்றுமைகளைக் காட்டும் பொருட்டுக் கீழே அவர்களில் பல வகையினரையும் பற்றி விவரித்துள்ளேன். அறிவுடைய மனிதர்களுக்குள் கொள்கைகளிலும், முறைகளிலும் பரிபூரண ஒற்றுமை காணுதல் அரிது. இயந்திரத்தினால் செதுக்கப்பட்ட மரக்கட்டைத் தொகுதிகளிலேயே அத்தகைய ஒற்றுமையைக் காணலாம்.

## தீவிர வாதிகள்

முதலில் தீவிரவாதிகளை எடுத்துக்கொள்வோம். இவர்களில் பிரிட்டிஷ் அரசாங்கத்தையே அங்கீகரியாதவர் சிலர் இருக்கின்றனர். இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கமானது மோசத்தையும், பலாத்காரத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். ஆதலின் அரசாங்கத்தை எதிர்ப்பதற்குத் தாங்களும் மோசத்தையும் பலாத்காரத்தையும் கையாள அவர்கள் தயங்குவதில்லை. அரசாங்கத்தின் கீழ் ஊழியம் செய்தோ, வேறுவகையில் விருப்பத்துடன் ஒத்துழைத்தோ அதற்கு உதவி செய்பவன் ஒவ்வொருவனும் பிரிட்டிஷாரின் குற்றத்துக்கு உடைந்தையாயிருக்கிறான் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். பிரிட்டிஷ் சட்டங்களையும், பிரிட்டிஷ் நீதி மன்றங்களையும் அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. அவற்றை அவர்கள் மதிப்பதில்லை; உபயோகப்படுத்திக் கொள்வதுமில்லை. தங்கள் பிரசாரத்திற்குக் குறுக்கே நிற்கும் ஒவ்வொருவரையும் கூடுமானால் அவர்கள் அப்புறப் படுத்திவிடுவார்கள். இதற்காக மோசத்தையும் பலாத்காரத்தையும் கைக்கொள்ள அவர்கள் தயாராயிருப்பார்கள். இப்படிச் செய்வதற்குத் தங்கள் தேசீய வாதமே தங்களுக்கு உரிமையளிப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியைத் தாங்கிநிற்கும் ஒவ்வொருவரையும் தங்கள் இதய அந்தரங்கத்தில் அவர்கள் வெறுக்கின்றனர். அத்தகையோர் எல்லாரையும் தாக்குவதற்கு அவர்கள் விரும்பவில்லை யாயினும், அவசியமானால் அவர்களில் எவரையும் தொலைத்துவிடச் சித்தமாயிருக்கின்றனர். ஆங்கில அரசாங்கத்தின்மீது அவர்கள் போர் துவங்கியுள்ளார்கள். எனவே, அவர்களுடைய தலைவர்கள் சத்துருக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத் தண்டனை விதிக்கும் அதிகாரத்தையும் தாங்களாகவே மேற்கொண்டிருக்கின்றனர். தங்களுக்குத் துரோகம் செய்பவர்களை அவர்கள் கடுமையாகத் தண்டிக்கிறார்கள். இந்திய ஜனங்களிடம் 'வரி' வசூலிக்கவும் தங்க

ளுக்கு உரிமையுண்டென்று அவர்கள் எண்ணுகிறார்கள், 'ஓர் இராஜ்யத்தின் குடிகள் அனைவருக்கும் அந்த இராஜ்யத்தின் பாதுகாப்பே முதன்மையான கவலையா யிருக்கவேண்டும். அவசியம் நேரிடும்போது பிரஜைகளில் ஒவ்வொருவருடைய சொத்தையும் உபயோகித்துக்கொள்ள இராஜாங்கத்துக்கு உரிமையுண்டு'—என்னும் கொள்கையை ஆதாரமாகக்கொண்டு அவர்கள் தாங்கள் போடும் வரியைப் பலாத்காரத்தினால் வசூலிக்கவும் சித்தமா யிருக்கிறார்கள். ஆங்கில அரசாங்கத்தை அவர்கள் தங்கள் சத்துருவாகக் கருதிப் போர் துவங்கியிருக்கிறபடியால், கூடுமான இடங்களில் கூடுமான போதெல்லாம் அரசாங்கப் பொக்கிஷங்களைக் கொள்ளையடிக்கவும், அரசாங்க உடைமைகளுக்குத் தீங்கிழைக்கவும் தங்களுக்கு உரிமையுண்டென்று அவர்கள் எண்ணுகிறார்கள். இவ்வாறே, 'இராஜாங்கத்தின் பாதுகாப்பு'க்காக விருப்பத்துடன் தங்கள் சொத்தை அளியாத பிரஜைகளிடமிருந்து பலாத்காரமாக அதை அபகரித்தலும் நியாயமாகுமென்று அவர்கள் கருதுகிறார்கள். ஆகையினால்தான் 'கொள்ளைகள்' நடக்கின்றன.

## சூனிய வாதிகள்

இந்தக் கொள்ளைகளில் சம்பந்தப் படுவோரில் இருவகையினர் உண்டு. ஒரு வகையாருக்கு சன்மார்க்கம், சமயம் ஒன்றும் கிடையாது. இவர்கள் சூனியவாதிகள். ஆனால் இவர்கள் மிகச் சிறு தொகையினரே யாவர். இவர்கள் துன்மார்க்கர்கள் அல்லர்; தங்கள் சுயநலத்திற்காகவோ, தனிப்பட்டவர்களின் நன்மைக்காகவோ ஒழுக்க நெறிக்கு மாறான தெதுவும் அவர்கள் செய்யார்கள்; திருடுதல், கொள்ளையடித்தல், பிறரைத் துன்புறுத்தல், கொல்லுதல் முதலிய செயல்களில் இறங்கமாட்டார்கள். ஆனால் தங்கள் இயக்கத்தின் நன்மைக்காக அவர்கள் எதுவும் செய்யத் துணிவார்கள். முன்னமே கூறியதுபோல் இவர்கள் தொகை மிகவும் சொற்பம்.

இவர்களுடன் மாறுபட்ட மற்ளுரு வகையார் தீவிர சமயப் பற்றும் பாரமார்த்திக நோக்கமும் உள்ளவர்களாவர். இவர்களில் சிலர் காளி உபாசனைக்காரர்; வேறு சிலர் வேதாந்திகள். குறிப்பிட்ட சமயக் கோட்பாடு எதையும் சேராமல் கடவுள் நம்பிக்கைமட்டும் உடையவர்களுமுண்டு.

## சமயப் பற்றுள்ள தீவிர வாதிகள்

ஆனால் இவர்கள் எல்லாரும் ஆங்கிலேயரைத் தங்கள் தாய் நாட்டுக்கும், சமயத்துக்கும் பகைவர்களாகக் கருதுகிறார்கள். ஒருவன் புறச் சமயத்தைச் சேர்ந்தவன் என்பதற்காக அவனுக்கு மனதினால் தீங்கு நினைக்கவும் இக் கூட்டத்தினர் ஒருப்படார். ஆனால் தங்கள் சமயானுஷ்டானத்தில் தலையிடும் எவனையும் கொல்வதற்கு அவர்கள் தயங்குவதில்லை. ஜகன் மாதாவாகிய பராசக்தியை ஆராதிப்பதற்குத் தகுதிபெறும் ஒரு சாதனமாக அவர்கள் தங்களுக்கு உயிரளித்த தேச மாதாவை வழிபடுகிறார்கள். இவர்கள் கொள்கை வாசகர்களுக்கு நன்றாய் விளங்கும்பொருட்டு ஸ்ரீவிபின சந்திர பாலரின் புத்தகத்திலிருந்து இன்னும் சில பகுதிகளை எடுத்துக் காட்டுகிறேன் :—

## சக்தி உபாசகர்கள்

"ஹிந்து மதத்தின் விக்கிரஹ ஆராதனை முறை ஒரு மகத்தான மாறுதலை யடைந்துவருகிறது. இம் மாறுதலுக்கு மூல காரணமானவர் பங்கிம் சந்திரர்.* ஹிந்து சமயத்தின் பெண் தெய்வங்களுக்குள்ளே மிகப் பலரால் போற்றப்படும் அம்பிகையின் பல தோற்றங்களை தேசிய வளர்ச்சியின் பற்பல நிலைகளுக்குச் சின்னங்களாக அவர் பொருள்படுத்தினார். மத

*வங்க நாட்டின் பெயர்பெற்ற நூலாசிரியர். "வந்தேமாதர" கீதம் பாடியவர் இவரே.

யானையைக் காலின் கீழ் மிதித்துக்கொண்டு நிற்கும் அரிமாவின் முதுகில் அமர்ந்த ஜக தாத்ரி, காடு வெட்டி வளம் படுத்திய ஆதிகாலத்தில் தாய்நாட்டின் நிலையை உணர்த்தினள். இது, அன்னை முன்னர் இருந்த நிலை. காளி.—பயங்கர தெய்வம், இருள் நிறைந்தவள், நிர்வாணமாய் நிற்பவள், உதிரஞ் சொட்டும் தலைகளைக் கழுத்ததைச் சுற்றி மாலையாய் அணிந்தவள், ஆண்டவனாகிய சிவபெருமானைக் காலால் மிதித்துக் கொண்டு பயங்கரக் கூத்திடுபவள்.—இவளே தற்போதுள்ள தாய். தன்னைத்தான் அறியாதபடியால் அவள் இருண்டிருக்கிறாள். பஞ்சத்தினாலும் பிணியினாலும் மடிந்த தன் சொந்தக் குழந்தைகளின் தலைகளையே மாலையாகத் தொடுத்துக் கழுத்தில் அணிந்திருக்கிறாள். அத் தலைகளிலிருந்து சொட்டும் இரத்தத்தை நக்குகின்ற நரிகள்* சமுதாய வாழ்க்கை சீர் கேடுற்றுப் பாழடைந்து கிடப்பதைக் காட்டுகின்றன. அவள் காலின் கீழ்க் கிடக்கும் சிவன் வடிவம் தன் தெய்வத்தைத் தானே மிதிக்கிறாள் என்பதை உணர்த்துகின்றது. வருங்காலத்தில் தேசமாதா அடையப்போகும் மகோன்னத நிலைக்கு துர்க்கை சின்னமாக விளங்குகின்றாள். பத்து தலைத்தெய்வம்; சில கைகளில் வாள்களும், சூலங்களும் மற்றும் சில கரங்களில் தானியக் கதிர்களும் ஏந்தியவள்; வேறு கைகளினால் மக்களுக்குத் தைரியம் சொல்லி அபயப் பிரதானம் அளிப்பவள்; சிங்கத்தின் மீதூர்ந்து பூத கணங்களுடன் போரிடுபவள்; தனது ஒரு பக்கத்தில் கலைத்தெய்வமான சரஸ்வதியும், அறிவுக் கடவுளான கணபதியும், மற்றொரு பக்கத்தில் செல்வத் திருமகளான லக்ஷ்மியும், தேவ சேநாதிபதியான கார்த்திகேயரும் வீற்றிருக்கப் பெற்றவள்; இவளே நமது வருங்காலத் தாய். தேவர், தேவிகளின் பழையசிலைகளுக்கு பங்கிம் சந்திரர் அளித்தஇந்தப் புதிய கருத்தினால், தேசத்தில் வழங்கிய சாதாரண சமயச் சடங்குகளும் புதிய பொருள் பெற்றன. எனவே, கணக்கில்லாத ஜனங்கள் ஜகதாத்ரி, காளி அல்லது துர்க்கையை ஆராதிக்கும் போது பய பக்தியோடும், அளவிலாத உற்சாகத்தோடும்

* அல்லது பொருள் பறிக்கும் அன்னிய நாட்டார்.

'வந்தேமாதரம்' என்று கோஷித்து வழிபடுகிறார்கள். இந்த தெய்வங்களெல்லாம் ஹிந்துக்களால், சிறப்பாக வங்க நாட்டு ஹிந்துக்களால், பெரிதும் ஆராதிக்கப்படுவன வாகும். ஆதலின் இத் தெய்வங்களின் சிலைகள் மேற் கூறியவாறு புதிய பொருள் பெற்றிருப்பது தற்போதைய தேசீய இயக்கத்தின் வலிமைக்குக் காரணமாயமைந் திருக்கிறது. அவ்வியக்கத்தின் வலிமைக்கு அதையே அத்தாட்சியாகவும் கொள்ளலாம். பழைய தேவர், தேவிகளின் இந்த அதி ஆச்சரியமான மாறுதலானது நாட்டின் பாமர ஜனங்களுக்கிடையே புதிய தேசீய இயக்கத்தை நன்கு பரப்பி வருகிறது.''

## வேதாந்திகள்

''பழைய சமயக் கொள்கைகள், சின்னங்களின் இந்த வகைத்தான மாறுதலுக்கு ஆதாரமா யுள்ளது நாட்டில் தோன்றியிருக்கும் புதியதொரு வாழ்க்கைத் தத்துவமாகும். திட்டமாகக் கூறவேண்டுமாயின் அது புதிய தத்துவமே யன்று; பழைய தத்துவங்களின் புதிய பிரயோகந்தான். ஹிந்துக்களின் பழைய வேதாந்தமே தற்போது ஏற்பட்டுள்ள புதிய தேசீய வாதத்துக்கு அடிப்படை. வேதாந்தத்திலுள்ளே பற்பல கோட்பாடுகள் உளவாயினும், அவை யனைத்திலும் ஊடுருவி நிற்கும் பொதுவான தத்துவம் ஒன்று உண்டு. ஜீவ—பர ஐக்ய பாவமே அத் தத்துவமாகும். இதன்படி, வடிவங்கள் பலவாயினும் உண்மைப் பொருள் ஒன்றே. சட உலகமும் பாரமார்த்திகத்திலிருந்து பிரிந்து நிற்பதன்று. இறைவன் எண்ணமே உருப்பெறும் போது சடமாகின்றது. ஈசுவரனின் சித்த விகாசமே சிருஷ்டியின் பரிணாமமாகும். இப் பரிணாமத்தில் அடியும், நடுவும், முடிவுமாக இருப்பது பிரம்மமே. உலக வளர்ச்சியின் மூலமாக இறைவன் தன்னைத்தானே வெளியாக்கிக் கொண்டு வருகிறான். மனிதனிடத்துள்ள ஜீவாத்மா—பரமாத்மாவின் ஒரு சிறு பொறி—சிறிது சிறிதாகத் தன்னியல்பை உணர்ந்து வருகிறது. தானும் பரமாத்மாவும் ஒன்றே என்ப

தைப் பூரணமாக உணருதலே ஜீவாத்ம வளர்ச்சியின் முடி வாகும். சமூக வாழ்க்கையைத் துறந்து தத்துவ விசாரணையில் ஈடுபடுவதின் மூலம் மேற் கூறிய ஜீவபிரஹ்ம ஐக்யத்தை அடைய இந்தியாவில் வெகுகாலமாக முயற்சி செய்யப் பட்டு வந்தது. உலக வாழ்க்கையின் நடைமுறை உண்மைகளை அசட்டை செய்து பொதுப்படையான தத்துவங்களுக்கும் இலட்சியங்களுக்கும் அளவுக்கு மீறிய முக்கியம் தரப்பட்டு வந்தது. உலகை விட்டோடும் துறவு இலட்சியத்தை அவ்வப் போது சிற்சிலர் கண்டித்துளரேனும் அந்த இலட்சியத்துக்கே சிறப்பு அதிக மிருந்து வந்தது. தற்போது தோன்றியுள்ள புதிய வேதாந்தம் இக்குறைபாட்டைப் போக்க முயற்சி செய்து வருகிறது. உலக வாழ்க்கயைத் துறந்து ஓடாமல், உலகிலிருந்துகொண்டே வாழ்க்கையைப் பாரமார்த்திகத் துறைப்படுத்திப் பழைய உயர் இலட்சியங்களை அடைவதற்கு அது வழி காட்டுகின்றது. இந்நோக்கம் நிறைவேறவேண்டு மாயின், சமூகத்திலுள்ள ஒவ்வொரு தனி மனிதனும் உயரிய பார மார்த்திக வாழ்க்கை நடத்துதல் சாத்தியமாகும் வண்ணம் சமூக வாழ்க்கைத் துறையிலும். பொருளாதார, அரசியல் துறைகளிலும் சமூக புனர் நிர்மாணம் இன்றியமையாததாகும். தற்போதைய தேசீய இயக்கத்தின் பாரமாத்திக அம்சம் முழு தும் இப் புதிய வேதாந்த தத்துவத்தினின்றே பெறப்பட்ட தென்பதில் ஐயமில்லை.

"மேற்கூறிய நவ வேதாந்த சமயத்தின் காரண புருஷர் களில் முதன்மையானவர் சுவாமி விவேகானந்தர் ஆவர். இம் மதத்தின் செல்வாக்கினால் பழைய சமூகக் கோட்பாடுகள் பல நாளடைவில் விரிவடைந்துவருகின்றன. சாதிக் கட்டுப் பாடு களையும், பழைய வழக்க பழக்கங்களையும் அணுவளவு மீறி நடந்தாலும் சாபங்கொடுக்கும் மனப்பான்மை மாறிச் சகிப்புத் தன்மை உண்டாகி வருகிறது. தேசீய வாழ்க்கையிலும், தேசீயப் போராட்டத்திலும் ஏற்பட்டுள்ள அவசியங்களினால் பழைய சாதி நிர்ப்பந்தங்கள் சிறிது சிறிதாகத் தகர்ந்து வருகின்

றன. புதிய இயக்கத்திலே பிராமண ரல்லாத ஆசாரியர்களுக்கு வயது வந்த வைதிக பிராமணர்கள் பகிரங்கமாக வணக்கம் செலுத்துகிறுர்கள். அவர்களில் சிலர் சமூகக் கட்டுப் பாடுகளுக்கு முற்றும் விரோதமாகச் செய்திருக்கும் காரியங்களையும் நியாயமென்று ஸ்தாபிக்க சாஸ்திரங்களிலும், சம்பிரதாயங்களிலும் கவலையுடன் ஆதாரம் தேடப்படுகிறது. அப்படி ஆதாரம் ஒன்றும் கிடைக்காமற் போனுல், சந்நியாசிகளைப் போல் தேச ரக்ஷகர்களும் சட்ட திட்டங்கள் எல்லாவற்றையும் கடந்தவர்கள் என்று சொல்லி அவர்களுடைய செயல்கள் மன்னிக்கப் படுகின்றன. இவையெல்லாம் புதிய தேசீய இயக்கம் ஜனங்களின் உள்ளத்தில் எவ்வளவு செல்வாக்குப் பெற்று விட்ட தென்பதை நன்கு நிரூபிப்பன வாகும்.''

வங்காள தேசிய வாதிகளில் மிகப் பெரும்பான்மையோர் சக்தி உபாசகர்கள், வேதாந்திகள் என்னும் இவ்விரு வகுப்புகளில் ஒன்றைச் சேர்ந்தவரா யிருந்தனர். அவர்கள் சூனிய வாதிகளல்லர்; அராஜகர்களு மல்லர். அவர்கள் தேச பக்தியைச் சமயத்தின் பீடத்துக்கு உயர்த்திய உத்தம தேச பக்தர்கள். அவர்களுடைய சமயம் அவர்கள் தேச பக்தியுடன் முற்றும் பொருந்தியதோடு, அத்தேச பக்திக்கு அளவிலா உறுதியையும், ஜீவ சக்தியையும் அளித்தது. அவர்களுடைய வாழ்க்கை தேச பக்தியிலேயே தோய்ந்து கிடந்தது. தங்கள் வாழுளின் ஒவ்வொரு கணத்திலும் அவர்கள் தங்கள் கடமையை உணர்ந்திருந்தார்கள். அக்கடமையை ஆற்றுவதில் என்ன வேண்டுமாலும் செய்யவும், எவ்வித அபாயத்துக்கும் துணியவும் அவர்கள் சித்தமாயிருந்தார்கள். தெய்வ நம்பிக்கையுடையவரேனும் குறிப்பிட்ட சமயம் எதையும் தழுவாத சிலரும் வங்காள தேசியவாதிகளுக்குள் இருந்தனர். வங்காளத்தில் முதன் முதலாகக் கட்சி துரோகம் செய்து தன் தோழர்களைக் காட்டிக் கொடுத்த 'அப்ரூவர்' கொஸேனை*ச் சுட்டுக் கொன்றவர் பிரம சமாஜத்தைச் சேர்ந்தவராவர். முஸ்லிம்கள்,

*1908-ம் ஆண்டின் முற்பகுதியில் பீஹாரிலுள்ள முஸபர்பூரில் முதன் முதலாக வெடி குண்டெறியப்பட்டது. தேசிய இளைஞர்களுக்குச் சவுக்கடி

கிறிஸ்துவர்கள் சிலரும் அவர்களில் இருந்தார்கள். பிரம்ம பந்து பந்தோபாத்தியாயர்* ஒரு காலத்தில் கிறிஸ்துவராயிருந்தவர். பஞ்சாப், ஐக்ய மாகாணம், மகாராஷ்டிரம், குஜராத், பீஹார், இராஜபுதனம், சென்னை உள்படப் பாரத நாடெங்கும் அவர்களுக்குத் துணைவர்களும் சீடர்களும் இருந்தனர்.

## புரட்சிக்காரர்கள்

இவர்கள் ஒழுங்கான அமைப்புடன் புரட்சிப் போர் தொடங்க வேண்டுமென்ற கொள்கை யுடையவராவர். மேலே கூறியவர்களுடன் இவர்கள் ஒரு விஷயத்தில் மட்டும் மாறு படுகிறார்கள். தனிப்பட்ட மனிதர்களைக் கொலை செய்வதிலும், கொள்ளை யடிப்பதிலும் இவர்களுக்கு நம்பிக்கை கிடையாது. துரோகிகள், காட்டிக் கொடுப்போர் முதலியோரிடம் இவர்களும் இரக்கங்காட்டுவதில்லை. ஆனால் அரசாங்க உத்தியோகம் வகிக்கும் தனிப்பட்ட ஆங்கிலேயரையாவது, இந்தியரையாவது அவர்கள் கொலை செய்ய இணங்கார்கள். தனி மனிதர்களின் பொருளைக் கொள்ளை யடிக்கவும் மாட்டார்கள். கட்டுப் பாடாகப் புரட்சிக் கலகம் செய்வதில் அவர்கள் நம்

தண்டனை விதித்து வந்த ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் மீது எறிய உத்தேசிக்கப் பட்ட அவ்வெடிகுண்டு, தவறுதலாக வேறொருவர் மீது விழுந்துவிட்டது. இது சம்பந்தமான போலீஸ் சோதனையின் போது ஒரு பெரிய சதியாலோசனை வெளியாயிற்று. சதியாலோசனையின் தலைமை ஸ்தலம் கல்கத்தா, மாணிக் தோலா தோட்டத்தில் இருந்ததாகக் கூறப் பட்டபடியால் இதற்கு "மாணிக் தோலா வெடிகுண்டு வழக்கு" என்ற பெயர் ஏற்பட்டது. சதியாலோசனைக் காரர்களில் ஒருவனான நரேந்திர நாத கஸேன் அரசாங்கத் தரப்பில் சாட்சியானான். வழக்கு செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பப்பட்ட பின்னர், அவனும் மற்ற குற்றவாளிகளும் அலிப்பூர் சிறைக் கூடத்திலிருந்த போது, சதியாலோசனைத் தலைவர்களில் ஒருவர் தம் நண்பர்களால் இரகசியமாக அனுப்பப்பட்ட கைத்துப்பாக்கியைக் கொண்டு அவனைச் சுட்டுக் கொன்றார்.

*வங்காள தேசீய வாதிகளின் பெருந் தலைவர்களில் ஒருவர். இப்போது காலமாகி விட்டார்.

பிக்கை கொண்டவர்கள். சைன்யத்தைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு பகிரங்கமாகக் கலகக் கொடியைத் தூக்கிப் போர்புரிய வேண்டுமென்பது அவர்கள் விருப்பம். இத்தகைய புரட்சிப் போருக்காக என்ன வேண்டுமானலும் செய்ய அவர்கள் சித்தமாயிருந்தனர். மற்றப்படி சாதாரண கொலை, களவுகளில் ஈடுபட அவர்கள் தயாரா யில்லை.

## ஹரி தயால்

ஹரி தயால் இந்த வகுப்பைச் சேர்ந்தவரென்றே நான் கருதுகிறேன். இவருடைய மனே வளர்ச்சியைக் குறித்து ஆராய்தல் மிகவும் ரசமாயிருக்கும். ஹரி தயால் டில்லியில் காயஸ்த குடும்பம் ஒன்றில் பிறந்தவர். கிறிஸ்துவப் பாதிரிமார்களின் கீழ் கல்வி பயின்றவர். அவர் பி. ஏ. பட்டம் பெற்றபோது கிறிஸ்துவ இளைஞர் சங்கத்தில் அங்கத்தினரா யிருந்தார். பின்னர், அவர் லாகூர் அரசாங்கக் கல்லூரியில் உபகார சம்பளம் பெற்றுச் சேர்ந்து, 1903-ம் ஆண்டில் எம். ஏ. பரீட்சையில் முதன்மையாகத் தேறினர். அவர் இப்பரீட்சைக்கு எடுத்துக்கொண்ட விஷயங்கள் "ஆங்கில மொழியும் இலக்கியமும்". ஆங்கில பாஷையில் அவர் அபாரத் தேர்ச்சி பெற்றிருந்தபடியால், சில பரீட்சைப் பத்திரங்களில்100-க்கு100- வீதம் மார்க்குகள் வாங்கினர். இன்னும் ஓராண்டு அவர் அங்கேயே படித்து, இரண்டாம் முறையாகச் சரித்திரத்தில் எம். ஏ. பட்டம் பெற்ருர். இத்தனை காலமும் அவர் தேசிய, ஜாதீய உணர்ச்சி சிறிதும் பெற்றவரல்லர். அந்நாளில் அவரை ஹிந்து என்ருே, இந்திய தேசிய வாதியென்ருே சொல்லி யிருக்கமுடியாது. அதைவிட 'பிரம சமாஜி' என்றும், 'சர்வ தேசீய பிரஜை' என்றும் கூறுதல் அதிக பொருத்தமா யிருந்திருக்கும். பின்னர் அவர் இந்திய அரசாங்கத்தின் உபகாரச்சம்பளம் பெற்று இங்கிலாந்து சென்று ஆக்ஸ்போர்டு ஸெண்ட் ஜான் கலாசாலையில் சேர்ந்தார். இங்கும் அவர் புலமையில் தலைசிறந்து புகழ்பெற்ருர் எனச் சொல்ல வேண்டுவதில்லை. ஆனல் இங்கேதான் அவர் முதன் முதலில் தேசீய

வாதி யானுர் என்பதே வியப்புக் குரியதாம். அவர் தீவிர உணர்ச்சியுள்ள மனிதர். ஒன்றில் நம்பிக்கை கொள்வதும் அதைச் செயலில் கொணருவதும் வெவ்வேறு விஷயங்கள் என்று அவர் எண்ணுவதில்லை. மிகச் சொற்ப காலத்தில் அவருடைய கொள்கைகள் அதி தீவிரமாகிவிட்டதாகக் காணப்படுகிறது. ஹிந்துக்களுடைய ஒழுக்க வன்மையின் அடிப்படையையே ஆங்கிலேயர் தகர்த்து வருவதாய் அவர் நம்பலானுர். கல்வித்துறையில் ஆங்கிலேயரின் கொள்கையும், முறைகளும் ஹிந்து சமயத்தை அழித்து, ஹிந்துக்களின் சமூக உணர்ச்சியையும், ஒருமைப் பாட்டையும் குலைத்து, அவர்களுடைய அரசியல் பராதீனத்தை வலுப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டன வென்று அவர் கருதலானுர். இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் சரித்திரம், பிரிட்டிஷ் ஸ்தாபனங்களின் வரலாறு ஆகியவற்றை அவர் அசல் தஸ்தவேஜுகளிலிருந்தும், பார்லிமெண்டு நடவடிக்கைப் புத்தகங்களிலிருந்தும் நேரே படித்தறிந்தார். இதன் பயனுக, பிரிட்டிஷார் வேண்டுமென்றே இந்தியர்களை ஆங்கில நாகரிகத்தை மேற்கொள்ளுமாறு தூண்டி வருகிருர்களென அவர் முடிவு செய்தார். இந்திய தேசீய வாதத்தை அழித்துவிடுதல், இந்தியர் தங்கள் ஸ்தாபனங்களைத் தாழ்ந்தவை என்று எண்ணச்செய்தல், அவர்களை பிரிட்டிஷ் சம்பந்தத்தைப் போற்றி பிரிட்டிஷார் போலாகும்படி செய்தல் என்னும் இவையே மேற்கூறிய முயற்சியில் அவர்களுடைய நோக்கங்கள் என்று அவர் தீர்மானித்தார். ஆதலின் அவர்களுடைய கல்வி ஸ்தாபனங்களில் கல்வி பயில்வதும், அவர்கள் அளிக்கும் பட்டங்களைப் பெறுவதும், அவர்களுடைய ஆட்சியின்கீழ் வேறு எவ்வித நன்மை அடைவதும் தவறென்று அவர் முடிவு செய்தார். ஒன்றில் நம்பிக்கை கொண்டால் அந்தக் கணமே அதைச் செயலில் கொணருபவர் அவர் என்று முன்னமே கூறியுள்ளோம். ஆதலின் அவர் மேற் சொன்னவாறு நம்பிக்கை பெற்றதும், தமது உபகார சம்பளத்தை வேண்டாமென்று மறுத்துப் படிப்பை நிறுத்தி 1907-ம் ஆண்டின் இறுதியில் இந்தியாவுக்குத் திரும்பினுர். இந்தியா சேர்வதற்கு முன்பே

ஆங்கில நடை உடை பாவனைகளை அவர் புறக்கணித்துவிட்டார். இந்திய முறையில் ஜோடுகள், கால் ஸராய், குல்லா முதலியவை அணிந்து சால்வை ஒன்றை உடம்பில் போர்த்திக் கொண்டார். முஸ்லிம்களுடனும், கிறிஸ்துவர்களுடனும் கலந்து பழகுவதைக் கூட நிறுத்திவிட்டார். ஹிந்து சமயத்தை உண்மையாக அனுஷ்டித்தாலும், அனுஷ்டியாவிடினும் ஹிந்து சமூகத்தின் நடை உடை பாவனைகளை மிகக் கண்டிப்பாகச் சில காலம் மேற்கொண்டிருந்தார். முன்னர் தமக்கு ஆசிரியராயிருந்தவரும், டில்லி ஸெண்ட் ஸ்டீபன் கலாசாலையின் தலைவருமான பேராசிரியர் ருத்திரர் லாகூரில் தம்மைப் பார்ப்பதற்காக வந்தபோது அவருடன் கைகுலுக்க மறுத்துவிட்டார். தமது பாயில் அவரை உட்காரச் சொல்லவும் இல்லை. (இக்காலத்தில் அவரிடம் நாற்காலி கிடையாது.) ஆசிரியர் ருத்திரர் கிறிஸ்துவர் என்பதே இதற்குக் காரணம்! பிரிட்டிஷ் அரசாங்கத்தையும், அவர்களுடைய ஸ்தாபனங்களைம் அடியோடு பகிஷ்கரித்தல் அப்போது அவரது மதமாயிருந்தது. ஹிந்து சந்நியாசிகளின் ஸ்தாபனம் ஒன்றை அமைத்து, அவர்கள் மூலமாய்த் தம் கொள்கைகளைப் பரப்ப வேண்டுமென்று அவர் நோக்கங் கொண்டிருந்தார். இதன் பொருட்டு ஐந்தாறு இளைஞர்களைச் சேர்த்தார். இவ்விளைஞர்கள் தங்கள் படிப்பை விட்டு, வீடு வாசல்களைத் துறந்து, அவர் இட்ட பணியை நிறைவேற்றச் சித்தமாய் முன்வந்தார்கள். ஹரி தயால் தூய்மையுடன் வாழ்ந்ததோடு தம்மைச் சார்ந்த மற்றவர்களையும் தூய வாழ்க்கை நடத்தச் செய்தார். அக் காலத்தில் அவருக்குப் பலாத்காரத்தில் நம்பிக்கையில்லை; அவர் பலாத்காரப் பிரசாரம் செய்யவுமில்லை. சம்பாஷித்தல், விவாதம் செய்தல், உபந்நியாசம் புரிதல், பத்திரிகைகளில் எழுதுதல்,—இவையே அவர் செய்த வேலைகளாகும், அவர் பேச்சும், எழுத்தும் ஜனங்களின் கவனத்தைக் கவரத் தொடங்கின. அரசாங்கத்தார் அவரை அப்புறப்படுத்த விரைவில் ஏதேனும் ஓர் உபாயத்தைக் கையாளலாமென்று தோன்றியது. ஆதலின் இந் நாட்டைவிட்டே வெளியேறிவிட அவர் தீர்மானித்தார். அவ்வாறே 1908-ம்

வருஷத்தின் பிற்பகுதியில் பிரயாணமானுர். இங்கிலாந்திலுள்ள இந்திய மாணுக்கர்களிடையே தம் கொள்கையைப் பிரசாரம் செய்யலாம் என்னும் நோக்கத்துடன் அவர் இங்கிலாந்து சென்ருர். அங்கே சிறிதுகாலம் தங்கிப் பார்த்ததில் தமது 'தேசீயக் கொள்கையைப் பரப்புவதற்கு அங்கு அதிக இடமில்லை யென்று தெரிய வந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தம்மைக் கைது செய்யலாமென்னும் பயமும் ஏற்பட்டது. ஆதலின் அவர் இங்கிலாந்தினின்றும் வெளியேறி, சொற்ப பணத்தைக் கொண்டு 'வாழ்க்கை நடத்தவும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தொல்லைக்காளாகாமல் தமது பிரசாரத்தைச் செய்யவும் தகுந்த தோர் இடத்தைத் தேடி, இரண்டு வருஷகாலம் அங்குமிங்கு மலைந்தார். ஒரு வருஷம் பிரான்சில் வசித்தபோது, ஐரோப்பா வின் சிறந்த அரசியல் இலட்சியங்களை அவர் அறிந்துகொள்ள இயன்றது. இங்கே எகிப்திய தேசீய வாதிகளுடனும், ருஷியப் புரட்சிக் காரர்களுடனும் அவர் நட்புரிமை கொண்டார். பிரஞ்சு பாஷையில் அவருக்கு நல்ல ஞானம் உண்டு. அந்த பாஷையில் அவர் சரளமாகப் பேசக்கூடியவரா யிருந்ததன்றி, கவிதை இயற்றும் ஆற்றலும் பெற்றிருந்தார். பிரஞ்சுப் பத்தி ரிகைகளுக்கு அவ்வப்போது அவர் எழுதுவதுண்டு. ஜெர்மனி பாஷையும் அவருக்குத் தெரியும். முடிவில் அவர் அமெரிக்கா வுக்கு சென்று அங்கேயே நிலையாகத் தங்கினுர். அமெரிக்கா வில் வசிக்கத்தொடங்கிய முதல் வருஷத்தில் இந்தியப் பத்திரி கைகளுக்கு அவர் எழுதிய கட்டுரைகள், அவருடைய தேசீய வாதக் கொள்கைகளில் எவ்வித மாறுதலையும் குறிப்பிடவில்லை. ஆனுல் ஒரு வருஷத்திற்குப் பின்னர் அவர் முற்றும் வேறு மனி தர் ஆனுர். அவருடைய அரசியல் தேசீயக்கொள்கை முன் போலவே இருந்ததாயினும் சமூகப் பிரச்னைகள், ஒழுக்க நெறி, ஹிந்துக்களின் பழைய இலக்கியம், ஹிந்து ஸ்தாபனங்கள் இவற்றைக் குறித்த அவருடைய கொள்கைகள் தலைகிழாகி விட்டன. ஹிந்து சமூகத்திற்குரிய ஒவ்வொன்றையும் அவர் வெறுக்கத் தொடங்கினுர். மேனுட்டுச் சுதந்திரக் கொள்கை களிடம் பெருமதிப்புக் கொண்டார். அவரிடம் இன்றுவரை

மாருமலிருந்து வருவது ஒன்றே ஒன்றுதான். அந்த ஒன்று, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியினிடம் அவர் கொண்டுள்ள துவேஷமேயாகும். இந்தியர்களை அரசியல் பிரசாரத்தைத் தவிர வேறெதிலும் தலையிட வேண்டாமென்று தடுப்பதே அப்போது அவரது கோட்பாடாயிருந்தது. ஸான் பிரான்ஸிஸ்கோ நகரில் "விரும்பத் தகாத அன்னிய நாட்டான்" என்ற முறையில் அவர் கைது செய்யப்பட்டார். அப்போது அவர் அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களிடம், தாம் அராஜகர் அல்லரென்றும், தனிப்பட்டவர்களைக் கொல்வதற்கு வெடிகுண்டு அல்லது சுழற் துப்பாக்கி உபயோகிப்பதைத் தாம் ஆதரிக்கவில்லையென்றும் சொன்னார். அவர் கூற்றில் அவநம்பிக்கை கொள்வதற்கு நமக்குக் காரணம் எதுவுமில்லை. ஆனால் வருங்காலத்தில் அவருடைய கொள்கைகளில் இன்னும் என்னென்ன மாறுதல்கள் ஏற்படுமென்று யாருக்கும் தெரியாது. அவரைப் பற்றி நிச்சயமாக எதுவும் சொல்லமுடியாது. அவர் ஒருவகை விசித்திர இயல்புடைய இலட்சியவாதி. எளிய வாழ்க்கை நடத்துபவர். மற்றவர்கள் தம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்களென்பதில் அவருக்குச் சிறிதும் கவலை கிடையாது என்பது வெளிப்படை. அவர் யாருடைய தயவையும் எதிர்பார்ப்பதில்லை; ஆனால் தம்முடைய கடமை யில்லாத போதும் பிறருக்கு வலிந்து சென்று உதவி செய்வார். அவருடைய கொள்கைகளையும், பிரசார முறையையும், வேலைத் திட்டத்தையும் ஒப்புக்கொள்ளாதவர்கள் உள்பட அவருடைய சகோதர தேயத்தார் ஆயிரக் கணக்கானவர்களின் அன்புக்கும், நன்மதிப்புக்கும் அவர் உரியவரா யிருக்கிறார். காலஞ் சென்ற ஸ்ரீ கோகலே கூட அவரிடம் மதிப்பு வைத்திருந்தார்.*

*யுத்தத்தின் முற்பகுதியில் ஹரி தயால் ஜெர்மானியப் பற்றுள்ளவரா யிருந்தார். ஆனால் யுத்தத்திற்குப் பிறகு, ஜெர்மனியையும் ஜெர்மானியக் கொள்கைகளையும் தூற்றினார். அதிலிருந்து அவர் புரட்சிப் பிரசாரத்தை அடியோடு கைவிட்டுவிட்டார். தற்போது சட்டவரம்புக் குட்பட்ட வளர்ச்சியில் நம்பிக்கை யுள்ளவரா யிருக்கிறார்.

மேற்கூறிய இருவகைத் தேசிய வாதிகளில் எவரும் பிரிட்டிஷாருடன் எவ்வித ராஜியும் செய்துகொள்ளத் தயாராயில்லை. பூரண சுதந்திரம்—முழு சுயராஜ்யமே அவர்களுடைய இலட்சியம். தங்கள் முன்னுள்ள வேலை மிகவும் கஷ்டமான தென்பதை அவர்கள் அறிவார்கள். எனினும், அவர்கள் தன்னம்பிக்கை கொண்டவர்கள்; வழியிலுள்ள கஷ்டங்கள் வெல்ல முடியாதவை யல்லவென்று அவர்கள் நம்புகிறார்கள். சுயராஜ்யமடைவதற்கு இந்தியாவில் கல்வி அதிகம் பரவ வேண்டுமென்று அவர்கள் எண்ணவில்லை. அரசியல் விடுதலைக்கு முன்னால் சமூக சீர்திருத்தமும், சமூக கட்டுப்பாடும் ஏற்படுதல் அவசியமென்றும் அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை; இவையெல்லாம் வெறும் பிரமைகள் என்றும், இந்திய மக்கள் ஆண்மை இழந்து அரசியல் அல்லாத வேறு முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் பொருட்டு ஆங்கில நாட்டார் புகுத்திய எண்ணங்கள் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். ஆளப்படுவோரிடையே அவர்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே நிர்வகிக்கத் திறமை யற்றவர்களென்றும், அவர்களால் ஒற்றுமைப்பட முடியாதென்றும், அவர்களுக்குள் நீக்க முடியாத வேற்றுமைகள் பல உண்டென்றும், சுதந்திரத்துக்காகப் போராட அவர்கள் சக்தி யில்லாதவர்க ளென்றும் இன்னும் இவை போன்ற எண்ணங்களை உண்டுபண்ணுதல் ஏகாதிபத்திய வாதிகள் கையாளும் சூழ்ச்சிகளில் ஒன்று என்பது அவர்கள் நம்பிக்கை. வகுப்பு வாத, சமூக முன்னேற்ற முயற்சிகள் எல்லாவற்றையும் இத் தேசீய வாதிகள் வெறுக்கிறார்கள் சமய, சமூக சீர்திருத்த வேலைகளில் ஈடுபட்ட ஸ்தாபனங்களை அவர்கள் ஆதரிப்பதில்லை. இந்தச் சீர்திருத்த ஸ்தாபனங்களெல்லாம், பரம முக்கியமான தேச விடுதலை முயற்சியிலிருந்து மக்களின் கவனத்தை அற்ப விஷயங்களுக்கு இழுப்பதால் அவற்றினால் தீமையே விளைகிறதென்பது அவர்களுடைய அபிப்பிராயமாகும். சுதந்திரப் போராட்டம் ஒன்றிலேயே தேச மக்களின் கவனத்தை ஒருமுகப் படுத்த வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்.

## அரசியல் உரிமையே வாழ்க்கையின் முதல் நிபந்தனை

அரசியல் உரிமையில்லாத வாழ்வு, வாழ்வேயன்று என்பது இக் கூட்டத்தாரின் கொள்கை. வளர்ச்சி பெறும் ஆற்றலும், முன்னேற்றமடையும் சக்தியும் உள்ள நிலைமையே உண்மையில் வாழ்வு என்று கூறத் தகுதியுடையது. அடிமையொருவனுக்கு வளர்ச்சி யடையும் உரிமை கிடையாது. எப்போதும் அவனுடைய நன்மைகளைவிட அவனது எஜமானனின் நன்மைகளே முக்கியமானவையா இருக்கும். அவன் தன் சிறந்த ஆற்றல்களை யெல்லாம் எஜமானனின் ஊழியத்திலேயே ஈடுபடுத்த வேண்டும். அவனுடைய விருப்பம் எப்போதும் எஜமானனின் விருப்பத்தைத் தழுவியே நிற்றல் வேண்டும்; ஏறக்குறையத் தன் மனச் சாட்சியையே எஜமானனிடம் ஒப்படைத்து விடவேண்டும். இத்தகைய நிலைமைகளின்கீழ், எவனும் தன் ஆண்மையை வளர்த்துப் பூரண மனிதத்தன்மை பெறமுடியாது; தன் இயல்புக்குரிய உந்நத நிலையடைய முடியாது; தன் ஆற்றல்களையும், தனக்கு நேரும் சந்தர்ப்பங்களையும் நன்கு பயன்படுத்த முடியாது; தன் உடலையோ, ஆன்மாவையோ தன் விருப்பத்தின்படி முன்னேற்ற முறச் செய்ய முடியாது. அவன் என்ன செய்தாலும், தன் எஜமானனுடைய நன்மையை முன்னிட்டு எஜமானன் பெயராலேயே செய்கிறான். அவன் செயலால் விளையும் பெருமை, புகழ், நன்மை எல்லாம் எஜமானனையே அடைகின்றன.* தனி அடிமை ஒருவன் விஷயத்தில் இவை யெல்லாம் உண்மையானால், அரசியல் உரிமையிழந்த ஒரு நாட்டார் விஷயத்திலும் இவை உண்மையேயாகும்.

---

*இந்தியரின் உத்தியோக வாழ்க்கையில் இதற்கு உதாரணம் தினந்தோறும் காணலாம். கீழ்த்தர உத்தியோகங்களிலுள்ள இந்தியர்கள் தங்கள் அறிவினாலும் உழைப்பினாலும் செய்யும் அருஞ்செயல்களின் புகழ் முழுவதும் அந்தந்த இலாகாத் தலைவர்களான பிரிட்டிஷாரைச் சேர்வது அபூர்வ சம்பவமன்று.

மேற்கண்ட தங்கள் கூற்றுக்களின் உண்மையை நிரூபிப்பதற்கு, அவர்கள் காங்கிரஸ் மகா சபையின் சரித்திரத்தையும் நடவடிக்கைகளையும் அத்தாட்சியாக எடுத்துக் காட்டுகிறார்கள். தேசமக்கள் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி அளிக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் கேட்கிறது; அரசாங்கம் "இல்லை" என்று பதிலளிக்கிறது. "பணம் கிடையாது", "தேசம் அதற்குத் தயாராயில்லை", "ஜனங்களுக்கு அதனால் நன்மையில்லை" என்று இவ்வாறெல்லாம் சொல்கிறார்கள். பாமர ஜனங்கள் கல்விப் பயிற்சி பெற்றால், அவர்கள் அதிருப்தியடைந்து அரசாங்கத்துக்குத் தொல்லை கொடுக்கலாமல்லவா? ஆயுதச்சட்டத்தை ரத்து செய்யும்படி காங்கிரஸ் கேட்கிறது; அரசாங்கத்தார் "முடியாது" என்று விடையிறுக்கின்றனர். ஜனங்கள் அரசாங்கத்தை எதிர்க்க ஆயுதங்களை உபயோகிக்கலாமல்லவா? இத்தகைய விபத்து ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் எப்படி அளிக்கமுடியும் ? சைன்யத்தில் இந்தியர்களைத் தொண்டர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று காங்கிரஸ் விரும்புகிறது; அரசாங்கம் இதற்கும் "இல்லை" என்றே பதில் அளிக்கின்றது. இந்தியர்களுக்கு இராணுவப்பயிற்சி தருதல் விரும்பத்தக்க தன்று; அவர்கள் அப்பயிற்சியை அரசாங்கத்துக்கு விரோதமாகப் பிரயோகித்தல் கூடுமல்லவா? இந்தியர் மட்டும் அடங்கிய தொண்டர்படைகளை அமைக்கலாமென்றால், அரசாங்கத்துக்கு விரோதமாக அவர்கள் சதியாலோசனை செய்யக் கூடும். ஆதலின் அது கூடாது. ஐரோப்பியர்களும், யூரேஷியர்களும் அடங்கிய படைகளில் இந்தியர்களை நுழைத்தலும் விரும்பத்தக்க தன்று; ஏனெனில் அதனால் ஐரோப்பியத் துருப்புகள் தங்கள் சமூக கௌரவத்திற்கும், ஏகாதிபத்தியத்தின் மதிப்புக்கும் குறைவு நேர்ந்து விட்டதாகக் கருதக்கூடும். காங்கிரஸ் வாதிகள் இந்தியத் தொழில்களைப் பாதுகாக்க வேண்டுமென்கிறார்கள்; அரசாங்கத்தார் "கூடாது" என்று விடையிறுக்கிறார்கள். அதனால் லங்காஷயருக்குப் பாதக முண்டாகு மல்லவா? காங்கிரஸ்காரர் தொழிற் கல்வி அதிகம் வேண்டு மென்கின்றனர்; அரசாங்கத்தார் தேசத்திற்கு அது தேவையில்லை யென்

16

றும், அதற்குச் செலவிடப் பணமும் இல்லை யென்றும் விடை யளிக்கிறார்கள். காங்கிரஸ் தேசீயப்பள்ளிக்கூடங்களையும், சர்வ கலாசாலைகளையும் விரும்புகின்றது. "முடியாது; நீங்கள் அவற் றைத் துர் உபயோகப் படுத்தக்கூடும்" என்று அரசாங்கம் சொல்கின்றது. சுருங்கக் கூறின், இங்கிலாந்தின் நன்மைக்காக வும், ஆங்கில மக்களின் நலங்களுக்காகவுமே இந்தியா ஏற்பட்ட தென்பது அடிப்படையான கொள்கை. இந்தியாவுக்கு நன்மை எது, உபயோகமுள்ளதெது என்று இங்கிலாந்துக்குத்தான் தெரியும். இந்திய மக்களுக்கு எவ்வளவு உரிமை தரலாம், எவ்வளவு தரக்கூடாது, அவர்கள் எவ்வழியில் முன்னேற்ற மடையலாம், எவ்வழியில் முன்னேறக் கூடாது என்று ஆங்கில இராஜ தந்திரிகளே அறிவார்கள். தங்களுக்குத் தாங்களே சிந்திக்கும் உரிமை இந்தியர்களுக்குக் கிடையாது. அப்படி அவர்கள் ஏதேனும் சிந்தித்து முடிவு செய்யினும், அம்முடிவை ஆங்கிலேயர் பரிசோதித்துத் தங்கள் ஏகாதிபத்தியத்தின் நன் மைக் குகந்ததென்று கண்டால்தான் ஏற்றுக்கொள்வார்கள்.

ஆதலின் வாழ்வுக்கு,—கௌரவமும் மரியாதையும் பொருந் தியது, லாபத்துக்கும் நன்மைக்கும் உரியது, வளர்ச்சியும் முன் னேற்றமும் பெற்றது ஆகிய உண்மை வாழ்வுக்கு - முதல் நிபந் தனை அரசியல் சுதந்திரமே யாகுமென்று இத்தேசீய வாதிகள் வலியுறுத்துகிறார்கள். அச்சுதந்திரம் இல்லாத வாழ்வு வாழ்வே யன்று; ஆதலின், அதை முயன்று அடையாத வரையில் வாழ் வின் அணிகலன்களே எனத்தகும் பிற விஷயங்களில் கவனம் செலுத்துதல் வீண் வேலையென்று அவர்கள் கூறுகிறார்கள்.

சுதந்திர வாழ்வு படைத்த மனிதனுக்கே கல்வியினால் பயன் உண்டு. மிருகங்களில் கூட சில சாதிக்குக் கல்விப் பயிற்சி யளிக்கப் படுகிறது. இந்த முறையில் கல்வி பயில்விக்கப்பட்ட மனிதன் ஒருவன், அம் மிருகங்களைப் போல் தன் எஜமானனின் கட்டளைகளை நிறைவேற்றிவைக்கவே தகுதி யுடையவ னாவான். எஜமானன் ஸலாம் போடச் சொல்கிறான்; அவை ஸலாம் போடுகின்றன. எஜமானன் கூத்தாடச் சொல்

கிறுன்; அவை கூத்தாடுகின்றன. மற்றும் எஜமானன் கூறும் வேலைகளையெல்லாம் அவை செய்கின்றன. அவற்றின் விருப்பமும், அறிவும் எப்போதும் எஜமானனுக்குப் பணிந்தே நிற்கின்றன. சுதந்திரமான அறிவும், மனமும் அவைகளுக்கில்லை. இத்தகைய நிலைமையில் அளிக்கப்படும் கல்வியானது உண்மையில் கல்வியே யாகாதென்றும், அது மனிதனுடைய உயர் இயல்புகளைக் குலைத்து இழிவு செய்வதே யாகுமென்றும் தேசீயவாதிகள் சொல்கிறுர்கள். எஜமானர்களின் நன்மைக்காகமட்டும் கல்வி பயில்வதைக் காட்டிலும் ஜனங்கள் கல்வியறிவில்லாதவர்களா யிருத்தலே சாலச் சிறந்த தென்பது அவர்கள் நம்பிக்கை.

சமூக சீர்திருத்தம், சாதி முன்னேற்றம், வியாபார அபிவிருத்தி முதலியவை சம்பந்தமான திட்டங்களைப் பற்றியும் அவர்கள் இத்தகைய எண்ணமே கொண்டுள்ளார்கள். இவையெல்லாம் தேச மக்களுக்குள் பிளவு உண்டுபண்ணி அவர்கள் தங்களுக்குள் ஓயாச் சண்டைகள் போட்டுக்கொண்டிருக்கச் செய்யும் உபாயங்களே யென்றும், இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுதல் சக்தியைச் சிதறவிட்டுச் சந்தர்ப்பங்களை வீணுக்குவதாகுமென்றும் அவர்கள் எண்ணுகிறுர்கள். இந்தியாவிலுள்ள ஒவ்வோர் ஆண் மகனும் பெண் மகளும் தற்போதைக்கு அரசியல் விடுதலையைத் தவிர வேறெதையும் பற்றிச் சிந்திக்கக் கூடாதென்பது அவர்களுடைய விருப்பம். அன்னியனை நாட்டை விட்டுப் போகச்செய்வதே முதற் காரியம் என்று அவர்கள் கருதுகிறுர்கள். அவன் போனபின்னர் இந்தியாவை யார் ஆளுவது, எப்படி ஆளுவது, எத்தகைய அரசாங்க அமைப்பு ஏற்படுத்துவது, பற்பல சமயத்தினர் வகுப்பினருக்கு அதில் எவ்வாறு இடங் கொடுப்பது — என்பவை போன்ற விஷயங்களைக் குறித்து அவர்களுக்குச் சிறிதும் கவலையில்லை. இங்கிலாந்து இந்தியாவை விட்டுப்போன தட்சணமே, யாரேனும் ஒருவர் கிளம்பி தேசீய அரசாங்கம் ஒன்றை அமைப்பர் என்று அவர்கள் நம்புகிறுர்கள். காலம் கூடும்போது அதற்கேற்ற மனிதனும் புறப்படுவான். ஆட்சி முறையை அபி

விருத்தி செய்வது குறித்தும், அது போன்ற விஷயங்களைப் பற்றியும் அப்போது சிந்திக்கலாம்; விவாதிக்கலாம். பாரத நாட்டை ஆள்வோர் ஹிந்துக்களாயினும், முஸ்லிம்களாயினும் சீக்கியராயினும், கூர்க்கர்களாயினும் அவர்களுக்குக் கவலை யில்லை; நேபாளம், உதயபுரி, பரோடா பாடியாலா மகாராஜாக் களில் ஒருவரோ, ஹைதராபாத் நவாப் அல்லது பஹவல்பூர் நவாபோ, — எவர் உயர் பதவிக்கு வந்தாலும் அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள்; குடியரசு, முடியரசு, பிரபு வர்க்கத்தாரின் அரசு இவற்றில் எது ஏற்படவேண்டுமென்பது குறித்தும் அவர்கள் சிந்திப்பதில்லை. இத்தகைய விஷயங்கள் அவர்கள் உள்ளத்தில் இடம் பெறுவதே கிடையாது. வேறோர் அன்னிய அரசாங்கத்தை அவர்கள் விரும்பவில்லை யென்பது நிச்சயம்; எனினும் அவ் வழியினால் முடிவாக தேச விடுதலை கிடைப்பதாயிருந்தால் அதைக்கூட அவர்கள் பொருட் படுத்தமாட்டார்கள். தற்போதைய ஆட்சி முறையைவிட வேறெதுவும் சிறந்தது என்று அவர்கள் கருதுகிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சிமுறை சிறிது சிறிதாக நாட்டை க்ஷீணிக்கச் செய்துவருகிறது; ஆதலின் இறந்தே தீரவேண்டுமென்று ஏற் பட்டால் டைபாய்ட் சுரத்தினால் அல்லது க்ஷயரோகத்தினால் இறப்பதினும், கொள்ளை நோயினாலோ வாந்திபேதியினாலோ சாதல் நலமென்று அவர்கள் நினைக்கிறார்கள். அமைதி குலைந்துவிடுமே என்ற பயம் அவர்களுக்குக் கிடையவே கிடையாது. அமைதியில் அவர்கள் அலுப்புற்றுவிட்டார்கள். "தற்போதுள்ள நிலைமையில் அமைதி தேசத்தின் ஆண்மை யைக் குலைத்து ஜனங்களை க்ஷீணிக்கச் செய்துவிட்டது. இவ் வளவு பெரிய விலைகொடுத்து அமைதி பெறுவதைவிட வேறெது வந்தாலும் பாதகமில்லை. என்ன விலைகொடுத்தும் அமைதிபெறும் ஆசை பிரிட்டிஷ் ஆட்சியினால் விளைந்த சாபக் கேடாகும். அமைதியின்மையையும், அராஜகத்தையும்விட அத்தகைய அமைதி நாட்டுக்கு அதிக கேடு விளைத்திருக்கிறது. மகாராஷ்டிர, சிக்கிய சாம்ராஜ்யங்கள் ஏற்படுவதற்கு முன்னால் தேசத்தில் குடிகொண்டிருந்த அமைதியின்மை போற்றற்

குரியது; பிரதாபனையும், சிவாஜியையும், துர்க்காதாஸையும் குரு கோவிந்த சிம்மனையும் அளித்த வாழ்க்கை நிலைமை வாழ்த் துதற்குரியது; டபேதார், ஜமேதார், ரிஸல்தார், கெயிஸரி ஹிண்டு பதக்கம் பெற்றோர் ஆகியவர்களைவிட உயர்ந்த மனிதர் களை அளிக்கமுடியாத அமைதி நிலைமை சபித்தற்கே உரியது'' — இதுவே அவர்கள் கொள்கையாகும்.

மேற் கூறிய இரு பிரிவுகளையுஞ் சேர்ந்த தேசீயவாதிகளில் பெரும்பான்மையோர் இத்தகைய கொள்கையுடையவர்களே யாவர். எனினும், இதை முழுதும் ஒப்புக் கொள்ளாத சிலரும் அவர்களில் உண்டு. அரசியல் இயக்கமே பிரதானமான தென்றும், அதன் முக்கியத்தைக் குறைவு படுத்தக் கூடிய காரியம் எதுவும் செய்தல் கூடாதென்றும் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் தேச மக்களின் சிந்தையிலும், செயலிலும் அரசியல் ஒன்றைத் தவிர வேறெதுவும் இடம் பெறக் கூடாதென்னும் கொள்கையை அவர்கள் அங்கீகரிப்ப தில்லை. மேலே கூறியவற்றி லிருந்து இந்திய தேசீய வாதிகள் வருங் காலத்திற் குரிய நிர்மாண வேலை திட்டத்தைப் பற்றிச் சிந்தை செய்யவே யில்லை யென்று தீர்மானித்தல் சரி யன்று. ஆனால் சுதந்திர மின்மையாலும், பகிரங்கமாக விவாதிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் இன்மையாலும், அதைக் குறித்த அபிப்பிராயங் களைக் கலந்து ஒரு திட்டமான முடிவுக்கு வருதல் சாத்திய மில்லை யென்பது வெள்ளிடை மலை.

## அரவிந்த கோஷ் (வேதாந்தி – சுயராஜ்ய வாதி)

மேற்கூறிய இரு வகுப்புகளில் அரவிந்த கோஷ் எதைச் சேர்ந்தவர் என்று கூறுதல் கடினமாகும். அவ்விரு வகுப்பு களில் ஒன்றை அவர் சேர்ந்தவரா என்பதே ஐயத்துக் கிட மானது. வங்காளத் தீவிர வாதிகளில் பெரும்பாலோர் முதல் வகுப்பைச் சேர்ந்தவர்க ளாகவே யிருந்தனர். அரவிந்த கோஷும் அவ் வகுப்பினரே என்று ஒரு காலத்தில் கருதப்

பட்டது. ஆனால் இது உண்மையா, அங்ஙன மெனில் அவர் இன்னும் அதேவிதக் கொள்கை யுடையவரா என்று சொல்ல முடியாது. ஒன்று நிச்சயம். அவர் எண்ணப் போக்கில் ஹரிதயாலுடன் முற்றும் மாறுபட்டவரா யிருந்தார்; இப் போதும் அப்படியே. புலமையிலும், அறிவாற்றலிலும்கூட அவர் ஹரிதயாலுக்கு மேம்பட்டவரா யிருக்கலாம்; ஆனால் அவருடைய ஆழ்ந்த சமயப் பற்றும், பாரமார்த்திக நோக் கமுமே அவரது தனிச் சிறப்புக்க ளாகும். அவர் கிருஷ்ண பக்தர்; ஆத்மத் தூய்மை பெற்ற வேதாந்தி. வாழ்க்கை முறையிலும், வழக்க பழக்கங்களிலும் அவர் ஹரிதயாலையும் விட எளிமையும், தவ வொழுக்கமும் மேற்கொண்டவர். இந்திய தேசீய இயக்கம் எல்லாத் துறைகளிலும் சம வளர்ச்சி பெற்று ஓங்கவேண்டு மென்பது அவருடைய கொள்கை. வாழ்க்கையையும், ஒழுக்க நெறியையும் பற்றிய அவருடைய கொள்கைகள் பெரிதும் ஹிந்து சமயத்தைத் தழுவி நிற்பன வாகும். பாரமார்த்திகத் துறையில் தமது நாட்டார் உலகிற்கே வழி காட்டப் போகிறார்க ளென்று அவர் நம்பிக்கை கொண் டுள்ளார். "ஹிந்து" பத்திரிகையின் நிருபர் சமீபத்தில் அவ ரைக் கண்டு பேசியபோது அவர் தெரிவித்த அபிப்பிராயங் களிலிருந்து அவருடைய கொள்கைகளை நன்கறிந்து கொள்ளலா மாதலின், அவ் விவரத்தை அப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பெற்ற வண்ணம் கீழே முழுதும் வெளியிடு கிறேன் :—

"1914-ம் ஆண்டு காங்கிரஸைப் பற்றியும், மற்ற மகாநாடு களைப் பற்றியும் தங்கள் அபிப்பிராயம் என்ன ?" என்று கேட் டேன்.

அவர் இதற்கு விடை கூறத் தயங்கினாராயினும், பின்னர் தெளிவாகவும் உறுதியாகவும் சொன்னதாவது:— "கிறிஸ்மஸ் வாரத்து மகாநாடுகளின் நடவடிக்கைகள் எனக்கு அதிக சுவை யளிக்க வில்லை; சிரத்தை யூட்டவு மில்லை. சென்ற காலத்திற் குரிய உயிரில்லாத சூத்திரங்களைத் திரும்பத் திரும்பப்

படிப்பது போலவே எனக்கு அவை காணப்பட்டன. வருங் காலத்துக் குரிய ஜீவ சக்தியாம் பெருங் காற்று நம் மீது அடிக் கத் தொடங்கிவிட்ட தென்பதை அம் மகாநாடுகள் உணர்ந்த தாகவே தெரிய வில்லை. காங்கிரஸ் அக்கிராசனரின் உபந்நியா சம் மட்டும் இந்தச் சாதாரண நிலையிலிருந்து பெரிதும் உயர்ந்து நின்றதாக எனக்குத் தோன்றிற்று. அப் பிரசங்கத்தைச் சிலர் பகற் கனவென்றும், அனுஷ்டான சாத்தியமற்ற தென்றும் கருதி யிருத்தல் கூடும். ஆனல் இந்தியாவில் சென்ற சிலகால மாக நிகழ்த்தப்பட்டிருக்கும் உபந்நியாசங்களுக்குள்ளே, இது ஒன்றே உயிர் நிலையைப் பொறுத்ததென்றும், அனுஷ்டான சாத்தியமான தென்றும் நான் எண்ணுகிறேன்."

அவர் மேலும் கூறியதாவது:— "சிறுமை பொருந்திய பழைய சம்பிரதாயங்களும், குறுகிய மனப் பான்மை கொண்ட போலி முயற்சிகளும் இப்போது காலங் கடந்தவை யாகி வரு கின்றன. நம்மைச் சுற்றிலும் உலகம் அதி வேகமாக மாறி வருவதுடன், வருங் காலத்தில் இன்னும் மகத்தான மாறுதல் களுக்கு ஆயத்தம் செய்து வருகிறது. அம் மாறுதல்களுக்கு ஈடு கொடுத்து நாம் உயிர் வாழ வேண்டுமானல் உயரிய எண் ணங்கள் எண்ணி, உயரிய செயல்கள் புரியு நம்மைச் சித்தமாக் கிக் கொள்ள வேண்டும். பழைய சம்பிரதாயமான நடவடிக் கைகளில் எனக்கு அணுவளவும் நம்பிக்கை கிடையாது. ஆனல் அவற்றி னிடையே ஆழ்ந்து பார்க்கும்போது முன்னேற் றத்துக்கும், நம்பிக்கைக்கும் நான் அறிகுறிகள் காண்கின்றேன். சென்ற சில வருஷங்கள் மௌனத்துக்கும் அடக்கத்துக்கும் உரிய வருஷங்க ளாகும், விழிப்புற்றெழுந்த தேசத்தின் வீரிய மும் தேஜஸும் அவ்வாண்டுகளில் ஒருமுகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. வருங் காலத்தில் அவை இன்னும் அபார மான சக்தியுடன் நல் வழியில் செலுத்தப்பட்டு வேலை செய் யும் என்பதில் ஐயமில்லை."

ஸ்ரீ அரவிந்தர் மீண்டும் உரைத்ததாவது :— "நாம் முப்பது கோடி ஜனங்கள். எவ்வளவோ நாகரிகங்கள் சந்தித்துக்

கலந்த பெரியதொரு நாட்டில் நாம் வசிக்கிறோம். வேலை செய்ய வசதிகளும், பயன்படுத்தப்படாத ஆற்றல்களும் இங்கே நிரம்பியிருக்கின்றன. இத்தகைய நாட்டாராகிய நாம் ஒரு சிறு கிராமவாசிகளைப் போல் சிந்திப்பதையும், காரியம் செய்வதையும் நிறுத்திவிடவேண்டும்.''

''தற்போது அனுசரிக்கப்படும் அரசியல் முறைகளை நீங்கள் விரும்பாவிட்டால், நமது இலட்சியத்தை அடைவதற்கு வேறு என்ன முறை கையாளவேண்டுமென்று சொல்கிறீர்கள் ?'' என்று நான் வினவினேன்.

அவர் உடனே கூறியதாவது :—''அறிவாராய்ச்சித் துறையிலும், பாரமார்த்திகத் துறையிலும் தேசமெங்கும் புத்துயிர் உண்டாவதனால் மட்டுமே நமது நாட்டார் தங்களுக்குரிய உந்நத நிலையை யடையமுடியும். வரம்புக்குட்பட்ட நமது விஷய ஞானமும், பிறரைச் சார்ந்துள்ள அறிவு முயற்சிகளும், குறுகிய வாழ்க்கை நோக்கங்களும், பணஞ்சேர்க்கும் அற்பப் பிரயத்தனங்களும் உலகின் விரிந்த வாழ்க்கையில் நாம் பிரவேசிக்கமுடியாமல் செய்துவருகின்றன. அதிர்ஷ்டவசமாக இந் நிலைமையில் மாறுதல் ஏற்பட்டுவருகிறதென்பதற்கு அறிகுறிகளைக் காண்கிறோம். விசாலமான வாழ்க்கை நோக்கமும், உயரிய அறிவு முயற்சிகளும், சிறந்த மேதாவிலாசத்தின் அறிகுறிகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. தற்காலத்தில் எந்த தேசமும் அரசியலினால்மட்டும் பூரண வளர்ச்சிபெற முடியாது. தேசிய வாழ்க்கை ஜீவசக்தி பொருந்திச் சிறந்தோங்கவேண்டுமானால் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் உந்நத முயற்சிகள் தீவிரமாக நடைபெறவேண்டும். இந்த நோக்கத்துடன் பார்த்தால், சென்ற ஐந்தாண்டுகள் தேசத்திற்குப் பெருநன்மை செய்திருக்கின்றன என்று சொல்லலாம்.''

பின்னர், நமது தேசத்திலும் பிற நாடுகளிலும் பிரிட்டிஷாருக்கும் இந்தியருக்குமிடையே நேயபாவம் அதிகமாகியிருப்பது குறித்து அவருடைய அபிப்பிராயம் யாதென்று

கேட்டேன். "அது மிகவும் நல்லது" என்று அவர் பதிலளித்துப் பின்னர் தமது கருத்தை விளக்கினர் ;— "மனித சமூகத்தின் மற்றப் பகுதிகளினின்றும் தனித்து நின்று நமது தேசிய ஒருமை இலட்சியத்தை அடையவேண்டுமென்பது 1905-ம் ஆண்டிலிருந்து 1910-ம் ஆண்டுவரையில் நமது முயற்சிகளுக்கு அடிப்படையான நோக்கமாயிருந்தது. அவ் வியக்கத்தின் நோக்கம் ஒருவாறு நிறைவேறிவிட்டது. வருங்காலத்துக்கு அது நல்ல அடிப்படை அமைத்திருக்கிறது. அக் காலத்தில் நமது பேச்சிலும் செயல்களிலும் நேர்ந்த மிகைகளுக்கும், தவறுகளுக்கும் காரணம், நமக்கு அநுபவ ஞானம் இல்லாதிருந்ததே யாகும்.

"இந்தியாவின் தேசிய ஒருமை இலட்சியம் இப்போது ஜனங்களின் உள்ளத்தில் நிலைபெற்றுவிட்டதல்லாமல் ஐரோப்பாவிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அரசாங்கமும், ஆளும் ஜாதியாரும்கூட அந்த இலட்சியத்தை அங்கீகரித்திருப்பதாய்ச் சமீப காலத்துப் பேச்சுகளிலிருந்து வெளியாகின்றது. இனி நாம் நமது இலட்சியத்தைச் சிறிது மாற்றிக்கொள்ளவேண்டும். மற்ற ஜனங்களிடமிருந்து தனித்து நில்லாமல், மக்கட் குலத்தின் ஒரு பகுதியாக நின்று தேசிய உந்நதமடைவதே நமது புதிய இலட்சியமாக இருத்தல் வேண்டும். இந்தியா தனக்குள்ளே தேசிய ஒற்றுமை நிலை நாட்டியபின்னரும், சர்வ தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் பொருட்டு வேலைசெய்ய வேண்டியிருக்கும்."

இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷாரின் மனோபாவம் மாறியிருப்பதைக் குறித்து உதவி இந்தியா மந்திரி பேசியிருப்பதை இவ்விடத்தில் நான் குறிப்பிட்டேன். ஸ்ரீ அரவிந்தர் கூறியதாவது;— "சாம்ராஜ்ய மந்திராலோசனையில் இந்தியாவுக்குரிய இடத்தைப்பற்றி பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் சிந்திக்கத் தொடங்கியிருப்பது மிகவும் நன்றே யாகும். இந்தச் சிந்தனை செயலில் வருமானல், அதி தீவிர வாதிகளின் மனப் பான்மை

யில்கூட மாறுதல் ஏற்பட்டு, அரசியல் நிலைமை பெரிதும் அபி விருத்தி யடையும் என்பதில் சந்தேகமில்லை.''

''ஆனால் இந்தியர்கள் வேறொரு விஷயத்தைப் பற்றிச் சிரத்தையுடன் சிந்திக்கத் தொடங்குதல் இதைப்போலவே அவசியமாகும். மக்கட் குலத்தினுடைய பொதுவாழ்வின் முன்னேற்றத்துக்கு இந்தியாவின் அறிவும், பாரமார்த்திகமும், நாகரிகமும், தேசிய வாழ்வும் எத்துணை தூரம் துணை செய்யப் போகின்றன? மக்கட் குலம் நாளுக்கு நாள் வளர்ச்சிபெற்றுக் கொண்டே போகுமென்பதில் சந்தேகமில்லை. நாமும் மக்கட் குலத்தினுள் அதன் ஒரு பகுதியாக இருந்தே தீரவேண்டும். பிரிந்து நிற்கும் மனப்பான்மையும், அசூயை கொண்ட தற்காப்புச் சிந்தனையும் உதவா. மாந்தர் எல்லாரிடமும், எல்லாத் தேசத்தாரிடமும் சகோதர பாவங்கொண்டு தாராள மனோ பாவத்துடன் முன்னேற்ற முயற்சியில் போட்டியிடவேண்டும். இத்தகைய முன்னேற்றத்துக்கு நமது வலிமையிலும், நமது நாட்டின் வருங்கால மகோந்நதத்திலும் நாம் கொள்ளும் நம்பிக்கையே ஆதாரமாயிருத்தல் கூடும். இந்தியர்களின் புதிய இலட்சியம் இத்தகையதாயிருத்தல் வேண்டும்.''

மக்கட் குலத்தின் ஒருமையைக் குறித்துப் பேசுவதில் ஸ்ரீ அரவிந்தர் மிக்க பிரேமை கொண்டிருக்கிறார். ஆதலின், வேதாந்தக் கொள்கைகள் மக்கட் குலத்தின் ஒற்றுமைக்கு நல்ல அடிப்படையாதல் கூடுமென்று நான் சொன்னபோது அவர் உற்சாகம் ததும்பப் பதில் உரைத்ததாவது:— ''ஆம், ஆம். பாரமார்த்திகத் துறையில் நாம் கண் விழித்தல் நமது தேசிய மேன்மைக்கு இன்றியமையாத தாகும். நெடுங்காலமாக நான் இவ்வுறுதி பெற்றிருக்கிறேன். மாந்தர் யாவரும் இறைவனிடத்தில் ஒன்றுகிறார்கள் என்னும் மகத்தான தத்துவம் பாரதநாட்டில் எழுந்தது. இத்தத்துவமும், அதை நினைப்பிலும் செயலிலும் சமுதாய வாழ்க்கையிலும்கூட அநுபவத்தில் கொண்டுவருவதுமே வருங்காலத்தில் மனித ஜாதியின் முன்னேற்றத்துக்குச் சாதனங்களா யமையப் போகின்றன.

இது எனது திடமான நம்பிக்கை. இந்தியாவிற்கு விருப்ப மிருந்
தால் அது உலகிற்கே குரு பீடம் வகிக்கலாம் என்ருர்.''

இச்சமயத்தில் நான் நமது 'நாலாயிரம் சாதி' களைப் பற்றி
யும், உடையணிவதிலும், நெற்றியில் தரிக்கும் சமய சின்னங்
களிலும் நமக்குள் இருக்கும் வேற்றுமைகளைப் பற்றியும், இழி
வான வகுப்புப் பகைமைகளைப் பற்றியும் ஏதோ கூறினேன்.

ஸ்ரீ அரவிந்தர் அப்போது புன்னகை புரிந்து சொல்லியதா
வது:— ''தயவுசெய்து அவ்வளவு கடுமை வேண்டாம். நமது
சமூக ஏற்பாடு விரைவில் பெரிதும் மாற்றப்பட வேண்டு மென்
பதை நான் ஒப்புக்கொள்கிறேன். நமது குடும்ப வாழ்வையும்,
சமூக வாழ்வையும் விசாலிக்கச் செய்தல் அவசியமே. ஆனுல்
தற்கால சமூக சீர்திருத்தக்காரர்களின் குறுகிய நோக்கத்துடன்
அன்று. அவர்கள் சின்ன விஷயங்களைப் பெரிது படுத்துகிருர்
கள். நமது பண்டை வாழ்வைச் சிறுமைப் படுத்துகிருர்கள்.
இவை சரியல்ல. விசால புத்தியுடனும், தாராள நோக்கத்துட
னும் நாம் சமூக புனர் நிர்மாண வேலையில் ஈடுபடவேண்டும்.
சென்றுபோன காலத்தில் தவறுகள், குறைபாடுகள் எவ்வளவு
நிகழ்ந்திருப்பினும் நமது பண்டை வாழ்வைப் புனித முடைய
தாகவே நாம் கருதவேண்டும். ஆனுல் வருங்காலத்திற் குரிய
நமது கடமைகளை இன்னும் அதிக புனிதமானவை யென்று
எண்ண வேண்டும்.''

முடிவாக அரவிந்தர் ஆத்ம தாகத்துடன் கூறிய மொழிகள்
வருமாறு:— ''பாரதநாடு தத்துவ விசாரணையிலிருந்து சிறிது கீழி
றங்கி வாழ்க்கையுடன் தொடர்பு கொள்ளுதல் தற்போது
மிகவும் அவசியமாகும். இந்தியாவின் பாரமார்த்திகம் குகையி
லிருந்தும, கோயிலிலிருந்தும் வெளிக்கிளம்பி வந்து, புதிய
நிலைமைகளுக் கேற்பப் புதிய வடிவங்கொண்டு உலக வாழ்க்
கையில் பயன் தரவேண்டும். புதிய அறிவினுலும், புதிய சக்தி
களினுலும் மனித சமூகத்தின் வாழ்க்கை வருங்காலத்தில் இன்
னும் விசாலிக்கப் போகிற தென்று நான் நம்புகிறேன். பத்தொன்
பதாம் நூற்ருண்டில் பூத பௌதிக ஆராய்ச்சியினுல் மனித

வாழ்க்கையில் ஏற்பட்ட புரட்சியை விடப் பெரிய தொரு புரட்சி இனி உண்டாகப் போகின்றது. இவ்வாறு மனித குலம் அடைய விருக்கும் வருங்கால மேன்மைக் குரிய மூல மந்திரத்தை இந்தியா தன்னுடைய பண்டை வாழ்வில் பெற்றிருக்கிறது. ஆனால் அம் மந்திரம் நெடுங்காலமாக உரு வேற்றப் படாத காரணத்தினால் தன் சக்தி குன்றப் பெற்றிருக்கின்றது.

"சில காலமாக மேற்கூறிய துறைகளில் என் ஊக்கத்தைச் செலுத்தி வருகிறேன். தற்போது நமது தேசீய வாழ்வில் அற்ப அரசியல் முயற்சிகளுக்கே இடமிருக்கிறது. அவற்றில் ஈடுபட மன மில்லாமையினால்தான் நான் சிறிது காலமாக விலகி நின்று தனித்திருக்கிறேன். இத்தகைய காலங்களில் இது போன்ற பெரு நோக்கங்களுக்காகத் தவம் புரிவதில் எனக்கு நம்பிக்கையுண்டு. ஆத்மப் பயிற்சிக்காக, ஆத்ம ஞானத்திற்காக, ஆத்ம சக்தி சேகரித்துக் கொள்வதற்காக மௌனத் தவம் செய்தல் அவசியம். நமது முன்னோர் வெவ்வேறு முறையில் இச்சாதனத்தைக் கையாண்டார்கள். உலகின் வருங்காலம் மகா முக்கியம் வாய்ந்ததா யிருக்கப்போகிறது. அக்காலத்தில் திறமையாகத் தொண்டியற்றும் ஆற்றல் பெறுவதற்குத் தவமே சிறந்த சாதனமாகும்."*

## விநாயக தாமோதர சாவர்க்கர்

இவ்விடத்தில் மற்றொரு தேசீய வாதியின் பெயரைக் குறிப்பிடவேண்டும். இங்கிலாந்தில் வசித்த இந்திய இளைஞர்களிடையே பல வருஷ காலம் அவர் மிகுந்த செல்வாக்கு வகித்தவர். அவர் பெயர் விநாயக தாமோதர சாவர்க்கர். தற்போது

*இந்நூல் எழுதப்பட்ட நாளிலிருந்து அரவிந்தர் ஏகாந்த வாழ்க்கை நடத்தி வருகிறார். அவர் யோகாப்பியாசம் செய்து வருவதாகச் சொல்கிறார்கள். இந்திய அரசியலைக் குறித்து அவருடைய தற்போதைய அபிப்பிராயம் யாருக்கும் தெரியாது.

அவர் அந்தமான் தீவில் ஆயுள் கைதியாக இருந்துவருகிறார்.* அரவிந்த கோஷையும், ஹரி தயாளையும் போல் சாவர்க்கரும் எளிய வாழ்க்கை மேற்கொண்டவர். தூய ஒழுக்கத்தில் அவ் விருவரையும் போலவே அவர் தலைசிறந்தவர். அரசியலில் அவர் முதல் வகுப்பைச் சேர்ந்தவரென்றாலும், அவ் வகுப்பா ருக்குரிய சமய பக்தி அவருக்குக் கிடையாது. பொது விஷயங் களில் அவர் ஏறக்குறைய ஹரி தயாளின் அபிப்பிராயங்களையே கொண்டவர். ஆனால் அரசியலல்லாத வேறு துறைகளில் ஈடு பட்டிருந்தவர்களை ஹரி தயாள் கண்டித்தது போல் இவர் கண் டிப்பதில்லை. ஜனத் தலைவர் ஒருவருக்கு அவசியமான நனி சிறந்த குணாதிசயங்கள் சாவர்க்கரிடம் இருந்தன. தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்னும் கவலையே அவருக்கு அணுவளவும் கிடையாது. அபாயமான இடத்தில் தாம் முன் சென்று நிற்கும் பழைய நாள் வீரர்களின் தீரம் அவரிடம் இருந்தது. அபாயத்தை இலட்சியம் செய்யாத இத்தகைய துணிவின் காரணமாகவே அவர் பிடிபட்டார். ஹரி தயாள் எப் போதும் பின்னணியில் நின்று தனக்கு அபாயம் நேராமல் பார்த் துக்கொண்டார். அரவிந்தர் இவ்விருவருக்கும் இடையிலிருந் தார் என்று கூறலாம்.

## பயங்கர வாதிகள்

பூரண சுதந்திர விருப்பங் கொண்டவர்களாயினும் சமீபத் தில் அது கிடைக்குமென்னும் நம்பிக்கை யற்றவர்கள், தேசிய வாதிகளில் மூன்றாம் வகுப்பினராவர். எதிரிகளுக்குப் பீதியை உண்டாக்கும் பொருட்டு அவ்வப்போது வெடிகுண்டையும் சுழற்றுப்பாக்கியையும் உபயோகித்தலை இவர்கள் ஆதரித்தார் கள். அக்காலத்தில் விடுதலை இயக்கப் பிரசாரம் செய்வதற்கு

*சில காலத்துக்கு முன்பு தேகநிலையை முன்னிட்டு சாவர்க்கர் விடுதலை செய்யப்பட்டார். தற்போது இரத்தினகிரி ஜில்லாவில் போலீஸ் மேற்பார் வையில் வசித்துவருகிறார். அந்த ஜில்லாவை விட்டு அவர் வெளியேறக் கூடாது. இப்போது அவர் இலக்கியத் துறையில் ஈடுபட்டுள்ளார். இந்திய அரசியலைப்பற்றி அவர் கருத்துக்கள் பெரிதும் மாறுதல் அடைந்திருக் கின்றன.

வேறு வழி எதுவுமே இல்லாமற் செய்யப்பட்டிருந்தது. பத்திரிகைகள் வாய்ப் பூட்டு இடப் பெற்றிருந்தன. பேச்சுரிமைக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தையும் அதன் முறைகளையும் பலமாகக் கண்டித்துத் தீவிரமான அரசியல் பிரசாரம் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அன்னிய ஆட்சியினுல் அரசியல் துறையிலும் பொருளாதார நிலைமையிலும் ஏற்பட்டிருந்த பெருங் கேடுகளை எவரும் சுட்டிக் காட்டுதலும் கூடாது. எனில், புள்ளி விவரங்களையும் பிற ஆதாரங்களையும் எடுத்துக்காட்டி அவை குறித்து விவாதித்தல் எங்ஙனம் இயலும்? பிரிட்டிஷ் அரசாங்கத்தார்·இந்தியாவைத் தங்கள் ஆதீனத்தில் அடக்கி வைத்திருப்பதின் மூலம் இழைத்து வரும் பெரும் அநீதியை தேசமக்களுக்கும் வெளிநாட்டு ஜனங்களுக்கும் ஞாபகப்படுத்த வேறு வழி எதுவு மில்லாமலிருந்தது. ஆகவே தங்கள் அதிருப்தியை வெளியிடுவதற்கும், தங்களுடைய ஆண்மையையும் சுதந்திரப் பற்றையும் மெய்ப்பிப்பதற்கும் அவ்வப்போது வெடிகுண்டு, துப்பாக்கி உபயோகிப்பதே உபாயமென்று அவர்கள் கருதினுர்கள். அவ்வுபாயம் உலகெங்குமுள்ள ஜனங்களின் கவனத்தைக் கவர்ந்தது; அவர்களை இந்தியாவைப் பற்றிச் சிந்திக்கும்படி செய்தது; தேச மக்களுக்கும் அரசாங்கம் இழைத்துவரும் அநீதிகளைக்குறித்து நினைவூட்டிற்று. முதலில் ஜனங்கள் திடுக்கிட்டுப்போனுர்கள்; பின்னர் சிந்தனை செய்யத் தொடங்கினுர்கள். இந்தியரின் வாழ்க்கையில் வெடிகுண்டு ஓர் இடம் பெற்றுவிட்டது. அது என்றைக்குமே அவர்கள் வாழ்க்கையில் நிலைத்துவிடுமா வென்று சொல்வதற்கில்லை. ஜனங்கள் வெடிகுண்டை அடியோடு அருவருக்கிருர்கள்; ஆனுல் வரவர அது அவர்களுக்குப் பழகிப்போய் வருகிறது. வெடிகுண்டு எறிபவர்களை ஆரம்பத்தில் வெறுத்த அளவுக்கு இப்போது அவர்கள் வெறுப்பதில்லை.

## நிர்மாண தேசீயவாதிகள்

**பூ**ரண சுதந்திரத்தையே நோக்கமாகக் கொண்டவர்களாயினும் அதை உடனே விரும்பாத தேசீயவாதிகள் நாலாம்

வகுப்பைச் சேர்ந்தவராவர். புரட்சிக் கொடியை உயர்த்துவ
தற்கு முன்னால் தேசமக்களனைவரையும் ஒரே சமுதாயமாக
நிர்மாணம் செய்யவும், அவர்களுடைய அறிவாற்றலையும்
ஒழுக்க வன்மையையும் வளர்க்கவும், பொருளாதார முன்
னேற்றம் உண்டுபண்ணவும் அவர்கள் விரும்புகிறார்கள்,
ஆங்கிலேயர் மனமுவந்து தங்களுக்கு விடுதலையளிப்பார்கள்
என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது. பெரிதும்
கட்டாயப் படுத்தப்படினன்றிக் குடியேற்ற நாட்டுச் சுயாட்சி
கூட அளிக்கப்பட மாட்டாதென்று அவர்கள் கருதுகிறார்கள்.
எந்த நாட்டாரும் தம் கைக்கீழ் ஒருமுறை வந்தவற்றை,
தங்கள் பாதுகாப்புக்கே அவசியமானாலன்றி, ஒருபோதும்
நழுவவிடமாட்டார்க ளென்பது அவர்கள் நம்பிக்கை. காங்
கிரஸும், வெடிகுண்டும் உரிய காலத்திற்கு முன்னர் தோன்றி
விட்டன என்று அவர்கள் நினைக்கிறார்கள். தற்போதைக்கு
ஜன நிர்மாணவேலையிலும், கல்வி பரப்பும் தொண்டிலும் தேசம்
ஒருமுகமாக ஈடுபடவேண்டுமென்பது அவர்கள் விருப்பம்.

இந்திய மக்கள் போதிய வலிமைபெற்று, தாங்களாகவே
ஆங்கிலேயரை நாட்டிலிருந்து துரத்தவும், பின்னர் பிற அயல்
நாடுகளின் ஆக்கிரமிப்பைத் தடுத்துநின்று தங்கள் சுதந்திரத்
தைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஆற்றல்வாய்ந்தவர்களாவ
தற்கு முன்னால் ஆங்கிலேயர் இந்தியாவை விட்டுப் போவது
அவர்களுக்கு விருப்பமில்லை. இதற் கெதிராக, இந்தியர் இத்
தகைய வலிமை பெறுமாறு ஆங்கிலேயர் பார்த்துக்கொண்
டிரார் என்றும், நாளாக ஆக ஜனங்கள் விடுதலை அவாவையே
முற்றும் இழந்து இச்சகம் பேசிப் பிழைப்பவர்களாகிவிடக்
கூடுமென்றும் சொல்லப்படும் வாதங்களை அவர்கள் அறிவார்
கள். ஆனால் தேசிய மென்னும் தீ அணையாமல் பார்த்துக்
கொள்வதினாலும், அவ்வப்போது தேசத்திற்காகத் துன்ப
மநுபவிப்பதனாலும் மேற்கூறிய விபத்து நேராமல் தடுத்து
விடலாமென்று அவர்கள் நினைக்கிறார்கள். இவ்வளவுதூரம்
அவர்களை மடக்கிக் கேட்கும் பட்சத்தில், காங்கிரஸும், வெடி

குண்டும் தோன்றிவிட்டபடியால் அவை இருந்துவிட்டுப் போகட்டும் என ஒப்புக்கொள்வார்கள். இவை இரண்டும் அதததன் அளவில் உபயோகமானவையே என்று கருதுவோர் சிலரும் உண்டு. வெடிகுண்டு, துப்பாக்கிகளின் உபயோகத்தை அவர்கள் ஆதரிக்கமாட்டார்கள். அவற்றைக் கையாள வேண்டாமென்று உண்மையாகவே போதனையும் செய்வார்கள். ஆனால் அப்படியும் அவை உபயோகிக்கப் பட்டால் குற்றவாளிகள் இன்னாரெனத் தங்களுக்குத் தெரிந்த போதிலும் அவர்களைக் காட்டிக்கொடுக்க மாட்டார்கள். இந்த நிர்மாண தேசீயவாதிகள் சுயநலமற்ற சமூக சேவையில் பூரண நம்பிக்கைகொண்டவர்கள்; அரசியல் புரட்சியில் தலையிடுவதற்கு முன்னால் ஜனங்களை அணுகி அவர்களை அன்பினாலும், தொண்டினாலும் வசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்னும் கருத்துடையவர்கள்.

"ஜனங்களின் உதவியில்லாமல் எந்த வேலையும் சாத்தியமில்லை. சுதந்திர முயற்சியில் ஜனங்கள் நம்மை ஆதரித்து நிற்கவேண்டுமானால், மனப்பூர்வமாக நாம் அவர்களிடத்தில் அன்புகொண்டு அவர்களுடைய நன்மையைக் கோருவதாகவும், சுயநல நோக்கம் நம்மிடம் அணுவளவும் கிடையாதென்றும், அன்னிய ஆளும் இனத்தாரைக்காட்டிலும் நாம் எல்லா அம்சங்களிலும் சிறந்தவர்கள், யோக்கியர்கள் என்றும் அவர்களுக்கு ஐயமற நிரூபித்துக் காட்டவேண்டும். வரப்போகும் அரசியல் போராட்டத்தில் ஜனங்கள் நமக்குத் துணை நிற்கவேண்டுமானால், அன்னிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளை விட நாம் ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் என்னும் எண்ணம் அவர்கள் உள்ளத்தில் நிலைபெற்றுவிடவேண்டும்" என்று மேற்படி நிர்மாண தேசீயவாதிகள் கூறுகிறார்கள். காங்கிரஸ் பிரசாரத்தினால் விளையும் பயன் ஜனங்களின் அறிவுவளர்ச்சி ஒன்றே என்பது அவர்கள் அபிப்பிராயமாகும். பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளின் காருண்ய நோக்கத்தில் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது. காங்கிரஸ் பெரிய காரியம் எதுவும்

சாதித்துவிடும் என்னும் நம்பிக்கையும் அவர்களுக்கில்லை. வருங்காலத்தைப் பற்றி எதுவும் நிச்சயமாய்ச் சொல்லமுடியாதென்பது அவர்கள் கொள்கை. எனவே, கல்வியைப் பரப்புவதிலும், சமூக சேவையிலும் ஈடுபடுவதே சிறந்த வழி என்று அவர்கள் கருதுகிறார்கள். அவர்கள் கனவு காண்பவர்கள் அல்லர்; இலட்சிய வாதிகளல்லர்; காரியவாதிகளான தேச பக்தர்கள். நிலத்தை உழுது வளம்படுத்தி விதை விதைப்பதுடன் அவர்கள் திருப்தியடைவார்கள். வருங்காலத்தைப் பற்றி அறியும் தீர்க்கதரிசனம் தங்களுக்கில்லை யென்றும், ஆதவின் வெடி குண்டு, கைத் துப்பாக்கிகளினால் ஜனங்களின் ஒழுக்க நிலையில் விளையக்கூடிய கேடுகளைக் குறித்து அஞ்சுவதாகவும் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அரசியல் கொள்கைகளை நியாயமென்று ஸ்தாபிக்கவும் அவர்கள் சித்தமாயில்லை. இந்தத் தடவை நாம் சுதந்திரம் பெற்றால் திரும்ப எப்போதும் அதை இழந்துவிடாமல் பாதுகாக்க வேண்டுமென்றும், ஒரு சிலருடைய முயற்சியினாலன்றி தேச மக்களின் ஒருமுகமான முயற்சியினால் சுதந்திரம் அடைந்தால்தான் அது சாத்திய மென்றும் அவர்கள் கருதுகிறார்கள். இதற்கிடையில் அவர்கள் பொறுமையாகத் தேச நிர்மாணவேலை செய்வதுடன் திருப்தியடைந்திருப்பார்கள்.

காங்கிரஸ் தோல்வியுற்றதின் காரணம், அதிகாரிகளிடமிருந்து அரசியல் அநுகூலங்கள் பெற முயன்றதேயாகுமென்று இக் கூட்டத்தார் கூறுகின்றனர். கீழிருந்து வேலை செய்துகொண்டு போவதே சிறந்த முறையென்பது அவர்களுடைய கருத்து. 'யாசகப் பிழைப்'பில் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது. அரசியலில் 'காருண்யம்', 'பரோபகாரம்' என்பவை யெல்லாம் வெறும் பேச்சு என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் தீவிரவாதிகளின் முறைகளைமட்டும் அவர் ஒப்புக்கொள்வதில்லை. தேச மக்கள் திடசித்தமும், அறிவு வன்மையும் நாளடைவில் நிதானமாகவே பெறவேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். குறுக்கு வழிகளில் அவர்

களுக்கு நம்பிக்கை கிடையாது. சமூக சீர்திருத்த மகாநாடுகளிலும், பிற மகாநாடுகளிலும் பிரபலமாய் விளங்கும் 'வாய்ச் சொல் வீரர்'களான தேச பக்தர்களுடன் இவர்களைச் சேர்த்து விடக் கூடாது. ஆங்கிலத்தில் வாக்கு வன்மையுடன் நீண்ட உபந்நியாசம் செய்யும் ஆற்றலைக்கொண்டும் இவர்களை மதிப்பிடக்கூடாது. பொதுவாக இவ் வகுப்பார் அடக்கம் வாய்ந்தவர்கள். புலமையிற் சிறந்தவர்களென்றோ, இராஜ தந்திர நிபுணர்களென்றோ சொல்லிக்கொண்டு அவர்கள் முன்வருவதில்லை. அரசாங்கத்தினிடமிருந்தோ, ஜனங்களிடமிருந்தோ பாராட்டுதல் பெறுவதற்கும் அவர்கள் முயலுவதில்லை. தங்களுடைய சொந்த மனச் சான்றின் திருப்தியும், தொண்டு செய்யும் உரிமையுமே அவர்கள் கோரும் வெகுமதிகளாகும்.

பாரத ஜன சமூகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இத்தகையோரைக் காணலாம். எல்லா மதங்களிலும், எல்லாக் குலங்களிலும் இவர்கள் இருக்கிறார்கள். எளிய உணவு அருந்தி, எளிய ஆடை புனைந்து, எளிய வீடுகளில் இவர்கள் வாசம் செய்கிறார்கள். இவர்கள் பொருள் தேடுவதெல்லாம் ஏழைகளுக் கீவதற்கே. தொண்டு செய்வதற்கென்றே இவர்கள் உயிர் வாழ்கிறார்களெனக் கூறலாம். வங்காளத்தில் நாடுகடத்தப் பட்டவர்களில் சிலர் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள். பிரம சமாஜம், ஆரிய சமாஜம், இராம கிருஷ்ண சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலோர் இவ்வகுப்பினரே யாவர். இவர்கள் தொகையில் மிகுந்தவர்க ளல்லரெனினும், அவர்களைப் பின்பற்றுவோர் ஏராளமாக இருக்கின்றனர். தத்தம் கூட்டத்தாருக்குள்ளே அவர்கள் பெயர் பிரசித்தி பெற்றிருக்கும். ஆனால் வெளி ஜனங்களுக்குத் 'தீவிர வாதி'களையும், 'மித வாதி'களையும் பற்றித் தெரிந்திருக்கு மளவு அவர்களைப் பற்றித் தெரியாது. அரசாங்கத்தின் இரகசியப் போலீஸ் இலாகா அவர்களை எப்போதும் கண்காணித்து வருகிறது. அவர்களுடைய நடவடிக்கைகளையும், போக்கு வரவுகளையும் பற்றி அதிகாரிகள் எப்போதும் தெரிந்து வைத்துக் கொள்கின்றனர். இவ்வகுப்பார்

எவ்வித இடையூறு மின்றித் தங்கள் வேலையை அமைதியாக வும், ஆடம்பர மின்றியும் செய்யவே விரும்புகின்றனர். ஆனல் அரசாங்கம் அவர்கள் ஏதோ ஆழ்ந்த சூழ்ச்சிகளும், இரகசிய பிரசாரமும் செய்வதாகச் சந்தேகிக்கின்றபடியால் அவர்களைச் சும்மா விடுவதில்லை.

## மித வாதிகள்

கடைசியாக, மிதவாதிகளைப் பற்றி நாம் கவனிக்க வேண்டும். இவர்களில் சிலர் வெடிகுண்டு, துப்பாக்கிகளின் உபயோகத்தை ஆதரிக்கமாட்டார்கள்; ஆனல் தீவிரக் கட்சி அடியோடு மறைய வேண்டு மென்றும் விரும்பார்கள். அவ்வப் போது வெடிகுண்டும், துப்பாக்கியும் கையாளப் படுவதினல் இந்த மித வாதிகளுக்கு அதிக முக்கியம் ஏற்பட்டு வருகிறது. இதை இழந்துவிட அவர்களுக்குப் பிரியமில்லை. அவர்களு டைய பிரசாரத்திற்குப் பொது ஜனங்களின் ஆதரவு கிடை யாது; அவ்வாதரவைப் பெற நியாய முறையில் முயற்சிசெய்ய வும் அவர்களால் முடியாது. ஒன்று அவர்கள் அவ்வளவு பிரயத் தனம் செய்ய ஆற்றலில்லாத சோம்பேறிகளா யிருப்பார்கள்; அல்லது சுயநலங் காரணமாக அதிலுள்ள அபாயத்துக்குத் துணிய விருப்ப மில்லா திருப்பார்கள். ஆதலின் அரசாங்கத் துக்கும், ஆங்கிலப் பொது மக்களுக்கும் தங்களுடைய முக்கி யத்தைப் பெரிதும் மிகுதியாக்கும் ஒரு தீவிரக் கட்சி இருப்பது குறித்து அவர்கள் மனப்பூர்வமான மகிழ்ச்சி கொண்டுள்ளார் கள். ஆனல் இம்மகிழ்ச்சியை அவர்கள் வெளியிட்டுச் சொல்வ தில்லை யென்று கூறவேண்டிய தில்லையன்றே? வெடிகுண்டை யும், துப்பாக்கியையும் அவர்கள் மனப்பூர்வமாக வெறுப்பது உண்மைதான். எனினும், தீவிரக் கட்சி அடியோடு அழிக்கப் படின் அவர்கள் பெரிதும் வருத்த முறுவார்கள் என்பதில் சந் தேகமில்லை.

## கோகலே

காங்கிரஸ்காரர்களுக்குள் மிகச்சிறந்த பகுதியினரின் பிரதிநிதியாக ஸ்ரீ கோகலே விளங்கினர். அவர் தாய் நாட்டை

இதய பூர்வமாக நேசித்தார். தேசத்துக்காகவே உயிர் வாழ்ந்து தேசத் தொண்டிலேயே தமது வாழ்ளைக் கழித்தார். பிரசித்தி பெற்ற காங்கிரஸ் வாதிகளுக் குள்ளே தாய் நாட்டுக்காகவே உயிர் வாழ்ந்து, தாய்நாட்டின் தொண்டில் உடல், பொருள், அறிவு, ஆற்றல் அனைத்தையும் ஈடுபடுத்தியவர் தாதாபாய் நௌரோஜிக்கு அடுத்தபடியாக அவர் ஒருவரே யாவர். அவர் பெரிதும் எளிய வாழ்க்கை நடத்தினர். அவருடைய தேசபக்தி மிக உயரிய தரத்தைச் சேர்ந்ததாகும். எனினும் வீரனுக விளங்குவதற்குரிய குணுதிசயங்கள் அவரிடம் இல்லை. இராஜதந்திரிக்கு வேண்டிய அம்சங்கள் அவரிடம் இருந்தன; ஆனல் தளபதிக்கு அவசியமான குணங்கள் அவர் பெற்றிருக்கவில்லை. தமது அரசியல் முறையை 'யாசக முறை' என்று ஜனங்கள் கூறுவதை அவர் ஆட்சேபித்தார். தமது அரசியல் இலட்சியங்களைக் குறித்து யாராவது குறை கூறினுலும் அவர் பொறுப்பதில்லை. அத்தகையோருக்கு மிகவும் உருக்கத்துடன் அவர் பின்வருமாறு பதிலளிப்பது வழக்கம்:— "நண்பரே! எங்களுக்குச் சுயமரியாதையே கிடையாதென்று நினைக்கிறீரா? நமது நாடு அன்னியர் ஆட்சியில் இருப்பது குறித்து மகிழ்ச்சி யடையும் வண்ணம் நாங்கள் அவ்வளவு இழிந்தவர்கள் என்று எண்ணுகிறீரா? ஒரு நாளுமில்லை. நீர் அப்படி நினைத்தால் எங்களுக்குப் பெரும் அநீதி செய்கிறீர், இயலுமானல் என் தேசம் இன்றைய தினமே சுதந்திரமடைய வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம். ஆனல் அது சாத்தியமா என்பதே கேள்வி. அவ்விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு நாம் வேலை செய்ய முடியுமா? அரசியல் துறையில் காரிய சாத்தியமானது எது, எது காரிய சாத்தியமன்று என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். நமது வருங்கால சந்ததிகளை நாம் எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக் கூடாது. அவர்கள் இப்படித்தான் போக வேண்டுமென்று கட்டுப்படுத்தி விடநமக்கு என்ன உரிமை இருக்கிறது? எங்களுடைய காலத்தில் நாங்கள் எந்த வழி நல்லது, காரிய சாத்தியமானது என்று கருதுகிறேமோ அந்த வழியைக் கடைப்பிடிக்கிறேம். நாங்கள் பிச்சைக் காரர்களல்லோம். எங்கள் முறையும்

யாசக முறையன்று. அன்னிய இராஜாங்கத்தின் சபையில் எங்கள் ஜனங்களின் தூதர்கள் நாங்கள். அங்கு எங்கள் தேசத்துக்குப் பாதகமான காரியங்கள் நிகழாமல் பாதுகாப்பதும், கூடுமான வரையில் நாட்டிற்கு நன்மை தேடிக்கொள்வதும் நாங்கள் செய்யும் வேலை. இதுவே எங்கள் நிலைமையாகும்" என்பார். சாதி, மத, நிறவேற்றுமை யின்றி ஜனங்களின் சமூக முன்னேற்றத்துக்காகத் தொண்டு புரிவதிலும், பொதுவாக ஜன நிர்மாண வேலையிலும் ஸ்ரீ கோகலே நம்பிக்கை கொண்டிருந்தார். நாலாவது பிரிவைச் சேர்ந்த தேசீய வாதிகளுடன் அவர் பல அம்சங்களில் ஒற்றுமை பெற்றவர். ஆனால் மிதவாத வழிகளில் அரசியல் கிளர்ச்சி நடத்துவதிலும் அவருக்கு நம்பிக்கை அதிகம் இருந்தது. காங்கிரஸின் வேலை முறையில் இருந்த பலவீனம் இன்னதென்பதை அவர் நன்குணர்ந்திருந்தார். காங்கிரஸ் தலைவர்களில் சிலருடைய நடத்தை அவருக்குச் சிறிதும் பிடிப்பதில்லை. அவர்களுடைய உற்சாகக் குறைவு, தியாக புத்தியின்மை, சகியாமை இயல்பு, உண்மையான தோழமை உணர்ச்சி இல்லாமை, எப்போதும் தங்களைப்பற்றியே நினைக்கும் குணம், எல்லாவற்றையும்விட அவர்கள் நடத்திய சுக போக வாழ்க்கை ஆகியவைகளைக் குறித்து அவர் பெரிதும் வருந்தினர். காங்கிரஸுக்கு வந்துசேரும் மனிதர்களையும், தீவிரக் கட்சியைச் சேரும் மனிதர்களையும் அவர் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்ப்பதுண்டு. தீவிரவாதிகளின் உற்சாகத்தையும், சிரத்தையையும், அவர்களுடைய தவவொழுக்க வாழ்வையும், சுயநலத் தியாகத்தையும் அவர் போற்றினர். காங்கிரஸுக்கு வேலை செய்ய அவர்களைப் போன்ற சிலர் கிடைக்கமாட்டார்களா வென்று அவர் அவாவினர். அரவிந்தரிடமும், ஹரிதயாலிடமும் அவருக்குப் பெருமதிப்பு உண்டு. வருங் காலத்தைப் பற்றி தூரதிருஷ்டியுடன் நோக்கும் ஆற்றல் தமக் கின்மையால், உடனே ஆகவேண்டிய காரியங்களில் தமது கவனத்தைச் செலுத்துவதாக அவர் கூறுவதுண்டு. இங்கிலாந்திலிருந்து புறப்படுவதற்குச் சில தினங்களுக்கு முன்னால், தமது அருமை நண்பர்களான தம்பதிகள் இருவரிடம், இந்தியா

இன்னும் இருபத்தைந்தாண்டுகளில் விடுதலை அடைந்து விடுமென்று தாம் நம்புவதாக அவர் சொன்னார். விடுதலை என்பதற்கு அவர் என்ன பொருள் கொண்டிருந்தாரோ தெரியாது. குடியேற்ற நாடுகள் பெற்றிருப்பது போன்ற விடுதலையை அவர் குறிப்பிட்டிருக்கலாம். அவருடைய அந்திய நாட்களில் இங்கிலாந்தின் தாராளக் கட்சியாரிடம் அவருக்கு நம்பிக்கை குன்றிவந்தது. அக் கட்சியாருக்குள் பெருமனம் படைத்தவர்கள் அதிகமில்லை யென்பதை அவர் கண்டார். ஆயினும் தாம் கலந்து வேலை செய்யக்கூடிய மனிதர்கள் அவர்களைத் தவிர வேறுயாருமில்லை யென்று அவர் கூறினார். அரசாங்க உத்தியோகங்களைப்பற்றி விசாரிப்பதற் கேற்பட்ட ராயல் கமிஷனில் அவர் ஓர் அங்கத்தினராயிருந்தார். அக் கமிஷன் விசாரணையின் போது அவர் அடைந்த அநுபவங்கள் அவருடைய அந்திய நாட்களைத் துன்பமயமாக்கின. கமிஷன் முன்பு சாட்சியம் கொடுத்த ஆங்கிலோ இந்தியர்கள் ஒருவர் பின் ஒருவராய்த் தம் நாட்டாரையும், அவர்கள் ஒழுக்கத்தையும், கண்யத்தையும், திறமையையும் அவமதித்துக் கூறிய மொழிகளை அவரால் பொறுக்க முடியவில்லை. தீவிரக் கட்சியார் தம் போன்றவர்களை விலக்கித் தங்களைமட்டும் தேசீயவாதிகள் என்று சொல்லிக்கொள்வதை அவர் ஆட்சேபித்தார். நாம் எல்லாரும் தேசீயவாதிகளே யென்று அவர் சொன்னார். மிதவாதிகளுக்குள்ளே அவரை உத்தமோத்தமர் என்று சொல்லவேண்டும். அவரில் பாதி அளவுக்கு வரக்கூடியவர்கள்கூட மிதவாதிகளில் வேறு யாருமில்லை.

## காங்கிரஸ் தலைவர்கள்

காங்கிரஸ் தலைவர்களில் பலர் உண்மையான தேசபக்தர்களே யாவர். ஆனால் அவர்கள் அமைதியையும், சுகபோகங்களையும் அபரிமிதமாய்க் காதலிப்பவர்கள். எனவே அமைதி பங்கம், கலவரம் முதலிய விபத்துக்களுக்குச் சிறிதேனும் இடந்தரக்கூடிய முறைகளை அவர்கள் கனவிலும் கருதமாட்

டார்கள். தீவிரவாதிகளின் முறைகளை அவர்கள் வெறுப்பதற்கும், பாமர ஜனங்களுக்கிடையே பிரசாரம் செய்வதில் அவர்கள் காட்டும் அவநம்பிக்கைக்கும் காரணம் இதுதான். மிகமிக நிதானமாக முன்னேற வேண்டுமென்பது அவர்களுடைய விருப்பம். கோழைகளும், சுயநலவாதிகளும், உத்தியோக வேட்டைக்காரர்களும், பட்டம் பதவி மோகங் கொண்டவர்களும் அவர்களில் சிற்சிலர் உண்டென்பது உண்மையே. ஆனால் இத்தகையோரைத் தேசியவாதிகள் என்பதாக நாம் ஒப்புக்கொள்வதில்லை. உலக சரித்திரத்தில் எத்தனையோ அரசியல் கட்சிகள் இருந்திருக்கின்றன. ஆனால் இத்தகைய சுயநலவாதிகள் அறவே இல்லாமலிருந்த அரசியல் கட்சி ஒன்று இருந்ததாய் நாம் கேள்விப்பட்டது கிடையாது. வெளிக்கு மிதவாதக் கொள்கைகளை ஆதரித்தபோதிலும் உள்ளுக்குள் தீவிரவாதிகளாயிருக்கும் காங்கிரஸ்காரர்கள் சிலர் உண்டு. தீவிரவாதிகளுடன் பகிரங்கமாகச் சேர்ந்துகொள்ள இவர்களுக்குத் தைரியமில்லை. இதுபோலவே பெயரளவில் காங்கிரஸ்காரராயும், உள்ளுக்குள் பூரண அரசாங்க பக்தராயும் உள்ள சிலரும் உண்டு. இவர்கள் தங்கள் சொந்த முன்னேற்றத்துக்குரிய சந்தர்ப்பம் எப்போது கிடைக்குமென்று கண்ணுங்கருத்துமா யிருப்பார்கள். சட்டவரம்புக் குட்பட்ட கிளர்ச்சியை ஆதரிப்பவர்களிலும் காங்கிரஸை ஆண்மையுள்ள தன்னம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனமாக்க விரும்புவோர் சிலர் இருக்கின்றனர். விண்ணப்பங்கள், மகஜர்கள், பிரார்த்தனைகள் முதலியவை இவர்களுக்குப் பிடிப்பதில்லை. காங்கிரஸ் அவ்வப்போதைய நிகழ்ச்சிகளைக் குறித்துத் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றுவதுடன் நிற்க வேண்டுமென இவர்கள் சொல்கிறார்கள்.

இன்னும் சிறிது முன்சென்று சாத்வீக எதிர்ப்பு இயக்கத்தையும், பகிஷ்காரத்தையும் மேற்கொள்ள விரும்பும் வேறொரு சாரார் உண்டு. இவ்வாறாக, 1914-ம் ஆண்டில், தீவிர தேசீய வாதிகளுக்குள் எவ்வளவு பிரிவினர் இருந்தார்களோ அவ்வளவு வகைப்பட்டவர் காங்கிரஸிற்குள்ளும் இருந்தார்கள்.

ஆரும் அத்தியாயம்

# தேசீய இயக்கமும் வெளி உலகமும்

இந்தியாவுக்கு வெளியில் இயங்கிவரும் சுதந்திரப் போர் களினால் இந்தியாவின் தேசீய இயக்கம் பெரும் ஆதரவுபெற்று வருகிறதென்பதில் ஐயமில்லை. அரசியல் துறையில், ஐரோப் பாவில் நிகழ்ந்துவரும் பற்பல தேசீயப் போராட்டங்கள் அவ் வியக்கத்துக்கு ஊக்கமும், வலிமையும் தந்துவருகின்றன. ஆங்கிலத் தொழிலாளிகளின் போராட்டங்களும், வெற்றிகளும், பிரஞ்சுப் புரட்சிக்காரரின் துன்பங்களும் இறுதியில் அவர்க ளடைந்த பெரு வெற்றியும், இத்தாலியர்களின் சுதந்திர முயற் சிகளும், ருஷியர்கள், போலந்து வாசிகள், ஹங்கேரியர் முதலி யோர் இடைவிடாது நடத்திவரும் விடுதலைப் போரும் இந்திய தேசீயவாதிகளுக்கு உற்சாக மூட்டி வருகின்றன. இந்திய தேசீயவாதிகள் தற்கால ஐரோப்பிய சரித்திர ஆராய்ச்சியில் மிக்க ஊக்கம் கொண்டவர்கள். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஹாலந்து, இதாலி, ருஷியா, ஆஸ்திரியா, துருக்கி, பால்கன் இராஜ்யங்கள் முதலியவற்றின் சரித்திரத்தை அவர் கள் நன்கறிந்திருக்கிறார்கள். பிரதாபன், இராமதாஸ், குரு கோவிந்த சிங், சிவாஜி, திப்பு சுல்தான், ஜான்ஸி ராணி முதலி யோரைப்போலவே வாஷிங்டன், காவோர், மாஸனி, பிஸ்மார்க், எம்மட், பார்னல் முதலியோரையும் அவர்கள் போற்று கிறார்கள்.

இந்திய அரசாங்கத்தார் இவ் வுண்மையை நன்கறிந் துள்ளார்கள். ஆகையினால்தான், இந்திய சர்வகலாசாலைகளில் நவ ஐரோப்பாவின் சரித்திரம் பாடமாக வைக்கப்படுவதில்லை யென்று சிலரால் கருதப்படுகின்றது.

அமெரிக்காவின் இலக்கியமும், அந் நாட்டின் நிகழ்ச்சி களுங்கூட இந்திய தேசீய இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஓரளவு

தூண்டுதலா யமைகின்றன. அமெரிக்கக் குடியரசின் சரித்திரத்தையும், மற்றும் அமெரிக்கப் பிரசுரங்களையும் இந்திய தேசீயத் தலைவர்கள் நன்கு ஆராய்ந்து வருகிறார்கள். ஆனால் அவ்வியக்கத்தை உருப்படுத்தி வளர்ப்பதில் ஆசியாவுக்கே அதிக பங்குண்டென்பதில் சந்தேகமில்லை. ருஷியா—ஜப்பானிய யுத்தம் இந்தியாவை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது. ஐரோப்பிய நாடுகள் ஜப்பானை ஒரு வல்லரசென்று ஒப்புக்கொண்டது இந்திய தேசீய இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்ததாக பாரத இளைஞர்கள் கருதுகிறார்கள். அவ் வெற்றிச் செய்தி தேசமெங்கும் மின்சார சக்தியெனப் பாய்ந்து ஜனங்களுக்குள்ளே கும்பகர்ணத் தூக்கத்திலாழ்ந்திருந்தவர்களையுங் கூடத் தட்டி எழுப்பிவிட்டது. இதன்பின்னர் துருக்கியிலும், ருஷியாவிலும், சீனத்திலும் நிகழ்ந்த சம்பவங்கள் இந்திய தேசீய இயக்கத்துக்கு மிக முக்கியமானவை யாகும்.

துருக்கிக்கும், இதாலிக்கும் நடந்த யுத்தமும், அதைத் தொடர்ந்து துருக்கிக்கும் பால்கன் இராஜ்யங்களுக்கும் நிகழ்ந்த போர்களும் மிக ஆச்சரியமான முறையில் இந்திய முஸ்லிம்களை தேசீயவாதிகளாக்கிவிட்டன. தற்சமயம் முஸ்லிம்களில் சிலர் ஹிந்துக்களைவிடத் தீவிர தேசீய உணர்ச்சி கொண்டுள்ளார்கள் என்றும் சொல்லலாம்.

வெளி நாடுகளில் பிரயாணம் செய்யும் இந்திய தேசபக்தர்கள் அந்தந்த நாடுகளில் அவ்வப்போது ஏற்படும் பிரச்னைகளைக் கவனித்து, தங்கள் சொந்த தேசீயப் பிரச்னைகளை அவற்றுடன் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்கிறார்கள். இதைவிட முக்கியமானது யாதெனில், அவர்கள் பிற நாடுகளின் தேசீயவாதிகளைச் சந்தித்துக் கலந்து பேசச் சந்தர்ப்பங்கள் தேடிப் பெறுவதே யாகும். அவர்களில் சிலர் எகிப்திய தேசீயவாதிகளுடன் தொடர்புகொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் அயர்லாந்தின் தேசீயவாதிகளுடனும், இவ்வாறே பலர் பற்பல நாட்டு தேசீய

வாதிகளுடனும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு இந்திய தேசீய இயக்கம் சர்வ தேசப் பிரச்னையாவதற்கு முயற்சி நடந்துவருகிறது. இதன் பயனாக அவ் வியக்கம் அதிக வலிமைபெற்று விரைவில் உலகப் பேரியக்கங்களில் ஒன்றாகுமென்பதில் சந்தேகமில்லை.

இந்திய சரித்திரமும், இந்திய நாகரிகமும், இந்தியாவின் பண்டை அறிவுச் செல்வமும் முன்னெப்போதையும்விட இது காலை உலகின் கவனத்தை அதிகம் கவர்ந்திருக்கின்றன. தற்போது உலகில் பெரிய விஷயங்களைப் பற்றிய ஆராய்ச்சி எது நடந்தாலும், அது குறித்து இந்தியாவின் கருத்தென்ன வென்பது கவனிக்கப்படாமலிருப்பதில்லை. ஆனால் உலகம் இன்னமும் மேனாட்டுக் கண்ணாடியின் மூலமாகவே இந்தியாவை நோக்குகின்றது. இந்தியாவின் கருத்தை மேலை நாட்டாருக்கு விளக்கும் தொண்டில் இந்தியர் ஒரு சிலர் நல்ல வேலை செய்து வருகிறார்கள். அவர்களின் வேலை அந் நாட்டாரின் கவனத்தைக் கவர்ந்துவருகிறது. ஆனால் இத் துறையில் செய்ய வேண்டிய வேலை இன்னும் எவ்வளவோ பாக்கியிருக்கின்றது. இந்திய அறிஞர்கள் இந்தியாவை வெளிநாட்டுக்கு அறிமுகப் படுத்திவைக்கும் வேலையை முக்கிய கடமைகளில் ஒன்றாக மேற்கொள்ளவேண்டும். இவ்வாறு உலக சக்திகளாகிய பெருஞ் சுழலில் இந்தியாவையும் கொண்டுவந்துவிட வேண்டும்.

ரவீந்திரநாத் தாகூர் உயர் கலைகளின் பொருட்டுத் தேசீயத்தை ஓரளவு பலியாக்கிவிட்டபடியால் தமது தேசத்தாரின் அன்பையும், நன் மதிப்பையும் ஓரளவு இழந்துவருகிறார். ஆயினும் உலகில் அவர் கீர்த்தி அதிகமாகிவருகிறது. தாகூரின் கொள்கைகள் ஏறக்குறைய மதக்கோட்பாடுகளுக் குரிய பெருமையை யடைந்துவருகின்றன. உலகெங்கும் அவருடைய நூல்கள் ஏராளமாகப் படிக்கப்பெறுகின்றன. தற்போது உலகில் மிகுதியும் போற்றப்படும் கவிஞர்—நூலாசிரியர் கூட்டத்தில் தாகூரும் ஒருவராவார். அவருடைய

கவிதைகள் நோபல் வெகுமதி பெற்றது தற்செயலாகவே யன்றி வேறில்லை. அதற்காக எவ்விதப் பிரயத்தனமும் அவர் செய்யவில்லை.

இந்தியாவின் பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் இது காறும் தங்கள் போக்கிலேயே போய்வந்திருக்கிறார்கள். வெளி உலகில் முன்னேற்றத்தையும், சுதந்திரத்தையும், ஜன நாயகத் தையும் குறிகொண்டு இயங்கி வரும் பல்வேறு சக்திகளை அவர்கள் கவனிக்கவில்லை. அப்படிக் கவனிப்பினும் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. காங்கிரஸ் தலைவர்கள் இங்கிலாந் தைத் தவிர்த்த வேறு அயல் நாடு எதிலும் தங்கள் இயக்கத் துக்கு அநுதாபம் தேட முயன்றது கிடையாது. உலக சக்தி களின் முக்கியத்தை அவர்கள் உணரவேயில்லை. ஆங்கில நாட் டார் உலகம் தங்களைப்பற்றி என்ன நினைக்கிறது, என்ன சொல் கிறது என்பதில் மிகுந்த கவலை கொண்டவர்கள் என்பது அவர் களுக்குத் தெரியாது.

இந்திய தேசிய வாதிகள் இதை நன்கு மனதில் கொள்ள வேண்டும். சர்வதேசிய நோக்குடன் சிந்தனை செய்யவும், காரி யம் நடத்தவும் அவர்கள் ஆரம்பிக்கவேண்டும். ஆங்கிலேயர் எவ்வளவுதான் முயன்றாலும் உலகின் மற்றப் பகுதிகளிலிருந்து இந்தியாவை முற்றிலும் தனிமைப்படுத்தி வைத்தல் இயலாத காரியம். பாரதப் புதல்வர்களே அத்தகைய முயற்சி செய்வார் களாயின் தங்களைப் பிணித்திருக்கும் தளைகளைப் புலப் படுத்து வதற்கும், தங்கள் தேசத்தை நசுக்கி வரும் சுமையை அதிக மாக்குவதற்கும் முயல்வோரே யாவார்கள். அதைவிடக் குறு கிய திருஷ்டியுள்ள காரியம் வேறில்லை. தற்கொலைக்கு அதை விட நேரான பாதை கிடையாது.

ஏழாம் அத்தியாயம்

# தேசீய இயக்கத்தில் சமய, சமூக அம்சங்கள்

இந்தியாவில் சிறு பான்மைச் சமூகத்தினராயிருக்கும் முஸ்லிம்களை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கொஞ்சகாலம் தங்கள் பற்றுக் கோடாக நம்பியிருந்தார்கள். 1888-ம் வருஷத்திலேயே லார்டு டபரினும், ஸர் ஆக்லாண்டு கால்வினும்* முஸ்லிம் சமூகத்தின் பயங்களைத் தூண்டிவிட்டு அவர்களை விசேஷ சலுகையுடன் நடத்துவதாக வாக்குறுதி யளித்துத் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள். அது முதல் இந்த முறை மாறுத லின்றிக் கையாளப்பட்டு மிகுந்த பலனும் அளித்து வந்திருக்கிறது. படித்த முஸ்லிம்களில் பெரும்பாலோர் அரசாங்கத்தை மகிழச் செய்து அதன் நன்றிக் குரியவர்களாகும் பொருட்டுக் காங்கிரஸை எதிர்த்தார்கள். கைத்தறி நெசவினால் பிழைத்து வந்தவர்கள் பெரும்பாலும் முஸ்லிம் தொழிலாளிகளே யாவர். எனவே, சுதேசி இயக்கத்தின் வெற்றியினால் பெரிதும் அச்சமூகத்துக்கே நன்மையுண்டு. அப்படி யிருந்தும் படித்த முஸ்லிம்கள் சுதேசி இயக்கத்தைக் கூட எதிர்த்தார்கள். இதற்குக் கைம்மாறாக, அவர்கள் தங்கள் சமூகத்தின் கல்வி யபிவிருத்திக்கு நிறையப் பணமும், அரசாங்க உத்தியோகங்களில் அதிக விகிதமும், ஏராளமான பட்டம் பதவிகளும், சட்ட சபைகளில் தனித் தொகுதிகளின் மூலம் அதிக பிரதிநிதித்வமும், பிற

*லார்டு டபரின் இந்தியாவின் இராஜப் பிரதிநிதி பதவியும், ஸர் ஆக்லாண்டு கால்வின் ஐக்ய மாகாண லெப்டினண்ட் கவர்ன பதவியும் வகித்தவர்கள்.

நன்மைகளும் அடைந்தார்கள். இச்சலுகையை மார்லி பிரபு உறுதிப் படுத்தினர். 1908-ம் வருஷத்துச் சீர்திருத்தத் திட்டத் தில் இதை ஒரு விசேஷ அம்சமாக அவர் அமைத்தார். எனவே, 1908-ம் ஆண்டில் முஸ்லிம்கள் மிக்க களிப்புற் றிருந்தார்கள். வங்காள முஸ்லிம்களில் தேசீயக் கட்சியின் நண்பர்களும், அநு தாபிகளும் பலர் இருந்தனர் என்பது உண்மையே. ஆனல் பிரி வினைக் கட்சியாருடன் ஒப்பிடும் போது இவர்கள் மிகச் சிலரே யாவர். எனவே இந்திய தேசீய இயக்கம் அதன் ஆரம்பத்தி லும் பின்னர் சிறிது காலம் வரையிலும் பெரிதும் ஹிந்துக்களின் இயக்கமாகவே இருந்து வந்தது,

## முஸ்லிம் மனப் பான்மையில் மாறுதல்

சென்ற நான்கு வருஷங்களின் (1912—1916) உலக
நிகழ்ச்சிகளினல் மேற்கூறிய நிலைமை அடியோடு மாறி யிருக்
கிறது. துருக்கியிலும், திரிபோலியிலும், எகிப்திலும், பாரஸீகத்
திலும் நடந்துள்ள சம்பவங்கள் இந்திய முஸ்லிம்களின் உள்ளத்
தைப் பெரிதும் புண்படுத்தி அவர்கள் பிரிட்டிஷார் விஷயத்தில்
கொண்டிருந்த மனப்பான்மையைத் தலைகீழாக மாற்றி விட்
டன. முஸ்லிம்கள் பௌருஷமும், ரோஷமும் வாய்ந்த சமூகத்
தினர். துருக்கியின் விஷயத்தில் பிரிட்டன் அனுஷ்டிக்கும்
கொள்கையினல் அவர்கள் மனம் பெரிதும் புண்பட்டிருக்
கிறது. உலகின் மற்றப் பகுதிகளிலுள்ள முஸ்லிம்களுக்கு நேரும்
கதியைப் பார்த்துக் கொண்டு தாங்கள் வாய் திறவாமலிருப்
பதற்காக, இந்தியாவில் பிரிட்டிஷார் தங்களுக்கு லஞ்சங்
கொடுக்க விரும்புகிருர்களென்று அவர்கள் எண்ணத்
தொடங்கிவிட்டார்கள். சென்ற நான்கு வருஷ காலமாய் முஸ்
லிம் பத்திரிகைகள் அகில இஸ்லாமிய ஒற்றுமைப் பிரசாரம்
தீவிரமாக நடத்தி வருகின்றன. முஸ்லிம்களில் படித்த, பணக்
கார வகுப்பினரும் சரி, பாமர ஜனங்களும் சரி, பிரிட்டிஷாரிடம்
பெரும் பகைமை கொண்டிருக்கிருர்கள். சில சமயம்
இப்பகைமை மேடைப் பிரசங்கங்களிலும், பத்திரிகைகளி

லும், புத்தகங்களிலுங் கூட வெளியாகின்றது. சென்ற பால்கன் யுத்தத்தின் போதும், திரிபோலி சம்பந்தமான துருக்கி-இத்தாலிப் போரின் போதும் இந்தியாவிலுள்ள மசூதிகளில் துருக்கியின் வெற்றியையும் அதன் கிறிஸ்துவப் பகைவர்களின் வீழ்ச்சியையும் கோரிப் பிரார்த்தனைகள் செய்யப் பட்டன. இப்பிரார்த்தனைகளின் ஒலி தேசமெங்கும் கேட்டது. முஸ்லிம் லீக்* மகா சபைத் தலைவர்களின் பேச்சுக்களிலும் தெளிவான வேற்றுமை புலனுகிறது. ஆனுல் ஜனங்களிடையே அகில இஸ்லாமிய ஒற்றுமைக் கட்சியாருக் கிருக்கும் செல்வாக்குடன் ஒப்பிடும் போது முஸ்லிம் லீக்கின் செல்வாக்கு மிகவும் சொற்ப மென்றே சொல்லவேண்டும். மேற்படி கட்சியார் முஸ்லிம் தேசீய வாதிகளுக்குள்ளே மிகத் தீவிரப் பகுதியினர் ஆவர்.

அச்சுச் சட்டத்தின் கீழ் முஸ்லிம் பத்திரிகைகளும் வெளியீடுகளும் பறிமுதல் செய்யப் பெறுதல், அவ் வெளி யீடுகளின் போக்கு, அவ்வாறு அரசாங்கத்தினுல் தண்டிக்கப்படும் பத்திரிகைகளுக்கு ஜனங்கள் மேலும் மேலும் அளிக்கும் ஆதரவு, அரசாங்கத்தின் செயல்களைக் குறித்து முஸ்லிம் பத்திரிகைகள் எழுதும் முறையில் காணப்படும் மாறுதல், ஹிந்து முஸ்லிம்களுக்குள் புதிதாகத் தோன்றியிருக்கும் ஒற்றுமை உணர்ச்சி ஆகிய இவையெல்லாம் ஒரே ஓர் உண்மையையே குறிப்பிடுகின்றன. தீவிர வாதிகளான ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தங்களுக்குள் உடன்படிக்கை செய்துகொண்டு ஒன்றுசேருதல் மிகவும் சாத்தியமானதாகும். முஸ்லிம் மிதவாதிகளுங்கூட மிதவாத ஹிந்துக்களை நெருங்கி வருகிருர்கள்.† மிதவாத முஸ்லிம்கள் பெருந்தொகையினராகக் காங்கிரஸில் சேராவிடினும் அவர்கள் சிந்திப்பதும் காரியம் செய்வதும் அவ்வழியிலேயே யாகும். ஆனுல் மிதவாத ஹிந்துக்களைவிட மிதவாத முஸ்லிம்கள் புத்திசாலிகள். தங்கள்சமூகத்தின் தீவிர வாதிகளை அவர்கள் துருப்புச் சீட்டாக உபயோகித்து ஹிந்துக்களை விட மிகவுந்

*ஆங்கிலேயர்களுக்கு அனுசரணையான முஸ்லிம்களின் ஸ்தாபனம்.

†நான்முகம் பார்க்க.

திறமையுடன் அரசாங்கத்தோடு பேரம் செய்கிறார்கள். ஹிந்து தீவிர வாதி தன் சமூகத்தைச் சேர்ந்த மிதவாதிகளிடம் பெறும் ஆதரவையும் அநுதாபத்தையும் விட முஸ்லிம் தீவிர வாதி தன் சமூகத்தின் மிதவாதிகளிடம் பெறும் ஆதரவும் அநுதாபமும் அதிகமாகும். மிதவாத முஸ்லிம்கள் தங்கள் சமூகத்தைப் பாதிக்கும் அரசாங்கச் சட்டங்களை மிதவாத ஹிந்துக்களை விட அதிக அழுத்தமாய்க் கண்டிக்கிறார்கள்; பிரிட்டிஷ் இராஜ்யத்தின் புகழை அவர்கள் அவ்வளவு அதிகமாகப் பாடுவதில்லை; பேரம் பேசுவதிலும், அரசியல் சூழ்ச்சித் திறமையிலும் அவர்கள் அதிக சமர்த்தர்கள் என்பதில் சிறிதளவும் சந்தேகம் கிடையாது.

இந்தியாவுக்கு வெளியிலுள்ள படித்த முஸ்லிம்களில் அநேகமாக எல்லாரும் தேசிய இயக்கத்தை ஆதரிப்பவர்களாவர். எனவே இந்திய முஸ்லிம்களின் மனோபாவத்தில் ஏற்பட்டிருக்கும் மேற்கண்ட மாறுதல் தேசிய இயக்கத்துக்குப் பெரிதும் பலந் தருதல் கூடும். தேசிய நோக்குடன் பார்க்குங்கால் நிலைமை இன்னும் அபிவிருத்தி யடையலாமென்று எதிர்பார்க்க இடமிருக்கிறது.

## சீக்கியர்களிடையே விரோத பாவம்

ஹிந்து தேசிய வாதிகளிடமிருந்து பிரிட்டிஷாரால் பிரித்து வைக்கப்பட்டிருந்த சமூகத்தார் முகமதியர் மட்டுமல்லர். இதுகாறும் சீக்கிய சமூகமும் தனித்து நின்றே வந்தது. ஆனால் தற்போது சீக்கியரின் மனப் பான்மையிலும் பெரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. கானடாவில் சீக்கியர் நடத்தப்பட்ட விதம், "கோமகாட மாரு"* சம்பவம், ஹரி தயாளின் செல்

*"கோமகாட மாரு" என்பது ஒரு ஜப்பானியக் கப்பலின் பெயர். 1914-ம் ஆண்டில் சீக்கியர் சிலர் கானடா செல்வதற்காக இக்கப்பலை ஹாங்காங்கில் அமர்த்தினார்கள். ஆனால் கானடாவில் அவர்கள் இறங்க அநுமதிக்கப் படாமையால் இந்தியாவுக்குத் திரும்பிவர நேர்ந்தது. இச்சம்பவம் உலகெங்கு முள்ள இந்தியர்களிடையே மிக்க ஆத்திரம் உண்டு பண்ணி அவர்கள் பிரிட்டிஷாரிடம் விரோத உணர்ச்சி கொள்வதற்குக் காரணமாயிருந்தது.

வாக்கு, அமெரிக்காவின் பசிபிக் சமுத்திரக்கரையில் அவர் அமைத்திருக்கும் காடர் கட்சி ஆகியவை மேற்கூறிய மாறு தலுக்குக் காரணங்களாகும். சலுகை முறையினுலும், பட்டம் பதவி வழங்குவதினுலும் சீக்கியரை மீண்டும் வசப்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யலாம். லண்டனிலுள்ள இந்தியா. மந்திரியின் சபையில் ஸ்ரீமான் கே. ஜி. குப்தா வகித்திருந்த ஸ்தானத்திற்கு ஸர்தார் தால்ஜித் சிங் என்னும் சீக்கிய ஜமீன்தார் சமீபத்தில் நியமிக்கப்பட்டிருக்கிருர். ஆனுல் இதுபோன்ற காரியங்கள் அரசாங்கத்தை முன்னை விட நகைப்புக் குரியதாகவே செய்து வருகின்றன. பிரிட்டிஷார் கற்பனு சக்தி சிறிது மில்லாத சாதியார் என்பதை நாம் அறிவோம். ஆனுல் மகா யுத்தமானது அவர்களுடைய நகைச் சுவையைக் கூடப் போக்கிவிடுமென்று நாம் எதிர்பார்க்கவில்லை.*

*இந்த அத்தியாயம் 1915-ம் ஆண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்டது. அதன் பின்னர் முஸ்லிம்களின் மனே பாவத்திலும் சீக்கியர் மனப்பான்மையிலும் பெரு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனுல் அவற்றைத் தனிப் புத்தகம் ஒன்றிலேயே விவரித்தல் கூடும்.

எட்டாம் அத்தியாயம்

# வருங் காலம்

வருங்காலத்தைப் பற்றிச் சோதிடம் உரைத்தல் எப்போதுமே கஷ்டமான காரியம். அதிலும் இந்தியாவின் தற்போதைய நிலைமையில் அதன் வருங்காலத்தை ஊகித்துக் கூறுதல் பெரிதும் ஆபத்தான விஷயம். மனித வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவங்களே எப்போதும் நிகழ்கின்றன. மிகச் சிக்கலான விவகாரங்கள் மலிந்த இந்தியா போன்ற தேசத்தின் விஷயத்தில் இது மிகவும் உண்மையாகும். இந்தியாவின் வருங் காலத்தைப் பற்றி ஊகித்துச் சொல்வதைவிட இங்கிலாந்து, அமெரிக்கா தேசங்களின் வருங்காலத்தைப் பற்றிச் சொல்லுதல் எளிதாயிருக்கலாம். சென்ற நூற்றாண்டின் இறுதியிலும், இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இருந்த தேசீயவாதிகள் பிந்தைய பதினைந்து வருஷத்தின் நிகழ்ச்சிகளை அப்போது கற்பனைக் கண்ணினாலும் கண்டிருக்கமாட்டார்கள். இந்தியா செயலின்மைக்குப் பெயர் போன தேசம் என்பதும், இந்தியப் பாமர ஜனங்களை வேலைசெய்யத் தூண்டுவது மிகப் பிரயாசையான காரியம் என்பதும் உண்மையே. வெளி உலகில் எத்தகைய மாறுதல்கள் நிகழ்ந்தாலும் அவர்கள் சிறிதும் கவலைகொள்வதில்லை. மிகக் கேடான நிலைமையிலும் திருப்தியுடன் வாழக் கற்பிக்கும் வாழ்க்கைத் தத்துவத்தினால் பிணிப்புண்டு அவர்கள் செயலற்றிருக்கிறார்கள். உணவின்றிப் பட்டினிகிடந்தாலும், ஆடையில்லாமல் நிர்வாணமாயிருந்தாலும் அவர்கள் உள்ள நிறைவுக்கு ஊறு விளைவதில்லை.

## தேசீய இயக்கத்தின் வலிமை

ஆனால் இவையெல்லாம் தற்கால இந்தியாவைப் பற்றிய வரையில் ஓரளவே உண்மையாகும். இந்தியரின் செயலின்

மையை மிகைப்படுத்திக் கூறுதல் வழக்கமாயிருந்திருக்கிறது. புதுமைக் கொள்கைகளினுலும் நவீன வாழ்க்கை நிலைமைகளினுலும் சிறிதும் பாதிக்கப்படாமல் சென்ற ஐம்பதாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தது போலவே இன்னமும் வாழ்ந்துவரும் இந்தியர்கள் லட்சக் கணக்கில் இருக்கலாம். ஆனுல் புத்துணர்வு பெற்றுக் கண் விழித்தெழுந்துள்ள இந்தியர்களும் லட்சக் கணக்கில் இருக்கிறுர்கள். காங்கிரஸ்களுக்கும், மகாநாடுகளுக்கும், பொதுக்கூட்டங்களுக்கும் வருவோரின் தொகையைக் கொண்டாவது, பத்திரிகை, புத்தகங்களின் விற்பனையைக் கொண்டாவது நாட்டில் ஏற்பட்டிருக்கும் புத்துணர்ச்சியை அளவிடக் கூடாது. பொது ஜனத் தலைவர்களைச் சிறப்பிப்பதற்காகக் கூடும் கூட்டங்கள், பத்திரிகைகளின் பெருக்கம் முதலியவை இந்தியரின் வாழ்க்கையில் ஏற்பட்டுவரும் மாறுதலுக்கு அறிகுறிகள்தான். ஆனுல் அவ்வறிகுறிகளினுல் புலனுவதைவிட மாறுதல் மிகப் பெரியது. சமீப காலத்தில் நாட்டில் வெளியாகியிருக்கும் கவிதைகளையும், வசன நூல்களையும் படியுங்கள்; அரைப் படிப்புள்ளவர்களும், எழுத்து வாசனையே யறியாதவர்களுங்கூடக் கவனம் செய்திருக்கும் பாட்டுகளைப் படியுங்கள்; கிராம சதுக்கங்களிலும், ஜனங்கள் கூடும் பிற இடங்களிலும் பேசப்படும் பேச்சுக்களைக் கேளுங்கள்; பட்டிக்காட்டு ஏழைக் குழந்தைகளின் விளையாட்டுகளைக் கவனியுங்கள்; அவர்களுடைய மழலைச் சொற்களுக்குச் சற்றே செவிகொடுங்கள்; ஜனங்களால் தற்போது பெரிதும் விரும்பப் பெறும் கீர்த்தனங்கள், கீதங்களை, ஆராயுங்கள்; அப்போது தேசிய இயக்கம் இந்தியரின் வாழ்க்கையில் எவ்வளவு தூரம் கலந்துவிட்ட தென்பதையும், ஜனங்களின் உள்ளத்தில் அது எவ்வளவு ஆழமாக வேரூன்றிவிட்ட தென்பதையும் நன்கு காண்பீர்கள். அன்னிய நாட்டார் எவரும் இதை உள்ளபடி உணரமுடியாது. இந்தியர்களே அதை நன்கு அறியக்கூடும். நிதானத்திலும், இராஜ விசுவாசத்திலும் தலை சிறந்த தேச பாஷைப் பத்திரிகைகளைப் படித்துப் பாருங்கள். அவை ஆழ்ந்த இராஜ விசுவாசம் தெரிவித்

துக்கொண்டே தேசத்தின் துரதிர்ஷ்டத்தையும் துன்பங்களையும் குறித்து இரத்தக் கண்ணீர் சொரிவதைக் காண்பீர்கள். இந்தியப் பத்திரிகை எதை எடுத்தாலும் ஓயாத புலம்பலையே நாம் பார்க்கின்றோம். சுக போகத்தில் மூழ்கிய சுதேச இராஜாவையும், கடின சித்தமுடைய பணக்காரனையும் அவர்களுடைய தனிமை வாழ்விலிருந்து வெளிக் கொண்டு வந்து பிரசங்க மேடை மீது நிறுத்துங்கள்; அவர்களுடைய எண்ணங்களிலும், பேச்சுகளிலும் தேசீயம் ஊடுருவி நிற்பதைக் காண்பீர்கள். ஆனால் அவர்கள் இரகசியமாய்த் தங்களுடைய அந்தரங்க நண்பர்களிடம் என்ன பேசுகிறார்களென்பதை அறிந்தால் இன்னும் பெரு வியப்பு உண்டாகும். எல்லா வகுப்புகளையுஞ் சேர்ந்த இந்தியர்களுடன் நான் பழகியிருக்கிறேன். எல்லாவகை அபிப்பிராயங்கொண்டவர்களையும், படித்தவர்களையும், படியாதவர்களையும், மன்னர்களையும், குடியானவர்களையும், மிதவாதிகளையும், அமிதவாதிகளையும், இராஜபக்தர்களையும், இராஜாங்கதுவேஷிகளையும் நான் பார்த்துப் பேசியதுண்டு. எனினும், மகா யுத்தம் ஆரம்பமானபோது அது குறித்து உண்மையாக வருந்திய இந்தியர் ஒருவரை இதுகாறும் நான் பார்த்ததில்லை. இந்தியர் பலர் தற்போது போர்க்களத்தில் சண்டை செய்துகொண்டிருக்கிறார்கள். தாங்கள் செய்த இராஜ விசுவாசப் பிரமாணத்தை அவர்கள் உண்மையுடன் நிறைவேற்றி வைக்கிறார்கள். போரில் வெற்றிபெறுவதற்கு அவர்கள் முழுமனதுடனே பாடுபடுவார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்களுடைய இதய அந்தரங்கத்தில், இங்கிலாந்தினால் தங்கள் தேசத்துக் கிழைக்கப்படும் அநீதிகளைப்பற்றிய உணர்ச்சி இருந்துகொண்டுதானிருக்கிறது. தற்போது தேசீய உணர்ச்சி படித்த வகுப்பாரிடையே ஒடுங்கிக்கிடக்கவில்லை. பாமர ஜனங்களிடையே அது பரவி வருகிறது. விரைவில் தேசியமானது இந்திய மக்களின் பொதுமதமாகிவிடலாமெனக் காணப்படுகிறது. ஆனால் ஜனங்களுடன் கலந்து பழகும் இந்தியர்கள் மட்டுமே இதை அறிந்திருக்கிறார்கள். ஆங்கிலேயர் எழுதும் புத்தகங்களைப் படித்துமட்டும் அறிவு பெறுவோருக்கு இது தெரியவராது. அவ்வாறே அன்

னிய நாட்டார் ஒருவர் இந்தியர்களிடம் எவ்வளவு அன்பும் அநுதாபமும் உள்ளவராயினும், இத் தேசத்தின் பாஷைகளை எவ்வளவு நன்ருக அறிந்தவராயினும், மேற்படி மாறுதலை முற்றும் உணர்தல் இயலாத காரியம். நடனப் பெண்கள்கூட இவ்வியக்கத்தின் செல்வாக்குக்குள்ளாகி யிருக்கிருர்கள். சபையோர் விரும்பினல் அவர்கள் அரசியல் பாட்டுக்களும் தேசீய கீதங்களும் பாடுவார்கள். ஒற்றைத் தந்தி தம்புராவுடன் பாட்டுப் பாடிப் பிச்சையெடுக்கும் பரதேசியும் தேசீயகீதம் பாடிஞல் தனக் குப்பிச்சை அதிகம் கிடைக்குமென்பதை உணர்ந்திருக்கிருன்.

## தேசீய இயக்கத்தின் வளர்ச்சி

அடக்குமுறைகளினுலும், ஒற்றர்கள் அமர்த்துவதினுலும் இனிமேல் தேசீய இயக்கத்தை அடக்கமுடியாது. அதிகார வர்க்க பயங்கர முறைகளையும், இராஜபக்தி புகட்டுவதற்குரிய பிற சாதனங்களையும் எவ்வளவுதான் கையாண்டாலும் தேசபக்திப் பெருவெள்ளத்தை இனித் தடுத்து நிறுத்த முடியாது. பிரிட்டிஷ் நீதிமன்றங்களில் மீசைமுளையாத பாலகர்களுக்கு விதிக்கப்படும் மரண தண்டனைகளும், தீவாந்தர சிட்சைகளும் தேசீய இயக்கத்துக்கு வலிமை தந்து வளர்த்து வருகின்றன. ஆனல் அரசாங்கத்துக்கும் வேறு வழியில்லை. குற்றவாளிகளை அவர்கள் தண்டித்தேயாகவேண்டும். இராஜ துவேஷிகளை அவர்கள் தேடிப்பிடித்தே தீரவேண்டும். இல்லாவிடில் அரசாங்கம் என்னும் பெயருக்கே அவர்கள் தகுதியற்றவராவர். ஆனல் இந்தியாவும், இந்திய தேசீய இயக்கமும் தற்போது அடைந்துள்ள நிலைமையில் அடக்குமுறை, மரண தண்டனை, சிறைத் தண்டனை ஆகியவை இயக்கத்துக்கு நன்மையாகவே முடிகின்றன. தேசீய உணர்ச்சியை ஒடுக்க எவ்வளவுக்கு முயற்சி செய்யப்படுகிறதோ, அவ்வளவுக்கு அது தழைத்துப் பரவுகின்றது. தேசீயம் என்னும் வித்துக்கு ஆத்மத் தியாகிகளின் இரத்தமே ஜீவநீர் ஆகின்றது. அத்தகைய நிலைமை

ஏற்படும்போது ஜனங்கள் வாதம் செய்வதில்லை; அறிவைக் கொண்டு ஆராய்வதில்லை. நற்குடியிற் பிறந்தவர்களும், குண சௌந்தரியமும், ரூப சௌந்தரியமும் வாய்ந்தவர்களுமான இளைஞர்கள் தாய்நாட்டிற்காக, தாய் நாட்டிற்கிழைக்கப்படும் அநீதிகளுக்குப் பரிகாரந் தேடுவதற்காக உயிர் விடுகிறார்கள் என்பதொன்றே அவர்கள் உள்ளத்தில் பதிகின்றது. வெடி குண்டு எறியப்படும்போது ஜனங்கள் உண்மையாகவே அதை எறிந்தவனைக் கண்டிக்கிறார்கள்; மனமார அச் செயலை வெறுக்கிறார்கள். ஆனால் குற்றவாளி தூக்கிலிடப்படும்போது அல்லது தீவாந்தரத்துக்கு அனுப்பப் படும்போது அவர்கள் துக்கமுறுகிறார்கள். முதலில் ஏற்பட்ட பயங்கரமும் வெறுப்பும் பின்னர் அநுதாபமாக மாறிக் கடைசியில் அன்பாகக் கனிந்துவிடுகிறது. அவன் தாய் நாட்டிற்காக உயிர் நீத்தான் என்னும் ஓர் எண்ணமே மிஞ்சி நிற்கின்றது. அவன் தவறான வழியில் சென்றிருக்கலாம்; பைத்தியக்காரனும் இருக்கலாம்; எனினும் அவன் ஆத்மத் தியாகியே யாவான். சன்மார்க்க வாதிகள், சட்டப் பற்றுடையவர்கள், இராஜாங்க விசுவாசிகள் முதலியோர் அனைவரும் அவனுடைய செயலைக் கண்டிக்கிறார்கள். ஆனால் செயல் புரிந்தவனை அவர்கள் தங்கள் இதய சிம்மாசனத்தில் அமர்த்திப் போற்றுகிறார்கள்.

மக்களின் மனோதத்துவம் இத்தகையதாகும். ஒரு நாட்டின் ஜனங்கள் புத்துயிர் பெற்றெழும்போது அவர்கள் உள்ளப் போக்கு இவ்வாறுதானிருக்கும். இந்திய மக்களும் தற்போது இத்தகைய மனோ நிலை எய்தியிருக்கிறார்கள். இராஜப் பிரதிநிதி, லெப்டினண்ட் கவர்னர், கமிஷனர், உதவி கமிஷனர் முதலியோரின் இனிப்பான பேச்சுகள், தனி மனிதர்களுக்குப் பட்டம் பதவி அளித்தல், ஒரு வகுப்புக்கு விரோதமாய் மற்றொரு வகுப்புக்குச் சலுகை காட்டுதல், கால்வாய்களும், ரயில் பாதைகளும் ஏற்படுத்தல் முதலியவற்றினால் அதிவேகமாய்ப் பெருகி ஓடும் இத் தேசியப் பெரு வெள்ளத்தை இனிமேல் தடுத்து நிறுத்த முடியாது.

## அற்ப அநுகூலங்களினுல் பயனில்லை

பாரத மக்களின் வாழ்க்கையில் இன்றைய தினம் சிறப்பாகக் காணப்படும் உண்மை இதுவே யாகும். இந்தியாவுடன் எவ்வகையிலேனும் தொடர்புடையவர்கள் அனைவரும் —உத்தியோகஸ்தர்கள், அல்லாதவர்கள், இராஜ தந்திரிகள், சாமான்யர்கள், அரசியல் வாதிகள், சீர்திருத்தக்காரர்கள் முதலிய யாராயிருப்பினும்—இவ்வுண்மையை உணர்ந்து அதற்கிணங்கக் காரியம் செய்தாக வேண்டும். தங்களுடைய முக்கியத்தைப் பற்றியே நினைப்புள்ளவர்களும், அதிகாரமென்னும் மது வருந்தி மயங்கியவர்களும், தங்கள் விருப்பத்தின்படியே எந்தக் காரியமும் செய்து வழக்கமானவர்களும், தங்கள் கையிலகப்பட்டதைத் தாங்களே வைத்துக்கொள்வதில் உறுதி கொண்டவர்களுமான ஒரு தேசத்தாரும் சரி, அத்தகைய தனி மனிதர்களும் சரி, தங்களுக்கு சந்தோசஷந்தராத விஷயங்களைப் பார்க்க மறுத்தல் கூடும். கான்யூட் அரசனைப்போல் அவர்கள் ஆழ் கடலின் அலைகளைத் "திரும்பிச் செல்லுக" என்று ஆக்ஞாபிக்கக்கூடும். ஆனுல் கடலலைகள் அவர்கள் கட்டளையைப் பொருட்படுத்தமாட்டா வென்பது நிச்சயம். பொங்கிப் பரந்து அலைமேல் அலை யெறிந்து வரும் இந்திய தேசீயப் பெருவெள்ளத்தை, ஆட்சி முறையில் செய்யும் அற்ப நிர்வாக மாறுதல்களினுலும், தேனெழுகும் பேச்சுகளினுலும், வெறும் வாக்குறுதிகளினுலும் தடுத்து நிறுத்த முடியாது. "நாமெல்லாரும் ஒரே அரசரின் குடிகள்", "ஒரு சாம்ராஜ்யத்தின் பிரஜைகள்", "சம அணியில் நின்று போர் புரியும் சகோதரர்கள்", "தோழர்கள்" என்னும் இவை போன்றவை இனிப்பான மொழிகள்தான். இவற்றைக் கூறுவோர் நல்ல நோக்கத்துடனேயே சொல்லுதல்கூடும். ஆனுல் முந்தைய அநுபவங்களை எண்ணிப் பார்க்கும்போது இவற்றுக்கு அதிக மதிப்பு அளிப்பதற்கில்லை. இளகிய நெஞ்சுடைய சிலர் இம் மொழிகளினுல் ஏமாறுதல் கூடும். ஆனுல் பேச்சுக்கேற்பச் செயல்கள் நிகழாதவரையில் பொது ஜனங்

கள் அவற்றைப் பொருட்படுத்த மாட்டார்கள். ஐக்ய மாகாணத்துக்கு ஒரு நிர்வாக சபை, பஞ்சாப்புக்கு ஒரு ஹைக்கோர்ட், பீஹாருக்கு ஒரு பல்கலைக்கழகம், ஹிந்து சர்வகலாசாலைக்கு ஓர் உரிமைப் பத்திரம், முஸ்லிம்களின் கல்வியபிவிருத்திக்கு அதிக பணம் முதலிய சில்லரை அநுகூலங்கள் சிற்சில பாரிஸ்டர்களுக்கும் வக்கீல்களுக்கும் திருப்தியளிக்கலாம். தேச மக்கள் அவற்றினால் திருப்தியடையமாட்டார்கள். ஆயுதச் சட்டம் இன்னும் அமுலில் இருந்துவருகிறது. சட்டசபைகள் வெறுங் கேலிக்கூத்தாயிருந்துவருகின்றன; வரிவிதிக்கும் முறை லங்காஷயரின் நன்மையை முதன்மையான நோக்கமாய்க் கொண்டதாக இருந்துவருகிறது; கொடுத்துவைத்த அயல் நாட்டார் சிலர் தேசத்தை ஆட்சிபுரிந்து, தேசத்தின் பொருள் மூலத்தைச் சுரண்டிக்கொண்டு போகையில் நாட்டில் பிறந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நடுத்தர வாழ்க்கை நடத்துவதற்கும் போதிய பொருள் சம்பாதிக்க இயலாதவர்களாயிருக்கின்றனர்; இத்தகைய நிலைமைகள் இருந்துவரும் வரையில் மேற்கூறியவை போன்ற அற்ப அநுகூலங்கள் பொது ஜனங்களுக்குத் திருப்தியளிக்க மாட்டா. இந்தியர்கள் கானடாவுக்கும், தென்னாப்பிரிக்காவுக்கும், அமெரிக்க ஐக்ய இராஜ்யத்திற்கும் போக விரும்புகிறார்கள். ஏன்? சொந்த நாட்டில் பிழைப்பு அவ்வளவு கஷ்டமாயிருக்கின்றது; வாழ்க்கை அவ்வளவு துன்பமயமாயும் அவமானகரமாயு மிருக்கின்றது. வெளி நாடுகளிலும் இந்தியன் அடிக்கடி உதைக்கப்படுகிறான்; அவமதிக்கப்படுகிறான். ஆனால் இந்தியாவில் ஆங்கிலேயரின் உதைகளையும், அவமதிப்புகளையும் பொறுத்துக்கொள்வதைவிட வெளி நாடுகளில் அவற்றைப் பொறுத்துக்கொள்ளுதல் எளிதாயிருக்கின்றது.

## இந்திய சுதந்திரத்துக்கு ஆட்சேபங்கள்—சாதி சமய வேற்றுமை

**பா**ரத தேசம், தனக்குத்தானே சட்டங்கள் இயற்றிக் கொள்ளவும், தன் வருமானத்தைத் தானே செலவுசெய்யவும்,

தன் கைத்தொழில்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் உரிமை பெற்றிருந்தால் அது தன் புதல்வர் புதல்விகள் 'அனைவருக்கும் வேண்டிய உணவும்*, அதற்கு மேலுங்கூட உற்பத்திசெய்யக் கூடும். கணக்கற்ற சமயங்கள், சமூகங்கள், வகுப்புகள், சாதிகள், பாஷைகள் முதலியவற்றால் இந்தியர் ஒற்றுமைப் படுவதற்கே இடமின்றிப் பிரிந்து கிடக்கிறார்களென்றும், அவர்கள் சொந்த அரசாங்கம் ஒன்றை ஸ்தாபித்து நடத்த முடியாதென்றும் வாதம்செய்வோர், ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்து ஒன்றரை நூற்றாண்டுக்குமேல் ஆகவில்லையென்பதையும், அதற்கு முன்னெல்லாம் இந்தியாவில் சுயாட்சிதான் நிலவிற்று என்பதையும் மறந்துவிடுகின்றனர். ஆங்கிலேயர் வருவதற்கு முன்னர் இருந்ததைவிட இன்றையதினம் தேசம் எவ்வகையிலும் அதிக மகிழ்ச்சியுடையதாயில்லை. அக்பர் காலத்து இந்தியா, எலிஸபெத் காலத்து இங்கிலாந்தைவிட அதிக சுபிட்சமும் சந்தோஷமும் குடிகொண்டதாயிருந்தது. அசோகன் ஆண்ட பாரதநாடு, ஆல்பிரட் அரசனின் கீழிருந்த இங்கிலாந்தைவிட எவ்வளவோ மடங்கு செல்வ வளமும் மகிழ்ச்சியும் பொருந்தி விளங்கிற்று. அவுரங்கஜீப்பின் ஆட்சியில் இந்தியா துன்பமெய்தியிருக்கலாம். ஆனால் எட்டாவது ஹென்றியும், முதலாவது ஜேம்ஸும் ஆண்ட இங்கிலாந்தும், மேரியின் காலத்தில் ஸ்காத்லாந்தும், கிராம்வெல்லின் கீழ் அயர்லாந்தும், நான்காவது ஹென்ரி ஆட்சி புரிந்த பிரான்ஸும், பிலிப் என்பவனின் காலத்தில் ஹாலந்தும் பட்ட துன்பங்களைவிட அவுரங்கஜீப்பின் ஆட்சியில் இந்தியா அதிக துயரமநுபவிக்கவில்லையென்பது நிச்சயம். இந்திய மக்கள் சுதேச மன்னர்களின் ஆட்சியிலிருந்து 'கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்கு மாறியதினால் எவ்விதத்திலும் அதிக க்ஷேமமோ சந்தோஷமோ அடையவில்லையென்பதற்கு ஆங்கில சரித்திராசிரியர்களே

* இந்தியாவில் மிகப் பயங்கரமான பஞ்சங்கள் ஏற்பட்டிருந்த காலங்களிலும் கப்பல் கப்பலாக உணவுப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

நமக்குச் சான்று கூறுகிறார்கள்.* இன்றைய தினங்கூட, இந்திய சுதேச சமஸ்தானங்களின் குடிகள் பிரிட்டிஷாரின் நேர் ஆட்சியிலுள்ள ஜனங்களைவிடக் கேடான நிலைமையிலில்லை என்று ஆங்கிலேயர் பலர் கூறியிருக்கின்றார்கள்.

அமெரிக்க ஐக்ய ராஜ்யத்தைப் பாருங்கள். அங்கே பற்பல ஜாதிகளையும், சமயங்களையும் சமூகங்களையும் சேர்ந்தவர்கள் எப்படித் தங்கள் வித்தியாசங்களையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு ஒரே தேசீய அரசாங்கத்தின்கீழ் வாழ்கிறார்கள்? அந் நாட்டில் எவ்வளவு பாஷைகள் பேசப்படுகின்றன என்பதைக் கவனியுங்கள். அங்குள்ள தொழிற்சாலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும் எத்தனை மொழிகள் வழங்குகின்றன! பின்னர் ஸ்விட்ஜர்லாந்தைப் பாருங்கள்! அது எவ்வளவு சிறு தேசம்? அதன் பள்ளிக்கூடங்களில் எவ்வளவு பாஷைகள் கற்பிக்கப் படுகின்றன? அதன் சட்ட சபைகளில் எவ்வளவு மொழிகள் பேசப்படுகின்றன? அந் நாட்டார் பின்பற்றும் சமயங்கள் எத்தனை?

ஆஸ்திரியா-ஹங்கேரி நாட்டைக் குறித்தும் இதேமாதிரி சொல்லலாம். அங்கே எவ்வளவோ ஜாதி சமய, பாஷை வேற்றுமைகள் இருப்பினும், ஜனப் பிரதிநிதித்துவ ஆட்சி முறை நடந்துகொண்டுதான் வருகிறது.

இந்தியாவின் சமயங்கள், வகுப்புகள், பாஷைகள் இவற்றின் தொகை பெரிதும் மிகைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜனக் கணிதியின்போதும் இவற்றின் தொகை நூற்றுக்கணக்கில் பெருகிவிடுகின்றது. ஆனால் தேசமும் ஜனங்களும் ஒரே விதமாகத்தான் இருந்துவருகிறார்கள்.

---

* மில் எழுதிய "பிரிட்டிஷ் இந்தியாவின் சரித்திரம்", வில்ஸன் எழுதிய "இந்திய சரித்திரம்", 1824-ம் வருஷத்தில் இந்தியாவின் நிலைமை குறித்து பிஷப் ஹீபர் கூறும் விவரம், 1833-ம் ஆண்டில் மிஸ்டர் ஷோர் எழுதிய புத்தகம் முதலியவை பார்க்க.

## கல்விப் பயிற்சிக் குறைவு

இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களே அதிகமாயிருப்பதால் இந்தியா தன்னைத்தான் ஆண்டுகொள்ள முடியாதென்று சில சமயம் சொல்லப்படுகிறது. பிரிட்டிஷார் இந்தக் காரணத்தைக் கூறுதல் அவர்களுக்குச் சிறப்புத் தருவதாகாது. ஏனெனில், இந்திய மக்களில் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாமலிருப்பதற்குப் பொறுப்பாளிகள் பிரிட்டிஷாரே யாவர். ஜப்பானில் ஜனங்களுக்குக் கல்வி புகட்டும் வேலை சென்ற நூற்றாண்டில்தான் ஆரம்பிக்கப் பட்டது. 1873-ம் ஆண்டில், பள்ளிக்கூடம் செல்லும் வயதுள்ள அந்நாட்டுக் குழந்தைகளில் 100-க்கு 28 பேர் வீதம் பள்ளிக்கூடங்களில் படித்தார்கள். 1902—1903-ம் ஆண்டிற்குள் இவ்விகிதம் 100-க்கு 90-ஆக உயர்ந்துவிட்டது. இந்தியாவில் நூற்றைம்பதாண்டு ஆங்கில ஆட்சிக்குப் பின்னர் பள்ளிக்கூட வயதுள்ள குழந்தைகளில் 100-க்கு 19 பேரே பள்ளிக்கூடங்களுக்குச் செல்கின்றனர். இந்திய தேசீய வாதிகள் பலவருஷமாகக் கட்டாயப் படிப்புமுறை வேண்டுமென்று கிளர்ச்சி செய்துவருகிறார்கள். ஆனால் அரசாங்கம் அதைப் பொருட்படுத்தவேயில்லை. காலஞ் சென்ற ஸ்ரீ கோகலே கொண்டுவந்த கட்டாய ஆரம்பக் கல்வி மசோதா அரசாங்கத்தினால் எதிர்க்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. இதைவிடக் கேடான விஷயம் யாதெனில், ஜனங்கள் தங்கள் சொந்தக் கலாசாலைகளும் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தார் ஒரு விதத்தில் குறுக்கே நிற்கின்றனர். அவற்றை அரசாங்கக் கல்வி இலாகா அங்கீகரிப்பதற்கு மிகக் கடுமையான நிபந்தனைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் ஒரு தேசத்தார் சுயாட்சி நடத்துவதற்கு அத்தேச மக்கள் அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயிருக்க வேண்டுமென்பது இன்றியமையாத நிபந்தனை யாகாது. ஜப்பானில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பிரதிநிதித்துவ

ஆட்சி முறை ஸ்தாபிக்கப்பட்டபோது "ஸாமுராய்" என்னும் பிரபுவர்க்கத்தினர் மட்டுமே எழுதப் படிக்கத் தெரிந்தவர் களா யிருந்தார்கள். இந்தியாவிலும் உயர் வகுப்பாருக்குள் கல்வி யறிவு நிரம்பப் பரவியிருக்கிறது.

இங்கிலாந்தில் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகப் பிரதி நிதித்துவ ஆட்சி முறை நடந்து வருகிறது. ஆனால் 1870-ம் ஆண்டில்தான் கட்டாய ஸர்வஜனக் கல்வி முறை ஏற்பட்டது.

## உள் நாட்டுத் தொல்லைகள்

ஆங்கிலேயர் இந்தியாவிலிருந்து விலகிக்கொண்டால், அல்லது இந்தியாவுக்குச் சுயாட்சி அளிக்கப்பட்டால், உள் நாட்டுத் தொல்லைகள் நேரிடுமென்று மற்றோர் ஆட்சேபம் கூறப்படுகிறது. இதற்குப் பதிலாக "உள் நாட்டுத் தொல்லை கள் இல்லாத தேசமொன்று இவ்வுலகிலே உண்டா?" என்று நாம் வினவுகிறோம். கிரேட் பிரிட்டனில் கூட அத்தகைய தொல்லைகள் இல்லாமற்போகவில்லை. குடியேற்ற நாடுகளில் தொல்லைகள் இன்னும் அதிகம். எனினும் இத் தேசங்களின் சுயாட்சி உரிமையைக் குறித்து யாரும் ஆட்சேபங் கிளப்புவ தில்லை. சில தினங்களுக்கு முன்புதான் அமெரிக்க ஐக்கிய ராஜ்யத்தின் அக்கிராசனர் வில்ஸன் "மெக்ஸிகோவில் நிகழும் உள் நாட்டுக் குழப்பம் அதன் காரியங்களில் நாம் தலையிடுவ
தற்கு நியாயமான காரணமாகாது" என்று கூறினார்.

கீழ்நாட்டார் ஜனநாயக ஸ்தாபனங்களுக்குத் தகுதியற்ற
வர்களென்பது வேறோர் ஆட்சேபம். இது முற்றுந் தவறான
கொள்கை யென்பதை இந்தியாவின் புராதன சரித்திரம் நன்கு
நிரூபிக்கின்றது. இங்கிலாந்தும் பிரான்ஸும் ஜன நாயகத்தைப்
பற்றிச் சிந்திப்பதற்கு எத்தனையோ காலம் முன்பு பாரதநாடு
ஜனநாயக ஸ்தாபனங்களுக்குத் தாயகமாயிருந்தது. இந்த ஆட்
சேபம் எத்துணை அறிவீனமானது என்பதைக் காட்ட வேறு

ருசு வேண்டுமானால், ஜப்பான் தேசத்தில் ஜனநாயக ஸ்தாபனங்களின் வெற்றி நிதரிசனமாயிருக்கிறது.

## இயக்கம் நிலேத்துவிட்டது

இங்கிலாந்து ஆயுதச் சட்டத்தை ரத்து செய்தும், பிரதிநிதித்துவ ஆட்சி ஏற்படுத்தியும் பரிசோதனை செய்துபார்க்கட்டும். அப்போது மேற்கூறிய காரணங்களெல்லாம் முன்னேற்றத்துக்கு குறுக்கே நிற்கின்றனவா வென்பது நன்கு விளங்கி விடுமன்ருே? இது எவ்வாருயினும், ஒன்று நிச்சயமாகக்கூறலாம். இந்திய தேசீய இயக்கத்தை அடக்கு முறையினுலோ சில்லரைச் சீர்திருத்தங்கள் அளிப்பதினுலோ ஒடுக்கிவிட முடியாது. தேசீய இயக்கம் நாட்டில் நிலேத்துவிட்டது. அதன் முடிவு என்னவாகுமென்பது ஆண்டவன் உள்ளத்துக்கே. தெரிந்த விஷயம். தற்போது நடந்துவரும் மகா யுத்தத்தில் இங்கிலாந்து ஜெயித்தாலும், தோற்ருலும் இந்தியாவுக்கு அதனுல் லாபமுண்டு. இங்கிலாந்து தோற்ருல் இந்தியாவின் நிலே என்னவாகுமென்பது குறித்து நாம் அதிகம் சிந்திக்க வேண்டியதில்லே. முஸ்லிம் ஆட்சியோ, ஜெர்மானிய ஆட்சியோ ஏற்படலாம். ஆங்கிலேயர் போய்விடுவது நிச்சயம். இந்தியா புதிய வாழ்க்கை தொடங்கவேண்டியதாயிருக்கும். ஆனுல் இத்தகைய நிலேமையைத் தேசம் விரும்பவில்லே. இந் நிலேமை நேராதிருக்க இந்தியா தன்னுல் கூடிய முயற்சி யெல்லாம் செய்யும். அப்படியும் அது நேர்ந்தால் அதற்குக் கிரேட் பிரிட்டனே பொறுப்பாளியாகும். அநேகமாக இங்கிலாந்தே வெற்றி பெறலாம். அதனுலும் இந்திய தேசீய இயக்கத்துக்கு நன்மையே உண்டு. ஜனங்கள் அரசியல் முன்னேற்றம் கோருவார்கள். இங்கிலாந்துடனும் மற்றக் குடியேற்ற நாடுகளுடனும் இந்தியாவின் சம்பந்தத்தில் மாறுதல் வேண்டுமென்று கேட்பார்கள். ஆனுல் ஆங்கில மனேபாவம், ஆங்கில அரசியல் அமைப்புகள், அரசியல் முறைகள். ஆங்கிலேயரின் சரித்திரம் இவைகளேப்பற்றி நமக்குத் தெரிந்திருப்பதைக் கொண்டு

மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்படுமென்று நிச்சயமாகக் கூறலாம். அற்பச் சீர்திருத்தங்கள் சில அளிக்கப்படுதல் கூடும். ஆனால் இம்மகா யுத்தத்தில் இந்தியா செய்யும் தியாகங்களுக்கு அவை ஏற்றவையா யிருக்கமாட்டா. தேசம் அவற்றினால் திருப்தியடையாது. அதிருப்தியும் வெறுப்பும் வளரும். இவையே தேசீய இயக்கம் செழித்தோங்குவதற்கு வேண்டிய உணவுகளாகும். இங்கிலாந்தின் பார்லிமென்டில் கர்ஸான், மக்டானல், ஸிடன்ஹாம் போன்றவர்கள் இருக்கும்வரையில் இத்தகைய உணவுக்குக் குறைவிராது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரமுகர்களாய் விளங்கும் இந்த கனவான்கள் மறைந்து விடுவார்கள் என்று நாம் எண்ணுவதற்கு எவ்விதக் காரணமும் இல்லை.

## வெடிகுண்டுகளுக்குப் பொறுப்பாளி யார் ?

இந்திய அரசியல் வாழ்க்கையில் வெடி குண்டுகளும், சுழற்றுப்பாக்கிகளும் தோன்றியதற்குப் பொறுப்பாளிகள் கர்ஸான், மக்டானல், ஸிடன்ஹாம் போன்றவர்களேயாவார்கள். அவைகளை உபயோகப்படுத்தும் இளைஞர்கள் காலதேவதையின் கருவிகளேயல்லாமல் வேறில்லை. இவ்வாயுதங்களை இந்திய தேசீயவாதிகள் உபயோகப் படுத்துவதற்காக யாரேனும் தூக்கிலிடுவதற்குத் தகுதியுள்ளவர்களானால் அவர்கள் மேற் கூறிய பிரமுகர்களேயாவார்கள். வயது வராத பாலர்கள் பலர் தூக்கு மேடையில் உயிர் துறந்து வருகையில், இரண்டு பெரிய தேசத்தார்க்குள்ளே ஜாதிப்பகைமை உண்டு பண்ணிவரும் மேற்கூறிய மனிதர்கள் எவ்வித தண்டனையுமின்றித் தங்கள் தீய பிரசாரத்தை நடத்திவரவிடப்பட்டிருக்கிறார்கள். இது பெரிதும் பரிதபிக்கத் தக்கதன்றோ ? ஏகாதிபத்திய வெறிகொண்ட இந்த மனிதர்களை ஆண்டவன் தன்னுடைய அந்தரங்க நோக்கம் எதற்காகவோ உபயோகித்து வருகிறான் என்றே காண்கிறது. பாரத நாட்டார் தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள். நிகழ்வனவெல்லாம் நன்மைக்கே என்று அவர்கள் நம்புகிறார்கள்.

இந்தியர் தயாளம் பொருந்திய ஜாதியார்; இங்கிலாந்து ஜெர்மனியுடன் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் வரையில் அவர்கள் இங்கிலாந்துக்குத் தொல்லையளிக்க மாட்டார்கள். யுத்தம் முடிந்தபின்னர் நடக்கும் தேசீயப் போராட்டம் முன்னைவிடக் கடுமையானதாயும், நீடித்ததாயும் இருக்கலாம்.*

* எனது ஜோதிடம் மிக ஆச்சரியமான முறையில் பலித்திருக்கிற தென்பதை வாசகர்கள் காண்பார்கள்.

# அநுபந்தம் 1

ஸர் ஹென்ரி காட்டன் எழுதிய "நியூ இந்தியா" என்னும் நூலிலிருந்து பின்வரும் குறிப்புகள் எடுக்கப் பெற்றன:-

## சுதேச மன்னர்களின் நிலை

"சுதேச மன்னர்களின் நிலையைக் குறித்து நுட்பமாக ஆராய்ச்சி செய்தல் அவர்களுக்கு வருத்தமளிக்கக்கூடிய விஷயம். அம்மன்னர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தைச் சார்ந்திருப்பதால் தங்களுக்கு விருப்பமில்லாமலே பல காரியங்களைச் செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள். தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவர்களுக்கு சக்தி கிடையாது. அவர்கள் விண்ணப்பம் செய்துகொள்ளக்கூடிய நீதிமன்றம் இல்லை. அவர்களுடைய நலத்தில் அக்கரையுள்ள பொதுஜன அபிப்பிராயமும் கிடையாது. பெயரளவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட சுதந்திர அரசர்கள் என்று அவர்கள் கூறப்படினும் உண்மையில் அவர்கள் முற்றும் பராதீனப்பட்டே இருக்கிறார்கள். அவர்களுடைய பதவி, பட்டம் முதலியனவெல்லாம் சமஸ்தானத்திலுள்ள பிரிட்டிஷ் ரிஸிடெண்ட் உத்தியோகஸ்தரின் தயவையும், சிம்லாவிலுள்ள அன்னிய நாட்டுக் காரியாலயத்தின் அந்தரங்க, பொறுப்பற்ற உத்திரவுகளையுமே பொறுத்தவையாகும்." (34-ம் பக்கம் பார்க்க.)

## இந்தியர்களை அவமதித்தல்

"ஆங்கில சாதியாரின் அளவற்ற தற்பெருமை இங்கிலாந்திலேயே அடிக்கடி வெளியாகின்றது. சற்று இழி குணமுடைய ஆங்கிலேயர் ஐரோப்பாவின் மற்ற நாடுகளுக்குப் போகும் போது பிற சாதியாருக்குக் கோபமூட்டும் முறையில் இத் தற்பெருமையை வெளியிடுகிறார்கள். இந்தியாவிலோ அவர்

களுடைய சாதிக் கருவம் தலைவிரித்தாடுகின்றது. பொதுச் சாலைகளிலே நடந்து செல்லும் சுதேசிகள் எதிரில் துரையைக் கண்டதும் தங்கள் குடைகளை மடக்கிக்கொள்ளாததற்காகப் பலமுறை திட்டப்பெற்றதும், அடிக்கப் பெற்றதும் உண்டு. எவ்வளவு உயர்ந்த அந்தஸ்து வாய்ந்த இந்தியர்களானாலும் ரயில் பிரயாணத்தின்போது அவமதிக்கப்படாது தப்புதல் மிகவும் அருமை. ஆங்கிலேயர் சுதேசிகளுடன் ஒரே வண்டியில் உட்கார விரும்பாததே இதற்குக் காரணம். '' (55-56-ம் பக்கங்கள்).

# அநுபந்தம் 2

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியைக் குறித்துப் பிரபல இந்தியர், ஐரோப்பியர் சிலரின் அபிப்பிராயங்களைக் கீழே காண்க :—

## இந்தியக் கைத்தொழில் அழிவு

"இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியினால் விளைந்த பயன்களுள் மிகவும் துயரகரமானவை, தொழில் துறையில் விளைந்த பயன்களே யாகும். மற்றத் துறைகளில் நற்பயன்களும் உண்டு; தீய பயன்களும் உண்டு. ஆனால் தொழில் துறையிலோ எல்லாம் தீய பயன்களே. இதை நிரூபிக்கத் தக்க ஆதாரங்கள் இருக்கின்றன."— கோகலே.

## இந்தியா ஆங்கிலேயரின் சொத்து

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் மிகப் பெரிய பகுதி இந்தியாவாகும். ஆயினும் ஆங்கில மக்களின் சொந்த சொத்தைப் போல் இந்தியா ஆளப்படுகிறது. சாம்ராஜ்யத்தில் அதற்கு எவ்வித உரிமை அல்லது பதவியும் கிடையாதென்பதை மூன்று விஷயங்கள் உணர்த்துகின்றன. முதலாவதாக, ஜனங்கள் நிராயுதபாணிகளாக்கப் பட்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு ஆயுதம் தரிக்கும் உரிமை யளித்தல் அபாயகரமான தென்று கருதப்படுகிறது. இரண்டாவதாக, தங்கள் சொந்த நாட்டின் அரசாட்சியில் அவர்களுக்குச் செல்வாக்குக் கிடையாது; உயர்தர உத்தியோகங்கள் சிலவற்றிற்கு அவர்கள் உரியவர்களல்லரென்று ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றும் சில உத்தியோகங்கள் அவர்களுக்கு அநேகமாகத் தரப்படுவதில்லை. கடைசியாக, இந்தியாவுக்கு வெளியே கிரேட் பிரிட்டனைத் தவிர்த்து சாம்ராஜ்யத்தின் வேறெந்தப் பகுதியிலும், சாம்ராஜ்ய

பிரஜைக் குரிய உரிமைகள் அவர்களுக்குத் தரப்படுவதில்லை. கிரேட் பிரிட்டனிலும் சொற்ப அளவிலேயே இவ்வுரிமைகளை அவர்கள் அநுபவித்தல் கூடும்.”— கோகலே.

## பாமர ஜனங்களின் பட்டினி

“நமது விவசாயக் குடிமக்களில் பாதிப்பேர் வருஷ ஆரம்பத்திலிருந்து வருஷ முடிவு வரையில் ஒரு வேளையேனும் வயிறு நிறைய உணவருந்திப் பசிதீர்ந்தறியாதவர்கள். இதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.” — ஸர் ஸி. ஏ. எலியட் (மாஜி வங்காள லெப்டினண்ட் கவர்னர்).

“தங்கள் வாணாள் முழுதும் அரைப் பட்டினிகிடந்தே காலந் தள்ளுவோர் நாலுகோடி ஜனங்கள் இருக்கிறார்கள்.” — ஸர் டபிள்யூ. டபிள்யூ. ஹண்டர் (1880).

“கயாவில் பற்பல வகுப்புகளையுஞ் சேர்ந்த ஜனங்களின் நிலைமையைப் பற்றி மிஸ்டர் கிரியர்ஸன் சில விவரங்களைச் சேகரித்தார். அவ் விவரங்களிலிருந்து ‘பயனியர்’ பத்திரிகை பின்வருமாறு முடிவு கட்டுகிறது:— ‘சுருங்கச் சொன்னால், கூலிவேலை செய்யும் ஜனங்கள் அனைவரும் கைத்தொழிலும் விவசாயமும் செய்யும் வகுப்புகளில் 100-க்கு 10 பேரும், அதாவது மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 45 பேர் போதிய உணவும் உடையும் இன்றி வாழ்கிறார்கள் என ஏற்படுகிறது. இக் கணக்கின்படி கயா ஜில்லாவில் மட்டும் போதிய ஜீவனோபாயம் அற்ற ஜனங்கள் பத்து லட்சம் பேர் இருக்கின்றார்கள். கயாவினுடைய நிலைமையே தேச முழுவதும் குடிகொண்டிருக்கவில்லை யெனக் கருத எவ்விதக் காரணமுங் கிடையாது. தேசமெங்கும் இந் நிலையே குடிகொண்டிருக்கிறதென்று கொள்வோமாயின், பிரிட்டிஷ் இந்தியாவில் ஏறக்குறைய பத்துகோடி மக்கள் மகத்தான வறுமையில் ஆழ்ந்திருக்கிறார்கள் என்றேற்படுகிறது.” — வில்லியம் டிக்பி, ஸி. ஐ. இ. (1893).

"ஜனங்களின் வறுமைக் கொடுமையும், அவர்கள் படுந் துன்பமும் விவரிக்க வொண்ணாதவையாகும். விலைவாசிகள் ஏறிவிட்டதன் காரணமாகச் சென்ற பதினைந்து வருஷங்களாய் இந்தியாவில் இடைவிடாத பஞ்சம் குடிகொண்டிருக்கிறது."
— வில்லியம் டிக்பி (1901)

## ஓயாது பசித்திருக்கும் ஏழுகோடி ஜனங்கள்

"ஸர் வில்லியம் ஹண்டர் இந்திய மக்களின் பசிப்பிணியைப்பற்றிக் கூறிய பின்னர் இந்தியாவின் ஜனத்தொகை மூன்று கோடி அதிகமாகிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இதே காலத்தில் இந்தியாவின் வருமானம் மிகுதியும் குறைத்திருக்கிறது. வருமானம் முன்போலவே இருப்பதாக வைத்துக் கொண்டாலும், 1880-ல் நாலுகோடி ஜனங்கள் போதிய உணவின்றி இருந்தார்களென்றால், இப்போது அதிகமாயிருக்கும் ஜனங்களுக்கு வயிறுநிறையச் சாப்பாடு கிடைத்தல் இயலாத காரியம். ஆகவே முந்தைய நாலுகோடியுடன் அதிகமாகியிருக்கும் மூன்று கோடியையும் சேர்த்தால், மொத்தம் ஏழு கோடி ஜனங்கள், பிரிட்டிஷ் இந்தியாவில், இந்த இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில். ஓயாப் பசியுடன் வாழ்கிறார்கள் என்று ஏற்படுகிறது." - வில்லியம் டிக்பி, சி, ஐ. இ. (1901).

## உணவுப்பஞ்சமன்று — பணப்பஞ்சமே

இந்தியாவில் 1891-ம் வருஷத்திலிருந்து 1900-ம் வருஷம் வரையில் மொத்தம் 190 லட்சம் ஜனங்கள் பஞ்சத்தினால் மடிந்தார்கள்.

1911-12ல் 20 கோடி 25 லட்சம் ஏக்கரா பூமிக்குமேல் உணவுப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன.

1912-13ல் 26 கோடி டாலர் பெறுமானமுள்ள உணவுப் பொருளகள் இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாயின.

1913-14ல் 21 கோடி டாலர் பெறுமான உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

"சமீபத்தில் ஏற்பட்ட பஞ்சங்கள் எல்லாம் பணப் பஞ்சமேயல்லாமல் உணவுப் பஞ்சங்கள் அல்ல."—லார்டு ஹாமில்டன் (மாஜீ இந்தியா மந்திரி)

## பஞ்சங்களின் காரணங்கள்

(1) கிழக்கிந்தியக் கம்பெனியாரால் வேண்டுமென்றே அழிக்கப்பட்ட நாட்டுக் கைத்தொழில்கள் தற்போதைய நிலைமையின் கீழ் உயிர்த்தெழ முடியாமலிருத்தல்.

(2) வருஷந்தோறும் இந்தியாவிலிருந்து வெளிநாட்டுக்குப் பெரு வெள்ளம் போல் பணம் போய்க்கொண்டிருத்தல்.

(3) ஜனங்கள் தங்கள் செல்வ மூலங்களைப் பயன்படுத்தி முன்னேறுவதற்குரிய கல்விப் பயிற்சி இல்லாமை.

"ஆண்டுதோறும் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கும் தொகை 30 லட்சம் பவுன். முப்பது ஆண்டுகளில் இவ்வாறு சென்றுள்ள தொகையை [இந்தியாவில் வழக்கமான வட்டியாகிய) 100-க்கு 12-வீதம் கூட்டு வட்டியுடன் சேர்த்துக் கணக்கிட்டால் 72 கோடி பவுன் ஆகி விடுகிறது."-மோண்ட்கோமரி மார்ட்டின் (1830).

"சென்ற (பத்தொன்பதாம்) நூற்றூண்டின் கடைசி முப்பது ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து போயிருக்கும் தொகை வருஷத்தில் 3 கோடி பவுனுக்கு நிச்சயமாய்க் குறையாது. வட்டியைச் சேர்க்காமல் கணக்குப் பார்த்தாலும் 30 ஆண்டில் 90 கோடி பவுன் போயிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை!"-வில்லியம் டிக்பி.

## அன்னிய நாட்டுப் பெருங் கப்பம்

ரெவரெண்டு ஜே. டி. சண்டர்லாண்டு என்பார் "இந்தியப் பஞ்சங்களின் காரணங்கள்" என்று ஒரு நூல் எழுதியிருக்கிறூர்.

ஒருதலைச் சார்பற்ற பிற நூலாசிரியர்களைப் போலவே அவரும் இந்தியாவில் பஞ்சங்கள் நிகழ்வதற்குக் காரணம் ஜனத்தொகை விருத்தியோ, மழையில்லாமையோ அல்லவென்று அப் புத்தகத்தில் நன்கு நிரூபித்திருக்கிறார். கைத்தொழில்களின் அழிவு, 'ஏகாதிபத்திய ஆட்சிமுறை', 'அன்னிய நாட்டுக்குச் செலுத்தும் பெருங் கப்பம்' ஆகியவற்றினால் இந்திய மக்கள் மிகக் கொடிய தரித்திர தசை யடைந்திருப்பதே இந்தியாவில் பஞ்சங்கள் நிகழ்வதற்கு உண்மைக் காரணம் என்று அவர் நிரூபித்திருக்கிறார்.

## வரி மிகுதி

"அரசாங்கத்துக்கு வரி செலுத்திய பின்னர் குடியானவனுக்குத் தானும் தன் குடும்பமும் வருஷ முழுவதும் சாப்பிடுவதற்கு வேண்டிய உணவு இருப்பதில்லை."— ஸர் வில்லியம் ஹண்டர் (1883).

"இந்தியக் குடியானவனைப்போல் இரங்குதற்குரிய வேறொரு மனிதன் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலேயே இல்லை. அவனுடைய எஜமானர்கள் அவனுக்கு எப்போதும் அநீதி இழைத்தே வந்திருக்கிறார்கள். அவனுடைய எலும்பின் உட் சதையைத் தவிர மற்ற உடல் தசை யெல்லாம் பிதுங்கும்படியாக அவன் நசுக்கப்பட்டிருக்கிறான்."—மிஸ்டர் ஹெர்பர்ட் காம்டன் (1904).

பாரத நாடு பெரிய விவசாய தேசம். சாதாரணமாய் இந் நாட்டின் நிலங்களெல்லாம் இரு போகம் விளைகின்றன. முப்போகம் விளையும் நிலங்களும் உண்டு. அம் வங்காளத்தில் முப்போகம் விளையும் நிலங்களும் உண்டு. ஹிந்துஸ் மாகாணத்து நிலங்களில் கிடைக்கும் மகசூல் மட்டும் ஹிந்துஸ் தானத்து மக்கள் அனைவருக்கும் இரண்டு வருஷ காலத்துக்கு உணவு அளிக்கப் போதுமானவை.

## இந்தியக் கொள்ளை

"1757-ம் வருஷத்தில் நடந்த பிளாஸிச் சண்டைக்குப் பின்னர் வங்காளக் கொள்ளை லண்டனுக்கு வரத் தொடங்கி

யது. அதன் பயன் உடனே நன்கு புலனுயிற்று. இவ்வுலகம் தோன்றிய காலந்தொட்டு இந்தியக் கொள்ளேயில் கிடைத்ததைப் போன்ற பெரு லாபம் வேறெந்தத் துறையிலும் யாருக்கும் கிடைத்த தில்லையென்று கூறலாம். பிளாஸிச் சண்டைக்கும் வாடர்லூ சண்டைக்கும் இடையிலுள்ள 57 வருஷ காலத்தில் இந்திய மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு இங்கிலாந்தை அடைந்த செல்வம் 750 கோடி ரூபாய் முதல் 1500 கோடி ரூபாய் வரையில் இருக்கலாமென்று பலராலும் மதிப்பிடப் பட்டிருக்கிறது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆரம்ப காலத்தில் இந்தியாவுக்குச் சென்ற ஒவ்வோர் ஆங்கிலேயனும் பணஞ் சேர்ப்பதற்குக் கையாண்ட கொள்ளே முறைகள் நாளடைவில் மறைந்தன. ஆனல் நாட்டிலிருந்து பண வெள்ளம் ஓடுவது மட்டும் நின்றபாடில்லே. அக்காலத்துக்கும் இந் நாளேக்கும் உள்ள வேற்றுமை யாதெனில், தற்போது இங்கிலாந்துக்கு இந்தியா செலுத்தும் கப்பம் சட்டங்களின் பெயரால் மறைமுகமான வழிகளினல் வசூலிக்கப்படுகிறது. இந்தியாவிலிருந்து குறைந்தது 52½ கோடி ரூபாய் வருஷந்தோறும் கொண்டுபோகப்படுகிற தென்றும், இதில் ஒரு தம்பிடி கூடத் திரும்பி வருவ தில்லேயென்றும் மிஸ்டர் ஹிண்ட்மான் மதிப்பிட்டிருக்கிருர்.''—ஆடம் புருக்ஸ்.

''இந்தியா இங்கிலாந்தினிட மிருந்து வாங்கிய கடனுக்கு வட்டி தந்து வருகிறது. 1900-ல் இக் கடன் 24 கோடி 40 லட்சம் பவுனுக இருந்தது, ஆண்டுதோறும் இத்தேசீயக் கடன் அதிகமாகி வருகிறது. இதையல்லாமல் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும். பெரிய நிரந்தர சைன்யத்திற்கும் சம்பளமாகவும், உபகார சம்பளமாகவும் இந்தியா ஏராளமான பணங் கொடுத்து வருகிறது. லண்டனிலுள்ள இந்தியக் காரியாலயத்தின் செலவுக்கு, அங்குள்ள குற்றேவல் காரரின் சம்பளம் உள்பட, இந்தியாவே பணந்தருகிறது. 1901-2ல் இந்திய அரசாங்கத்தின் மொத்தச் செலவு 107 கோடி ரூபாய். இதில் 25 கோடி ரூபாய் இங்கிலாந்தில் செலவிடப்பட்டது. இத்

தொகையில் இந்தியாவிலுள்ள ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் சம்பளம் சேர்க்கப்படவில்லை யென்பதைக் கவனிக்க வேண்டும்.''— சுவாமி அபேதானந்தர்.

''லண்டனிலுள்ள இந்தியக் காரியாலயத்தின் செலவுக்காகவும், இந்தியாவில் ஊழியம் செய்வதற்கு இங்கிலாந்தில் இராணுவ வீரர்கள் திரட்டுவதற்காகவும், ஏற்கனவே இந்தியாவில் ஊழியம் செய்து இப்போது இங்கிலாந்திலுள்ள மாஜி உத்தியோகஸ்தர்களின் உபகார சம்பளத்துக்காகவும், விடுமுறை பெற்று இங்கிலாந்துக்கு வரும் உத்தியோகஸ்தர்களின் சம்பளம் — படி இவைகளுக்காகவும், இந்தியக் கடனுக்கு வட்டி செலுத்துவதற்காகவும், ரயில் முதலிய கம்பெனிகளின் பங்குதாரர்களுக்கு லாபத் தொகை தருவதற்காகவும் இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர் சொந்தமாக மீத்து அனுப்பும் பணமும் சேர்ந்து, இந்தியாவிலிருந்து வருஷந்தோறும் இங்கிலாந்துக்கு வந்துசேரும் தொகை $2\frac{1}{2}$ கோடி பவுனிலிருந்து 3 கோடி பவுன் வரையில் இருக்கலாமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.''— ஆல்பிரட் வெப்.

## ஏகாதிபத்திய ஆட்சி முறை

''தற்போதுள்ள நிலைமையானது வாழ்க்கைப் போராட்
டத்தை மிகவும் கஷ்டமாக்கிவிடுகிறதென்பதில் சிறிதும் சந்தே
கமில்லை. இந்தியாவின் பெருந்திரளானமக்கள், வானம்
அடிக்கடி பொய்த்து விடுவதினால் மட்டு மன்றி, குறுகிய
நோக்கங்கொண்ட ஏகாதிபத்திய ஆட்சி முறையினாலும் துன்
புற்று வருகிறார்கள். இவ் வாட்சிமுறையானது தொழில்
வளர்ச்சிக்குக் கூடியமட்டும் இடையூறு செய்வதுடன் ஏற்
கனவே பிழைப்புக்குக் கஷ்டப்பட்டு வருவோர்மீது மிகுதி
யான வரிகளையும் சுமத்திவருகின்றது. மத்திய ஆசியாவில்
நிலச் சுவான்தார்களிடமிருந்து ருஷியா வசூலிக்கும் வரியை
விட நாம் இந்தியாவில் அதிகவரி வசூலிக்கிறோமென்பது பல
ருடைய அபிப்பிராயமாகும். பிரிட்டிஷ் அரசாங்கம் நிலத்தின்

வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கு வற்புறுத்தி வசூல் செய்வதுடன் விளைவு குறைவாயிருக்கும் வருஷங்களிலும் வரிதள்ளுபடி செய்வதில்லை. ஆனால் ருஷிய அரசாங்கம் பத்தில் ஒரு பங்குதான் வரியாக வசூலிப்பதாகவும், அத்துடன் விளைவு அதிகம் கம்மிக்குத் தகுந்தாற்போல் வரியிலும் ஏற்றத் தாழ்வு செய்வதாகவும் சொல்கிறார்கள்.'' — ஸர் ஆர்ச்சிபால்டு கால்குவேஹௌன்.

## வரி வசூல்

''இந்தியாவின் விஷயத்தில் இந்த வரி முறையினால் விளையும் தீமை *அதிகமாகின்றது. ஏனெனில் அங்கு வசூலிக்கப்படும் வரியில் ஒரு பெரும் பகுதி அயல் நாட்டுக்குச் சென்று விடுகிறது. இந்தியாவின் இரத்தத்தை வடிக்கவேண்டுமென்றால், இரத்தம் தேங்கிக்கிடக்கிற அல்லது போதிய இரத்தமாவது இருக்கிற பகுதிகளிலேயே சலாகையைப் பிரயோகித்தல் முறை. ஏற்கெனவே இரத்தக் குறைவினால் பலவீனமுற்றிருக்கும் பகுதிகளில் சலாகையைப் பிரயோகித்தல் கூடாது.'' —லார்டு ஸாலிஸ்பரி.